

யத்தனபூடி சுலோசனாராணி தெலுங்கு இலக்கிய உலகில் 'நாவல் ராணி' என்று அழைக்கப்படும் இவர் 2.4.1939-ல் ஆந்திர மாநிலத்தில் பிறந்தவர். 'ஆந்திரப் பத்திரிகா வீக்லி' யில் இவரது முதல் சிறுகதை 1956 ம் வருடம் பிரசுரமானது. 1965-ல் இவர் தனது முதல் நாவலான 'செக்ரட்ரி'யை வெளியிட்டார். இதுவரை இவர் சுமார் ஐம்பது நாவல்களும், 30 சிறுகதைகளையும் எழுதியுள்ளார். இதில் சுமார் 16 நாவல்கள் திரைப் படமாகவும், 10 நாவல்கள் ரேடியோவில் தொடராகவும், 4 நாவல்கள் தொலைக் காட்சித் தொடராகவும், வெளிவந்துள்ளது. 1962 ல் 'ஒய்.எஸ்.எஸ்.' இடமிருந்து சிறந்த கதைக்கான விருதும், 1969-ல் 'கேசரி கட்டீர்' விருதான தங்கக் காப்பையும்; 1978-ல் ஆந்திர மாநிலத்தின் 'சாஹித்திய அகாடமி' விருதும், 1998-ல் கோபிசந்த் ஸ்மாராகா விருதும், 1999-ல் ராகசப்தசாரம் சங்கத்தினரால் வழங்கப்பட்ட தங்கப் பதக்கத்தையும், 1989-ல் ஆந்திர தொலைக்காட்சி நிலையத்தார் வழங்கிய சிறந்த தொலைக்காட்சி சீரியலுக்கான விருதையும் பெற்றார். இவரது திரைக் கதைகள் 1965, 1966, 1978, 1983-ம் ஆண்டுகளில் சிறந்த திரைக் கதைக்கான விருதுகளைப் பெற்றுள்ளது. இந்தியாவிலேயே முதன்முதலாக 1998ல் இவர் 'கோகிலா' என்ற ஆடியோ கேஸட் பத்திரிகையை வெளியிட்டார். இவருடைய சில நாவல்கள் கன்னட மொழியில் வெளி வந்து அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது.

கௌரி கிருபாநந்தன் 2.9.1956-ல் பிறந்த இவர், தாய்மொழி தமிழானாலும், தந்தை ஆந்திராவில் வேலை பார்த்து வந்ததால் பள்ளி, கல்லூரி படிப்பு முழுவதும் தெலுங்கில். 1976-ல் தனது திருமணத்திற்குப் பிறகே தமிழைப் படிக்கவும், எழுதவும் கற்றார்.



தஞ்சையை அடுத்த கிராமத்தில் ஐந்து வருடம் வசித்ததில், மாவட்ட நூலகத்தில் தமிழ்ச் சிறுகதைகள், நாவல்கள் படித்து தனது இலக்கிய தாகத்தை வளர்த்துக் கொண்டார். இவரது மொழிபெயர்ப்புச் சிறுகதை முதலில் 1955 ல் கணையாழியில் வெளிவந்தது. தொடர்ந்து இவர் 13 நாவல்களையும், 4 சுய முன்னேற்ற நூல்களையும் மொழிபெயர்த்து, அவை நூல் களாக வெளிவந்துள்ளன. இவர் சொந்தமாகச் சில சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

தொடுவானம் – பாகம் 1 ★ யத்தனபூடி சுலோசனாராணி

தொடுவானம்

யத்தன்னைடி சுலோசனா ராணி

தமிழில்: கௌரி கிருபானந்தன்

1

இந்நூலாசிரியர் எழுதி தமிழில் வெளிவந்த நூல்கள்

1. சங்கமம் I & II
2. மௌன ராகம்
3. தொடுவானம் I & II
4. நிவேதிதா
5. பிரளயம்
6. சம்யுக்தா

GIFT BY
R R L F
CALCUTTA

தொடுவானம்

இந்த உலகில் நேரத்திற்கு இருக்கும் மதிப்பை உணர்த்துவது போல், முன் அறையில் இருந்த பழைய சுவற்று கடிகாரம் டங், டங் என்று மூன்று முறை மணி அடித்தது.

ஏற்கனவே வாசலுக்கும் உள்ளுக்குமாய் அலைந்து கொண்டு, தெருமுனை வரை எட்டி எட்டிப் பார்த்து, யாருக்காக எதிர் பார்த்துக் கொண்டிருந்தாளோ அந்த நபர் வராமல் போகவே, ஏமாற்றத்துடன் சுட்டில் மீது உட்காரப் போன ஹேமா மணி அடித்த சத்தம் கேட்டதும் திடுக்கிட்டவளாய் முன் அறைக்கு வந்தாள். ஏமாற்றமும் எரிச்சலும் ஒன்றாக சேர அவள் முகம் கடுகடுவென்று தென்பட்டது.

'ச்சீ ... ச்சீ ... இந்தப் பெரிய மனுஷனுக்கு என்ன ஆகிவிட்டது ? கொஞ்சம் கூட அக்கறை இல்லாமல் இப்படி செய்துவிட்டானே! சரியாக இரண்டறை மணிக்கு வரச்சொல்லி கடிதம் எழுதி அனுப்பி யிருந்தேனே! ரொம்ப முக்கியமான விஷயம் அவசரமாக பேச வேண்டும் என்று குறிப்பிட்டு எழுதியிருந்தேனே?'

மனதிற்குள் புலம்பியவளாய் மறுபடியும் கடிகாரத்தை

நோக்கினாள். கடிகாரத்தில் இருந்த பெரியமுள் அவளை பரிகாசம் செய்வதுபோல் வேகமாக நகர்ந்து கொண்டே இருந்தது. மறுபடியும் வாசல்வரை சென்று எட்டிப்பார்த்தாள். அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நபர் வரவில்லை. ஆனால் அவளுடைய அண்ணன் மகன் மது வேகமாக நடந்து வந்து கொண்டிருந்தான். அதே வேகத்தில் உள்ளே நுழைந்து மூலையில் சாய்த்து வைத்த கிரிக்கெட் பேட்டை எடுத்துக்கொண்டு மறுபடியும் வெளியில் ஓடப்போனான்.

ஹேமா சட்டென்று இரண்டடி எட்டி வைத்து அவனைப் பிடித்து விட்டாள்.

"மது! காலையில் உங்க சாரிடம் நான் கொடுத்த கடிதத்தை நிஜமாகவே கொடுத்தாயா?" - அவள் கேட்டாள்.

"அடடா—! இதோடு இருபதாவது முறையாக இந்தக் கேள்வியை கேட்கிறாய் அக்கா. கொடுத்தாச்சுன்னு சொன்ன பிறகும் நம்பா விட்டால் எப்படி? அவ்வளவு நம்பிக்கை இல்லாதவள் நேராக போய் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதுதானே". ஹேமாவின் கையில் சிக்கியிருந்த ஷர்டை விடுவிக்க முயன்று கொண்டே மது சொன்னான்.

"அதற்காக இல்லை மது! அவர் அந்தக் கடிதத்தை படித்தாரா என்றுதான்." - ஹேமா சந்தேகத்துடன் பார்த்தாள்.

"படிக்காமலேயே, 'மதியம் இரண்டரை மணிக்கு வரேன்னு உன் அக்காவிடம் சொல்லு'ன்னு எப்படிச் சொன்னார்? நீ அழைத்தாய் என்று கனவு ஏதாவது கண்டு இருப்பாரா?" - மது கோபமாய் சொன்னான்.

ஹேமா கடிகாரத்தை பார்த்துவிட்டு, "மணி மூன்று அடித்து விட்டதே மது!" - கவலையுடன் சொன்னாள்.

மது கடிகாரத்தை பார்த்தான். "என்ன அக்கா? நம் கடிகாரத்தில் மூன்று என்றால் உண்மையான மணி இரண்டரைதானே? அரைமணி முன்னால் இருக்கும் விதமாக கடிகாரத்தை காலையில் அட்ஜெஸ்ட் செய்தது நீதானே? மறந்து விட்டாயா?"

அதைக் கேட்டதும் ஹேமா தலையில் அடித்துக் கொண்டாள். "அடடா— அந்த விஷயத்தை மறந்தே போய்விட்டேன் பார்த்தாயா"

என்றாள்.

அதைக்கேட்பதற்கு அவன் அங்கே இருந்தால்தானே. ஹேமாவின் பிடியிலிருந்து விடுபட்டவன் ஒரே ஓட்டமாய் வெளியில் ஓடிவிட்டான்.

தன்னுடைய மறதியை நினைத்து ஹேமாவுக்கு வெட்கமாக இருந்தது. இப்போ அந்த கடிகாரத்தை பார்க்கும் போது அவளுக்கு பதட்டம் ஏற்படவில்லை. மாறாக இதழ்களில் புன்முறுவல் மலர்ந்தது.

ரமேஷ் சந்திரா வாக்குத்தவறுவதாவது என்று நினைத்துக் கொண்டாள்.

அவனிடம் விஷயத்தை எப்படி சொல்வது என்ற குழப்பத்தில் தனக்குதான் மூளை கலங்கிவிட்டது. இரவு முழுவதும் தூங்காமல் கடிதம் எழுத முயன்றாள். மனதில் இருந்த எண்ணங்களை வார்த்தைகளில் கோர்வையாக வடிக்கத் தெரியாமல் எழுதிய காகிதங்களை கிழித்துப் போட்டாள். எப்பொழுது தூங்கினாளோ தெரியவில்லை. மேஜை மீது தலையை சாய்த்து அப்படியே உறக்கத்தில் ஆழ்ந்து போனாள். கண்களைத் திறந்து பார்க்கும் போது நன்றாக விடிந்து விட்டது. அந்தப் பக்கமாய் வந்த பெரிய அண்ணி, "கட்டிலில் படுக்காமல் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே தூங்கிவிட்டாயே" என்று அன்புடன் கடிந்து கொண்டே தட்டி எழுப்பியபோதுதான் விழிப்பு வந்தது.

காபி அருந்தி கொண்டிருந்தபோது உள்ளே அண்ணனும் அண்ணியும் பேசிக் கொள்வது காதில் விழுந்தது.

"ரங்கநாயகி! இன்னிக்கு மதியம் நீ போய் சுசிலா மாமியிடம் விஷயத்தை சொல்லி விடு."

"கட்டாயம் போகிறேன்." - வாக்குக் கொடுப்பது போல் பெரிய அண்ணி சொன்னதும் தெளிவாகக் காதில் விழுந்தது.

அதுவரை தன் மனதில் இருப்பதை வார்த்தைகளில் வடிக்கத் தெரியாமல் திண்டாடிக் கொண்டிருந்த ஹேமாவுக்கு அண்ணி இன்று மதியம் வீட்டில் இருக்கப் போவதில்லை என்று தெரிந்ததும் யானைபலம் வந்து விட்டது போல் இருந்தது. உடனே காகிதத்தை எடுத்து நான்கு வரிகளை கிறுக்கிவிட்டு, ரகசியமாக மதுவை

அழைத்தாள்.

"இந்தக் கடிதத்தை உங்க சாரிடம் கொடுத்து, அவர் என்ன பதில் சொல்கிறார் என்றும் தெரிந்து கொண்டு வா ..... ப்ளீஸ்!" - கெஞ்சுவது போல் சொன்னாள்.

இது போன்ற விஷயங்களை கடிதங்களில் பரிமாறிக்கொள்வதை விட நேரில் பேசிக் கொள்வதுதான் நல்லது என்று தோன்றியது.

மது கடிதத்தை கொடுத்து விட்டு வந்தான். "கட்டாயம் வருவதாக சொல்லச் சொன்னார் அக்கா" என்றான்.

ஹேமா அவனுக்கு அத்தை முறை என்றாலும் சின்ன வயதிலிருந்தே அவளை அக்கா என்று அழைப்பது பழக்கமாகிவிட்டது.

மது சொன்னதைக் கேட்ட்தும் ஹேமா திக்குமுக்காடி விட்டாள். சட்டென்று மதுவை அருகில் இழுத்துக் கொண்டு இரண்டு கன்னங்களிலும் மாறி மாறி முத்தம் பதித்தாள். மது திகைத்துப் போனவனாய் பார்த்தான்.

ரமேஷ் தன்னிடம் தனிமையில் பேச மதியம் வரப்போகிறான் என்று தெரிந்தது முதல் ஹேமாவின் மனம் ஒரு நிலையில் இருக்க வில்லை.

காலையில் உண்டு முடித்த பிறகு சற்று நேரம் படுத்துக் கொள்ளும் வழக்கம் ரங்கநாயகிக்கு இருந்தது. சிறிது நேரம் கண்ணை சைந்தவள் சட்டென்று கடிகாரத்தை பார்த்து திடுக்கிட்டாள்.

"அடடா.... ! மணி ஒன்றாகி விட்டதே" என்றவள் சட்டென்று எழுந்து புடவையை மாற்றிக்கொண்டு வந்தாள்.

"ஹேமா! சுசிலா மாமி வீட்டுக்குப் போய்விட்டு சீக்கிரமாகவே திரும்பிவிடுவேன். நீ எங்கேயும் போய்விடாதே. மாலையில் உன் அண்ணா யாரோ விருந்தாளிகளை அழைத்து வரப்போகிறாராம்." - நாத்தனாரை எச்சரித்தாள்.

"சரி அண்ணீ! " - ஹேமா ரொம்ப பணிவாக பதில் சொன்னாள்.

ரங்கநாயகி கிளம்பிப் போய்விட்டாள், அதுவரையில் அண்ணி கிளம்பிப் போவாளா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஹேமாவுக்கு அவள் போன பிறகு மகிழ்ச்சிக்கு பதிலாக மனதில்

இனம் புரியாத பதட்டம் ஏற்பட்டது. ரமேஷிடம் தான் சொல்ல நினைத்ததை நினைவுப்படுத்திக் கொண்டே உள்ளுக்கும்வாசலுக்கும் நூறுமுறையாவது நடந்திருப்பாள். கடிகார முள்ளை அரைமணி முன்னால் நகர்த்திவைத்த விஷயம் மது நினைவுப்படுத்தும் வரை, ரமேஷ் இன்னும் வரவில்லையே என்று கவலைபட்டுக் கொண்டு தான் இருந்தாள்.

மது கிளம்பிப் போன பிறகு உள்ளே வந்த ஹேமாவுக்கு காலையில் ரமேஷுக்கு எழுதிய கடிதத்தில் கடைசியாக "சொன்னபடி வந்தால் தஞ்சாவூர் டிகிரி காபி கலந்து தருகிறேன்" என்று எழுதியது நினைவுக்கு வந்தது.

சட்டென்று சமையல் அறைக்குள் சென்று அடுப்பை பற்ற வைத்து பாத்திரத்தில் தண்ணீரை கூடவைத்தாள். நல்ல வேளை இப்போதாவது நினைவுக்கு வந்ததே. அவன் வந்த பிறகு அவசரப் படாமல் என்று நினைத்துக் கொண்டாள்.

அடிக்கடி இந்த ஞாபகமறதி தன்னை ஆட்கொள்வதை பற்றி ரமேஷிடம் மறக்காமல் சொல்ல வேண்டும். இது போன்ற விஷயங்கள் சொன்னால் அவன் கலகலவென்று நகைப்பான். கள்ளங்கபட மற்ற அந்தச் சிரிப்பு எவ்வளவு நன்றாக இருக்கும்! இந்த உலகில் யாராலும் அப்படி சிரிக்க முடியாது என்று ஹேமாவுக்குத் தோன்றியது.

ஒரு முறை அவன் பெரிய அண்ணனிடம், 'நானும் உடுப்பி ஹோட்டல் முதல் பெரிய ஸ்டார் ஹோட்டல்களில் காபி சாப்பிட்டு இருக்கிறேன். ஆனால் ஹேமா கலந்து தரும் காபிக்கு இணையாக எங்கேயும் அந்த மணம் இருந்ததில்லை. அவளுடைய கையிலேயே அந்த மணம் இருக்கிறதோ என்னவோ' என்று சொன்னதை கேட்டு இருக்கிறாள்.

கொதித்த தண்ணீரை எடுத்து ஃபில்டரில் ஊற்றும்போது, அவன் தன்னை பாராட்டி சொன்னது நினைவுக்கு வந்தது. இப்பொழுது அவன் அருகாமையில் நின்று கொண்டு மறுபடியும் பாராட்டுவது போன்ற உணர்வு ஏற்பட்டது.

கனவுலகில் மிதந்து கொண்டே ஜன்னல் வழியாக வெளியில் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு ஃபில்டரில் தண்ணீர் கொட

கொடவென்று இறங்கும் சத்தம் கேட்டது. சட்டென்று அருகில் சென்று ஃபில்டரின் மூடியை திறந்து பார்த்தாள்.

"அட கடவுளே!" என்று தலையில் அடித்துக் கொண்டாள்.

ஃபில்டரில் காபி பொடியை போடாமலேயே வெண்ணீரை ஊற்றியிருந்தாள்.

ஃபில்டரில் இறங்கிய நீரை மறுபடியும் சுவைத்து, இந்த முறை மறக்காமல் காபிபொடியை போட்டு டிகாக்ஷனை இறக்கினாள்.

"இனி லாபம் இல்லை. ரமேஷிடம் விஷயம் சொல்லி முடிக்கும் வரை தன் மனம் எந்த வேலையிலும் லயிக்கப் போவதில்லை" என்று நினைத்துக் கொண்டாள்.

வாசலில் யாரோ வந்த சத்தம் கேட்டது. ஹேமா கையில் இருந்த பாத்திரத்தை சட்டென்று கீழே வைத்துவிட்டு முன் அறைக்கு ஓடினாள்.

முகமெல்லாம் ஒளிவீச முன் அறைக்கு எதிர்பார்ப்புடன் வந்த ஹேமா, அந்த நபரை பார்த்ததும் களை இழந்து ஏமாற்றமாய் உணர்ந்தாள். ஹேமாவுக்கு ஏமாற்றம் தந்த அம்மாமியின் பெயர் சுந்தரி.

"என்னடியம்மா? வீடு நிசப்தமாய் இருக்கே? பெரிய அண்ணி வீட்டில் இல்லையா என்ன?" - சுந்தரி மாமி கேட்டாள்.

சுந்தரி மாமியை பார்த்ததும் ஹேமாவுக்கு உயிரே போனாற் போல் இருந்தது. அந்த மாமி ரொம்ப வாயாடி!. வந்தால் லேசில் கிளம்ப மாட்டாள். அண்ணி இருந்தாளானால் அந்த மாமிக்கு காபி டிபன் உபசாரம் செய்து ஊர் வம்பை எல்லாம் கேட்டுக்கொள்வாள்.

"அண்ணி வெளியில் போயிருக்காங்க மாமி. இப்போதைக்கு வர மாட்டாள்" - ஹேமா துணிந்து பொய் சொல்லிவிட்டாள்.

"அப்படியா? எப்பொ கிளம்பிப் போனாள்? இந்த வெயிலில் அவ்வளவு தொலைவிலிருந்து உடம்புக்கு முடியாவிட்டாலும் பார்த்துவிட்டுப் போகலாம் என்று கஷ்டப்பட்டு வந்தேன். பழங் காலத்து மனிதர்கள் நாங்க! உங்களைப் போல் விட்டேற்றியாக இருக்க எங்களுக்குத் தெரியாது", - நிஷ்டூரமாகச் சொன்னாள் சுந்தரி மாமி.

அதைக் கேட்டதும் ஹேமாவுக்கு இடிவிழுந்தது போல் இருந்தது. இந்த மாமியோ நீண்ட நாட்களுக்குப் பிறகு வந்திருக்கிறாள். பேசும் தோரணையைப் பார்த்தால் உடனே கிளம்ப மாட்டாள் போல் இருக்கிறது. அதற்குள் ரமேஷ் வந்து விட்டால் என்ன செய்வது? போயும் போயும் இந்த மாமி இப்பொழுதுதான் வரவேண்டுமா? ஹேமாவின் மனதில் பலவிதமான எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந் தன.

தனக்கும் உடல் நிலை சரியில்லை. ரொம்ப பலவீனமாய் இருப்ப தால் டாக்டர்கள் பேசக்கூடாது என்று சொல்லி இருக்கிறார்கள் என்று சொல்லிவிடலாமா என்று நினைத்தாள்.

உடம்புக்கு என்ன? டாக்டர் யாரு என்று ஆயிரம் கேள்வி கேட்டு உண்டு இல்லையென்று ஆக்கிவிடுவாள். பதில் சொல்ல முடியாமல் திண்டாட வேண்டிவரும்.

அதற்குள் மின்னல் போன்ற யோசனை வந்தது ஹேமாவுக்கு. இதழ்களில் புன்முறுவல் தவழ, குரலில் தேன் ஒழுக, "அடடா...! இந்த நேரத்தில் வந்திங்களே மாமீ. வயதான காலத்தில் ரொம்ப சிரமம் உங்களுக்கு. நானும் வீட்டில் இருக்கப் போவதில்லை. ரொம்ப அவசரமான ஜோலியாய் வெளியில் கிளம்பிக் கொண்டிருந் தேன்" என்ற சொல்லி விட்டு அலமாரியில் இருந்த பூட்டு சாவியை கையில் எடுத்துக் கொண்டு மூலையில் இருந்த செருப்பை மாட்டிக் கொண்டாள்.

வேறு வழியில்லாத நிலையில், விருப்பம் இல்லாவிட்டாலும் சுந்தரி மாமி நாற்காலியை விட்டு எழுந்து கொண்டாள்.

"நான் வந்து விட்டுப் போனேன்னு உன் அண்ணியிடம் சொல்லு. உடனே மறுபடியும் என்னால் வரமுடியாது." - சுந்தரி மாமி நீட்டி முழக்கிக் கொண்டே சொன்னாள்.

ஹேமா வீட்டை பூட்டி விட்டு அந்த மாமியுடன் சேர்ந்து கொஞ் சம் தூரம் நடந்து, பக்கத்துத் தெருவுக்குள் திரும்பினாள், தெரு முனையிலேயே ஐந்து நிமிடங்கள் நின்று விட்டு, அந்த மாமி தெரு வைத் தாண்டி விட்டாளா என்று தெரிந்துக்கொள்ள எட்டிப் பார்த் தாள். பெருத்த உடம்பை தூக்கமுடியாமல் தூக்கிக் கொண்டு அந்த மாமி மெதுவாக நடந்து போய்க்கொண்டிருந்தாள். மாமி தெருவைக்

கடந்து விட்டாள் என்று உறுதியாகத் தெரிந்த பிறகு ஹேமா ஓட்டமும் நடையுமாக வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். அவசர அவசரமாக பூட்டை திறந்து கொண்டு உள்ளே போய் மணியை பார்த்தாள். மூன்று மணி பத்து நிமிடங்கள் ஆகியிருந்தன. பூட்டை மறுபடியும் அலமாறியில் வைக்கப்போனவள், பக்கத்தில் இருந்த நிலைக்கண்ணாடியில் தன் உருவத்தை பார்த்துக் கொண்டாள். வெளியில் போய்விட்டு வந்ததில் முகம் சுன்றியிருந்தது. 'ச்சீ — ச்சீ — எண்ணை வழியும் இந்த முகத்துடனா அவனை வரவேற்பது?' என்று நினைத்தவள், உடனே டவலை எடுத்துக்கொண்டு பாத்ரூமுக்குள் நுழைந்தாள். சோப்பை குழைத்து முகத்தில் பூசிக்கொண்டிருந்த போதே வாசலில் யாரோ வந்த சத்தமும், அதைத் தொடர்ந்து "ஹேமா!" என்ற அழைப்பும் கேட்டன.

அந்தக் குரல் கேட்டதும் ஹேமாவின் இதயம் ஒரு நிமிடம் நின்று மீண்டும் இயங்கியது. ரமேஷ் வந்து விட்டான்!

சட்டென்று முகத்தில் தண்ணீரை தெளித்துக் கொண்டு கழுவிக் கொண்டாள். 'இதோ வந்து விட்டேன்' என்று குரல் கொடுக்க நினைத்தாள். ஆனால் ஏனோ குரல் எழும்ப மறுத்தது.

"ஹேமா!" இரண்டாவது முறையாக அழைத்தான்.

கால்கள் தடுமாற, புடவைத் தலைப்பால் முகத்தை ஒற்றிக் கொண்டே மௌனமாக கதவுக்கு அருகில் நின்று கொண்டாள்.

நாற்காலியில் அமர்ந்து கொண்டு டீபாய்மீது கிடந்த பத்திரிகையை கையில் எடுத்துக் கொண்டான் ரமேஷ்.

"ஹேமா!" என்று ஏதோ சொல்லப் போனவன், அவள் இருந்த நிலையை பார்த்ததும் சொல்ல வந்ததை மறந்து விட்டு கலகல வென்று நகைத்துவிட்டான்.

"இப்படியா முகத்தை கழுவிக்கொள்வது? காது, கழுத்து பக்கம் சோப் போகவே இல்லை பாரு" என்றான்.

ஹேமாவின் காதுகளில் அந்த வார்த்தைகள் விழுவில்லையோ இல்லை விழுந்தாலும் அதன் அர்த்தம் புரிந்து கொள்ளும் நிலையில் அவள் இல்லையோ தெரியாது. சிரித்துக் கொண்டிருந்த அவன் முகத்தையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கண்களை மூடிக்கொண்டாலும் அவன் உருவம் எதிரில் இருப்பது போல் தோன்றும். அழுத்தி வாரினாலும் படியாமல் அலையாய் புரளும் தலைமுடி, பிடிவாதத்தை எடுத்துக்காட்டும் மூக்கு ... சீரான உடற்கட்டு .... எப்போதும் கம்பீரமாக மிக அரிதான வேளைகளில் குறும்புதனம் கொப்புளிக்கும் அந்த கண்கள் ..... முதல் முறையாக அவனை பார்ப்பதுபோல் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டி. ருந்தாள்.

ரமேஷ் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டான்.

"ஏன்? என் முகத்தில் ஏதாவது இருக்கிறதா?"

ஆமாம் என்பது போல் தலையை அசைத்தாள். ரமேஷ் சங்கடமாக பார்த்து விட்டு, சட்டையிலிருந்து கைக்குட்டையை எடுத்து, முகத்தை மறுபடியும் துடைத்துக் கொண்டான்.

ஹேமா சிரித்துவிட்டாள்.

அவள் விளையாடுகிறாள் என்று ரமேஷுக்குப் புரிந்துபோயிற்று.

"ஏதோ முக்கியமான விஷயம் பேச வேண்டும் என்று சொல்லி அனுப்பியதோடு, தஞ்சாவூர் டிகிரி காபி கிடைக்கும் என்று ஆசை வேறு காட்டி இருந்தாய். சரி என்று வந்தால் மௌனவிரதம் பூண்டு விட்டவள் போல் கண்கள் இமைக்காமல் என்னையே பார்த்துக் கொண்டு இருக்கிறாயே" என்றான்.

"முதலில் காபி வேண்டுமா இல்ல விஷயத்தைச் சொல்லட்டுமா?"

"முதலில் விஷயத்தைச் சொல்லி விடு. அதைக் கேட்டு அதிர்ச்சி ஏற்பட்டால் நீ தரப் போகும் காபியால் கொஞ்சம் ரிலாக்ஸ் செய்து கொள்கிறேன்". - அவன் கண்களில் குறும்புத்தனம் எட்டிப்பார்த்தது.

தான் சொல்லப் போகும் விஷயத்தை எப்படி எடுத்துக் கொள் வான்? வியப்பு அடைவானா. இல்லை மகிழ்ச்சியால் திக்குமுக்காடு வானா? ஒப்புக் கொள்வானா — இல்லை — கோபித்துக்கொள்வானா? பயத்தினால், சந்தேகத்தினால் ஹேமாவின் இதயம் வேகமாக துடிக்கத் தொடங்கியது.

"அவ்வளவு தொலைவில் நின்றால் எப்படி? வா — இங்கே வந்து உட்காரு" என்றான்.

அவன் வார்தைகளுக்குக் கட்டுண்டவள் போல் அவன் எதிரில் வந்து நின்று கொண்டாள்.

"என்ன விஷயம் ஹேமா?" என்று கேட்டான். அவன் கண்களில் ஆர்வமும், லேசான பதட்டமும் கலந்து தென்பட்டன.

திடீரென்று வாய் அடைத்து விட்டது போல் இருந்தது ஹேமாவுக்கு. கீழ் உதட்டை கடித்துக் கொண்டே, "முதலில் காபி கலந்து எடுத்து வருகிறேன்" என்று நகரப்போனாள்.

"முதலில் விஷயத்தைச் சொல்லி விடு. அது என்னவென்று தெரிந்து கொள்ளாமல் காபியை குடித்தால் அதனுடைய ருசியை கூட என்னால் உணர்ந்து கொள்ள முடியாது." - அவனுடைய வார்த்தைகள் கிண்டல் செய்வதுபோல் ஒலித்தாலும் கண்கள் மட்டும் ஹேமாவின் முகத்தையே கூர்ந்து பரிசீலித்துக் கொண்டிருந்தன.

"ரமேஷ் நீயும்! — நானும் ..... அதாவது நாம் ___" மேற்கொண்டு பேச வார்த்தைகள் கிடைக்காதவள் போல் தடுமாறினாள்.

"நீயும், நானும் சேர்ந்து____என்ன? என்னை சஸ்பென்ஸில் வைக்காமல் சீக்கிரமாக விஷயத்தைச் சொல்லு ஹேமா. காலையிலிருந்து எனக்கு இருப்பு கொள்ளவில்லை" என்றான்.

"என்னைப்பற்றி உன்னுடையஅபிப்பிராயம் என்ன?"-திடீரென்று கேட்டுவிட்டாள்.

அவன் வியப்படைந்தவன் போல் பார்த்தான்.

"திடீரென்று என்னுடைய அபிப்பிராயத்தை தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் என்ன வந்து விட்டது?"

"அவசியம் இருப்பதால்தான் கேட்கிறேன். என்மீது உனக்கு என்ன அபிப்பிராயம் இருக்கு என்று சொன்ன பிறகு நான் சொல்ல வந்ததை சொல்லிவிடுகிறேன்."

"என் மனதில் இருப்பது என்னவென்று உனக்குத் தெரியாதா ஹேமா?"

"தெரியும். தெரியும் என்று மனபூர்வமாக நம்பியிருப்பதால் தான் உன்னை இந்த மாதிரி அழைக்கச் செய்து என் மனதில் இருப்பதை வெளிப்படுத்த நினைத்தேன். உன் மனதில் இருப்பதை என்

னால் உணர்ந்துகொள்ள முடிந்தாலும், என் வாழ்க்கையின் மிக முக்கியமான இந்தத் தருணத்தில் உன் வாயால் அந்தச் சொற்களைக் கேட்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். என் மீது சத்தியம் செய்து உன் மனதில் இருப்பதை சொல்லு. என்றவள், அருகில் வந்து ரமேஷின் வலது கையை எடுத்து தன்னுடைய தலை மீது வைத்துக் கொண்டாள்.

ரமேஷ் கற்சிலையாக நின்றுவிட்டான். ஹேமாவிடம் அவன் உரிமையாக பழகியது உண்மைதான். ஆனால் அது வெறும் நட்புடன் சரி. அந்த எல்லையைத் தாண்டி என்றுமே அவன் பழகியது இல்லை. ஒரு நாளும் அவளைத் தொடும் அளவிற்கு உரிமையை அவன் எடுத்துக் கொண்டதில்லை.

தன்னையும் அறியாமல் கையை பின்னால் இழுத்துக்கொள்ளப் போனான். ஹேமா பலமாக பற்றி இருந்ததால் அந்த முயற்சி பலிக்கவில்லை.

ஹேமாவின் ஸ்பரிசம் அவன் இரத்தத்தில் கலந்து, இதயத்தை தொட்டு, அங்கே அவன் ரொம்ப ரகசியமாக மறைத்து வைத்திருந்த நினைவுகளை தட்டி எழுப்பியது. அவன் கண்களுக்கு முன்னால் மறுபடியும் அந்தக் காட்சி திரைப்படமாய் ஓடியது.

ஹேமாவை இதற்கு முன் ஒரே ஒரு தடவை அவன் தொட்டு இருக்கிறான். அதுவும் அவளை தீவிபத்திலிருந்து காப்பாற்ற போன போது .....

இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் ..... வழக்கம் போல் ரமேஷ் மதுவுக்கு டியூஷன் சொல்லித் தருவதற்காக வந்திருந்தான். வீட்டில் ஹேமாவை தவிர யாரும் இல்லை.

உள்ளே சமையல் செய்து கொண்டிருந்த ஹேமா, "மது!" என்று ரமேஷ் அழைத்ததைக் கேட்டு முன் அறைக்கு வந்தாள்.

"கடைத்தெருவுக்கு போயிருக்கிறான் வந்துவிடுவான். உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள்.

ரமேஷ் அங்கே இருந்த பேப்பரை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று வீலென்று ஹேமா அலறியதை கேட்டு உள்ளே

அவன் வார்தைகளுக்குக் கட்டுண்டவள் போல் அவன் எதிரில் வந்து நின்று கொண்டாள்.

"என்ன விஷயம் ஹேமா?" என்று கேட்டான். அவன் கண்களில் ஆர்வமும், லேசான பதட்டமும் கலந்து தென்பட்டன.

திடீரென்று வாய் அடைத்து விட்டது போல் இருந்தது ஹேமாவுக்கு. கீழ் உதட்டை கடித்துக் கொண்டே, "முதலில் காபி கலந்து எடுத்து வருகிறேன்" என்று நகரப்போனாள்.

"முதலில் விஷயத்தைச் சொல்லி விடு. அது என்னவென்று தெரிந்து கொள்ளாமல் காபியை குடித்தால் அதனுடைய ருசியை கூட என்னால் உணர்ந்து கொள்ள முடியாது." - அவனுடைய வார்த்தைகள் கிண்டல் செய்வதுபோல் ஒலித்தாலும் கண்கள் மட்டும் ஹேமாவின் முகத்தையே கூர்ந்து பரிசீலித்துக் கொண்டிருந்தன.

"ரமேஷ் நீயும்! — நானும் ..... அதாவது நாம் ——" மேற்கொண்டு பேச வார்த்தைகள் கிடைக்காதவள் போல் தடுமாறினாள்.

"நீயும், நானும் சேர்ந்து——என்ன? என்னை சஸ்பென்ஸில் வைக்காமல் சிக்கிரமாக விஷயத்தைச் சொல்லு ஹேமா. காலையிலிருந்து எனக்கு இருப்பு கொள்ளவில்லை" என்றான்.

"என்னைப்பற்றி உன்னுடைய அபிப்பிராயம் என்ன?"-திடீரென்று கேட்டுவிட்டாள்.

அவன் வியப்படைந்தவன் போல் பார்த்தான்.

"திடீரென்று என்னுடைய அபிப்பிராயத்தை தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் என்ன வந்து விட்டது?"

"அவசியம் இருப்பதால்தான் கேட்கிறேன். என்மீது உனக்கு என்ன அபிப்பிராயம் இருக்கு என்று சொன்ன பிறகு நான் சொல்ல வந்ததை சொல்லிவிடுகிறேன்."

"என் மனதில் இருப்பது என்னவென்று உனக்குத் தெரியாதா ஹேமா?"

"தெரியும் தெரியும் என்று மனபூர்வமாக நம்பியிருப்பதால் தான் உன்னை இந்த மாதிரி அழைக்கச் செய்து என் மனதில் இருப்பதை வெளிப்படுத்த நினைத்தேன். உன் மனதில் இருப்பதை என்

னால் உணர்ந்துகொள்ள முடிந்தாலும், என் வாழ்க்கையின் மிக முக்கியமான இந்தத் தருணத்தில் உன் வாயால் அந்தச் சொற்களைக் கேட்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். என் மீது சத்தியம் செய்து உன் மனதில் இருப்பதை சொல்லு. என்றவள், அருகில் வந்து ரமேஷின் வலது கையை எடுத்து தன்னுடைய தலை மீது வைத்துக் கொண்டாள்.

ரமேஷ் கற்சிலையாக நின்றுவிட்டான். ஹேமாவிடம் அவன் உரிமையாக பழகியது உண்மைதான். ஆனால் அது வெறும் நட்புடன் சரி. அந்த எல்லையைத் தாண்டி என்றுமே அவன் பழகியது இல்லை. ஒரு நாளும் அவளைத் தொடும் அளவிற்கு உரிமையை அவன் எடுத்துக் கொண்டதில்லை.

தன்னையும் அறியாமல் கையை பின்னால் இழுத்துக்கொள்ளப் போனான். ஹேமா பலமாக பற்றி இருந்ததால் அந்த முயற்சி பலிக்கவில்லை.

ஹேமாவின் ஸ்பரிசம் அவன் இரத்தத்தில் கலந்து, இதயத்தை தொட்டு, அங்கே அவன் ரொம்ப ரகசியமாக மறைத்து வைத்திருந்த நினைவுகளை தட்டி எழுப்பியது. அவன் கண்களுக்கு முன்னால் மறுபடியும் அந்தக் காட்சி திரைப்படமாய் ஓடியது.

ஹேமாவை இதற்கு முன் ஒரே ஒரு தடவை அவன் தொட்டு இருக்கிறான். அதுவும் அவளை தீவிபத்திலிருந்து காப்பாற்ற போன போது .....

இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் ..... வழக்கம் போல் ரமேஷ் மதுவுக்கு டியூஷன் சொல்லித் தருவதற்காக வந்திருந்தான். வீட்டில் ஹேமாவை தவிர யாரும் இல்லை.

உள்ளே சமையல் செய்து கொண்டிருந்த ஹேமா, "மது!" என்று ரமேஷ் அழைத்ததைக் கேட்டு முன் அறைக்கு வந்தாள்.

"கடைத்தெருவுக்கு போயிருக்கிறான் வந்துவிடுவான். உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள்.

ரமேஷ் அங்கே இருந்த பேப்பரை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று வீலென்று ஹேமா அலறியதை கேட்டு உள்ளே

ஓடினான்.

புடவையில் பற்றியிருந்த நெருப்பை கையால் அணைக்க முயன்று கொண்டே ஹேமா வீல்வீல் என்று கத்திக்கொண்டிருந்தாள். ரமேஷ் ஒரே எட்டில் அருகில் சென்று அவளை இறுக பிடித்துக் கொண்டு புடவைத் தலைப்பை, கொசுவங்களை உருவிதொலைவாக வீசினான். உள் பாவாடையில் பிடித்திருந்த நெருப்பை கவனித்தவன் சட்டென்று கையால் அணைத்தான். அவளை காப்பாற்றும் முயற்சியில் அவன் அணிந்திருந்த டெரிகாட்டன் ஷர்டில் நெருப்பும் பிடித்துக் கொண்டு விட்டதை கவனிக்கவில்லை. நெருப்பின் உஷ்ணத்தை உணர்ந்து அவன் ஷர்டை கழற்றுவதற்குள் உடலோடு ஒட்டிக் கொண்ட தீ மேலும் பரவத்தொடங்கியது. அதைக் கவனித்த ஹேமா சட்டென்று அருகில் இருந்த குடத்தை எடுத்து அதிலிருந்த தண்ணீரை அப்படியே அவன் மீது கவிழ்த்துவிட்டாள்.

ஈர உடையில் அவனும், அரை குறை ஆடையில் அவளும் ஒரு வரை ஒருவர் பார்த்துக் கொண்டு அப்படியே சற்சிலையாக நின்று விட்டார்கள். வீடு முழுவதும் துணி பொகங்கிய நாற்றம் பரவியது. ஹேமா ரமேஷ் மீது ஊற்றிய தண்ணீர் தரை முழுவதும் பரவி, எரிந்து கொண்டிருந்த புடவையையும் அணைத்துவிட்டது.

மது அலறியதைக் கேட்டு இருவரும் திடுக்கிட்டுப் பார்த்தார்கள். சுயநினைவு பெற்றவள் போல் ஹேமா சட்டென்று உள் அறைக்குள் ஓடினாள்.

மாலையில் வீடு திரும்பிய சேஷாத்ரியிடம் மது, ஹேமா இந்த விஷயத்தை விலாவாரியாக சொன்னார்கள். இரண்டு நாட்களுக்குப் பிறகு ஊரிலிருந்து வீடு திரும்பிய ரங்கநாயகி இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டு, காஸ் அடுப்பு வாங்கித்தராமல் இன்னும் மண்ணெண்ணை அடுப்புடன் தன்னை திண்டாட வைத்துக் கொண்டிருந்ததற்காக கணவனுடன் சண்டை போட்டாள்.

அந்த விபத்தில் ஹேமாவுக்கு அதிகம் காயம் ஏற்படவில்லை. ஆனால் ரமேஷுக்குத்தான் கொப்புளங்கள் ஏற்பட்டு காயங்கள் ஆறுவதற்கு ரொம்ப நாட்கள் பிடித்தன. அந்த விபத்திலிருந்து ஹேமாவைக் காப்பாற்றியதற்கு அடையாளமாக அவன் கழுத்திற்குக் கீழே கை அகலத்திற்கு தீக்காயத்தின் வடு சாசுவதமாகத் தங்கி

விட்டது.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ஹேமா ரமேஷிடம் ஓரிரு வார்த்தைகள் பேசத் தொடங்கினாள். அதன்பிறகு ப்ளஸ்டூ பரிட்சைகளின் போது ரமேஷ் ஹேமாவுக்கு ட்யூஷன் சொல்லித் தந்ததால் அந்த அறிமுகம் மேலும் வளர்ந்தது. இருவருக்கும் இடையில் நெருக்கம் ஏற்பட அந்த நிகழ்ச்சிதான் மூல காரணம் என்று தெரிந்த போதும் அவ்விருவரும் ஒருநாள் கூட அந்த விபத்தைப் பற்றி பேசிக்கொள்ளவில்லை.

ஹேமாவின் தலைமீது கையை வைத்து கடந்தகால நினைவுகளில் மூழ்கிப் போயிருந்த ரமேஷை ஹேமா உலுக்கினாள்.

"என்ன யோசனை ரமேஷ்? என் மீது அபிப்பிராயம் தெரிவிக்க பயமாக இருக்கிறதா?"

திடுக்கிட்டவன் போல் இந்த உலகிற்கு மீண்டும் வந்த ரமேஷ் ஹேமாவின் தலைமீது இருந்த தன்னுடைய கையை அழுத்திக் கொண்டே "ஊஹூம்" என்றான்.

"அப்ப சொல்லு."

ரொம்ப அபூர்வமான விஷயத்தைச் சொல்வதுபோல் ரமேஷின் குரல் ஒலித்தது.

"இந்த உலகில் ஹேமாவை விட எனக்கு நெருக்கமானவர்கள் வேறு யாரும் இல்லை."

"ஊஹூம். நீ சரியாகச் சொல்லவில்லை." - ஹேமா அடம் பிடிப்பது போல் சொன்னாள்.

"சரியாகச் சொல்லவில்லையா? அப்படி என்றால்?"

"உன்னுடைய எண்ணத்தை அந்த வார்த்தைகள் சரியாக வெளிப்படுத்தவில்லை" என்றாள்.

அவன் சிரித்தான். அவள் பொய்க்கோபத்துடன் நின்றிருந்ததை பார்க்கும்போது, அந்த நிமிடமே அவளை தன் அருகில் இழுத்துக் கொண்டு இறுக்கமாக அணைத்துக் கொள்ள வேண்டும் என்று பலமாகத் தோன்றியது.

"இதைவிட வெளிப்படையாக எனக்கு சொல்லத் தெரியவில்லை

நீதான் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும்." - வேண்டுவதுபோல் சொன்னான்.

"நான் உனக்கு நெருக்கமானவள்தானே?"

"ஆமாம்."

"அப்போ நான் உன்னை அதிகாரம் செய்யலாம் இல்லையா?"

"தாராளமாக. தேவியாரின் ஆணை என்னவோ?"

"ரமேஷ்! நீ என்னை _" மேலும் ஏதோ சொல்லப்போன ஹேமா அரவம் கேட்டுவாசல்பக்கம் பார்த்தாள்.அவ்வளவுதான்!சட்டென்று தன்னுடைய தலைமீது இருந்த ரமேஷின் கையை விலக்கிவிட்டு, மின்னல் வேகத்தில் உள்ளே போய்விட்டாள்.

மூச்சை அடக்கிக்கொண்டு ஹேமா சொல்லப்போகும் வார்த்தைக்காக காத்திருந்த ரமேஷ் எதிர்பாராத இந்த பரிணாமத்திற்கு வியப்பு அடைந்தவனாக தலையை திருப்பி வாசற்பக்கம் பார்த்தான். வாசற்கதவை அடைத்துக்கொண்டு ரங்கநாயகியின் தாய் ஜெகதாம்பாள் நின்றிருந்தாள். அவள் கண்கள் நெருப்பை கக்கிக்கொண்டிருந்தன. ஒருநிமிடம் ரமேஷின் முகம் கன்றி சிவந்துபோய்விட்டது. அடுத்த நிமிடம் எதுவுமே நடக்காதது போல் பக்கத்திலிருந்த பத்திரிகையை எடுத்து புரட்டத் தொடங்கினான்.

ஆசார அனுஷ்டானங்களை விதியாக கடைபிடிப்பதோடு, மகளின் திருமண வாழ்க்கையிலும் ஹிட்லரை போல் அதிகாரம் செலுத்தும் ஜெகதாம்பாளைக் கண்டால் ரமேஷுக்கு கொஞ்சம் பயம்தான். போறாத குறைக்கு வீட்டில் யாரும் இல்லாத சமயத்தில் நானும் ஹேமாவும் நெருக்கமாய் இருந்த காட்சி அந்த அம்மாளின் கண்ணில் வேறுபட்டுவிட்டது.

ஜெகதாம்பாள் நேராக ஹேமா இருந்த அறைக்குள் சென்றாள்.

"ஹேமா உன் அண்ணி எங்கே?" - ஜெகதாம்பாளின் குரல் மிரட்டுவது போல் ஒலித்தது.

"அண்ணி வீட்டில் இல்லை. சுசிலாமாமி வீட்டுக்குப் போயிருக்கிறாள்." - ஹேமாவின் குரல் எந்த தயக்கமும் இல்லாமல் ஒலித்ததை ரமேஷ் கேட்டுக்கொண்டுதான் இருந்தான். நிம்மதியாக உணர்ந்தான்.

பத்துநிமிடங்கள் கழிந்தன. ஹேமா முன் அறைக்கு வரவில்லை. காத்திருப்பதா கிளம்பிப்போய்விடுவதா என்று அவனுக்குத் தெரியவில்லை.

பிரச்சனையை தீர்ப்பது போல் ஹேமா ஹாலுக்கு வந்தாள்.

"ஒருநிமிடம் இருங்கள். காபி கலந்து எடுத்துவருகிறேன்" என்று சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள்.

ஹேமாவின் தைரியத்தை பார்க்கும்போது ரமேஷுக்கு வியப்பாக இருந்தது.

காபி குடிக்கவேண்டும் என்று தோன்றாததால் ஹேமாவை அழைத்து காபி கலக்க வேண்டாம் என்று சொல்ல நினைத்தான். அதற்குள் வெளியிலிருந்து ரங்கநாயகி இரண்டுகைகளிலும் சுமக்க முடியாமல் பைகளை சுமந்துகொண்டு உள்ளே வந்தாள்.

ரமேஷை பார்த்ததும் "வாப்பா. ரமேஷ் வந்து ரொம்ப நேரம் ஆகிவிட்டதா?" என்று குசலம் விசாரித்தாள்.

"இப்பொழுதுதான் வந்தேன்"

"ஹேமா இல்லையா?"

"இருக்கிறாள். உள்ளே காபி கலந்து கொண்டிருக்கிறாள்" என்றான்.

ரங்கநாயகி உள்ளே போனாள்.

"அம்மா! நீயா எப்போ வந்தாய்?" என்ற வியப்புடன் தாயை குசலம் விசாரிப்பது ரமேஷின் காதுகளில் விழுந்தது.

"இப்பொழுதுதான் வந்தேன். முன் அறையில் உட்கார்ந்திருக்கும் அந்தப் பையன் ஜானகியின் மகன்தானே?" - ஜெகதாம்பாளின் குரல் தொடர்ந்து ஒலித்தது.

"ரமேஷையா கேட்கிறாய்? ஆமாம்." - ரங்கநாயகி பதில் சொன்னாள்.

"ரங்கநாயகி! உனக்கும் உன் வீட்டுக்காரருக்கும் கொஞ்சம்கூட மூளையில்லை. வயசுக்கு வந்த பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு இந்தமாதிரி ஜாதி, மதம் இல்லாத பசங்களை வீட்டுக்குள்

அனுமதிப்பீங்களா! அந்த ஜானகி ஒரு முஸ்லீம் பையனுடன் சேர்ந்து —" அந்த அம்மாள் இன்னும் வார்த்தைகளை முடிக்கக் கூட இல்லை. அப்பொழுதுதான் அங்கே வந்த ஹேமா சட்டென்று தாவி அந்த அம்மாளின் வாயை இறுக்கமாய் பொத்தினாள். ஹேமாவின் பிடியிலிருந்து விடுபட அந்த அம்மாள் முயன்று கொண்டிருந்தாள். ரங்கநாயகி அருகில் சென்று ஹேமாவை பிடித்து இழுத்தாள்.

"என்ன ஹேமா இது? பெரியவங்க என்று மரியாதை கூட இல்லாமல் இப்படியா நடந்துகொள்வது" என்று அதட்டினாள்.

ஹேமாவால் ஆவேசத்தை கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

"யார் எப்படி இருந்தால் உங்க அம்மாவுக்கு என்னவாம்? கூடவுளை வேரோடு பிடுங்கினால் மட்டும் போதாது. எந்த இடத்தில் எப்படி பேசவேண்டும் என்ற பணிவு கூட தெரிந்திருக்க வேண்டும். உங்க அம்மாவின் வாயை அடக்காமல் என்னைக் கடிந்து கொள்கிறாயே அண்ணி?" - கோபமாய் சொன்னாள்.

ஜெகதாம்பாளுக்கு மூச்சு இறைத்தது. "பார்த்தாயா ரங்கநாயகி! எவ்வளவு திமிராக பேசுகிறாள்? இதுக்கெல்லாம் நீதான் காரணம். தாயார் இல்லாத குழந்தை என்று ரொம்ப செல்லம் கொடுத்து வளர்த்து விட்டாய். அதான் இப்படி வாய்க்கு வந்தபடி பேசுகிறாள்."

"கேட்டாயா அண்ணி உங்க அம்மா பேசுவதை! மறுபடியும் அவங்க ஏதாவது சொன்னால் நான் சும்மா இருக்கமாட்டேன். பிறகு வருத்தப்பட்டுக் கொண்டு பிரயோஜனம் இல்லை." - ஆள்காட்டி விரலை உயர்த்தி மிரட்டுவதுபோல் சொல்லிவிட்டுஹேமா சமையல் அறைக்குள் சென்றாள்.

அவளுக்கு துக்கம் பொங்கிவந்தது. வாழ்க்கையில் ரொம்ப அபூர்வமான நினைவாக மனதில் தங்கியிருக்க வேண்டிய நிகழ்ச்சி இப்படி களேபரமாக முடிந்து விட்டதில் தாங்கொண்ணாத துயரம் ஏற்பட்டது.

காபி கலந்து எடுத்துக்கொண்டு முன் அறைக்குச் சென்றாள். ஆனால் அங்கே ரமேஷ் இல்லை. காலியாக தென்பட்ட நாற்காலி அவளை பரிகாசம் செய்வதுபோல் தோன்றியது. ஹேமாவின் பார்வை ஒரு நிமிடம் கையில் இருந்த காபி டம்ளர் மீது நிலைத்தது.

"சொன்னபடி வந்தால் தஞ்சாவூர் டிகிரி காபி தருவேன்" என்று எழுதியிருந்தது நினைவுக்கு வந்தது.

அவள் கண்களில் கிர்ரென்று நீர் சுழன்றது.

2

ரமேஷ் எப்படி அறைக்கு திரும்பி வந்தானோ அவனுக்கே தெரியாது. உடம்பில் இருக்கும் இரத்தம் முழுவதும் கொதிப்பது போல் தோன்றியது. இதயத்தில் எரிமலை வெடித்துவிட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது. அந்த நிமிடம் யாராவது கண்ணில் பட்டால் அவர்களை உதைத்துத் தள்ள வேண்டும் என்ற அளவிற்கு ஆவேசம் வந்தது. எப்படியோ கஷ்டப்பட்டு தன் மனதில் ஏற்பட்ட புயலை கட்டுக்குள் கொண்டு வந்தான்.

வேண்டாமென்று நினைத்தாலும், "ஜாதி மதம் இல்லாத பசங்களை" என்ற ஜெகதாம்பாளின் குரல் காதுகளில் எதிரொலித்தது. அவன் கைப்பிடிகள் இறுகின.

ஜாதி, மதம் இதெல்லாம் மனிதன் தானாக உருவாக்கிக் கொண்டவை. சமுதாயத்தினால் ஏற்படுத்தப்பட்ட எல்லைகள் இவை. இந்த உலகில் ஒவ்வொருவரும் உயர்ந்த குடும்பத்தில் பிறந்து, உயர்வான வாழ்க்கை வாழவேண்டும் என்றுதானே விரும்புவார்கள். ஆனால் எத்தனை பேருக்கு அந்த அதிர்ஷ்டம் கிடைக்கும்? தன்னுடைய பிறப்புக்கு தானே காரணமாக இருக்க முடியாதே. தான் இப்படி ஆவேசப்படுவானேன்? இதை அவமானமாக ஏன் எண்ண வேண்டும்?

கல்யாணமானதும் கணவனை இழந்துவிட்ட தன்னுடைய தாய் தவறான பாதையில் காலடி எடுத்துவைத்துவிட்டதன் விளைவாக தன்னை பெற்றெடுத்தாள். இதில் தான் செய்த குற்றம் எதுவும் இல்லையே? கணவனை இழந்தவளுக்கு மறுபடியும் திருமணம் செய்துவைக்கும் அளவுக்கு இந்த சமுதாயம் ஏன் முன்னேறவில்லை? செய்யாத தவறுக்கு அந்தக் குழந்தையை குற்றம் சாட்டி ஏளனம் செய்யும் இந்த உலகை பொருட்படுத்த வேண்டிய அவசியம்தான் என்ன?

கொஞ்சம் கொஞ்சமாய் அவன் மனம் ஒரு நிலைக்கு வந்தது.

சோர்வாக உணர்ந்தவன் நாற்காலியில் சரிந்து உட்கார்ந்து, மேஜை மீது கைகளை ஊன்றி, உள்ளங்கைகளில் முகத்தை புதைத்துக் கொண்டான்.

இத்தனை வயது ஆன பிறகும், இத்தனை அனுபவங்களை பெற்ற பிறகும், தன்னுடைய பிறப்பை பற்றி நினைக்கும்போது அவன் மனம் ரணமாகிவிடும். ஒரு பெண்ணும் ஒரு ஆணும் உடல் ரீதியாக இணையும்போது குழந்தை உருவாகிறது. அது முறையற்ற உறவா இல்லை அங்கீகாரம் பெற்ற உறவா என்பது பற்றி கருவில் இருக்கும் குழந்தைக்கு என்ன தெரியும்?

இந்த உலகில் மனிதன் எப்படி பிறந்தான் என்பதை விட எப்படி வாழ்ந்தான் என்பதுதான் முக்கியம். தாய் செய்த தவறினாலோ இல்லை தன்னுடைய துரதிர்ஷ்டமோ எதுவாக இருந்தால் என்ன? இந்த உலகத்தில் பிறந்துவிட்டான். இந்த வாழ்க்கை தன்னுடையது.

ரொம்ப நாட்களுக்குப் பிறகு ரமேஷை மறுபடியும் தனிமை ஆட் கொண்டது. இவ்வுலகில் தனக்காக யாரும் இல்லை என்ற உண்மை அவனை பலமாக தாக்கியது. நினைவு தெரிந்த நாள் முதல் அவன் அங்கே இங்கே சின்னச் சின்ன வேலைகளை செய்து வாழ்ந்து வந்தான். தன் வயதை ஒற்ற குழந்தைகள் எல்லாம் இரவு ஆனதும் அம்மா அப்பா பக்கத்தில் நிம்மதியாக, சுகமாக உறங்கிக் கொண்டிருக்க, தான் மட்டும் எந்த வீட்டுத் திண்ணையிலோ, வெட்ட வெளியிலேயோ, நாளை உணவுக்கு என்ன வழி என்று கவலைபட்டுக் கொண்டு, வானத்தில் தெரியும் நட்சத்திரங்களை பார்த்துக் கொண்டே படுத்திருப்பான். தனக்கு மட்டும் இப்படிப்பட்ட வாழ்க்கை ஏன் என்ற கேள்விக்கு விடை கிடைக்காமல் அந்தப் பிஞ்சு மனம் வேதனையில் தவித்தது உண்டு. திடீரென்று விழித்துக் கொண்டு இனம் தெரியாத பயத்தினால் எத்தனையோ இரவுகள் அழுதிருக்கிறான்.

கொஞ்சம் வளர்ந்த பிறகு, விவரம் கொஞ்சம் கொஞ்சமாகப் புரியத் தொடங்கியது. தன்னுடைய தாயின் நடத்தை சரியில்லை என்றும், அவள் நெறிமுறை தவறி பெற்றுக்கொண்ட குழந்தைதான் தான் என்று புரிந்தபோது தாயை வெறுத்தான்.

ஆனால் போகப்போக அவனை அறியாமலேயே தாய்மீது ஏற்பட்ட துவேஷம் மறைந்து, அந்த இடத்தில் பாசம் ஏற்பட்டது. அவளை யாராவது ஏதாவது சொன்னால் முகத்தில் அடித்தாற்போல் பதில் சொல்லத் தோன்றியது.

பாவம் அவள் மட்டும் என்ன செய்வாள்? இளமையிலேயே கணவனை இழந்துவிட்டாள். கணவனின் சகோதரர்கள் அவள் பங்கு சொத்தை கொடுக்காமல் ஏமாற்றி பிறந்த வீட்டுக்குத் துரத்தி விட்டார்கள். சொத்து, சுகம் எதுவும் இல்லாமல் திரும்பி வந்த தங்கையை பிறந்த வீட்டில் யாரும் விரும்பவில்லை. அவளை வேண்டாத விருந்தாளி யாக நடத்தினார்கள். உலக அனுபவம் போறாத வயது! இளமை பருவத்தின் துடிப்பு! சிறு வயது முதல் நண்பனாக பழகி வந்த முஸ்லீம் இளைஞனிடம் தன்னை இழந்தாள். விதவை தங்கை கருவுற்று இருப்பதாகத் தெரிந்ததும் பிறந்த வீட்டார் அவளை வீட்டை விட்டு வெளியேற்றிவிட்டு தங்கள் குடும்ப கௌரவத்தை காப்பாற்றிக் கொண்டார்கள்.

அந்தச் சமயத்தில் அந்த முஸ்லீம் இளைஞன் தான் தைரியமாக அவளை தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று ஆதரவு தந்தான். உலகம் தூற்றுவதை அவன் பொருட்படுத்தவில்லை. நெறிதவறிய தாயின் கருவறையில் உருவான அந்தக் குழந்தை அந்த முஸ்லீம் வீட்டிலேயே பிறந்தது. பிறந்த உடனே தாயை இழந்துவிட்டது. அதன் பிறகு ஆறு மாதம் கழித்து நோய்வாய்ப்பட்டு அந்த முஸ்லீம் இளைஞனும் இறந்துவிட்டான். அவன் மனைவி தனக்கும் இந்த குழந்தைக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்று சொல்லிவிட்டாள். பிறகு யாரோ அனாதை இல்லத்தில் சேர்த்தார்கள். பத்து வயது ஆகும்போது அந்த இடத்தை விட்டு ஓடி வந்து விட்டான். அறுந்துபோன காற்றாடியாய் அங்கேயும் இங்கேயும் அலைந்து திரிந்து, வயதுக்கு மீறிய அனுபவங்களுடன் வளர்ந்து பெரியவன் ஆனான்.

உயிர் கொடுத்த தாயும், பிறப்புக்குக் காரணமாக இருந்தவனும் இவ்வுலகில் இல்லாவிட்டாலும் அந்தக் கதையை யாரும் மறக்க வில்லை. ஏன் என்றால் ரமேஷ் ஜாடையில் அப்படியே தன்னுடைய தாயை கொண்டிருந்தான். அதான் இத்தனை வருடங்களுக்குப் பிறகும் அந்தக் கதை அவனை தொடர்ந்து கொண்டிருந்தது.

சேஷாத்ரியின் தாய் ரமேஷின் தாய்க்கு ரொம்ப தூரத்து உறவு ஆக வேண்டும். இந்த விஷயம் தெரிந்திருந்தாலும் தவறிப் போய்க் கூட சேஷாத்ரி ரமேஷிடம் அதைப்பற்றி பிரஸ்தாபித்தது இல்லை. ரமேஷும் அந்த உறவு முறையை என்றும் பொருட்படுத்தியதில்லை.

ரமேஷ் நிரந்தரமாக அந்த ஊரிலேயே தங்கவில்லை என்றாலும், ஊருக்கு வந்தால் சேஷாத்ரியை சந்திக்காமல் போகமாட்டான். ஒரு முறை அப்படி சந்தித்துக் கொண்ட போது சேஷாத்ரி தன் மகன் மது சரியாக படிப்பது இல்லை என்றும், சொன்ன பேச்சு கேட்காமல் ஊரைச் சுற்றுகிறான் என்றும் வருத்தப்பட்டுக் கொண்டான்.

மறுநாள் முதல் ரமேஷ் மதுவுக்கு ட்யூஷன் சொல்லித் தர ஆரம்பித்தான். சேஷாத்ரி ரமேஷுக்கு பெரிய துணிக்கடை ஒன்றில் வேலைக்கு ஏற்பாடு செய்து கொடுத்தான். ரமேஷ் மதுவுக்கு படிப்பு சொல்லி தந்ததற்கு பணம் எதுவும் பெற்றுக்கொள்ளவில்லை. மறுத்துவிட்டான்.

சேஷாத்ரியின் வீட்டுக்கு உரிமையுடன் வந்து போகும் ரமேஷை கண்டால் ஜெகதாம்பாளுக்குக் கொஞ்சம் கூட ஆகாது. ஆனால் ரங்கநாயகி தாயின் பேச்சை இந்த விஷயத்தில் அவ்வளவாக பொருட்படுத்தவில்லை.

இதற்கு முன்பு ரமேஷ் எத்தனையோ முறை 'ஜாதி மதம் இல்லாதவன்' என்று உலகம் தன்னை சுட்டிக்காட்டுவதை உணர்ந்திருக்கிறான். இந்த அவமானம் அவனுக்கு புதிது ஒன்றும் இல்லை.

ஆனால் இன்று ஜெகதாம்பாளின் வாயால் அந்தச் சொல்லை கேட்கும்போது மனம் ரொம்ப காயப்பட்டுவிட்டது. காலையில் ஹேமா அனுப்பிய கடிதத்தை படித்ததிலிருந்து அவன் ஒரு விதமான மயக்கத்தில் இருந்தது உண்மைதான். சில நாட்களாகவே அவன் ஹேமாவின் நடவடிக்கைகளை கவனித்துக்கொண்டுதான் இருந்தான். அவள் தன்னிடம் எடுத்துக்கொள்ளும் உரிமையை உணர்ந்த போது அவனுக்கு பயமாகவும் இருந்தது. தனிமை என்ற பாலைவனத்தில் இருக்கும் தன்னுடைய வாழ்க்கையில் ஹேமா பாலைவனச் சோலையாக இடம்பெற்றுவிட்டாள். குறும்புத்தனம் நிறைந்த அவளுடைய பேச்சும், நெருக்கத்தை உணர்த்தும் அவளுடைய நடவடிக்கையும் அவன் மனதில் புதிய எண்ணங்களை உருவாக்கின.

ஹேமாவின் நட்பு அவன் மனதில் அபூர்வமான இடத்தை பெற்றுவிட்டது.

காலையில் அந்தக் கடிதத்தை பார்த்ததுமே அவள் தன்னிடம் தனிமையில் பேசப் போகும் விஷயம் என்னவென்று அவனுக்குப் புரிந்துவிட்டது. சமீபத்தில் ஹேமாவுக்கு மும்முரமாக வரன் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். இந்த விஷயம் ரமேஷுக்கும் தெரியும். சேஷாத்ரியும் ரமேஷிடம் பேச்சு வாக்கில் சொல்லியிருக்கிறான்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு தஞ்சாவூரிலிருந்து ஒரு வரன் வந்தது. பையன் இஞ்சினியர் நல்ல வேலை. ஓரளவுக்கு சொத்தும் இருந்தது. பெண் பார்க்க அவர்கள் வந்துபோது சேஷாத்ரி கேட்டுக் கொண்டதால் ஒத்தாசை செய்ய ரமேஷும் அன்று அவர்கள் வீட்டுக்குப் போயிருந்தான். பெண்ணை பிடித்திருக்கிறது என்று மறுநாளே அவர்கள் தகவல் அனுப்பிவிட்டார்கள்.

தங்கைக்கு நல்ல வரன் கிடைத்து விட்டதில் சேஷாத்ரி ரொம்ப சந்தோஷப்பட்டான். அவர்கள் கேட்ட வரதட்சணை, சீர்வரிசைகள் எல்லாம் கொடுப்பதற்கு முன் வந்தான். கிட்டத்தட்ட அந்த வரன் நிச்சயமாகிவிட்டதாகவே பேசிக்கொண்டார்கள்.

அன்று இரவு முழுவதும் ரமேஷ் தூங்கவில்லை. மனம் ஒரு நிலையில் இல்லாமல் தவித்தது. தன் மனதில் அபூர்வமான இடத்தை பெற்றுவிட்ட ஹேமாவை இந்தத் திருமணத்தின் மூலமாக சாசுவதமாக இழந்து விடுவோமோ என்ற பயம் அவனைத் தடுமாற செய்தது. உடனே கிளம்பிப்போய் சேஷாத்ரியிடம் ஹேமாவைத் தான் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகச் சொல்லிவிடலாமா என்று கூட நினைத்தான். ஆனால் உடனே அந்த எண்ணத்தை மனதிலிருந்து அகற்றிவிட்டான். எந்த தகுதியிருக்கிறது என்று தான்போய் ஹேமாவை பெண் கேட்க முடியும்? ஹேமாவிடம் தனக்கு ஏற்பட்ட இந்த எண்ணம் தன் மனதிலேயே சாசுவதமாக ரகசியமாக இருக்க வேண்டியதுதான். ஒரு நாளும் அதை வெளிப்படுத்தக்கூடாது என்று தனக்குத் தானே கட்டுப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டான்.

ஆனால் பத்துநாட்களுக்குப் பிறகு சேஷாத்ரியிடம் பேசிக் கொண்டிருந்தபோது ஹேமாவுக்கு அந்த வரனை பிடிக்காததால்

அந்த சம்பந்தம் வேண்டாமென்று சொல்லிவிட்டதாக தெரிவித்த போது ரமேஷ் திகைத்துப் போனான். அதுவரை மனதில் இருந்த பாரம் முழுவதும் நீங்கிவிட்டது போல் மனம் இலேசாகி விட்டது. ஹேமா அந்த வரனை வேண்டாமென்று சொன்னதற்குக் காரணம் தானாக இருக்குமோ என்ற எண்ணம் அவன் மனதில் ஏதோ ஒரு மூலையில் தோன்றிக் கொண்டே இருந்தது.

அந்த வரனை மறுத்ததற்கான காரணத்தை ஹேமாவிடம் நேராக கேட்டுவிடலாமா என்று கூட நினைத்தான். ஆனால் அது சாத்தியப்படவில்லை. ஹேமாவும் அந்த பேச்சை எடுக்கவில்லை. ஆனால் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டபோது அடுத்தவர் மனதில் இருக்கும் எண்ணங்களை உணர்ந்து கொண்டு விட்டது போலவே தோன்றியது. சில விஷயங்கள் வெளிப்படையாக பேசவேண்டிய தேவை இல்லையோ என்னவோ.

அவன் ஹேமாவை திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தது உண்மைதான். ஆனால் உடனே இல்லை. ஜவுளிக்கடையில் வேலை பார்க்கும் நபராக அவளை திருமணம் செய்துகொள்வதில்அவனுக்கு விருப்பம் இல்லை. இரண்டு வருடங்கள் அவகாசம் கிடைத்தால் போதும். எப்படியாவது உழைத்து, முன்னேறி சமுதாயத்தில் தனக் கென்று ஒரு இடத்தை உருவாக்கிக் கொள்வான். இதைத்தான் ஹேமாவிடம் சொல்ல நினைத்தான்.

"ஹேமா! நீ என்னுடையவள். இரண்டு வருடங்கள் அவகாசம் கொடு போதும் எனக்கென்று ஒரு தகுதியை ஏற்படுத்திக் கொண்டு உங்க அண்ணாவிடம் வந்து உன்னை பெண் கேட்கிறேன். அதற்குள் நீயும் பட்டப்படிப்பை முடித்துவிடலாம்" என்று இன்னும் ஏதேதோ சொல்ல நினைத்தான்.

ஆனால் அதற்குள் ஜெகதாம்பாள் குறுக்கே வந்து எல்லாவற்றை யும் தலைகீழாக்கிவிட்டாள். தன் வாழ்க்கையில் மிக அபூர்வமாக இருக்கவேண்டிய அந்த நிகழ்ச்சி கானல் நீராகிவிட்டது. இந்த உலகில் பணம் இல்லாவிட்டால் மனிதன் எதற்கும் தகுதியில்லாதவ னாகி விடுவானோ என்னவோ. தான் மனபூர்வமாக விரும்பிய பெண்ணிடம், "நான் உன்னை விரும்புகிறேன்" என்று சொல்லும் அதிகாரம் கூட இருக்காது.

ரமேஷின் மனம் ஹேமாவை நினைத்து தவித்தது. கண்களை இறுக்கமாக மூடி அப்படியே ஈசிச்சேரில் அமர்ந்திருந்தான். திடீ ரென்று யாருடைய கையோ அவன் நெற்றியை தொடுவதை உணர் ந்து திடுக்கிட்டவனாய் நிமிர்ந்து பார்த்தான்..... அவன் கண்களை அவனால் நம்பவே முடியவில்லை. எப்போ வந்தாள் என்று தெரியவில்லை. ஹேமா அவன் எதிரில் நின்றிருந்தாள்.

"ஹேமா!" - திகைத்துப் போனவளாக பார்த்தான்.

ரமேஷ் கண்களில் தென்பட்ட ஈரத்தை கவனித்த ஹேமாவுக்கு இதயத்தை யாரோ சுசக்கிப்பிழிவது போன்ற வேதனை ஏற்பட்டது.

"மன்னிப்பு கேட்பதற்காக வந்திருக்கிறேன்" என்றாள்.

"மன்னிப்பு கேட்பதா? நீயா? எதுக்கு?" - வியப்புடன் கேட்டான்.

"வீட்டுக்கு வரச்சொல்லி அவமானப்படுத்தியதற்கு. ஆனால் அந்த அம்மாள் அந்தச் சமயத்தில் வருவாள் என்று நான் எதிர்பார்க்கவில்லை."

"அந்த விஷயம் எனக்குத் தெரியாதா ஹேமா. அதைக்கூட புரிந்து கொள்ள முடியாத முட்டாளா நான்? இதுக்காக நீ இத்தனை தூரம் வரவேண்டுமா? கிளம்பு. நீ இங்கே வந்திருப்பது தெரிந்தால் உன் அண்ணன் என்ன நினைத்துக்கொள்வார்?"

"ரமேஷ்! நான் இங்கே வந்ததற்கு வேறு ஒரு காரணமும் இருக்கு நான் உன்னிடம் சொல்ல நினைத்தது ... ... நான் வந்து ... ..." பாதியிலேயே நிறுத்திவிட்டாள்.

ரமேஷ் அவளை மேற்கொண்டு பேசவிடவில்லை. கையை நீட்டி அவள் இதழ்கள் மீது விரல் வைத்து தடுத்து விட்டான்.

"ஹேமா! நீ என்ன சொல்லப் போகிறாய் என்று எனக்குத் தெரி யும். ஆனால் இப்போ இருக்கும் நிலையில் என்னால் அதை உடனே ஏற்கமுடியாது. அந்த விஷயத்தை உன்னிடம் சொல்லத்தான் நானும் உங்க வீட்டுக்கு வந்தேன்" என்றான்.

ஹேமாவின் முகம் ஒரு நிமிடம் சிவந்து போயிற்று. வியப்புடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்த அவளது கண்கள் மெதுவாக தரையை நோக்கித் திரும்பின.

ஹேமாவின் முகத்தில் தெரிந்த ஏமாற்றத்தை உணர்ந்தபோது

அவன் இதயம் கரைந்து விட்டது. சட்டென்று அவ்ளை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டு நயமாக எடுத்துச்சொல்லி அவளை சமாதானப்படுத்த வேண்டும் என்று தோன்றியது. எப்படியோ தன்னை கட்டுப்படுத்திக் கொண்டான்.

"ஹேமா! உன்னை நான் மனபூர்வமாக விரும்புகிறேன். ஆனால் நாமிருவரும் திருமணம் செய்து கொள்வதற்கு இன்னும் இரண்டு வருடங்களாவது காத்திருக்க வேண்டும்."

"இரண்டு வருடமா?" ஹேமா குழப்பத்துடன் பார்த்தாள்.

"ஆமாம். உன்னை திருமணம் செய்து கொள்வதற்கு ஒரு தகுதியை ஏற்படுத்திக் கொள்ள நானாக வைத்துக் கொண்ட கெடு அது."

"தகுதியை ஏற்படுத்திக் கொள்வதா? இப்போ இல்லாத தகுதி இன்னும் இரண்டு வருடங்களில் எப்படி வரும்?" - ஹேமாவுக்குப் புரியவில்லை.

ரமேஷால் உடனே பதில் சொல்ல முடியவில்லை.

"இன்னும் இரண்டு வருடங்கள் காத்திருப்பது என்றால் அண்ணன் சும்மா இருப்பாரா? ஏற்கனவே அந்த தஞ்சாவூர் வரனை மறுத்துவிட்டேன்னு என் மீது கோபமாக இருக்கிறார்."

"உனக்கு விருப்பமில்லாத இடத்தில் உன் அண்ணன் கட்டாயப் படுத்தி உன்னை திருமணம் செய்து கொடுக்கமாட்டார். அதற்குள் நீயும் பட்டப்படிப்பை முடித்துவிடலாம்."

அதைக்கேட்டதும் ஹேமாவின் முகத்தில்ஏமாற்றம்தென்பட்டது.

"மேலும் படிக்கவேண்டுமா? என்னால் முடியாது. அப்படி நான் பட்டப்படிப்பு படித்துதான் ஆக வேண்டும் என்று நீ விரும்பினால் திருமணம் ஆனபிறகு தொடருகிறேன். அதற்காக திருமணத்தை தள்ளிப்போட வேண்டிய அவசியம் என்ன? நான் உன்னை விரும்பு கிறேன். நீயும் என்னை நேசிக்கிறாய். நாம் திருமணம் செய்து கொள்ள இந்தத் தகுதிகள் போறாதா?"

"நம் இருவருக்கும் போதும். ஆனால் உலகத்திற்கு போறாது."

"நீ என்னை உலகத்திற்காக திருமணம் செய்து கொள்ளப் போவ தில்லையே?" - கண்களை அகலமாய் விரித்து அப்பாவியை போல்

கேட்டாள்.

"ஹேமா! உனக்கு சில விஷயங்கள் சுத்தமாக தெரியவில்லை. திரு மணம் நமக்காகத்தான் செய்துகொள்கிறோம். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் என்னைப் போன்றவன் எந்த வேலையை செய்ய நினைத்தாலும் அதற்கு முன் ஒரு தகுதியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். முக்கியமாக திருமணம் செய்து கொள்வதற்கு முன் உலகத்தாரின் கண்களுக்கு நான் ஒரு பெரிய ஆளாகத் தெரிய வேண்டும்."

ஹேமா முகத்தை திருப்பிக் கொண்டாள்.

"நீ சொல்கிற விஷயங்கள் என்னால் புரிந்து கொள்ள முடிய வில்லை. பணம் இல்லை என்று மட்டும் நீ தயங்குவதாக இருந்தால் ஒரு விஷயத்தை தெளிவுப்படுத்த விரும்புகிறேன். நாங்களும் பெரிய பணக்காரர்கள் ஒன்றும் இல்லை. பணம் இருந்தால்தான் சந்தோஷ மாக இருக்கமுடியும் என்று என்றுமே நான் நினைத்தது இல்லை. மகிழ்ச்சி என்பது பணத்தில் இல்லை. நம் மனதில் தான் இருக்கிறது. அண்ணன் ஏற்கனவே என் திருமணத்திற்கு அவசரப்படுகிறார்."

ஹேமா மேலும் ஏதோ சொல்வதற்குள் வாசற்கதவை திறந்து கொண்டு மது உள்ளே வந்தான்.

"அக்கா! நீ இங்கேதான் இருக்கிறாயா? ஒரு மணி நேரமாக உனக் காக எல்லா இடங்களிலும் தேடிக்கொண்டிருக்கிறேன். நம் வீட்டு க்கு யாரோ வந்திருக்காங்க. அம்மா உன்னை கையோடு அழைத்து வரச் சொன்னாள்." - வேகமாக ஓடி வந்ததில் மூச்சு இரைத்தது அவனுக்கு.

ரமேஷ் - ஹேமா ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்.

"போயிட்டு வா ஹேமா!" - ரமேஷ் தாழ்ந்த குரலில் சொன்னான்.

ஹேமா அவன் முகத்தை கூர்ந்து பார்த்தாள். அவள் தேடிய பதில் அங்கே கிடைக்காததால் ஏமாற்றமடைந்து வாசல் பக்கம் திரும்பி இரண்டடி எடுத்து வைத்தாள். மது ஏற்கனவே தெருவுக்குள் ஓடி விட்டான்.

ரமேஷ் திடீரென்று சொன்னான். "ஹேமா! யோசித்துக் கொள்ள எனக்குக் கொஞ்சம் அவகாசம் தேவை. நாளை மாலை நான் உங்க வீட்டுக்கு அருகில் இருக்கும் பார்க்கிற்கு வருகிறேன். உன்னால் வரமுடியுமா? இந்த அறையில் நாம் சந்தித்துக் கொள்ள முடியாது. சுந்தரம் நாளை ஊரிலிருந்து வருகிறான்."

ஹேமா தலையை அசைத்து விட்டுச் சென்றுவிட்டாள்.

ரமேஷ் இந்த உலகத்தையே மறந்து போனவனாய் அதே இடத்தில் ரொம்ப நேரம் நின்று கொண்டிருந்தான்.

திடீரென்று அவன் எதிர்பார்க்காத பிரச்சனை உருவாகிவிட்டது.

3

சேஷாத்ரி, மனைவி காபி கலந்துவிட்டாளா என்று பார்ப்பதற்காக சமையல் அறைக்குள் வந்தான்.

"உனக்கு மூளை இருக்கிறதா? மாலையில் பிள்ளை வீட்டுக் காரர்கள் வரப் போகிறார்கள் என்று தெரிந்திருந்தும் ஹேமாவை வீட்டில் இருக்கச் சொல்லாமல் எங்கே போகவிட்டாய்?" என்று மனைவியை கடிந்து கொண்டான்.

மதியம் நடந்த ரகளையினால் ஏற்கனவே எரிச்சல் அடைந்திருந்த ரங்கநாயகியால் கோபத்தை கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

"எப்போதும் என்னை குற்றம் சொல்வதை தவிர உங்களுக்கு வேறு வேலை இல்லை. இத்தனை நேரம் இங்கேதான் இருந்தாள். அதற்குள் மாயமாகி விடுவாள் என்று நான் கனவு கண்டேனா? வெளியே போகிறவள், இன்ன இடத்திற்கு போகிறேன் என்று என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டு போகக்கூடாதா? கொஞ்சம் கூட பயம் என்பதே கிடையாது. இதற்கெல்லாம் நீங்கள் கொடுக்கும் செல்லம்தான் காரணம்."

"சரி சரி... போகட்டும் கொஞ்சம் குரல் தாழ்த்தி பேசு. வந்தவர்களின் காதுகளில் விழுந்து வைக்கப் போகிறது." - சேஷாத்ரி குரல் தாழ்த்திக் கொண்டு சொல்லி விட்டு, காபி டம்ளர்களை வைத்த ட்ரேயை எடுத்துக் கொண்டு முன் அறைக்குப் போனான்.

"அம்மா! வனஜா வீட்டிலேயும் பார்த்து விட்டேன். அக்கா

அங்கே வரவில்லையாம்." கொல்லைப்புற கதவு வழியாக உள்ளே ஓடி வந்த மது வேகவேகமாய் மூச்சை எடுத்துக் கொண்டே சொன்னான்.

"பங்கஜம் மாமி வீட்டில் பார்த்தாயா?"

"பார்த்தாச்சு, அம்புலு மாமி வீட்டிலும் விசாரித்து விட்டுதான் வருகிறேன். எங்கேயும் இல்லை."

"எங்கே தான் போயிருப்பாள்?" யோசித்துக் கொண்டிருந்த ரங்க நாயகியின் மனதில் திடீரென்று அந்த எண்ணம் வந்தது. மதுவின் கைகளை பிடித்துக் கொண்டே "மதூ! ஒரு தடவை உங்க சார் வீட்டுக்கு போய் பார்த்து விட்டு வாயேன்" என்றாள்.

"சார் வீட்டுக்கா? ரொம்ப தூரம். இருந்தாலும் அக்கா அங்கே எதுக்காக போகப் போகிறாள்?" - மது எரிச்சலுடன் சொன்னான்.

"வாயை மூடிக்கொண்டு சொன்னதை செய்." - ரங்கநாயகி மிரட்டுவதை போல் பார்த்தாள்.

"சரி." - திரும்பி வேகமாக ஓடப் போனான்.

"வாசல் பக்கமாக வராதிங்க. கொல்லப்புற கதவு வழியாக அழைச்சுகிட்டு வா அவளை." - எச்சரித்தாள்.

ஏற்கனவே கொல்லப்புற கதவைத் தாண்டி விட்ட மதூ தாய் சொன்னதை கேட்டு திரும்பிப் பார்த்து "சரிம்மா" என்று குரல் கொடுத்து விட்டு ஓட்டத்தை தொடர்ந்தான்.

கொல்லைப்புற கதவை லேசாக சாத்திவிட்டு பாக்குத் தூள் இருந்த டப்பாவை எடுத்துக் கொண்டு ரங்கநாயகி முன் அறைக்கு வந்தாள். ஏற்கனவே அங்கே உட்கார்ந்திருந்த ஜெகதாம்பாள், வந்திருந்த விருந்தாளிகளுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

ரங்கநாயகியை பார்த்ததும்; "இவள் தான் என்னுடைய மகள் ரங்கநாயகி. ஹேமாவின் அண்ணி" வந்தவர்களுக்கு மகளை அறிமுகம் செய்து வைத்தாள். "சின்ன வயதில் உங்க அப்பா எங்க வீட்டுக்கு அடிக்கடி வந்துகொண்டிருப்பார். வந்த போதெல்லாம் இவளுக்கு சாக்லேட் வாங்கி வராமல் இருக்கமாட்டார். அந்த கோர்ட் கேஸ் மூலமாய் இப்போ போக்குவரத்து இல்லாமல் போய்விட்டது."

- பையனின் தந்தையிடம் சொல்லிக்கொண்டிருந்தாள்.

"போகட்டும். இந்தத் திருமணம் மூலமாய் மறுபடியும் உறவுகளை புதுப்பித்துக் கொண்டுவிடலாம். கவலைப்படாதீங்க." - கல்யாண தரகர் ராமநாதன் சொன்னார்.

ரங்கநாயகி தாயாரின் பின்னால் நின்று கொண்டு வந்தவர்களை எடைபோடுவதுபோல் பார்த்துக்கொண்டிருந்தாள். சற்று பருமனாக, உயரமாக இருந்தவர் மாப்பிள்ளையின் தந்தையாக இருக்கவேண்டும். நாகபூஷணம் என்றால் இவர்தானா? வியாபாரத்தில் நண்பனை கூட்டாளியாக சேர்த்துக்கொண்டு, ஏமாற்றி மோசம் செய்து அவனுடைய சொத்து முழுவதையும் சுவாதீனம் செய்துகொண்ட பெரிய மனிதன் இவர்தானா! ஜெகதாம்பாள் அடிக்கடி மகளிடம் நாகபூஷணத்தின் திறமைகளைப் பற்றி சொல்லிக்கொண்டிருப்பாள்.

பக்கத்தில் அமர்ந்திருந்த சுதாகருக்கு அவருடைய மகன் சுதாகருக்கு இருபத்தி ஐந்து வயது இருக்கலாம். தந்தையின் ஜாடை நிறைய அவனிடம் தென்பட்டது. சின்ன வயதில் நாகபூஷ ணம் இப்படித்தான் இருந்திருப்பார் போலும். அவர் பேசிய முறையில், பழகிய விதத்தில் செருக்கு வெளிப்பட்டது. சுதாகர் கையில் இருந்த ஆல்பத்தை புரட்டிக் கொண்டு ஒவ்வொரு புகைப்படத்தையும் சுவனமாய் பார்த்துக்கொண்டிருந்தான். பக்கவாட்டில் தெரிந்த அவனுடைய தோற்றத்தை ரங்கநாயகி கவனமாக பார்த்தாள். என்றுமே கஷ்டங்களை அனுபவித்து இராதவன் போலும். மெலிதான உதடுகள். இளமையான தோற்றம். ரொம்ப அழகான முகவெட்டு. ஒரே வார்த்தையில் சொல்லணும் என்றால் சுதாகர் பெண்ணாகப் பிறந்திருந்தால் உலக அழகியாக தேர்ந்து எடுக்கப்பட்டிருப்பான்.

"ரங்கநாயகி! எல்லோருக்கும் பாக்குத்தூளை கொடு." - சேஷாத்ரி சொன்னான்.

"இன்னும் பெண் வரவில்லையா?"

நாகபூஷணம் ரங்கநாயகி நீட்டிய டப்பாவிலிருந்து பாக்குத் தூளை எடுத்துக் கொண்டே கேட்டார். அவருடைய கையில் இருந்த வைர மோதிரம் டால் அடித்தது.

சேஷாத்ரி மனைவி பக்கம் பார்த்தான்.

"ரங்கநாயகி கொஞ்சம் கூட தயங்கவில்லை. எங்க ஹேமாவுக்கு ரொம்ப இளகியமனசு. யாருக்கு எந்த கஷ்டம் வந்தாலும் தயங்க மாட்டாள். நீங்க வருவதற்கு சற்று முன்தான், ஒரு சினேகிதியின் தாயாருக்கு உடல்நிலை சரியில்லை என்று தகவல் வந்தது. போய் பார்த்துவிட்டு உடனே திரும்பி விடுகிறேன் என்று சொல்லிவிட்டு கிளம்பிப் போனாள். என் மகனை அனுப்பி இருக்கிறேன். சினேகிதியின் வீடு கொஞ்சம் தொலைவில் இருக்கிறது. எப்படியும் அரை மணிக்குள் வந்து விடுவாள்."

சேஷாத்ரி மனைவியை கோபமாக பார்த்தான். ரங்கநாயகி அந்த பார்வையை பொருட்படுத்தவில்லை. ஏனோ அவளுக்கு நாக பூஷணத்தை முதல் பார்வையிலேயே பிடிக்கவில்லை. அதற்கு நேர் மாறாக சுதாகரை ரொம்ப பிடித்துவிட்டது. கடவுள் அனுக்கிரகம் இருந்து இந்த வரன் நிச்சயம் ஆனால் ஹேமாவுக்கு இணையான மாப்பிள்ளை கிடைத்துவிட்டாற்போல்தான். ஜோடி பொருத்தம் ரொம்ப நன்றாக இருக்கும்.

நாகபூஷணம் கை கடிகாரத்தை பார்த்துக்கொண்டார்.

"ஏற்கனவே பார்த்த பெண்தானே. எங்களுக்கு பிடித்திருக்கு என்பதால்தானே நாங்களே பெண் கேட்டு வந்திருக்கிறோம். மற்ற விஷயங்கள் பேசிமுடித்துவிடுவோம்"என்று தரகர் பக்கம் பார்த்தார்.

".அய்யா எப்படி சொன்னாலும் சரிதான்." - தரகர் சொன்னார்.

"வரதட்சணை, சீர் விஷயங்களை முன்னாடியே பேசிக் கொள்ளுங்கள். அப்புறமாய் அது சரியில்லை இது சரியில்லை என்று பேச்சு வார்த்தை வரக்கூடாது இல்லையா" - ஜெகதாம்பாள் சொன்னாள்.

"வரதட்சணையா"! - நாகபூஷணம் உரத்த குரலில் சிரித்தார்.

இப்படி சிரிப்பவர்களை நம்பவே கூடாது என்று தோன்றியது ரங்கநாயகிக்கு.

"வரதட்சணை கேட்பதாக இருந்தால் உங்கள் வீட்டுப் பக்கமே நான் வந்திருக்க மாட்டேன். என் மகனுக்கு உடனே திருமணம்

செய்ய வேண்டும் என்ற எண்ணமும் எனக்கு இருந்தது இல்லை. படிப்பு முடித்து அமெரிக்காவிருந்து வந்த பிறகு செய்து விடலாம் என்று தான் நினைத்தேன். என்னுடைய அம்மாதான் ரொம்ப பிடிவாதம் பிடித்தா. பேரன் அமெரிக்காவிருந்து திரும்பி வரும் வரை உயிரோடு இருப்பேனோ மாட்டேனோ என்று ரகளை செய்தாள். "பரதியில் நிறுத்திவிட்டு மகனை ஒரு நிமிடம் கனிவுடன் பார்த்துவிட்டுத் தொடர்ந்தார். பெண்களின் ஜாதகங்களை வர வழைத்து பொருத்தம் பார்க்க வேண்டும் என்று நினைக்கும் போது அவனே உங்க வீட்டு பெண்ணை பற்றி சொன்னான். எனக்கு பெரிய கவலை விட்டது. நானாக தேடியிருந்தால் எந்தப் பெண்ணும் பிடித்திருக்க மாட்டாளோ என்னவோ. விவரம் தெரிந்த பிறகு அவனாக வெளியிட்ட விருப்பம் இது ஒன்றுதான். பெண் அவனுக்கு பிடித்திருந்தால் போதும். மற்ற எதுவும் எங்களுக்கு தேவையில்லை. எதுவாசு இருந்தாலும் உங்கள் விருப்பம்போல் செய்து கொள்ளுங்கள். இன்னொரு விஷயம். அடுத்த மாத கடைசியில் என் மகன் அமெரிக்காவுக்குப் போய் விடுவான். உங்கப் பெண்ணும் அவனுடன் கிளம்ப வேண்டியிருக்கும். திரும்பி வர ஐந்து வருடங்களாவது ஆகும்."

அவர் சொன்னதைக் கேட்டு சேஷாத்ரி மகிழ்ச்சியால் திக்கு முக்காடிவிட்டான். ரங்கநாயகி முகம் சுளித்தாள். அவர் சொல்வதை பார்த்தால் தனக்குக் கீழே இருப்பவர்களை ஆணையிடுவது போல், அதிகாரம் செய்வது போல் தோன்றியதே தவிர, எதிராளியின் விருப்பு வெறுப்புகளுக்கு மதிப்பு கொடுப்பவர்போல தோன்ற வில்லை. மகனுக்காகத்தான் இந்த இடத்திற்கு வந்திருப்பது போல் அவர் நடந்து கொள்வதாகத் தோன்றியது.

"சாஸ்திரிகளை அழைத்துக் கொண்டு நாளை உங்கள் வீட்டுக்கு வருகிறேன். முஹூர்த்தம் எப்போ வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்து விடலாம்." - சேஷாத்ரி சொன்னான்.

"அப்பொ நாங்க கிளம்புகிறோம்" என்று அவர் எழுந்து கொண்டார்.

அங்கிருந்து கிளம்பி விருப்பம் இல்லாதவன் போல் சுதாகர் மெதுவாக எழுந்து கொண்டான். ஆல்பத்திலிருந்து ஹேமாவின் போட்டோ ஒன்றை எடுத்துக் கொண்டு சேஷாத்ரியிடம், "பாட்டியிடம் காண்பிக்கணும், இந்த போட்டோவை எடுத்துக் கொள்ளட்டுமா?" - தயங்கிக் கொண்டே கேட்டான்.

சுதாகர் தயங்கிக் கொண்டே கேட்ட விதம் ரங்கநாயகிக்குப் பிடித்திருந்தது.

"தாராளமாய் எடுத்துக் கொண்டு போங்க" முகம் மலர சேஷாத்ரி சொன்னான்.

தரகர் சேஷாத்ரியை தனியாக அழைத்து மறுநாள் எந்த நேரத்தில் மாப்பிள்ளை வீட்டுக்கு வரவேண்டும் என்பதை தெரிவித்தார். ஷோத்ரியும் தலையை அசைத்து சம்மதம் தெரிவித்தான்.

விருந்தாளிகளை வழியனுப்பி வைக்க ரங்கநாயகி வாசல் வரை சென்றாள். அவர்கள் கிளம்பிப் போன பிறகு உள்ளே வந்தாள்.

தெருவை அடைத்துக் கொண்டு நின்ற அந்தக் காரை பார்த்து ஜெகதாம்பாள், "உன் நாத்தனாருக்கு நல்ல ஜாதகம்தான், இல்லாவிட்டால் வேறு பெண்ணே கிடைக்காதது போல் அந்தப் பையன் இவள்தான் வேண்டும் என்று பிடிவாதம் பிடித்திருப்பானா?" என்றாள். அவள் குரலில் பொறாமை வெளிப்படையாகவே தென்பட்டது.

"யாருக்கு எது பிராப்தமோ யாரால் சொல்ல முடியும்?"- ரங்கநாயகி பெருமூச்சு விட்டுக் கொண்டே சொன்னாள்.

வந்தவர்கள் கிளம்பிப் போன பிறகு சேஷாத்ரி உள்ளே வந்தான். வந்த வேகத்தில் செருப்புகளை மாட்டிக் கொண்டு "ரங்கநாயகி! கோபாலன் வீடுவரையிலும் போய் வருகிறேன்' என்று சொல்லி விட்டு கிளம்பினான்.

அவன் வாசலை தாண்டும் முன்பே மதுவும், ஹேமாவும் எதிரில் வந்தார்கள். தங்கையை பார்த்ததும் சேஷாத்ரி ஒரு நிமிடம் அப்படியே நின்று விட்டான்.

"இத்தனை நேரம் எங்கேம்மா போயிருந்தாய்?"

பதில் சொல்லாமல் தலையை குனிந்து கொண்டாள்.

"சரி --- சரி -- உள்ளே போ" என்று சொல்லி விட்டு கிளம்பினான். தங்கைக்கு நல்ல மாப்பிள்ளை கிடைத்து விட்ட மகிழ்ச்சி அவனை நிலை தடுமாற வைத்தது. அந்த சந்தோஷத்தில் தங்கையை கோபித்துக் கொள்ள அவனுக்கு மனம் வரவில்லை.

ரங்கநாயகி ஹேமாவை பார்த்ததும் பொய்க் கோபத்துடன் மிரட்டுவது போல பார்த்த விட்டு உள்ளே போய் விட்டாள்.

4

அன்று இரவு ரொம்ப நேரம் கழித்து சேஷாத்ரி வீடு திரும்பினான். உணவு முடித்து படுத்துக் கொள்ளும்போது சொன்னான்.

"கோபாலனிடம் எல்லா விஷயங்களையும் பேசி விட்டேன். கட்டாயம் உதவி செய்வதாகச் சொல்லிவிட்டான். சுசிலா மாமியும் உதவி செய்வாள் என்பதில் சந்தேகம் இல்லை."

"நன்றாக இருக்கிறது உங்கள் விவகாரம். தங்கையின் அபிப்பிராயம் தெரிந்து கொள்ளாமல் பணத்திற்காக ஏற்பாடு செய்ய கிளம்பி விட்டீர்களே.ஹேமாவுக்கு இந்த சம்பந்தம் பிடிக்கவில்லையாம்."

"வாயை மூடு" - சேஷாத்ரி கத்திவிட்டான்.

"இது நன்றாக இருக்கு. சொல்லாவிட்டால் அவள் முகத்தை தூக்கிவைத்துக் கொள்வாள். சொன்னால் உங்களுக்குக் கோபம் வருகிறது. என்ன செய்வீர்களோ உங்கள் இஷ்டம். நடுவில்

எனக்கென்ன வந்தது?" ரங்கநாயகியும் குரலை உயர்த்தினாள்.

சேஷாத்ரி சுருதியை கொஞ்சம் குறைத்துக் கொண்டான். "எதுக்காக பிடிக்க வில்லையாம்? காரணம் ஏதாவது சொன்னாளா?"

"என்னிடம் சொல்வாளா? விருப்பம் இல்லை என்று மட்டும் சொன்னாள். இனி என்னை எதுவும் கேட்காதீர்கள். வேணும்னா உங்கள் தங்கையிடமே நேராக கேட்டுக் கொள்ளுங்கள்."

"அது இல்லை ரங்கநாயகி! ரொம்ப நல்ல இடம். நாம் கனவில் கூட நினைக்க முடியாத அளவுக்கு பெரிய இடம். ஹேமா அதிர்ஷ்ட சாலியாக இருப்பதால்தான் அவர்களே நம்மை தேடி வருந்திருக்கிறார்கள்."

"இந்த வரன் முடிந்தாதானே இந்தப் பேச்செல்லாம்."

"வாயை மூடு. முடியாமல் எங்கே போகும்?--சேஷாத்ரிக்கு ரொம்ப கோபம் வந்து விட்டது. "இதோ பார் இது வரையில் அவளுடைய அபிப்பிராயத்தை கேட்டுக் கொண்டு, நான் அவளுக்கு ரொம்ப இடம் கொடுத்து விட்டேன். இனி அவளை ஒன்றுமே கேட்கப் போவதில்லை. இந்த வரனையே முடித்து விடப்போகிறேன்".

ரங்கநாயகி பதில் சொல்லவில்லை.

"காதில் விழுந்ததா? உன்னைத்தான்"! - சேஷாத்ரி இரட்டிப் பது போல் கேட்டான்.

"காது நன்றாகவே கேட்கிறது. நாளை காலையில் உங்கள் அருமை தங்கை, அண்ணா என்ன சொன்னார் அண்ணீ என்று கேட்டால் என்ன பதில் சொல்லட்டும்?"

"கேட்டு விட்டு சும்மா இருந்தார் என்று சொல்லு. இந்த வரனை முடிக்கப் போவதாக அவளிடம் சொல்லாதே."

"அடடா----! பொய் சொல்வது உங்களுடைய கொள்கைக்கு இழுக்கு இல்லையா?" - ரங்கநாயகி குத்திப் பேசுவது போல் சொன்னாள்.

"உனக்கு வாய் ரொம்பதான் நீளுது". பார்வையாலேயே மிரட்டினான். போகட்டும் இந்த ஒரு பொய் சொன்ன பிறகாவது நமக்கு பெண் குழந்தை பிறக்கட்டுமே." - சிரித்துக் கொண்டே சொன்னான்.

ரங்கநாயகி சிரிக்கவில்லை. "ஒரு பொய் சொன்னதற்கே பெண் குழந்தை பிறக்கும் என்றால், இந்த உலகில் ஆண்களே பிறந் திருக்க மாட்டார்கள்" என்றாள்.

"உனக்கு உதை தான் கேட்கிறது" - சேஷாத்ரி சிரித்துக் கொண்டே விளக்கை அணைத்துவிட்டான்.

ரங்கநாயகிக்கு ரொம்ப நேரம் உறக்கம் வரவில்லை. சேஷாத்ரி எப்போதும் அடிப்பேன், உதைப்பேன் என்று வாயால் மிரட்டு வானே தவிர, ஒரு நாள் கூட கையை நீட்டி மனைவியை அடித்தது இல்லை. இருந்தாலும் சரி. ரங்கநாயகிக்கு அந்த மாதிரி பேச்சுக்கள் கேட்பது என்றால் கூட வெறுப்புதான். மனைவியை அடிக்கும் கணவன்மார்கள் என்றால் ரங்கநாயகியின் பார்வையில் மிருகங் களைவிட கேவலம்.

கல்யாணம் ஆன புதிதில் ஏதோ சுருத்து வேற்றுமை ஏற்பட்டு சேஷாத்ரி மனைவியை அடிக்க கையை ஓங்கினான். ரங்கநாயகி கண்களை உருட்டி விழித்து பார்த்த பார்வையில் அவனுடைய கை அப்படியே காற்றில் நின்று விட்டது. அதன் பிறகு மனைவியை என்றுமே அடிக்காவிட்டாலும் அந்த கோபத்தை எல்லாமே வாயால் சொல்லி தீர்த்துக் கொள்வான். வெளியிலிருந்து பார்ப்பவர் களுக்கு ரங்கநாயகி, கணவன் சொன்ன பேச்சை தட்டாத மனை வியை போல் தென்படுவாள். ஆனால் தேவை ஏற்பட்டால் தன்னு டைய விருப்பு வெறுப்புகளை கச்சிதமாக செயல்படுத்துவாள். அத னால் ரங்கநாயகியை சிறுவர்களும் சரி, பெரியவர்களும் சரி ரொம்ப விரும்புவார்கள்.

5

அன்று சனிக்கிழமையாக இல்லாததால் ஆஞ்சநேயர் கோவிலில்

கூட்டம் அதிகமாக இல்லை. கோவில் சின்ன குன்றில் மீது இருந் தது. "மேலே போய் உட்கார்ந்து கொள்வோமா என்று ஹேமா கேட்ட போது ரமேஷ் மறுத்து விட்டான். "வேண்டாம் இங்கிருந்து வ்யூ நன்றாக தெரியும். இங்கேயே உட்கார்ந்து கொள்வோம். என்றான்.

"மாலை நான்கு மணிக்கு பார்க்கில் சந்தித்துக் கொள்வதாகத் தான் இருந்தார்கள். ஆனால் பார்க்கில் கும்பல் அதிகமாக இருந் ததை கவனித்த ஹேமா அங்கே வேண்டாம் என்று சொல்லி விட்ட தால் அருகில் இருந்த கோவிலுக்குச் சென்றார்கள். வாழ்க்கையின் முக்கியமான விஷயத்தை பற்றி பேசுவதற்கு கோவில்தான் சரியான இடம் என்று ஹேமா நினைத்துக் கொண்டாள்."

கிட்டத்தட்ட ஒருமணி நேரம் பேசிய பிறகும் அவர்களால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. இருவரின் முகங்களும் சீரியஸாக தென்பட்டன.

கடைசியில் ரமேஷின் குரல் கம்பீரமாக ஒலித்தது. "சரி ஹேமா உன் விருப்பப்படியே ஆகட்டும். அடுத்த ஏழு நாட்களுக்குள் நாம் திருமணம் செய்து கொள்வோம். அதற்கான ஏற்பாடுகளை செய்கிறேன்."

ஹேமா நம்பமுடியாதவள் போல் பார்த்தாள். "உண்மையாகத் தான் சொல்கிறாயா? பிராமிஸ்!"

"பிராமிஸ். ஆனால் நீ மறுபடியும் ஒரு தடவை நன்றாக யோசித்துக்கொள். உங்க அண்ணாவுக்குத் தெரியாமல் நாம் இப்படி ரகசியமாக திருமணம் செய்துக்கொள்வதில் எனக்கு கொஞ்சம்கூட விருப்பமில்லை. உன் அண்ணன் உன்னுடைய விருப்பத்தை என் றுமே மறுத்தது இல்லை. நாம் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்புவ தாக அவரிடம் சொல்வதால் என்ன நஷ்டம் வந்துவிடப் போகிறது? நீ எதற்காக தயங்குகிறாய் என்று எனக்குப் புரியவில்லை."

"வேண்டவே வேண்டாம். சொன்னால் உனக்குப் புரியாது. அண்ணனின் எண்ணமெல்லாம் சமீபத்தில் வந்த வரன்மீதுதான் இருக்கிறது. நிச்சயமாக ஒப்புக்கொள்ள மாட்டார்." - ஹேமா மறுப் பது போல் தலையை அசைத்தாள்.

"அடடா----! பொய் சொல்வது உங்களுடைய கொள்கைக்கு இழுக்கு இல்லையா?" - ரங்கநாயகி குத்திப் பேசுவது போல் சொன்னாள்.

"உனக்கு வாய் ரொம்பதான் நீளுது". பார்வையாலேயே மிரட்டினான். போகட்டும் இந்த ஒரு பொய் சொன்ன பிறகாவது நமக்கு பெண் குழந்தை பிறக்கட்டுமே." - சிரித்துக் கொண்டே சொன்னான்.

ரங்கநாயகி சிரிக்கவில்லை. "ஒரு பொய் சொன்னதற்கே பெண் குழந்தை பிறக்கும் என்றால், இந்த உலகில் ஆண்களே பிறந் திருக்க மாட்டார்கள்" என்றாள்.

"உனக்கு உதை தான் கேட்கிறது" - சேஷாத்ரி சிரித்துக் கொண்டே விளக்கை அணைத்துவிட்டான்.

ரங்கநாயகிக்கு ரொம்ப நேரம் உறக்கம் வரவில்லை. சேஷாத்ரி எப்போதும் அடிப்பேன், உதைப்பேன் என்று வாயால் மிரட்டு வானே தவிர, ஒரு நாள் கூட கையை நீட்டி மனைவியை அடித்தது இல்லை. இருந்தாலும் சரி. ரங்கநாயகிக்கு அந்த மாதிரி பேச்சுக்கள் கேட்பது என்றால் கூட வெறுப்புதான். மனைவியை அடிக்கும் கணவன்மார்கள் என்றால் ரங்கநாயகியின் பார்வையில் மிருகங் களைவிட கேவலம்.

கல்யாணம் ஆன புதிதில் ஏதோ சருத்து வேற்றுமை ஏற்பட்டு சேஷாத்ரி மனைவியை அடிக்க கையை ஓங்கினான். ரங்கநாயகி கண்களை உருட்டி விழித்து பார்த்த பார்வையில் அவனுடைய கை அப்படியே காற்றில் நின்று விட்டது. அதன் பிறகு மனைவியை என்றுமே அடிக்காவிட்டாலும் அந்த கோபத்தை எல்லாமே வாயால் சொல்லி தீர்த்துக் கொள்வான். வெளியிலிருந்து பார்ப்பவர் களுக்கு ரங்கநாயகி, கணவன் சொன்ன பேச்சை தட்டாத மனை வியை போல் தென்படுவாள். ஆனால் தேவை ஏற்பட்டால் தன்னு டைய விருப்பு வெறுப்புகளை கச்சிதமாக செயல்படுத்துவாள். அத னால் ரங்கநாயகியை சிறுவர்களும் சரி, பெரியவர்களும் சரி ரொம்ப விரும்புவார்கள்.

5

அன்று சனிக்கிழமையாக இல்லாததால் ஆஞ்சநேயர் கோவிலில்

கூட்டம் அதிகமாக இல்லை. கோவில் சின்ன குன்றில் மீது இருந் தது. "மேலே போய் உட்கார்ந்து கொள்வோமா என்று ஹேமா கேட்ட போது ரமேஷ் மறுத்து விட்டான். "வேண்டாம் இங்கிருந்து வ்யூ நன்றாக தெரியும். இங்கேயே உட்கார்ந்து கொள்வோம். என்றான்.

"மாலை நான்கு மணிக்கு பார்க்கில் சந்தித்துக் கொள்வதாகத் தான் இருந்தார்கள். ஆனால் பார்க்கில் கும்பல் அதிகமாக இருந் ததை கவனித்த ஹேமா அங்கே வேண்டாம் என்று சொல்லி விட்ட தால் அருகில் இருந்த கோவிலுக்குச் சென்றார்கள். வாழ்க்கையின் முக்கியமான விஷயத்தை பற்றி பேசுவதற்கு கோவில்தான் சரியான இடம் என்று ஹேமா நினைத்துக் கொண்டாள்."

கிட்டத்தட்ட ஒருமணி நேரம் பேசிய பிறகும் அவர்களால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. இருவரின் முகங்களும் சீரியஸாக தென்பட்டன.

கடைசியில் ரமேஷின் குரல் கம்பீரமாக ஒலித்தது. "சரி ஹேமா உன் விருப்பப்படியே ஆகட்டும். அடுத்த ஏழு நாட்களுக்குள் நாம் திருமணம் செய்து கொள்வோம். அதற்கான ஏற்பாடுகளை செய்கிறேன்."

ஹேமா நம்பமுடியாதவள் போல் பார்த்தாள். "உண்மையாகத் தான் சொல்கிறாயா? பிராமிஸ்!"

"பிராமிஸ். ஆனால் நீ மறுபடியும் ஒரு தடவை நன்றாக யோசித்துக்கொள். உங்க அண்ணாவுக்குத் தெரியாமல் நாம் இப்படி ரகசியமாக திருமணம் செய்துக்கொள்வதில் எனக்கு கொஞ்சம்கூட விருப்பமில்லை. உன் அண்ணன் உன்னுடைய விருப்பத்தை என் றுமே மறுத்தது இல்லை. நாம் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்புவ தாக அவரிடம் சொல்வதால் என்ன நஷ்டம் வந்துவிடப் போகிறது? நீ எதற்காக தயங்குகிறாய் என்று எனக்குப் புரியவில்லை."

"வேண்டவே வேண்டாம். சொன்னால் உனக்குப் புரியாது. அண்ணனின் எண்ணமெல்லாம் சமீபத்தில் வந்த வரன்மீதுதான் இருக்கிறது. நிச்சயமாக ஒப்புக்கொள்ள மாட்டார்." - ஹேமா மறுப் பது போல் தலையை அசைத்தாள்.

அன்று காலையில் எழுந்ததுமே ஹேமா அண்ணியிடம் சென்றாள். "அண்ணீ! அண்ணனிடம் என் மறுப்பை சொல்லி விட்டீர்களா? என்ன சொன்னார்?" - பதட்டம் நிறைந்த குரலில் கேட்டாள்.

ரங்கநாயகி சிரியஸாக ஹேமாவை பார்த்துவிட்டுச் சொன்னாள்.

"காதில் வாங்கிக் கொண்டு சும்மா இருந்துவிட்டார். பதில் எதுவும் சொல்லவில்லை. நீ இன்னும் சின்னவள் என்றும், இது போன்ற விஷயங்களில் முடிவு செய்ய உனக்கு விவரம் போறாது என்று நினைத்துக் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது." - மதில் மேல்பூனையை போல் பட்டும் படாமலும் பதில் சொன்னாள் ரங்க நாயகி.

ஹேமாவிற்கு ஏனோ அண்ணா இந்த வரனை முடித்துவிடுவான் என்று பயமாக தோன்றியது. அதனால்தான் உடனே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று ரமேஷை வற்புறுத்தினாள். வேண்டாம் என்று சொன்னால் ஹேமாவை சாசுவதமாக இழந்து விடுவோமோ என்ற பயத்தில் ரமேஷும் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தான். ஆனால் சேஷாத்ரியிடம் சொல்லாமல் திருமணம் செய்து கொள்வதில் அவனுக்கு விருப்பம் இல்லை. இந்த உலகத்திலேயே அவன் மதிக்கும் நபர் ஒருவன் இருக்கிறான் என்றால் அது சேஷாத்ரி ஒருவன்தான். ஆனால் ஹேமா இந்த விஷயத்தில் ரொம்பப்பிடிவாதமாக இருக்கிறாள். முதலில் தயங்கினான். கடைசியாக பெருமூச்சுவிட்டுக் கொண்டே "சரி, உன் விருப்பம் போல் ஆகட்டும்" என்றான்.

ஹேமாவின் முகம் மகிழ்ச்சியால் மின்னியது. "வா-- கோவிலுக்குள்ளே போவோம்." ஹேமா எழுந்துக்கொண்டே சொன்னாள். "இருவரும் சேர்ந்து கடவுளிடம் வேண்டிக்கொள்வோம்."

ரமேஷின் முகம் சிரியஸாக மாறிவிட்டது. "மன்னித்துவிடு ஹேமா! இதுவரையில் நான் எந்தக் கோவிலுக்கும் போனது இல்லை. என்றுமே கையெடுத்து கடவுளை கும்பிட்டதும் இல்லை. அந்த தேவை என்றுமே எனக்கு ஏற்படவில்லை" என்றான்.

அதைக் கேட்டதும் ஹேமாவின் முகம் களை இழந்தது.

"ஏதாவது தேவை ஏற்பட்டால்தான் கடவுளை வழிபடுவார்களா? இல்லாவிட்டால் கடவுளை வேண்டிக் கொள்ள மாட்டார்களா?" வியப்புடன் கேட்டாள்."

"எனக்குத் தெரிந்த வரையில் பெரும்பாலான மனிதர்கள் அப்படித்தான் நடந்துக் கொள்வார்கள். மனதில் ஏதாவது கோரிக்கை வைத்துக் கொண்டுதான் கடவுளுக்குக் கும்பிடு போடுவார்கள்."

"உனக்குத் தெரிந்த அந்த மனிதர் யாருமே நல்லவர்களாக இருக்க மாட்டார்கள்." ஹேமா ஒரு அடி முன்னால் வைத்து ரமேஷின் கையை பட்டும் படாமலும் தொட்டாள். "இதுவரையில் கோவிலுக்கு நீ போனதே இல்லையென்றால் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. இன்றே அந்த நல்ல காரியத்தை தொடங்குவோம். என்னுடன் வா" என்றாள்.

ரமேஷால் மறுக்க முடியவில்லை.

இருவரும் படிகள் ஏறி கோவிலுக்குள் சென்றார்கள். ஹேமா கோவில் மணியை அடித்துவிட்டு கண்களை மூடிக்கொண்டு கைகளைக் கூப்பினாள். ரமேஷ் மணியை அடிக்கவும் இல்லை. கைகளை கூப்பவும் இல்லை. கண்களை இமைக்காமல் அந்த சிலையை அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஹேமா கண்களைத் திறந்தாள். அங்கேயே இருந்த குங்குமத்தை எடுத்து நெற்றியில் இட்டுக்கொண்டு ரமேஷுக்கும் இட்டுவிட்டாள்.

நீ இப்போ எனக்குக் கொடுத்த பிராமிஸிக்கு இந்த கடவுள்தான் சாட்சி" என்று கடவுள் சிலையை காண்பித்தாள்.

"நல்ல சாட்சியை தான் தேர்ந்து எடுத்தாய் போ. வாயைத் தறந்து ஒரு வார்த்தை சொல்லத் தெரியாதவன். அதிலும் பிரம்மசாரியாக இருப்பவன்" - ரமேஷ் சிரித்துவிட்டான்.

"பேசத் தெரிந்தால்தான் சாட்சியாக இருக்கமுடியுமா? இந்த ஆஞ்சநேயர் ரொம்ப சக்தி வாய்ந்தவர்" - ஹேமா சொன்னாள்.

இருவரும் கோவிலை விட்டு வெளியே வந்தார்கள். ரமேஷ் ஹேமாவுக்குத்துணையாக வீடுவரைக்கும் வருவதாகச் சொன்னான். ஹேமா வேண்டாம் என்று மறுத்துவிட்டாள். தனியாகவே போய் விடுவதாக சொன்னாள்.

ரமேஷிடம் விடை பெற்றுக்கொண்டு கிளம்பிய ஹேமாவின் முகம் மகிழ்ச்சியால் மின்னிக்கொண்டிருந்தது. ரமேஷ் திருமணத்திற்கு ஒப்புக்கொண்டு விட்டான். அவன் சம்மதிக்க வேண்டுமே என்று நேற்று மாலையிலிருந்து கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

மாலை வேலையில் வீசிக்கொண்டிருந்த தென்றல் காற்று அவளுடைய கேசக்குழல்களை நாட்டியமாட வைத்துக் கொண்டிருந்தது. நெற்றி மீது வந்து விழுந்து கொண்டிருந்த கேசத்தை அடிக்கடி பின்னால் தள்ளிவிட்டுக் கொண்டே, எங்கேயோ கனவுலகில் இருப்பது போல் நடந்து போய்க் கொண்டிருந்த ஹேமாவை, எதிரே காரில் வந்து கொண்டிருந்த அந்த இளைஞன் பார்த்துவிட்டான். நேராக போய்க் கொண்டிருந்த கார் வேகத்தை குறைத்து சாலையில் குறுக்கே திரும்பி ஹேமாவை பின்தொடர்ந்து வந்ததை அவள் உணரவே இல்லை. நினைவு எங்கேயோ இருப்பது போல் நடந்து போய்க் கொண்டிருந்தாள்.

காரை டிரைவ் செய்து கொண்டிருந்த சுதாகருக்கு காரை வேகமாக முன்னால் செலுத்தி ஹேமாவுக்கு பக்கத்தில் நிறுத்தி அவளை காரில் ஏறச் சொல்ல வேண்டும் என்று பலமான விருப்பம் தோன்றியது. அவளுடைய வருங்கால கணவன் தான் தானே. அவளை இப்படி கேட்கும் அதிகாரம் தனக்கு இல்லாமல் வேறு யாருக்கு இருக்கும்? பக்கவாட்டிலிருந்து ஹேமாவின் தோற்றத்தையே கவனித்துக்கொண்டிருந்த சுதாகரின் கண்களுக்கு ரொம்ப அழகாய் தென்பட்டாள்.

முழங்காலைத் தொடும் பின்னலும், கேசக்குழல்களை அடிக்கடி பின்னால் தள்ளிக்கொண்டு, இந்த உலகிலேயே இல்லாதவள் போல் நடந்து போகும் ஹேமாவின் உருவம் அவன் மனதில் சாசுவதமாக பதிந்துவிட்டது.

காலையில் சேஷாத்ரி தரகருடன் நாகபூஷணம் வீட்டுக்குப் போயிருந்தான். ஏற்கனவே அங்கே காத்திருந்த சாஸ்திரிகள் பஞ்சாங்கத்தை பிரட்டிப் பார்த்துவிட்டு அன்று நாள் நன்றாக இல்லை என்றும், வெள்ளிக்கிழமை நன்றாக இருப்பதால் அன்றே நிச்சயதார்த்தம் வைத்துக் கொண்டு முஹூர்த்தம் பற்றி முடிவு செய்துவிடலாம் என்று சொல்லிவிட்டார். இல்லாவிட்டால் இன்று மாலை இந்த

நேரம் நிச்சயதார்த்தத்திற்கு தாங்கள் வாங்கியிருக்கும் பட்டுப் புடவையை உடுத்திக்கொண்டு, விரலில் சிவப்புகல் நெளி மோதிரத்தை அணிந்துகொண்டு இருந்திருப்பாள்.

கற்பனை உலகில் மூழ்கி காரை டிரைவ் செய்து கொண்டிருந்த சுதாகர் எதிரே வந்த ஆட்டோமீது மோதிக் கொள்ளப் போய் கடைசி நிமிடத்தில் தடுத்துவிட்டான். ப்ரேக் போட்டு காரை செலுத்த போனான். அதற்குள் ஹேமா பக்கத்து தெருவுக்குள் திரும்பிவிட்டான். இதழ்களில் புன்னகை மலர சுதாகர், மெதுவாக காரை திருப்பிக் கொண்டு போய்விட்டான்.

அன்று இரவு -- ஊரெல்லாம் நிசப்தமாக உறக்கத்தில் ஆழ்ந்துவிட்ட அந்த வேளையில் நாகபூஷணத்தின் வீட்டு மாடியில் நவீனமாக அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த படுக்கை அறையில் நுரை மெத்தையில் படுத்திருந்த சுதாகரின் கையில் புத்தகம் இருந்தது. புத்தகத்திற்கு நடுவில் வைத்திருந்த ஹேமாவின் புகைப்படத்தையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். எத்தனை நேரம் பார்த்தாலும் அவனுக்கு திருப்தி ஏற்படவில்லை. எத்தனை அழகான கண்கள்! செதுக்கி வைத்தது போன்ற அந்த மூக்கு! வில் போன்று வளைந்த புருவங்கள்!

சுதாகரின் கண்களுக்கு முன்னால் மாலையில் ஹேமா சாலையில் நடந்து போய்க் கொண்டிருந்த காட்சி நிழலாடியது. புன்முறுவலுடன் அவன் இதழ்கள் விரிந்தன. என்றாவது ஒருநாள் ஹேமாவிடம் இந்த விஷயத்தை மறக்காமல் சொல்ல வேண்டும். இன்னும் எத்தனை நாட்கள் பதினைந்து நாட்கள் கூட இல்லை. ஹேமா தன்னுடையவளாகிவிடுவாள். திருமணம் முடிந்து ஏழு நாட்களுக்குள் அவளையும் அழைத்துக் கொண்டு அமெரிக்காவுக்கு போய்விடப் போகிறோம். நினைக்கும் போதே மனதில் உற்சாகம் பரவியது. ஹேமாவின் புகைப்படத்தை பத்திரமாக உள்ளே வைத்துவிட்டு விளக்கை அணைத்துவிட்டு படுத்துக் கொண்டான். ஹேமாவின் நினைவுகள் மனம் முழுவதும் பரவ அப்படியே உறக்கத்தில் ஆழ்ந்து போய் விட்டான்.

கிட்டத்தட்ட அதே நேரத்தில் பார்க்கில் பெஞ்சிமீது தலைக்கு கீழே கைகளை வைத்துக்கொண்டு வானத்தை பார்த்துக் கொண்டே

படுத்திருந்த ரமேஷிற்கு ஹேமாவின் நினைவுகளால் உறக்கமே வர வில்லை.

ஹேமாவை திருமணம் செய்துக் கொள்வதாக அவளுக்கு வாக்குக் கொடுத்துவிட்டதை நினைக்கும் போது மனதில் இனம் புரியாத கலவரம் ஏற்பட்டது. இதயம் வேகமாக துடிக்கத் தொடங்கியது. வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண்டும், சமுதாயத்தில் தனக்கென்று ஒரு இடத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைத்திருந்தான். இன்று எதையும் சாதிக்காமலேயே திருமணம் என்ற பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ளப் போகிறான். திருமணம் நடந்துவிட்டால் போதுமா? இணைந்து வாழ்க்கை நடத்த வேண் டாமா? முதலில் வாடகைக்கு ஒரு வீட்டை பார்க்க வேண்டும். சமை யல் செய்ய பாத்திரங்கள், மளிகை பொருட்கள் எல்லாமே வாங்க வேண்டும். தான் வேலை செய்யும் ஜவுளிக் கடையின் முதலாளி யிடம் கேட்டு அட்வான்ஸாக கொஞ்சம் பணம் வாங்கிக் கொள்ள வேண்டும்.

அவன் மனம் முழுவதும் குழம்பியிருந்தது. இன்னும் இரண்டு வருடங்கள் பொறுத்துக் கொண்டு இருந்தால் ஹேமாவுக்கு இந்த கஷ்டங்கள் எதுவும் இருந்திருக்காது. அவன் இதயத்தை சிழித்துக் கொண்டு பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது. ஹேமா தனக்கு வேண் டும். அவளை தன்னால் இழக்க முடியாது. அதற்காக அவன் எதிர் காலத்துடன் போராடத் தயாராகி விட்டான்.

என்றாவது ஒருநாள் ஹேமாவிடம் தான் இந்த இரவு அனு பவித்த வேதனையே கட்டாயம் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டே ரமேஷ் கண்களை மூடிக்கொண்டான்.

முற்றிலும் மாறுபட்ட மனப்பான்மையை கொண்ட இந்த இரண்டு நபர்களுடன் தன்னுடைய வாழ்க்கை விசித்திரமான முறை யில் பிணைந்திருப்பதை அறியாத ஹேமா மதுவின் பக்கத்தில் நிம் மதியாக உறங்கிக் கொண்டிருந்தாள்.

6

சூரியன் எப்போதும் போல் ஒளிவீசிக் கொண்டிருந்தான். தெரு வில் மக்கள் ஏதோ குடி மூழ்கிப் போவது போல் வேக வேகமாய் போய்க்கொண்டிருந்தார்கள்.

ஆனால் ரிஜிஸ்டர் அலுவலகத்திலிருந்து அப்பொழுதுதான் வெளியில் வந்து கொண்டிருந்த ரமேஷ், ஹேமாவுக்கு மட்டும் இந்த உலகம் எப்பொழுதும் போல் அல்லாமல், இதற்குமுன் பார்த்திராத அளவுக்கு அற்புதமாய், அழகாய் தென்பட்டுக் கொண்டிருந்தது. மெலிதாக வீசிக் கொண்டிருந்த காற்றில் அசைந்தாடிக் கொண் டிருந்த மரக்கிளைகள், இலைகள் தங்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வதுபோல் ஹேமாவுக்குத் தோன்றியது. எதிரே வரிசையாய் இருந்த கட்டடங்கள் கண்களுக்கு ரொம்ப அழகாய் தோன்றியது.

இருவரும் கேட்டைத் தாண்டி வெளியில் வந்தார்கள். ஹேமா திடீரென்று ரமேஷ் பக்கம் திரும்பினாள்.

"ரமேஷ்! நமக்கு நிஜமாகவே திருமணம் ஆகிவிட்டது இல்லையா!" - நம்பமுடியாதவள் போல் கேட்டாள்.

"ஆகிவிட்டது என்றுதான் நினைக்கிறேன்!" - ரமேஷ் கனவுலகில் இருப்பவனை போல் சொன்னான்.

தனக்கு திருமணம் ஆகிவிட்டது. ஹேமா தன்னுடைய மனைவி யாகி விட்டாள். இந்த நிமிடம் முதல் ஹேமா தனக்கு சொந்த மானவள். அந்த உண்மையை அவனால் இன்னும் நம்பமுடிய வில்லை. சொல்லத் தெரியாத மகிழ்ச்சி மனம் முழுவதும் பரவியது. மூளை மரத்துப் போனால் போல் இருந்தது.

இன்று காலையில் ஹேமா அவனுடைய அறைக்கு வரும் வரை யில் அவனுக்கு நம்பிக்கையே இல்லை. இந்தத் திருமணம் நடக்க முடியாததாக, அர்த்தமில்லாத யோசனையாக தோன்றிக் கொண்டி ருந்தது. எதிர்பார்ப்புக்கும் ஏமாற்றத்திற்கும் இடையே அவன் மனம் ஊசலாடிக் கொண்டிருந்தபோது ஹேமா சொன்ன சொல் தவறா மல் வந்துவிட்டாள். ரிக்ஷாவை விட்டு இறங்கி உள்ளே வந்து கொண்டிருந்த ஹேமாவை பார்க்கும்போது அவனுக்கு மூளை கலங்கி விட்டதுபோல் இருந்தது. அர்த்தமில்லாத பயத்தினால் இதயம் வேகமாக துடிக்கத் தொடங்கியது.

இன்னொருமுறை நன்றாக யோசித்துக்கொள் ஹேமா என்று எச்சரிக்க வேண்டுமென்று பலமாகத் தோன்றியது. ஆனால் களங்க மற்று, எத்தனையோ நம்பிக்கையுடன் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த ஹேமாவின் முகத்தைப் பார்த்ததுமே அவனுடைய

தயக்கங்கள் எல்லாமே மாயமாகிவிட்டன. ஹேமா தன்னுடையவள். அவளுக்காக தன்னால் எதையும் செய்ய முடியும் என்ற தைரியம் வந்துவிட்டது. அதற்கு பிறகு ஹேமாவையும் அழைத்துக் கொண்டு முன்பே ஏற்பாடு செய்து வைத்திருந்தது போல் அதே தெருவில் குடியிருந்த டைலரையும். அவனுடைய மனைவியையும் அழைத்துக் கொண்டு ரிஜிஸ்ட்ரார் அலுவகத்திற்குச் சென்றதும், அங்கே நடக்க வேண்டிய காரியங்கள் மளமளவென்று சுருக்கமாய் நடந்து முடிந்துவிட்டன.

அவசரமான வேலை இருப்பதால் டைலர் சாட்சி கையெழுத்து போட்டுவிட்டு, வாழ்த்துக்களை தெரிவித்துவிட்டு மனைவியை அழைத்துக் கொண்டு அர்ஜெண்டாக கிளம்பிப் போனது, தானும் ஹேமாவும் கனவுலகில் நடப்பதுபோல் மெதுவாக அலுவலகத்தை விட்டு வெளியேறியது எல்லாமே இயந்திர கதியில் நடந்து முடிந்து விட்டன. ரமேஷின் நிலை தூக்க மயக்கத்தில் இருப்பது போல் இருந்தது. அவன் எத்தனையோ விதமாக ஊகித்திருந்தான். எதை எதையோ நினைத்துப் பயந்தான். ஆனால் ஹேமாவுடன் தன்னுடைய திருமணம் எந்த ரகளையும் இல்லாமல் இவ்வளவு எளிமையாய் முடிந்துவிடும் என்று கனவிலும் அவன் நினைக்கவில்லை.

இனி எது நடந்தாலும் பரவாயில்லை. ஹேமா தன் பக்கத்தில் இருந்தால் ஷேசாத்ரி என்ன உலகமே எதிர்த்து நின்றாலும் தன்னால் சமாளிக்க முடியும். யார் எந்த அவமானம் செய்தாலும் தாங்கிக் கொள்ள முடியும். ஆயிரம் யானைகளின் பலம் வந்துவிட்டது போல் இருந்தது ரமேஷிற்கு.

சாலைமீது காலியாக வந்துகொண்டிருந்த டாக்ஸி ஒன்று ரமேஷ் அழைக்காமலேயே அருகில் வந்து நின்றது. ரமேஷின் கண்களுக்கு அந்த டாக்ஸி புஷ்பகவிமானம் போல் இருந்தது.

அவன் இரண்டடி முன்னால் வைத்து டாக்ஸியின் கதவைத் திறந்தான். ஹேமா ஏறிக் கொண்டதும் அவனும் ஏறிக் கொண்டு கதவைச் சாத்தினான். டிரைவரிடம் ஹேமாவின் வீட்டு முகவரியை சொன்னான்.

"எனக்கு என்னவோ போல் இருக்கிறது" - என்றாள் ஹேமா.

"ரமேஷுக்குப் புரிந்தது. ஹேமாவின் கையை தன் கையில் எடுத்துக்கொண்டே; எனக்குத் தெரியும் பயமாக இருக்கிறது இல்லையா?" என்று கேட்டான்.

ஹேமா தலையை அசைத்தாள்.

"நான்தான் இருக்கிறேனே. நீ மௌனமாக இரு. சொல்ல வேண்டியதெல்லாம் நான் சொல்லிக் கொள்கிறேன்." - தைரியம் சொன்னான்.

கொஞ்சதூரம் போன பிறகு ஹேமா திடீரென்று சொன்னாள். "ரமேஷ் நீ இப்போ என்னுடன் எங்கள் வீட்டிற்கு வரவேண்டாம். நான் தனியாகப் போகிறேன்."

ரமேஷ் வியப்படைந்தவனாய் பார்த்தான். "முதலில் நான் மட்டும் போகிறேன். இந்த நேரத்தில் அண்ணன் வீட்டில் இருக்கமாட்டார். அண்ணியிடம் சொல்லி சமாதானப்படுத்துகிறேன். சரியாக ஒருமணி நேரம் கழித்து நீ வா."

"ஹேமா!..." ரமேஷ் ஏதோ சொல்லப் போனான்.

"ப்ளீஸ்! இந்த ஒரு விஷயத்தில் மறுப்பு சொல்லாதே. நான் சொன்னது போல் செய்வோம். நான் தனியாகப் போகிறேன். நீ என்னுடன் வரவேண்டாம்." - மற்றொருமுறை திடமாய் தன்னுடைய கருத்தை வெளியிட்டாள் ஹேமா.

"ஹேமா! ஏற்கனவே நான் கோழையைபோல் நடந்து கொண்டிருக்கிறேன்."

"ஊஹூம்! நீ எதுவும் சொல்ல வேண்டாம்." - ஹேமா ரமேஷின் கையிலிருந்து மெதுவாக தன்னுடைய கையை விடுவித்துக் கொண்டாள்.

ஹேமா சொன்னது ரமேஷுக்குக் கொஞ்சம்கூட பிடிக்கவில்லை. இருந்தாலும் மறுப்பு சொல்வது சாத்தியம் என்று தோன்றவில்லை.

"சரி. உன் விருப்பம். ஆனால் ஒருமணி நேரம் என்றால் என்னால் தாங்கமுடியாது. கால்மணி நேரம் கழித்து வருகிறேன்."

"ஊஹூம். ஒருமணி நேரத்திற்கு ஒரு நிமிடம் முன்னாடி வந்தாலும் நான் சும்மாயிருக்கமாட்டேன்." - தெளிவாக சொன்னாள்

ஹேமா.

ஹேமாவின் பிடிவாதத்தைக் கண்டு ரமேஷுக்கு ஒரு நிமிடம் கோபம் வந்தாலும், அடுத்த நொடியே அது மாயமாய் மறைந்து விட்டது. ஹேமா தன்னை வர வேண்டாம் என்று எதற்காகச் சொல் கிறாள் என்று அவனால் புரிந்துக்கொள்ள முடிந்தது. டாக்ஸி ஹேமாவின் வீடு இருக்கும் தெருவை நெருங்கிக் கொண்டிருந்தது.

"இங்கேயே நிறுத்தச் சொல்லுங்கள். நான் இறங்கி நடந்து போய் கொள்கிறேன்" என்றாள் ஹேமா.

டாக்ஸியை நிறுத்தச் சொல்லி ரமேஷ் டிரைவரிடம் சொன் னான்.

ஹேமா கதவைத் திறந்துக் கொண்டு இறங்கினாள். ரமேஷ் பக்கம் பார்த்துக் கொண்டே புன்முறுவலுடன், "சரியாக ஒருமணி நேரம் பத்து நிமிடங்கள் போனாலும் பரவாயில்லை. குறைந்தால் மட்டும் சும்மா இருக்கமாட்டேன். என்று சுட்டு விரலை உயர்த்தி மிரட்டு வதுபோல் சொன்னாள்.

ரமேஷ் கண்களை மூடி தலையை குனிந்து கொண்டு, "தேவி யாரின் ஆணை! அப்படியே ஏற்றுக் கொள்கிறேன்" - நாடக பாணியில் சொன்னான்.

ஹேமா நடந்து போகும்போது தன்னுடைய உயிர் ஏதோ அவளு டனே போய்க் கொண்டிருப்பது போல் ரமேஷுக்கு தோன்றியது.

பத்து பேருக்கு நடுவில் வர நேர்ந்தாலோ, தெருவில் நடக்க வேண் டியிருந்தாலோ புடவைத் தலைப்பை தோளைச் சுற்றிலும் போர்த்திக் கொள்வது ஹேமாவின் வழக்கம். இப்பொழுதும் அதே போல் இழுத்துப் போர்த்திக் கொண்டு மளமளவென்று நடந்து போய்க் கொண்டிருந்தாள்.

தெருமுனையில் திரும்பிய ஹேமா கண்பார்வையிலிருந்து மறைந்துவிட்டாள். ரமேஷ் டாக்ஸிகாரனிடம் தன்னுடைய ரூம் இருக்கும் தெருவின் பெயரைச் சொல்லி அங்கே போகச் சொன் னான். அவன் மனம் முழுவதும் வினோதமான உணர்ச்சிகள் நிரம்பி யிருந்தன. ஏதோ நினைப்பில் பழக்கப்பட்ட கதியில் கையை உயர்த்தி நேரத்தை பார்த்துக் கொள்ளப் போனான். கடிகாரம் இல்லாத கை

அவனை பார்த்து கேலி செய்வது போல் இருந்தது.

ரமேஷ் பெருமூச்சுவிட்டான்.

இந்த திருமணச் செலவுகளை சமாளிப்பதற்காக தன்னுடைய கை கடிகாரம் மட்டுமே இல்லை. சுந்தரத்தின் ரிக்கார்ட் ப்ளேயர், விலை உயர்ந்த பேனா எல்லாவற்றையுமே விற்றுவிட்டான்.

முதலில் தான் வேலை செய்யும் கடையில் கடன் கேட்கலாம் என்று நினைத்தான். ஆனால் போன வாரம்தான் சுந்தரத்திற்கு அவசரமாக வேண்டுமென்று சொன்னதால் இருநூறு ரூபாய் வாங்கிக் கொடுத்தான். மறுபடியும் கேட்டால் முதலாளி கொடுக்க மாட்டார் என்று நிச்சயமாக தெரியும். ரமேஷ் பின் சீட்டில் சாயந்த வாக்கில் உட்கார்ந்து கொண்டான்.

"டிரைவர்! சரியாக ஒருமணி நேரம் கழித்து நாம் மறுபடியும் இந்தத் தெருவுக்கு வரணும்."

"சரி சார்" என்றான் டிரைவர்.

* * *

வீடு நெருங்க நெருங்க ஹேமாவின் இதயம் வேகமாக துடிக்கத் தொடங்கியது. போனதும் அண்ணியின் முதுகுப் பக்கமாய் போய் அவளுடைய கண்களை மூட வேண்டும்.

"அண்ணீ! உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்லப் போகிறேன். கேட்டதும் நினைவு தப்பி கீழே விழுந்து விடுவாயோ என்னவோ" என்று வேடிக்கையாக பேசுவதுபோல் நடித்து, பிறகு மெதுவாக விஷயத்தை வெளிப்படுத்த வேண்டும். எதையும் மனதில் வைத்துக் கொள்ளும் சுபாவம் அண்ணியுடையது. விஷயத்தை கேட்டதும் முதலில் நன்றாக திட்டுவாள். தான் பயப்படக்கூடாது "அண்ணீ! ரமேஷை திருமணம் செய்து கொள்வதில் என்னுடைய சுயநலம் மட்டுமே இல்லை. அண்ணன் என் திருமணத்தை ஆடம் பரமாய் நடத்தி கடனாளி ஆகக்கூடாது என்ற நன்மையும் இதில் அடங்கி இருக்கிறது" என்று நயமாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

அண்ணன் அண்ணிக்கு தொடக்கத்தில் வேதனை ஏற்பட்டாலும், போகப்போக அவர்களே புரிந்துகொள்வார்கள். ரமேஷை தான்

12797

திருமணம் செய்துகொண்டது எல்லாவிதத்திலும் சரியான்னதுதான். ஏற்கனவே சுமாராக ஓடிக் கொண்டிருந்த அண்ணனின் குடித்தனம் இந்த திருமணத்தினால் மேலும் சரிந்துபோய் விடுவதில் தனக்குக் கொஞ்சம்கூடி விருப்பம் இல்லை. முதலில் அண்ணியை சம்மதிக்க வைக்க முடிந்தால், பிறகு அண்ணனுக்கு எடுத்துச் சொல்லும் பொறுப்பு அவளுடையதாகிவிடும்.

ஹேமா மெதுவாக வீட்டினுள் அடியெடுத்து வைத்தாள்.

முன் அறையில் விருந்தாளிகள் யாரோ வந்திருப்பதற்கு அடையாளமாய் வாசற்படி அருகில் பல ஜோடி செருப்புகள் தென் பட்டன. உள்ளே இருந்து பேச்சுக்குரல் கேட்டுக்கொண்டிருந்தது.

ஹேமா தயங்கிக் கொண்டே உள்ளே போனாள்.

படுக்கை அறையில் ஜெகதாம்பாளும், சுசிலா மாமியும் உட் கார்ந்து இருந்தார்கள். அவர்களை பார்த்ததும் ஹேமாவின் புருவம் முடிச்சேரியது. சமையல் அறை பக்கம் சென்றாள். அங்கே வேலை யில் மும்முரமாய் இருந்த ரங்கநாயகி ஹேமாவைப் பார்த்ததும், "வந்துவிட்டாயா மகாராணி! எங்கே போனாயோ? என்னவாகி விட்டாயோ? என்று பயந்து கொண்டிருக்கிறேன். நீ வருவது இன் னும் அரைமணி தாமதமாகி இருந்தால், நான் நடுத்தெருவில் நிற்க வேண்டியதுதான். போ.... போய் முகத்தை அலம்பி, தலைவாரி பின்னிக்கொள்" என்று ஆணைகளை பிறப்பித்தாள்.

ஹேமாவின் பார்வை சமையல் அறைமேடை மீது வைக்கப் பட்டிருந்த ஸ்வீட் பாக்கெட்டுகள் மீதும், பக்கத்து வீட்டிலிருந்து இரவல் வாங்கி வந்த தட்டுகள் மீதும் சந்தேகத்துடன் படிந்தது.

"இன்று நம் வீட்டுக்கு யாராவது வரப்போகிறார்களா அண்ணி!" என்று கேட்டாள்.

"ஆமாம். நீ இன்னும் அப்படியே மரம்போல் நிற்கிறாயே. அவர் கள் வரும் நேரம் ஆகிவிட்டது. சீக்கிரமாய் போய் புடவையை மாற்றிக்கொள்."

"யாரு அண்ணி! அவங்க?"

"திருமண விஷயமாய் பேச வரப்போகிறார்கள். போதுமா?"

அதைக் கேட்டதும் ஹேமாவின் முகம் களை இழந்தது.

கிளை நூலகர், காத்துக்குடி வடக்கு.

"என்ன? மறுபடியும் யாராவது என்னை பெண் பார்க்க வரப் போகிறார்களா?" - பொறுமையின்றி கேட்டாள் ஹேமா.

"இல்லை தாயே!... இல்லை. இன்றுடன் நம் கஷ்டங்கள் எல்லாம் தீர்ந்துவிட்டன. இது பெண் பார்க்கும் படலம் இல்லை. நிச்சயதாம் பூலம். இன்று மாலை நாகபூஷணம் அவர்கள் தன்னுடைய மகனை யும் அழைத்துக்கொண்டு வருகிறார். வெற்றிலைபாக்கு தட்டை மாற்றிக்கொண்டு கையோடு லக்ன பத்திரிகையை எழுதப் போகிறார் கள். நீ இன்னும் இப்படியே இருந்தாயானால் அவர்கள் வந்து விடுவார்கள். உன்னை இந்தக் கோலத்தில் உன் அண்ணன் பார்த் தால் என்னைக்கொன்று போட்டுவிடுவார். குறைந்த பட்சம் கல்யா ணத்தை பார்க்கும் வரையிலாவது என்னை வாழவிடு தாயே!" ரங்க நாயகி ஹேமாவை பரிகாசம் செய்துகொண்டே சமையல் அறைவிட்டு வெளியேறப்போனாள்.

"அண்ணி! ஹேமா மிரண்டு போனவள்போல் ரங்கநாயகியின் கையை பற்றிக்கொண்டாள்.

"அட கடவுளே! இப்போ என்னுடன் வாதம் புரியப்போகிறாயா என்ன?"

"இன்று இந்த மாதிரி விழா இருக்கு என்று என்னிடம் ஏன் சொல்லவில்லை அண்ணி!" கண்ணீர் மல்க கேட்டாள் ஹேமா.

ரங்கநாயகி சுரீரென்று கோபம் வந்தது. "இப்போ சொல்கிறேன். போதுமா? போய் வேலையை பாரு."

"எனக்கு என்று ஒரு விருப்பம் இருக்கக் கூடாதா? என் அபிப்ரா யத்தை கேட்க வேண்டாமா?"

அந்த விஷயத்தை உன் அண்ணனிடமே கேட்டுக்கொள்.

"ஆனால் .. .. அண்ணி .. .. நான் .. .. வந்து .. .. எனக்கு .. .. "

"எனக்குத் தெரியும் ஹேமா. உனக்கு இந்த வரனை பிடிக்க வில்லை. அதைத்தானே சொல்ல வந்தாய். ரமேஷைத் தவிர உனக்கு யாரையும் பிடிக்கப்போவதில்லை. அதுவும் எனக்குத் தெரியும். ஆனால் ரமேஷுடன் உன் திருமணத்திற்கு உன் அண்ணன் ஒரு நாளும் சம்மதிக்கப் போவதில்லை. உன் விருப்பு வெறுப்புகளை பொருட்படுத்தப் போவதில்லை என்றும், இந்த வரனை நிச்சயம்

செய்யப் போவதாகவும் உன் அண்ணா உன்னிடம் சொல்லச் சொன்னார். அண்ணன், அண்ணியிடம் கொஞ்சமாவது மதிப்பு வைத்திருந்தால் இனிமேல் வாயைத் திறக்காதே."

ரங்கநாயகி சொல்லும்போதே வாசலில் கார் வந்து நின்ற சத்தம் கேட்டது.

"அவர்கள் வந்துவிட்டார்கள்" போலிருக்கு ரங்கநாயகி ஹேமாவின் கைகளை விடுவித்துக்கொண்டு வாசலுக்கு ஓடினாள்.

ஹேமா சற்சிலையாக நின்றுவிட்டாள். அப்படியே கொல்லைக் கதவு வழியாய் யாருக்கும் தெரியாமல் ஓடிவிடலாமா என்று ஒரு நிமிடம் தோன்றியது. ஆனால் கால்கள் தரையில் பதிந்துவிட்டது போல் நகர முடியவில்லை. அவர்கள் தாம்பூலம் மாற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் வருகிறார்கள். தானோ திருமணமே முடிந்து விட்டதாக சொல்லப்போகிறாள். பயம் என்றால் என்னவென்று ஒரு நாளும் அறிந்திராத ஹேமா அந்த நிமிடம் சுழல் காற்றில் சிக்கிய சருகைப்போல் நடுங்கிவிட்டாள். எத்தனை பெரிய தவறு செய்து விட்டாள்? ரமேஷையும் உடன் அழைத்து வந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்?

முன் அறையிலிருந்து புதிதாக பேச்சுக்குரல் கேட்டுக் கொண்டிருந்தது.

"பெண்ணை சிக்கரமாய் அழைத்துக்கொண்டு வாங்க. நல்ல நேரம் கடந்துபோகும் முன் தட்டை மாற்றிக்கொள்ள வேண்டும்." - எச்சரிப்பது போல் சொன்னார் சாஸ்திரிகள்.

"இதோ அழைத்துக்கொண்டு வருகிறேன்." - ரங்கநாயகி வேகமாக உள்ளே சென்றாள். அவள் பின்னாடியே ஜெகதாம்பாளும், சுசிலா மாமியும் வந்தார்கள். ரங்கநாயகி ஹேமாவை தலை முதல் கால் வரை பரிசிலிப்பது போல் பார்த்தாள்.

"புடவை நன்றாகத்தான் இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே முன் நெற்றியில் விழுந்துகொண்டிருந்த தலைமுடியை சரி செய்துவிட்டு, படுக்கை அறைக்கு ஓடிப்போய் முகப்பவுடரை கொஞ்சம் கையில் போட்டுக்கொண்டு வந்தாள். மளமளவென்று ஹேமாவின் கன்னங்களில் பவுடரை பூசிவிட்டாள்.

"இன்னுமா தயாராகவில்லை? சீக்கிரமாய் அழைத்துக்கொண்டு வா" சேஷாத்ரி உள்ளே வந்துகொண்டே சொன்னான்.

"அண்ணா! தெளிவற்ற குரலில் ஹேமா அழைத்தாள்."

"என்ன ஹேமா! சேஷாத்ரி தங்கையின் அருகில் வந்தான். அவன் கண்களில் தென்பட்ட அன்பு, பாசம் ஹேமாவை ஒருநிமிடம் ஊமையாக்கிவிட்டன. சொல்ல நினைத்த வார்த்தைகள் தடைப் பட்டுவிட்டது போல் நாக்கின் நுனியிலேயே நின்றுவிட்டன."

செதுக்கி வைத்த சிலையை போல், குனிந்த தலையுடன், தடுமாறும் நடையுடன் முன் அறைக்கு வந்து தன் எதிரில் அமர்ந்து கொண்ட ஹேமாவை சுதாகர் அன்பு ததும்பும் பார்வையுடன் பார்த்துக்கொண்டிருந்தான். அமரிக்கையாய் உட்கார்ந்திருக்கும் அந்த பாங்கு! தோளைச் சுற்றி தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு விரலால் தலைப்பை பற்றியிருந்த நளினம்! சுதாகரின் கண்களுக்கு ஹேமா மேலும் அழகாக தென்பட்டாள்.

மாதுரி வீட்டில் இந்தப் பெண்ணை பார்த்த நேரம் எப்படிப் பட்ட சுபமுஹூர்த்தமோ தெரியவில்லை. அன்றிலிருந்து ஹேமாவின் முகம் அவன் இதயத்தில் ஆழமாய் பதிந்துவிட்டது.

சாஸ்திரிகள் மந்திரங்கள் வேகமாய் சொல்லி முடித்தார். அங்கேயிருந்த பெரியவர்கள் எல்லோரும் சுதாகர், ஹேமாவின் தலைகளில் அட்சதையை போட்டார்கள். சுமங்கலியாக இருந்த பெண் ஒருத்தி ஹேமாவின் நெற்றியில் குங்குமத்தை வைத்துவிட்டு, பனாரஸ் பட்டு புடவை, பழங்கள், பூக்கள் வைத்திருந்த தட்டை கைகளில் வைத்தாள்.

"மோதிரத்தை போட்டுவிடுங்கள்" சாஸ்திரிகள் சுதாகரிடம் சொன்னார்.

"புதுப்புடவையை கட்டிக்கொண்டு வரட்டும்." சுதாகர் முணு முணுப்பது போல் சொன்னான்.

அதைக் கேட்டதும் நாகபூஷணம் உரத்தக் குரலில் சிரித்து விட்டார். அந்தச் சிரிப்பு சூழ்நிலைக்கு பொருத்தமாக இல்லாவிட்டாலும் சேஷாத்ரியும், மற்றவர்களும் அவருடன் சேர்ந்து சிரித்தார்கள்.

"மோதிரத்தை அணிவித்த பிறகுகூட புடவையை மாற்றிக் கொள்ளலாம்." சாஸ்திரிகள் தான் சொல்வதும் சரி என்பதுபோல் சொன்னார்.

"பையன் சொன்னதுபோல் ஆகட்டும் சாஸ்திரிகளே" எதுவாக இருந்தாலும் ஒன்றுதானே என்றார் நாகபூஷணம்.

அவருடைய கண்கள் ஹேமாவை எடைபோடுவது போல் பார்த்துக்கொண்டிருந்தன. கண்ணும், மூக்கும் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் அழகு என்று சொல்லமுடியாது. அவருடைய மனதில் மற்றொருமுறை ஏமாற்றம் சூழந்துக்கொண்டது. இந்த நிச்சிய தாம்பூலம் எவ்வளவு ஆடம்பரமாக நடந்திருக்க வேண்டியது? கடைக் கண்ணால் மகன் இருந்த பக்கம் பார்த்தார். சுதாகரின் முகம் மகிழ்ச்சியால் மின்னிக் கொண்டிருந்தது. மகன் இந்த அளவுக்கு சந்தோஷமாக இருந்து இதற்குமுன் எப்போதும் பார்த்ததில்லை.

சுசிலா மாமி ஹேமாவின் தோளை பற்றிக்கொண்டு உள்ளே அழைத்துச் சென்றாள். ரங்கநாயகி ஏதோ வேலையால் சமையல் அறைக்குள் சென்றாள்.

"ஒருமுறை அண்ணியை வரச்சொல்ல முடியுமா?" பற்களை இறுக கடித்துக்கொண்டே சொன்னாள் ஹேமா

"இதோ.... வரச்சொல்கிறேன்." சுசிலா மாமி உள்ளே சென்றாள்.

"என்ன ஹேமா?" என்று கேட்டுக்கொண்டே ரங்கநாயகி வந்தாள்.

ஹேமா கையில் உள்ள புடவையை பக்கத்தில் இருந்த சுட்டில் மீது வீசிவிட்டு இரண்டடிகள் முன்னால் வைத்து "அண்ணி! என்று ரங்கநாயகியின் கழுத்தைச் சுற்றிலும் கைகளை போட்டு ஹோ வென்று கதறினாள். "அண்ணி! இன்று மதியம் நானும் ரமேஷும் பதிவுத் திருமணம் செய்துகொண்டோம்." அழுகையினூடே எப்படியோ சொல்லிவிட்டாள்.

ரங்கநாயகி தன் கழுத்தைச் சுற்றியிருந்த ஹேமாவின் கைகளை வலுக்கட்டாயமாய் பிரித்தாள்.

"என்ன?"! என்றாள்.

"ஆமாம் அண்ணி! சத்தியமாகத்தான் சொல்கிறேன். ரமேஷுடன் என் திருமணம் முடிந்துவிட்டது. இந்த நிச்சயதாம்பூலம் நடைபெறக் கூடாது. அண்ணாவிடம் சொல்லிவிடு."

ரங்கநாயகி வாயடைத்துப் போனவளாய் கண்களை அகலமாய் விரித்து ஹேமாவையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

வியப்பின் மிகுதியால் சுசிலா மாமி மூக்கின்மீது விரலை வைத்தாள்.

"ஒருபக்கம் நேரமாகிக் கொண்டே போகிறது. இன்னுமா தாமதம்?" உள்ளே வந்துகொண்டே சேஷாத்ரி சொன்னான்.

அழுதுகொண்டிருந்த ஹேமாவைப் பார்த்ததும் பதட்டமடைந்தான். "என்ன? என்ன ஆச்சு? ஹேமா ஏன் அழுது கொண்டிருக்கிறாள்?"

ரங்கநாயகி ஒருநிமிடம் ஹேமாவையும், கணவனையும் மாறி மாறி குழப்பமாய் பார்த்தாள். பிறகு சட்டென்று சுய உணர்வு பெற்றவளாய் கணவரின் கையை பற்றிக்கொண்டு "ஒரு நிமிடம் இப்படி வாங்க" என்று சொல்லிக்கொண்டே சமையல் அறைப்பக்கம் இழுத்துச்சென்றாள்.

ஐந்து நிமிடங்கள் கழித்து சேஷாத்ரி வேகமாய் ஹேமா இருந்த அறைக்கு வந்தான். அவன் கண்கள் நெருப்பை உமிழ்ந்து கொண்டிருந்தன.

"ஹேமா! உன் அண்ணி சொன்னது உண்மைதானா?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்று சொல்ல நினைத்தாள். ஆனால் வாயிலிருந்து வார்த்தை வெளியில்வர மறுத்தது. வெறுமே தலையை அசைத்தாள்.

"யாரைக் கேட்டுக்கொண்டு இந்தக் காரியம் செய்தாய்? என்னிடம் சொல்ல வேண்டாமா? நான் செத்துவிட்டேன் என்று நினைத்தாயா?" - சேஷாத்ரியின் குரல் அதட்டுவதுபோல் ஒலித்தது. கை காற்றில் எழும்பி ஹேமாவின் கன்னத்தில் வேகமாய் இறங்கியது. நல்லது கெட்டது யோசிக்கும் நிலையில் அவன் இருக்கவில்லை. ஹேமாவின் நீளமான பின்னலை இழுத்துப் பிடித்து மேலும் அடிக்கப் போனான். ரங்கநாயகி சட்டென்று கணவரின் கையைப்

பிடித்துத் தடுத்தாள். உங்களுக்கு மூளை கலங்கி விட்டதா என்ன? முதலில் அவர்களுக்கு எப்படி சொல்வது என்று பாருங்கள் எச்சரிப்பது போல் சொன்னாள்.

சேஷாத்ரி அப்படியே தளர்ந்து விட்டான். கட்டில் விளிம்பில் சரிந்து உட்கார்ந்து கொண்டான். "எனக்குத் தெரியவில்லை ரங்கா எப்படி சொல்ல வேண்டுமோ நீயே சொல்லிக்கொள். வந்தவர் சாதாரணப்பட்டவர் இல்லை. நாகபூஷணம்!! நமக்கு எதுவும் தெரியாது என்று சொன்னாலும் நம்பமாட்டார். வேண்டுமென்றே நாம் இப்படிச் செய்தோம் என்று சொல்லுவார்."

முன் அறையில் கையில் இருந்த மோதிரத்தை அப்படியும் இப்படியுமாய் சுழற்றிக்கொண்டிருந்த சுதாகருக்கு நிமிடம் ஒரு யுகமாய் தோன்றியது. நிமிடத்திற்கு ஒருமுறை உள்வாசல் பகுதி பார்த்து விட்டு மறுபடியும் தயக்கமாய் தரையில் பார்வையை பதித்தான். ஜரிகைப் பூக்கள் நிறைந்த பனாரஸ் பட்டுப்புடவையை கட்டிக் கொண்டு குனிந்த தலையுடன் அப்சரஸ் போல் அறையினுள் காலடி எடுத்து வைக்கப்போகும் ஹேமாவுக்காக ஆர்வத்துடன் காத்திருந்தான். ஹேமா அந்தப் புடவையை கட்டிக் கொண்டால் அந்தப் புடவைக்கே அழகு கூடும் என்று அவனுக்குத் தெரியும்.

"அதற்குள் ரங்கநாயகி ஹாலுக்குள் எட்டிப் பார்த்து சாஸ்திரிகளிடம், ஒரு நிமிடம் இப்படி வருகிறீர்களா?"- வேண்டுவது போல் சொன்னாள். அவர் எழுந்து கொண்டு உள்ளே போனார்.

நாகபூஷணத்தின் கண்களில் எரிச்சலும், கோபமும் எட்டிப் பார்த்தன. தாமதம் ஆக ஆக அவருக்கு உடல் பற்றி எரிவது போல் இருந்தது. தன்னுடைய ஸ்டேடஸை கண்டு அவர்கள் மிரண்டு போகவில்லை. ஏதோ தினமும் வந்து போகிறவர்கள் போல் நடந்து கிறார்கள். நாகபூஷணம் எதையும் பொறுத்துக் கொள்வார். ஆனால் தன் மதிப்பை உணராத மனிதர்களை ஒரு நிமிடம் கூட சகித்துக் கொள்ளமாட்டார். அதிலும் தன் அந்தஸ்துக்கு கொஞ்சம் கூட பொருத்தமில்லாத இந்த இடம் முதலிலிருந்தே அவருக்குப் பிடிக்க வில்லை.

அதற்குள் சாஸ்திரிகள் யாரோ துரத்தி வருவதுபோல் வேகமாய்

வெளியில் வந்தார்.

"என்னய்யா இன்னும் தாமதம்! நல்ல நேரம் தாண்டிப் போகக் கூடாது என்று நீங்கள்தானே...." அவர் வார்த்தைகளை முடிக்கும் முன்பே சாஸ்திரிகள் அவர் காதருகில் குனிந்து ரகசியமாக ஏதோ சொன்னார்.

"ச்சி..ச்சி வாயை மூடு" - என்றார் நாகபூஷணம்.

"அய்யா! அவர்கள் சொல்லச் சொன்னதை அப்படியே உங்களிடம் சொல்லிவிட்டேன். அவ்வளவுதான்"

"சேஷாத்ரி எங்கே? அவனைக் கூப்பிடு முதலில்" - சரேலென்று நாற்காலியிலிருந்து எழுந்து கொண்டே சுத்தினார்.

"டாடீ !"

ஜிவு ஜிவு என்று இருந்த தந்தையின் முகத்தைப் பார்த்ததும் சுதாகர் பதட்டமடைந்தான். நடக்கக்கூடாதது எதுவோ நடந்து விட்டது என்று அவன் மனம் கலவரமடைந்தது.

சாஸ்திரிகள் மறுபடியும் உள்ளே போனார்.

சேஷாத்ரிக்கு பதிலாக ரங்கநாயகி வெளியில் வந்தாள்.

"என்னம்மா? என்ன விஷயம்? அது உண்மைதானா?" - சுற்றி வளைக்காமல் நேராக கேட்டுவிட்டார் நாகபூஷணம்.

ரங்கநாயகி இரண்டு கைகளையும் கூப்பினாள்.

"மாமா! நீங்க வயதில் பெரியவர். எங்களுக்கு தந்தையை போன்றவர். எங்களை மன்னிக்க வேண்டும். இந்த அவமானம் உங்களுடையது இல்லை. எங்களுடையது. இந்த விஷயம் எங்களுக்கு முன்னாடியே தெரிந்திருந்தால் விவகாரத்தை இந்த அளவுக்கு வந்திருக்கவிடமாட்டோம். எங்களுடைய தகுதி குறைவாக இருந்ததைகூட பொருட்படுத்தாமல் எங்கள் வீட்டுப்பெண்ணை தேர்ந்து எடுத்தீர்கள். ஆனால் அத்தனை அதிர்ஷ்டம் எங்களுக்கு இல்லாமல் போனதோடு உங்களுக்கு வருத்தம் ஏற்படும் விதமாக ஆகிவிட்டது" - வேண்டுவது போல் சொன்னாள்.

ஒரு நிமிடம் கவனமாக பார்த்தாள் ரங்கநாயகி. சுதாகரிடம் மன பூர்வமாக மன்னிப்பு கேட்டுக்கொள்வது போல் தோன்றியது.

ரங்கநாயகியின் வேண்டுகோள் நிறைந்த சொற்களை கேட்டபிறகு நாகபூஷணத்தின் கோபம் கொஞ்சம் குறைந்தது. அவருடைய கண்களில் கொடூரமான மகிழ்ச்சி மின்னியதை ரங்கநாயகி கவனித்து விட்டாள். அவருக்கு இந்த சம்பந்தத்தில் விருப்பமில்லை என்று மற்றொருமுறை உறுதியாகிவிட்டது.

"சரி, போகலாம். உன் கணவர் எங்கே?" என்று கேட்டார்.

ரங்கநாயகி உள்ளே போனாள்.

சுதாகர் நாற்காலியிலிருந்து எழுந்துகொண்டே "டாடீ!" என்றான்.

நாகபூஷணம் மகன் அருகில் வந்து தோளில் கையை பதித்தார்.

"சுதா! இந்த இடம் இனி நமக்கு சரிப்பட்டு வராது. வீட்டுக்கு போகலாம். வா."

"டாடீ!" சுதாகர் கண்களில் ஆயிரம் சந்தேகங்கள். கேள்விகள்.

"அந்தப்பெண் யாரையோ பதிவுத்திருமணம்" என்றவர், சாஸ்திரிகள் பக்கம் திரும்பி, "என்னப்பா? திருமணம் செய்துகொள்ளப் போகிறாளா? இல்லை செய்துகொண்டு விட்டாளா?" என்று கேட்டார்.

"செய்துகொண்டு விட்டாளாம்".

"பொய்" சுதாகரின் முகம் வெளிறிப் போய்விட்டது.

அதற்குள் சேஷாத்ரி அங்கே வந்தான். பத்துநாட்கள் ஜ்வரத்தில் எழுந்தவன்போல் தென்பட்டான். அவனைப் பார்த்ததும் தான் கேள்விப்பட்ட விஷயம் பொய் இல்லை. உண்மைதான் என்று சுதாகருக்குப் புரிந்தது.

சேஷாத்ரி நேராக வந்து நாகபூஷணத்தின் கைகளை பற்றிக் கொண்டான். "மாமா! இது உங்கள் கைகள் இல்லை. கால்கள் என்று நினைத்துக்கொள்ளுங்கள்." தயவுசெய்து எங்களை மன்னித்து விடுங்கள் என்றான்.

நாகபூஷணம் கைகளை உதறிக்கொள்வதுபோல் விடுவித்துக் கொண்டார்.

"என்ன செய்ய முடியும்? நீயும், நானும் வருத்தப்பட்டு கொண்டால் போதுமா? இந்த இளைய தலைமுறையே இப்படித்தான். எப்போதும் அவர்களுடைய சுகம், சந்தோஷத்தைத் தவிர வேறு எதுவும் அவர்களுக்கு லட்சியமில்லை. பெரியவர்களின் கஷ்டசுகங்களை, மரியாதை பற்றி கவலைப்படமாட்டார்கள்." இந்த வார்த்தைகளை சொல்லும்போது கடைக்கண்ணால் மகன் பக்கம் பார்த்தார். அந்த பார்வையில் 'இது உனக்கும் பொருந்தும்' என்ற கருத்து மேலோங்கியிருந்தது.

ஆனால் எதையும் கவனிக்கும் நிலையில் சுதாகர் இருக்கவில்லை. ஏமாற்றம் என்பது மனிதனுக்கு எவ்வளவு வேதனையைத் தரும் என்று முதல் முறையாய் உணர்ந்துகொண்டிருந்தான். கண் எதிரில் தெரிந்த சுவர்க்கம் அதற்குள் மறைந்துவிட்டது போல் இருந்தது.

நாகபூஷணம் மகனின் தோளில் லேசாக தட்டிவிட்டு "வா போகலாம்" என்றார்.

"டாடீ!" சுதாகரின் கண்களில் வேதனை சுழன்று கொண்டிருந்தது.

"கிளம்பு சுதா!" என்றவர் விரலால் மீசையை சரிசெய்து கொண்டே, "அதிர்ஷ்ட தேவதை கதவைத் தட்டினால் போதுமா? உடனே வந்து கதவைத் திறக்கும் சுழி இருக்க வேண்டாமா?" என்றார்.

சமாதானப்படுத்துவதுபோல் அவர் சொன்னாலும், சேஷாத்ரி, ரங்கநாயகியின் இதயங்களை அந்த சொற்கள் பலமாக தாக்கின.

ஜெகதாம்பாளும், சுசீலா மாமியும் கற்சிலையாக வாசற்படியருகில் நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

சுதாகரும், நாகபூஷணமும் வாசற்படியைத் தாண்டும்போது ரங்கநாயகி "நில்லுங்கள். ஒருநிமிடம் இருங்கள்" என்று உரத்த குரலில் சொன்னாள்.

எல்லோரும் திடுக்கிட்டார்கள். ரங்கநாயகி வேகமாய் உள்ளே சென்று பனாரஸ் பட்டுப்புடவையை, ப்ளவுஸை எடுத்துவந்து சாஸ்திரிகளிடம் கொடுத்தாள். அந்தப் புடவையை பார்த்ததும் சுதாகரின் மனம் கலங்கிவிட்டது. "அந்தப் பெண்ணிடமே இருக்கட்

டும்" என்று சொல்ல நினைத்தான். அதற்குள், "கொண்டுபோய் காரில் வைத்து விடுங்கள்" என்று தந்தை சொல்லிவிட்டதால் எதுவும் பேசமுடியாமல் மௌனமாக இருந்துவிட்டான்.

எத்தனையோ கனவுகளுடன், மகிழ்ச்சியுடன் இந்த வீட்டு வாசற்படியில் காலடி எடுத்து வைத்த சுதாகர் இப்பொழுது எல்லையில்லாத வேதனையுடன், ஏமாற்றத்துடன் வெளியேறி காரில் உட்கார்ந்துகொண்டான்.

இத்தனை பெரிய அவமானத்தை சகித்துக்கொண்டு நாகபூஷணம் இப்படி அமைதியாக, மௌனமாக திரும்பிப்போனது எல்லோருக்கும் வியப்பை அளித்தது.

சேஷாத்ரி கார் அருகில் சென்று அவர்களை வழியனுப்பி வைத்தான்.

அன்று ஹேமாவுக்கு நிச்சயதாம்பூலம் நடக்கப்போகிறது என்றும், பெரிய இடத்துப் பையன் மாப்பிள்ளையாக வரப் போகிறான் என்றும் அந்தத் தெருவில் இருப்பவர்களுக்கு முன்னாடியே தெரிந்து விட்டது. நாகபூஷணத்தின் கார் தெருவுக்குள் நுழையும்போதே எல்லோரும் மாப்பிள்ளையை பார்க்கும் ஆர்வத்துடன் வாசலுக்கு வந்துவிட்டார்கள்.

விலை உயர்ந்த காரையும், அழகாக மிடுக்குடன் இறங்கிய சுதாகரை பார்த்தபோது அவர்களுடைய இதயங்களில் பொறாமை தீயாக எழும்பியது. "நம் வீட்டிலும் திருமண வயதில் பெண்கள் இருக்கிறார்களே. அவர்களுக்கு இந்த அதிர்ஷ்டம் ஏது?" என்று பெண்களை பெற்று இருந்த தாய்மார்கள் உள்ளூர வருத்தப்பட்டுக் கொண்டார்கள்.

எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கும் போதே நாகபூஷணத்தின் கார் கிளம்பிப் போய்விட்டது.

சேஷாத்ரியின் இதயம் ஆயிரம் துண்டுகளாகிவிட்டதுபோல் வேதனையாக இருந்தது. அவர் சொன்னது உண்மைதான். அதிர்ஷ்டம் வந்து கதவைத் தட்டினால் போதுமா? அதை கைப்பற்றும் சுழி இருக்க வேண்டாமா? சுதாகர் மாப்பிள்ளையாக வராமல் இருந்தால், ஹேமாவும் மற்ற பெண்களைப்போல் சாதாரண பெண்ணாகத்

தான் இருந்திருப்பாள். ஆனால் ஐஸ்வரியம் அவளைத் தேடிக் கொண்டுவந்தும் அதைப் பெற்றுக்கொள்ள முடியாத முட்டாளாக இருந்துவிட்டாள். துரதிர்ஷ்டம் பிடித்தவள். சேஷாத்ரி பற்களை நறநறவென்று கடித்தான்.

உள்ளே ஜெகதாம்பாள் ஹேமாவின் கன்னத்தை இழைத்துக் கொண்டிருந்தாள். "தரித்திரம் பிடித்தவளே" உனக்கு ஏன் இந்த புத்தி? உன் அண்ணனிடம் ஒரு வார்த்தைகூட சொல்லாமல் திருமணம் செய்துகொண்டு விட்டாயா? எத்தனை துணிச்சல் உனக்கு? ராஜா போன்ற பையனை விட்டுவிட்டு பிச்சைக்காரனை கைப்பிடித்து இருக்கிறாயே? உன் சுண்ண என்ன குருடா? அவன்தான் உன் மனதில் இந்த எண்ணத்தை தூண்டிவிட்டிருப்பான். காதல் வசனங்களை பேசி உன்னை வலையில் போட்டுக் கொண்டு விட்டான்."

"என்ன ஹேமா? மற்ற பெண்களைவிட புத்திசாலி என்று உன்னை நினைத்திருந்தேனே? உனக்கு அப்படி ஒரு எண்ணம் இருந்திருந்தால் உன் அண்ணியிடமாவது சொல்லியிருக்கலாமே. குறைந்த பட்சம் என்னிடமாவது ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? உன் அண்ணனால் மறுபடியும் தலை நிமிர்ந்து நடக்கமுடியுமா?" சுசிலா மாமி தாழ்ந்த குரலில் கூடிந்து கொண்டாள்.

ஹேமா தலையை குனிந்து, மௌனமாய் பார்வையை தரையில் பதித்து இருந்தாள்.

இன்று இதுபோல் நிச்சயதாம்பூலம் நடக்கப் போகிறதென்று அவளுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் முன்னாடியே அண்ணியிடம் சொல்லியிருப்பாள். இந்த வார்த்தையை இப்போ தான் சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள்.

ரங்கநாயகியும், சேஷாத்ரியும் உள்ளே வந்தார்கள்.

இந்தச் சமயத்தில் ரமேஷ் இங்கே வராமல் இருக்க வேண்டும் என்று ஹேமா மனதிலேயே கடவுளை வேண்டிக்கொண்டாள்.

அவளுடைய வேண்டுகோள் கடவுளின் செவிகளுக்கு எட்டவில்லை போலும். வீட்டின் முன்னால் டாக்ஸி வந்து நின்றது. அதி

லிருந்து ரமேஷ் இறங்கினான். அவனைப் பார்த்ததும் ரங்கநாயகி பதட்டமடைந்துவிட்டாள்.

சட்டென்று போய் வாசற்கதவைச் சாத்திவிட்டு அவனை உள்ளே வரவிடாமல் செய்யவேண்டும் என்று வெறித்தனமான கோபம் வந்தது.

படுக்கை அறையினுள் நுழையப்போன சேஷாத்ரி கார் வந்து நின்ற சத்தம் கேட்டு பின்னால் திரும்பிப் பார்த்தான்.

ரமேஷைப் பார்த்ததும் அவனுக்கு உடல் முழுவதும் பற்றி எரிவது போல் இருந்தது. ரமேஷ் உள்ளே வந்தானோ இல்லையோ, அடியுண்ட புலியை போல் வேகமாய் தாக்கினான்.

"திருட்டு ராஸ்கல்! உன்னை நம்பி வீட்டுக்குள் அனுமதித்ததற்கு நீ செய்த காரியம் இதுதானா? எல்லோரும் உன்னை நாயைபோல் துரத்தி அடித்தால், ஒரு மனிதனாக உன்னை மதித்ததற்கு எனக்கு இந்த தண்டனையா? உன்னைக் கொன்றால்தான் என் மனம் அமைதி அடையும். என் உடம்பில் உயிர் இருக்கும்வரையில் என் தங்கை உன்னோடு வரமாட்டாள்." சேஷாத்ரி உச்சஸ்தாயியில் சத்திக்கொண்டே இரண்டு கைகளாலும் ரமேஷை மாறி மாறி அடித்துக் கொண்டிருந்தான்.

ஒருநிமிடம் ரங்கநாயகி செயல் மறந்தவள்போல் நின்றுவிட்டாள்.

ரமேஷ் நல்ல உடல்வலிமையும், ஆரோக்கியமும் உள்ளவன். அவன் மட்டும் எதிர்த்து இருந்தால் சேஷாத்ரி அவன் கையில் நலிந்து போயிருப்பான். ஆனால் வேடிக்கை என்னவென்றால், ஏனோ ரமேஷ் கொஞ்சம்கூட எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. தந்தையின் கோபத்தை தலைகுனிந்து ஏற்றுக்கொள்ளும் மகனைபோல் மௌனமாய் இருந்துவிட்டான். அந்த நிமிடம் அந்த வெசவுகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கும்போது, அவன் முகத்தில் தென்பட்ட உணர்ச்சிகளை வெளிப்படுத்த எந்த மொழியும் இல்லை.

ரமேஷ் எதிர்த்து இருந்தால், பதிலுக்கு ஏதாவது சொல்லியிருந்தால் ரங்கநாயகி தானும் நறுக்கென்று அவனை நாலு கேள்வி கேட்டிருப்பாள். ஆனால் தவறு முழுவதும் தன்னுடையது தான் என்பது போல் அவன் மௌனமாய் இருந்ததை பார்த்தபோது என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பிப் போனாள்.

சேஷாத்ரி ஹிஸ்டீரியா வந்தவன்போல் ரமேஷுக்கு ஒரு முடிவு கட்டிவிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பவன்போல் இருந்தது.

ரங்கநாயகி திடீரென்று சுயஉணர்வு பெற்றவளாய் இரண்டே எட்டில் கணவனின் அருகில் சென்று ரமேஷிடமிருந்து அவன் கைகளை வலுக்கட்டாயமாக விடுவித்தாள்.

"உங்களுக்கு மூளை கலங்கிவிட்டதா? எல்லோரும் எப்படி கும்பலாய் கூடிவிட்டார்கள் என்று பாருங்கள்?" என்று சொல்லிக் கொண்டே சேஷாத்ரியின் கையை பிடித்து கிட்டத்தட்ட இழுத்துக் கொண்டே போய் படுக்கை அறைக்குள் தள்ளிவிட்டு உடனே கதவைச்சாத்திவிட்டு வெளிதாழ்பாளையும் போட்டுவிட்டாள். ரங்கநாயகி செய்த இந்த காரியத்தைக் கண்டு அங்கிருந்த எல்லோரும் ஒருநிமிடம் திகைத்துப்போய் நின்றுவிட்டார்கள்.

வலையில் சிக்கிய காட்டு விலங்கைப் போல் சேஷாத்ரி கதவுகளை காலால் எட்டி உதைத்துக் கொண்டிருந்தான்.

"ரங்கா! சுதவைத்திற! உன்னைத்தான்! இன்னிக்கு அவனைக் கொல்லாமல் விடமாட்டேன்."

ஏற்கனவே இந்த சச்சரவை கேட்டு அக்கம் பக்கத்தில் இருக்கும் மக்கள் எல்லோரும் கும்பலாக வாசலில் கூடிவிட்டார்கள்.

ஜெகதாம்பாள் ரமேஷ்மீது எரிந்துவிழுந்தாள். "நீயும் ஒரு மனிதன்தானா? உனக்குக் கொஞ்சமாவது நன்றி விசுவாசம் இருக்கா? சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்த குடும்பத்தில் புயலை உருவாக்கிவிட்டாயே. ஒன்றும் தெரியாது அப்பாவிப் பெண்ணை மயக்கி அவள் வாழ்க்கையில் நெருப்பை அள்ளிப்போடுவாயா? உன்னை வீட்டில் சேரவிடாதே என்று நான் முதலிலேயே சொன்னேன். இவர்கள் கேட்டால்தானே. நன்றாக பாடம் கற்பித்தாய். இவர்களுக்கு இந்த தண்டனை வேண்டியதுதான்."

"அம்மா! நீ வாயை மூடிக்கொள்." - ரங்கநாயகி சுத்தினாள்.

ஜெகதாம்பாள் குரலை மேலும் உயர்த்தினாள். "என்னையே வாயை மூடிக்கொள்ளச் சொல்கிறாயா? இப்படி சொல்லிச் சொல்லித்தான் இந்த நிலைக்குக் கொண்டு வந்தாய். நீ ஏதோ ரொம்ப புத்திசாலி என்று உன்னைப்பற்றி நினைத்துக்கொண்டு

இருக்கிறாய். நாத்தனாரின் திருமணத்தை நடத்திய லட்சணத்தை பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம்." - நீட்டி முழக்கினாள்.

அறையின் ஒரு மூலையில் உயிரற்ற பதுமையை போல் நின்றிருந்த ஹேமாவை, ரங்கநாயகி தோளைப்பற்றி இழுத்துவந்து ரமேஷ் பக்கம் தள்ளினாள் இரண்டு கைகளையும் கூப்பிக்கொண்டே, "ரமேஷ்! உனக்கும், உன் பெரியவர்களுக்கும் கோடி நமஸ்காரம். நீங்கள் இருவரும் உடனே இந்த இடத்தை விட்டு போய்விட்டால் நான் ரொம்ப சந்தோஷப்படுவேன். இதுவரைக்கும் எங்கள் குடும்பத்திற்கு நேர்ந்த அவமானம் போதும்" என்றாள்.

ஜெகதாம்பாள் வேகமாய் முன்னால் வந்தாள். "உனக்கு பைத்தியம் பிடித்துவிட்டதா ரங்கா? அவன் அவளுடன் ஒழுங்காக குடித்தனம் நடத்துவான் என்று நினைத்துக்கொண்டு இருக்கிறாயா? இரண்டே நாட்களில் மோகம் தீர்ந்ததும் நடுத்தெருவில் விட்டுவிட்டு போய்விடுவான். அவளுடைய வாழ்க்கை சீரழிந்து போய்விடும் பார்த்துக்கொண்டே இரு"

ரமேஷ் அந்த வெசவுகளை எல்லாம் ரொம்ப பொறுமையாய் சகித்துக்கொள்வது போல் அவன் முகமே பறைச்சாற்றிக் கொண்டிருந்தது.

ஹேமா பக்கம் திரும்பிக்கொண்டே கேட்டான். "ஹேமா! போகலாமா?"

ஹேமா தலையை அசைத்தாள். இருவரும் வெளியில் நடந்தார்கள். வாசலில் கும்பலாக கூடியிருந்த பெண்கள் இரண்டாகப் பிரிந்து வழிவிட்டார்கள். எல்லோரும் குசுகுசுவென்று பேசிக்கொள்வது தெளிவாய் காதில் விழுந்துக்கொண்டுதான் இருந்தது.

"என்ன நடந்தது?"

"இருவரும் திருமணம் செய்துக்கொண்டார்களாம்."

"என்ன? நிஜமாவா?"

"நிஜம்தான். அண்ணன் தங்கையை நன்றாக திட்டி, வீட்டை விட்டு வெளியில் போகச்சொல்லிவிட்டான்."

"சற்றுமுன் காரில் வேறு ஒரு பையன் வந்திருந்தானே?"

அவன் திரும்பிப்போய் விட்டான்."

வாசற்படியைத் தாண்டப்போன ஹேமா படி தடுக்கி விழப் போனாள். ரமேஷின் கை மின்னலைவிட வேகமாய் ஹேமாவின் தோள்களை பலமாக பற்றி நிறுத்தியது. அதன்பிறகும் அவன் ஹேமாவின் கையை விடவில்லை. தூக்கத்தில் நடப்பவள் போல் தடுமாறிய ஹேமாவை கீழே விழுந்து விடாமல் கவனமாய் நடத்தி அழைத்துக்சென்று டாக்ஸியில் உட்காரவைத்தான்.

டாக்ஸி கிளம்பிப் போனதும், ரங்கநாயகி வாசலில் கும்பலாய் நின்றிருந்தவர்களின் முகத்தில் அடிப்பதுபோல் படாரென்று கதவைச் சாத்தினாள்.

சேஷாத்ரி இன்னும் கத்திக்கொண்டே இருந்தான்.

"கதவைத் திறந்துவிடு ரங்கநாயகி. இது நன்றாக இல்லை." - சுசிலா மாமி நயமாகச் சொன்னாள்.

"உங்களுக்கு தெரியாது மாமி. கோபம் குறைந்தால் தவிர அவர் சாதாரண நிலைக்கு திரும்பமாட்டார்."

பத்து நிமிடங்கள் கழித்து ஜெகதாம்பாளும், சுசிலாமாமியும் கிளம்பிப்போய்விட்டார்கள். ரங்கநாயகி வாசற்கதவைத் தாள் போட்டுவிட்டு உள்ளே வந்தாள்.

"ரங்கா! உடனே கதவைத் திறக்கவில்லை என்றால் உன்னைக் கொன்றுவிடுவேன்." சேஷாத்ரி கத்தினான்.

"ரொம்ப நல்லது. நான் உள்ளேபோய் அரிவாள்மனையை சாணை திட்டி தயாராக வைக்கிறேன். அதுவரையில் சிகரெட் பிடித்துக்கொண்டு நிம்மதியாக இருங்கள்." ரங்கநாயகி சிகரெட் பெட்டியை ஜன்னல் வழியாக உள்ளே வீசிவிட்டு சமையல் அறைக்குள் சென்றாள்.

கொல்லைக் கதவு அருகிலும் சில பெண்கள் கும்பலாக நின்று கொண்டு உள்ளே எட்டிப்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ஒரு பெண்மணி ஆர்வத்தை அடக்கமுடியாமல் கேட்டுவிட்டாள். "ரங்கநாயகி! என்ன ரகளை? என்ன நடந்தது?"

"ஒன்றும் இல்லை. எங்க ஹேமாவுக்கு திருமணம் ஆகிவிட்டது.

நாங்கள் நடத்தவில்லை. செலவு வைக்காமல் அவளே செய்து கொண்டு விட்டாள் என்று என் கணவருக்கு கோபம் வந்துவிட்டது. அவ்வளவுதான். வேறு ஒன்றுமில்லை. நீங்கள் எல்லோரும்கொஞ் சம் வெளியில் போனால் நான் கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே போகிறேன். எனக்கு வீட்டில் வேலை இருக்கிறது" என்றாள்.

அவர்கள் போய்விட்டார்கள். ரங்கநாயகி கதவைச்சாத்திவிட்டு ஒரு நிமிடம் அங்கேயே நின்றுவிட்டாள். ஹேமா மட்டும் தன்னிடம் ஒரு வார்த்தை முன்னாடியே சொல்லியிருந்தால் இந்த ரகளையை தவிர்த்திருக்கலாம் இல்லையா? அந்த நிமிடம் ரங்கநாயகிக்கு ஹேமாவின் மீது என்றுமே வராத அளவுக்குக் கோபம் வந்தது.

7

"என்ன? சுதாகரா! நிச்சயதாம்பூலத்திற்காக வந்தது நாகபூஷணத் தின் மகன் சுதாகரா? நீ வேண்டாமென்று மறுத்தது அவனையா?" - சற்சிலையாகிவிட்ட ரமேஷ் கேட்டான்.

ஹேமாவை தன்னுடைய அறைக்கு அழைத்து வந்ததும், தான் வருவதற்குமுன் அவள் வீட்டில் என்ன நடந்தது? யார் யார் என்ன சொன்னார்கள் என்று விவரமாக சொல்லச் சொன்னான்.

ஹேமா பதில் சொல்லாமல் அழத்தொடங்கினாள். ரமேஷுக்கு அந்த நிமிடம் ஹேமாவை அருகில் இழுத்துக் கொண்டு ஆறுதல் சொல்ல வேண்டும் என்று தோன்றியது. ஆனால் இன்னதென்று புரியாத ஏதோ ஒரு தயக்கம் அவனை அந்த உரிமையை எடுத்துக் கொள்ள விடாமல் தடுத்து நிறுத்தியது.

ரமேஷ் நயமாக மேலும் மேலும் கேட்ட பிறகு ஹேமா அழு கையை கட்டுப்படுத்திக் கொண்டு நடந்ததை எல்லாம் எப்படியோ சொல்லி முடித்தாள். கடைசியில் தலையை குறுக்காக அசைத்துக் கொண்டே, "அண்ணன் அந்த வரனை முடித்துவிட வேண்டு மென்று விரும்புகிறார் என்று நினைத்தேனே தவிர, இப்படி என்னி டம் சொல்லாமல், என்னிடம் என் அபிப்பிராயத்தை கூட தெரிந்து கொள்ளாமல் நிச்சய தாம்பூலம் நடத்த ஏற்பாடு செய்வார் என்று நினைக்கவில்லை. இந்த விஷயம் எனக்கு முன்னாடியே தெரிந்திருந் தால் அண்ணாவுக்கு இந்த அவமானம் நேரும்விதமாக நடந்து

கொண்டிருக்கமாட்டேன். குறைந்த பட்சம் நம் திருமணத்தை சில நாட்கள் தள்ளிப் போட்டிருப்பேன். இல்லையா இதற்கு முன்பே முடிந்திருக்கும் விதமாக கவனம் செலுத்தியிருப்பேன்" என்றாள்.

ரமேஷ் சிலையாக நின்றுவிட்டான்.

சேஷாத்ரி திட்டிய திட்டுகளைவிட, ஜெகதாம்பாளின் வெசவு களைவிட, நாகபூஷணத்தின் மகன் ஹேமாவைத் திருமணம் செய்து கொள்ள முஹூர்த்தம் குறிப்பதற்காக வந்தான் என்ற விஷயம் அவனுக்கு ரொம்ப வேதனையைத் தந்தது. நாகபூஷணம் வேறு யாரோ இல்லை. அவன் வேலை பார்க்கும் துணிக்கடையின் முத லாளி. அவருக்கு பட்டணத்தில் நான்கைந்து துணிக்கடைகள் இருந் தன. அரிசி ஏற்றுமதி வியாபாரம் இருந்தது. இதைத் தவிர வட்டி வியாபாரமும் இருந்தது. அவரைப் பற்றி பலர் பல விதமாக பேசிக் கொள்வார்கள். இப்போ அவர் அனுபித்து வரும் ராஜ வாழ்க்கை யின் பின்னால் பல குடும்பங்கள் மௌனமாக நாசமாகிவிட்ட கதை இருக்கிறதென்று சொல்லிக்கொள்வார்கள். எது செய்தால் என்ன? எப்படி சம்பாதித்தால் என்ன? பத்து கைகளால் சம்பாதித்து ஐஸ்வரியம் என்ற நிழலில் அந்தஸ்து என்ற நவரத்தின சிம்மாசனத்தை பிரதிஷ்டை செய்து மகனை அதன்மீது உட்கார வைத்தார். அப்படிப்பட்ட தந்தைக்கு மகனாக பிறந்த சுதாகரைப் பார்க்கும்போது யாராக இருந்தாலும் சரி பொறாமை ஏற்படாமல் இருக்கமுடியாது.

ரமேஷ் சுதாகரை தொலைவிலிருந்து ஓரிருமுறை பார்த்திருக்கி றான். நிறம் சற்று கூடுதல் என்பதைத் தவிர அவனிடம் வேறு எந்த தனித்தன்மையும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயிரம் தலைகள் உடைய ஆதிசேஷனை போல் தந்தையின் நிழல் மட்டும் இல்லை என்றால் அவனும் மற்றவர்களைப் போல்தான். இருந்தால் மட்டும் என்ன?

"சுதாகர் எங்கள் கல்லூரியில் படிக்கிறான்."

"சுதாகர் நேற்று நாங்கள் போன அதே சினிமாவுக்கு வந்தான்."

"சுதாகர் கிரிக்கெட் மேட்சில் எங்கள் வரிசையில்தான் அமர்ந்தி ருந்தான்."

என்று சொல்லிக்கொண்டு அவனுடைய தரிசனம் கிடைப்பதே பெரும் பாக்கியமாய் நிறைய பேர் பேசிக்கொள்வதை அவன் பல முறை கேட்டிருக்கிறான்.

அஷ்ட ஐஸ்வரியங்கள் பெற்றிருப்பவனை வேண்டாமென்று மறுத்து, ஹேமா எதுவும் இல்லாத தன்னை ஏற்றுக் கொண்டதற்கு ஒருபக்கம் மகிழ்ச்சியாக இருந்தாலும், இன்னொரு பக்கம் இத்தனை உயர்வுக்கு தான் தகுதியானவன்தானா என்று பதட்டமாகவும் இருந்தது.

எந்த இளம்பெண்ணும் கணவனாக வர வேண்டும் என்று கனவு காணும் இளவரசனை போல் இருக்கும் சுதாகரை மறுத்த ஹேமாவை பற்றி என்ன நினைப்பது? இது முட்டாள்தனமா? இல்லை அப்பாவித்தனமா? இல்லை உலகம் என்றால் என்னவென்று தெரியாத குழந்தைத்தனமா?

அவனுக்கு திடீரென்று பயமாக இருந்தது.

ஒரு வேளை ஜெகதாம்பாள் சொன்ன வார்த்தைகள் பலித்து விடுமோ! நான்கு நாட்கள் போனதும் பிரமைகள் விலகி யதார்த்தத்தை சகித்துக் கொள்ளமுடியாமல், இந்தத் திருமணத்தை எதற்காக செய்து கொண்டேன் வருத்தப்பட மாட்டானே?

அவன் மனம் நிலைகுலைந்துவிட்டது. அந்த அறையில் அதற்குமேல் ஒரு நிமிடம்கூட இருக்கமுடியாதவன் போல், மூச்சுவிட முடியாமல் தடுமாறுவது போன்ற உணர்வு ஏற்பட்டது.

உடனே பழக்க தோஷத்தில் சிகரெட்டுக்காக சட்டைபையில் தேடினான். சிகரெட் பெட்டி காலியாக இருந்தது.

"ஹேமா! நான் கொஞ்சம் வெளியில் போய் விட்டு வருகிறேன், நீ முகம் அலம்பிக் கொண்டு, வேண்டுமானால் தலையை வாரி பின்னிக்கொள். உள்ளே சமையல் அறையில் வாளியில் தண்ணீர் இருக்கும்.டவலும் சோப்பும் அங்கேயே இருக்கும்.'' - மளமளவென்று சொன்னவன் மறு பேச்சுக்கு வாய்ப்பு தராமல் வெளியில் வந்துவிட்டான்."

தெருமுனையில் இருந்த பெட்டிக்கடையில் சிகரெட் பாக்கெட்டை வாங்கிக் கொணடான். ஆனால் உடனே வீட்டுக்கு திரும்ப வில்லை. பேப்பரை படிக்கும் சாக்கில் சற்றுநேரம் அங்கேயே நின்று கொண்டிருந்தான்.

எவ்வளவுதான் வேண்டாமென்று மறுத்தாலும் சுதாகர் விஷயம் அடிக்கடி அவனுக்கு நினைவு வந்து கொண்டிருந்தது. 'வேறு வரன்' என்று ஹேமா சொன்னபோது வேறு யாரோ என்று நினைத்திருந்தான்.

சேஷாத்ரியிடம் சொல்லாமல் ஹேமாவை திருமணம் செய்து கொள்வது சரியா இல்லையா என்ற குழப்பத்தில் இருந்த அவன் ஹேமாவிடம் அந்த வரனை பற்றியோ, அவர்கள் யாரென்றோ விவரங்களை கேட்டுக்கொள்ளவில்லை என்பதுதான் உண்மை. எத்தனை வேடிக்கை! சுதாகர் விஷயம் முன்னாடியே தெரிந்திருந்தால் ஹேமாவை கைப்பிடித்திருப்பானா? அவ்வளவு துணிச்சல் இருக்குமா? ஹேமாவுக்கும், சுதாகருக்கும் எப்படி அறிமுகம் ஆகியிருக்கும்? கோடிக்கணக்கில் சொத்து இருக்கும் நாகபூஷணத்திடம் சேஷாத்ரி தானாக போய் என் தங்கையை உங்க மகனுக்கு திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று கேட்டிருக்க முடியாது. அந்த வாய்ப்பே இல்லை.

நாகபூஷணம் ஒவ்வொரு விஷயத்திலும் தன்னுடைய அந்தஸ்தை பறைச்சாற்றிக் கொள்ளும் மனிதர். அந்தஸ்து விஷயத்திற்கு வந்தால் சேஷாத்ரி அவருடைய சுற்றுவட்டாரத்தில் ஒரு மைல் தொலைவில் கூட நிற்கமுடியாது. சுதாகரின் விருப்பத்தின் பெயரில்தான் இந்த பிரஸ்தாபனை வந்திருக்க வேண்டும். ரமேஷின் மனம் பொறாமையில் அக்னிக்குழம்பாய் தகித்தது. இந்த உலகில் எத்தனை இளம் பெண்கள் இருக்கிறார்கள்? சுதாகருக்கு ஹேமாதான் வேண்டியிருந்ததா? ஹேமாவை மனைவியாக அடைந்து விட்டதில் ஏற்பட்ட மகிழ்ச்சியும், பெருமையும் அவன் மனதை விட்டு கொஞ்சம் கொஞ்சமாய் வெளியேறிக் கொண்டிருந்தது.

ரமேஷ் அறைக்கு திரும்பிவந்தபோது வராண்டாவின் நிழலில் யாரோ உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

"யாரு?" என்று கேட்டான்.

"நான் தம்பி லெட்சுமி" என்று சொல்லிக்கொண்டே சற்று பருமனாய் இருந்த அந்த உருவம் முன்னால் வந்தது.

"நீயா!' என்ன இந்த நேரத்தில் இந்த பக்கம்?"

"என்ன தம்பி? இன்னிக்கு உனக்குக் கல்யாணம் என்றும், மாலையில் கல்யாண பெண் வீட்டுக்கு வருவாள் என்று சொன்னாயே?" லெட்சுமியின் குரல் நிஷ்டுரமாய் ஒலித்தது.

"வந்துவிட்டாளே. நீ இன்னும் பார்க்கவில்லையா?"

இல்லை என்பதுபோல் தலையை அசைத்தாள் லெட்சுமி.

"உள்ளே வா. நான் காட்டுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே போனான்.

அதற்குள் ஹேமா முகத்தை அலம்பி தலைவாரி பின்னிக் கொண்டு, நாற்காலியில் அமர்ந்து புத்தகத்தை புரட்டிக் கொண்டிருந்தாள்.

"இவள்தான் கல்யாண பெண்." ரமேஷ் ஹேமாவை காண்பித்து விட்டு "ஹேமா! இவள்தான் லெட்சுமி, நம் வீட்டு வேலைக்காரி" என்று அறிமுகப்படுத்தினான்.

ஆனால் லெட்சுமி சிரிக்கவில்லை. வெறுமையாக இருந்த ஹேமாவின் சுழுத்தையும், நெற்றியையும் ஏற இறங்க பார்த்தாள். உடனே சிரித்துவிட்டு "போதும் தம்பி ரொம்ப கலாட்டா செய்யறீங்க. இந்த அம்மா ஒன்றும் கல்யாண பெண் இல்லை. எனக்குத் தெரியாதா?" என்றாள்.

ஹேமா, ரமேஷ் தங்களையும் அறியாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"கல்யாணம் ஆயிடுச்சாம். நான் என்ன பைத்தியக்காரியா எதை சொன்னாலும் நம்பி விடுவதற்கு. திலகம் எங்கே? கையில் மருதாணி எங்கே? கழுத்தில் மஞ்சள் கயிறு கட்டாமலேயே கல்யாணம் பண்ணிக்கிட்டாயா தம்பீ" ரமேஷை அதட்டிய லெட்சுமி ஹேமா பக்கம் திரும்பி பணிவு நிறைந்த குரலில்," பாருங்கம்மா! கல்யாணப் பெண்ணை அழைச்சுக்கிட்டு வரேன்னு எப்போதும் கலாட்டா செய்துகிட்டுதான் இருப்பான். இன்னிக்கு எவ்வளவு நம்பிக்கையாய் சொன்னாங்கன்னா நானும் நிஜம் தானாக்கும் என்று நினைச்சுகிட்டேன். அம்மன் கோயிலில் பூஜை நடந்ததா, அந்தப் பூக்களையாச்சும் தருவோம் என்று கொண்டு வந்தேன். எனக்குத் தெரியாதா? இந்த தம்பி கல்யாணம் கட்டுவதும், அந்த தம்பி பெண்டாட்டியை குடித்தனத்துக்கு அழைச்சுகிட்டு வர்ரதும்... இந்த இரண்டும் இந்த ஜென்மத்தில் நடக்கப் போவதில்லை. நன்றாகூசம்பாதித்து குசாலாக செலவு செய்ய பழகிவிட்டார்கள். கல்யாணம் என்றாலே இவங்களுக்கு பயம்தான். போய் வருகிறேன். தாயீ! வந்த வேலை முடிந்து விட்டது என்பதுபோல் போகப்போன லெட்சுமி என்ன நினைத்துக் கொண்டாளோ என்னவோ, கையில் இருந்த பூப் பொட்டலத்தை ஹேமாவின் கையில் கொடுத்துவிட்டு, "அம்மனுக்கு சாத்திய பூக்கள் தாயீ, எடுத்துக்கொள்" என்று சொல்லிவிட்டு போய்விட்டாள்.

ஹேமாவின் முகம் பூமியில் புதைந்துவிட்டதுபோல் தாழ்ந்து விட்டது. ஒருநிமிடம் வாயடைத்து விட்டவன் போல் நின்றுவிட்ட ரமேஷ், சட்டென்று ஏதோ நினைவுக்கு வந்தவனைபோல் பெட்டி அருகில் சென்று மூடியை திறந்து காகிதப் பொட்டலத்தை எடுத்துப் பிரித்தான். அதில் மஞ்சள் கயிற்றில் கோர்க்கப்பட்டிருந்த திருமாங்கல்யங்கள் பளபளவென்று மின்னிக் கொண்டிருந்தன.

ரமேஷுக்கு இவற்றில் தனிப்பட்ட நம்பிக்கை எதுவும் இல்லை. ஆனால் நாளையிலிருந்து தன்னுடன் வாழ்க்கையை பகிர்ந்து கொள்ளப்போகும் ஹேமாவுக்கு திருமணம் ஆனதற்கு அடையாளமாக இந்த அணிகலன்கள் இல்லையென்றால் அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் வேறு விதமாக நினைத்துக்கொள்ளும் ஆபத்து இருக்கிறது. அதற்கு பயந்துதான் அவன் இவற்றை வாங்கினான். மதியம் அவன் நினைத்தது ஒன்று என்றால் நடந்தது அதற்கு முற்றிலும் எதிர்மறையாக. ஹேமாவை நேராக தன்னுடைய அறைக்கு அழைத்து வந்து இவற்றை அணிவிக்கச் செய்து, பிறகு சேஷாத்ரியிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்திருந்தான். ஆனால் ஹேமா முதலில் தான் மட்டும்தான் போக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்ததும் அந்த ரகளையில் இந்த விஷயத்தை மறந்தே போய்விட்டான்.

ரமேஷ் அவற்றை எடுத்துக் கொண்டு ஹேமாவின் அருகில் வந்தான்.

ஹேமா தலையை குனிந்து கொண்டு, வீட்டில் நடந்த ரகளை

நினைவுக்கு வந்ததால் மனதில் அலையாய் பொங்கி வந்த துக்கத்தை கட்டுப்படுத்திக் கொள்ள முயற்சி செய்து கொண்டிருந்தாள். கீழ் உதட்டை பற்களால் அழுத்திக்கொண்டு உட்கார்ந்திருந்த ஹேமா திடீரென்று தன் எதிரில் திருமாங்கல்யங்கள் பளபளவென்று மின்னியதை பார்த்து திடுக்கிட்டு தலையை உயர்த்தி பார்த்தாள்.

மௌனமாய் ஹேமாவின் கழுத்தில் திருமாங்கல்ய சரடை கட்டினான்.

பிறகு ஹேமா உட்கார்ந்திருந்த நாற்காலிக்கு எதிரில் தரையில் முழங்காலிட்டு அமர்ந்து கொண்டான்.

அவன் என்ன செய்யப் போகிறான் என்று புரியாத ஹேமா சட்டென்று கால்களை பின்னுக்கு இழுத்துக்கொண்டாள்.

ரமேஷ் கைப்பிடியை திறந்து காண்பித்தான். அவனுடைய உள்ளங்கையில் வெள்ளி மெட்டிகள் அழகாக மின்னின.

ஹேமா இந்த முறை ஆட்சேபனை சொல்லவில்லை. ரமேஷ் ஹேமாவின் பாதங்களை மென்மையாக பற்றி, மெட்டிகளை அணிவிக்கச் செய்தான்.

ஹேமா ஒரு நிமிடம் தன்னுடைய துக்கத்தை மறந்துவிட்டாள். அவன் ரொம்ப அபூர்வமாக செய்து கொண்டிருந்த இந்த காரியத்தை மெய்மறந்தவளை போல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மெட்டிகளை அணிவித்த பிறகு ரமேஷ் எழுந்து நின்று கொண்டான். ஹேமாவின் தோள்களை பற்றி எழுப்பிவிட்டான். அவன் கைகளில் இருந்த பூக்களை தலையில் வைத்துவிட்டு தன் பக்கமாய் திருப்பிக் கொண்டே "ஹேமா! உன் வாழ்க்கையில் வீடு, குழந்தைகள், சொத்து, சுகம் இவை எல்லாவற்றுடனும் சேர்த்து உன் அண்ணனின் அன்பை மறுபடியும் பெற்று தரும் பொறுப்பு என்னுடையது. சரிதானா" என்றான்.

ஹேமா அவனுடைய மார்பில் முகத்தை புதைத்துக் கொண்டாள்.

"ரமேஷ்! எனக்கு ஏனோ பயமாக இருக்கிறது. அந்த வேலைக்காரி சொன்னது உண்மைதான். வீட்டுக்கு தெரியாமல் திருட்டுத்தனமாய் உன் அறைக்கு வந்திருப்பதுபோல் தோன்றுகிறதே தவிர உன்னைத் திருமணம் செய்துகொண்டு உன்னுடைய மனைவியாக வந்திருப்பதுபோல் நம்பிக்கை வரவில்லை."

ரமேஷின் கைகள் ஹேமாவின் தோள்களை மென்மையாக பற்றிக் கொண்டன. தடுமாறாமல், மிருது கம்பீரமான குரலில் சொன்னான். "அதற்குக் காரணம் என்னவென்று சொல்லட்டுமா ஹேமா. திருமணம் என்றாலே நமக்கு நாதஸ்வர இசை, புரிகிறதோ இல்லையோ சாஸ்திரிகள் சொல்லும் மந்திரங்கள், உறவினர்களின் சந்தடி, கொடுக்கல் வாங்கல் தகறாறு- இந்த சடங்குகளுக்கெல்லாம் காலங்காலமாய் பழக்கப்பட்டு விட்டோம். அந்தச் சடங்குகள் எல்லாம் நம் ரத்தத்தோடு கலந்துவிட்டன. நூற்றுக்கு தொண்ணூறு பேர் கையில் பணம் இல்லாவிட்டாலும் கடன் வாங்கியாவது இந்தச் சடங்குகளை செய்வார்கள். அதன் பிறகு எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பார்கள். வரவர இந்த திருமணச் சடங்குகள் எல்லாமே சுமக்க முடியாத பாரமாக மாறி விட்டன. ஆனாலும் யாரும் மாற மாட்டார்கள். ஏனென்றால் நம்மில் பலருக்கு புதியபாதையை தேர்ந்தெடுப்பது என்றால் பயம். நம் முடையது புதிய தலைமுறை. திருமணத்தில் பையனுக்கும் பெண்ணுக்கும் மனப்பொருத்தம் தான் முக்கியம். நாம் ஒன்றும் சின்னக் குழந்தைகள் இல்லை. பெரியவர்கள் மாறவில்லை என்றால், மாறி காட்ட வேண்டிய பொறுப்பு நம்மீது தான் இருக்கிறது. நமக்கு என்ன வேண்டுமோ தெளிவாக புரிந்துகொண்டு, அதை கச்சிதமாக செயல்படுத்தும் துணிச்சலை வரவழைத்துக் கொள்ள வேண்டும். பழமைவாதிகள் இன்று நம்மை கேலி செய்தாலும், புதிய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் நம்மை பாராட்டி வாழ்த்தாமல் இருக்க மாட்டார்கள்."

ஹேமா தலையை உயர்த்தி வியப்புடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் சொன்னது புரிந்தும், புரியாமலும் இருந்தது.

தான் ஆவேசமாய் சொற்பொழிவாற்றிக் கொண்டிருப்பதை உணர்ந்த ரமேஷ் உடனே சொன்னான். "ஸாரி ஹேமா! ட்யூஷன் சொல்லித்தரும் பழக்கம் இல்லையா, எந்த விஷயமாய் இருந்தாலும் மடைதிறந்த வெள்ளம்போல் வார்த்தைகள் தானாக வந்துவிடும்."

அதுவரையில் ரொம்ப சீரியஸாக இருந்த அவனுடைய கண்கள்

திடீரென்று குறும்பாக மாறின. ஹேமாவின் மார்பின்மீது பளபள வென்று மின்னிக்கொண்டிருந்த திருமாங்கல்யத்தை உள்ளங்கையில் ஏந்திக் கொண்டான். "எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா. என் இதயத்தையும், உன் இதயத்தையும் ஒன்றாக சேர்த்து விதி என்கிற இந்த மஞ்சள் கயிற்றில் பிணைத்து விட்டேன். இனிமேல் நல்லதாக இருந்தாலும், கெட்டதாக இருந்தாலும் சரி நாம் இருவரும் சேர்ந்து பகிர்ந்து கொள்ள வேண்டும். புரிந்ததா?" என்றான்.

தெரிந்தது என்பதுபோல் தலையை அசைத்தாள் ஹேமா.

அன்று இரவு— இருவருக்கும் திருமணம் ஆகியிருந்தாலும் ஆகாததுபோல் இருந்ததால் உண்டான தயக்கம், ஹேமாவுக்கு வெட்கம்— அவனுக்கோ தடுமாற்றம்— இருவருக்குமிடையே பலமான ஈர்ப்பு— இப்படி. பலதரப்பட்ட உணர்ச்சிகளின் சங்கமமாக, இருவரின் வாழ்க்கையில் என்றுமே மறக்கமுடியாத இனிமையான முதல் இரவாக அந்த இரவு அமைந்தது.

8

சரியாக பதினைந்து நாட்கள் கழித்து—

மதியம் மூன்று மணி. ஹேமா தபாலில் அப்பொழுதுதான் வந்த கடிதத்தை அவசர அவசரமாக படித்துக் கொண்டிருந்தாள். ரங்க நாயகி எழுதியிருந்த கடிதம் அது.

"ஹேமா!"

உனக்கு என் மனமார்ந்த ஆசிகள். நீ எழுதிய கடிதம் கிடைத்தது. நீ வேண்டிக்கொண்டது போல் அந்தக் கடிதத்தை பொறுமையாக ஒரு தடவைக்கு பத்து தடவை படித்துப் பார்த்தேன். ஹேமா உன் அண்ணன் நான் உன்னை பாப்பதோ, மதுவை உன்னிடம் அனுப்புவதோ கூடாது என்று ஆணையிட்டார். மது மீது சத்தியம் செய்யச் சொல்லி கட்டாயப்படுத்தினார். அந்த சத்தியதை நான் லட்சியப்படுத்த மாட்டேன் என்று நினைத்து விட்டாரோ என்னவோ, உன்னை வீட்டுக்குள் அனுமதித்தாலோ, உன்னைப் பற்றி தகவல் தெரிந்து கொள்ள முயற்சி செய்ததாக தெரிந்தாலோ, அடுத்த நிமிடம் தான்

வீட்டை விட்டு வெளியேறிவிடுவதாகவும், இனி ஜென்மத்தில் என் முகத்தை பார்க்க மாட்டேன் என்றும் சொல்லி விட்டார். இல்லாவிட்டால் இத்தனை நாள் உன்னை பார்க்காமல் என்னால் இருக்கமுடியுமா ஹேமா? நீ இந்த விஷயத்தை முன்னாடியே என் காதில் போட்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? நான்கு பேருக்கு நடுவில் எங்களுக்கு இந்த தலை குனிவு ஏற்பட்டிருக்காது. உன் அண்ணாவுக்கும் இத்தனை கோபம் வந்திருக்காது. நான் உன்னை பெற்ற மகளைப் போல் வளாத்தேன். சினேகிதியைப் போல் உரிமையை தந்தேன். அப்படியும் நீ என்னை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அந்த விஷயம் நினைவுக்கு வரும் போதெல்லாம் உன்னைப் பற்றி மறந்து போக வேண்டும் என்ற அளவுக்கு கோபம் வருகிறது. ஆனால் அது அந்த நிமிடம் தான். ஆனால் உடனே புதுக்குடித்தனம். புதிய இடம்... எப்படி இருக்கிறாயோ என்ன செய்கிறாயோ என்று என் மனம் தவித்துக் கொண்டு தான் இருக்கிறது.

நாகபூஷணம் அவர்கள் வீட்டு சம்பந்தம் முறிந்து போனதற்கு உன் அண்ணாவால் இந்த ஊரில் தலை நிமிர்ந்து நடக்க முடியவில்லையாம். அதனால் இந்த ஊரை விட்டுப் போக முயற்சி செய்து வருகிறார். திருக்காட்டுப்பள்ளி கிராமத்து விவசாயிகள் தங்கள் ஊரில் எலிமெண்டரி ஸ்கூல் வைக்கச் சொல்லி உன் அண்ணாவை ரொம்ப நாளாக தொந்தரவு செய்து வருவது உனக்கும் தெரிந்திருக்கும். இன்னும் இரண்டு மூன்று நாட்களில் நாங்கள் அந்த ஊருக்குப் போய்விடுவோம். உன் அண்ணனின் இந்தச் செயலை தடுக்க வேண்டும் என்று நான் செய்யாத முயற்சிகள் எதுவும் பாக்கி இல்லை. சண்டை போட்டேன். தெரிந்தவர்களை அழைத்து வந்து புத்திமதி சொல்ல வைத்தேன். எதையும் அவர் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

கடைசி ஆயுதமாக, "நமக்கு இருப்பது ஒரே ஒரு மகன். அவன் படிப்பு வீணாகிவிடுமே என்ற கவலை கூட உங்களுக்கு இல்லையா?' என்று கண்ணீர் வடித்துக் கொண்டே கேட்டதற்கு, "உனக்கு விருப்பம் இல்லாவிட்டால்

நீ வர வேண்டாம். என் மகனுடன் நீ உன் அம்மா வீட்டில் போய் இருந்துகொள். எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை" என்று சொல்லி விட்டார்.

என்னால் என்ன செய்ய முடியும் ஹேமா? வேறு சமயமாக இருந்தால் நானும் அப்படியே செய்திருப்பேன். ஆனால் இப்பொ இவர் வெறி பிடித்த நிலையில் இருக்கிறார். நானும் பிடிவாதம் படித்தால் உன் சின்ன அண்ணனை போல் மனைவிமக்கள் வேண்டாமென்று சன்னியாசியாக போய்விடுவாரோ என்று பயமாக இருக்கிறது. உன் சின்ன அண்ணி பிறந்த வீட்டில் படும் அவஸ்தைகளை பார்க்கும் போது எவ்வளவு பிரச்னைகள் வந்தாலும் சரி மனைவி கணவனைவிட்டு பிரிந்திருக்கக் கூடாது என்று தோன்றுகிறது.

என் குடித்தனம் நிலைக்க வேண்டும் என்பதற்காக மதுவின் எதிர் காலத்தை பணயமாக வைக்க வேண்டிய நிர்பந்தம்.

மதுவை மட்டுமாவது உன் அம்மாவிடம் விட்டுவிடு என்று சுசீலாமாமி என்னிடம் சொல்லிப் பார்த்தாள். ஆனால் என்னுடைய அம்மாவைப் பற்றி உனக்குத்தான் தெரியுமே. சுதந்திரமாய் இருக்க வேண்டும் என்று நினைப்பவள். இன்று காசிக்குப் போகவேண்டும் என்பாள். நாளைக்கு ராமேஸ்வரம் போகிறேன் என்று கிளம்பிவிடுவாள். இப்படி எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் சுதந்திரமாக இருப்பதற்காகத்தானே ஒரே மகளான என்னிடம்கூட இருக்காமல் தனியாக சின்ன போர்ஷனை வாடகைக்கு எடுத்துக்கொண்டு குடியிருக்கிறாள். அதோடு குடும்ப பந்தங்களை எல்லாம் துறந்து விட்டு பூஜைகள், யாத்திரைகள் என்று தனிவழியில் போய்க் கொண்டிருப்பவளிடம் இவனை தங்க வைத்து அவளுக்கு இடைஞ்சல் தருவதில் எனக்கு விருப்பம் இல்லை. அது மட்டுமே இல்லை. படிப்பு விஷயம் எப்படி இருந்தாலும், அளவுக்கு மீறி அவள் கொடுக்கும் செல்லத்தில் இவன் மேலும் குட்டிச்சுவராய் போய் விடு

வானோ என்று பயப்படுகிறேன். அதனால் அவனையும் என்னுடனே அழைத்துச் செல்கிறேன்.

ஹேமா! நாம் இப்போதைக்கு சந்தித்துக் கொள்ளமுடியாமல் போகலாம். நீ உன் அண்ணன் கடனாளி ஆகக் கூடாது என்று உன் திருமண விஷயத்தில் சுதந்திரமாக முடிவு செய்தாலும், ரமேஷை உன் கணவனாக தேர்ந்து எடுத்து நல்ல காரியம் தான் செய்தாய். ரமேஷ் உத்தமன். ரொம்ப நல்லவன். அவனுக்கு நல்ல பெண்ணாக பார்த்து திருமண முடிக்க வேண்டும் என்று நான் சில சமயம் மனதில் நினைத்தது உண்டு. இந்த உலகில் உன்னை விட நல்ல பெண் வேறு யாரும் கிடைக்க மாட்டார்களோ என்பது போல் கடவுளாக பார்த்து என் விருப்பத்தை இந்த விதமாக நிறைவேற்றியிருக்கிறார். ரமேஷின் நிழலில் உன் வாழ்க்கை மகிழ்ச்சியாக அமைய வேண்டும் என்று மனபூர்வமாக ஆசீர்வாதம் செய்கிறேன்.

உன்னுடைய புடவைகள், பின்னல் சாமான்கள், புத்தர் பொம்மை எல்லாவற்றையும் ஒரு பெட்டியில் போட்டு சுசிலா மாமியிடம் கொடுத்து இருக்கிறேன். உனக்கு முடிந்த போது மாமி வீட்டுக்குப் போய் அதை பெற்றுக்கொள். உனக்கு ஏதாவது தேவை ஏற்பட்டால் மறுக்காமல் உதவி செய்ய வேண்டும் என்று மாமியிடம் உறுதி மொழி பெற்றுக் கொண்டிருக்கிறேன். உனக்கு எது வேண்டும் என்றாலும் தயங்காமல் மாமியிடம் கேட்கவும்.

ஹேமா! இந்த விஷயம் உனக்கும் எனக்கும் வேதனை தரும் என்று தெரிந்தாலும் சொல்லாமல் இருக்க முடியாது. இனிமேல் எனக்குக் கடிதம் எழுத முயற்சி செய்யாதே. எந்த பிரச்னையும் காலம் தான் தீர்க்க முடியும்.

கடிதத்தை முடிக்கும்முன் இன்னொரு விஷயத்தை வலியுறுத்திச் சொல்ல நினைக்கிறேன். நீ ரமேஷை திருமணம் செய்து கொண்டதில் எந்த குற்றமும் இல்லை. நீ யாருக்கும் தலைகுனிய வேண்டிய அவசியம் இல்லை. தைரியமாக தலையை நிமிர்ந்து நட... என் அம்

மாவைப் போன்றவர்கள் குத்தலாக ஏதாவது சொன்னால், எதிர்த்து பேசி பதிலடி கொடுக்க வேண்டுமென்று நினைக்காதே. இது என்னுடைய வேண்டுகோள்.

ஹேமா! உன் அண்ணன் உனக்காக வரனை தேடும்போது இந்த ஊரிலேயே பார்க்கச்சொல்லி நான் வற்புறுத்தி வந்தது உனக்கும் தெரியும். உள்ளூரிலேயே நீ இருந்தால் பாந்தமாக நீ குடித்தனம் நடத்தும் அழகை கண்ணார காண முடியும் என்று ஆசைப்பட்டேன். அடிக்கடி நீ வந்து போக வசதியாக இருக்குமென்றும், எங்களைவிட்டு ரொம்ப தொலைவுக்கு போகக்கூடாது என்று நினைத்தேன். ஆனால் நானே இப்படி உன்னைவிட்டு தொலைவாக போய்விடுவேன் என்று நினைக்கவில்லை. அடிக்கடி நீ என்னிடம் பிடிவாதம் பிடிப்பது, நீ கேட்டதை உன் அண்ணனிடம் சொல்லி வாங்கித்தரவில்லை என்று கோபப்படுவது, எனக்குக் கோபம் வந்துவிட்டதோ என்று நினைத்து மறுபடியும் கெஞ்சுவது— இதெல்லாம் திடீரென்று நின்றுவிட்டதில் எனக்கு என்னவோ போல் இருக்கிறது. இந்த வீட்டின் கலகலப்பை, சந்தடியை உன்னுடனே மூட்டை கட்டிக்கொண்டு போய்விட்டது போல் தோன்றுகிறது. சிறகு முளைத்த குஞ்சுகள் கூட்டை விட்டு பறந்து போன பிறகு காடு வெறுமையாகி விடும் இல்லையா. நம் வீடும் அதுபோல் வெறுமையாக காட்சியளிக்கிறது. இப்போ உன் அண்ணன் கோபத்தில் கத்திக் கொண்டு இருக்கிறாரே ஒழிய, இரண்டு நாட்கள் போனால் உன்னைப்பற்றி கவலைப்பட போகிறார் என்ற பயமும் என்னை பீடித்துக் கொண்டுதான் இருக்கிறது. மதுவைப்பற்றி தனியாக சொல்ல வேண்டியது இல்லை. அவனை உன்னிடம் வராமல் தடுப்பதற்கு, எனக்கு ஒரே ஒரு வழிதான் தோன்றியது. எத்தனையோ அன்பாக வளர்த்த எங்களை எதிர்த்து, திருமணம் செய்துகொண்டு தீராத பழியை ஏற்படுத்தி விட்டாயென்று இதயத்தில் அபிப்பிராயத்தை பதித்து உன்னை அவன் மறக்கும் விதமாக செய்து வருகிறேன்.

ஹேமா! உன் அண்ணன் பணக்காரன் ஆன சுதாகருக்கு உன்னைத் திருமணம் செய்துகொடுத்து எந்த அஷ்ட ஐஸ்வரியங்களை உனக்கு பெற்றுத்தர வேண்டுமென்று ஆசைப்பட்டு ஏமாற்றமடைந்து, வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறாரோ— காலம் கனிந்து அந்த ஐஸ்வரியங்கள் எல்லாம் உனக்கு ரமேஷ் மூலமாய் கிடைக்க வேண்டும் என்று மனபூர்வமாக வாழ்த்துகிறேன். ரமேஷைக் கேட்டதாக சொல்லவும். அவன்மீது எனக்கு எந்த விதமான கோபமும் இல்லை என்று தெரிவிக்கவும். உங்கள் இருவருக்கும் என் ஆசிகள்.

மறுபடியும் நாம் சந்திப்போம் என்ற ஆழமான நம்பிக்கையுடன் உன்னை விட்டு தொலைவாக போய்க் கொண்டிருக்கும்

உன் பெரிய அண்ணி ரங்கநாயகி.

கடிதத்தை படித்துக்கொண்டிருந்த போது விழிகளில் நிறைந்து விட்ட நீரை ஹேமா துடைத்துக்கொள்ளும் முன்பே கன்னத்தின் வழியாக டப் டப் என்று கடிதத்தின் மீது விழுந்தன.

திடீரென்று ஹேமாவின் தோள்மீது யாருடையதோ கை பதிந்து பலமாக பற்றிக் கொண்டது. திடுக்கிட்ட ஹேமா தலையை திருப்பிப் பார்த்தாள். ரமேஷ்! எப்பொழுது வந்தானோ தெரியவில்லை. ஹேமாவின் பின்னால் நின்றுகொண்டு கடிதத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்ததும் ஹேமா சட்டென்று கையால் கண்களை அழுத்திக் துடைத்துக் கொண்டுவிட்டாள். புன்முறுவல் புத்த முசத்துடன் 'வந்து ரொம்ப நேரமாகிவிட்டதா? நான் கவனிக்கவே இல்லை' என்றாள். ரமேஷ் பதில் சொல்லவில்லை. ஹேமாவின் முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்தான். அவன் பார்வை கூர்மையாக இருந்தது.

மனதில் சுழன்று கொண்டிருக்கும் வேதனையை புன்முறுவலுக்கு பின்னால் ஹேமா மறைத்துவிட்டதை அவன் கவனிக்காமல் இல்லை.

"மணி என்ன? நீ எவ்வளவு சீக்கிரமாக வந்துவிடுவாய் என்று எதிர்பார்க்கவில்லை. நான் இன்னும் காபி டிகாஷன்கூட போட வில்லை. இதோ.... அண்ணி எழுதிய கடிதம். தனக்கு உன்மீது கொஞ்சம்கூட கோபம் இல்லையாம். உன்னிடம் சொல்லச் சொல்லி ரொம்பவும் கேட்டு எழுதியிருக்கிறாள்." - ஹேமா ரமேஷின் பார்வையை தவிர்க்க நினைப்பதுபோல் கடிதத்தை அவன் கையில் வைத்துவிட்டு, டிகாஷன் போடும் சாக்கில் வேகமாய் சமையல் அறைக்குள் சென்றுவிட்டாள்.

ரமேஷ் அந்தக்கடிதத்தை உடனே படிக்கவில்லை. இன்று அவன் மனம் கலங்கிய நிலையில் இருந்தது. ஹேமாவைத் திருமணம் செய்து கொண்ட அடுத்த நாளே நாகபூஷணத்தின் ஜவுளிக்கடையில் தான் பார்த்துக் கொண்டிருந்த வேலையை விட்டுவிட வேண்டும் என்று நினைத்தான். ஆனால் புதுக்குடித்தனம்... ஏற்கனவே பணம் தட்டுப் பாடாக இருக்கும் இந்த நேரத்தில் கையில் இருக்கும் வேலையை விட்டுவிடுவது சரியில்லை என்று தோன்றியது. இந்த வேலையில் இருந்துகொண்டே வேறு வேலைக்கு முயற்சி செய்ய வேண்டும் என்று முடிவு செய்தான்.

ஹேமா வந்த மறுநாளே டைலர் ராம்தாஸ் மூலமாய் மார்வாடி யிடமிருந்து நூற்றுக்கு பத்து ரூபாய் வட்டி என்ற கணக்கில் ஐநூறு ரூபாய் கடன் வாங்கியிருந்தான்.

அந்தப் பணத்தில் ஹேமா எழுதிக் கொடுத்த பட்டியலின்படி பொருட்களின் அன்று மாலையே வாங்கிவந்தான். வாசலுக்கு, ஜன்னலுக்கு திரைச்சீலைகள், கட்டில் மீது போர்வைகள், சமையல் பாத்திரங்கள், தினப்படி கட்டிக் கொள்ள இரண்டு புடவைகள், பிள்ளையார் படம், அகல்விளக்குகள் என்று ஹேமா கேட்டிருந்த பொருட்களை எல்லாம் வாங்கிவந்தான். ஹேமாவின் வருகைக்கு முன் வெறுமையாக இருந்த அந்த அறை இப்பொழுது புதுப் பொலிவுடன் காட்சி அளித்தது.

பொருட்களை எல்லாம் ஒழுங்குப்படுத்தி வைத்துக் கொண்டிருக் கும் போது ஹேமாவின் முகத்தில் தென்பட்ட மகிழ்ச்சி அவனுக்கு திருப்தி தந்தது. இந்தப் பணம் கடனாக வாங்கி வந்தது என்று தெரிந் தால் ஹேமாவின் முகத்தில் அந்த மகிழ்ச்சி இருக்காது என்று

அவனுக்கு நிச்சயமாகத் தெரியும். மாதம் முடிவதற்குள் அசலை கொடுக்காவிட்டாலும் வட்டியை கட்டாயம் தந்துதான் ஆக வேண் டும் என்று மார்வாடி கச்சிதமாகச் சொல்லிவிட்டான்.

ஹேமாவைத் திருமணம் செய்து கொண்ட அடுத்த நாளே சுந்தரத்திற்கு கடிதம் எழுதினான்.

'நான் திருமணம் செய்து கொண்டு விட்டேன். வேறு வீட்டுக்காக தேடிக் கொண்டு இருக்கிறேன். வீடு கிடைத்து விட்டதென்று நான் தந்தி கொடுக்கும் வரை நீ வர வேண்டாம். என் பேச்சை கேட்காமல் வந்தாயானால் நீ தெருவில்தான் நிற்க வேண்டியிருக்கும். இதற்கு மேல் உன் விருப்பம். எனக்கு வாழ்த்துக்களை தெரிவிக்க மறந்து விடாதே' என்று மிரட்டுவது போல் சுந்தரத்திற்கு கடிதம் போட் டான். சுந்தரம் பதிலுக்கு வாழ்த்து மடலை அனுப்பிவிட்டு தன்னு டைய விடுமுறையை மேலும் ஒரு வாரம் நீடித்தான். நேற்று தான் சுந்தரத்திடமிருந்து மறுபடியும் கடிதம் வந்தது. 'புதுக்குடித்தன ஜோரில் என்னை முற்றிலும் மறந்துவிட்டாய் போலும். இனிமேலும் எனக்கு விடுமுறை கிடைக்காது. இந்த வேலையும் போய் விட்டால் என்பாடு திண்டாட்டமாகி விடும். நான் திங்கட்கிழமை வருகிறேன். முன்னாடியே சொல்லிவிட்டேன். அப்புறம் என்னைக் குற்றம் சொல்லக்கூடாது' என்று எழுதியிருந்தான்.

பணத்தட்டுப்பாடு வருமோ என்று பயந்து சுய அபிமானத்தையும் கொன்று புதைத்து விட்டு எந்த வேலையை தொடர்ந்து செய்ய தயாராக இருந்தானோ அந்த வேலை இன்று திடீரென்று அவனிட மிருந்து விலகிப் போய்விட்டது. காலையில் போனதும் மேனேஜர் அவனை அழைத்து, 'உன்னை வேலையிலிருந்து நீக்கி விட்டோம் என்று சொன்னார்.

காரணம் என்னவென்று கேட்டபோது சரியாக சொல்லாமல் மழுப்பினார். ரமேஷ் விடாமல் கேட்டபோது "நீ யாரோ கஸ்டமரு டன் மரியாதை குறைவாக நடந்து கொண்டதாக புகார் வந்தது என்று" சொன்னார்.

அது முற்றிலும் பொய். அந்தக் கடைக்கு வரும் கஸ்டமர்கள் எல்லோரும் அவனை ரொம்பவும் விரும்புவார்கள். எல்லோருடனும் அவன் மரியாதையாகப் பழகுவான். அந்த கஸ்டமரின் பெயரைச்

சொல்லச் சொல்லி ரமேஷ் வற்புறுத்தினான். மேனேஜர் சொல்ல மறுத்தார். இருவருக்கும் நடுவில் பேச்சு வார்த்தை தடித்தது. மேனேஜர் கடைசியில் எரிச்சலுடன், "எனக்குத் தெரியாது. போய் முதலாளியிடம் கேட்டுக் கொள். வேலையிலிருந்து உன்னை நீக்கி விடச் சொல்லி அவர் சொன்னார். நான் செயல் படுத்தினேன். அவ்வளவு தான்" என்றார். "இந்தக் கடை அவருடையது. நீ ஏதாவது பேச வேண்டும் என்றால் அவரிடமே பேசிக் கொள்" தீர்மானமாக சொல்லி விட்டார்.

ரமேஷ் இந்த விஷயத்தை இப்படியே விட்டு விடுவதாக இல்லை. அவரிடமே சென்று நேரில் பேசி விஷயத்தை தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்தான். ஆனால் அவர் கிடைக்கவில்லை. வீட்டுக்கு போன் செய்தால் பெங்களூருக்குப் போயிருப்பதாகவும், நான்கு நாட்கள் கழித்துதான் திரும்புவார் என்று அவருடைய செகரெட்ரி பதில் சொன்னான்.

எதுவும் செய்ய முடியாத இயலாமை. எரிமலையை போல் கொந்தளிக்கும் இதயத்துடன் ரமேஷ் வீட்டுக்கு திரும்பி வந்தான். கஷ்டமோ நஷ்டமோ திருமணம் ஆன மறுநாளே அந்த வேலையிலிருந்து தானே விலகியிருக்க வேண்டும். அப்படி செய்யாமல் இருந்ததற்கு அவனுக்கு தன் மீதே கோபம் வந்தது.

வெயிலில் நடந்து வந்ததில் புழுக்கமாக இருந்தது. ஷர்ட்டை கழட்டி ஸ்டாண்டில் மாட்டிவிட்டு கட்டில் மீது அமர்ந்து கொண்டான். கட்டிலுக்கு பக்கத்திலேயே ஜன்னல் இருந்தது. அதன் வழியாக வீசிக் கொண்டிருந்த குளிர்ந்த காற்று சுளைப்பை போக்குவது போல் இருந்தது.

முழங்கையை ஊன்றிக் கொண்டு தலையணையில் சாய்ந்தான். ரங்கநாயகியின் கடிதத்தை படிக்கத் தொடங்கினான். முழுவதுமாக படித்து முடித்த பிறகு மறுபடியும் அங்காங்கே படித்தான். இரண்டு மூன்று நாட்களில் நாங்கள் இந்த ஊரை விட்டுப் போய்விடுவோம் என்ற வார்த்தைகள் அவன் மனதை காயப்படுத்தின. சேஷாத்ரி அனுபவித்துக் கொண்டிருக்கும் வேதனையின் பின்னால் இருக்கும் காரணம் அவனுக்குப் புரிந்தது. பல லட்சங்களுக்கு வாரிசான சுதாகருக்கு தங்கையை மணம் முடித்து தன்னுடைய அந்தஸ்தை

உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று நினைத்திருப்பான். சுதாகருடன் ஒப்பிட்டால் தான் சல்லி காசுக்கு பெறமாட்டான். ஹேமாவின் திருமண விஷயத்தில் சுதாகரின் பிரஸ்தாபனை மட்டும் இல்லை என்றால் சேஷாத்ரி இந்த அளவுக்கு வெறுத்து இருக்க மாட்டானோ என்னவோ...

சுதாகரையும், தன்னையும் ஒரே தராசில் எடைபோடும் இந்த உலகின் போக்கைக் கண்டு அவன் மனம் ரோஷத்தினால் பற்றி எரிவது போல் இருந்தது. இதயத்தை அரத்தால் அறுப்பது போல் இருந்த அந்த வாக்கியங்களை படித்து விட்டு யோசனையில் ஆழ்ந்து போனவன், மறுபடியும் கடிதத்தை பிரித்து ரங்கநாயகி கடைசியாக எழுதியிருந்ததை படித்தான். உங்களை மனபூர்வமாக வாழ்த்துகிறேன் என்று எழுதியிருந்தது அவன் இதயத்தில் என்றுமே அழியாத முத்திரை போல் ஆழமாக பதிந்து விட்டது.

அதற்குள் ஹேமா சூடாக, ஆவி பறக்கும் காபியை கொண்டு வந்தாள். காபி கோப்பையை கையில் எடுத்துக் கொண்டு சமையல் அறையின் வாசற் படியைத் தாண்டும் போதே, கடிதத்தை கையில் பிடித்துக் கொண்டு சீரியஸாக ஏதோ யோசித்துக் கொண்டிருப்பது போல் உட்கார்ந்திருந்த கணவனை அரை வினாடி பார்த்தாள். கடிதத்தை படிக்கும் போது கதவைத் தாழ்ப்பாள் போடாமல் இருந்ததற்கும், கடிதம் வந்திருப்பதாக அவனுக்கு தெரியாமல் கவனமாக தான் இல்லாமல் போனதற்கும் தன்னைத்தானே கடிந்து கொண்டாள்.

தன்னுடைய குறும்புப் பேச்சால் அவனுடைய வேதனையை போக்குவதற்கு நிச்சயித்துக் கொண்டவளாய் அருகில் வந்தாள்.

காபி கோப்பையை அவனிடம் கொடுத்து விட்டு, "மகாராஜா அவர்களுக்கு இரவு உணவிற்கு என்ன தயாரிக்க வேண்டுமோ ஆணையிடுகிறீர்களா?" நாடக பாணியில் புன்முறுவலுடன் கேட்டாள்."

ஹேமாவை பார்த்ததும் ரமேஷின் முகத்தில் கம்பீரம் மாயமாய் மறைந்து விட்டது. எழுந்து சரியாக உட்கார்ந்து கொண்டான்.

"மகாராணி அவர்கள் எது செய்தாலும் சரி. அதையே அமிருத

மாய் பாவித்து மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வோம்"

ஹேமா கொடுத்த கோப்பையை வாங்கி பக்கத்திலிருந்த ஸ்டூல் மீது வைத்தான். ஹேமாவின் கையை பற்றி அருகில் இழுத்து மடியில் உட்கார வைத்துக் கொண்டான்.

ஹேமா இங்கு வந்தது முதல் பார்த்துக் கொண்டு தான் இருந்தாள். நாளுக்கு ஒரு முறையாவது அவன் ஹேமாவை இப்படி உட்கார வைத்துக் கொள்வான். முதல் நாள் ஹேமா உட்காரவில்லை. வெட்கப்பட்டாள். தயக்கத்துடன் அவன் அணைப்பிலிருந்து விடுவித்துக் கொண்டு அங்கிருந்து போய்விட்டாள். ஆனால் போகப் போக பழகிவிட்டது. அப்படி உட்கார்ந்து கொள்வதில் அவனிடம் தனக்கே உரிமையும் சுதந்திரமும் இருப்பது போன்ற உணர்வு.

"அப்படியானால் கரிக்கட்டையை போல் தீய்ந்து போன சப்பாத்திகளை செய்து தினமும் பரிமாறுகிறேன்."

"நான் மகிழ்ச்சியாக இருப்பது இருக்கட்டும். உன்னைப் பற்றிச் சொல்லு. உண்மையிலேயே நீ சந்தோஷமாக இருக்கியா?"

"அந்த சந்தேகம் இப்போ ஏன் வந்தது?"

"ஏனோ வந்தது. பதில் சொல்லு."

"மகிழ்ச்சியாக இல்லாமல் என்ன? இப்போ எனக்கு என்ன குறைச்சல்?"

"ஊஹூம், நீ மனபூர்வமாகத்தான் சொல்கிறாயா இல்லையா என்று எனக்கு உறுதியாக தெரிய வேண்டாமா? கொஞ்சம் காது கொடுத்து கேட்கிறேன்." ரமேஷ் தலையை குனிந்து ஹேமாவின் மார்பின் மீது காதை வைத்துக் கொண்டான்.

ஹேமா புன்முறுவலுடன் அவன் கழுத்தைச் சுற்றிலும் கைகளை பிணைத்தாள். அவன் கழுத்தின் கீழே விகாரமாய் தென்பட்டுக் கொண்டிருந்த தீக்காயத்தின் வடுவை அன்புடன் விரலால் தடவிக் கொண்டே 'என்ன? கேட்டதா?' என்றாள்.

"கேட்டது. ஆனால் நீ சொன்னது மட்டும் இல்லை" என்றான்.

"உண்மையாகவா?" - ஹேமா முகத்தில் வியப்பை காட்டினாள்.

"நீ மகிழ்ச்சியாக இருப்பது உண்மைதானாம். ஆனால் அந்த

மகிழ்ச்சி என்னால் ஏற்பட்டது இல்லையாம். உன் அண்ணன் உன்னை சுதாகருக்கு மணம் முடித்து கடனாளி ஆகாமல் தப்பித்துக் கொண்டதினாலாம்."

"ச்சீ..ச்சி." ஹேமா பொய்க் கோபத்துடன் ரமேஷின் தோள்களை பற்றியிருந்த பிடிப்பை ரமேஷ் விடாததால், அவன் பின்னால் சாய்ந்தது மட அவளும் போய் அவன் மார்பின் மீது விழுந்தாள். ஹேமா எழுந்து கொள்ள முயன்றாள். ரமேஷ் புன்முறுவலுடன் ஹேமாவை கைகளுக்கிடையில் சிறைப்படுத்தினான்.

"காபி ஆறிப் போய்க் கொண்டிருக்கிறது" - பொய்யாக கோபம் காட்டினாள்.

"போகட்டும்" - ரமேஷின் இதழ்கள் ஹேமாவின் நெற்றியிலும், வகிட்டும் பதிந்தன.

"ஆறிப் போனால் குடிக்கமுடியாது."

"கொட்டிவிடுவோம்."

"எவ்வளவு வேஸ்ட்?"

"போகட்டும் லெச்சுமியிடம் கொடுத்து விடுவோம்."

"ஊஹூம். மாட்டவே மாட்டேன். முதல் நாளே என்னை கல்யாண பெண் இல்லை என்று சொல்லி இன்சல்ட் செய்தாள்."

ஹேமாவின் முகம் போன போக்கைக் கண்டு ரமேஷ் சிரித்து விட்டான்.

அதற்குள் வெளியில் லெச்சுமியின் குரல் கேட்டது.

"அம்மா குழாயில் தண்ணி வந்திருச்சு? பாத்திரம் தேய்க்கப் போடுறீங்களா?"

நான்கு நாட்களுக்கு முன்னால் காலை வேளையில் வழக்கம் போல் நேராக விட்டுக்குள் வந்துவிட்ட லெச்சுமி ரமேஷின் மடியில் அமர்ந்து காபியை பருகிக் கொண்டிருந்த ஹேமாவைப் பார்த்ததும் துள்ளிக்குதித்து, வந்த வேகத்தில் திரும்பிப் போய் விட்டாள். அன்றிலிருந்து குரல் கொடுத்து விட்டுத்தான் உள்ளே வருவாள்.

லெச்சுமியின் குரலைக் கேட்டதும் ரமேஷ் விருப்பம் இல்லாமலேயே ஹேமாவை விட்டு விலகி பக்கத்திலிருந்த காபி கோப்பையை

எடுத்துக் கொண்டான்.

அன்று இரவு சாப்பிடும் போது, பதினைந்து நாட்களாக தன் மனதை துளைத்தெடுத்துக் கொண்டிருந்த கேள்வியை வெளிப் படுத்திவிட்டான்.

"ஹேமா! சுதாகரை உனக்கு நன்றாகத் தெரியுமா?" என்று கேட்டான்.

"நன்றாக என்றால்?" ஹேமா தலையை உயர்த்திக் கேட்டாள்.

"திருமண பிரஸ்தாபனை கொண்டுவரும் அளவுக்கு."

"உன் அபிப்பிராயம் தான் என்ன? அறிமுகமானவர்களை எல்லாம் உன்னைக் கேட்டது போல் திருமணம் செய்து கொள்ளச் சொல்லி கேட்டிருப்பேன் என்றா?" ஹேமாவின் கண்களில் ரோஷம் பிரதிபலித்தது.

"என் எண்ணம் அது இல்லை ஹேமா. அவனுடன் உனக்குக் கொஞ்சமாவது அறிமுகம் இருந்திருக்க வேண்டும் இல்லையா. தெருவில் போகிற பெண்ணைப் பார்த்து திருமணம் செய்து கொள்கிறேன் என்று யாரும் சொல்ல மாட்டார்களோ?"

"உன் பேச்சு எனக்கு சரியாகப் புரியவில்லை. சுதாகரை எனக்குத் தெரியும். எப்படி தெரியும் என்றால் மாதுரி என்று எனக்கு ஒரு சினேகிதி இருக்கிறாள். அவளுடைய பிறந்த நாள் விழாவில் முதல் முறையாக அவனைப் பார்த்தேன். மாதுரியின் பெரியப்பாவின் மகன் அதாவது மாதுரிக்கு அண்ணன் முறை ஆகவேண்டும். அதற்குப் பிறகு இரண்டு மூன்று முறை மாதுரியின் வீட்டில் பார்த்திருக்கிறேன். ஒரு தடவை மாதுரியும், அவனும் சினிமாவுக்குப் போகும் போது என்னையும் கூப்பிட்டார்கள். நானும் போனேன். இன்னொரு தடவை நானும், மதுவும் பொருள் காட்சிக்கு போன போது அவனும் வந்திருந்தான். எங்களுடன் சற்று நேரம் சுற்றிப் பார்த்தான். வீடு வரையில் தன்னுடைய காரில் கொண்டு விடுவதாகச் சொன்னான். நான் தான் வேண்டாமென்று மறுத்துவிட்டேன். இவ்வளவு தான் எங்களுடைய அறிமுகம். இன்னும் நீ கேட்க வேண்டியது ஏதாவது இருக்கிறதா?"

இல்லை என்பது போல் ரமேஷ் தலையை அசைத்தான். ஹேமா

வுக்கு கோபம் வந்து விட்டதை அவனால் உணர முடிந்தது.

ஹேமா கையை அலம்பிக் கொண்டே சொன்னாள். "ரமேஷ்! நானும் ஒரு விஷயத்தை தெளிவாகச் சொல்ல நினைக்கிறேன். சுதாகரை பற்றி இனி நாம் பேசிக் கொள்ள வேண்டாம். எனக்கு என்னவோ போல் இருக்கிறது."

ரமேஷ் கையை தட்டிலேயே அலம்பிக் கொண்டான்.

"அதென்ன? இன்னும் மோர் சாதம் சாப்பிட வில்லையே?" - ஹேமா எச்சரித்தாள்.

வேறு ஏதோ நினைவில் இருந்த ரமேஷுக்கு தான் பாதி சாப்பாட்டில் கையை கழுவிக் கொண்டது ஹேமா சொன்ன பிறகு தான் புரிந்தது.

"வேண்டாம் ஹேமா போதும். பசியே இல்லை."

சிகரெட்டுக்காக பெட்டிக்கடை வரையில் சென்றவன், அப்படியே கடைத்தெருவை நோக்கி நடந்தான்.

"சுதாகரை பற்றி இனி நாம் பேசி கொள்ள வேண்டாம். எனக்கு என்னவோ போல் இருக்கிறது" என்று ஹேமா சொன்னது அவன் காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருந்தது. ஹேமா ஏன் அப்படி சொன்னாள்? அதன் அர்த்தம் என்னவாக இருக்கும்?

மெள்ள மெள்ளமாய் அவன் மனம் வேறு விஷயங்கள் மீது தாவியது. நாகபூஷணம் தன்னை திடீரென்று வேலையை விட்டு நீக்கிய காரணமும் தெரியவில்லை.

வேண்டாமென்று நினைத்தாலும் ரங்கநாயகியின் கடிதம் நினைவுக்கு வந்து கொண்டிருந்தது. நாளையோ அதற்கு மறுநாளோ சுந்தரம் வந்து விடுவான் என்ற விஷயம் அடிக்கடி நினைவுக்கு வந்து தனக்கு முக்கியத்துவம் தரச் சொல்லி எச்சரித்துக் கொண்டிருந்தது.

மனதில் எரிச்சல் ஏற்பட்ட போதெல்லாம் தெருமுனையில் இருக்கும் குழந்தைகளின் பூங்காவில் பெஞ்ச் மீது சற்று நேரம் இளைப் பாறுவது அவனுடைய வழக்கம். இன்றும் அவனுடைய உடல் இயந்திரகதியில் அதே போல் செயல்பட்டது.

தொலைவில் இருக்கும் க்ளாக் டவரில் பத்து மணி அடித்த

போதுதான் அவனுக்கு சுய உணர்வு வந்தது. வீட்டை விட்டு கிளம்பி கிட்டத்தட்ட இரண்டு மணி நேரத்திற்கு மேலாகி விட்டது. ஹேமா தனியாக இருப்பாள். உறக்கத்திலிருந்து திடுக்கிட்டு எழுந்து கொண்டவன் போல் வேகவேகமாய் வீட்டுக்கு வந்தான்.

அவன் நினைத்தது போல் ஹேமா உறங்கிவிடவில்லை. அவன் வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்த போது நாற்காலியில் அமர்ந்து மேஜைமீது தலையை சாய்த்துக் கொண்டிருந்தாள்.

தனக்காக காத்திருந்து காத்திருந்து அப்படியே தூங்கிவிட்டாள் போலும் என்று நினைத்து அருகில் சென்று மெதுவாக தோளில் தட்டிக் கொண்டே "ஹேமா!" என்று அழைத்தான்.

ஹேமா சரேலென்று எழுந்து கொண்டாள். அவன் கழுத்தைச் சுற்றிலும் கைகளை பிணைத்து அவன் மார்பில் முகத்தை புதைத்துக் கொண்டாள். 'ரமேஷ்!' ஹோவென்று சுதறி விட்டாள்.

அவன் பதட்டமடைந்து விட்டான். விசும்பி விசும்பி அழுது கொண்டிருந்த ஹேமாவை நயமான வார்த்தைகள் சொல்லி தேற்றிக் கொண்டே வலுக்கட்டாயமாய் அவளை அழைத்து வந்து சுட்டில் மீது உட்கார செய்தான்.

"என்ன ஹேமா? என்ன நடந்தது?" என்று கேட்டான்.

"என்னை மன்னித்து விடு. உனக்குக் கோபம் வந்து விட்டது இல்லையா. சுதாகர் விஷயம் பேசவேண்டாம் என்று சொன்னதில் என் எண்ணம் வேறு எதுவும் இல்லை."

அவன் திகைப்புடன் பார்த்தான்.

ஹேமா அவனை இறுக அணைத்துக் கொண்டே, "ரமேஷ்! என் மீது கோபம் கொள்ளாதே. அப்படியே கோபம் வந்தால் வேறு ஏதாவது தண்டனையை கொடு. ஆனால் இப்படி வீட்டை விட்டு மட்டும் போய் விடாதே" என்றாள்.

"ஹேமா! ஹேமா!

ஹேமாவுக்கு மூச்சு விட முடியாத அளவுக்கு அணைப்பை மேலும் இறுக்கினான். அவன் இதழ்கள் ஹேமாவின் நெற்றியில், கன்னத்தில், கழுத்தில் ஆவேசமாக முத்தங்களை பதித்துக் கொண்டிருந்தன. ஹேமா அவன் பிடியிலிருந்து மெதுவாக தன்னை விடு

வித்துக் கொண்டாள்.

"ரமேஷ்! நீ எனக்கு ஒரு சத்தியம் செய்து தர வேண்டும்."

"என்ன விஷயம் சொல்லு."

"என்னை என்னை எப்போதும் விட்டுவிட மாட்டேன் என்று சத்தியம் பண்ணு."

அவன் திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

"கடவுள் மீது சத்தியம் செய்து சொல்லு."

"எனக்கு கடவுள் மீது நம்பிக்கை இல்லை ஹேமா" இயலாமையுடன் சொன்னான்.

"கடவுள் மீது நம்பிக்கை இல்லையா? பின்னே யார் மீது நம்பிக்கை இருக்கு?"

"உன் மீது, இந்த உலகில் யார்மீதும் இல்லாத அளவுக்கு உன் மீது நம்பிக்கை இருக்கு. என் வாழ்க்கையில் சந்தோஷம், திருப்தி, மகிழ்ச்சி என்று ஏதாவது இருந்தால் அது உன்னோடு மட்டும்தான். உன் மீது சத்தியம் செய்து சொல்கிறேன். என்னை நம்பு." - ஹேமாவின் கையை எடுத்துக் கொண்டு தன் இதயத்தின் மீது வைத்துக் கொண்டான்.

ரொம்ப நேரம் கழித்து ஹேமா அவன் பக்கத்தில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தாள். ரமேஷுக்கு தூக்கம் வரவில்லை. ஹேமாவுக்கு விழிப்பு வராமல் மெதுவாக ஹேமாவின் கையை எடுத்து தன் கழுத்தின் மீது வைத்துக் கொண்டான். பூச்சரம் போன்று மென்மையாக இருந்த அந்த கரத்தின் ஸ்பரிசம் அவனுக்கு நிம்மதியை அளித்தது.

வாழ்க்கையில் முதல்முறையாக, தான் தனியன் என்ற விரக்தி உணர்வு அவன் மனதை விட்டு நீங்கிவிட்டது. ஒரு மணிநேரம் தாமதமாக வந்ததற்கு ஹேமா செய்த ரகளை அவன் மனதிற்கு சந்தோஷத்தை அளித்தது.

ஒரு மணி நேரம் முன்பு மனதை சுலங்க வைத்த பிரச்னைகள் இப்பொழுது அவனுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. அன்பாக, ஆதரவாக பழகும் மனைவி இருந்தால் கணவனை

பொறுத்த வரை அந்த வீடு சுவர்கத்திற்கு ஒப்பானதாகி விடும்.

ரமேஷின் உதடுகள் ஹேமாவின் கைமீது பட்டும் படாமலும் பதிந்தன. ஹேமா பிடிவாதம் பிடித்து திருமணத்திற்கு தன்னை சம்மதிக்க வைக்கவில்லை என்றால் இந்த சந்தோஷம், நிம்மதி தனக்கு கிடைத்திருக்குமா? ரமேஷின் மனம் ஹேமாவுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மண்டியிட்டது.

ஹேமாவுக்கு வேதனையை தரும் வகையில் எந்த காரியத்தையும் செய்யக்கூடாது என்று முடிவு செய்து கொண்டான்.

9

மறுநாள் காலையில், விடியும் போதே சுந்தரம் ஊரிலிருந்து வந்து விட்டான்.

"ரமேஷ்! ரமேஷ்!" என்று கதவைத் தட்டிக் கொண்டே உரத்த குரலில் கூப்பாடு போட்டுக் கொண்டிருந்தான்.

ஆழ்ந்த உறக்கத்திலிருந்த ஹேமா கண்களைத் திறக்கும் முன்பே ரமேஷ் எழுந்து போய் கதவைத் திறந்தான்.

கையில் பெட்டியுடன் சுந்தரம் உள்ளே வந்தான். அறிமுக மில்லாத நபரை பார்த்ததும் ஹேமா சட்டென்று எழுந்து உள்ளே போய்விட்டாள்.

சுந்தரம் ரமேஷுடன் கட்டில்மீது அமர்ந்து கொண்டு ஊரில் நடந்த விசேஷங்களை சொல்லிக்கொண்டிருந்தான்.

"என்னுடைய அப்பாவிடம் கடைசி முறையாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இந்த மாத கடைசிக்குள் குடித்தனத்திற்கு வரவில்லை என்றால் வக்கீல் நோட்டீஸ் அனுப்புவது நிச்சயம் என்று செய்தி தெரிவிக்கச் சொன்னேன். வந்தாளா சரி... இல்லையா டைவர்ஸ் கொடுத்துவிட்டு நிம்மதியாக வேறு திருமணம் செய்து கொள்வேன். சிகரெட் இருந்தால் கொடு. ரயிலில் வரும்போதே சிகரெட் பெட்டி காலியாகிவிட்டது."

ரமேஷ் எழுந்துபோய் மேஜை டிராயரை திறந்து சிகரெட் பெட்டி, தீப்பெட்டியை கொண்டு வந்து கொடுத்தான். "நீ ஒருமுறை பேசிப் பார்க்கக்கூடாதா?" என்று கேட்டான்.

"பேசலாம் என்றால் அந்த மகாராணி எனக்கு தனிமையில் கிடைத்தால் தானே? என் மாமியாரோ சின்ன மாமியாரோ செக்யூரிடி கார்டுகளை போல் எப்போதும் அவள் பக்கத்திலேயே நின்று கொண்டிருப்பார்கள்."

"எது எப்படி இருந்தாலும் அந்தப்பெண் மனரீதியாக இன்னும் சின்னக் குழந்தைபோல் இருக்கிறாள். ஒரு பக்கம் தாய்... இன்னொரு பக்கம் கணவன். அதிலும் ஒரே மகள் என்று வேறு சொல்கிறாய். அந்தப் பெண்ணுக்கு தாயிடம் பிரியம் இருப்பது நியாயம்தானே. நீதான் கொஞ்சம் பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டும்."

"இன்னும் பொறுமையாக இருக்கச் சொல்கிறாயா? வாழ்ந்தாற் போல்தான். திருமணமாகி ஆறுவருடங்கள் கழிந்ததும் பிரம்மசாரி யாய் வாழ்ந்து வருவது உன் கண்ணில் படவில்லையா? இந்த வினை யெல்லாம் என் அப்பாவால் வந்தது. வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க வேண்டும் என்று அவர்கள் போட்ட நிபந்தனைக்கு முதலில் சம்மதித்துவிட்டு இப்போ அந்த வார்த்தையை தான் சொல்லவே இல்லை என்று சாதிக்கிறார்."

"என்னதான் நடந்தது?"

"சொத்து சுகம் நிறைய இருக்கிறது. ஒரே மகள். நிறைய வரதட் சணை கிடைக்கும் என்று என்னுடைய தந்தை எதிர்பார்த்தார். திரு மணம் முடிந்தால் போதும் என்று அவர்கள் சொன்னதற்கெல்லாம் தலையை ஆட்டியிருப்பார். அந்த அம்மாளோ பிடிவாதமாய் இருக் கிறாள். யார் பொய் சொல்கிறார்கள் என்று அந்தக் கடவுளுக்குத் தான் தெரிய வேண்டும். போகட்டும். இப்பொழுதுகூட வீட்டோடு மாப்பிள்ளையாக போய் இருப்பதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால் வேலையை விட்டுவிட்டு அங்கே போனால் வேலைக்காரனைவிட கேவலமாக மதிப்பார்கள் என்று அப்பா மிரட்டுகிறார். எனக்கும் அது சரி என்று தோன்றுகிறது. தாடி எடுக்க ப்ளேட் வாங்கணும் என்றாலும் இரண்டு ரூபாய்க்கு மாமியாரிடம் கையேந்தி நிற்க வேண்டும்."

"நீ ஏன் அப்படி நினைக்கிறாய்? அங்கே போனால் வீட்டு அதி காரம் முழுவதும் உன்னிடம் ஒப்படைத்து விடுவார்களோ என்

னவோ."

"யாரு? அந்த அம்மாளா? அம்மாடியோவ்! எச்சில் கையால் காக் காவை கூட ஓட்டாமல் சேர்த்து வைத்த சொத்து அது. அவள் உயி ரோடு இருக்கும்வரை அந்த சொத்தின் மீது யாருக்கும் அதிகாரம் தரமாட்டாள். தானும் சாப்பிடமாட்டாள். மற்றவர்களையும் சாப்பிடவிட மாட்டாள்."

"உன் மாமியாருக்கு என்ன வயது இருக்கும்?"

"ரொம்ப அதிகம் இல்லை. ஐம்பதுக்குள் தான் இருக்கும். நிச்சய மாக நூறு வருடங்களுக்கு மேல் வாழ்வாள். அவள் போய்ச் சேருவதற்குள் நான் கிழடு தட்டிப் போய்விடுவேன். ச்சீ...ச்சீ... வேலி யில் போகிற ஓணானை பிடித்து காதில் விட்டுக் கொண்ட கதை யாகி விட்டது. ரமேஷ்! பணக்கார வீட்டுப் பெண்ணை திருமணம் செய்து கொள்ளவே கூடாது. எத்தனை தான் சொன்னாலும் அவர் களுக்கு திமிரு கொஞ்சம் அதிகம்."- சுந்தரம் சோம்பலை முறித்துக் கொண்டான்.

"இரவு முழுவதும் ரயிலில் தூங்கவே இல்லை. எங்கே பார்த்தா லும் மக்கள் கூட்டம். கால் வைக்க இடமில்லை. தூக்கம் வருகிறது" என்று சொல்லிக் கொண்டே கட்டில் மீது படுத்துக் கொண்டான். வெள்ளை நிற படுக்கை விரிப்பு ரொம்ப சுகமாக இருந்தது. தலை யணையிலிருந்து புதுவிதமான நறுமணம் மிதந்து வந்தது. காலையில் அவன் உள்ளே வந்த போது ஹேமா கட்டிலை விட்டு இறங்கி உள்ளே போனதை கவனித்தான். 'ஊஹூம், என்னைவிட ரமேஷ் பாடு தேவலை. திருமணம் செய்து கொண்டு மனைவியுடன் குடித்தனம் நடத்திக் கொண்டிருக்கிறான். அதிர்ஷ்டக்காரன்' என்று நினைத்துக் கொண்டான்.

ஐந்து நிமிடங்கள் கழித்து சுந்தரம் வீடே அதிரும் அளவுக்கு குறட்டை விட்டுக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்தான்.

சுந்தரம் தூங்கிய பிறகு ரமேஷ் உள்ளே வந்த போது ஹேமா காபி கலக்கும் முயற்சியில் ஈடுப்பட்டிருந்தாள். ரமேஷ் காபியை பருகிக்கொண்டே ஹேமாவிடம் சுந்தரத்தின் மனைவியை பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான்.

"சுந்தரத்தின் பெற்றோர்கள் ரொம்ப சாதாரணமானவர்கள். குடும்பமும் ரொம்ப பெரியது. வரதட்சணை கிடைக்குமே என்று ஆசைப்பட்டு பணக்கார வீட்டுப் பெண்ணை சுந்தரத்திற்கு பார்த்தார்கள். அவர்களும் நன்றாக செலவு செய்து ஆடம்பரமாக திருமணம் செய்து கொடுத்தார்கள். திருமணம் ஆனபிறகு சுந்தரத்தை வீட்டோடு மாப்பிள்ளையாக வரச் சொல்லி மாமியாரும், அந்த வார்த்தையை நாங்கள் சொல்லவே இல்லை என்று இவனுடைய தந்தையும் சண்டை போட்டுக் கொண்டார்கள். பேச்சு வார்த்தை தடித்தது. விவகாரம் கோர்ட் வரையிலும் போகும் போல் தோன்று கிறது. ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் இல்லை. சமாதானமாக போகும் அபிப்பிராயம் இருவருக்குமே இல்லை. எங்கள் விஷயத்தை நாங்களே பார்த்துக் கொள்கிறோம். நீங்கள் தலையிட தேவை யில்லை' என்று சுந்தரத்தால் சொல்ல முடியும். ஆனால் அந்தப் பெண் இவனுடன் ஒத்துழைக்க மாட்டாள். இது இழுபறி விவகாரம். ஹேமா! திருமண விஷயத்தில் பெரியவர்களின் தலையீடு இருந்தாலும் முடிவு எடுக்கும் சுதந்திரம் இளைய தலைமுறையின் கையில் தான் இருக்கவேண்டும்."

"டைவர்ஸ் என்று சொல்கிறானே?" - விஷயத்தை முழுவதுமாக கேட்ட பிறகு ஹேமாவுக்கு சந்தேகம் வந்தது.

"அது கும்மா ஒரு ஸ்டண்ட். இந்த வார்த்தையை நானும் இரண்டு ஆண்டுகளாக கேட்டுக் கொண்டிருக்கிறேன். அந்தப் பெண் அழகாக இருப்பாள். சொத்தும் நிறைய இருக்கிறது. சுந்தரத்திற்கு அவளை விட்டு விடுவதில் விருப்பம் இல்லை. அவனுக்கு அந்த எண்ணம் இருந்தால் எப்பவோ அந்த காரியத்தை செய்திருப்பான்."

"ஒரு தடவை தாலியை கட்டி, மனபூர்வமாக ஏற்றுக் கொண்ட பிறகு மறுபடியும் மனைவியை தள்ளி வைக்கும் ஆண்களைக் கண்டால் எனக்கு வெறுப்பு" - ஹேமா சொன்னாள்.

"எனக்கும்" - ரமேஷ் புன்முறுவலுடன் தலையை அசைத்தான்.

திருமணம் முடிந்து பதினைந்து நாட்கள் கழித்து அவனும் ஹேமாவும் முதல் முறையாக தள்ளி நின்று காபியை பருகிக் கொண் டிருந்தார்கள். இதை உணர்ந்த ரமேஷ் உடனே சொன்னான். "கணவனுக்கு தொலைவில் நின்று கொண்டு காபி குடிக்கும் பெண்

களை கூட எனக்கு பிடிக்காது."

ஹேமா சிரித்து விட்டாள்.

ஹேமாவை அருகில் வரச் சொல்லி ரமேஷ் கையை நீட்டினான்.

வரமாட்டேன் என்பது போல் ஹேமா தலையை அசைத்தாள்.

10

ஒன்பது மணி ஆனதும் சுந்தரம் எழுந்து கொண்டு குளித்து முடித்து, ஹேமா பரிமாறிய சூடான சாப்பாட்டை அரக்க பரக்க சாப்பிட்டுவிட்டு, அவசர அவசரமாக ஆஃபிசுக்கு ஓடினான்.

அவன் கிளம்பிப் போனதும் ஹேமா முன் அறைக்கு வந்து கட்டில்மீது போட்டிருந்த படுக்கை விரிப்பை, தலையணை உறைகளை எடுத்துவிட்டு பெட்டியிலிருந்து தன்னுடைய காட்டன் புடவையை எடுத்து விரித்தாள்.

நேற்று இரவுதானே மாற்றினாய், மறுபடியும் மாற்றுவானேன்? பேப்பரை படித்துக் கொண்டிருந்த ரமேஷ் கேட்டான்.

"சுந்தரம் படுத்திருந்தான் இல்லையா?"

"படுத்துக் கொண்டால்?"

"இன்னொருத்தர் உபயோகித்த விரிப்பை பயன்படுத்துவது எனக்குப் பிடிக்காது."

"உங்கள் வீட்டில் உறவினர்கள் யாரும் வந்ததே இல்லையா ஹேமா?"

"அவர்கள் போனதும் அண்ணி விரிப்புகளை மாற்றி விடுவாள்"

"ஆனால் சுந்தரம் ஒரு வேளையுடன் போய்விடும் உறவினன் இல்லை. மாலையில் அலுவலகத்திலிருந்து வந்ததும் மறுபடியும் அந்தக் கட்டில் மீதுதான் படுத்துக்கொள்வான்."

"வேறு கட்டிலை வாங்கிக் கொள்ளச்சொல்லு.

"அந்த வேலையை நாம்தான் செய்ய வேண்டியிருக்கும். ஏன் என்றால் கட்டில் சுந்தரத்தினுடையது. படுக்கை மட்டும்தான் என்னோடது."

படுக்கையை சரி செய்து கொண்டிருந்த ஹேமா ஒரு நிமிடம் அப்படியே நின்றாள். பிறகு படுக்கையை சுற்றி அறையில் ஒரு மூலையில் வைத்துவிட்டு, இன்று முதல் நாம் தரையில் படுத்துக்கொள்வோம்" என்றாள்.

"உன் இஷ்டம். ஆனால் சுந்தரம் சம்மதிப்பான் என்று நான் நினைக்கவில்லை."

ஹேமா ரமேஷ் அருகில் வந்தாள். "ரமேஷ் எனக்கு என்று சில சென்டிமெண்ட்ஸ் இருக்கு. அவை உனக்கு ஸில்லியாக தோன்றினாலும் வெளியில் சொல்லாதே. உதாரணமாக நாம் உபயோகிக்கும் படுக்கையை, தட்டுகளை, டம்ளர்களை இன்னொருத்தர் பயன் படுத்தினால் எனக்குப் பிடிக்காது. நினைவில் வைத்துக்கொள்."

"நன்றாக நினைவில் வைத்துக் கொள்கிறேன் தேவி" என்றான்.

ஹேமா வீட்டை ஒழுங்குபடுத்திக்கொண்டே, "மகாராஜா அவர்கள் இன்னிக்கு தர்பாருக்கு போக வேண்டாமா? சாவகாசமாக பேப்பரை படித்துக் கொண்டு இருக்கிறீர்களே?" என்று கேட்டாள்.

"ஊஹூம்." என்றான் ரமேஷ்

ஹேமா வேலையை நிறுத்திவிட்டு அவன் பக்கம் பார்த்தாள்.

"நிஜமாகவா?"

"உன் மீது சத்தியமாக"

ஹேமா அவனருகில் வந்து கழுத்தைச் சுற்றிலும் கைகளை போட்டுக் கொண்டாள். "எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது."

ரமேஷ் ஹேமாவின் இடுப்பைச் சுற்றி கைகளை பிணைத்தான். "உனக்கு மகிழ்ச்சியாக இருக்கும் என்றால் நான் வேலைக்கே போகமாட்டேன்."

"அப்படிச் செய்தால் எப்படி? தினமும் வேலைக்கு போய்க் கொண்டு என்றாவது ஒரு நாள் போகாமல் இருந்தால்தான் மகிழ்ச்சியாக இருக்கும்."

அப்போ நான் வேலையை விட்டால் உனக்குப் பிடிக்காதா?"

"ஊஹூம்," கச்சிதமாக சொன்னாள் ஹேமா. அவன் மனதில்

ஏதோ ஒரு மூலையில் முள் குத்தியதுபோல் சுருக்கென்றது. வேலை போய்விட்டது என்று தெரிந்தால் ஹேமாவின் முகத்தில் இந்த மகிழ்ச்சி நீடிக்குமா?

"மதியம் முழுவதும் என்ன செய்யலாம்?" - ஹேமா யோசித்துக் கொண்டே கேட்டாள்.

"நீயே சொல்லு. வேலைகளை சீக்கிரமாக முடித்துவிட்டாயானால் சினிமாவுக்குப் போவோம்."

"சினிமா வேண்டாம். வீட்டிலேயே இருப்போம். நீ எனக்கு காமெடி கதை ஏதாவது சொல்லு."

"ஊஹூம். இன்னிக்கு காமெடி கதைகளை சொல்லும் மூட் இல்லை. வேண்டுமானால் தேவதாஸ் கதையைச் சொல்கிறேன்."

"தேவதாஸா!" ரொம்ப சோகம். என்னால் தாங்கமுடியாது." - ஹேமா அவனுடைய கிராப்பை கலைத்துக் கொண்டே சொன்னாள்

"சோகத்தை தாங்க முடியாதவர்கள் கோழைகள். கொஞ்சங்கூட துணிச்சல் இல்லாதவர்கள்."

"இருக்கலாம்."

"நீ அந்தப் பிரிவைச் சேர்ந்தவள் இல்லையே. உனக்கு துணிச்சல் அதிகம்."

"அப்படின்னா?"

"என்னைத் திருமணம் செய்துகொள்வதிலேயே உன் துணிச்சல் தெரிகிறது." 'சுதாகரை மறுத்துவிட்டு' என்று சொல்லப் பொனவன் எப்படியோ கட்டுப்படுத்திக் கொண்டான்.

சிரித்துக் கொண்டிருந்த ஹேமாவின் முகம் திடீரென்று களை இழந்தது. சட்டென்று ரமேஷின் கைகளை விடுவித்துக் கொண்டு தொலைவுக்குப் போகப் போனாள். ஆனால் ரமேஷ் மின்னலை போல் கையை நீட்டி ஹேமாவின் புடவைத் தலைபைப் பற்றி அருகில் இழுத்துக் கொண்டான்.

"சாரி மேடம் என்றான்." தான் விளையாட்டாக சொன்ன வார்த்தைகள் ஹேமாவின் மனதை காயப்படுத்திவிட்டதை உணர்ந்தான்.

ஹேமா பதில் சொல்லவில்லை.

"நேற்று இரவு எனக்கு நானே ஒரு சத்தியம் செய்துகொண்டேன் தெரியுமா?" - ரமேஷ் சொன்னான்.

"என்னவென்று?"

"உனக்குக் கொஞ்சம் கூட தேவதனையை தரக்கூடாது என்று."

"வெறுமே சொன்னால் எப்படி? முதுகில் இரண்டு அடி கொடுத்து" _ _"ஹேமாவால் வார்த்தைகளை முடிக்க முடியவில்லை. ரமேஷின் இதழ்கள் ஹேமாவின் இதழ்களை மேற்கொண்டு பேச விடாமல் பலமாக அழுத்தின.

11

ரமேஷ் ஹேமாவின் குடித்தனம் நன்றாக நடந்து கொண்டு இருந்தது. அதிர்ஷ்டவசமாக சுந்தரத்திற்கு இரண்டாவது நாளே, அதே தெருவில் மாடியில் சின்ன அறை வாடகைக்கு கிடைத்தது. ரமேஷ் கட்டாயப்படுத்தியதன் பேரில்தான் சுந்தரம் விருப்பம் இல்லாவிட்டாலும் அட்வான்ஸ் கொடுத்துவிட்டு வந்தான். இந்த இரண்டு நாட்களாக ஹேமாவின் சமையல் அவனுக்கு அமிர்தமாக இருந்தது. இந்த ஊரில் இருக்கும்போது இனி செத்தாலும் ஹோட்டலில் சாப்பிடக்கூடாது என்று தீர்மானித்துக் கொண்டான். இன்னொரு தெருவில் பார்த்திருந்தால் இதைவிட நல்ல அறையே கிடைத்திருக்கும். ஆனால் ஆஃபிசுக்கும், தங்கும் இடத்திற்கும், ஹேமாவின் கை சமையலுக்கும் முடிச்சுப்போட முடியாது. அட்வான்ஸ் கொடுத்துவிட்டு பெட்டி படுக்கையுடன் அந்த அறைக்குக் குடி போய்விட்டான்.

"பேய் பிசாசுகள் குடியிருக்கும் இடம் போல் இருக்கு" என்றான் சுந்தரம்.

"பரவாயில்லை. உன் மனைவியை நினைத்துக் கொண்டே தூங்கி விடு. இனிமையான கனவுகள் வரும்." - ரமேஷ் சொன்னான்.

"என் மனைவியை நினைத்துக் கொண்டு தூங்கினால் என் கனவில் மாமியார்தான் வருவாள்." - சுந்தரம் பெருமூச்சு விட்டான்.

ஒருவாரம் போவதற்குள் சுந்தரம் ஹேமாவுடன் நன்றாக பழகிவிட்டான். வீட்டுக்கு வந்ததும் நேராக சமையல் அறைக்குச்

சென்று, "எங்கே என் சாபி?" என்று உரிமையுடன் கேட்கக் கூடிய சுதந்திரத்தை சம்பாதித்துக் கொண்டான். ஹேமாவுடன் பேசிக்கொண்டே டப்பாக்களின் மூடிகளை திறந்து பார்த்து தேவையான மளிகை சாமான்கள் வாங்கி நிரப்பிக் கொண்டிருந்தான்.

ஒருநாள் ஹேமா அவனுடன் பணத்தை இதுபோல் அனாவசியமாக செலவு செய்ய வேண்டாம் என்று சண்டை போட்டாள். "நான் சும்மா ஒன்றும் தரவில்லை. ரமேஷுக்கு மறுபடியும் வேலை கிடைத்ததும் வட்டியுடன் சேர்த்து வசூல் செய்து கொள்கிறேன். போதுமா!" என்றான் சுந்தரம்.

அப்படிச் சொன்னாலாவது சம்மதிக்கமாட்டாளா என்று எதிர் பார்த்தான்.

சுந்தரத்தின் மூலமாக ரமேஷின் வேலை போய்விட்டதென்று தெரிந்த போது சுற்சிலையாகி விட்டாள்.

"அட கடவுளே! உங்களுக்குத் தெரியாதா? இந்த விஷயத்தை நான்தான் உங்களிடம் சொன்னேன் என்று தெரிந்தால் ரமேஷ் என்னைக் கொன்று புதைத்து விடுவான்." - சுந்தரம் பதட்டமாக சொல்லிவிட்டு வேகமாக அந்த இடத்தை விட்டு வெளியேறி விட்டான்.

அன்று மாலை ரமேஷ் வீட்டுக்கு வரும்போது ஹேமா வீட்டு வேலைகளை அப்படியே போட்டுவிட்டு நாற்காலியில் சோர்வாக அமர்ந்திருந்தாள்.

"என்ன ஹேமா? என்னவோ போல் இருக்கிறாயோ. உடல் நலம் சரியாக இல்லையா?" - ரமேஷ் பதட்டத்துடன் ஹேமாவின் நெற்றி மீது கையை வைத்துக்கொண்டே கேட்டான்.

ஹேமா தலையை உயர்த்தி பார்த்தாள்.

"என்னிடம் இவ்வளவு தைரியமாக பொய் சொல்லுவாய் என்று நான் நினைக்கவில்லை, சொல்லு. இன்னும் எத்தனை விஷயங்களை என்னிடமிருந்து மறைத்திருக்கிறாய்?"

"ஹேமா!"

ஹேமாவின் விழிகளில் கிர்ரென்று நீர் சுழன்றது. "உண்மையைச்

சொல்லு. வேலை போய் விட்டதென்று என்னிடம் ஏன் சொல்லவில்லை? நான் வேதனைப்படுவேன் என்று நினைத்தாயா? அழுது புலம்புவேன் என்று மறைத்துவிட்டாயா..... இல்லை உன்னை தாழ்வாக மதிப்பேன் என்று நினைத்தாயா? சொல்லு. இன்னும் எத்தனை பொய்களை சொல்லி இருக்கிறாய்?"

"ஹேமா! வேலை போய் விட்டதென்று உன்னிடம் சொல்லாதது உண்மைதான். ஆனால் பொய் சொன்னதாக மட்டும் நினைத்து விடாதே."

"இது... இது பொய் இல்லையா?"

"இல்லை. இந்த வேலை போய் விட்டால் வேறு வேலை கிடைக்கும். ஆனால் விஷயத்தைச் சொல்லி உன் கண்களில் தெரியும் மகிழ்ச்சி காணாமல் போக வைப்பதில் எனக்கு விருப்பம் இல்லை. இது பொய் இல்லை. என்னுடைய சுயநலம்."

ஹேமாவின் கோபம் சற்று குறைந்தது. எழுந்து அருகில் வந்தாள்.

"ரமேஷ்! உன்னை கெஞ்சி கேட்டுக் கொள்கிறேன். எந்த விஷயமாக இருந்தாலும் உன் வாயால் கேட்டால் எனக்கு வேதனையாக இருக்காது. அதுவே வேறு ஒருத்தர் மூலமாக தெரியவந்தால் எனக்கு தலைகுனிவாக இருக்கும். செத்துப் போய்விடலாம் என்ற அளவுக்கு வேதனை ஏற்படும்."

"நீ சொன்னது போலவே செய்கிறேன். சரிதானே." - புதிய விஷயத்தை கேட்பது போல் சொன்னான் ரமேஷ்.

12

பணப் பற்றாக்குறை இருந்தாலும் ஹேமா ரமேஷின் குடித்தனம் சுகமாகத்தான் நடந்துகொண்டு இருந்தது. அந்தத் தெருவில் எல்லோரும் முதலில் ஹேமாவை வீட்டை விட்டு ஓடி வந்துவிட்டவள் என்று தாழ்வாக மதித்தார்கள். இதை உணர்ந்த ரமேஷ் வீட்டை மாற்றிவிட வேண்டும் என்று முயற்சி செய்தான். ஆனால் ஹேமா சம்மதிக்கவில்லை. தண்ணீர் கஷ்டமும் இல்லை. யாரோ ஏதோ நினைத்துக் கொண்டால் நமக்கு என்ன வந்தது? சில நாட்கள் போனால் அவர்களே புரிந்து கொள்வார்கள். புரிந்து கொள்ளாவிட்டாலும் பரவாயில்லை என்று பிடிவாதம் பிடித்தாள்.

ஹேமா சொன்னதுதான் நடந்தது. ஆரம்பத்தில் ஹேமா பேச முன் வந்தாலும் முகத்தைத் திருப்பிக் கொண்டு போய்க் கொண்டிருந்த அம்மாமிகள், தங்களுடைய குழந்தைகள் ஹேமாவிடம் பேசிக் கொண்டிருப்பது கண்ணில் பட்டால் ஒரு அடி கொடுத்து இழுத்துக் கொண்டு உள்ளே போகும் இல்லத்தரசிகள் போகப் போக ஹேமாவின் சுபாவம் புரிந்த பிறகு மதிப்புடன் நடத்தத் தொடங்கினார்கள். ஹேமா சேஷாத்ரியின் தங்கை என்றும், ரமேஷை திருமணம் செய்துகொண்டு அந்த வீட்டுக்கு வந்திருக்கிறாள் என்றும் தெரிந்த பிறகு கௌரவமாக பார்க்க ஆரம்பித்தார்கள்.

ரமேஷ் வேலைக்காக தீவிரமாக முயற்சி செய்து கொண்டிருந்தான். பலன்தான் கிடைக்கவில்லை. ஹேமாவுடன் அவன் திருமணம் நடந்த கதை மக்களுக்கிடையில் பிரபலமாகிவிட்டதால் ட்யூஷன்களும் கிடைக்கவில்லை.

ஹேமாவுக்கு ரங்கநாயகி அளித்திருந்த பயிற்சி வீண் போகவில்லை. எதிரில் இருப்பவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் தன்னுடைய பணிவான நடத்தையினால், கனிவான பேச்சினால், நல்லத் தனத்தினால் எல்லோருடைய பாராட்டுகளையும் பெற்றுவிட்டாள்.

எதிர்வீட்டுப் பெண்ணுக்கு வயர்கூடை பின்னுவதை சொல்லிக் கொடுப்பதுடன் தொடங்கிய அறிமுகம், அங்கு வந்து போகும் பெண்களுடன் வளர்ந்து, மெல்ல மெல்லமாய் அந்தத் தெருவில் இருக்கும் பெண்கள் எல்லோரும் ஹேமாவை தங்களுக்குள் ஒருத்தியாய் நினைத்து, கஷ்ட சுகங்களை சொல்லிக் கொள்ளும் அளவுக்கு வளர்ந்துவிட்டது.

ஹேமா எதிர்வீட்டு மாமியின் சிபாரிசுடன் இரண்டு வீடுகளுக்கு போய் தையல் கற்றுக் கொடுக்கத் தொடங்கினாள். பிறகு லேடீஸ் கிளப்பில் டைலரிங் வகுப்புகளை எடுக்க ஆரம்பித்தாள். இதைத் தவிர ஐந்தாறு சின்னக் குழந்தைகளுக்கு ட்யூஷன் சொல்லித் தருவதற்கும் ஒப்புக் கொண்டாள். எல்லாம் சேர்த்து பெரிய அளவில் வருமானம் வராவிட்டாலும், தினப்படி செலவுகளுக்கு தட்டுப்பாடு இல்லாமல் குடித்தனம் ஓடிக் கொண்டிருந்தது.

இரண்டு மாதங்கள் கழிந்தன. ஹேமாவின் குடித்தனம் நன்றாக

கிளை நூலகம், தூக்கணாங்குளம்...

ஸ்திரப்பட்டுவிட்டது. ஹேமாவுக்கு வரும் வருமானத்திலும், வேண்டாமென்று சொன்னாலும் கேட்காமல் சுந்தரம் அடிக்கடி செய்யும் உதவிகளாலும் வீட்டில் எந்தப் பிரச்சனையும் இருக்கவில்லை. ஆனால் ரமேஷுக்குத்தான் கொஞ்சம் கூட மன அமைதி இல்லாமல் போய்விட்டது. வாழ்க்கையில் மறுபடியும் தன்னால் சம்பாதிக்க முடியுமா? என்ற வேதனை அவனைத் துளைத்துக் கொண்டிருந்தது.

ஹேமா கடிகாரத்தோடு போட்டி போட்டிக் கொண்டு, மூச்சு எடுக்கவும் நேரமில்லாதவள் போல் பரபரப்பாக ஓடிக் கொண்டிருந்தாள். ரமேஷுக்கு பொழுது போவது ரொம்ப கஷ்டமாக இருந்தது.

புதியதாக திருமணம் ஆன தம்பதிகள். கணவனுக்கு வேலை இல்லை. மனைவிக்கோ ஒரு நிமிடம் ஓய்வு இல்லை. அக்கம் பக்கத்து வீடுகளில் இருக்கும் ஆண்கள் தன்னைப் பற்றி செய்யும் விமரிசனங்கள் ரமேஷின் காதில் விழுந்து கொண்டுதான் இருந்தன.

ஒருமுறை அவன் பெட்டிக்கடையில் சிகரெட் பெட்டியை வாங்கிக் கொண்டு திரும்பிவந்து கொண்டிருந்தான். பின்னாலிருந்து யாரோ, 'அவனுக்கென்ன? கொடுத்து வைத்த மகராஜன். மனைவி சம்பாதித்துக் கொண்டு வந்து தருகிறாள். மைனர் போல் செல வழித்துக் கொண்டிருக்கிறான். நம் வீட்டுப் பெண்களும் இருக்கிறார்கள். எதற்கு? சும்மா சாப்பிட்டு, சாப்பிட்டு தூங்கத்தான் அவர்களுக்குத் தெரியும், என்று நக்கலாக சொன்னதும் அதற்கு பதில் சொல்வது போல், ச்சி, ச்சி இதுவும் ஒரு அதிர்ஷ்டமா? வெட்கமில்லாத ஜென்மங்கள், என்று எகத்தாளம் செய்ததும் ரமேஷின் காதுகளில் ஸ்பஷ்டமாக விழுந்தது.

திடீரென்று அவன் முகத்தில் ரத்தம் வேகமாக பாய்ந்தது. சரேலென்று பின்னால் திரும்பி அப்படிச் சொன்னவனின் காலரைப் பற்றி இழுத்து ஒரு அறை கன்னத்தில் கொடுக்க வேண்டும் என்று பலமாக தோன்றியது. எப்படியோ கட்டுப்படுத்திக் கொண்டு வீட்டுக்குத் திரும்பி வந்தான்.

அன்றிலிருந்து அவன் சிகரெட் பிடிப்பதை நிறுத்தி விட்டான்.

ஆனால் இது போன்ற விஷயங்களை ஹேமா சட்டென்று

கிளை நூலகம், தூத்துக்குடி வடக்கு

புரிந்து கொண்டுவிடுவாள். ஒருநாள் மதியம் எதற்காக்வோ மேஜை டிராயரை திறந்த ஹேமாவுக்கு ரமேஷின் செலவுகளுக்காக அவள் தனியாக வைத்திருந்த பணம் அப்படியே இருந்தது கண்ணில் பட்டது.

ஹேமா பர்ஸை டிராயரில் போட்டுவிட்டு புத்தகம் படித்துக் கொண்டிருந்த ரமேஷின் அருகில் சென்றாள். "உன்னை உடனே டாக்டரிடம் அழைத்துப் போகணும். கிளம்பு" என்றாள்.

"எதுக்கு" வியப்புடன் பார்த்தான்.

"ஒருநாளைக்கு இரண்டு பெட்டி சிகரெட்டுகளை பிடிப்பவன், மூன்று நாட்களாக ஒரு சிகரெட்கூட பிடிக்கவில்லை. புது நோய் ஏதாவது தாக்கியிருக்குமோ? என்னவோ?"

ரமேஷுக்கு புரிந்துவிட்டது. சிரித்துக் கொண்டே சொன்னான்.

"ஊஹும். அப்படி எதுவும் இல்லை. ஹேமா சிகரெட் பிடித்தால் கான்சர் வரும் என்று நேற்று பேப்பரில் படித்தேன். அதான் விட்டுவிட்டேன்."

"நேற்று பேப்பரில் படித்தால் அதற்கு முதல்நாளே எப்படி விட்டாயாம்."

"இல்லை. இல்லை. நேற்றிலிருந்து விட்டேன்."

"என்னை ஏமாற்ற முடியாது. கணக்கு எழுதி வைத்திருக்கிறேன்." சீரியஸாக சொன்னாள். ரமேஷ் பிடிப்பட்டு விட்டவன் போல் பார்த்தான்.

ஹேமா டிராயரை திறந்து சிகரெட் பெட்டியை எடுத்து வந்து சிகரெட்டை ரமேஷின் வாயில் வைத்து பற்ற வைத்தாள்.

"சிகரெட் பழக்கத்தை விட்டுவிடுவதாக இருந்தால் ஒரேயடியாக விடாமல் கொஞ்சம் கொஞ்சமாக விடுவது நல்லது."

"சிகரெட் பிடிக்காமல் என்னால் இருக்க முடியும் ஹேமா

"முடியும் என்றால் எனக்கும் சந்தோஷம்தான். ஆனால் இப்போ இல்லை. நீ வேலையில் சேர்ந்த பிறகு விட்டுவிடு. அந்த பணத்தை எல்லாம் சேர்த்து நான் நகைகள் வாங்கிக் கொள்கிறேன்."

"அட! சிகரெட் இவ்வளவு ருசியாக இருந்து இதுவரையில் நான் பார்த்தது இல்லை. நீ பற்ற வைத்ததால்தான் இந்த ருசி வந்திருக்கு இனிமேல் இந்த வேலையை நீதான் செய்ய வேண்டும்."

"மகாராஜாவின் உத்தரவு. அப்பொ நான் ட்யூஷன்களுக்கு நடுவில் வீட்டுக்கு வர வேண்டியிருக்குமே."

"இப்பொ வேண்டாம். எனக்கு வேலை கிடைத்த பிறகு" - உடனே திருத்தம் செய்தான் ரமேஷ்.

அன்றிலிருந்து ஹேமாவே தினமும் ஒரு சிகரெட் பாக்கெட்டை வாங்கி டிராயரில் வைக்கத் தொடங்கினாள்.

ரமேஷ் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை ஷேவ் செய்து கொள்ள ஆரம்பித்தான்.

"இந்த சிக்கனம் எப்பொழுதிலிருந்து?" - ஹேமா கேட்டாள்.

"நான் எங்கேயும் வெளியில் போகப் போவதில்லையே?" என்றான் ரமேஷ்.

"அப்படி என்றால் நாம் நீட்டாக இருப்பது மற்றவர்களுக்காக மட்டும்தானா?"

"நூற்றுக்கு தொன்னூறு பேர் அப்படித்தான் என்றான்."

அன்று இரவு ஹேமா தன்னுடைய படுக்கையை கீழே போட்டுக் கொண்டாள்.

"என்ன ஆச்சு?" ரமேஷ் வியப்புடன் கேட்டான்.

"உன் பக்கத்தில் படுத்துக் கொண்டால் உன்னுடைய தாடி என்னை குத்தும். எனக்கு தூக்கம் வராது."

ரமேஷ் உடனே எழுந்து கையோடு ஷேவ் செய்து கொண்டான்.

அந்த விதமாக சின்னச் சின்ன சச்சரவுகளுடன், சமாதானங்களுடன் ஹேமாவுடன் புதுக்குடித்தனம் சுவர்க்கம் போல் இருந்தால், வெளி ஆட்கள் வீசும் ஈட்டியை போன்ற பேச்சுகள் நரகத்தை நினைவுப்படுத்திக் கொண்டிருந்தன. அந்த நரகத்தை நினைவுப் படுத்திக் கொண்டிருந்தன. அந்த நரகத்தையே விஷம்போல் விழுங்கிக் கொண்டு, சுவர்க்கம் என்ற அமிருதத்தை பருகிக் கொண்டு இரவுகள் வேகமாகவும், பகல்கள் நத்தையை போல் ஊர்ந்து கொண்

டும். ஆக மொத்தம் நாட்கள் போய்க் கொண்டிருந்தன.

ஹேமாவுக்குக் கொஞ்சம்கூட வேதனையை தரக்கூடாது என்று ரமேஷ் எவ்வளவு திடமாக செய்திருந்தானோ, அதற்கு நேர் மாறாக ஏதோ ஒரு விஷயத்தில் ஹேமாவுக்கு வேதனை ஏற்படும்விதமாக நிகழ்ந்து கொண்டிருந்தது.

ரமேஷ், ஹேமாவின் குடித்தனம் ஒருவருக்கொருவர் உயிராய், பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளும் மகிழ்ச்சியுடன் அமைதியாக நடந்து கொண்டிருந்தாலும், மற்றவர்களின் கேலிப் பேச்சுக்களை, விமரிசனங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. வேடிக்கை என்ன வென்றால் அந்தச் சொற்கள் ஹேமாவைவிட ரமேஷை அதிகமாக பாதித்துக் கொண்டிருந்தன.

ஹேமா மற்ற உலகத்தாருடன் தனக்கு எந்த சம்பந்தமும் இல்லாதது போலவும், தன்னுடைய உலகம் ரமேஷைச் சுற்றி பிணைந்திருப்பது போலவும் அந்தச் சின்ன வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

இதற்கு முன்னாலும் ரமேஷ் பலதடவை வேலை இல்லாமல் இருந்திருக்கிறான். கையில் பணம் இல்லாமல் கஷ்டப்பட்டிருக்கிறான். ஆனால் இந்த முறை நிலைமை வேறு. எல்லாவற்றையும்விட ஹேமாவின் வருமானத்தில் குடும்பம் நடத்த வேண்டிய சூழ்நிலை அவன் மனதை ரொம்பவும் பாதித்துக் கொண்டு இருந்தது. ஏற்கனவே தங்களுடைய திருமணத்தைப் பற்றி பலர் பல விதமாகப் பேசி வருகிறார்கள். அது போதாது என்று ஹேமா இப்படி வீடு வீடாக போய் ட்யூஷன் சொல்லித் தந்தால் மேலும் எப்படி பேசுவார்கள் என்று அவனுக்குத் தெரியாமல் இல்லை. ஹேமாவை ட்யூஷன்களுக்குப் போக வேண்டாமென்று தடுக்கும் எண்ணம் அவனுக்கு பலதடவை வந்தது.

"வேண்டாம் ஹேமா, எனக்கு வேதனையாக இருக்கிறது" என்று ஒரு தடவை சொன்னால் போதும் ஹேமா போகாமல் இருந்து விடுவாள். ஏன் என்று காரணம் கூட கேட்கமாட்டாள். இந்த ஆதாரத்தையும் விட்டுவிட்டால் கடைசியில் சாப்பாட்டுக்கும் திண்டாட்டம் வந்துவிடும். தன்னால் சம்பாதிக்க முடியவில்லை என்ற ஒரே காரணத்திற்காக ஹேமாவுக்கு வரும் வருமானத்தை விட்டுவிடச் சொல்வது என்ன நியாயம்? மககள் சிரிக்கிறார்களா?

சிரிக்கட்டும். கேலி செய்கிறார்களா? செய்யட்டும். தற்போது பொறுமையாக இருப்பதை தவிர ரமேஷுக்கு வேறு வழி தெரியவில்லை.

அன்று காலையில் சுந்தரம் சாப்பிடும்போது, தனக்குத் தெரிந்த செருப்பு கடையில் சேல்ஸ்மேன் வேலை காலியாக இருப்பதாகவும், போய் விசாரிக்கச் சொல்லி சொன்னான். ரமேஷ் உடனே சாப்பாடு கூட சாப்பிடாமல் அந்த செருப்பு கம்பெனியை தேடிக்கொண்டு போனான். ஆனால் அரை மணிக்கு முன்தான் அந்த வேலைக்கு ஆளை எடுத்து விட்டதாக சொன்னார்கள். அதைக் கேட்டதும் அவனை ஏமாற்றம் சூழ்ந்து கொண்டது. எங்கே போனாலும் போட்டி — போட்டி — மனிதனின் வாழ்க்கை எப்போதும் ஓட்டப் பந்தயம்தான். கொஞ்சம் அசந்தால் போதும், பின்னால் இருப்பவன் ஒரே தள்ளாய் தள்ளி விட்டு முன்னால் போய்விடுவான். அந்தச் தள்ளலில் சில வருடங்கள், சில வாழ்க்கைகள், சிலருடைய எதிர்காலமே பின்தங்கி விடும்.

ரமேஷ் ரொம்ப எரிச்சலுடன், அதிருப்தியுடன் வீட்டுக்கு திரும்பி வந்தான். அவனுக்கு வேண்டுமென்று தோன்றவில்லை. ஆனால் சாப்பிடவில்லை என்றால் வீட்டுக்கு வந்த பிறகு சமைத்த உணவு அப்படியே இருப்பதை பார்த்து ரகளை செய்வாள்.

விருப்பம் இல்லாவிட்டாலும், வேறுவழி இல்லாமல் அவன் எழுந்துகொள்ளும் போது இரண்டு பெண்கள் தயங்கிக் கொண்டே உள்ளே எட்டிப் பார்த்தார்கள்.

"ஹேமா இருக்கும் வீடு இதுதானே?" என்று கேட்டாள் ஒருத்தி.

"ஆமாம். உள்ளே வாங்க. உட்காருங்கள். ஹேமா அடுத்த வீட்டுக்குப் போயிருக்கிறாள். இப்பொழுதே வந்துவிடுவாள். வரச்சொல்லி தகவல் சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டு வெளியில் வந்துவிட்டாள்.

வந்த இருவரில் பச்சை நிறபட்டுப் புடவையை கட்டிக் கொண்டு, முத்து ஜிமிக்கி அணிந்திருந்த பெண்ணை சேஷாத்ரி வீட்டில் ஓரிருமுறை பார்த்திருப்பதாக அவனுக்கு நினைவு வந்தது.

ரமேஷ் பக்கத்தது வீட்டுப் பையனை அழைத்து, "டேவிட்! அந்த

கடைசி வீட்டில் ஆண்டீ இருப்பாள். யாரோ வந்திருக்கிறார்கள், உடனே நான் வரச்சொன்னதாகச் சொல்லி கையோடு அழைத்துக் கொண்டு வா" என்று அனுப்பினான்.

பத்தே நிமிடங்களில் ஹேமா அந்தப் பையனுடன் திரும்பி வந்தாள். வெளியிலேயே நின்றுகொண்டிருந்த ரமேஷை பதட்டத்துடன் பார்த்துக்கொண்டே யாரு "வந்திருக்கிறார்கள்?" என்று கேட்டாள்.

"எனக்குத் தெரியாது. உன்னுடைய சிநேகிதிகள் என்று நினைக்கிறேன். உள்ளே உட்காரச் சொல்லியிருக்கிறேன். ஹேமா! நான் சற்று நேரம் வெளியில் போய் விட்டு வரட்டுமா?" என்றான். அவனுடைய தயக்கத்தை ஹேமா புரிந்து கொண்டாள். வெயிலில் அலைந்து திரிந்து வந்திருப்பதை வாடிப்போன அவன்முகமே பறைச்சாற்றிக் கொண்டிருந்தது.

"எங்கும் போக வேண்டாம். வீட்டுக்குப் போலாம் வா" என்றாள்.

"ஹேமா வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்கும் போதே, சுப்புலக்ஷ்மி! நீயா?" என்றாள் வியப்புடன்.

"நான்தான் வேறு யாரோ என்று நினைத்து விட்டாயா? உன் வீட்டைக் கண்டுபிடிக்க அலைந்த அலைச்சலில் தலைசுற்றல் வந்து விட்டது தெரியுமா?" என்றாள்.

"அப்படியானால் ஜூஸ் கலந்து தருகிறேன். அதைக் குடித்தால் சுற்றிக் கொண்டிருக்கும் உன் தலை சரியாகிவிடும்." - ஹேமா சமையல் அறை பக்கம் போகப் போனாள்.

"இப்பொ எதுவும் வேண்டாம். நாங்க இன்னும் நிறைய இடங்களுக்கு போகணும்" என்று சொல்லிக்கொண்டே சுப்புலக்ஷ்மி எழுந்து கொண்டாள். ஹேமாவிடம் குங்குமச்சிமிழை நீட்டினாள். "நாளை மாலை எங்கள் வீட்டிற்கு வரவேண்டும். என் மகளின் பிறந்தநாள் விழா" என்றாள்.

"ஓகே." என்றாள் ஹேமா.

"அம்மா ஓகே என்றால் போறாது. உன் கணவரையும் அழைத்துக் கொண்டு வர வேண்டும். எல்லோரும் வர வேண்டும் என்றுதான் டீ பார்ட்டீயாக ஏற்பாடு செய்யச்சொல்லி என் கணவர்

சொன்னார்" என்றவள் ரமேஷ் பக்கம் திரும்பி, "நீங்களும் கட்டாயம் வர வேண்டும். எங்களவர் நாளை காலையில் தான் ஊரிலிருந்து வருகிறார். இல்லாவிட்டால் அவரே வந்து உங்களை அழைத்திருப்பார்" என்றாள்.

"அதனால் என்ன? கட்டாயம் வருகிறோம்" என்றாள் ஹேமா.

சுப்புலக்ஷ்மி வாயால் பேசிக்கொண்டிருந்தாலும் பார்வையாலேயே வீட்டை அளப்பதை, நடுநடுவில் ரமேஷையும் பரிசிலிப்பது போல் பார்ப்பதை ஹேமா கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்.

அவர்களை வழியனுப்புவதற்காக ஹேமா வாசல்வரை சென்றாள். சுப்புலக்ஷ்மி போகும் முன் மறுபடியும்," ஹேமா! நாகபூஷணம் மகன் சுதாகரை மறுத்துவிட்டு நீ யாருக்கும் தெரியாமல் இந்த ஆளை திருமணம் செய்துகொண்டிருக்கிறாய். உன் கணவரை பார்க்க வேண்டும் என்று நம் க்ரூப்பில் எல்லோரும் துடித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் யாருக்கும் நீ இருக்கும் இடமே தெரியவில்லை. நாளைக்கு கட்டாயம் வா. வருவாய் இல்லையா" மற்றொரு முறை எச்சரித்து விட்டு போனாள்.

வாசற்படியில் நின்றுகொண்டு சுப்புலக்ஷ்மி சொன்ன வார்த்தைகள் இம்மி பிசகாமல் ரமேஷின் காதில் விழுந்தன. சுதாகரின் பெயரைக் கேட்டதும் அவன் முகம் சிவந்து விட்டது. ஹேமாவுடன் திருமணம் நடந்த விஷயம் ஊர் முழுவதும் பரவிவிட்டது போலும். இந்த சுதாகர் கண்ணுக்குத் தெரியாத எதிரியாக வாழ்நாள் முழுவதும் தன்னை துரத்திக்கொண்டு இருப்பான் போலும். அவன் தாடை எலும்பு இறுகியது. சுதாகரை விட ரமேஷை திருமணம் செய்து கொண்டதால்தான் ஹேமா அதிர்ஷ்டசாலியாகி விட்டாள் என்று இந்த உலகம் ஒப்புக் கொள்ளும் நாள் என்றாவது வருமா? வந்துதான் ஆக வேண்டும். அந்த நாளை தான் சந்திக்கத்தான் போகிறான். அதுவரையில் தான் உலகத்தாரின் பார்வையில் ஹேமாவுக்கு வர இருந்த அதிர்ஷ்டத்தை கொள்ளை அடித்துவிட்ட கொள்ளைக் காரனாகத்தான் தென்பட்டுக் கொண்டிருப்பான்.

செய்யாத குற்றத்திற்கு தான் அனுபவிக்கும் தண்டனை இது.

மறுநாள் மதியம் ——

ஹேமா லேடீஸ் கிளப்பில் தையல் வகுப்பு எடுப்பதற்காக அவசர அவசரமாக தயாராகிக் கொண்டு இருந்தாள். அங்கிருந்து அப்படியே ட்யூசனை முடித்துவிட்டு வீடு திரும்ப ஏழுமணி ஆகிவிடும்.

ரமேஷ் மாலையில் போக வேண்டிய பிறந்த நாள் விழாவை பற்றி ஹேமாவுக்கு நினைவுப்படுத்தினான்.

"நான் போகப் போவதில்லை." - ஹேமா சொன்னாள்.

"ஏன்?"

எனக்கு விருப்பம் இல்லை.

"கட்டாயம் வருகிறேன் என்று நேற்று அவளிடம் சொன்னாயே?" - ரமேஷ் வியப்புடன் பார்த்தான்.

"சும்மா மரியாதைக்காக அப்படிச் சொன்னேன். உண்மையில் எனக்கும் அந்த சுப்புலக்ஷ்மிக்கும் ஆழமான நட்பு எதுவும் இல்லை. என்மீது அளவு கடந்த அன்பு இருந்து அவள் என்னைக் கூப்பிட வரவில்லை. நான் எப்படி இருக்கிறேன்? என் குடித்தனம் எப்படி இருக்கு என்று வேவு பார்க்க வந்தாள். பார்த்தாள். போய்விட்டாள்."

ரமேஷ் ஒரு நிமிடம் மௌனமாக இருந்தான். பிறகு மென்மையான குரலில் சொன்னான்.

"ஹேமா! இப்படி உனக்கு நீயே வட்டம் போட்டுக் கொளவது எனக்கு சரி என்று படவில்லை. உன் அண்ணி கடிதம் எழுதி எத்தனை நாளாகிறது? நானும் எத்தனையோ முறை சொல்லி விட்டேன். சுசிலா மாமி வீட்டில் உன் அண்ணி உனக்காக வைத்து விட்டுப் போன பெட்டியை கொண்டு வந்தாயா? இல்லை. இப்போ இவர்கள் அழைத்திருக்கிறார்கள். போக மறுக்கிறாய். அவர்கள் எந்த எண்ணத்தில் கூப்பிட்டாலும் போக வேண்டியது நியாயம்."

"நான் போக மாட்டேன். எனக்கு என்னவோ போல் இருக்கும்."

"நீ இத்தனை கோழை என்று நான் கனவில் கூட நினைக்க வில்லை."

"நானா கோழையா! சுப்புலக்ஷ்மி போகும்போது சொன்னது உன் காதில் விழவில்லையோ என்னவோ. நான் யாருக்கும் தெரியாமல் ரகசியமாக உன்னைத் திருமணம் செய்து கொண்டு விட்டேனாம். உன்னைப் பார்க்க வேண்டும் என்று அவர்கள் துடியாய் துடித்துக் கொண்டு இருக்கிறார்களாம்."

"அப்படியா. நானும் வருகிறேன். வா போகலாம்."

"எனக்கு விருப்பம் இல்லை. அவர்கள் பார்க்க வேண்டும் என்று சொன்னதற்காக, சந்தையில் மாட்டை காட்டுவதுபோல் உன்னை அழைத்துப்போய் காட்சிப் பொருளாக வைக்கச் சொல்கிறாயா?"- ரோஷத்துடன் கேட்டாள்.

"நீ ஏன் அப்படி நினைக்க வேண்டும்? ஓரிரு தடவை ஆர்வத்துடன் பார்ப்பார்கள். பேசிக்கொள்வார்கள். அதன்பிறகு அதுவே பழகிப் போய்விடும். இன்று நீ போகாமல் இருந்தால் நான்கு பேருக்கு மத்தியில் வருவதற்கு நாம் வெட்கப்படுகிறோம் என்று நினைத்துக் கொள்வார்கள். நாம் எந்த தவறும் செய்யவில்லை. யாருக்கும் பயப்படத் தேவையில்லை. நீ இன்று போகவில்லை என்றால் இந்த இரண்டும் உண்மைதான் என்று எல்லோரும் நினைத்துக் கொள்வார்கள்."

"ஹேமா கையில் இருந்த புத்தகங்களை மேஜைமீது வீசி எறிந்தாள். சரி_ வா போகலாம்" என்றாள்.

தன் வார்த்தைகள் ஹேமாவை எந்த அளவுக்கு காயப்படுத்தி இருக்கிறதென்று களை இழந்த அவள் முகமே பறைச்சாற்றியது. ஆனாலும் பரவாயில்லை. தான் எப்படியும் இந்த சமுதாயத்திலிருந்து விலக்கப்பட்ட மனிதனாக இத்தனை நாள் வாழந்து கொண்டுதான் இருக்கிறான். ஹேமாவின் மூலமாய் தான் அந்த சமுதாயத்தோடு உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர, தன்னால் ஹேமா அந்த சமுதாயத்தை பிரிந்து வெளியில் வரக் கூடாது. ஒரு ஆணாக அதிலும் ஒரு பிரம்மசாரியாக இத்தனை நாள் சமுதாயம் தன்னைப் பார்த்த கேலி பார்வைகளை தான் அவ்வளவாக லட்சியப்படுத்தவில்லை. இன்றைய நிலைமை வேறு. திருமணம் ஆன ஒரு பெண்ணாக ஹேமாவுக்கு சமுதாயத்தில் ஒரு நிலையான இடம் இருக்க வேண்டியது அவசியம். ஹேமாவுக்காக

தான் எது வேண்டுமானாலும் பொறுத்துக் கொள்வான். இந்த சமுதாயம் வைக்கும் பலவிதமான பரீட்சைகளை எதிர்நோக்கி நிற்பான்.

அன்று ஹேமா லேடீஸ் கிளப்புக்குப்போகவில்லை. மாலை ஆனதும் இருவரும் சுப்புலக்ஷ்மி வீட்டுக்குக் கிளம்பினார்கள். ஹேமா தயாராகிக் கொண்டிருக்கும்போதே, 'ரமேஷ், இதோ வந்து விடுகிறேன்" என்று சொல்லி விட்டு வெளியில் சென்றான். கால்மணி நேரம் கழித்து திரும்பி வந்தான். அவன் கையில் சிவப்பு ரிப்பன் சுற்றிய அழகான பாக்கெட் ஒன்று இருந்தது.

"பொம்மையை வாங்கி வந்தேன் என்றான்."

"விலை எவ்வளவு?" - ஹேமா கேட்டாள்.

ரமேஷ் சொன்னான்.

"அம்மாடி! அவ்வளவு விலையா?"

"அவர்கள் வசதி படைத்தவர்கள் என்று சொன்னாயே?"

"இருந்தால் மட்டும்? மலைமீது இருக்கும் கடவுளுக்கு மலை யையே காணிக்கையாக கொடுக்க முடியுமா? நம்முடைய நிலை மைக்கு ஏற்றாற்போல் நாம் கொடுக்க வேண்டும். நம்மைபோல் இருப்பவர்கள் விலை உயர்ந்த பரிசு கொடுத்தாலும் நன்றாக இருக் காது. பெருமைக்காக கொடுத்ததுபோல் இருக்கும்" -ஹேமாவின் குரல் தீவிரமாக ஒலித்தது.

"நம் நிலைமையா? ஏனோ என் நினைவுக்கு வரவில்லை. கடை யில் போனதும் இந்த பொம்மை நன்றாக இருக்கிறதே என்று தோன்றியது. வாங்கிவிட்டேன். விலை அதிகமா— இல்லையா என்ற விஷயமே என் மனதில் தோன்றவில்லை. தவறு என்னுடையதுதான்."

"ரமேஷ்! என்னுடைய எண்ணம் அது இல்லை." - ஹேமா சட்டென்று சொன்னாள்.

"பரவாயில்லை ஹேமா! எதுவாக இருந்தாலும் ஏற்றுக் கொள் ளும் பொறுமை எனக்கு இருக்கிறது. நேரமாகிவிட்டது. வா— போக லாம்" என்றான்.

ஹேமா சொன்னதுதான் அங்கே நடந்தது. சுப்புலக்ஷ்மி மகனுடைய பிறந்தநாள் விழாவை ஆடம்பரமாக, பெரிய அளவில் ஏற்பாடு செய்திருந்தாள்.

விருந்தாளிகள் நிறைய பேர் வந்திருந்தார்கள். ரமேஷ், ஹேமாவை பார்த்ததும் சுப்புலக்ஷ்மி ஒரு நிமிடம் தடுமாறி விட்டாள்.

"அட! வந்துவிட்டீர்களா? வரமாட்டீர்கள் என்று நினைத்தேனே" என்றாள். அந்த வார்த்தைகள் சொன்ன சொல் தவறாமல் அவர்கள் வந்ததற்கு பாராட்டுவதுபோல் இருக்கவில்லை. ஏதோ சங்கடத்தில் மாட்டிக் கொண்டது போல் தென்பட்டாள்.

ரமேஷ், ஹேமா உள்ளே வந்தார்கள்.

ஹேமா பெண்கள் கும்பலுடன் சேர்ந்துகொண்டாள். ரமேஷ் ஆண்கள் இருந்த பக்கம் போய் உட்கார்ந்து கொண்டான். சுப்பு லக்ஷ்மி வந்த விருந்தாளிகளை ஒவ்வொருத்தராய் தன் கணவருக்கு அறிமுகப்படுத்திக் கொண்டிருப்பதை ரமேஷ் கவனித்தான். சுப்புலக்ஷ்மியின் தந்தை விருந்தாளிகளை வரவேற்று உபசரித்துக் கொண்டிருந்தார்.

வந்திருந்தவர்களில் வக்கீல்கள், டாக்டர்கள், வியாபாரப்புள்ளி கள் என்று பலதரப்பட்ட மக்கள் இருந்தார்கள். சுப்புலக்ஷ்மியின் ரமேஷ் பக்கம் பார்க்கவே இல்லை. பார்த்தால் அவனை தன் கணவருக்கு அறிமுகப்படுத்த வேண்டியிருக்குமோ என்று பயந்து விட்டவள் போல் ரமேஷை தவிர்த்துக் கொண்டிருந்தாள்.

பார்ட்டியின் நடுவில் ஹேமா சுப்புலக்ஷ்மியின் மகனை தூக்கிக் கொண்டு வந்து ரமேஷிடம் காண்பித்தாள். அவனுக்குக் கைக் குழந்தைகள் என்றால் ரொம்பவும் பிடிக்கும். குழந்தைகளின் களங்க மற்ற சிரிப்பு அவனை எப்போதும் ஈர்த்துவிடும்

சுப்புலக்ஷ்மியின் மகன் ரமேஷின் ஷர்ட்டை ஈரமாக்கி விட்டான். பக்கத்தில் இருந்தவர்கள் கலகலவென்று சிரித்தார்கள்.

"உங்களுக்கு குழந்தைகள் இருக்கிறார்களா?" - வயதான மாமி ஒருத்தி கேட்டாள். இல்லை என்பது போல் ரமேஷ் தலையை அசைத்தான்.

"உங்களுக்கு முதன்முதலில் மகன்தான் பிறக்கப் போகிறான்." - சிரித்துக் கொண்டே வாழத்துவது போல் அந்த அம்மாள் சொன்னாள்.

ரமேஷின் பார்வையும் ஹேமாவின் பார்வையும் சந்தித்துக் கொண்டன. ஹேமாவின் கண்கள் ஒரு நிமிடம் ஒளி வீசிவிட்டு பிறகு வெட்கப்படுவது போல் தாழ்ந்து விட்டன.

ரமேஷின் கையிலிருந்து குழந்தையை எடுத்துக் கொண்டு ஹேமா அங்கிருந்து போய் விட்டாள். ரமேஷுக்கு அந்த அம்மாள் சொன்ன வார்த்தைகள் ரொம்ப இனிமையாய் இருந்தன. தங்களை ஆசிர் வாதம் செய்வதுபோல் திரும்பத் திரும்ப மனதில் எதிரொலித்தன.

குழந்தையை தூக்கிக் கொண்டு தொலைவில் போய்க் கொண்டிருந்த ஹேமாவின் மீது அவன் பார்வை நிலைத்துவிட்டது. அவன் கண்கள் முன்னால் அழகான கனவு ஒன்று ஒரு நிமிடம் தோன்றி மறைந்தது.

பார்டியிலிருந்து வீட்டுக்கு திரும்பி வந்ததும் ஹேமா சுச்சிதமாக சொல்லி விட்டாள்.

"இனி இது போன்ற விஷயங்களில் நீ சொன்ன பேச்சை நான் கேட்கப் போவதில்லை. புரிந்ததா, நன்றாக நினைவில் வைத்துக் கொள்."

"ஓ.கே." - ரமேஷ் உடனே சம்மதித்து விட்டான்.

"இப்பொழுதாவது ஒப்புக் கொள்கிறாயா? சுப்புலக்ஷ்மி நம்மை மனபூர்வமாக அழைக்கவில்லை என்று."

"உன்னுடன் நன்றாகத்தானே பேசினாள்."

"என்னுடன் பேசினால்? உன்னுடன் பேசினாளா? குறைந்த பட்சம் உன்னை அவளுடைய கணவருக்கு அறிமுகப்படுத்தவும் இல்லை. நான் கவனிக்க வில்லை என்று நினைத்தாயா?"

"அறிமுகம் செய்து வைக்கும் அளவுக்கு நான் ஒன்றும் பெரிய மனிதன் இல்லையே?"

"அவளுடைய கணவர் மட்டும் என்னவாம்? அப்படி பார்த்தால்

அங்கே வந்த எல்லாரும் பெரிய மனிதர்களா என்ன? வீடு தேடி வந்து நம்மை அழைப்பானேன்? இப்படி நடந்து கொள்வானேன்? இந்த விஷயம் உனக்கு வேதனையாக இல்லையோ என்னவோ, எனக்கு மட்டும் தலைகுனிவாக, ரொம்ப அவமானமாக இருக்கு." வேகமாய் உள்ளே போய் விட்டாள்.

ஹேமாவுக்கு இந்த உலகத்தைப் பற்றி கொஞ்சம்கூட தெரிய வில்லை. தெரிந்திருந்தால் இப்படி வேதனைப் படமாட்டாள். உண்மையிலேயே ரமேஷுக்கு சுப்புலக்ஷ்மி நடந்து கொண்டமுறை அவமானம் தருவதாகத் தோன்றவில்லை. நியாயமாக பார்க்கப் போனால் அந்த இடத்திற்கு போயிருக்கக்கூடாது. தான் போக வில்லை என்றால் ஹேமாவும் போகமாட்டாள். ஹேமாவுக்கு எதுவுமே தெரியவில்லை. பைத்தியக்காரி. அங்கே வந்தவர்களுக்கு என்ன இல்லை, பணம் இருக்கிறது. கார், பங்களா, அந்தஸ்து எல் லாமே இருக்கின்றன. உண்மையில் இந்த உலகில் நியாய, அநியாயங் களை, நேர்மையானவர்களை, சுயவர்களை தனித்தனியாக பிரித்துக் காட்டும் எல்லைக்கோடு எதுவும் இல்லை. அங்கே வந்தவர்களில் பிரமுக சமூகசேவகி என்று பெயர் பெற்ற ஷீலா தேவியின் வாழ்க்கை வரலாறு யாருக்குத்தான் தெரியாது? சிறந்த மருத்துவர் என்று பெயர் எடுத்த கோபாலனின் அந்தரங்க வாழ்க்கை பற்றி அறியாதவர் கள் யார்? எல்லோருக்கும் எல்லாம் தெரியும். காரியம் ஆகும் என் றால் போதும் எல்லோரும் எல்லாவற்றையும் மறந்து விடுவார்கள். இல்லாத மதிப்பை கொடுப்பார்கள். இந்த மக்களை தோல் பொம்மைகளை போல் ஆட்டுவிக்க வேண்டும் என்றால் நிறைய பணம் இருக்க வேண்டும். பணம் இருந்தால் போதும். சமுதா யத்தைத் தேடி தான் போக வேண்டியதில்லை. மதிப்பையும். கௌர வத்தையும் உடன் அழைத்துக் கொண்டு அதுவே நம்மைத் தேடிக் கொண்டு வரும். எங்கே பார்த்தாலும் பணம். பணம். ஹேமாவை சந்தோஷமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றால், பத்து பேருக்கு நடுவில் தலைநிமிர்ந்து நடக்க வேண்டும் என்றால், நிலை யான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்றால், எல்லாவற்றுக்கும் பணம்தான் முக்கியம் என்று அவனுக்குத் தோன்றியது.

விதவிதமான பட்டுப் புடவைகளில், விலை உயர்ந்த நகைகளை அணிந்து கொண்டு, தங்களுடைய அந்தஸ்தை பரைச்சாற்றிக் கொள்ளும் விதமாக பார்டியில் நடமாடிக் கொண்டிருந்த அந்தப் பெண்களுக்கு நடுவில் ஹேமா சாதாரணமான புடவையில் இருந்தது, ஏழ்மையை சுட்டிக் காட்டுவது போல் இருந்தது. ஹேமாவுக்கு ஒரு ஸ்டேடஸ் வர வேண்டும் என்றால் வாழ்க்கையில் தான் உயர வேண்டும். அது ரொம்ப முக்கியம்.

14

சுசீலாமாமி வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரி ஹேமாவின் வீட்டை தேடிக் கொண்டு, "அம்மா! சுற்றிச் சுற்றி உங்கள் வீட்டை கண்டு பிடிப்பதற்குள் போதும், போதும் என்றாகிவிட்டது தாயி. சுசீலாம்மா உன்னை கையோடு வரச்சொன்னாங்க" என்று தகவல் தெரிவித்துவிட்டுப் போய் விட்டாள்.

அதைக் கேட்டதும் ரமேஷ் "கிளம்பு, கிளம்பு" என்று அவசரப் படுத்தினான்.

"விஷயம் என்னவாக இருக்கும்?" ஹேமா மளமளவென்று புடவையை மாற்றிக் கொண்டே சந்தேகத்தை வெளியிட்டாள்.

"ஒருக்கால் உன் அண்ணி கொடுத்துவிட்டு போன பெட்டியை எடுத்துப் போவதற்காக இருக்குமோ?" ரமேஷ் காரணத்தை ஊகிக்க முயன்றான்.

ஹேமா தலையை குறுக்காக அசைத்தாள். "ஊஹூம். அதுவாக இருந்தால் செத்தாலும் அந்தப் பெட்டியை எடுத்துக் கொண்டு வரமாட்டேன்."

"கொண்டுவர மாட்டாயா? ஏன்?"

"ஏன் என்றால், என் நினைவுகளை கூட வெறுப்பது போல் எல்லாவற்றையும் மூட்டை கட்டி வெளியில் வீசினால் அதை நான் எடுத்துக் கொண்டு வர வேண்டுமா?" ஹேமா ரோஷத்துடன் கேட்டாள்.

வாசல் வரையில் சென்ற ஹேமா ஒரு நிமிடம் தயங்கிவிட்டு மறுபடியும் உள்ளே வந்தாள்.

"என்ன ஆச்சு ?" ரமேஷ் கேட்டான்.

"ஊஹூம். நான் தனியாகப் போகமாட்டேன். நீயும் என்னுடன் வா."

"நானா?" ரமேஷ் ஷேவ் பண்ணாத முகவாய் கட்டையை தடவிக் கொண்டே கேட்டான்.

பரவாயில்லை. நன்றாகத்தான் இருக்கு. உடனே கிளம்பு. அந்த செய்தி என்னவாக இருக்குமோ? என்னவோ? நீயும் கூட இருந்தால் தான் எனக்கு தைரியமாக இருக்கும்.

ரமேஷ் மறு பேச்சு பேசாமல் எழுந்து உடைகளை மாற்றிக் கொண்டு கிளம்பினான்.

இருவரும் போய் சேரும்போது சுசிலா மாமி வீட்டில் இருந்தாள். அதிர்ஷ்டவசமாய் அங்கே வேறு யாரும் இருக்கவில்லை.

ரமேஷ் க்ரில் கேட் இருந்த வராண்டாவிலேயே நின்று கொண்டான். அந்த அம்மாள் சுருக்கமாய் "உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்று நாற்காலியை சுட்டிக் காட்டினாள். பிறகு ஹேமாவை உள்ளே அழைத்துச் சென்றாள்.

இருவரும் உள்ளே போனதும், "உட்காரு ஹேமா. எப்படி இருக்கிறாய்? உன்னைப் பார்த்து ரொம்ப நாளாகி விட்டது" என்று குசலம் விசாரித்தாள்.

ஹேமா நன்றாக இருக்கிறேன் என்பதுபோல் தலையை அசைத்து விட்டு, அங்கேயே இருந்த கட்டில் மீது உட்கார்ந்து கொண்டாள்.

"புதுக்குடித்தனம் எப்படி இருக்கு?"

"நன்றாகத்தான் இருக்கிறது. அண்ணி, மற்றவர்கள் எல்லோரும் எப்படி இருக்கிறார்கள்? ஊருக்குப் போன பிறகு கடிதம் வந்ததா?" என்று கேட்டாள்.

"நேற்றுதான் வந்தது. இரு கொண்டு வருகிறேன்." அந்த அம்மாள் அலமாரியிடம் சென்றாள்.

"அந்த ஊர் எப்படி இருக்கிறதாம்?"

"கடிதத்தைப் படி. உனக்கே புரியும்." சுசிலா மாமி கடிதத்தை கொண்டு வந்து கொடுத்தாள்.

அண்ணன் இவ்வளவு பிடிவாதமாக இருப்பார் என்று நினைக்க வில்லை. இல்லாவிட்டால் நாங்களே இந்த ஊரைவிட்டு போயிருப் போம். என் காரணமாக மதுவின் படிப்பு பாழாகிவிட்டது. ஹேமா சொல்லிக் கொண்டே கடிதத்தை பிரித்து படிக்கத் தொடங்கினாள்.

ரங்கநாயகி எழுதிய கடிதம் அது.

அன்புள்ள சசிலமா மாமிக்கு,

நீங்கள் நலமாக இருப்பீர்கள் என்று நினைக்கிறேன். நான் இந்த ஊருக்கு வந்து இத்தனை நாள் ஆன பிறகும் கடிதம் எழுதாதது உங்களுக்கு வியப்பாக இருந்திருக்கும். போனதும் கடிதம் போடுவதாக வாக்குக் கொடுத்திருந்த நான், அதைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் போய்விட்டேன். அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய கிரக நிலை சரியாக இல்லைபோலும். எங்களை அழைத்துப் போவதற்காக ரயில் நிலையத்திற்கு மாட்டு வண்டி வந்திருந்தது. ஸ்டேஷனுக்கும், ஊருக்கும் ஒரு மைல் தூரம் இருக்கும். நாங்கள் வண்டியில் வந்த கொண்டிருக்கும் போது எதிரில் வந்த லாரி வேகமாய் மோதிவிட்டது. இந்த விபத்து எப்படி நடந்தது? என்றே தெரியவில்லை. வண்டி குடை சரய்ந்துவிட்டது. எல்லாம் கண் இமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்துவிட்டது. பின்னால் உட்கார்ந்திருந்த எனக்கும், மதுவுக்கும் அவ்வளவாக அடிபடவில்லை. ஆனால் அவருக்குத்தான் நல்ல அடி. அவரை அப்படியே கைத்தாங்கலாக வீட்டுக்கு அழைத்து, புதிய ஊரில் எங்களுடைய வாழ்க்கை இந்த விதமாக தொடங்கியது. இவரை இந்த ஊருக்கு வரச்சொல்லி அழைப்பு விடுத்த விவசாயிகள் ரொம்ப வருத்தப்பட்டுக் கொண்டார்கள். பக்கத்து ஊரிலிருந்து டாக்டரை அழைத்து வந்து வைத்தியம் பார்க்கிறார்கள். அவருடைய வலது கை மறுபடி யும் பழையபடி செயல்படுமா? என்று சந்தேகமாகத்தான் இருக்கிறது. எதுவும் நம் கையில் இல்லை. எல்லாம் அந்த கடவுள் விட்ட வழி. ஹேமா எங்களிடம் சொல்லாமல் திருமணம் செய்து கொண்டுவிட்டாளென்று அன்று

எல்லோரும் கோபித்துக் கொண்டோம். ஆனால் அன்றே எங்கள் கஷ்டங்களுக்கு பிள்ளையார் சுழி போடப் பட்டுவிட்டதென்று தோன்றுகிறது.

ஹேமா வந்தாளா? பெட்டியை எடுத்துக் கொண்டு போனாளா? அவளுக்கு என் ஆசிகள். மது ரொம்ப ரகளை செய்கிறான். அவனுக்கு படிப்பு போய்விட்டதே என்ற கவலையை விட கிரிக்கெட் விளையாட முடியவில்லை என்ற வேதனைதான் அதிகமாக இருக்கிறது. முடிந்த போது பதில் போடுங்கள்.

ரங்கநாயகி

கடிதத்தை படித்து முடித்த போது ஹேமாவின் முகம் வெளிறிப் போய் இருந்தது. கண்களிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந் தது.

"ஹேமா! இப்போ நாம் வருத்தப்படுவதால் எந்த பிரயோஜன மும் இல்லை. இன்று இரவு ரயிலுக்கு நானும், ஜெகதாம்பாளும் சேர்ந்து திருக்காட்டுப்பள்ளிக்கு போகிறோம். உன் அண்ணிக்கு ஏதாவது செய்தி சொல்ல நினைக்கிறாயா?"

ஹேமா பதில் எதுவும் சொல்லாமல் அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தாள்.

உள்ளே சசிலாமாமி ஹேமாவிடம் என்ன சொல்லிக் கொண்டி ருக்கிறாள்? என்று உள்ளூர தவித்துக் கொண்டே பொறுமையை கடைபிடித்து மௌனமான உட்கார்ந்திருந்த ரமேஷ், கண்ணீர் நிறைந்த விழிகளுடன், கையில் கடிதத்தை எடுத்துக் கொண்டு சுழல் காற்று போல் வேகமாக வந்த ஹேமாவை பார்த்ததும், பதட்டத்து டன் நாற்காலியிலிருந்து எழுந்து கொண்டான்.

"என்ன ஆச்சு ஹேமா? யார் எழுதிய கடிதம் அது?" என்று கேட்டான்.

பதில் எதுவும் சொல்லாமல் ஹேமா நீட்டிய கடிதத்தை படித்த தும் அவன் முகம் களை இழந்தது. கடிதத்தை படித்து முடித்து அவன் தலையை உயர்த்தி பார்த்த போது ஹேமா சுவற்றில் சாய்ந்து கொண்டு நிசப்தமாக அழுதுகொண்டிருந்தாள்.

ஹேமா அவன் குரலில் இயலாமை வெளிப்பட்டது.

"சுசிலாமாமி இரவு ரயிலுக்கு திருக்காட்டுப்பள்ளிக்கு போகிறாளாம். நானும் கூட போகிறேன்." கம்மி போன குரலில் சொன்னாள்.

"சரி." உடனே சம்மதம் தெரிவித்தான். ஒரு நிமிடம் தாமதித்து மறுபடியும் சொன்னான். "நானும் கூட வரட்டுமா?"

ஹேமா "தேவை இல்லை" என்பது போல் தலையை அசைத்தாள்.

அதற்குள் சுசிலாமாமி அங்கே வந்தாள். "அங்கே வர வேண்டாம். ஏற்கனவே உடல் நலம் சரியாக இல்லாத உன் அண்ணன் உன்னைப் பார்த்து மேலும் ஆவேசமடையலாம். இரண்டே நாட்களில் நான் திரும்பி வந்து விடுவேன். அங்கே நிலைமை எப்படி இருக்கிறதென்று புரியுமே. வேண்டுமானால் அதற்குப் பிறகு நீ போய் வரலாம் உங்க அண்ணி உன்னிடம் தகவல் தெரிவிக்கச் சொல்லி எழுதவே இல்லை. எனக்குத்தான் மனசு கேட்கவில்லை. வேலைக்காரியிடம் உனக்கு செய்தி அனுப்பினேன். அந்த கடிதத்தை படித்த பிறகு எனக்கு கையும் காலும் ஓடவில்லை."

ரமேஷுக்கும் சுசிலா மாமி சொன்னது சரி என்றுபட்டது. "அப்படியே செய்வோம் ஹேமா!" வேண்டுவது போல் சொன்னான்.

ஹேமாவால் எதுவும் சொல்ல முடியவில்லை.

"உன் அண்ணி உன்னுடைய புடவைகளை, பொருட்களை ஒரு பெட்டியில் வைத்து அதை என்னிடம் கொடுத்துவிட்டு போயிருக்கிறாள்". சுசீலா மாமி நினைவுபடுத்தினாள்.

"இருக்கட்டும். பிறகு எப்பொழுதாவது எடுத்துக் கொள்கிறேன்." சட்டென்று சொன்னாள் ஹேமா. வேறு ஒரு சமயமாக இருந்தால் பெட்டியை எடுத்துக் கொள்ளச் சொல்லி ரமேஷ் வற்புறுத்தியிருப்பானோ? என்னவோ? இப்போ அவனும் எதுவும் சொல்லவில்லை.

பத்து நிமடங்கள் கழித்து, ரமேஷ், ஹேமா சுசீலா மாமிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, ஊரிலிருந்து திரும்பி வந்ததும் தகவல் சொல்ல வேண்டும் என்று உறுதிமொழியை பெற்றுக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பினார்கள்.

அவர்கள் படி இறங்கிக் கொண்டிருந்த போது வாசலில் ரிக்ஷா வந்து நின்றது. அதிலிருந்து கீழே இறங்கிய ஜெகதாம்பாய் எதிரே வந்தாள். ஹேமாவை பார்த்ததும் பெரிதாக கத்த ஆரம்பித்தாள்.

"அடியே! ராட்சசி இங்கேயும் வந்துவிட்டாயா? உன் அண்ணனுக்கு நேர்ந்த சுதியை கேட்டாயா? உன்னால் ஆன உபகாரம் இது. உன் கைராசி அப்படி. உங்களுக்கென்ன? நீங்க நன்றாகத்தான் இருக்கீங்க. என் மகளின் வாழ்க்கைதான் நாசமாகி விட்டது. உரத்த குரலில் கத்திக் கொண்டே படபடவென்று விரல்களை முறித்தாள். அப்படி ஓடிப் போகிறவள் வேறு ஊருக்காவது போயிருக்கக் கூடாதா? எங்கள் தலையெழுத்து. இதே ஊரில் எங்கள் கண் முன்னால் குடித்தனம் வேறு நடத்திக் கொண்டு இருக்கிறாய். கர்மம். கர்மம். எங்கே போனாலும் இதே பேச்சுதான். தலை நிமிர்ந்து நடக்க முடியாமல் செத்துக் கொண்டிருக்கிறோம்."

"மாமி!" ஹேமா அடியுண்ட பெண் புலியை போல் ஜெகதாம்பாய் மீது பாயப்போனாள்.

ஆனால் சட்டென்று ரமேஷின் கை ஹேமாவின் கையை அழுத்தமாக பற்றி தடுத்தது.

ரத்தம் முழுவதும் முகத்தில் பாய்ந்துவிட்டது போல் அவன் முகம் சிவந்து கன்றி விட்டது. உண்மைதான். ஆனால் குரல் மட்டும் ரொம்ப மென்மையாக பொறுமையை கடைபிடிப்பது போல் ஒலித்தது.

"ஹேமா! வீட்டுக்கு போகலாம் வா"என்று சொல்லிக்கொண்டே ஹேமாவின் தோள்களை பற்றி வலுக்கட்டாயமாக முன்னால் நடத்திச் சென்றான்.

"வெட்கம், மானம் இருந்தால்தானே. கையை கோர்த்துக் கொண்டு தெரு தெருவாக உலா வருவது ஒன்றுதான் குறைச்சல். தங்களை மிஞ்சிய பேர் இல்லை என்பதுபோல் சுப்புலட்சுமி வீட்டில் நடந்த பார்டிக்கு வந்து விட்டார்களாம். சுப்பலட்சுமியின் தாய் சொன்னாள். ச்சி, ச்சீ, ரோஷம் கெட்ட ஜென்மங்கள்." - ஜெகதாம்பாள் காரித் துப்பினாள்.

ஆனால் தங்கள் முகத்தின் மீதே துப்பியது போல் இருந்தது அந்த

இருவருக்கும். ஹேமா சரேலென்று பின்னால் திரும்பப் போனாள். ஆனால் ரமேஷின் பிடி மேலும் இறுகியதால் சாத்தியப்படவில்லை.

"நீ என்னை எதற்காக தடுத்து நிறுத்தினாய்? இன்று நான் அந்த அம்மாளின் வாயை மூட வைத்திருப்பேன்." - திரும்பிக் போகும் வழியில் ஹேமா கோபமாக சொன்னாள்.

"உன் அண்ணி கடிதத்தில் எழுதியதை மறந்துவிட்டாயா? ஹேமா!" நினைவுப்படுத்தினான்.

"உண்மைதான்" ரங்கநாயகியின் கடிதம் நினைவுக்கு வந்ததும் ஹேமாவின் கோபம் தணிந்துவிட்டது.

"இந்தச் சமயத்தில் நாம் பொறுமையாக இருப்பதுதான் நல்லது ஹேமா!" விமர்சனங்களை எதிர்த்துப் போராடுவதைவிட தற்போது அவற்றை பொருட்படுத்தாமல் இருப்பதுதான் சரி."

"என்னை வளர்த்த அண்ணன், அண்ணி ஏதாவது சொன்னால் அதில் நியாயம் இருக்கிறது. நடுவில் இந்த அம்மாள் யாரு என்னைக் குற்றம் சொல்வதற்கு? நான் ஏன் பொறுத்துக் கொள்ள வேண்டும்? ஆரம்பத்திலிருந்தே அந்த அம்மாளுக்கு என்னைக் கண்டால் ஆகாது. எப்போதும் ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பாள். அண்ணி என்னை சரியாக வளர்க்கவில்லை என்று குற்றம் சாட்டுவாள். நாம் தவறு செய்துவிட்டதாக நினைத்தால் பொறுப்பு உள்ள பெரியவர்களாக எடுத்துச் சொல்லலாம். இல்லையா? அந்த அம்மாள் செய்யும் பூஜையும், பக்தியும் உண்மையானது என்றால் நல்ல மனசுடன் நம்மை மன்னித்து வாழ்த்தியிருக்க வேண்டும். ஆனால் அந்த வெசவுகள் எதுக்கு? அந்த அம்மாள் செய்யும் பூஜைகள் எல்லாம் உதட்டளவில்தான். உள்ளத்தில் எதுவும் இல்லை. சின்ன வயது முதல் அந்த அம்மாளை பார்த்துக் கொண்டுதான் வருகிறேன். ஜபம் செய்வதாகச் சொல்லி சுவாமி அறையில் உட்கார்ந்துகொள்வாள். ஆனால் அடிக்கடி கண்ணைத் திறந்து நானும், மதுவும் எதையாவது சாப்பிடுகிறோமோ, ரகளை செய்கிறோமோ என்று கண்காணித்துக் கொண்டே, சத்தம் போட்டுக் கொண்டிருப்பாள்.

அன்று இரவு ஹேமா தூக்கத்தில் இரண்டு முறை, "அதோ! அண்ணன் வந்து விட்டான். என்னைக் கூப்பிடுகிறான்" என்று எழுந்து

உட்கார்ந்து கொண்டாள்.

அதுவரையில் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்த ரமேஷ் ஹேமாவின் தோளில் தட்டினான்.

"ஹேமா! கனவு ஏதாவது கண்டாயா? உன்னைத்தான்."

"அதோ! அண்ணன் கூப்பிடுகிறான். போய்க் கதவைத் திறக்கணும்!" ஹேமா கட்டிலைவிட்டு இறங்கப் போனாள்.

"ஹேமா! உன்னைத்தான். விழித்துக்கொள்" ரமேஷ் ஹேமாவின் தோள்களைப் பற்றி உலுக்கினான்.

சுய உணர்வு பெற்றவள் போல் கண்களைத் திறந்து குழப்பத்துடன் ரமேஷை பார்த்தாள். ரமேஷ் டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து ஹேமாவை குடிக்க வைத்தான்.

"கனவுதானா? அண்ணன் வரவில்லையா? நிஜமாகவே அழைத்தது போல் இருந்ததே" என்று மறுபடியும் படுத்துக் கொண்டாள்.

சற்று நேரம் கழித்து சுவற்று பக்கம் திரும்பிப்படுத்திருந்த ஹேமா நிசப்தமாக அழுது கொண்டிருப்பதை ரமேஷ் உணர்ந்தான். வலது கையை ஹேமாவின் கழுத்துக்குக் கீழே கொடுத்து இடது கையால் அவளுடைய இடையை பற்றி வலுக்கட்டாயமாக தன் பக்கம் திருப்பிக் கொண்டான். ஹேமாவின் முகம் அவன் முழங்கை வளைவில் புதைந்து விட்டது.

"ஹேமா! என்ன இது? அழுதுகொண்டு இருக்கிறாயா?

"ரமேஷ்! அண்ணனை பார்க்காமல் என்னால் இருக்க முடியாது. இனியும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. நாம் இருவரும் நாளைக்கே திருக்காட்டுப்பள்ளிக்குப் போவோம். அவர்கள் என்னை அடிக்கட்டும். கோபித்துக்கொள்ளட்டும். எது வேண்டுமானாலும் செய்யட்டும். என்னை அங்கே அழைத்துப் போவது உன் பொறுப்பு."

"சரி ஹேமா."

"நீயே சொல்லு. நான் செய்தது தவறா? நம் நிலைமைக்கு மிஞ்சிய வரனை அண்ணன் எதுக்காக பார்க்க வேண்டும்? அண்ணன் அதை முடிவு செய்துவிடப் போகிறார் என்று பயந்துதான் நான் நம்

திருமணத்திற்கு அவசரப்பட்டேன். அந்த நிச்சய தாம்பூலமும், நம் திருமணமும் ஒரே நாளில் அமைந்ததால் வந்த வினை இது. இதெல்லாம் என்னுடைய துரதிர்ஷ்டம்தான்."

திருமணம் ஆனது முதல், இன்று வரை ஹேமாவின் இதயத்தில் அடக்கி வைக்கப்பட்டிருந்த வேதனை இன்று மடைதிறந்து வெள்ள மாக வெளியேறிக் கொண்டிருந்தது.

அந்த வெள்ளத்தில் ஹேமாவின் மனதில் ஏதோ ஒரு மூலையில் மறைந்திருந்த உணர்வுகள் எல்லாம் ரமேஷின் கண்களுக்கு முன் னால் வெளிப்பட்டுக் கொண்டு இருந்தன.

"அன்று நான் பிடிவாதம் பிடித்து, உன்னை சம்மதிக்க வைக்கா மல் இருந்தால், நீயும் கடவுள் போல் ஒப்புக் கொள்ளாமல் இருந் தால் அண்ணன் கட்டாயம் அந்த திருமணத்தை நடத்தியிருப்பான். வாழ்நாள் முழுவதும் கடனில் மூழ்கியிருப்பான். ரமேஷ் என் மன தில் இருக்கும் உத்தேசம் இது என்று அண்ணனிடம் சொல்லு. நீ சொன்னால் கட்டாயம் கேட்டுக் கொள்வான். பிரச்சனை எவ்வளவு தீவிரமானதாக இருந்தாலும் நயமாக எடுத்துச் சொல்லும் திறமை உனக்கு இருக்கிறது. அண்ணனை சமாதானப்படுத்த உன்னால் முடியும் என்ற தைரியத்தில்தான் துணிந்து இந்தக் காரியத்தில் இறங்கினேன்."

ஹேமா எவ்வளவு பைத்தியக்காரி. யாரோ பணக்காரனுக்கு தன்னை கட்டிக் கொடுத்து அண்ணன் கடனாளி ஆகிவிடப் போகி றான் என்று பயந்து உன் தங்கை என்னைத் திருமணம் செய்து கொண்டாள் என்று சேஷாத்ரியிடம் நான் சொல்ல வேண்டுமாம்.

ஆனால் தன் விஷயம் என்ன? ஹேமாவுக்கு உதவி செய்யும் நோக் கத்துடன் மட்டுமேதான் இந்தத் திருமணத்தை செய்து கொண் டானா? அதைவிட வேறு எதுவும் இல்லையா? ஹேமாவும் அண்ண னின் குடும்ப நலனை முன்னிட்டுதான் தன்னை கைப்பற்றினாளா, இல்லை.... இல்லை. ஹேமாவுடன் அவன் நடத்திய திருமண வாழ்க்கை அது உண்மையில்லை என்று பரைச்சாற்றியது. அண்ண னுக்கு துன்பத்தை விளைவித்து விட்டோம் என்ற வேதனையில் ஹேமாவுக்கு தான் என்ன பேசுகிறோம் என்று தெரியவில்லை.

ஹேமா அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். "ரமேஷ்! உன் னிடமிருந்து நான் வேறு எந்த ஐஸ்வரியங்களையும் கேட்கவில்லை. ஆனால் அண்ணனுக்கு என் மீது இருக்கும் கோபம் போகும் வித மாகச் செய்ய வேண்டும். செய்வாய் இல்லையா? இந்த திருமணம் காரணமாக அண்ணன் என்னைவிட்டு சாசுவதமாக பிரிந்து போனால், உன்னைத் திருமணம் செய்து கொண்ட சந்தோஷம் எனக்குக் கொஞ்சம் கூட இருக்காது."

"அப்படியே செய்கிறேன் ஹேமா!" - அவன் மனம் பாரமாகி விட்டது. இருந்தாலும் வாக்குக் கொடுத்தான்.

சற்று நேரம் கழித்து, தன் கைமீது தலையை வைத்துக் கொண்டு உறங்கிவிட்ட ஹேமாவை மெதுவாக நகர்த்தி படுக்க வைத்தான். கட்டிலைவிட்டு இறங்கிவந்து நாற்காலியில் அமர்ந்து கொண்டான். அவன் மனதில் பலவிதமான எண்ணங்கள் அலை மோதிக் கொண்டிருந்தன. சிகரெட்டின் நுனி சிவப்பாக கனன்று கொண்டிருந்தது.

அவன் கண் முன்னால் மாலையில் ஜெகதாம்பாள் காரித் துப்பிய காட்சி நிழலாடியது. அவன் இதயம் அவமானத்தால் தகித்துக் கொண்டிருந்தது.

மறுநாள் காலையில் ரமேஷ் ஹேமாவிடம், "ஹேமா! மாலை ரயிலுக்குப் போகலாமா?" என்று கேட்டான்.

"எங்கே ?"

"திருக்காட்டுப்பள்ளிக்கு."

"திருக்காட்டுப்பள்ளிக்கா? எதுக்கு?"

"போக வேண்டும் என்று நேற்று இரவு சொன்னாயே?" நினைவுப்படுத்தினான்.

"நான் சொன்னேனா? கனவு ஏதாவது கண்டாயா?"

காபி கோப்பையை எடுத்துக்கொண்டு போகப் போன ஹேமாவை ரமேஷ் கையை பற்றி தடுத்து நிறுத்தினான். என்ன என்பது போல் பார்த்தாள் ஹேமா. ரமேஷ் அவள் கண்களுக்குள் எதையோ தேடுவதுபோல் பார்த்தான்.

"உன் அண்ணனிடம் போக வேண்டுமென்று உனக்கு இல்லையா?"

"இல்லை."

"உண்மையாகத்தான் சொல்கிறாயா?"

"ஆமாம்."

ரமேஷ் கையை விட்டுவிட்டான்.

அதற்குள், "ரமேஷ்! வீட்டில் இருக்கிறாயா?" என்று கேட்டுக் கொண்டே சுந்தரம் உள்ளே வந்தான். அவன் முகம் சோர்வாக இருந்தது.

"ரமேஷ்! இந்த அநியாயத்தை கேட்டாயா? என் மனைவி என்னையே கோர்ட்டுக்கு இழுக்கப் போகிறாளாம். என் பெற்றோர்களின் தூண்டுதலினால் நான் அவளை ஹிம்சித்துக் கொண்டு இருக்கிறேனாம். இந்தப் பெண்கள் எவ்வளவு துணிந்து விட்டார்கள் பார்த்தாயா? வீட்டுக்கு வரச் சொல்லி அப்பா தகவல் சொல்லி அனுப்பியிருக்கிறார். எனக்கோ லீவ் கிடைக்காது."

"மூர்க்கமாக பிடிவாதம் பிடிவாதத்தால் இப்படித்தான். நீ அந்தப் பெண்ணை குடித்தனத்திற்கு அழைத்து வரவேண்டும் என்று திட்டம் போட்டால், அந்தப் பெண் உனக்கே விலங்கு போட நினைக்கிறாள் போலும்."

"என் அம்மா, அப்பா சொன்ன பேச்சை கேட்டு நான் அவளை துன்புறுத்தி வந்தேனாம். நாங்க அப்படிப்பட்ட மனிதர்களா? ச்சீ, ச்சி பாழாய் போன திருமணம். எந்த முஹூர்த்தத்தில் நடந்ததோ, ஒரு நிமிடம் கூட மனதிற்கு அமைதி இல்லை. இந்த கூத்துக்குத்தான் என்னுடைய அப்பா அவ்வளவு செலவு செய்து இந்தக் கல்யாணத்தை பண்ணி வைத்தார் போலும். திருமண மேடையிலும் மறுமுழிச்சுக்கு போன போதும் அந்தப் பெண்ணை பார்த்ததுதான். அதற்குப் பிறகு அவளை பார்க்கவே இல்லை."

"இவ்வளவு சண்டை போடுவதற்கு பதில், நடுவர்களை யாராவது வைத்துக் கொண்டு சமாதானமாக போகலாம் இல்லையா?"

"என் அப்பாவின் முட்டாள்தனத்தினால் அந்த வழியும் இல்லை

யென்றாகிவிட்டது. என் திருமணத்தை முடித்துத் தந்த தரகரிடம் கோர்ட்டுக்கு போவதாக சொல்லி சத்தம் போட்டாராம். அந்த முட்டாள் நேராக அந்த செய்தியை பெண் வீட்டாரின் காதில் போட்டு விட்டானாம். இந்த காலத்தில் யாரையுமே நம்பமுடியவில்லை."

"போகட்டும். அந்த தரகரையே பேச்சு வார்த்தைக்கு போகச் சொல்லி கேட்டுக் கொண்டால்?"

"அதுவும் ஆகிவிட்டது. திருமணம் முடியும் வரையில்தான் என்னுடைய பொறுப்பு. குடித்தனம் நிலைக்க வைப்பது தன் வேலை இல்லை என்று நீர்மானமாக சொல்லிவிட்டான். ராஸ்கல்! திருமணத்தில் இரண்டு பக்கமும் கமிஷனை அடித்துவிட்டான்."

"இப்போ என்ன செய்யப் போகிறாய்?"

"என்ன செய்யப் போகிறேனா? கோர்ட்டுக் போகச் சொல்லு அவர்களை. நான் யாரென்று அவர்களுக்கு புரியவைக்கிறேன். அவர்கள் சொன்னால் போதுமா? நான் எப்படிப்பட்டவன் என்றும், என் பெற்றோர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றும் உலகத்திற்கு தெரியாதா?"

"உலகம் வந்து கோர்ட்டில் சாட்சியம் சொல்லப் போவதில்லை."

"ஏன் சொல்லாது? தேவைப்பட்டால் என் திருமணத்திற்கு வந்த உறவினர்களை எல்லோரையும் அழைக்கச் செய்து வீட்டோடு மாப்பிள்ளையாக போவதற்கு நாங்கள் சம்மதிக்கவில்லை என்று சாட்சியம் சொல்ல வைக்கிறேன்."

"நன்றாக இருக்கிறது. கோர்ட்டுக்கு வந்து சாட்சியம் சொல்லணும் என்று அவர்களுக்கு என்ன முடை?"

"என்ன முடையா? மூன்று நாட்கள் வந்து டேரா போட்டுவிட்டு, வயிறு முட்ட விருந்துச் சாப்பாடு சாப்பிட்டார்களே?"

"நீ இப்படி சாட்சியம் சொல்ல கோர்ட்டுக்கு வரச் சொல்வாய் என்று தெரிந்திருந்தால் ஒருத்தரும் வந்திருக்க மாட்டார்களோ என்னவோ? உனக்கு புத்தி இல்லை சுந்தரம். உனக்கு இந்த தண்டனை வேண்டியதுதான். நீ என்ன சின்னக் குழந்தையா? இதில் மற்றவர்களின் தலையிடு எதற்கு? நேராக போய் உன் மனைவியிடம்

வருவாயா? மாட்டாயா? என்று கேட்டு இந்த விவகாரத்தை தீர்த்து கட்டுவதை விட்டு விட்டு கோர்ட், கேஸ் என்று இழுத்தடிப்பார் களா?"

"நன்றாக சொன்னாய் போ. என் மாமியார் போன்றவர்களுடன் உனக்கு அறிமுகமே இல்லை போலும். இருந்தால் இது போன்ற அறிவுரையை கனவில்கூட வழங்க மாட்டாய்" என்றவன் எழுந்து கொண்டான்" ஹேமா! சமையல் ஆகிவிட்டதா?" என்று கேட்டுக் கொண்டே சமையல் அறையை நோக்கிச் சென்றான்.

சுந்தரத்தை பொறுத்தவரையில் ரமேஷைவிட ஹேமாதான் நல்ல வள். அவன் சொல்வதை எல்லாம் வாயைத் திறக்காமல் கேட்டுக் கொண்டு இரக்கம் தெரிவிப்பாள். ரமேஷ் அப்படி இல்லை. கூட்டை கூய்ச்சி இழுப்பது போல் ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பான்.

சுந்தரம் சாப்பிட்டுவிட்டு போய்விட்டான். லெச்சுமி வந்து வேலையை செய்துவிட்டு போய்விட்டாள். ஹேமா சமையல் அறையை ஒழித்துக் கொண்டிருந்தாள். ஹேமாவின் மனம் எதிர் மறையான இரண்டு எண்ணங்களுக்கு இடையில் தவித்துக் கொண்டு இருந்தது. அண்ணாவை போய் பார்க்க வேண்டும் என்று எத்தனை தவிப்பாக இருந்ததோ, அவர்களாக வந்து அழைக்கும் வரையில் போகக்கூடாது என்ற பிடிவாதமும் இருந்தது. "நான் என்ன செய்து விட்டேன்? அவர்கள் புரிந்துகொள்ளாமல் என் மீது கோபப்படு கிறார்கள்?" என்று நினைத்துக்கொண்டாள். முதல் நாள் இரவு நிஜ மாகவே அண்ணனை பார்க்காவிட்டால் உயிரோடு இருக்க முடி யாது என்றே நினைத்துவிட்டாள். காலையில் விடிந்ததும் சுசீலா மாமி சொன்னது நினைவுக்கு வந்தது. "ஊரிலிருந்து மாமி வரட் டும்." மனதை சமாதானப்படுத்திக் கொண்டாள். தான் போனால் ரமேஷும் கூட வருவான். அங்கே இன்னொரு தடவை அவனுக்கு அவமானம் நேர்ந்தால் தன்னால் தாங்கிக் கொள்ள முடியாது.

அதற்குள் வெளியிலிருந்து "சாப் கர் மே ஹை" என்று கடினமாக குரல் ஒன்று கேட்டது.

வந்தது யாராக இருக்கும் என்று யோசித்துக் கொண்டே, கையில்

இருந்த வேலையை முடித்துவிட்டு வெளியில் வந்தபோது ரமேஷ் வாசலில் நின்று வந்தவனுடன் பேசிக் கொண்டிருந்தான்.

"நான் நாளைக்கு கட்டாயம் வந்து பார்க்கிறேன். உன் முதலாளி யிடம் சொல்லு." ரமேஷ் நயமான குரலில் சொல்லிக் கொண்டிருந் தான். இருவருக்கும் நடுவில் உரையாடல் ஹிந்தியில் நடந்து கொண்டு இருந்தது.

பெரிய மீசை, உப்பிய கன்னங்கள் கட்டம் போட்ட லுங்கி. அவனை பார்த்தால் ரவுடியை போல் இருந்தான்.

"அதெல்லாம் நடக்காது சாப்! வேண்டுமானால் நாளைக்கு வந்து முதலாளியிடம் பேசிக்கொள். இப்போ பணம் தராமல் இந்த இடத்தைவிட்டு நான் போமாட்டேன்."

சத்தம் போடுவதைத் தவிர மெதுவாக பேச அவனுக்கு தெரியா தது போலிருந்தது. ரமேஷின் குரல் எவ்வளவு தாழ்ந்து இருந்ததோ, அவனுடைய குரல் அவ்வளவு உச்சஸ்தாயில் இருந்தது. அவன் பேச் சில் மரியாதை கொஞ்சம்கூட இருக்கவில்லை.

"நாளைக்கு நான் வந்து பேசிக்கொள்கிறேன்."

"அதெல்லாம் நடக்காது. பணத்தை வாங்கும்போது அடுத்த மாதமே திருப்பிக் கொடுத்து விடுவது போல் டம்பமாக பேசுவீங்க. அப்புறமாய் கண்ணிலேயே படமாட்டீங்க. நான் என்ன அசலையா தரச் சொல்கிறேன். வட்டி பணம் கொடுத்தால் போதும். இன்னிக்கு வா, நாளைக்கு வா என்று அலைக்கழிக்கப்பானேன். உன் வீட்டைச் சுற்றிச் சுற்றி வருவதற்கு நான் என்ன உன்னுடைய வளர்ப்பு நாயா? போகட்டும் போன மாதத்தின் வட்டியையாவது என் முகத்தில் விட்டெறி போய் விடுகிறேன்."

இந்த மாதிரி கத்தி ரகளை செய்து அக்கம் பக்கத்தில் இருப்பவர் கள் எட்டிப் பார்க்கும் விதமாக செய்வது அவனுக்கு ஒரு வேடிக்கை. கடன் வாங்கியவர்களை முதலாளியை விட இவனைப் பார்த்தால் அதிகம் பயப்படுவார்கள். கொடுக்க முடிந்தவர்கள் கொடுப்பார்கள். முடியாதவர்கள் சில்லரை காசை அவன் கையில் வைத்துவிட்டு "தம்பி! நாளைக்கு வாயேன்" என்று கெஞ்சுவார்கள். ரமேஷ் இந்த இரண்டு பிரிவுகளிலும் சேரமாட்டான் என்று அவனுக்கு போன

தடவை வந்த போதே புரிந்துவிட்டது. அதோடு ரமேஷுடன் வசிக்கும் ஹேமாவைப் பற்றி, தெருவின் கடைசியில் இருக்கும் பெட்டிக் கடை சுலேமான் அவ்வளவு மதிப்பாக சொல்லவில்லை. இப்படிப் பட்டவர்களை ரகளை செய்து, மிரட்டுவது என்றால் அவனுக்கு பால் பாயாசம் சாப்பிடுவது போல் இருக்கும்.

இனி பேசுவதில் பயன் இல்லை என்று புரிந்து கொண்ட ரமேஷ் "ஒரு நிமிஷம் இரு" என்று சொல்லிவிட்டு உள்ளே வந்து செருப்பை மாட்டிக்கொண்டு வேகமாக வெளியில் போனான்.

வந்தவனின் பார்வை சரியாக இல்லை என்று சுவனித்த ஹேமா உள்ளே வந்து விட்டாள். அவள் முகம் கோபத்தினாலும், ரோஷத்தினாலும் சிவந்துவிட்டது.

போன வேகத்தில் திரும்பி வந்த ரமேஷ் அவனிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு "இனி கிளம்பு" என்றான்.

"உன்னை போன்றவர்களின் விஷயம் எனக்குத் தெரியாதா? பணத்தை வைத்துக் கொண்டே இல்லை என்று சொல்வீங்க. இத்தனை நேரம் இல்லை என்று சொன்னாய். இப்போ எங்கிருந்து வந்தது? சத்தம் போட்டு ரகளை செய்தால்தான் பணத்தை கொடுப்பீங்க" என்றவன் பணத்தை கணக்கு பார்த்துவிட்டு," ஒருமாத வட்டி தானே இருக்கு. இந்த மாத வட்டி எங்கே?" என்றான்.

"உங்க முதலாளியிடம் பேசிக் கொள்கிறேன். நீ கிளம்பு." - எரிச்சலுடன் சொன்னான் ரமேஷ்.

"அவ்வளவு ரோஷம் எதுக்கு? வட்டி பணத்தை விட்டெறிந்து விட்டால் நீ இரு என்று சொன்னால்கூட இருக்க மாட்டேன்" - அலட்சியமாக சொல்லிவிட்டு போய்விட்டான்.

ரமேஷ் உள்ளே வந்தான்.

"ரமேஷ்! யாரந்த ஆள்?" ஹேமா கேட்டாள்.

"மார்வாடி. கடையில் வேலை செய்கிறவன். நாம் அவனுக்கு பணம் பாக்கி இருக்கிறோம்."

"பாக்கியா! எவ்வளவு?"

"ஐயாயிரம். நூற்றுக்கு பத்து ரூபாய் வட்டி."

ஹேமா மார்பின் மீது கையை வைத்துக்கொண்டாள். "அவ்வளவு பெரிய தொகையா? நூற்றுக்கு பத்து ரூபாய் வட்டியா? இது போன்ற கடனில் மூழ்கியவர்களுக்கு மீட்சி என்பதே இருக்காது."

"நீ பயப்பட தேவையில்லை ஹேமா! பணத்தை பற்றிய கவலையை நீ என்னிடம் விட்டுவிடு"

"நீ மட்டும் எங்கேயிருந்து கொண்டு வருவாய்? எப்படி அடைக்க முடியும் இந்த கடனை? என்னடம் பேச்சு வாக்கில்கூட சொல்லவே இல்லையே?"

ரமேஷ் பதில் சொல்லவில்லை.

ஹேமா பெருமூச்சு விடுத்தாள். கடன் விஷயத்தில் அண்ணனும், அண்ணியும் எதிரிகளை போல் எப்படி சண்டைப் போட்டுக் கொள்வார்கள்? தங்களுடைய நிலைமைக்கு மிஞ்சிய செலவுகளை அண்ணி ஒரு நாளும் விரும்பமாட்டாள். அண்ணனுக்கோ பணத்தின் மதிப்பே தெரியாது. தாராளமாக செலவு செய்வான். அடிக்கடி கடன் வாங்குவான். அந்த கடன்களை அடைக்கும்வரை அண்ணி தூங்கவே மாட்டாள். இது போன்ற பிரச்சனைகளை நடுத்தர குடும்பங்களில் தவிர்க்க முடியாது போலும்.

உள்ளே போகப் போன ஹேமா திடீரென்று நின்றுவிட்டாள். அவள் பார்வை திரைச்சிலையின் மீது விழுந்தது. சரேலென்று திரும்பியவள் ரமேஷ் அருகில் வந்தாள்.

"ரமேஷ்! நமக்கு கடன் இருக்கும்போது இவற்றையெல்லாம் எதற்காக வாங்கி வந்தாய்? அந்தப் பணத்தில் கடனை அடைத்திருக்கலாம் இல்லையா?"

ரமேஷ் முதல்நாள் இரவு முழுவதும் உறங்கவில்லை. அவன் கண்களை நெருப்புத் துண்டங்களாக எரிந்து கொண்டிருந்தன. முதல் நாள் மாலை ஜெகதாம்பாள் செய்த அவமானம் இன்னமும் இதயத்தை அறுத்துக் கொண்டுதான் இருந்தது. எரிகிற தீயில் எண்ணெய் வார்ப்பதுபோல் வட்டி கடைக்காரன் வேறு ரகளை செய்து விட்டு போனான். இந்த சமயத்தில் ஹேமாவுக்கு நயமாக எடுத்துச் சொல்லும் சக்தியோ, பேச்சை மாற்றி நிலைமையை சமாளிக்கும் பொறுமையோ அவனுக்கு இருக்கவில்லை.

தடவை வந்த போதே புரிந்துவிட்டது. அதோடு ரமேஷுடன் வசிக்கும் ஹேமாவைப் பற்றி, தெருவின் கடைசியில் இருக்கும் பெட்டிக் கடை சுலேமான் அவ்வளவு மதிப்பாக சொல்லவில்லை. இப்படிப் பட்டவர்களை ரகளை செய்து, மிரட்டுவது என்றால் அவனுக்கு பால் பாயாசம் சாப்பிடுவது போல் இருக்கும்.

இனி பேசுவதில் பயன் இல்லை என்று புரிந்து கொண்ட ரமேஷ் "ஒரு நிமிஷம் இரு" என்று சொல்லிவிட்டு உள்ளே வந்து செருப்பை மாட்டிக்கொண்டு வேகமாக வெளியில் போனான்.

வந்தவனின் பார்வை சரியாக இல்லை என்று கவனித்த ஹேமா உள்ளே வந்து விட்டாள். அவள் முகம் கோபத்தினாலும், ரோஷத்தினாலும் சிவந்துவிட்டது.

போன வேகத்தில் திரும்பி வந்த ரமேஷ் அவனிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு "இனி கிளம்பு" என்றான்.

"உன்னை போன்றவர்களின் விஷயம் எனக்குத் தெரியாதா? பணத்தை வைத்துக் கொண்டே இல்லை என்று சொல்வீங்க. இத்தனை நேரம் இல்லை என்று சொன்னாய். இப்போ எங்கிருந்து வந்தது? சத்தம் போட்டு ரகளை செய்தால்தான் பணத்தை கொடுப்பீங்க" என்றவன் பணத்தை கணக்கு பார்த்துவிட்டு," ஒருமாத வட்டிதானே இருக்கு. இந்த மாத வட்டி எங்கே?" என்றான்.

"உங்க முதலாளியிடம் பேசிக் கொள்கிறேன். நீ கிளம்பு." - எரிச்சலுடன் சொன்னான் ரமேஷ்.

"அவ்வளவு ரோஷம் எதுக்கு? வட்டி பணத்தை விட்டெறிந்து விட்டால் நீ இரு என்று சொன்னால்கூட இருக்க மாட்டேன்" - அலட்சியமாக சொல்லிவிட்டு போய்விட்டான்.

ரமேஷ் உள்ளே வந்தான்.

"ரமேஷ்! யாரந்த ஆள்?" ஹேமா கேட்டாள்.

"மார்வாடி. கடையில் வேலை செய்கிறவன். நாம் அவனுக்கு பணம் பாக்கி இருக்கிறோம்."

"பாக்கியா! எவ்வளவு?"

"ஐயாயிரம். நூற்றுக்கு பத்து ரூபாய் வட்டி."

ஹேமா மார்பின் மீது கையை வைத்துக்கொண்டாள். "அவ்வளவு பெரிய தொகையா? நூற்றுக்கு பத்து ரூபாய் வட்டியா? இது போன்ற கடனில் மூழ்கியவர்களுக்கு மீட்சி என்பதே இருக்காது."

"நீ பயப்பட தேவையில்லை ஹேமா! பணத்தை பற்றிய கவலையை நீ என்னிடம் விட்டுவிடு"

"நீ மட்டும் எங்கேயிருந்து கொண்டு வருவாய்? எப்படி அடைக்க முடியும் இந்த கடனை? என்னடம் பேச்சு வாக்கில்கூட சொல்லவே இல்லையே?"

ரமேஷ் பதில் சொல்லவில்லை.

ஹேமா பெருமூச்சு விடுத்தாள். கடன் விஷயத்தில் அண்ணனும், அண்ணியும் எதிரிகளை போல் எப்படி சண்டைப் போட்டுக் கொள்வார்கள்? தங்களுடைய நிலைமைக்கு மிஞ்சிய செலவுகளை அண்ணி ஒரு நாளும் விரும்பமாட்டாள். அண்ணனுக்கோ பணத்தின் மதிப்பே தெரியாது. தாராளமாக செலவு செய்வான். அடிக்கடி கடன் வாங்குவான். அந்த கடன்களை அடைக்கும்வரை அண்ணி தூங்கவே மாட்டாள். இது போன்ற பிரச்சனைகளை நடுத்தர குடும்பங்களில் தவிர்க்க முடியாது போலும்.

உள்ளே போகப் போன ஹேமா திடீரென்று நின்றுவிட்டாள். அவள் பார்வை திரைச்சிலையின் மீது விழுந்தது. சரேலென்று திரும்பியவள் ரமேஷ் அருகில் வந்தாள்.

"ரமேஷ்! நமக்கு கடன் இருக்கும்போது இவற்றையெல்லாம் எதற்காக வாங்கி வந்தாய்? அந்தப் பணத்தில் கடனை அடைத்திருக்கலாம் இல்லையா?"

ரமேஷ் முதல்நாள் இரவு முழுவதும் உறங்கவில்லை. அவன் கண்களை நெருப்புத் துண்டங்களாக எரிந்து கொண்டிருந்தன. முதல் நாள் மாலை ஜெகதாம்பாள் செய்த அவமானம் இன்னமும் இதயத்தை அறுத்துக் கொண்டுதான் இருந்தது. எரிகிற தீயில் எண்ணெய் வார்ப்பதுபோல் வட்டி கடைக்காரன் வேறு ரகளை செய்து விட்டு போனான். இந்த சமயத்தில் ஹேமாவுக்கு நயமாக எடுத்துச் சொல்லும் சக்தியோ, பேச்சை மாற்றி நிலைமையை சமாளிக்கும் பொறுமையோ அவனுக்கு இருக்கவில்லை.

"கடனை வைத்துக்கொண்டு நான் அவற்றை வாங்கவில்லை. அவற்றை வாங்குவதற்காகத்தான் கடன வாங்கினேன்."

"என்ன?" ஹேமா வாயடைத்துப் போனவளாய் பார்த்தாள்.

"அன்னிக்கு வீட்டுக்கு வேண்டிய பொருட்களை பட்டியல் போட்டுக் கொடுத்தாய் இல்லையா? அதை வாங்கதான் இந்த கடனை வாங்கினேன்."

"என்ன?" இந்த கர்டன்கள், போர்வைகள் எல்லாம் நூற்றுக்கு பத்து ரூபாய் வட்டி என்று கடன் வங்கிய பணத்தில் வாங்கினாயா? என்னிடம் முன்னாடியே ஏன் சொல்லவில்லை? இவற்றையெல்லாம் வாங்குவதற்கு இப்பொ என்னிடம் பணம் இல்லை ஹேமா என்று ஒரு வார்த்தை, ஒரே ஒரு வார்த்தை என்னிடம் ஏன் சொல்ல வில்லை?"

"இப்பொ மட்டும் என்ன ஆகி விட்டது ஹேமா?" அவன் கண்கள் பொறுமையின்றி தவித்தன. ஹேமா பக்கம் பார்க்க முடியாதவன் போல் தலையை குனிந்து கொண்டான்.

"என்ன ஆகி விட்டதா? இந்த மாதிரி பெருமைகளை கண்டு நான் சந்தோஷப்படுவேன் என்று நினைத்தாயா? இந்த கர்டென்கள், போர்வைகள் இல்லாவிட்டால் உயிர் வாழ முடியாதா? கோப்பைகள் இல்லை என்றால் நம் ஸ்டேடஸ் குறைந்து விடுமா? சாப்பிடுவதற்கு ஸ்டீல் தட்டுக்கள் தான் வேண்டுமா? இலையில் சாப்பிட்டால் ஆகாதா? நீ இப்படி பெருமைக்கு செலவழிப்பவன் என்று நான் நினைக்கவில்லை."

"ஹேமா!" அவன் சரேலென்று தலையை உயர்த்தினான்.

"நீ இப்படி என்னை ஏமாற்றுவாய் என்று நான் கனவில் கூட நினைக்கவில்லை."

"ஹேமா!" அவன் கண்களில் கோபம் கட்டுகளை அவிழ்த்துக் கொண்ட காளையை போல் எட்டிப் பார்த்தது.

"கடன் வாங்கினானாம் கடன். கடன் வாங்கி விருந்து சாப்பாடு சாப்பிட்டால் அடுக்குமா? இப்படி பெருமைக்கு போவானேன்? அந்த கடன்காரனிடம் இப்படி பேச்சு கேட்பானேன்?" ஹேமா கிடுகிடுவென்று போய் வாயிலுக்கும், ஜன்னல்களுக்கும்

போட்டிருந்த கர்டென்களை வேகமாக உருவி கட்டில் மீது போட்டாள். உள்ளே இருந்து கோப்பைகளை, தட்டுகளை கொண்டு வந்தாள். கர்டென்களை சீராக மடித்து வைத்துக் கொண்டிருந்தாள்.

"இவற்றை என்ன செய்யப் போகிறாய்?" ரமேஷ் பயந்து கொண்டே கேட்டான்.

அந்த நிமிடம் ஹேமாவின் முகத்தைப் பார்த்தால் அந்த கோப்பைகளை அவன் முகத்தில் வீசி விட்டு, திரைச்சிலைகள், போர்வைகள் மீது கிரோஸினை ஊற்றி பற்ற வைப்பாள் போல் இருந்தது.

"சொல்லு. என்ன செய்யப் போகிறாய்?" இரட்டிப்பது போல் கேட்டான்.

"எல்லாவற்றையும் விற்றுவிடுவேன். ஒன்று கூட வைத்துக் கொள்ள மாட்டேன். பணம் எவ்வளவு கிடைக்கிறதோ கிடைக்கட்டும்."

ரமேஷ் சட்டென்று வந்து ஹேமாவின் கையை பற்றினான்.

"உனக்கு பைத்தியம் பிடித்து விட்டதா? இவற்றை விற்றால் எவ்வளவு பணம் கிடைக்கும் என்று நினைக்கிறாய்?"

"வந்த வரையில் வரட்டும். அவை என் கண்ணில் பட்டுக் கொண்டிருந்தால் அந்த கடன் வட்டி எல்லாம் நினைவுக்கு வந்து தூக்கம் வராமல் உண்மையிலேயே பைத்தியம் பிடித்து விடும். இன்றிலிருந்து ஒரு வேளைதான் சாப்பாடு. காபி கூட குடிக்க மாட்டேன். கூடிய சீக்கிரம் கடனை தீர்த்து விடுவோம்."

ரமேஷ் ஹேமாவின் கையை வேகமாக தள்ளிவிட்டான்.

"ஹேமா! நான் சொல்வதை கவனமாக கேட்டுக் கொள். இந்த குடித்தனத்தில் பணத்துடன் உனக்கு எந்த சம்பந்தமும் இல்லை. பிச்சை கேட்டு பெற்றதோ, தருடிக் கொண்டு வந்ததோ, அந்த விஷயம் எனக்கு மட்டுமே சம்பந்தபட்டது. இநத விஷயத்தில் கேள்வி கேட்கும் அதிகாரம் உனக்கு இல்லை. இந்தப் பொருட்களில் ஒன்று கூட இந்த வீட்டை விட்டு வெளியில் போகக் கூடாது. மரியாதையாக எடுத்த பொருட்களை அதே இடத்தில் வைத்துவிடு." - குரல் உயர்த்தி கொன்னான்.

கோபத்தில் நிலை தவறிவட்டவள் போல் ஹேமா ,மேலும் குரல் உயர்த்தி கத்தினாள்.

"மாட்டேன் ..... மாட்டேன். இவற்றை விற்பது நிச்சயம். நேற்றுதான் பக்கத்து வீட்டு மாமி இந்த கர்டென்களை, கோப்பை களை புகழ்ந்தாள். அதே மாதிரி வாங்க வேண்டும் என்று அவள் நினைத்துக் கொண்டிருக்கிறாளாம். அவள் என்ன விலைக்கு கேட்டாலும் கொடுத்து விடுவேன். இந்த குடித்தனம் என்னுடையது. என் விருப்பம் போல் இதை சீர்படுத்தும் உரிமை எனக்கு இருக்கு. உன் பேச்சை இங்கே யாரும் கேட்கப் போவதில்லை."

ரமேஷ் சற்சிலையாக நின்றுவிட்டான். அந்த நிமிடம் ஹேமாவை தடுத்து நிறுத்துவது சாத்தியம் இல்லை என்று தோன்றி யது. ஹேமா எவ்வளவு திறமைசாலியோ அவ்வளவு பிடிவாதக் காரியும் கூட என்ற விஷயம் அவனுக்கு நினைவு வந்தது.

காயம் பட்ட இதயம் அவன் கண்களில் பிரதிபலித்தது. அந்த நிமிடம் கொஞ்சம் நிலை தடுமாறியிருந்தாலும் அவன் கை உயர்ந்து ஹேமாவின் கன்னத்தை பதம் பார்த்திருக்கும். பற்களை கடித்துக் கொண்டு எப்படியோ கட்டுப்படுத்திக் கொண்டான்.

"சரி. ஆகட்டும். உன் விருப்பம் போலவே நடந்து கொள். ஏற்கனவே நான் உன் வருமானத்தில் வாழ்ந்து வருகிறேன் என்று நாலு பேர் நாலு விதமாக பேசிக் கொள்கிறார்கள். நாளைக்கு நம் வீட்டு திரைச்சிலைகள் அடுத்த வீட்டில் இருப்பதை பார்த்து விட்டு 'பாவம்! மனைவி அத்தனை கஷ்டப்பட்டு சம்பாதித்துக் கொண்டு வந்தாலும், பணம் போறவில்லை போலிருக்கு. அதான் திரைச்சிலைகள், போர்வைகளைக் கூட விற்று விட்டார்கள்' என்று என்னைப் பார்த்து கேலியாக சிரித்துக் கொள்வார்கள். சிரிக்கட்டும். நீயும் அவர்களுடன் சேர்ந்து சிரி. இது போன்ற பிரச்சனைகள் வரும் என்றுதான் நம் திருமணத்திற்கு அவசரப்பட வேண்டாம். கொஞ்சம் காலை ஊன்றிக் கொண்ட பிறகு திருமணம் செய்து கொள்வோம் என்று சொன்னால் கேட்டாயா? கேட்கவில்லை. என்னை வற்புறுத்தி திருமணத்திற்கு சம்மதிக்க வைத்தாய். இப்போ மற்றவர்களுடன் சேர்ந்து நீயும் என் ஏழ்மையை சுட்டிக் காட்டி நகைத்துக் கொள்."

ரமேஷுக்கு திடீரென்று தொண்டைக்குழியில் ஏதோ அடைப் பது போல் இருந்தது. தலையை திருப்பிக் கொண்டு சட்டென்று நாற்காலிமீது இருந்த டவலை எடுத்துக் கொண்டு குளிப்பதற்காக பாத்ரூமில் நுழைந்து விட்டான்.

பாத்ரூம் கதவுகள் படீரென்று சாத்திய சத்தம் கேட்டது. அக்னிக் குழம்பாக கொதித்துக் கொண்டிருந்த ஹேமாவின் கோபம், மண லில் விழுந்த தண்ணீரை போல் சட்டென்று தணிந்து விட்டது. ரமேஷுக்கு நன்றாக கோபம் வந்து விட்டது என்பதை உணர்ந்து கொண்ட ஹேமா கை கால் அசைக்கமுடியாத பதுமையை போல் ஒரு நிமிடம் அப்படியே நின்று கொண்டாள்.

ரமேஷ் குளித்து முடித்து முன் அறைக்கு வந்தான். பல நாட் களாக அவன் அடக்கி வைத்திருந்த கோபம் இன்று கட்டுகளை அறுத்துக் கொண்டு வெளியில் வந்து விட்டது. திருமணம் ஆன பிறகு சேஷாத்ரி திட்டியது, அக்கம் பக்கத்தில் இருப்பவர்களின் கேலிப் பார்வைகள், சுப்புலக்ஷ்மி வீட்டில் நடந்தது, ஜெகதாம்பாள் காரித் துப்பியது ..... எல்லாமாக சேர்ந்து வெள்ளமாய் பெருகி அவனுடைய பொறுமையை மூழ்கடித்து விட்டன. மூன்று வாளி பச்சைத் தண்ணீரில் குளித்த பிறகும் அவன் மனம் அமைதி அடைய வில்லை.

அவன் குளியல் அறையிலிருந்து வெளியில் வந்தபோது, முன் அறையில் அவன் ஆணைகளுக்குக் கீழ் படிந்தது போல், வாசலில், ஜன்னல்களில் திரைச்சிலைகள் தொங்கிக் கொண்டிருந்தன. மேஜை மீதும், படுக்கை மீதும் முன் இருந்தது போலவே விரிப்புகள் அழகாக விரிக்கப்பட்டு இருந்தன. கோப்பைகள், ஸ்டீல் தட்டுகள் அவன் கண்ணில் படுவதற்கு பயந்தது போல் சமையல் அறைக்குச் சென்று ஒளிந்து கொண்டு விட்டன. ஆனாலும் அவனுக்கு எந்த மகிழ்ச்சியும் ஏற்படவில்லை. தலையை வாரிக் கொண்டு கட்டில் மீது அமர்ந்து கொண்டான். காலையில் படித்த பேப்பரையே மறுபடியும் ரொம்ப கவனமாக படித்துக் கொண்டு இருந்தான். ஹேமா மெள்ளமாக அவன் அருகில் வந்தாள்.

"ரமேஷ்! சாப்பிடுவோம் - வா என்றாள்." அந்தச் சமயத்தில் அவன் நயமாக ஒரு வார்த்தை சொன்னால் அவன் கைகளில்

சரணடைந்து மனபூர்வமாக மன்னிப்பு கேட்கத் தயாராக இருந்தாள்.

ஆனால் தன் மீது சவாரி செய்து கொண்டிருக்கும் கோபத்தை அடக்கி, பொறுமையை வரவழைத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுப் பட்டிருந்த ரமேஷ் கண்களை உயர்த்தி ஹேமாவை பார்க்கவும் இல்லை.

"எனக்கு பசி இல்லை. நீ சாப்பிட்டு விட்டு கிளம்பு" என்றான். அவன் குரல் மென்மையாக இருந்தாலும் வார்த்தைகள் கூர்மையாக இருந்தன.

"ஹேமா களை இழந்த முகத்துடன் சமையல் அறைக்கு திரும்பி வந்தாள். அவன் காதுகளில் விழுவது போல் சத்தப்படுத்திக் கொண்டே, பலகையை எடுத்து ஓரமாய் நகர்த்தினாள். பாத்திரங் களை சரியாக மூடி வைத்தாள். ஆனால் ஹேமா எதிர்பார்த்தது போல் ரமேஷ் சமையல் அறை வாசலில் வந்து நிற்கவில்லை. இதென்ன? நீ சாப்பிடாமலேயே கிளம்புகிறாயே?" என்று அதட்டவும் இல்லை.

ஹேமா முன் அறைக்கு வந்தாள். அவன் கொஞ்சமும் கூட அசையாமல் அதே போல் பேப்பரை படித்துக் கொண்டிருந்தான். யாரோ தன்னை துரத்தி வருவதுபோல் ஹேமா வேகமாக வீட்டை விட்டு வெளியில் வந்தாள்.

என்ன காரியம் செய்து விட்டாள்? ரமேஷிடம் சண்டை போட் டாள். அவனுக்குக் கோபம் வரும் விதமாக நடந்து கொண்டாள். கடவுளே! திருமணம் முடிந்து இன்னும் மூன்று மாதங்கள்கூட முடியவில்லை. ஹேமாவின் கண் பார்வையை ஏதோ மறைப்பது போல் தோன்றியது. இந்த உலகமே அர்த்தமில்லாதது போல் தென்பட்டது. கால்கள் வழக்கமான பாதையில் இயந்திர கதியில் தையல் சுற்றுக் கொடுக்கும் வீட்டுக்கு அவளை கொண்டு போய் சேர்த்தன.

15

"அம்மா ஊருக்கு போயிருக்கிறாள். ஒரு வாரம் கழித்து தான் வருவாள்."

ஹேமா இரண்டு முறை வாசற்கதவைத் தட்டிய பிறகு கதவைத்

திறந்த பையன் சொன்னான்.

அதைக் கேட்டதும் ஹேமாவுக்கு சோர்வாக இருந்தது. வீட்டுக்கு போகணும் என்றால் மறுபடியும் ஒருமணி நேரம் நடக்க வேண்டும். ஒரு மணி நேரம் கழித்து இன்னொரு வீட்டில் சொல்லித்தர வேண் டும். இந்த ஒருமணி நேரம் எங்கேயாவது கழித்து விட்டால், அந்த வகுப்பையும் எடுத்து அங்கிருந்து லேடீஸ் கிளப்புக்கு போய் விட லாம். ஆனால் எங்கே போவது? ஹேமாவுக்கு நிற்பதற்கோ, உட் கார்ந்து கொள்வதற்கோ கூட பொறுமை இல்லாதது போல் சோர் வாக இருந்தது.

"குடிக்க கொஞ்சம் தண்ணீர் தரமுடியுமா?" - உட்கார்ந்து கொண்டே கேட்டாள்.

"இதோ கொண்டு வருகிறேன்." அந்தப் பையன் உள்ளே போய் தண்ணீர் டம்ளரில் கொண்டு வந்து தந்தான்.

வீட்டில் யாரும் இல்லை போலும். அந்தப் பையன் கதவைப் பிடித்துக் கொண்டு ஹேமா எப்போ கிளம்புவாள் எப்போ கதவைச் சாத்திக் கொள்வோமோ என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பது போல் நின்றிருந்தான். ஹேமாவுக்கு ரொம்ப நேரம் அங்கே உட்கார்ந்திருப்பது நியாயம் என்று தோன்றவில்லை.

ஹேமா மெதுவாக எழுந்துக்கொண்டு கடைத்தெருவுக்கு வந் தாள். எல்லா கடைகளிலும் மக்கள் கும்பல் கும்பலாக எதையோ வாங்கிக் கொண்டு இருந்தார்கள். பணத்தை கண்ணால் காண்பதே அதிசயமாகிவிட்ட இந்த நாட்களில் இத்தனை பேருக்கு ஷாப்பிங் செய்ய பணம் எங்கிருந்து வருமோ என்று தோன்றியது. வீட்டில் டீத் தூளும், ஊதுபத்தியும் தீர்ந்துவிட்டது நினைவுக்கு வந்தது. மளிகைக்கடையில் நுழைந்து தனக்கு வேண்டியதை வாங்கிக் கொண்டாள்.

நடுவயதில் இருக்கும் நபர் ஒருவர் வாங்கிய மளிகைச் சாமான் களுக்கு கொஞ்சம் பணத்தை கொடுத்துவிட்டு மீதியை "கணக்கில் எழுதிக்கொள்" என்று சொல்லிக் கொண்டிருந்தார். எல்லோர் வீட் டிலும் இதே பிரச்சனை போலும். உத்வேகத்தினால் கன்றி சிவந்துவிட்ட ரமேஷின் முகம் ஹேமாவின் கண்கள் முன் நிழலாடி

யது.

ச்சீ, ச்சீ, தனக்கு வாய்த்துடுக்குத்தனம் அதிகமாகிவிட்டது. கூடன் வாங்கினால் என்ன ஆகிவிடும்? அந்தப் பிரச்சனை எல்லாம் அவன் பார்த்துக் கொள்வதாக சொல்லும்போது தான் ஏன் கவலைப்பட வேண்டும்? இனி ஒருநாளும் இந்தப் பிரச்சனையை அவனிடம் பிரஸ்தாபிக்கவே கூடாது. வீட்டு பொறுப்பை கணவன் ஏற்றுக் கொண்டால் மனைவிக்குத்தான் எத்தனை நிம்மதி. குடித்தனம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றால், கணவன் மனைவிக்குள் தான் சொன்னதுதான் நடக்க வேண்டும் என்ற பிடிவாதம் இருக்கக் கூடாது. விட்டுக்கொடுத்து போக வேண்டும். சில விஷயங்களில் பார்த்தும் பார்க்காதது போல் நடந்து கொள்ள வேண்டும்.

வெயில் ரொம்ப தீவிரமாக இருந்தது. ஹேமா கைப்பையை உயர்த்தி வெயிலின் தாக்கத்திலிருந்து தன்னை காத்துக் கொள்ள முயன்றாள். பசி முற்றிவிட்டதில் குடல் சுருண்டு விட்டது போல் இருந்தது. தான் சாப்பிடாமல் ரமேஷும் சாப்பிடமாட்டான். அனாவசியமாக இரண்டு பேரும் பட்டினி. உணவு கிடைக்காமல் எத்தனை பேர் திண்டாடுகிறார்கள். கணவன், மனைவிக்குள் இது போன்ற சண்டைகள் வரவே கூடாது. அப்படியே வந்தாலும் அடுத்த நிமிடம் சுய கௌரவம் பார்க்காமல் மன்னிப்பு கேட்டுக் கொள்ள வேண்டும். வீட்டுக்கு போனதும் ரமேஷிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

ஏதோ நினைவில் நடந்து போய்க கொண்டிருந்த ஹேமா தொலைவில் பஸ்டாப்பில் நின்றிருந்த பஸ்ஸை பார்த்துவிட்டு நடையின் வேகத்தை அதிகரித்தாள். அந்த பஸ் சரியாக அவள் தையல் கிளாஸ் எடுக்க வேண்டிய வீட்டின் அருகில் நிற்கும். அதை விட்டால் மறுபடியும் நடந்துதான் போக வேண்டும். பஸ்ஸில் மக்கள் ஏறிக்கொண்டு இருந்தார்கள். பஸ் கிளம்பிவிடப் போகிறதே என்று பதட்டமடைந்த ஹேமா ஓட்டமும், நடையுமாக விரைந்தாள். பஸ்ஸை பிடிப்பதற்காக எல்லோரும் ஓடத்தான் செய்வார்கள். இதில் வெட்கப்பட வேண்டியது எதுவும் இல்லை என்று நினைத்துக் கொண்டே ஓட்டமெடுத்தாள்.

ஹேமா அப்படி ஓடிக்கொண்டிருக்கும் போது பக்கத்திலேயே

இருந்த கடையில் பச்சைநிற ஷிபான் புடவை உடுத்திய, சுழத்தில் நீளமான முத்துச்சரம் அணிந்திருந்த இளம்பெண் ஒருத்தி, கடைக்காரன் கொடுத்த சில்லரையை சரிபார்த்துக் கொண்டே ஹை ஹீல்ஸ் செருப்புகளுடன் ஸ்டையிலாக நடந்துவந்து கொண்டிருந்தாள். தங்கச்சிலையை போல இருந்த அந்தப் பெண் தன் முன்னால் வேகமாக ஓடிய பெண்ணை தன்னையும் அறியாமல் தலையை உயர்த்தி பார்த்துவிட்டு மறுபடியும் சில்லரையை எண்ணிக்கொண்டிருந்தாள். நோட்டுக்களை எண்ணிக் கொண்டிருந்த அவளுடைய விரல்கள் சட்டென்று நின்றுவிட்டன. வில்போல் வளைந்திருந்த புருவங்கள் முடிச்சிட எதையோ யோசித்துக் கொண்டே பஸ்ஸை பிடிக்க ஓடிக்கொண்டிருந்த அந்தப் பெண்ணை பார்த்தாள். அட ஹேமா என்று நினைத்தவள் வேகமாய் அந்தப் பக்கம் நடையை எட்டிப் போட்டுக் கொண்டே 'ஹேமா ஹேமா' என்று கத்தினாள். ஆனால் பஸ் எங்கே கிளம்பிவிடப் போகிறதோ என்று கவலைப்பட்டுக் கொண்டே ஓடிக்கொண்டிருந்த ஹேமாவுக்கு அந்த கத்தல் காதில் விழவில்லை.

"ஹேமா! உன்னைத்தான்". ஷிப்பான் புடவை அணிந்திருந்த பெண்ணும் ஓடத் தொடங்கினாள்.

ஹேமா பஸ்ஸின் கம்பியை பிடித்துக் கொண்டு படிமீது காலை வைத்துவிட்டாள்.

"ஏய் நில்லு...!" அந்தப் பெண்ணுக்கு ஹை ஹீல்ஸ் வழுக்கிவிட்டது போலும். தட்டுத் தடுமாறிக் கொண்டே ஓடிவந்து ஹேமாவின் கையை பலமாக பின்னால் இழுக்கப் போனாள். யாரோ பஸ்ஸில் இடம் பிடிப்பதற்குதான் தன்னை பின்னால் இழுக்கிறார்கள் என்று நினைத்துவிட்ட ஹேமா "புத்தியிருக்கா?" என்று கேட்டுக் கொண்டே பின்னால் திரும்பி கண்களை உருட்டி கோபமாக விழிக்கப் போனாள். கண்டக்டர் பெல்லை அடித்துவிட்டார்.

"ஹேமா! நான்தான். முதலில் பஸ்ஸைவிட்டு இறங்கு."- வேகமாக ஓடி வந்ததில் அந்தப் பெண்ணுக்கு மூச்சு இரைத்தது.

"நீயா? நீயா?" வியப்பின் மிகுதியால் ஹேமாவுக்கு வாயில் வார்த்

தைகள் வரவில்லை.

"நான்தான் தாயே. நானேதான். இரண்டு நிமிடங்களுக்குள் எத்தனை டென்ஷன் அனுபவித்துவிட்டேன் தெரியுமா? நான் கடையிலிருந்து வரும்போது நீ பஸ்ஸை பிடிக்க ஓடிக்கொண்டிருந்தாய். ஹேமா! ஹேமா! என்று சத்தினால் உன் காதில் விழுந்தால் தானே. என்னால் உன்னை பிடிக்க முடியுமா? இல்லை இந்த பஸ் உன்னைத் தூக்கிக் கொண்டு போய் விடுமோ? என்று ஒரே டென்ஷன்."

"நீங்க வரப் போறீங்களா இல்லையா?" கண்டக்டர் எரிச்சலுடன் கேட்டார்.

"வரமாட்டாள். கீழே இறங்கு ஹேமா!" - மாதுரி ஹேமாவின் கையை பற்றி கீழே இழுத்தாள். மாதுரி மீது விழப்போன ஹேமா எப்படியோ சமாளித்துக் கொண்டு இறங்கினாள். பஸ் கிளம்பி விட்டது.

"மை காட் முதலில் யாரோ பஸ்ஸை பிடிக்க ஓடுகிறார்கள் என்றுதான் நினைத்தேன். அப்புறம் கவனித்து பார்த்தால் நீயேதான். உன்னை அழைத்துக் கொண்டு உன் பின்னாடியே ஓடிவந்தேன். என் அழைப்பு உன் காதில் விழுந்தால்தானே? இப்போ யாருடைய குரலும் கேட்கும் நிலையில் நீ இல்லை என்று எல்லோரும் பேசிக் கொள்கிறார்கள். மை குட் நெஸ். என் கூலிங்க் கிளாஸை அந்த கடையிலேயே மறந்துவிட்டேன். வா போகலாம்." - மாதுரி கைப்பிடியில் இருந்த பணத்தை அப்படியே பேக்கில் போட்டுவிட்டு ஹேமாவின் கையை பற்றி கடையை நோக்கி நடந்தாள்.

அந்த கடையின் முதலாளியே எதிரில் வந்தான். "உங்களை நான் கூப்பிட்டுக்கொண்டுதான் இருந்தேன். நீங்க என் அழைப்பை காதில் வாங்காமல் அந்த அம்மாளின் பின்னாலேயே ஓடினீங்க. உங்கள் பின்னாடி நானும் வந்தேன்." - கடைக்காரன் புன்முறுவலுடன் சொன்னான்.

"ஐ யாம் ஸாரி, தாங்க்யூ," - மாதுரி நன்றியைத் தெரிவித்து விட்டு கூலிங்க் கிளாஸை பெற்றுக் கொண்டாள்.

"தெரு கடைசியில் காரை பார்க் செய்திருக்கிறேன் வா போக

லாம்" என்றாள் மாதுரி. ஹேமாவின் கையை அழுத்தமாக பற்றி இருந்தாள்.

இருவரும் நடைபாதையில் நடந்துகொண்டு இருந்தார்கள்.

"நீ ஆஃப்ரிகாவிலிருந்து எப்போ திரும்பி வந்தாய்?" ஹேமா கேட்டாள்.

"போன வாரம்தான் வந்தேன்."

"அங்கே எப்படி இருந்தது?"

"ஒரே போர். எங்கே போனாலும் ஒரு மாதம், இரண்டு மாதம் நன்றாக இருக்கும். பிறகு போர் அடிக்கத் தொடங்கிவிடும். இந்தியாவுக்கு வந்தேனா! வந்த ஓரிரு நாட்கள் வரை இது என்னுடைய நாடு, நான் பிறந்த மண் இது என்று பெருமையாக உணர்ந்தேன். அதன் பிறகு வழக்கம்போல் சலித்துப் போய் விட்டது. எங்கே போனாலும் அதே வானம்! அதே பூமி! ஜாதி, மொழி, இனம் முதலியவற்றில் மனிதர்கள் மாறுபடுகிறார்களே ஒழிய அடிப்படை குணம் எல்லோருக்கும் ஒன்றுதான். ஹேமா! ஆண்கள் என்றால் வெறுத்துப் போய் இந்தியாவை விட்டு ஓடினால் அங்கேயும் ஒருத்தன் வந்து சேர்ந்தான். சுற்றில் அடித்த பந்துபோல் இந்தியாவுக்கு வந்தேன். இங்கேயே இருந்து விடச்சொல்லி அம்மா ரொம்பவும் வற்புறுத்துகிறாள். இனியும் இந்த ஓநாய்களை கண்டு ஓடப் போவதில்லை. எதிர்த்து நின்று போராடுவேன். ஒன்று மட்டும் நிச்சயம். இந்த ஜென்மத்தில் ஆண்களை நம்பவே மாட்டேன். அவர்கள் முகத்தில் விழிக்கவும் மாட்டேன்."

"பின்னே யார் முகத்தில் விழிக்கப் போகிறாய்?"

"உன் முகத்தில் விழிக்கப் போகிறேன். ஹேமா! உன்னை நான் ரொம்பவும் நேசிக்கிறேன். சினேகிதியாக உன்னை ஆராத்திக்கிறேன். நீ நம்புவாயோ மாட்டாயோ. ஆஃப்ரிகாவில் இருக்கும் போது உன் ஞாபகம் அடிக்கடி வந்து கொண்டே இருந்தது. உன்னிடம் சொல்லாமல், உன் முகவரியை வாங்கிக் கொள்ளாமல் ஓடிப்போன தற்கு என்னை நானே திட்டிக் கொண்ட சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால் அப்போ நான் இருந்த நிலைமை அப்படி. உனக்கு பிறகு, எனக்கு, நிறையபேர் அறிமுகம் ஆனார்கள். ஆனால் யாருமே

உன்னைப் போல் மனதில் தங்கவில்லை. அப்படி தங்கியிருந்தால் உன்னை மறந்து போயிருப்பேனோ என்னவோ."

"என் பேச்சை கேள் தீரா. கடவுளை நேசிக்கத் தொடங்கு. மனதிற்கு எவ்வளவு அமைதி கிடைக்கும் என்பதை நீயே உணருவாய்."

"கடவுளை நேசிக்கணுமா? ரியாக்ஷன் இல்லாமல் எப்படி? கடவுள் என் காதலுக்கு ரெஸ்பான்ஸ் கொடுப்பாரா இல்லையா என்று தெரியாதே?"

இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

தெருவில் போய்க்கொண்டிருந்த மக்களில் நிறைய பேர் ஷிஃபான் புடவையை உடுத்திக் கொண்டு பாப் செய்யப்பட்ட தலை முடியுடன், ஹைஹீல்ஸ் செருப்புகளை அணிந்துகொண்டு நடந்து போகும் மாதுரியையும், அவள் பக்கத்தில் எளிமையான வாயில் புடவையை அணிந்து, தோளைச் சுற்றி தலைப்பைப் போர்த்திக் கொண்டு, முழங்காலை தொடும் பின்னலுடன், தங்கச்சிலையை போல் இருந்த ஹேமாவையும் மாறிமாறி பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒருத்தி ரொம்ப நாகூக்காக, ஃபாஷனாகவும், இன்னொருத்தி கிராமத்து பெண் போல் லட்சணமாக களையாகவும் இருந்தாள். கிட்டத்தட்ட ஒரே வயதில் இருந்த அந்த இருவரின் ஜோடி புதிய, பழைய சம்பிரதாயங்களை பிரதிபலிப்பது போல் அபூர்வமாக இருந்தது.

"முக்கியமாக விஷயத்தை கேட்க மறந்துவிட்டேன். நீ என்ன? எங்க சுதாவை மறுத்து விட்டு யாரோ ட்யூஷன் சொல்லித் தரும் குடுமி வாத்தியாரை கல்யாணம் செய்து கொண்டாயாமே." - மாதுரி கேட்டாள்.

ரமேஷின் பிரஸ்தாபனை வந்ததும் ஹேமாவின் முகம் கன்றி விட்டது. திடீரென்று மாதுரியை பார்த்த சந்தோஷத்தில் ஒரு நிமிடம் ரமேஷின் விஷயத்தையே மறந்துவிட்டிருந்தாள்.

"என்ன? பேசவே மாட்டேன் என்கிறாய்?" - மாதுரி கேட்டாள்.

"நீ கேள்விப் பட்டது உண்மைதான் தீரா." வேகமாக நடந்து கொண்டிருந்த மாதுரி சட்டென்று நின்று ஹேமா பக்கம் திரும்பி "கையை கொடு" என்றாள்.

"எதுக்கு?" கையை கொடுத்துக் கொண்டே கேட்டாள்."

மாதுரி ஹேமாவின் கையை பற்றி வேகமாக குலுக்கினாள். "டபிள் கங்கிராஜுலேஷன்ஸ். ஒன்று திருமணம் ஆனதற்கு, இரண்டு எங்க பெரியப்பாவின் திமிரை அடக்கியதற்கு. ஹேமா! உனக்கு" 'நாகபூஷணம் என்ற மலைபாம்பின் பற்களை பிடுங்கிய பேரழகி' என்ற விருது வழங்கியிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவருக்கு எவ்வளவு திமிரு தெரியுமா? தன்னிடம் இருக்கும் பணத்தை பார்த்து எல்லோரும் ஈயை போல் மொய்ப்பார்களாம். புத்தி இருக்கும் எந்தப் பெண்ணும் சொத்துக்கு ஆசைப்பட்டு உங்க வீட்டுக்கு மருமகளாக வரமாட்டாள் என்று நான் சொன்ன போது என்ன சொன்னார் தெரியுமா? இந்த உலகில் பணத்திற்கு அடிமையாகாதவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள் என்று லெக்சர் கொடுத்தார். நான் இந்தியாவுக்கு வந்த அன்றே அம்மா இந்த நல்ல செய்தியை என் காதில் போட்டாள். நான் உடனே பெரியப்பா வீட்டுக்கு போய் அவரை குசலம் விசாரித்து விட்டு வந்தேன். அவருக்கு திமிரு இன்னும் அடங்கிய பாடு இல்லை. என்ன சொன்னார் தெரியுமா? இந்த திருமணம் நடக்காமல் போனதே தனக்கு சந்தோஷமாம். கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று சொல்லும் ஜாதி. ஐ ஹேட் ஹிம்." மாதுரி படபடவென்று பொரிந்து தள்ளினாள்.

இருவரும் கார் அருகில் வந்தார்கள்.

ஹேமா காரில் உட்கார்ந்து கொண்டாள். பசி வயிற்றை கிள்ளிக் கொண்டிருந்தது. சோர்வாக இருந்த ஹேமாவுக்கு மாதுரி தேவதை போல் தென்பட்டாள். காரில் உட்கார்ந்திருந்தபோது பசி மயக்கம் கொஞ்சம் குறைந்து நிம்மதியாக இருந்தது.

"சொல்லு. உன் ஆனந்த நிலையத்திற்கு போகும் வழி யாது?"

"இப்பொழுதா? எங்க வீட்டுக்கா?"

"ஆமாம் ஏன்?"

"எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு." ஹேமா முணுமுணுப்பது போல் சொன்னாள்.

மாதுரியை வீட்டுக்கு அழைத்துப் போவதா? ஹேமாவின் கண்கள் முன்னால் ஷேவ் செய்யாத முகத்துடன், சோர்வாக இருக்கும்

ரமேஷின் முகம் தோன்றி மறைந்தது.

"என்ன வேலை இருந்தாலும் சரி. முடித்துவிட்டு வா. எனக்கு வேறு வேலை எதுவும் இல்லை."

"அது இல்ல தீரா—"

"ஷட்டப். நோ. அப்ஜெக்ஷன். உன் கணவரை— அதான் அந்த குடுமி வாத்தியாரை பார்க்க வேண்டும் என்று நான் தவித்துக் கொண்டு இருக்கிறேன். என் தவிப்பு புரியாமல் நீ நேரம் கடத்து கிறாயே."

"இப்போ வீட்டில் இருக்க மாட்டான்."

"போகட்டும். வரும் வரையில் நாமிருவரும் பேசிக் கொண்டிருப் போம். எனக்கு வேறு வேலை இல்லை என்று முன்னாடியே சொன்னேனே."

கசப்பு மாத்திரையை விழுங்குவதுபோல் இருந்தது. ஹேமாவுக்கு ரமேஷை அறிமுகப்படுத்தும் வரையில் இவள் தன்னை விடமாட் டாள். அது நிச்சயம். இத்தனை நாளாக இல்லாமல் இன்றுதான் இவள் வரவேண்டுமா? மாதுரிக்கு என்றுமே எதற்காகவும் காத்திருக் கும் பொறுமை இல்லை. எதிராளி அவள் சொன்னதை கேட்க வேண்டுமே தவிர, மற்றவர்கள் சொல்வதை அவள் காதிலேயே வாங்க மாட்டாள். மற்றவர்களின் சுவ்ட, நஷ்டங்களை புரிந்து கொள்ளும் சுபாவம் அவளுக்குக் கிடையாது.

கார் வீட்டை நெருங்கும் சமயம் திடீரென்று ஹேமா சொன்னாள்.

"தீரா! நீ எனக்கு ஒரு பிராமிஸ் செய்து தரணும்."

"என்ன? இனிமேல் உன் வீட்டுக்கு எப்போதும் வரமாட்டேன் என்றா?"

"இல்லை, இல்லை ரமேஷை பார்த்ததும் அவன் எதிரில் நீ சுமெண்டு செய்யக் கூடாது."

"ஓகே. செய்யமாட்டேன். பிராமிஸ். ஏன்? உன் கணவருக்கு நகைச்சுவை உணர்வு கொஞ்சம் குறைவா?"

ஹேமா ஆமாம் என்பதுபோல் தலையை அசைத்தாள்.

கார் வீட்டின் முன்னால் வந்து நின்றது.

"உன் பிராணநாதர் வீட்டில் இருக்கிறாரா?"

இருக்கிறார் என்றுதான் நினைக்கிறேன். சந்தேகமாக சொல்லிக் கொண்டே காரைவிட்டு இறங்கினாள் ஹேமா.

கதவுகள் திறந்துதான் இருந்தன. ஹேமா உள்ளே வந்தாள். பின்னாலேயே மாதுரியும் வந்தாள்.

ஹேமாவின் கண்கள் ரமேஷை பார்த்ததும், வியப்பினால் மின்னின. எந்த கடவுள் கருணை புரிந்ததோ தெரியவில்லை. அவன் காலையில் இருந்ததுபோல் சிடுசிடுவென்று இருக்கவில்லை. ஷேவ் செய்துகொண்டு, மடிப்பு கலையாத உடைகளை அணிந்திருந்தான்.

ஹேமா வீட்டிற்குள் காலடி எடுத்து வைக்கும்போது அவன் எங்கேயோ புறப்பட்டுக் கொண்டிருந்ததற்கு அறிகுறியாக கட்டில் மீது அமர்ந்து கால்களில் ஷுக்களை அணிந்து கொண்டிருந்தான்.

ஹேமாவைப் பார்த்ததும் அவன் கண்களில் அன்பு பொங்கியது. வாயைத் திறந்து ஏதோ சொல்லப்போனான். ஹேமாவின் பின்னாலேயே யாரோ வருவதை கவனித்து நின்றுவிட்டான்.

"ரமேஷ்! இவள் என் சினேகிதி" ஹேமா அறிமுகப்படுத்தினாள்.

"கிளாட் டூ மீட் யூ" மாதுரி கைகளை கூப்பி வணக்கம் தெரிவித் தாள்.

அவனும் சட்டென்று எழுந்து பதில் வணக்கம் தெரிவித்தான்.

"உட்காருங்கள்." இருக்கையை சுட்டிக் காட்டிக் கொண்டே உபசரிப்பது போல் சொன்னான்.

கண் இமைக்கும் நேரத்தில் அவன் பார்வை மாதுரியின் உடை களை, தலைமுடியை, நகப்பூச்சை பரிசீலனையாக பார்த்தன. நாகரீக மங்கை என்று நினைத்துக் கொண்டான்.

"ரமேஷ்! எங்கேயாவது கிளம்புகிறாயா?" ஹேமா கேட்டாள்.

ஆமாம். "அவன் கண்கள் ஹேமாவின் முகத்தில் எதையோ தேடுவது போல் கவனமாக பார்த்தன.

ஒன்றுமில்லை. சாப்பிட்டாயா?"

அவன் தலையை அசைத்துவிட்டு சுட்டில் மீது அமர்ந்து கொண்டு மளமளவென்று ஷூக்களை அணிந்து கொண்டான்.

"போய் வருகிறேன்." மாதுரியிடம் சொல்லிவிட்டு கண்களாலேயே ஹேமாவிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பிப் போனான்.

ஹேமாவின் முகத்தில் பெருமை பொங்கியது. ரமேஷை பார்த்தவர்கள் யாராக இருந்தாலும் தனித்தன்மை படைத்தவன் என்று நினைக்காமல் இருக்க மாட்டார்கள். அவனுடைய பேச்சில், நடையில் தனித்தன்மை வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

"மறுபடியும் கையை கொடு." மாதுரி கையை நீட்டினாள்.

ஹேமா மகிழ்ச்சியுடன் கையை நீட்டிக் கொண்டே "இப்போ சொல்லு" உன்னுடைய கமெண்ட்ஸ்" என்றாள்.

"உன்னுடைய தேர்வுக்கு என்னுடைய பாராட்டுகள். மனபூர்வமாக உன்னை வாழ்த்துகிறேன். சொத்து, சுகம் இருப்பவனை வேண்டாமென்று மறுத்துவிட்டு சிறந்த ஆண்மகனை தேர்ந்து எடுத்திருக்கிறாய். ஹி ஈஸ் சூப்பர்ப், ஐ லவ் ஹிம்."

"வாழ்ந்தாற்போல்தான். சற்றுமுன்தான் ஆண்களின் முகத்தில் விழிக்கக் கூட மாட்டேன் என்று சொன்னாய்."

"திருமணம் ஆனவனை, அதிலும் உன் கணவனை நான் விரும்பலாம். அதனால் எனக்கு எந்த ஆபத்தும் வராது. அப்படியே வந்தாலும் காப்பாற்றுவதற்கு நீ என் பக்கத்தில்தானே இருப்பாய்."

மாதுரி ரொம்ப நேரம் உட்கார்ந்திருந்தாள். சின்னதாக இருந்தாலும் அமரிக்கையாக இருந்த ஹேமாவின் வீடு ரொம்ப அமைதியாக இருந்தது. ஆடம்பரங்கள் அதிகமாக ஆக மனிதனுக்கு நிம்மதி குறைந்துவிடுமோ என்னவோ!

மாதுரி ஆப்பிரிக்காவில் தான் வாழ்ந்த வாழ்க்கையை பற்றி சொல்லிக் கொண்டிருந்தாள். அந்த ஊரில் தன்னைக் காதலிப்பதாக சுற்றி வந்த இளைஞன் பற்றியும் சொன்னாள். ஒருமுறை அவனை அழவைப்பதற்காக, மொட்டை போட்டுக் கொண்டு, சின்னதாக குடுமி வைத்துக் கொண்டவர்களை கண்டால் தனக்கு பிடிக்கும்

என்று சொன்னாளாம். மறுநாள் அவன் அதே தோற்றத்தில் வந்தானாம். அவனுடைய காதலில் இருக்கும் நேர்மையை கண்டபோது, மாதுரிக்கு மகிழ்ச்சியைவிட பயம்தான் ஏற்பட்டதாம்.

"ஹேமா! பெரிய மூக்கு. பளபளவென்று டால் அடிக்கும் மொட்டையுடன் அவனை பார்க்கும்போது ஒ மை காட்" மாதுரி விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தாள். ஹேமாவும் அவளுடன் சேர்ந்துகொண்டாள்.

வீட்டின் முன்னால் விலை உயர்ந்த கார் நின்று கொண்டிருந்ததை, உள்ளே இருந்து கலகலவென்று சிரிப்பு சத்தம் கேட்டுக் கொண்டிருந்ததை கவனித்த அக்கம் பக்கத்து ஜனங்கள் ஹேமாவின் வீட்டையே ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

ரமேஷ் எங்கே போனானோ தெரியவில்லை. இரவு ரொம்ப நேரம் கழித்து வீடு திரும்பினான். ஹேமா அவனுக்காக எதிர்பார்த்து கொண்டிருந்தாள்.

"சாப்பிட்டாயா?" வீட்டுக்குள் நுழையும்போதே கேட்டான்.

"இல்லை."

இருவரும் சேர்ந்து சாப்பிட்டார்கள். கையை அலம்பும்போது "என்ன சொன்னாள் உன் சினேகிதி?" என்று கேட்டான்.

"அவளுக்கு உன்னை ரொம்ப பிடித்துவிட்டதாம்."

"அப்படியா? என் ஜென்மம் சாபல்யம் அடைந்துவிட்டது போ இத்தனைக்கும் யாரந்த சினேகிதி?"

"தீரா"

"தீராவா? அதென்ன பெயர்?"

"முழு பெயர் மாதுரி. நெருக்கமானவர்கள் அவளை தீரா என்றுதான் அழைப்பார்கள்."

முன் அறைக்கு போகப் போன ரமேஷ் நின்றுவிட்டான். பின்னால் திரும்பி "அந்தப் பெண்ணின் பெயர் மாதுரியா?" என்றான்

"ஆமாம். அதனால் என்ன?"

"மாதுரி என்றால் சுதாகருக்கு...."

"ஆமாம்." ஹேமா பார்வையைத் திருப்பிக் கொண்டு வேறு பக்கம் பார்த்தாள். சுதாகர் விஷயம் ரமேஷ் இந்த ஜென்மத்தில் மறக்க மாட்டான் போலும். மாதுரியின் பெயரை அவள் ஒருமுறை தான் பிரஸ்தாபித்து இருந்தாள். இருந்தாலும் எவ்வளவு நன்றாக நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறான்.

"அந்தப் பெண்ணின் பெயர் மாதுரி என்று அப்பொழுதே நீ ஏன் சொல்லவில்லை?"

ஹேமா அவனை கேள்விக்குறியுடன் பார்த்தாள். "சொன்னால் என்ன செய்து இருப்பாய்?" என்பதுபோல் இருந்தது அந்த பார்வை.

"நீ வேண்டுமென்றே அவளுடைய பெயரை என்னிடம் சொல்ல வில்லை. அப்படித்தானே?"

"ரமேஷ் அநியாயமாக பேசாதே. உனக்கு என்மீது கோபம் இன்னும் போகவில்லை போலிருக்கு. நாங்கள் வந்ததும் நீ வெளியில் கிளம்பிப் போய்விட்டாய். உன்னிடமிருந்து மறைக்க வேண்டிய விஷயங்கள் எனக்கெதுவும் இல்லை. உனக்கு மாதுரியுடன் பேச வேண்டும் என்று விருப்பம் இருந்தால் நாளை மறுபடியும் வருவ தாகச் சொல்லி இருக்கிறாள். வீட்டிலேயே இரு."

"ஒன்றும் தேவையில்லை. அந்தப் பெண் நம் வீட்டுக்கு வருவது எனக்கு அவ்வளவாக பிடிக்கவில்லை. இந்த விஷயம் நீ நன்றாக நினைவில் வைத்துக்கொள்." தீர்மானதாக சொல்லிவிட்டு ரமேஷ் முன் அறைக்கு சென்றுவிட்டான்.

இது நடக்குமா? மாதுரி இங்கே வராமல் தன்னால் தடுக்க முடியுமா? ஹேமா யோசித்துக்கொண்டு இருந்தாள்.

பாத்திரங்களை ஒழித்துப் போட்டு, மேடையை துடைத்துவிட்டு, ஹேமா முன் அறைக்கு வந்தாள். ரமேஷ் கட்டில்மீது படுத்திருந்தான். கண்கள் மீது கையை வைத்துக் கொண்டு அவன் படுத்திருப்பதை பார்க்கும்போது அவன் இன்னும் உறங்கவில்லை என்று உணர முடிந்தது. ஹேமாவுக்கு அவன் அருகில் சென்று தலையை கோதி விட வேண்டும் என்று பலமாக தோன்றியது. ஏனோ? அவளால் அந்த எண்ணத்தை செயல்படுத்த முடியவில்லை. போய் நாற்காலி யில் உட்கார்ந்துகொண்டாள். சற்று நேரம் கழிந்தது. இருவருக்கும்

இடையில் ஏதோ தடுப்புச் சுவர் இருப்பதுபோல் தோன்றியது.

யோசனையில் சூழ்ந்து போயிருந்த ரமேஷ் எதற்காகவோ பக்கத் தில் திரும்பிப் பார்த்தான். ஹேமா நாற்காலியில் உட்கார்ந்திருப்பது கண்ணில் பட்டது. அவன் உடனே எழுந்து வந்தான்.

ஹேமா நெற்றியின் மீது கையை வைத்தான். "இங்கே உட்கார்ந் திருக்கிறாயே? தூக்கம் வரவில்லையா?" என்று கேட்டான்.

தூக்கம் வரவில்லை என்பது போல் தலையை குறுக்காக அசைத் தாள். ரமேஷ் ஹேமாவின் கையை பிடித்துக் கொண்டு கட்டில் அருகில் அழைத்து வந்தான். ஹேமா அவன் கையை உதறிவிட்டு கட்டில் மீது படுத்துக் கொள்ள போனாள். ரமேஷ் ஹேமாவை படுத்துக்கொள்ள அனுமதிக்கவில்லை. கட்டில்மீது அமர்ந்து கொண்டு அவளை வலுக்கட்டாயமாகத் தன் மடியில் உட்கார வைத்துக் கொண்டான். ஹேமா எழுந்து கொள்ள முயன்றாள். அவன் கைகள் அவளை நகரவிடாமல் சிறைப்படுத்தி விட்டன.

"என் மீது கோபமாக இருக்கிறாய். அப்படித்தானே?" ரமேஷ் கேட்டான்.

"உனக்குத்தான் என் மீது கோபம் வந்திருக்கு." என்றாள்.

"பின்னே காலையில் நீ அப்படி முட்டாள்தனமாக பேசலாமா? இந்த கர்டென்கள், போர்வைகள் எல்லாம் நீ முதல் முறையாக கேட்டு நான் வாங்கிக் கொடுத்தவை. கடனாக இருந்தால் என்ன? இன்று இல்லாவிட்டால் நாளைக்கு அடைத்துவிடப் போகிறோம். தாமதம் ஆனால் வட்டி அதிகம் ஆகும். அவ்வளவுதானே? என்னை விட உனக்குத்தான் இது போன்ற செண்டிமெண்ட்ஸ் அதிகம் இல் லையா? அவற்றை விற்றுவிடுவதாக சொன்னால் எனக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும் என்று யோசித்தாயா?"

இந்த சொற்கள் ஹேமாவின்மீது நன்றாகவே வேலை செய்தன. தன்னை விடுவித்துக் கொள்வதற்காக போராடிக் கொண்டிருந்தவள் கொடியை போல் அவனை பிணைந்து கொண்டாள்.

"ரமேஷ்! என்னை மன்னித்துவிடு. தவறு என்னுடையதான். இனி ஒருநாளும் இப்படி முட்டாள்தனமாக நடந்து கொள்ளமாட்டேன்"

என்றாள்.

"இனி ஒரு நாளும் பண விஷயத்தில் தலையிட மாட்டேன் என்று வாக்குக் கொடு." அவன் கையை நீட்டினான். ஹேமா தன்னுடைய கையை அவன் கையில் வைத்தாள். ஹேமாவின் கையை மென்மையாக அழுத்திவிட்டு கன்னத்தில் பதித்துக் கொண்டான்.

"ஹேமா! காலையில் நான் சொன்னது எதுவும் மனதில் வைத்துக் கொள்ளாதே. இனிமேல் நீ என்னுடன் சண்டை போட்டாலும் நான் உன்னுடன் சண்டைபோட மாட்டேன்." வாக்குக் கொடுப்பது போல் சொன்னான்.

சண்டைக்கு பிறகு சமாதானமாகி விட்டதில் அவனுக்குக் கிடைத்த மகிழ்ச்சி ரொம்ப அபூர்வமானது. அன்று இரவு ஹேமாவை தனக்குள் ஐக்கியப்படுத்திக் கொள்ளும்போது முதல் இரவை விட அதிகமான மகிழ்ச்சியை அவனால் உணர முடிந்தது. எத்தனையோ யுகங்களாக ஹேமாவுடன் தன்னுடைய வாழ்க்கை பிணைந்திருப்பது போல் தோன்றியது. இந்த உணர்வை திரும்பத் திரும்ப பெறுவதற்காக அவன் வேண்டுமென்றே ஹேமாவுடன் பலமுறை சண்டை போட்டான்.

16

மாதுரி அடிக்கடி தன் வீட்டுக்கு வருவதை ரமேஷ் கொஞ்சம்கூட விரும்பவில்லை என்று ஹேமாவுக்கு தெரியும். முன்னால் இந்த விஷயத்தை அவளிடம் எப்படி சொல்வது என்று குழம்பிக் கொண்டிருந்தாள்.

மாதுரி சின்ன வயதிலிருந்தே இசை, நாட்டியம் என்று பல வித்தைகளை கற்றுக்கொள்ள ஆரம்பித்து பாதியிலேயே நிறுத்தி விட்டாள். தற்போது ஆஃப்ரிகாவிலிருந்து வரும் போதே ஓவியக் கலையின் மீது அபிமானத்தை வளர்த்துக் கொண்டு விட்டாள். இருபத்தி நான்குமணி நேரமும் அதே எண்ணம்தான். வாயைத் திறந்தால் அதே பேச்சுதான். விரைவில் ஓவியக் கலையில் தேர்ச்சி பெற்று சிறந்த ஓவியராக மற்றவர்களால் அடையாளம் காணப்பட வேண்டும் என்ற தவிப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருந்தது. எப்போதும் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற துடிப்பு. அது

இல்லையென்றால் மாதுரியால் உயிர் வாழமுடியாது. வாழ்க்கை வியர்த்தமாக, எந்தவிதமான ஆர்வமும் இல்லாமல் கழிவதுபோல் தோன்றும்.

ஓவியம் வரைய வேண்டும் என்ற விருப்பம் மாதுரியை ஜ்வாலையாக தகித்துக் கொண்டிருந்தது. அதற்கு தீனி போடுவதுபோல் ரமேஷின் உருவத்தோற்றம் அமைந்திருந்தது. உயரத்திற்கு ஏற்ற பருமன், அழகான புருவங்கள், சுறுசுறுப்பாக தென்படும் கண்கள், கூர்மையான மூக்கு— செதுக்கி வைத்த சிற்பம்போல் இருந்த அவனுடைய உருவம் மாதுரியை ஈர்த்தது. நேரம் கிடைக்காது என்ற பிரச்னைக்கே இடமில்லை. வேலை எதுவும் இல்லாமல் அவன் வெறுமே இருந்தது அவளுடைய அதிர்ஷ்டம்தான்.

மாதுரி ஹேமாவிடம் தான் ரமேஷை ஓவியமாக வரைய விரும்புவதாகவும், அவனை எப்படியாவது இதற்கு சம்மதிக்க வைக்க வேண்டும் என்று கேட்டாள். இதைக் கேட்டதும் ஹேமா திகைத்துப் போனவளாக பார்த்தாள். தங்கள் வீட்டுக்கு அடிக்கடி வர வேண்டாம் என்று எப்படி சொல்வது என்று யோசித்துக் குழம்பிக் கொண்டிருந்த ஹேமாவுக்கு மாதுரி ரொம்ப உற்சாகமாக தன் விருப்பத்தை வெளியிட்டபோது இடி விழுந்ததுபோல் இருந்தது.

"என்ன அப்படி பார்க்கிறாய்? சும்மா ஒன்றும் தர வேண்டாம். சிட்டிங்கிற்கு இவ்வளவு என்று பணத்தை கொடுத்து விடுவேன்." மாதுரியின் சுபாவமே இப்படித்தான். எந்த விஷயத்திலும் சங்கோஜப்படமாட்டாள். யாரிடமும் தயங்கமாட்டாள். ஒரு வியாபாரியை போல் பேசி முடிவு செய்து விடுவாள்.

"ச்சி..... பணத்திற்காக இல்லை. ஆனால்...". ஹேமா சற்று தயங்கினாள்.

"இன்னும் சந்தேகம் எதற்கு? என்னுடைய உயிர் தோழி நீதான். உன் கணவரை நான் விழுங்கிவிட மாட்டேன். பயப்படாதே."

"அது போன்ற பயம் எனக்கு எப்போதும் இல்லை. ரமேஷ் அவ்வளவு சீக்கிரமாக யாருக்கும் வசப்படமாட்டான். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது." ஹேமாவின் குரலில் பெருமை வெளிப்பட்டது.

"ரொம்பவும் பெருமைபட்டுக் கொள்ளாதே. அப்புறம் பந்தயம் வைத்துக் கொள்வோமா என்று கேட்டுவிடப் போகிறேன்.

ஜாக்கிரதை." - மாதுரி சிரித்துக் கொண்டே மிரட்டினாள்.

"பந்தயம் வைத்தால் உனக்குத்தான் நஷ்டம். நீ தோற்றுவிடுவாய் என்ற முன்னாடியே எழுதிக் கொடுக்க நான் தயார்."

"ஹேமா! ஒருக்கால் நிஜமாகவே நாம் இருவரும் அதுபோல் பந்தயம் வைத்துக்கொண்டு அதில் நான் தோற்றுப் போனால், அதைவிட மகிழ்ச்சியான விஷயம் வேறு எதுவும் இருக்கமுடியாது. கணவன் மனைவிக்கு இடையில் அந்த நம்பிக்கைதான் அவர்களுடைய குடும்ப வாழ்க்கைக்கு அஸ்திவாரம் போன்றது."

"திருமணம் பற்றி பேச்சு வந்தால் போதும், திருமணம் ஆனவர்களைவிட நன்றாக, ஆராய்ச்சி செய்ததுபோல் பேசுகிறாய். பின்னே திருமணம் என்றால் பயப்படுவானேன்?"

சினேகிதியின் உள் மனதில் மறைந்திருக்கும் எண்ணத்தை கண்டு பிடிக்க முயன்றாள் ஹேமா.

"திருமணம் என்றால் நான் பயப்படுகிறேன் என்று யார் சொன்னார்கள்?" - மாதுரி எதிர்க்கேள்வி கேட்டாள்.

"நான் தான் சொல்கிறேன். உனக்கு ஆண்களைக் கண்டால் வெறுப்போ, துவேஷமோ இல்லை. அப்படி ஏதாவது இருந்தால் திருமணத்தை நீ விரும்பாததற்குக் காரணம் அதுதான் என்று நினைக்கலாம்."

மாதுரியின் முகம் ஒருநிமிடம் சீரியஸாக மாறியது.

"நீ சொன்னதும் ஒரு விதத்தில் உண்மைதானோ என்று தோன்றுகிறது. பெண்களுக்காகட்டும், ஆண்களுக்காகட்டும், ஒரு வயது வரையில்தான் பெரியவர்கள் கட்டுப்பாடுகளை வைக்கமுடியும். என் அதிர்ஷ்டமோ இல்லை துரதிர்ஷ்டமோ என் வாழ்க்கையில் அப்படிப்பட்ட வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. என்னுடைய அப்பா இன்னும் நான்கு வருடங்களாவது உயிருடன் இருந்திருந்தால் என் வாழ்க்கை எப்படி மாறி இருக்குமோ தெரியாது. அப்பா போன பிறகு ஏற்கனவே நோயாளியாக இருந்த அம்மா மருந்து, மாத்திரைகளுடன் தன் வாழ்க்கையை பிணைத்துக்கொண்டு விட்டாள். எனக்கு திருமணம் ஆகவில்லை என்று சுவலைப் படுவாளே தவிர, அதற்கான முயற்சிகளை செய்ய மாட்டாள்.

சினை நிலகம், தூத்துக்குடி வடக்கு.

எனக்கு விவரம் தெரிந்த பிறகு என்னை காதலிப்பதாகவும், திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகவும் பல இலைஞர்கள் சொன்னார்கள். ஆனால் அவர்கள் என்னைவிட என்னுடைய சொத்தைதான் அதிகம் விரும்புகிறார்கள் என்று புரிந்து கொண்டேன். என்மனம் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டு விட்டது என்றால் உண்மையிலேயே ஒருவன் என்னை நேசித்து என்னை தேடிக்கொண்டு வந்தாலும் அவனை என்னால் நம்பமுடியாது. திருமணம் என்றால் நிஜமாகவே பயம் வந்துவிட்டது எனக்கு. என்னை அறியாமலேயே திருமணத்தை பற்றி சில எண்ணங்கள் என் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டன. எனக்குப் பிடித்த நபர் கிடைப்பான் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. பிடிக்காதவனை என்னால் ஏற்றுக் கொள்ளவும் முடியாது." ஆவேசமாக சொல்லிக் கொண்டே யதேச்சையாக வாட்சை பார்த்துக் கொண்டாள் மாதுரி.

"ஓ மை காட்! உன்னுடன் பேசிக் கொண்டே இருந்ததில் நேரத்தையே மறந்துவிட்டேன். சரியாக மூன்று மணிக்கு காண்ட்ராக்டர் வருவதாக சொல்லியிருக்கிறார். உனக்குத் தெரியும் இல்லையா? அப்பாவின் நினைவாக ஒரு பள்ளியை நிறுவப்போகிறோம். இதுவும் என் பெரியப்பாவின் விருப்பம்தான். எனக்கு இதில் கொஞ்சம்கூட இஷ்டம் இல்லை. படித்துவிட்டு எல்லோரும் என்ன சாதித்துவிடப் போகிறார்கள்? என்னைக் கேட்டிருந்தால் ப்யூட்டி க்ளினிக் ஒன்று திறக்கச் செய்து அழகாக இருப்பது எப்படி என்று எல்லோருக்கும் இலவசமாக கற்றுக்கொடுக்கச் செய்திருப்பேன். பெரியப்பா சொல்வதற்கு தலையை ஆட்டுவதை தவிர என்னுடைய அம்மாவுக்கு வேறு எதுவும் தெரியாது. பெரியப்பாவுக்கு எதிராக என் வாயிலிருந்து ஒரு வார்த்தை வர விடமாட்டாள். "நீ வாயை மூடு. பெரியப்பாவுக்கு எல்லாம் தெரியும்" என்பாள். மற்றவர்களின் பணத்தை திறமையாக கொள்ளையடிப்பதை தவிர பெரியப்பாவுக்கு வேறு எதுவும் தெரியாது என்று சொன்னாலும் அம்மா நம்பமாட்டாள். போய் வருகிறேன். ஹேமா! இரவு உன் கணவருடன் பேசி சம்மதம் வாங்கி விடு. மாட்டேன் என்று சொன்னால் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்." சொல்லிக் கொண்டே மாதுரி ஓட்டமும் நடையுமாக அந்த இடத்தை விட்டு வெளியேறினாள்.

அந்தத் தெருவில் இருக்கும் எல்லோருக்கும் மாதுரி தெரிந்த நபர்

போல் ஆகிவிட்டாள். தினமும் காலையிலேயோ, மாலையிலேயோ ஹேமா வீட்டுக்கு வந்து, அவளுடன் ஒருமணி நேரம் பேசவில்லை என்றால் மாதுரிக்கு பொழுதே போகாது. மாதுரி வந்ததும் அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் வியப்புடன் எட்டிப் பார்க்காமல் இருக்க மாட்டார்கள். பணக்கார நிலையை சேர்ந்த அந்தப் பெண்ணுக்கும், அதற்கு நேர்மாறான நிலையில் இருக்கும் ஹேமாவுக்கும் எப்படி அறிமுகமானதோ, அந்த இருவருக்கும் இடையே நட்பு எப்படிப் பட்டதோ அவர்களுக்கு புரியவில்லை.

மாதுரி கிளம்பிப் போனபிறகு ரொம் நேரம் ஹேமா அப்படியே உட்கார்ந்திருந்தாள். ஏனோ தெரியவில்லை. மாதுரி இன்று மனம் திறந்து பேசியதை கேட்டபோது ஹேமாவின் மனம் இளகி விட்டது. அந்த துடுக்கு சுபாவம் எல்லாம் வெளிவேஷம். மனதில் எவ்வளவு தனிமையை அனுபவித்து வருகிறாள்! மாதுரியின் தாய் நித்திய நோயாளி. அவள் தந்தை உயிரோடு இருந்த போதும் அந்த வீட்டின் அதிகாரம் நாகபூஷணத்தின் கையில்தான் இருந்தது. இப்போ தந்தையும் போனபிறகு ஆண்துணை இல்லாத அந்த குடும்பம் நாகபூஷணத்தின்மீதே ஆதாரப்பட வேண்டியதாயிற்று.

"எங்க பெரியப்பா எப்படிப்பட்டவர் என்று எனக்குத் தெரியும் ஹேமா. எவனோ ஒரு வாயில்லாத பூச்சியை கொண்டு வந்து எனக்கு கணவனாக்கி வாழ்நாள் முழுவதும் என்னுடைய சொத்தை தன்பிடியில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று திட்டம் போடுகிறார். நான் ஒன்றும் முட்டாள் இல்லை. என் உயிரே போனாலும் சரி அவர் கொண்டு வரும் பையனை நான் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்." முன்பு ஒரு தடவை மாதுரி சொன்னது நினைவுக்கு வந்தது.

திருமணத்தை பற்றி மாதுரியின் எண்ணம் புரிந்தபோது ஹேமாவுக்கு அவள் விரும்புவதுபோல் ஒருவன் கிடைத்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. ரமேஷிடம் சொல்லி நல்ல பையன் யாராவது இருந்தால் பார்க்கச் சொல்ல வேண்டும். சினேகிதியாய் இது தன்னுடைய **கடமை** என்று நினைத்துக் கொண்டாள்.

மாதுரி தன் **கஷ்டசுகங்**களை பகிர்ந்து கொள்ளும் சினேகிதி தான் மட்டும்**தான்**. அந்த விஷயம் தெரிந்த பிறகும் அவளை வீட்டுக்கு வராதே என்று எப்படி சொல்ல முடியும்?

மாதுரி ரமேஷின் ஓவியம் வரைவதை பற்றி நச்சரித்துக் கொண்டுதான் இருந்தாள். ஹேமா இதோ அதோ என்று காலம் தாழ்த்தினாளே தவிர ரமேஷிடம் கேட்கவில்லை.

முதல் முதலில் மாதுரி கேட்டது சரியில்லை என்று புறக்கணித்தாலும், யோசிக்க யோசிக்க ஹேமாவின் மனதிலும் அந்த எண்ணம் பதியத் தொடங்கியது. மாதுரி சொன்னதும் நியாயமாக தோன்றியது. ரமேஷ் எப்படியும் பகல் முழுவதும் தனியாக எந்த வேலையும் இல்லாமல் வீட்டில்தான் இருக்கிறான். ஒருமணி நேரம் மாதுரி சொன்னதுபோல் உட்கார்ந்து கொண்டால் என்ன ஆகிவிடும். அவனுக்கும் நல்ல பொழுதாக போகும். முக்கியமாக அவனுக்கு கொஞ்சம் வருமானம் கிடைக்கும். ஆனால் அவனை எப்படி சம்மதிக்க வைப்பது? அதுவே பெரிய பிரச்சனையாக இருந்தது ஹேமாவுக்கு.

அன்று இரவு—

சுந்தரம் சாப்பிடும்போது தன் நண்பனுக்கு தெரிந்த ஒரு தனியார் நிறுவனத்தில் கிளார்க் போஸ்ட் காலியாக இருப்பதாகச் சொன்னான். ரமேஷ் சாப்பிட்ட கையோடு அப்ளிகேஷன் எழுத உட்கார்ந்து கொண்டான்.

சமையல் அறை வேலைகளை முடித்துக்கொண்டு வந்த ஹேமா ரமேஷின் பின் பக்கமாகச் சென்று அவனுடைய கண்களை மூடினாள்.

ரமேஷ் பேனாவை மேஜைமீது வைத்து விட்டு ஹேமாவின் கைகளை பற்றி அப்படியே தோளில் அழுத்திக் கொண்டான்.

"என்ன விசேஷம்? தவம் புரியாமலேயே தேவதை பிரத்யட்சமாகி இருக்கிறாள். பரிசு ஏதாவது தரப்போகிறாளா?"

"ஊஹூம். இந்த தேவதை எதையும் தருவதற்காக வரவில்லை. தன் விருப்பத்தை தீர்த்து வைக்கச் சொல்லி கேட்பதற்காக வந்திருக்கிறாள்."

"அடியேனின் ஜென்மம் சாபல்யமாகிவிட்டது. ஆணையிடுங்கள் தேவீ!"

"ரமேஷ்! உன் சார்பில் நான் ஒருத்தருக்கு வாக்கு தந்துவிட்டேன்.

நீ அதை நிறைவேற்ற வேண்டும்."

"தேவியாரின் ஆணை. அப்படியே செய்கிறேன். யாரந்த நபர். என்ன வேலை செய்து தர வேண்டும்?"

ஹேமாவுக்கு சட்டென்று வாயிலிருந்து மாதுரியின் பெயர் வெளியில் வரவில்லை. குரல்வளைத்தில் ஏதோ தடுப்பதுபோல் நின்றுவிட்டாள்.

ரமேஷ் ஹேமாவின் தோள்களை பற்றி முன் பக்கம் இழுத்துக் கொண்டான்.

"சொல்லு. யாரந்த நபர்? என்ன வேலை செய்ய வேண்டும்?"

ஹேமாவின் கண்கள் படபடத்தன.

"உனக்கு விருப்பம் இருந்தால்தான். இல்லாவிட்டால் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் இல்லை. ஆனால் கோபப்படக் கூடாது."

ஹேமா தயங்குவதை பார்க்கும்போது அவனுக்கு சந்தேகம் வந்தது.

"சரி. எதுவும் சொல்லமாட்டேன். எனக்கு விருப்பம் இருந்தால் செய்கிறேன். இல்லாவிட்டால் இல்லை. என்ன விஷயம்? சொல்லு."

"மாதுரிக்கு உன் ஓவியம் வரைய வேண்டுமாம்."

"என்ன?"

ஹேமா எதிர்பார்த்தது போலவே நடந்தது. அவன்முகத்தில் சிரிப்பு மறைந்துவிட்டது.

"மாதுரிக்கு உன்னை ஓவியமாக வரைய வேண்டுமாம். நீ தினமும் ஒருமணி நேரம் உட்கார்ந்து கொண்டால் போதும்."

"இனி போதும். மேற்கொண்டு நீ எதுவும் சொல்ல தேவையில்லை. அவளுக்கும் அவள் ஓவியக்கலைக்கும் பெரிய நமஸ்காரம்! எனக்கு சௌகரியப்படாது என்று சொல்லிவிடு" ரமேஷ் ஹேமாவை விட்டுவிட்டு பேனாவை எடுத்து மறுபடியும் எழுதத் தொடங்கினான்.

ஹேமா மேஜையின் விளிம்பில் சாய்ந்து கொண்டாள்.

"சும்மா ஒன்றும் உட்கார வேண்டாம். பணம் தருவதாக சொன்னாள். நமக்கு எந்த நஷ்டமும் இல்லை."

ரமேஷின் கண்களிர் வெறுப்பும், எரிச்சலும் எட்டிப் பார்த்தன.

"எவ்வளவு தருவாளாம்?"

"நான் கேட்கவில்லை. அவளும் சொல்லவில்லை."

"கேட்காமல் இருப்பானேன்?"

"என்ன? பதிலையே காணோம்? பணத்திற்காகக் தானே என்னை சம்மதிக்க வைப்பதாக அவளிடம் வாக்குக் கொடுத்திருக்கிறாய்?"

"ரமேஷ்! நான் முன்னாடியே சொல்லிவிட்டேன். இதில் நீ கோபம் கொள்வதற்கு எதுவும் இல்லை. மாதுரி கேட்டாள். உன்னிடம் சொன்னேன். பிறகு உன் இஷ்டம்."

"நானும் முன்னாடியே உன்னை எதுவும் சொல்லமாட்டேன் என்று பிராமிஸ் செய்துவிட்டேன். இல்லாவிட்டால் இந்நேரம் உன் கன்னங்கள் இரண்டும் பழுத்திருக்கும்." ரமேஷ் ஹேமாவின் இரண்டு கன்னங்களையும் பிடித்து இழுத்தான்.

"எதுக்கு?"

"எதுக்கா? பணம் தருவதாகச் சொல்லி உன் சினேகிதி உனக்கு ஆசை காட்டுவாளா? அதற்கு நீ பணிந்து போய்விடுவதா? இன்னும் நான்கு நாட்கள் இப்படியே வேலை இல்லாமல் இருந்தால் என்னை நடுத்தெருவில் நிற்க வைத்து ஏலம் போட்டு விற்றுவிடுவாய் போல் இருக்கிறது."

"சரி..... அப்படியே நினைத்துக்கொள்." ஹேமா முகத்தைத் திருப்பிக் கொண்டு அந்த இடத்தை விட்டு போகப் போனாள். ரமேஷின் கை நீண்டு வந்து அவளைத் தடுத்துவிட்டது.

"உண்மையைச் சொல்லு. பணத்திற்காக தானே என்னை ஒப்புக் கொள்ளச் சொல்கிறாய்?"

ஹேமா பதில் சொல்லவில்லை.

ரமேஷ் ஹேமாவின் இடுப்பைச் சுற்றிலும் கையை போட்டு மேலும் அருகில் இழுத்துக் கொண்டான். "ஹேமா! இப்படி

வருமானம் இல்லாமல் இருப்பது எனக்கு மட்டும் பிடித்திருக்கிறதா? நான் என்ன செய்யட்டும்? எந்த முயற்சியும் பலன் தரவில்லை." அவன் குரல் லேசாக கம்மிவிட்டது.

ஹேமா சட்டென்று அவன் இதழ்களை கையால் பொத்தினாள். "ரமேஷ்! என்னால் அதைக்கூட புரிந்து கொள்ள முடியாதா? பணம் சம்பாதிக்கவில்லை என்பதால் நான் உன்னை அலட்சியப்படுத்து வேன் என்று கனவில் கூட நினைக்காதே."

"அப்படியானால் நீ ஒரு நல்ல மனைவி இல்லை என்று அர்த்தம். நாலு காசு சம்பாதிக்காத கணவனை குற்றம் சொல்லாத மனைவியை எனக்குப் பிடிக்காது. அப்படி இருப்பவர்கள் கண்வன்மார்களை சோம்பேறிகளாக, எதற்கும் லாயக்கு அற்றவர்களாக மாற்றிவிடுவார் கள்."

"அப்படியா! இன்னும் எப்படிப்பட்ட மனைவியை உனக்கு பிடிக்காதோ சொல்லு."

"சினேகிதியின் பிரச்னைகளில் மூழ்கி கணவனை மறந்துவிடும் மனைவியரையும் எனக்குப் பிடிக்காது."

"மாதுரி பற்றித்தானே சொல்கிறாய். பாவம்! அவள் ரொம்ப நல்லவள்." ஹேமா மதியம் தனக்கும், மாதுரிக்கும் திருமண விஷய மாக நடந்த உரையாடலை சுருக்கமாக சொன்னாள்.

ரமேஷ் விளக்கை அணைத்துவிட்டான்.

"நீ இன்னும் எழுதிமுடிக்கவில்லையே. அதற்குள் விளக்கை அணைத்துவிட்டாயே?"

"ஊஹூம். அப்புறமாய் எழுதிக் கொள்கிறேன்." ரமேஷ் ஹேமாவை அருகில் இழுத்துக் கொண்டான். ஹேமா அவன் மார் பில் தலையை சாய்த்துக் கொண்டாள். ஒரு நிமிடம் இருவரும் பேச வில்லை. சுவாமி படம் முன்னால் ஹேமா ஏற்றியிருந்த விளக்கின் வெளிச்சம் அறை முழுவதும் மங்கலாக பரவியிருந்தது. திடீரென்று ஹேமா சொன்னாள். "ரமேஷ்! நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்று அண்ணாவுக்கு தெரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?"

அவனுக்கும் இது உண்மைதான் என்று தோன்றியது. மனம் முழுவதும் அமைதி பரவுவதை ரமேஷால் உணர முடிந்தது.

* * *

சுந்தரம் சொன்ன தனியார் நிறுவனத்தில் ரமேஷுக்கு வேலை கிடைத்தது. அன்று ஹேமா அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. "அப்பாடா! நம் கஷ்டங்கள் தீர்ந்துவிட்டன" என்றாள்.

"ஹேமா! மாலையில் முந்திரிபருப்பு போட்டு சேமியா பாயசம் செய்து தர வேண்டும்." சுந்தரம் மனதில் இருந்த விருப்பத்தை வெளியிட்டான். சுந்தரம் எப்போதுமே இப்படித்தான். அடிக்கடி ஏதாவது சாக்கு வைத்துக் கொண்டு விருந்துச் சாப்பாடு தயாரிக்க சொல்வான். சமையல் நன்றாகத் தெரிந்த ஹேமாவுக்கு சுந்தரத்திற்கு பிடிக்கும் விதமாக சமையல் செய்து அவனுடைய பாராட்டுகளை பெறுவது என்றால் ரொம்ப பிடிக்கும். உணவு விஷயத்தில் ஹேமா வும் சுந்தரமும் ஒரே கட்சி. ரமேஷுக்கு சாப்பாடு விஷயத்தில் அவ்வளவாக கவனம் இருக்காது. சாம்பாரில் உப்பு அதிகமானாலும், ரசத்தில் குறைவாக இருந்தாலும் தெரியாது. நன்றாக இருப்பதாகச் சொல்வான். சில சமயம் ஹேமாவுக்குக் கோபம் வரும். "சாப்பிடும் போதாவது உன் மனம் என்னிடம் இருக்கிறதா?" என்று சண்டை போடுவாள். "உன் கையால் எது பறிமாறினாலும் எனக்கு அமிர்த மாகத்தான் இருக்கும் ஹேமா." சிரித்துக்கொண்டே சொல்வான்.

சுந்தரத்திற்கு சாப்பாடு பரிமாறுவது என்றால் ஹேமாவுக்கு ரொம்பப் பிடிக்கும். சமையலை பாராட்டுவது மட்டுமே இல்லை, தினமும் செய்யும் சமையலையே சின்னச் சின்ன மாற்றங்களை செய்து இன்னும் சிறப்பாக அமையும்படி செய்யலாம் என்று அறிவுரைகள் வழங்குவான். ஞாயிற்றுக்கிழமை வந்தால் போதும் ஹேமாவுடன் சமையல் அறையில்தான் இருப்பான்.

ரமேஷுக்கு வேலை கிடைத்ததற்காக மாலையில் சுந்தரம் வரும் போது சேமியா பாயசம் செய்து தயாராக வைத்திருப்பதாக ஹேமா பிராமிஸ் செய்தாள்.

ரமேஷ் உணவு சாப்பிட்டுவிட்டு உடைகளை மாற்றிக்கொண்டு வேலைக்காக புறப்பட்டுக் கொண்டு இருக்கும்போது ஹேமா, "கொஞ்சம் நில்லு" என்று ஓடிவந்தாள். சீப்பை எடுத்துக்கொண்டு தலையை வாரிக் கொள்ளப் போனவன் வியப்புடன் நின்று

விட்டான். ஹேமா ரமேஷை நாற்காலியில் உட்காரவைத்து அவன் கையிலிருந்த சிப்பை எடுத்துக்கொண்டு அவளே அவனுக்கு வாரி விட்டாள்.

"இது நாள் வரையில் வேலை கிடைக்கவில்லை என்று வருத்தப் பட்டுக் கொண்டிருந்தாய். இனிமேல் என்னுடன் பேசுவதற்குக்கூட உனக்கு நேரம் இருக்கப் போவதில்லை." கலாட்டா செய்வதுபோல் சொன்னாள் ஹேமா.

பட்டாபிஷேகத்திற்கு புறப்படும் இளவரசனை சபைக்கு அனுப்புவதுபோல் ஹேமா அன்று ரமேஷை அனுப்பி வைத்தாள். ஹேமாவின் சுபாவமே அப்படித்தான். சின்னச் சின்ன மாற்றங்களை செய்து அவனுடைய அறையின் தோற்றத்தையே மாற்றிவிடுவாள். அதேபோல் தன்னுடைய சின்னச் சின்ன சென்டிமெண்டுகளால் அவன் மனம் முழுவதும் இனிமையான உணர்வுகள் நறுமணம் வீசுவதுபோல் செய்துவிடுவாள். திருப்தியாக வாழ்வதுதான் மனித னின் அதிர்ஷ்டத்திற்கு அடையாளம் என்றால் அந்த விஷயத்தில் ரமேஷ் மகுடம் சூடாத மாமன்னன் என்று சொல்லலாம்.

காலையில் ஹேமா சொன்னதை நினைவில் வைத்துக்கொண்ட சுந்தரம் அலுவலகத்திலிருந்து சீக்கிரமாகவே வந்துவிட்டான். ரமேஷ் இன்னும் வந்திருக்கவில்லை. ரமேஷ் வராமல் பாயசம் குடிப் பது நியாயம் இல்லை என்று சுந்தரத்திற்கு தோன்றியது. ஹேமா விடவில்லை. "கொஞ்சம் டேஸ்ட் பார்த்துச் சொல்லு" என்று சுப் நிறைய கொண்டு வந்து கொடுத்தாள். சுந்தரம் பாயசத்தை குடித்து விட்டு "பிரமாதம்! ரொம்ப நன்றாக இருக்கு" என்று பாராட்டினான்.

ஹேமா ரமேஷின் வருகைக்காக வாசலிலேயே தவம் கிடந்தாள்.

ரமேஷ் வந்தான். களைப்பும், எரிச்சலும் அவன் முகத்தில் வெளிப்படையாக தென்பட்டுக் கொண்டிருந்தன.

வா..... ரமேஷ்! நான் பாயசம் குடித்துவிட்டேன். இல்லை... இல்லை. ருசி பார்த்தேன். அவ்வளவுதான். வேண்டாம் என்றுதான் சொன்னேன். ஆனால் ஹேமாதான் வற்புறுத்தினாள். ரமேஷ் நீ வேலையில் சேர்ந்த இந்த நாளை என்னால் மறக்கவே முடியாது. பாயசம் அவ்வளவு நன்றாக இருந்தது. ஹேமா! சீக்கிரமாக போய் இன்னொரு சுப் கொண்டு வா." சுந்தரம் ஹேமாவை அவசரப்படுத்தி

னான். ஹேமா புன்முறுவலுடன் சமையல் அறைபக்கம் போகப் போனாள்.

"எனக்கு இப்போ எதுவும் வேண்டாம்." தடுப்பதுபோல் ரமேஷ் சொன்னான்.

"போகட்டும் உன் வேலையை பற்றிச் சொல்லு. முதல்நாள் அனுபவம் எப்படி இருந்தது?" சுந்தரம் கேட்டான்.

"பிரம்மாண்டமாக இருந்தது."

"அப்படின்னா?"

"நான் போய் ஒருமணி நேரம்கூட ஆகவில்லை. கம்பெனி மேனே ஜரும், தொழிலாளர் சங்கத்தின் தலைவரும் எதற்காகவோ சண்டை போட்டுக்கொண்டார்கள். வாய் வார்த்தையாக தொடங்கிய சண்டை கைகலப்பில் முடிந்தது. மேனேஜர் தலைவனை அடித்த தும் தொழிலாளர்கள் எல்லோரும் வேலையை விட்டு ஃபாக்டரிக்கு வெளியில் வந்துவிட்டார்கள். வேலை நிறுத்தம் செய்யப் போகிறார் களாம். கம்பெனியை லாக் செய்துவிட்டார்கள். மறுபடியும் எப்போ திறப்பார்களோ அந்த கடவுளுக்குத்தான் தெரியும். வேலையில் சேர்ந்து ஒரு மணி நேரம் கூட ஆகவில்லை, அதற்குள் வேலை நிறுத் தம். சிட்டை விட்டு வெளியில் போனால் வேலை போய்விடுமென்று மேனேஜ்மெண்ட் மிரட்டல். உள்ளே இருந்து வெளியில் வரவில்லை என்றால் உதைப்போம் என்று தொழிலாளர்களின் கத்தல். ஒரே தலைவலி" என்று சொல்லிக் கொண்டே நெற்றிப்பொட்டை அழுத்திக் கொண்டான்.

ஹேமா கற்சிலையாக நின்றுவிட்டாள். வேலை கிடைத்து விட்டது என்ற செய்தியை கேட்டபோது ஏற்பட்ட மகிழ்ச்சி கொஞ்சம் கொஞ்சமாக பனிமூட்டம் போல் கரைந்து கொண்டிருந் தது. ஹேமாவின் கண்களுக்கு மறுபடியும் வேலையில்லாத் திண் டாட்டம் கடினமான உண்மையை போல் நிழலாடியது. அந்த நிமி டம் ஹேமாவின் முகத்தை பார்த்த ரமேஷுக்கு ஈட்டி குத்தியது போல் இருந்தது.

17

வேலை தேடும் முயற்சியை ரமேஷ் தொடர்ந்துகொண்டுதான்

இருந்தான். லேடிஸ் கிளப்பில் ஹேமாவைவிட குறைான சம்பளத்திற்கு வேறு ஒரு அம்மாள் தையல் வகுப்புகளை எடுக்க முன் வந்தாள். அந்த அம்மாள் இதற்காக தனி பயிற்சி பெற்றவள் என்பதால் அந்த வேலையை அவளுக்கு கொடுக்க வேண்டிய நிலைமை. கிளப் செகரெட்டரி ஹேமாவுக்கு வர வேண்டிய சம்பளப்பணத்தை கணக்கு பார்த்து கொடுத்துவிட்டு "தவறாக நினைக்காதே ஹேமா!" என்று இரக்கம் ததும்பும் குரலில் சொன்னாள்.

வெயில்காலம் ஆரம்பமானதில் குழந்தைகளின் ட்யூஷன்களும் குறைந்துவிட்டன. அதனால் ஹேமாவின் வருமானமும் குறைந்து விட்டது. ஒரு பக்கம் மாதா மாதம் வளர்ந்துகொண்டே போகும் வட்டி. இன்னொரு பக்கம் அண்ணன், அண்ணிக்கு தூரமாகி விட்டோமே என்ற வேதனை. ரமேஷுக்கு வேலை கிடைக்க வில்லையே என்ற கவலை. எல்லாமாக சேர்ந்து ஹேமாவை வாட்டிக் கொண்டிருந்தன. "அண்ணாவுக்கு நான் ரொம்ப வேதனை தந்து விட்டேன். அந்த வேதனைதான் சாபமாகி மாறிவிட்டதோ?" என்று கவலைபடத் தொடங்கினாள். உள்ளூர எவ்வளவு வேதனைப்பட்டா லும் வெளியில் கொஞ்சம்கூட அதன் சாயல் தெரியாதவிதமாக நடந்துகொண்டாள். ஆனால், ரமேஷின் கூர்மையான பார்வை ஹேமா வலிய வரவழைத்துக் கொண்ட உற்சாகத்தின் பின்னால் மறைந்திருந்த வேதனையை அடையாளம் கண்டுபிடித்துவிட்டது. வேலைக்காக தேடித்தேடி அவனுக்கும் அலுத்துப் போய்விட்டது. மனம் முழுவதும் அதைரியம் பரவியிருந்தது உண்மைதான் என்றா லும் தன்னுடைய ஏமாற்றம் ஹேமாவுக்கு தெரிந்தால் அவள் மேலும் தைரியமிழந்து விடுவாள் என்று அவனுக்குத் தெரியும். காட்டு விலங்குகளை போல தன்னை தாக்க வரும் ஏமாற்றத்தை, அதைரியத்தை அருகில் நெருங்கவிடாமல், அவன் மனதுடன் போராடிக்கொண்டுதான் இருந்தான். தற்போது அவனுக்கு தெரிந்த ஒரே வழி, தன்னுடைய இனிமையான பேச்சால், நடத்தையால் ஹேமாவுக்கு மேலும் மகிழ்ச்சியை தருவது. தங்களுடைய சந்தோஷத்தை நிர்தாட்சியண்யமாக விழுங்கப் பார்க்கும் ஏழ்மையை எதிர்த்து போராட தன் உடலில் இருக்கும் சக்தி முழுவதையும் ஒன்றாக திரட்டுவது.

கொஞ்சம் சொஞ்சமாக மூழ்கிக்கொண்டிருந்த அந்த தாம்பத்திய படகை காப்பாற்றுவதற்காக சுந்தரம் தன்னால் ஆன முயற்சியை செய்துக் கொண்டு இருந்தான். சுந்தரம் தனக்கு வரும் சம்பளத்தை அப்படியே இந்த வீட்டுக்காக செலவு செய்யத் தொடங்கினாள். வீட்டுக்கு பணம் அனுப்பவில்லை என்று அவனுடைய அப்பா அவனை நன்றாக திட்டி கடிதம் எழுதியிருந்தார். சுந்தரம் எதையும் பொருட்படுத்தவில்லை. கடைசியில் ஒருநாள் அவரே நேரில் வந்துவிட்டார்.

"ஏண்டா? அங்கே நாங்கள் திண்டாடிக் கொண்டு இருக்கும் போது இங்கே நீ நன்றாக சாப்பிட்டு, ஊரைச் சுற்றிக் கொண்டு இருக்கிறாயா? வயிற்றை கட்டி, வாயை கட்டி உன்னைப்படிக்க வைத்ததற்கு நீ காட்டும் நன்றி இதுதானா?" என்று வாய்க்கு வந்தபடி ஏசினார். சுந்தரம் தன்னுடைய தந்தையை வீட்டுக்கு வெளியில் அழைத்துப் போய் பேசுவதற்கு செய்த முயற்சிகள் பலிக்கவில்லை. அந்த சமயத்தில் ரமேஷ் வீட்டில் இல்லை.

"இந்த பெண் யாரு?" அவர் ஹேமாவை பார்த்துக்கொண்டே கேட்டார்.

"என் நண்பனின் மனைவி."

"நீ அறையை காலி செய்துவிட்டு இவர்களுடைய வீட்டில் ஏன் தங்கியிருக்கிறாய்?" சந்தேகமாக கேட்டார்.

சுந்தரத்தினால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. அவன் பகல் முழுவதும் ஆபிசில்தான் இருப்பான். அதோடு அடிக்கடி ஆபிசருடன் டூர்களுக்கு போய்விடுவான். இரவில் தூங்குவதற்கும் காலையில் எழுந்ததும் அலுவலகத்திற்கு கிளம்பும் வரையிலும் தவிர அவன் அந்த அறையில் தங்குவதே இல்லை. பணத்திற்காக ரமேஷ் கஷ்டப்படும் இந்த நாட்களில் தான் தனியாக அறையில் தங்குவது அனாவசியம் என்று நினைத்த சுந்தரம் அதை காலி செய்துவிட்டு பெட்டி படுக்கையை ரமேஷ் வீட்டில் கொண்டு போட்டான். அவனுடைய 'கொலிகின்' மனைவி பிரசவத்திற்காக பிறந்த வீட்டிற்கு சென்றிருக்கிறாள். சுந்தரம் தற்போது அவனுடைய வீட்டில் படுத்துக் கொள்கிறான். இதையெல்லாம் விளக்கிச் சொன்னாலும் தந்தை புரிந்து கொள்ளமாட்டார் என்று அவனுக்குத் தெரியும். அதனால்

"சும்மாதான்" என்று பதில் சொன்னான்.

"உனக்கு புத்தி இருந்தால்தானே? ஏற்கனவே உன் மாமியார் வீட்டில் உன்னிடம் என்ன குற்றம் கண்டுபிடிக்கலாமா என்று பூதக்கண்ணாடியை வைத்துக்கொண்டு தேடி வருகிறார்கள். அவர்களுக்கு வழி சொல்லித் தருவது போல் நடந்துகொள்கிறாய். நாளை அவர்கள் உன் மீது கேஸ் போட்டால், எந்த நண்பனும் உன் உதவிக்கு வரமாட்டான்."

"அப்பா!" சுந்தரம் பதட்டத்துடன் சொன்னான். அவனுக்கு உயிரே போனாற்போல் இருந்தது. தந்தையின் குரல் சின்னது ஒன்றுமில்லை. சமையல் அறையில் இருந்த ஹேமாவுக்கு அவர் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் தெளிவாக கேட்டுக்கொண்டு தான் இருந்தது.

"வாயை மூடிக்கொண்டு இன்னிக்கே வேறு ஒரு அறைக்கு குடியேறுகிற வழியைப்பாரு. பைத்தியக்காரத்தனமாக ஏதாவது செய்தாயோ தெரியும் சேதி." சுந்தரத்தை நன்றாக திட்டிவிட்டு கிளம்பிப் போனார்.

அவர் போனதும் ஹேமா சுந்தரத்தை உடனே வேறு அறையை பார்த்துக் கொள்ளச்சொல்லி வற்புறுத்தினாள். ஆனால் சுந்தரம் மறுத்துவிட்டான்.

தந்தை இதுபோல் வந்து ஹேமாவின் காதில் விழும் விதமாக ரகளை செய்யாமல் கடிதத்தின் மூலமாக எச்சரித்து இருந்தால் சுந்தரம் கட்டாயம் கேட்டிருப்பான். ஆனால் இப்போ தனியாக போவது கோழைத்தனமாக அவனுக்கு தோன்றியது. அன்று இரவு ஹேமா ரமேஷுக்கு மட்டும் உணவு பரிமாறினாள்.

உள்ளே வந்த ரமேஷ் "இதென்ன? சுந்தரத்தின் தட்டு எங்கே?" என்று கேட்டான்.

"அவனை இந்த வேளையிலிருந்து ஹோட்டலில் சாப்பிடச் சொல்லி காலையிலேயே சொல்லி விட்டேன். என்னால் சிரமப்பட முடியவில்லை." என்றாள் ஹேமா.

"சொல்லச் சொல்ல கேட்காமல் வேலைக்காரியை நிறுத்தி விட்டாய். இன்று இப்படிச் சொல்கிறாய். உன்னால் முடியவில்லை

என்றால் எதுவும் செய்ய வேண்டாம். நாளையிலிருந்து நானும் அவனுமாக சேர்ந்து சமையல் செய்கிறோம்." ரமேஷ் கோபமாகச் சொன்னான்.

"உனக்கு எதுவும் புரியாது. சுந்தரம் நம் வீட்டில் இருப்பதில் எனக்கு விருப்பம் இல்லை. வேறு இடத்தை பார்த்துக் கொண்டு போகச் சொல்லு."

ரமேஷ் வியப்பு அடைந்தவன்போல் பார்த்தான்.

ஹேமா மேலும் சொன்னாள். "ஏற்கனவே நாம் நடுத்தெருவில் நிற்கிறோம். நம்மைபற்றி பலர் பலவிதமாக பேசிக்கொள்வதை கேட்டுக் கேட்டு என் காது புளித்துவிட்டது. சுந்தரம் மனைவியுடன் தகராறு செய்து கொண்டு தனியாக இருக்கிறான். நம் வீட்டில் அவன் தங்கியிருந்தால் அந்தப்பழி நம்மீது வரலாம்."

முன் அறையில் உட்கார்ந்து கொண்டு கணவன் மனைவிக்குள் நடந்து கொண்டிருந்த சச்சரவை கேட்டுக் கொண்டிருந்த சுந்தரம் வேகமாக உள்ளே வந்தான்.

"ரமேஷ்! காலையில் நீ வீட்டில் இல்லாதபோது என்னுடைய அப்பா வந்திருந்தார். அவர் ஏதோ சொன்னார் என்று ஹேமா என்னை வீட்டைவிட்டு வெளியேற்ற பார்க்கிறாள். பெரியவர் உளறியதை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டாம்."

"உங்க அப்பா என்ன சொன்னார்?" ரமேஷ் கேட்டான்.

சுந்தரம் நடந்ததை சுருக்கமாக தெரிவித்தான். அதைக் கேட்டதும் ரமேஷின் முகம் சீரியஸாக மாறியது. மூவரும் ஒருநிமிடம் நிசப்தமாக நின்றுவிட்டார்கள்.

"ஹேமா சுந்தரத்திற்கும் பரிமாறு" என்றான்.

ஹேமா மௌனமாக இருவருக்கும் பரிமாறினாள். சுந்தரம் சாப்பிட்டுவிட்டு படுத்துக் கொள்வதற்காக வெளியில் போகும்முன் ஹேமாவின் அருகில் வந்தான். வலிய வரவழைத்துக் கொண்ட புன்முறுவலுடன் "என்னை மன்னித்துவிடு ஹேமா! இந்த உலகம் என் மீது எந்த பழியை சுமத்தினாலும் ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இருக்கிறேன். ஆனால் உன்கை சமையலை சாப்பிடும் பாக்கியத்தை

இழக்க நான் தயாராக இல்லை" என்று சொன்னான்.

ஹேமா பேசவில்லை.

சுந்தரம் கிளம்பிப் போன பிறகு ஹேமா ரமேஷ் மீது எரிந்து விழுந்தாள்.

"உன் உத்தேசம் தான் என்ன? நான் அவனை போகச் சொன்னால் நீ இருக்கச் சொல்கிறாயே?"

ரமேஷ் இந்த சண்டைக்கு தயாராகத்தான் இருந்தான். அதனால் மென்மையான குரலில் "போக வேண்டியது அவன் இல்லை ஹேமா. நாம்தான். சுந்தரம் இந்த வீட்டுக்கு வாடகையை கொடுக்கிறான். அவன் வீட்டில் நாம் இருக்கிறோம். நீ சமையல் செய்யும் மளிகை சாமான் அவன் வாங்கிப் போட்டதுதானே. அவன் வீட்டில் இருந்து கொண்டு அவனுடைய வருமானத்தில் சாப்பிட்டுக் கொண்டு அவனை வெளியில் போகச்சொல்வது நியாயம் இல்லையே? கொஞ்சம் பொறுமையாக இரு. எனக்கு ஏதாவது வேலை கிடைத்ததும் நாம் தனியாக போய்விடலாம்" என்றான்.

ஹேமாவின் கோபம் சற்று குறைந்தது. "எனக்கு சுந்தரத்தின்மீது எந்த கோபமும் இல்லை. ஏற்கனவே நம் நிலைமை சரியாக இல்லை. அது போதாது என்று வீண்பழி சுமக்க வேண்டி வருமோ என்று பயப்படுகிறேன். அவ்வளவுதான்" என்றாள்.

"இவையெல்லாம் பண வசதி இல்லாத என்னை நீ திருமணம் செய்து கொண்டதால் வந்த பிரச்சனைகள், ஒன்றுக்கொன்று எப்படி முடிச்சு போட்டிருக்கு பார்த்தாயா? அன்று நான் சொன்ன போது எல்லாம் எனக்குத் தெரியும். எது வந்தாலும் சமாளித்துக் கொள்கிறேன்' என்று தலையை ஆட்டினாய். இப்பொழுதாவது புரிந்ததா? கனவுக்கும் நினைவுக்கும் எத்தனை வேறுபாடு இருக்கிறதோ?"

ஹேமாவின் கோபம் முழுவதுமாக தணிந்துவிட்டது.

"அது இல்லை ரமேஷ்! சுந்தரம் நம்முடைய நலனை விரும்புகிறவன்தான். ஆனால் அவன் மூலமாக இடைஞ்சல்கள் வந்தால்...."

"பொறுத்துக் கொள்ள வேண்டியது நம்முடைய கடமை இல்லையா ஹேமா. கஷ்டம் வந்தாலும் சுகம் வந்தாலும் ஒரே மாதிரி

இருப்பவர்கள் தான் உண்மையான நண்பர்கள் என்று உனக்குத் தெரியாதா? உண்மையைச் சொல்லு. அவனுடைய அப்பா வந்து அவன் மாமியார் வீட்டில் ஏதோ ரகளை செய்துவிடப் போகிறார்கள் என்றதும் உன் அகக்கண்கள் திறந்து கொண்டு விட்டனவா? நேற்று வரையில் சுந்தரம் போன்ற நல்லவன் உலகத்திலேயே இருக்க மாட்டான் என்று சொன்ன நீ இன்று அவன் மூலமாக இடைஞ்சல் வருமோ என்றதும் பயந்து வீட்டைவிட்டு போகச் சொல்கிறாயே? உண்மையிலேயே நாம் அவனுக்கு நெருக்கமானவர்கள் என்றால் அவன் மூலமாக வரும் பிரச்சனைகளுக்கு சீர்படுத்த முயற்சி செய்து வெற்றி பெற வேண்டும்."

"நான் அவசரப்பட்டுவிட்டேன். இத்தனை ஆழமாக யோசிக்க வில்லை." ஹேமா ஒப்புக்கொண்டாள்.

"மதியம் சுசீலா மாமி வீட்டுக்கு போயிருந்தாயே? மாமி என்ன சொன்னாள்?"

அந்த பிரஸ்தாபனை வந்ததும் ஹேமாவின் முகத்தில் சுவலை குடியேறியது.

"அண்ணாவின் கை ரொம்ப பாதிக்கப்பட்டு இருக்கிறதாம். பழையபடி செயல்படுகிறது சந்தேகம்தான் என்று டாக்டர்கள் சொல்கிறார்களாம். பட்டணத்திற்கு அனுப்பி ஆபரேஷன் செய்ய ஏற்பாடு செய்வதாக அந்த ஊர் விவசாயிகள் சொன்னார்களாம். அண்ணா ஒப்புக்கொள்ளவில்லையாம். தேவையில்லை என்று மறுத்துவிட்டானாம்." ஹேமாவின் குரல் கம்மிவிட்டது.

ரமேஷ் ஹேமாவின் கையை தன்கையில் எடுத்துக் கொண்டான்.

"சுசீலா மாமியுடன் தானும் இங்கே வந்துவிடுவேன் என்று மது ரொம்ப ரகளை செய்தானாம்."

ரமேஷ் பெருமூச்சு விட்டுக்கொண்டே சொன்னான்.

"எனக்கு வேலை ஏதாவது கிடைத்ததும், உடனே மதுவை நம்மிடம் வரவழைத்துக் கொள்வோம். அவனை நன்றாக படிக்க வைப்போம்."

"அந்த நாள் மட்டும் வந்தால், அதைவிட சந்தோஷம் தரக்கூடியது எனக்கு வேறு எதுவும் இல்லை." ஹேமா சொன்னாள்.

"கட்டாயம் வரும் ஹேமா. கஷ்டங்கள் எப்போதும் நிலைத் திருக்கப்போவதில்லை." அவன் குரலில் எதிர்பார்ப்பும், பிடிவாதமும் எதிரொலித்தன.

18

ஹேமா வீட்டில் மாதுரி, சுந்தரம் ஒருவரை ஒருவர் சந்திக்க நேர்ந்தாலும் அவ்வளவாக பேசிக்கொள்ள மாட்டார்கள். ஹேமா முதல் முறையாக மாதுரியை சுந்தரத்திற்கு அறிமுகப்படுத்தியபோது ஹேமாவுக்கு இவ்வளவு பணக்கார சிநேகிதி இருக்கிறாளா என்று வியப்படைந்துவிட்டான். சுந்தரம் ரமேஷின் நண்பன் என்று ஹேமா மாதுரியிடம் சொன்னபோது "ஐஸி." என்று சொல்லிவிட்டு சும்மா இருந்துவிட்டாள். மாதுரி அந்த வார்த்தைகளை உச்சரித்த விதத்தில், திமிரும், அலட்சியமும் வெளிப்பட்டதுபோல் சுந்தரத்திற்கு தோன்றி யது. சுந்தரம் கிளம்பிப்போனதும் மாதுரி உதட்டைப் பிதுக்கிக் கொண்டே "உன் கணவருக்கு நண்பர்கள் விஷயத்தில் பெரிய ரசனை எதுவும் இருப்பதாக தெரியவில்லை" என்றாள். மாதுரியின் சுபாவமே அப்படித்தான். எந்த விஷயத்திலும் ரசனை இருக்க வேண்டும் என்பாள்.

சுந்தரத்திற்கு திருமணம் ஆகிவிட்டதென்றும் மனைவியை குடித்தனத்திற்கு அழைத்து வர படாதபாடு பட்டுக் கொண்டிருக் கிறான் என்று ஹேமாவின் மூலமாக தெரிந்து கொண்டே மாதுரி, தயக்கத்தை விடுத்து சுந்தரத்துடன் பேசத் தொடங்கினாள். போகப் போக கிண்டல் செய்வதுபோல் பேசி அவனை அழ வைப்பது அவ ளுக்கு பொழுதுபோக்காக மாறிவிட்டது. சுந்தரம் ஹேமா எதிரில் இருந்தால் பதில் எதுவும் சொல்லாமல் இருந்துவிடுவான். ஹேமா அங்கே இல்லை என்றால் சுருக்கென்று தைப்பதுபோல் பதில் சொல்லி மாதுரியின் வாயை அடைத்துவிடுவான். அதைக் கவனித்த மாதுரி ஹேமாவின் முன்னிலையில் அவனை மேலும் கிண்டலடித்துக் கொண்டிருந்தாள்.

மாதுரி தனக்குத்தானே சுயமாய் அவனுக்குக் கொடுத்த நெருக்கத்தினால் சுந்தரம் ஒருமுறை சொல்லிவிட்டான்.

"ஹேமாவுக்கு உங்களைப் போன்ற சினேகிதி இருந்தும் ரமேஷுக்கு வேலை கிடைக்கும் வழி தெரியவில்லை என்றால் அவர்

களை பிழைக்கத் தெரியாதவர்கள் என்று சொல்வதை தவிர வேறு என்ன முடியும்?"

வேண்டுமென்றே சுந்தரம் சொன்ன அந்த வார்த்தைகள் மாதுரியின் மீது ஆழமான பாதிப்பை ஏற்படுத்திவிட்டன.

சுந்தரம் கிளம்பிப் போன பிறகு மாதுரி ஹேமா பக்கம் திரும்பி னாள்.

"ஹேமா! வீட்டில் ஏதாவது பிரச்சனையா? பணம் ஏதாவது தர வேண்டுமா?" என்று கேட்டாள்.

ஹேமா சட்டென்று தேவையில்லை என்பதுபோல் தலையை அசைத்தாள்.

"எத்தனை பெரிய தவறு செய்துவிட்டேன். ஹேமா? கண்கள் இருந்தும் குருடியாக இத்தனை நாட்கள் இருந்திருக்கிறேன். உன்னைப் பார்த்ததும் என் பிரச்சனைகளை சொல்லி வேதனையை குறைத்துக்கொள்ள வேண்டும் என்று துடிக்கிறேனே தவிர, உனக்கேதாவது பிரச்சனைகள் இருக்கக்கூடும் என்ற யோசனையே எனக்கு வரவில்லை. தவறாக நினைத்துக் கொள்ளாதே ஹேமா. நாளை இந்நேரத்திற்கு ரமேஷுக்கு வேலை கிடைக்கும் விதமாக செய்யும் பொறுப்பு என்னுடையது" என்றாள்.

மாதுரி ஒரு வேலையை செய்ய வேண்டும் என்று நினைத்தால், செய்து முடிக்கும்வரை உறங்கமாட்டாள். மறுநாள் மாலையில் ஹேமாவிடம் வந்தாள்.

"ஹேமா! எனக்கு தெரிந்த ஹோட்டல் ஒன்றில் ரிஸப்ஷனிஸ்ட் வேலை காலியாக இருக்கிறது. ரமேஷை உடனே அதில் சேரச் சொல்லு. சம்பளமும் பரவாயில்லை. வேறு வேலை கிடைக்கும் வரையில் இதில் இருக்கட்டும். நான் அவர்களுடன் பேசி முடிவு செய்துவிட்டு வந்திருக்கிறேன். ரமேஷிடம் சொல்லு. நாளை காலை யில் சரியாக பத்துமணிக்கு வருகிறேன். தயாராக இருந்தால் நானே அழைத்துச் செல்கிறேன்." என்றாள்.

இதயத்திலிருந்து பெரியபாரம் நீங்கிவிட்டது போல் இருந்தது ஹேமாவுக்கு. ரமேஷிடம் சண்டை போட்டாவது இந்த வேலையில் அவன் சேரும்படியாக செய்ய வேண்டும் என்று முடிவு செய்தாள்.

மாதுரி கிளம்பிச் போய்விட்டாள்.

ரமேஷ் வீட்டுக்கு வந்ததும், ஹேமா மகிழ்ச்சியுடன் இந்த செய்தியை தெரிவித்தாள். ஆனால் அதைக் கேட்டதும் ஹேமாவின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட அவன் முகத்தில் தென்படவில்லை.

"என் விஷயத்தில் சிரத்தை எடுத்துக் கொண்டதற்கு உன் சினேகிதியிடம் என் சார்பில் நன்றியைத் தெரிவித்துவிடு. உன் சினேகிதியின் செல்வாக்கில் எனக்கு வேலை கிடைப்பதைவிட ஏழ்மையில் இருப்பதையே நான் விரும்புகிறேன்."

அலட்சியமாக அவன் சொன்ன பதிலை கேட்டதும் ஹேமாவின் உற்சாகம் அப்படியே வடிந்துவிட்டது.

ரமேஷ் ஹேமாவை சந்தேகமாக பார்த்துக்கொண்டே கேட்டான். "திடீரென்று எனக்கு வேலை வாங்கித்தர வேண்டும் என்ற நல்ல எண்ணம் அவளுக்கு எப்படி வந்ததாம்? நீ ஏதாவது கேட்டாயா?"

ரமேஷ் இந்த வேலைக்கு சம்மதிக்கவில்லை என்ற ஏமாற்றம் ஹேமாவை முழுவதுமாக சூழ்ந்துகொண்டது. ஹிஸ்டீரியா வந்த வளை போல் கத்தினாள்.

"ஆமாம் கேட்டேன். அது என்ன பெரிய குற்றமா? செய்யக் கூடாத தவறு எதுவும் நான் செய்யவில்லையே? யாரையும் எதையும் கேட்காமல் எத்தனை நாட்கள் இதுபோல் அமைதியில்லாமல் என்னை தவிக்கச் சொல்கிறாய்?"

"ஹேமா!"

"மாதுரி என்னுடைய கினேகிதி. நம்முடைய நலனை விரும்புகிறவள். அவள் உதவி செய்தால் அது பெரிய குற்றமா? எத்தனை நாட்கள் இப்படி யாருடனும் எந்த தொடர்பும் வைத்துக் கொள்ளாமல் வாழப்போகிறோம்? தேவை ஏற்பட்டபோது மற்றவர்களிடமிருந்து நாம் உதவியை பெற வேண்டும். முடிந்தபோது பத்து பேருக்கு உதவியைச் செய்ய வேண்டும். இது தவறு என்கிறாயா?"

"தவறு என்று சொல்லமாட்டேன். ஆனால் உதவியை பெறுவதற்கும், செய்வதற்கும் ஒரு தகுதி, நெருக்கம் இருக்க வேண்டும்."

"மாதுரி என் சினேகிதி. அந்த நெருக்கம் போறாதா? கொடுத்த வேலையை நேர்மையாக, பொறுப்பாக செய்து முடிக்கும் திறமை உனக்கு இருக்கிறது. அந்த தகுதி போறாதா?"

"ஹேமா! இந்த விஷயத்தில் நமக்குள் வாதம் வரவேண்டாம். பசிக்கிறது. சாதம் பரிமாறு சேர்ந்து சாப்பிடுவோம்." உடைகளை மாற்றிக்கொள்ள உள்ளே போனான்.

"பேச்சை மாற்றி என்னை ஏமாற்ற முயற்சி செய்ய வேண்டாம். மாதுரியை உனக்கு ஏன் பிடிக்கவில்லை? காரணம் சொல்லு முதலில். பிடிவாதமாக கேட்டாள்."

"இதில் விருப்பு வெறுப்புகளின் பிரஸ்தாபனை எங்கே வந்தது?"

"ஏன் இல்லை? மாதுரி என்றால் உனக்கு இஷ்டம் இல்லை. அதான் நீ இந்த வேலையை ஏற்றுக்கொள்ள மறுக்கிறாய். இதுவே சுந்தரமோ வேறு யாராவதோ சொல்லியிருந்தால் இந்நேரத்திற்கு செருப்பு மாட்டிக்கொண்டு புறப்பட்டு இருப்பாய்."

ரமேஷ் இயலாமையுடன் பார்த்தான்.

"சரி ஹேமா! நீ சொன்னதுதான் உண்மை. அவளை எனக்குப் பிடிக்கவில்லை."

"அதைத்தான் நானும் கேட்கிறேன் எதனால் அவளைப்பிடிக்கவில்லை?"

"அவளுடைய பேச்சும், போக்கும் எனக்குப் பிடிக்கவில்லை."

"நன்றாக டிரஸ் செய்துகொள்வாள். கலகலப்பாக பேசுவாள். அவ்வளவுதானே. அது ஒன்றும் குற்றம் இல்லையே. எப்போதும் பழைய சம்பிரதாயத்தையே கடைகிடிக்க வேண்டுமா? நாகரீகமாக இருக்கக்கூடாதா?"

ரமேஷ் பேசவில்லை.

"மாதுரியை உனக்கு ஏன் பிடிக்கவில்லை என்று எனக்குத் தெரியும். மாதுரியை பார்த்தால் உனக்கு சுதாகர் நினைவுக்கு வருவான். அவன் நினைவு வந்தால் நம் திருமணம் நடந்த சூழ்நிலை நினைவுக்கு வரும். அதான் உனக்கு அவளை பிடிக்கவில்லை. அதுதான் உண்மை."

ரமேஷ் ஒருநிமிடம் சிலையாக நின்றுவிட்டான். இதயத்தின் மென்மையான பகுதியில் இடிபட்டுவிட்ட வேதனை அவன் கண்களில் பிரதிபலித்தது.

"நான் சொன்னது பொய் என்றால் என்தலைமீது கையை வைத்து சத்தியம் பண்ணு" என்றாள்.

ரமேஷ் மனதில் கோபம் காட்டு மிருகம்போல் கட்டுகளை அவிழ்த்துக் கொண்டு வெளியேறத் துடித்துக் கொண்டிருந்தது. ஆனால் பிறவி முதல் அவன் கடைப்பிடித்து வந்த பண்பு அதை வெளியேற விடாமல் தடுத்து நிறுத்தியது.

"என்னால் இப்போ எந்த சத்தியமும் செய்ய முடியாது. எந்த உறுதியும் மொழியும் தரமுடியாது. பசியாக இருக்கிறது. நீ போய் சாப்பாடு பரிமாறு" என்று சொல்லிவிட்டு உடைகளை மாற்றிக் கொள்ளத் தொடங்கினான். இந்த உரையாடல் மேலும் நீடித்தால் அதன் பின்விளைவு ரொம்ப விபரீதமாக இருக்கக்கூடும் என்ற பயம் அவனுக்கு ஏற்பட்டது.

"அப்போ நீ இந்த வேலையில் சேரப் போவதில்லை. அப்படித் தானே" கடைகி முறையாக கேட்டாள்.

"போகப் போவதில்லை. ஆவேசப்பட வேண்டாம். இனிமேலும் நீ இந்த தரித்திரத்தில், அமைதியில்லாமல் தவிக்க வேண்டிய தேவை யில்லை. எனக்கு வேலை கிடைத்து விட்டது."

ஹேமா அவன் வார்த்தைகளை நம்பாததுபோல் பார்த்தாள்.

"உண்மைதான் ஹேமா! எனக்கு வேலை கிடைத்துவிட்டது. இந்தச் செய்தியை உன்னிடம் சொல்ல வேண்டும் என்று மகிழ்ச்சி யுடன் ஓடோடி வந்தேன். நீ இவ்வளவு ரகளை செய்து விட்டாய்."

திடீரென்று ஹேமாவை சோர்வு ஆட்கொண்டது. சற்று நேரம் அவளால் எதுவும் பேசமுடியவில்லை. பிறகு கேட்டாள்.

"வேலை கிடைத்துவிட்டதா? முன்னாடியே ஏன் என்னிடம் சொல்லவில்லை?"

"என்னை சொல்லவிட்டால்தானே?"

"எங்கே கிடைத்தது? என்ன வேலை? ஹேமாவால் ஆர்வத்தை

கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை."

"ஒரு கம்பெனியில் டிரைவராக."

"என்ன டிரைவராகவா?"

ஹேமாவின் கண்களில் தெரிந்த அருவருப்பை உணர்ந்தபோது அவன் இதயம் வேதனையில் துடித்தது.

"ஏன் உனக்கு பிடிக்கவில்லையா? ரிசப்ஷனிஸ்ட் வேலை ஒன்றும் அமைச்சர் பதவி இல்லையே?"

"ரமேஷ்! ஆனால்.... நீ டிரைவராக....."

"ஏன் டிரைவர்களும், க்ளீனர்களும் மனிதர்கள் இல்லையா? மனிதர்களுக்கு மதிப்பு தருவது அவர்களுடைய குணம்தானே தவிர தொழில் இல்லை. நேர்மையுடன் செய்யும் எந்த வேலையும் மதிப்பானதுதான். டிரைவர் மனைவி என்று சொல்லிக் கொள்வ தற்கு உனக்கு தலைகுனிவாக இருந்தால் சொல்லு. போகாமல் இருந்துவிடுகிறேன்."

"என் உத்தேசம் அது இல்லை."

"எதுவாக இருந்தாலும் எனக்கு அனாவசியம். ஜாதி இல்லாத வனே தவிர நீதியில்லாதவன் இல்லை. என்னைத் திருமணம் செய்ய முடிவு செய்த போதே நீ இதுபோன்ற போலி மரியாதைகளுக்கு, மதிப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திருப்பாய் என்று நினைத்திருந் தேன். சின்ன வயது முதல் அனாதையாக வளர்ந்தேன். கஷ்டப்பட்டு உழைத்தேன். கிடைத்த போது சாப்பிட்டேன். இல்லாதபோது பட் டினி கிடந்தேன். ஆனால் இத்தனை வருடவாழ்க்கையில் ஒருநாள் கூட எதையும் மற்றவர்களிடமிருந்து தானமாய் பெற்றுக் கொண்ட தில்லை. ஆனால் உனக்காக, உன்னைத் திருமணம் செய்து கொண்ட தற்காக என் கொள்கைக்கு விரோதமாக சுந்தரத்தின் பணத்தை பயன் படுத்திக் கொண்டேன். இனிமேலும் அந்தக் காரியத்தை செய்யப் போவதில்லை. இத்தனை நாள் என் காரணமாக நீ ஏழ்மையில், அமைதி இல்லாமல் காலம் கழிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. அது என்னுடைய தவறுதான். இனிமேல் ஒருநாளும் அது போன்ற நிலைமை உனக்கு வராமல் பார்த்துக் கொள்வதாக உறுதிமொழியை தருகிறேன். என்னால் முடிந்த வேலையை செய்

கிறேன். உன்னை பட்டினி போட மாட்டேன். நீ உன் உயிர்தோழியிடம் சென்று என் கணவருக்கு வேலைய தேடித்தா என்று கேட்கும் துர்பாக்கிய நிலையை ஒருநாளும் உனக்கு வராமல் பார்த்துக் கொள்கிறேன்."

"ரமேஷ்!" ஹேமாவின் குரல் தீனமாக ஒலித்தது.

"இனியும் இந்த பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தால் நான் ரொம்ப மகிழ்ச்சி அடைவேன். நீ போய் சாப்பாடு பரிமாறு" என்றான்.

ஹேமா சமையல் அறைக்குள் போய்விட்டாள்.

ரமேஷ் உடைகளைகூட மாற்றிக்கொள்ளவில்லை. கட்டில் விளிம்பில் உட்கார்ந்து கொண்டான். திடீரென்று சோர்வு அவனை முழுமையாக ஆட்கொண்டது. "மாதுரியை பார்த்தால் உனக்கு சுதாகரின் நினைவு வரும்." ஹேமா சொன்ன வார்த்தைகள் அவன் காதுகளில் எதிரொலித்தன. அந்த வார்த்தைகள் எத்தனை உண்மை? ஆனால் அந்த உண்மையை ஹேமா புரிந்து கொள்வதை அவன் விரும்பவில்லை.

ரொம்ப நேரம் கழித்து ரமேஷ் சமையல் அறைக்குள் வந்தான். ஹேமா தட்டுகளை வைக்கவில்லை. சாப்பாடு பரிமாறவில்லை. சுவற்று பக்கம் திரும்பி கைகளில் முகம் புதைத்து நிசப்தமாக அழுது கொண்டிருந்தாள். ரமேஷின் இதயம் இளகிவிட்டது. தான் சொன்ன வார்த்தைகள் ஹேமாவின் மனதை எந்த அளவுக்கு காயப்படுத்தி இருக்குமென்று புரிந்துகொள்ள முடியாத முட்டாள் இல்லை அவன். ஹேமாவின் சுபாவமே இப்படித்தான். ஒரே நிமிடத்தில் எதிராளிக்கு கோபம் வரும்விதமாக நடந்து கொள்வாள். அடுத்து நிமிடமே அவர்களுடைய இதயம் கரைந்து விடும் அளவுக்கு வருத்தப்படுவாள். ஹேமாவுக்கு சமமாக தானும் பொறுமையற்று நடந்து கொண்டதற்கு அவனுக்கு தன்மீதே கோபம் வந்தது.

நிசப்தமாக அருகில் சென்ற ரமேஷ் ஹேமாவின் தோள்களை பற்றி வலுக்கட்டாயமாக தன் பக்கம் திருப்பிக்கொண்டான். எத்தனை நேரமாக அழுதுகொண்டிருந்தாளோ தெரியவில்லை. கண்கள் சிவந்து முகம் கன்றி இருந்தது.

"ஹேமா! "உலகத்தில் இருக்கும் அன்பு முழுவதும் அவன் குரலில் வெளிப்பட்டது. அவன் கைகள் ஹேமாவின் தலையை மார்போடு அழுத்திக்கொண்டான்.

"ஹேமா! கஷ்டங்கள் எப்போதும் இருக்கப்போவதில்லை. ஆனால் அவை ஏற்பட்டபோது பேசிகொள்ளும் வார்த்தைகள் மனதிலேயே சாகவதமாக நின்றுவிடும். கொஞ்சம் பொறுமையாக இரு ஹேமா. நாம் எப்போதும் இதே நிலையில் இருந்துவிட மாட்டோம். உனக்குக் கடவுள் மீது நம்பிக்கை இருக்கு இல்லையா? அதில் கொஞ்சமாவது நம் எதிர்காலத்தின் மீது வைத்துக்கொள்." நயமான குரலில் சொன்னான்.

ஹேமா நிசப்தமாக அவனுடன் பிணைந்துவிட்டாள்.

19

மாதுரி ஏற்பாடு செய்திருந்த வேலையை மறுத்துவிட்டு, சுய அபிமானத்தையும் விட்டுவிட்டு, ரமேஷ் டிரைவராக சேர்ந்த வேலையின் ஆயுள் மூன்று நாட்களே நீடித்தது. ரமேஷ் வேலையில் சேர்ந்த நான்காவது நாளே அவன் வேலை பார்க்கும் கம்பெனியின் முதலாளி கடத்தல் குற்றத்தின் கீழே அரெஸ்ட் செய்யப்பட்டார். போலீசார் ரமேஷையும் அரெஸ்ட் செய்தார்கள். கேள்விமேல் கேள்விகளை கேட்டு துளைத்தெடுத்தார்கள். வேலையில் சேர்ந்து மூன்று நாட்கள்தான் ஆகிறது என்றும், தனக்கு எதுவும் தெரியாது என்றும் அவன் சொன்னதை அவர்கள் பொருட்படுத்தவில்லை.

சுந்தரம் அரக்கபரக்க ஹேமா வீட்டுக்கு வந்தான். "ரமேஷ் அரெஸ்ட் ஆகியிருக்கான் ஹேமா!" என்று அவன் சொன்னபோது ஹேமாவுக்கு உலகமே சுற்றுவது போல் இருந்தது. அதிர்ஷ்டவசமாக மாதுரி அங்கேயே இருந்தாள்.

"நீ ஒன்றும் கவலைப்படாதே ஹேமா! ஐஜி. எனக்கு ரொம்ப தெரிந்தவர். குடும்ப நண்பர். நான் போய் என்ன விஷயம் என்று தெரிந்து கொள்கிறேன். சுந்தரம் நீங்களும் கூட வாங்க" என்று சுந்தரத்தை உடன் அழைத்துச்சென்றாள்.

தினமும் தான். ஓட்டி வந்த காரில் பல லட்சங்கள் மதிப்பு இருக்கும் தங்கம் கடத்தப்பட்டு வருகிறதென்று தெரிந்தபோது

ரமேஷ் திகைத்துப்போய் விட்டான். போலீசார் அவனை லாக்கப்பில் தள்ளி தகவுகளைச் சாத்தியபோது அவன் கண்கள் முன்னால் இருள் சூழ்ந்துகொண்டது. இந்த செய்தியை கேட்டதும் ஹேமா எப்படி நிலைகுலைந்து போவாள் என்று அவனால் நன்றாகவே ஊகிக்க முடிந்தது. இந்த கேஸ் எப்போ முடியுமோ? தன்னை எப்போ வெளியில் விடுவார்களோ? ஏற்கனவே தாழ்வான கண்ணோட்டத்துடன் தங்களை நோக்கும் இந்த சமுதாயம் இந்த செய்தியை கேட்டதும் சும்மா இருக்குமா? ஜெயிலில் இருந்து விடுதலை ஆகி தான் போகும்போது சேஷாத்ரி வந்து ஹேமாவை அழைத்துப்போய் விட்டது போலவும், தான் அவர்கள் வீட்டுக்கு போனால் சேஷாத்ரி திட்டிக்கொண்டே தன்மீது பாய்வது போலவும் பல காட்சிகள் அவன் தன் முன்னால் தோன்றி மறைந்தன.

லாக்கப் அறையில் கழித்த நான்குமணி நேரமும் நான்கு யுகங்களைபோல அவனுக்கு தோன்றியது. இனி ஜென்மத்தில் ஹேமாவை கண்ணால் பார்க்கவே முடியாது என்று முடிவு செய்துவிட்டான்.

மாலையில் போலீஸ் அதிகாரிகள் அழைத்து விடுவித்து விட்டதாக தெரிவித்தார்கள். தான் குற்றமற்றவன் என்று அவர்கள் புரிந்து கொண்டுவிட்டார்கள். அதான் உடனே அனுப்பிவிட்டார்கள். தான் அரெஸ்ட் ஆன சமாசாரம்கூட ஹேமாவுக்கு தெரிய வேண்டியது இல்லை என்று நினைத்தபோது இதயத்திலிருந்து பெரிய பாரம் இறங்கிவிட்டது போல் இருந்தது. நிம்மதியான மூச்சை விட்டுக் கொண்டே காவல் நிலையத்திலிருந்து வெளியேறியவனுக்கு திடீரென்று சுந்தரம் வந்து இரண்டு கைகளையும் பிடித்துகொண்டதும் மூளை கலங்கிவிட்டது போல் இருந்தது.

ரொம்ப நேரமாக வெயிலில் அலைந்து திரிந்ததுபோல் சுந்தரத்தின் முகம் வாடிப்போயிருந்தது. தலைமுடி கலைந்திருந்தது.

"ரமேஷ்! இன்று யார் முகத்தில் விழித்தோமோ? எல்லாம் நன்மையில் முடிந்தது. சமயத்திற்கு மாதுரி வீட்டில் இருந்ததால் உன்னை இப்படி சாதாரணமான நிலையில் பார்க்க முடிந்தது." வேக வேகமாக சொல்லி முடித்தான் சுந்தரம்.

"மாதுரியா?"

"ஆமாம். மாதுரியின் செல்வாக்கினால்தான் நீ இப்படி சில மணி

நேரங்களில் விடுதலை செய்யப்பட்டாய். பாவம் மாதுரி. இந்த செய்தியை கேட்டதும் காரை எடுத்துக் கொண்டு அங்கே, இங்கே என்று எத்தனை அலைந்தாள் தெரியுமா? வா. போகலாம். பக்கத்துத் தெருவில் நமக்காக எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறாள்." சுந்தரம் ரமேஷின் கையை பற்றிக்கொண்டு வேகமாக நடந்தான்.

"இதோ பாருங்க மாதுரி! ரமேஷ் வந்துவிட்டான். இன்று நீங்க செய்த உதவிக்கு நானும், ஹேமாவும் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் இந்த நன்றிக்கடனை தீர்த்துக் கொள்ளமுடியாது" மகிழ்ச்சி பொங்கும் குரலில் சொன்னான் சுந்தரம்.

மாதுரியின் கண்களுக்கு பெரிய கோ-கோ கிளாஸெஸ் இருந்தன. அதை சரிசெய்து கொள்ளும் சாக்கில், ரமேஷ் ஏதாவது சொல்வானோ என்று ஒரு நிமிடம் காத்திருந்தாள். ஆனால் ரமேஷ் வாயடைத்துவிட்டது போல் எதுவும் சொல்லவில்லை. திடீரென்று இவ்வளவு சிக்கிரமாக தன்னை விடுதலை செய்ததற்கு காரணம் தன்னுடைய குற்றமற்ற தன்மை இல்லை. மாதுரியின் செல்வாக்கு! ஹேமாவுக்கு பணக்கார சினேகிதி இருந்ததால் ஏற்பட்ட நன்மை! ரமேஷ்க்கு அரெஸ்ட் ஆனபோது அதிர்ச்சியை விட, இப்படி விடுதலை ஆனது இன்னும் அதிர்ச்சியாக இருந்தது.

மாதுரி கையை நீட்டி பின்பக்க கதவைத் திறந்தாள். சிலையை போல் நின்று விட்ட ரமேஷை காருக்குள் தள்ளிவிட்டு சுந்தரம் தானும் உட்கார்ந்து கொண்டான்.

"ஹேமாவிடம் இந்த செய்தியை சொன்னாயா சுந்தரம்?" ரமேஷ் கேட்டான்.

"சொல்லாமல் என்னால் இருக்க முடியுமா? அந்தச் சமயத்தில் கடவுள்போல் மாதுரி அங்கே இருந்தது நம்முடைய அதிர்ஷ்டம் தான்." சுந்தரம் சொன்னான்.

கார் வீட்டின் முன் வந்து நின்றது. கார் வந்த சத்தம் கேட்டதும் ஹேமா வாசலுக்கு ஓடி வந்தாள். ஹேமாவின் கண்களில் ஓடிப் போய் அருகில் சென்று ரமேஷை அணைத்துக் கொள்ள வேண்டும் என்ற பலமான விருப்பம் தென்பட்டது. ரமேஷ்க்கும் அப்படித் தான். அவன் பார்வை ஹேமாவின் மீது முழுவதுமாக படிந்தது.

மூவரும் உள்ளே வந்தார்கள்.

"ஹேமா! இதோ உன் பிராணநாதர். கேஸ், சாட்சியங்கள் என்று எந்த பிரச்சனையிலும் சிக்கிக் கொள்ளாமல் பத்திரமாக கொண்டு வந்து அவரை உன்னிடம் ஒப்படைத்துவிட்டேன். மதியத்திலிருந்து நானும் சுந்தரமும் இதற்காக பல இடங்களுக்கு அலைந்து திரிந்து களைத்துப் போய்விட்டோம். உன் அழகான கரங்களால் எங்களுக்கு ஒரு காபி தந்தால்...."

சுந்தரம் பாதியிலேயே தடுத்தான்.

"பாவம் ஹேமா. இப்பொ இருக்கிற நிலையில் அவளால் எப்படி காபி கலக்க முடியும்? நான் போய் ஹோட்டலிலிருந்து வாங்கி வருகிறேன்." சுந்தரம் ஃபிளாஸ்கை எடுக்கப் போனான்.

ஆனால் ஹேமா தடுத்துவிட்டாள். "எனக்கு என்ன ஆகிவிட்டது சுந்தரம்? இப்பொ நூறு பேருக்கு சமையல் செய்யச் சொன்னாலும் என்னால் செய்ய முடியும். அவ்வளவு பலம் வந்துவிட்டது எனக்கு," ஹேமா ரமேஷ் பக்கம் பார்த்துக் கொண்டே சொன்னாள்.

"சுந்தரம் சொல்வது சரி ஹேமா. எல்லோரும் சேர்ந்து ஏதாவது விடுதலை ரமேஷ் ஆன சந்தர்பத்தில் கிராண்டாக பார்டி கொண்டாடுவோம்." மாதுரி ரமேஷை பெயரைச் சொல்லி அழைப்பது அது தான் முதல் தடவை.

"வெளியில் எங்கேயும் போக வேண்டாம். நானே என் கையால் உனக்கு சமைத்துப் போடுகிறேன். அப்பொ இல்லாமல் வேறு எப்பொ செய்யப் போகிறேன் சொல்லு." ஹேமாவின் விழிகளில் கிர்ரென்று நீர் சுழன்றது. மாதுரியின் அருகில் வந்து இரண்டு கன்னங்களிலும் முத்தம் பதித்து விட்டு வேகமாக சமையல் அறைக்குள் சென்றுவிட்டாள்.

"ஏய்! என்ன இது?" மாதுரியின் முகம் கன்றிவிட்டது. கையால் கன்னங்களை துடைத்துக் கொண்டாள். வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த சுந்தரத்திடம், "எங்க ஹேமா சட்டென்று உணர்ச்சி வசப்பட்டு விடுவாள்." விளக்கம் தருவதுபோல் சொன்னான்.

மாதுரிக்கு அந்த நிமிடம் ரொம்ப த்ரில் ஆக இருந்தது. ஹேமா

வின் கண்களில் உயிரையும் கொடுக்கும் அளவுக்கு தெரிந்த நன்றி உணர்ச்சி, சுந்தரத்தின் முகத்தில் தெரிந்த மதிப்பு கலந்த வியப்பு, வேறு வழியில்லாமல் இந்த உதவியை பெற்றுக்கொண்டதற்கு ரமேஷின் கண்களில் தென்பட்ட இயலாமை— இவையெல்லாம் சேர்ந்து மாதுரியின் மனதில் அற்புதமான உணர்வை பரவச் செய்தன.

சற்று சேரம் கழித்து மாதுரியும், சுந்தரமும் கிளம்பிப் போய் விட்டார்கள்.

ஹேமா கார் வரையிலும் சென்று மாதுரியை வழி அனுப்பி வைத்தாள்.

"தீரா! இன்று நீ செய்த நன்மையை இந்த ஜென்மத்தில் மறக்கமாட்டேன்." ஹேமா சொன்னாள்.

"ஏற்கனவே இரண்டு முறை சொல்லிவிட்டாய். இன்னும் எத்தனை தடவை சொல்லப் போகிறாய்? எதையும் ஒரு தடவைக்கு மேல் சொன்னால் அதில் இருக்கும் அழகே போய்விடும். நினைவில் வைத்துக்கொள்." காரை ஸ்டார்ட் செய்யப் போன மாதுரி திடீரென்று நிறுத்திவிட்டு இரண்டு கைகளையும் ஸ்டீரிங்க் மீது வைத்துக் கொண்டு ஆழமாக பெருமூச்சு விட்டாள்.

"இப்பொ நான் போய் என் பெரியப்பாவுடன் சண்டை போட வேண்டும். ஹேமா உனக்கு என்மீது உண்மையிலேயே அன்பு இருக்கிறதா?" திடீரென்று கேட்டாள்.

"ஏன் அப்படி கேட்கிறாய்? உனக்காக என் உயிரையும் கொடுக்கவும் தயாராக இருக்கிறேன்."புன்முறுவலுடன் சொன்னாள் ஹேமா.

"உன் உயிர் உன்னிடம் இருந்தால்தானே எனக்குக் கொடுக்க முடியும். அது உன் கணவரின் இதயத்தில் பத்திரமாக இருக்கிறதென்று எனக்குத் தெரியும். நான் கேட்க வந்தது அது இல்லை ஹேமா. இந்த சொத்து விஷயமாக என் பெரியப்பாவுடன் சண்டை போட்டு போட்டு என் உயிரே போய் விடும் போல் இருக்கிறது. அவரை எதிர்த்து நிற்கக் கூடிய நபர் யாராவது கிடைத்தால் நன்றாக இருக்கும். இனிமேலும் அவருடன் சண்டை போட எனக்கு தெம்பு இல்லை. முன் பிறவியில் நானும், அவரும் எதிரிகளாக இருந்திருப்

போம். வர்றேன் ஹேமா!" மாதுரி காரை ஸ்டார்ட் செய்து கொண்டு போய் விட்டாள்.

ஹேமா உள்ளே வந்தாள். ரமேஷ் உள்ளங்கைகளை நெற்றியின் மீது வைத்துக் கொண்டு கண்களைமூடி கட்டில்மீது அமர்ந்திருந்தான்.

ஹேமா அவனருகில் வந்தாள். நெற்றியின்மீது பதித்திருந்த கையை பற்றிக் கொண்டு "ரமேஷ்!" என்று அழைத்தாள்.

ரமேஷ் தலையை உயர்த்தி பார்த்தான்.

"ரமேஷ்!" ஏதோ சொல்லப் போனாள்.

அவன் ஹேமாவை சுற்றி கைகளை பிணைத்து அருகில் இழுத்துக் கொண்டான்.

"ஹேமா! பயந்துவிட்டாயா?"

"இந்த ஜென்மத்தில் மறுபடியும் உன்னை பார்க்க முடியும் என்று நினைக்கவில்லை." சொல்லும் போதே குரல் உடைந்துவிட்டது ஹேமாவுக்கு.

"எனக்கும் அப்படித்தான் இருந்தது" என்றான் ரமேஷ்.

"சமயத்திற்கு தீரா இருந்ததால் எல்லாம் நல்லபடியாக முடிந்தது ரமேஷ். மாதுரி ரொம்ப நல்லவள். அவள்மீது நீ எந்த சந்தேகமும் வைத்துக்கொள்ள மாட்டேன் என்று வாக்குக் கொடு." ஹேமா வலுக்கட்டாயமாக சத்தியம் வாங்கிக் கொண்டாள்.

"சரி ஹேமா." ரமேஷ் அந்த வார்த்தைகளை மனபூர்வமாக சொன்னது போல் தோன்றவில்லை. வேறுவழி இல்லாத நிலையில் ஏற்றுக் கொள்ளும் இயலாமை அந்த குரலில் பிரதிபலித்தது.

20

"இத்தனை வருடங்களாக உங்க சொத்து விவகாரங்களை தலையில் சுமந்து, எல்லா தலைவலிகளையும் பொறுத்துக்கொண்டு, யாரும் திருடிக் கொண்டு போகாமல் கண்ணில் விளக்கெண்ணை போட்டுக் கொண்டு காவல் காத்து வந்ததற்கு, நீங்க எனக்கு கொடுக்கு பரிசு இதுவா! இந்த பிடுங்கல்கள் எல்லாம் எனக்கு எதுக்கு என்றுதான் தம்பி போனதும், 'இந்த பிரச்சினைகளை எல்லாம்

நீயே பார்த்துக்கொள்' என்று சொன்ன போது, என் பேச்சை கேட்க வில்லை.' பெரிய அத்தான்! ஆண்துணை இல்லாத குடும்பம். நீங்களும் மறுத்துவிட்டால் எங்கள் கதி என்ன?" என்று கண்ணீர் வடித்தாய் பாவம்! தம்பியின் மனைவியும் மகளும் திண்டாடப் போகிறார்களே என்று இறக்கப்பட்டதற்கு இந்த தண்டனை எனக்கு வேண்டியது தான். தாயும் மகளும் சேர்ந்து கொண்டு நான்கு பேருக்கு நடுவில் என்னை ஒரு முட்டாள் ஆக நிற்க வைப்பீர்கள் என்று கனவில் கூட நினைக்கவில்லை."

முன் கூட்டி தகவல் தெரிவிக்காமல் ஒருநாளும் வீட்டுக்கு வராத பெரிய அத்தான், திடீரென்று வீட்டுக்கு வந்ததோடு வீடே அதிரும் அளவுக்கு சத்தம் போட்டு பேசியதைக் கண்டு ஜெயம்மா மிரண்டு போய்விட்டாள். யாராவது உரத்த குரலில் பேசினாலே அந்த அம்மாளுக்கு கையும் ஓடாது. காலும் ஓடாது. படபடவென்று வருவதோடு உடல் முழுவதும் வயிர்த்துக் கொட்டும் இப்போ அவர் கத்திய கத்தலுக்கு அவள் இதயம் இருமடங்கு வேகத்துடன் துடிக்கத் தொடங்கியது.

"பெரிய அத்தான்! என்ன நடந்தது?" எப்படியோ வார்த்தைகளை கூட்டி கேட்டுவிட்டாள்.

பெரிய அத்தான் சாதாரணமாக குரல் உயர்த்தி பேசவே மாட்டார். எத்தனை பெரிய பிரச்சனை வந்தாலும் கரி மீசையை விரலால் நீவிக்கொண்டே நிறைக்குடம் போல் நிலைதடுமாறாமல் பேசுவார். தன்னுடைய வழக்கமான தோரணையை, சாணக்கியத்தனத்தை எல்லாம் விட்டுவிட்டு அவர் இப்படி கத்துகிறார் என்றால் நடக்கக் கூடாதது எதுவோ நடந்திருக்க வேண்டும். ஜெயம்மா அப்பாவியாக, பதட்டத்துடன் கேள்வியை கேட்டதும் அவர் மேலும் எகிறி எகிறி குதித்தார்.

"என்ன ஆச்சா? உன் மகள் உன்னிடம் எதுவும் சொல்லவில்லையா? உனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் என்னை நம்பச் சொல்கிறாயா?"

ஜெயம்மா மகள் பக்கம் திரும்பி "மறுபடியும் என் உயிரை எடுக்க என்ன பிரச்சினை கொண்டு வந்தாய் பாவி மகளே!" என்பது போல் தீவிரமாக நோக்கினாள். இந்த வீட்டில் என்ன பிரச்சனை வந்தாலும்

மாதுரியால் தான் வரும். தன்னுடைய உடல் நிலைமை இவ்வளவு மோசமாக இருப்பதற்கு, மகளின் பிடிவாத குணத்தை பற்றி தான் படும் கவலைதான் காரணம் என்று ஜெயம்மா நம்பினாள்.

"என்ன நடந்தது பேபீ?" மகளை கேட்டாள். "நன்றாக இருக்கு எனக்கென்ன தெரியும் மம்மீ?" பபிள்கம்மை மென்று கொண்டே நீளமான நகங்களுக்கு மேலும் அழகு சேர்க்கும் விதமாக நகப்பூச்சு பூசிக் கொண்டிருந்த மாதுரி நிதானமான குரலில் சொன்னாள்.

எப்போதும் பெரிய மனிதனை போல் மிடுக்காக ராஜநடை போட்டுக் கொண்டு வரும் பெரியப்பா இன்று அந்த முக்காடை வீசி எரிந்துவிட்டு, நெருப்பை மிதித்த குரங்குபோல் எகிறி எகிறி குதித்துக் கொண்டே கத்துவதை பார்க்கும்போது மாதுரிக்கு உள்ளூர மகிழ்ச்சியாக இருந்தது. மனிதனுக்குள் மறைந்திருக்கும் இன்னொரு மனிதனை இப்படி வெளியில் கொண்டு வந்து வேடிக்கை பார்ப்பது என்றால் அவளுக்கு ரொம்ப பிடிக்கும்.

"என்ன செய்தாய்? உண்மையைச்சொல்லு. மறுபடியும் என் தலையில் கொள்ளி வைக்கும் விதமாக என்ன காரியம் செய்தாய்?" ஜெயம்மா மகளை கண்டிக்கத் தொடங்கினாள்.

"நான் எதுவும் செய்யவில்லை." எரிந்து விழுவது போல் சொன்னாள் மாதுரி.

"எதுவும் செய்யவில்லையா? பொய் சொல்லாதே. ஸ்கூல் கட்டுவதற்காக நான் வைத்திருந்த காண்ட்ராக்டரை நீக்கினாயா இல்லையா?"

"ஓ! அதுவா? ஆமாம். நீக்கினேன்."

"என்ன? பெரியப்பா வைத்திருந்த காண்ட்ரக்டரை நீக்கி விட்டாயா? யாரைக் கேட்டுக்கொண்டு இந்த காரியத்தை செய்தாய்? என்னிடம் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும் என்ற ஞானம் கூட உனக்கு இல்லாமல் போய்விட்டதா?" ஜெயம்மா ஆவேசமடைந்து கொண்டே கேட்டாள்.

"இது போன்ற சின்னச் சின்ன விஷயங்களை உன்னிடம் சொல்ல வேண்டாம் என்று டாக்டர் சொன்னதை மறந்துவிட்டாயா? மம்மீ"

அப்பாவியை போல் முகத்தை வைத்துக்கொண்டு மாதுரி கேட்ட போது அவருக்கு உடல் பற்றி எரிவது போல் இருந்தது. எவ்வளவு அழகாக நடிக்கிறாள். உள்ளூர குமைந்தார்.

"எதற்காக நீக்கினாய்?"

நாகபூஷணம் கேட்கப் போன கேள்வியை ஜெயம்மா முந்திக் கொண்டு கேட்டாள்.

"உனக்குத் தெரியாது மம்மீ. அவன் நிறைய பணத்தை கையாடல் செய்திருக்கிறான்."

"யார் சொன்னது அப்படி?" அவர் கேட்டார்.

"ஒருத்தர் சொல்ல வேண்டிய அவசியம் என்ன? எனக்கே தெரிந்தது. கொஞ்சம் கொஞ்சமாக எல்லா விஷயங்களையும் தெரிந்துகொண்டு வருகிறேன் பெரியப்பா"!

மாதுரியின் பேச்சில் இருந்த சிலேடைக்கோ வேறு எதற்கோ தெரியவில்லை, அவர் முகம் கடுவன் பூனை போல் மாறியது.

"ரொம்ப நல்லது. இந்த நல்ல செய்தியை முன்னாடியே என் காதில் போட்டிருந்தால் இவ்வளவு பதட்டமடைந்திருக்க மாட்டேன் இல்லையா?" அவரும் மறைமுகமாக சொன்னார்.

"சில விஷயங்களை நாமே தெரிந்துகொள்ள வேண்டும். மற்றவர்கள் சொல்லக் கூடாது."

"சின்னவளாக இருந்தாலும் ரொம்ப மதிப்பான வார்த்தையை சொன்னாய். இனிமேல் உன்னிடம் பாடம் சுற்றுக்கொள்கிறேன்." அவருடைய பேச்சு சாணை தீட்டிய கத்தியை போல் கூர்மையாக இருந்தன.

"அப்படியென்றால் அந்த ஸ்கூல் கட்டுவது பாதியிலேயே நின்று விட்டது போல்தானா? ஜெயம்மா கேட்டாள். என் ஜாதகராசி என்னவோ தெரியவில்லை. எந்த வேலையை தொடங்கினாலும் முடிந்து விட்டது என்ற வார்த்தையை ஒருநாளும் கேட்டதில்லை."

"எதுக்காக நின்றுவிடும் மம்மீ! இந்த உலகில் வேறு காண்ட்ராக்டர்களே இல்லையா? வேறொருவரிடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறேன். முன்னைவிட சுறுசுறுப்பாக வேலை நடந்து கொண்டிருக்

கிறது."

"பேபீ! ஸ்கூல் சம்பந்தமாக கணக்கு வழக்குகளை பார்ப்பதற்கு நீ ஏற்பாடு செய்திருக்கும் ஆள் யாரென்று உனக்குத் தெரியுமா?" நெருப்புத்துண்டுகளை போல் சிவந்திருந்த கண்களை உருட்டி விழித்துக் கொண்டே கேட்டார்.

"முன்பின் தெரியாத நபரிடம் பணத்திற்கு சம்பந்தப்பட்ட பொறுப்புகளை எப்படி ஒப்படைக்கமுடியும் பெரியப்பா? அவனை எனக்கு நன்றாகவே தெரியும். மாதுரி தாயின் பக்கம் திரும்பினாள். ஹேமா என்று என் சினேகிதி இருக்கிறான் இல்லையா? அவளுடைய கணவன். ரொம்ப நல்லவன்."

"யாரு? ஹேமாவா? ஹேமான்னா நம் சுதாகரை மறுத்துவிட்டு வேறு ஒருவனை.....". பெரிய அத்தானின் முகத்தை பார்த்த ஜெயம்மா தயக்கத்துடன் நின்றுவிட்டாள்.

"ஆமாம்" என்பது போல் தலையை அசைத்தாள் மாதுரி.

"ஆமாம். அந்த துர்பாக்கியசாலியின் கணவன்தான். "நாகபூஷணம் பற்களை நற நறவென்று கடித்தார்."

"அதிர்ஷ்டத்திற்கு எடுத்துக்காட்டு பணம் இல்லை பெரியப்பா, மகிழ்ச்சி! திருப்தி! ஹேமா எப்போதும் துர்பாக்கியசாலி இல்லை. ரொம்ப ரொம்ப அதிர்ஷடசாலி. வேண்டுமானால் போய் பாருங்கள். அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று உங்களுக்கே புரியும். அதிர்ஷ்டசாலிகள் என்று மற்றவர்களை பாராட்டும் வழக்கம்தான் உங்களுக்கு இல்லையே."

"பேபீ! என்ன பேச்சு இது. வாயை மூடு." ஜெயம்மா உரத்த குரலில் கத்தினாள்.

"அவளுடைய பேச்சை பொருட்படுத்துவதாக இருந்தால் இந்த வீட்டு வாசற்படியை மிதித்து இருக்கமாட்டேன். ஜெயம்மா உன்னிடம் நேரில் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன். நாளை காலையில் பத்துமணிக்கு நான் ஏற்பாடு செய்த காண்ட்ராக்டரின் கூலி ஆட்கள் வேலை செய்வதற்கு வருவார்கள். அந்த நேரத்தில் மாதுரி ஏற்பாடு செய்த ஆட்கள் அங்கே இருக்கக்கூடாது. இருந்தால் மறுபடியும் நான் இந்த வீட்டு வாசற்படியை மிதிக்கமாட்டேன்.

போன்கூட செய்ய மாட்டேன். நீ போன் செய்தாலும் பேசமாட்டேன். என்னை எதிர்த்துக்கொண்டு யாரும் வாழ்ந்துவிட முடியாது. நன்றாக யோசித்துக்கொள்." வேண்டுமென்றே நன்றாக மிரட்டி விட்டு வெளியில் வந்தார்.

உண்மையில் தம்பியின் மனைவியுடன் தகராறு வைத்துக் கொள்வதில் அவருக்கு விருப்பம் இல்லை. தம்பி இறந்தபிறகு அவர்கள் வீட்டில் ஆண் துணை கிடையாது. என்ன செய்தாலும் யாரும் கேட்கமாட்டார்கள். ஜெயம்மா குடித்தனத்திற்கு வந்து ரொம்ப நாட்கள் வரை குழந்தைகள் பிறக்கவில்லை. அந்த சமயத்தில் சின்னப் பையனாக இருந்த சுதாகரை அடிக்கடி தன்னிடம் வரவழைத்து கொஞ்சுவாள். "பெரிய அத்தான! சுதாகரை நாங்களே வளர்த்துக் கொள்கிறோம். எங்களுக்கு கொடுத்துவிடுங்கள்" என்று சொல்லிக் கொண்டிருந்தாள். ஆனால் சுதாகருக்கு எட்டு வயது இருக்கும் போது மாதுரி பிறந்தாள். மகள் பிறந்ததும் கணவன், மனைவி இருவருமே சுதாகரை புறக்கணித்துவிட்டார்கள். நாகபூஷணத்தால் இந்த ஏமாற்றத்தை மறக்க முடியவில்லை. மாதுரிக்கு பத்து வயது ஆகும் போது அவளுடைய தந்தை இறந்துவிட்டார். அந்த விதமாக தம்பியின் சொத்து வேறு வழியில் நாகபூஷணத்தின் கைக்கு வந்தது. தம்பியின் வீட்டில் இத்தனை வருடங்களாக அவர் வைத்ததுதான் சட்டமாக இருந்து வந்தது. சமீப காலமாக மாதுரி எதிர்க்கத் தொடங்கி இருக்கிறாள்.

காரில் வீட்டுக்கு திரும்பி போய்க்கொண்டிருந்த நாகபூஷணம் மீசையை முறுக்கிக் கொண்டார். ஜெயம்மா அவர் சொல்வதை வேதவாக்காக எடுத்துக்கொள்வாள். மகள் எத்தனை பிடிவாதம் பிடித்தாலும் நடக்கவிட மாட்டாள். அந்த நம்பிக்கை அவருக்கு இருந்தது.

மாதுரி இந்த காண்ட்ராக்ட் வேலையை ஒப்படைத்தது அந்த கடன்காரியின் கணவனாக இல்லாமல் வேறு யாரோவாக இருந்தால் பார்த்தும் பார்க்காததுபோல் இருந்திருப்பார். அவனையும் தன் கையில் போட்டுக்கொண்டு அவர்கள் பறித்த குழியில் அவர்களையே புதைத்திருப்பார். ரமேஷ் என்பதால் அவரால் எதுவும் செய்ய முடியவில்லை.

நாகபூஷணம் ஹேமாவை நிச்சயதாம்பூலத்தின் அன்றே மறந்து போய்விட்டார். ஆனால் அவருடைய மகன் இன்னும் அவளை மறக்கவில்லை என்ற உண்மை அவருக்கு இன்று காலையில்தான் தெரியவந்தது. அன்று காலையில்தான் அமெரிக்காவிலிருந்து கடிதம் வந்தது. சுதாகர் எழுதியிருந்தான்.

"டாடீ!

"உங்கள் கடிதத்தை பலமுறை படித்தேன். இனி என் திருமணத்தை பற்றி பேச்சே எடுக்க வேண்டாம் என்று வேண்டிக்கொள்கிறேன். அதை ஒரு இனிய கனவாக ஜீகித்திருக்கிறேன். துரதிர்ஷ்டவசமாக அந்த கனவு கலைந்துவிட்டது.

"வேண்டுமானால் இன்னொரு குழந்தையை வளர்த்துக் கொள்ளுங்கள். நான் வருத்தப்படமாட்டேன். உங்களுடைய ஆசைகள் எல்லாம் வேறு ஒரு மூலமாய் நிறைவேறினால் சந்தோஷப்படுவேன்."

அந்தக் கடிதத்தை படித்ததும் அவருடைய இதயம் எரிமலையை போல் கொந்தளித்தது. இன்னொரு குழந்தையை வளர்த்துக் கொள்ளவேண்டுமா? இரவு, பகல் பாராமல் கஷ்டப்பட்டு, உயிரையும் பணயமாக வைத்து ஒவ்வொரு ரூபாயாக சேர்த்து வைத்த சொத்தை எவனோ ஊர் பெயர் தெரியாதவனுக்கு தாரை வார்க்கணுமா? ஒரு தந்தையின் மனம் எப்படி இருக்கும் என்று தெரிந்திருந்தால் சுதாகர் இப்படி எழுதியிருக்க மாட்டான்.

மகன் எழுதிய கடிதத்தை படித்ததும் அவருக்கு ப்ளட் பிரஷர் வந்துவிடும்போல் இருந்தது. அமைதியை இழந்து தவித்துக் கொண்டே மகனுக்கு என்ன பதில் எழுதுவது என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது அந்த காண்ட்ராக்டர் வந்தான்.

"அய்யா! நேற்று ரொம்ப ரகளை ஆகிவிட்டது. பேபி அம்மா யாரையோ அழைத்துக்கொண்டு வந்தாங்க. நான் வாங்கிய பணத்துக்கும், செய்த வேலைக்கும் நிறைய வித்தியாசம் இருக்குன்னு அந்த ஆள் சொன்னதும் பேபி அம்மா என்னை ரொம்ப திட்டினாள். என் வாயால் நான் சொல்லக்கூடாது. உங்களையும், என்னையும்

சேர்த்து வாய்க்கு வந்தபடி ஏசினாள். வேறு ஆட்களை வைத்துக் கொண்டு வேலையை முடித்துக்கொள்வதாக சொல்லிவிட்டாள். நான் ஏதாவது தகராறு செய்தால் கோர்ட்டுக்கு இழுப்பதாக மிரட்டினாள். அவர்களுடன் சண்டை போடுவது நல்லது இல்லை என்று வேலையை ஒப்படைத்துவிட்டு வந்துவிட்டேன்." முறையீடு செய்வது போல் சொன்னான்.

நாகபூஷணம் அந்த காண்ட்ராக்டரையும் உடன் அழைத்துக் கொண்டு வேலை நடக்கும் இடத்திற்கு போன போது அங்கே புதிய மேஸ்திரி இருந்தான். வேலை ரொம்ப மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. ஹேமாவின் கணவன் ரமேஷும் அங்கே இருந்தான்.

நிழலில் நாற்காலியின் உட்கார்ந்துகொண்டு பேப்பரை படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு பக்கத்தில் தரையில் கறுப்பாக, பெரிய மீசையுடன் அடியாள் போல் தென்பட்ட ஒருவன் அமர்திருந்தான். அவன் கையில் நீளமான சுழி ஒன்று இருந்தது.

பேப்பரை படித்துக்கொண்டிருந்த ரமேஷ் நாகபூஷணம் வந்ததை கவனிக்கவில்லை.

"அய்யா! யாரோ வந்திருக்கிறார்கள்" தரையில் அமர்ந்திருந்தவன் பணிவான குரலில் தெரிவித்தான்.

ரமேஷ் பேப்பரை நகர்த்தி பார்த்தான். நாகபூஷணத்திற்கு ரமேஷை முதலில் அடையாளம் தெரியவில்லை.

"யார் நீ?" என்று கேட்டார்.

"என் பெயர் ரமேஷ்சந்திரா. உங்கள் கடையில் சிலமாதம் வேலை பார்த்திருக்கிறேன். சேஷாத்ரியின் மைத்துனன்."

அதைக் கேட்டதும் நாகபூஷணம் அதிர்ச்சி அடைந்தாலும் சமாளித்துக்கொண்டார்.

"ஓஹோ! அப்படியா!" நினைவுப்படுத்திக்கொள்வது போல் ரமேஷை தலை முதல் கால் வரை பரிசீலித்தார்.

"உனக்கு இந்த வேலையை ஒப்படைத்தது யாரு?" தன் மகனின் மகிழ்ச்சியை கொள்ளையடித்த நபர் திடீரென்று கண்ணெதிரில்

தோன்றியதும் கோபத்தினால் ஆவேசத்தினால் திக்கு முக்காடி விட்டார்.

"மாதுரியும் என் மனைவி ஹேமாவும் சினேகிதிகள். மாதுரிதான் இந்த வேலையை என்னிடம் ஒப்படைத்தாள்." கொஞ்சம்கூட தயங்காமல் பதில் சொன்னான். குறைந்த பட்சம் நாற்காலியிலிருந்து எழுந்து கொள்ளவும் இல்லை.

இத்தனை அவமானமாக நாகபூஷணம் ஒருநாளும் உணர்ந்த தில்லை. பதில் சொன்னதுடன் தன் வேலை முடிந்துவிட்டது போல் ரமேஷ் மறுபடியும் பேப்பரில் மூழ்கிவிட்டான்.

பக்கத்திலிருந்த அடியாள் அவரை எச்சரிப்பது போல் கையி லிருந்த சுழியை, ஒரு கையிலிருந்து மற்றொரு கைக்கு மாற்றிக் கொண்டான்.

"ஹ்ம். எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டுதான் வந்திருக் கிறான்" என்று நினைத்துக்கொண்டே பக்கத்தில் இருந்த காண்ட் ராக்டரிடம், "நீங்க வீட்டுக்கு போங்க நான் போய் என் தம்பியின் மனைவியிடம் பேசிக்கொள்கிறேன்" என்றார்.

வெடிக்க தயாராக இருந்த எரிமலையை போல் கொந்தளித்துக் கொண்டிருந்தவர் அங்கிருந்து நேராக ஜெயம்மா வீட்டுக்கு வந்தார்.

21

"பேபீ! பெரியப்பாவுடன் சண்டை வைத்துக் கொள்வது நல்லது இல்லை. என் பேச்சை கேள். நீ ஏற்பாடு செய்த காண்ட்ராக்டரை உடனே நீக்கி விடு."

பெரிய அத்தான் கிளம்பிப் போனதும் ஜெயம்மா மகளை எச்சரித்தாள்.

"இதில் பயப்பட வேண்டியது என்ன இருக்கு மம்மீ! கண்ணுக்கு எதிரே கொள்ளையடித்துக் கொண்டு இருக்கும்போது பார்த்துக் கொண்டு சும்மா இருக்கச் சொல்கிறாயா? கதவுகளுக்கும், ஜன்னல் களுக்கும் நல்ல மரம் வாங்குவதாகச் சொல்லி என்னிடம் பணம் பெற்றுக் கொண்டான். தரம் குறைவான மரத்தை பயன்படுத்தி இருக்கிறார். சிமெண்ட் விஷயமும் அப்படித்தான். ப்ளோரிங் விஷயத்தில் சொன்னது ஒன்று செய்தது ஒன்று. நமக்கு ஆண்

துணை இல்லை என்றுதானே அந்த தைரியம்?"

"அந்த விஷயம் உண்மைதானே பேபீ" இயலாமையுடன் சொன்னாள் ஜெயம்மா.

ஆண்துணை இல்லை என்று கைகளை கட்டிக் கொண்டு உட்கார்ந்து கொள்ள வேண்டுமா? நம்பிக்கையான ஆளை நியமித்துக் கொண்டு, பணம் விரயமாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உனக்கு இந்த கவலை எல்லாம் எதற்கு? நீ பார்த்துக் கொண்டே இரு. பெரியப்பாவுக்கு பாடம் கற்பிக்கவில்லை என்றால் என் பெயர் மாதுரி இல்லை. அந்தக் காலத்தில் ரொம்ப சின்னவளாக இருந்து விட்டேன். அதுவே இன்றாக இருந்தால் அப்பாவையும் காப்பாற்றிக் கொண்டு இருப்பேன். அப்பா குடிபழக்கத்திற்கு அடிமையானதற்கும், கண்ட பெண்களுடன் சுற்றி உடல் நலத்தை கெடுத்துக் கொண்டதற்கும் பெரியப்பா தானே காரணம். இல்லையென்று உன்னால் மறுக்க முடியுமா?" மாதுரியின் கண்களில் நீர் நிறைந்தது.

"அப்பாவின் பலவீனங்களை தூண்டிவிட்டு, கெட்ட பழக்கங் களுக்கு அடிமையாகும் விதமாக செய்து அவருடைய வாழ்க்கையை நாசம் செய்தார். நீயோ வாயில்லாத பூச்சியாக இருந்துவிட்டாய்."

"அந்த பேச்செல்லாம் இப்பொ எதுக்கு பேபீ? என்னுடைய முட்டாள் தனத்தினால் உன்னுடைய அப்பாவை இழந்துவிட்டேன். உன்னையும் இழந்து விடுவேனோ என்று பயந்து கொண்டிருக்கி றேன். நீ கல்யாணத்திற்கு ஒப்புக் கொண்டால் ஏதோ ஒரு வரனை பார்த்து முடித்துவிடலாம். உன் கல்யாணம் ஆனால் எது எப்படி போனாலும் எனக்குக் கவலை இல்லை."

"ஏதோ ஒரு கல்யாணம் என்று யாராவது செய்து கொள்வார் களா அம்மா!" மாதுரி சிரித்தாள்.

"ஏன் செய்துகொள்ளமாட்டார்கள்? நம் நாட்டில் நூற்றுக்கு தொண்ணூறு பேரின் கல்யாணம் அப்படித்தான் நடக்கும். நான் உன் அப்பாவை திருமணம் செய்து கொள்ளவில்லையா?"

"அந்த நாட்கள் வேறு மம்மீ! உனக்கு திருமணம் ஆகும்போது பன்னிரண்டு வயதுகூட ஆகவில்லை என்று நீயே சொல்லியிருக்கி

றாய். திருமணம் என்றால் என்னவென்று தெரியாத வயசு. உன் நல்லது கெட்டதை தாத்தாதான் யோசித்து முடிவு செய்தார். பெரியவர்கள் சொல்வதை அப்படியே ஏற்றுக்கொள்வதுதான் உங்களுடைய வாழ்க்கையின் லட்சியமாக இருந்தது. இப்போ இருக்கிற தலைமுறை வேறு. திருமண விஷயத்தில் எங்களுக்கென்று சில கொள்கைகள் இருக்கின்றன. வாழ்நாள் முழுவதும் துணையாக வரப்போகிற நபரின் குணாதிசயங்களை முன்னாடியே தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டால் அது தவறு இல்லையே. நாங்கள் பார்க்கும் திரைப்படங்கள், படிக்கும் புத்தகங்கள் எங்களுக்கு இப்படிப்பட்டவன் கணவனாக வந்தால் நன்றாக இருக்கும் என்ற விருப்பத்தை தூண்டிவிடுகின்றன. சூழ்நிலையின் காரணமாக திருமணம் நடந்தால் போதும் என்று பெண்கள் திருமணம் செய்து கொண்டாலும் மனதளவில் சுன்னியாக இருந்துவிடுகிறார்கள். மாறிவிட்ட இந்த தலைமுறையை பற்றி உன்னால் புரிந்து கொள்ள முடியாது. நீ பன்னிரெண்டு வயதில் செய்துகொண்டது போலவே என்னையும் திருமணம் செய்து கொள்ள சொல்கிறாய். அங்கேதான் நம் இருவருக்கும் கருத்து மாறுபடுகிறது" என்றாள் மாதுரி.

ஜெயம்மா வியப்புடன் மகளையே பார்த்துக்கொண்டிருந்தாள். இந்தப் பெண் என் வயிற்றில் பிறந்தவள்தானா? இவ்வளவு தைரியம், துணிச்சல் எங்கிருந்து வந்தன? அந்த அம்மாளுக்கு கோபம் வந்து விட்டது.

"நீ இந்த மாதிரி நாள் நட்சத்திரம் பார்த்துக்கொண்டிருந்தால் வருடங்கள் ஒடிப் போய்விடும். நம் சொத்து விவகாரங்களை பார்த்துக் கொள்வதற்காவாகவது ஒரு ஆண்துணை வேண்டும் இல்லையா?"

"என்னைத் திருமணம் செய்துகொள்கிறவன், இதையெல்லாம் பார்த்துக்கொள்வான் என்ற கியாரண்டி என்ன? வந்தவன் நமக்கே ஆபத்தை விளைவிக்கலாம் இல்லையா?"

"வீண்வாதம் செய்வது தவிர உனக்கு என்ன தெரியும்? கல்யாணம் செய்து கொள்வாயோ மாட்டாயோ? உன் விருப்பம். ஆனால் பெரியப்பாவுடன் சண்டை மட்டும் போடாதே."

"அதைத்தான் செய்யப்போகிறேன். இத்தனை நாட்கள் நீ பெரியப்பாவை ஒரு பிசாசாக நினைத்து பயந்தாய். என்னையும் பயமுறுத்தினாய். அவர் பேயும் இல்லை. பிசாசும் இல்லை. நம்மை போல் சாதாரண மனிதர். இத்தனை நாட்கள் நம்முடைய பலவீனத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டார். இனிமேல் அவருக்கு அதே கதிதான்."

ஜெயம்மாள் மகளின் தைரியத்தைக்கண்டு வியப்பு அடைந்தவளை போல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நான் இப்போ தனி ஆள் இல்லை மம்மீ! என் சினேகிதி ஹேமா இருக்கிறாள் இல்லையா? அவளுடைய கணவன் ரொம்ப திறமையானவன். தேவைப்பட்டால் கணவன், மனைவி இருவரும் எனக்காக உயிரையும் கொடுப்பார்கள். அவர்களுடைய பக்கபலம் இருக்கும் வரையில் பெரியப்பா என்னை ஒன்றும் செய்ய முடியாது."

22

ஜெயம்மா மாதுரியின் பெரியப்பாவை வரச்சொல்லி தகவல் அனுப்பவில்லை. போன் பண்ணவில்லை. கடிதம் எழுதி வேலைக்காரியிடம் கொடுத்து அனுப்பினாள்.

மதிப்பிற்குரிய பெரிய அத்தானுக்கு,

வணக்கம். மாதுரி ரொம்ப சின்னவள். அவளுடைய பிடிவாதம் உங்களுக்கு தெரியாதது இல்லை. அவள் அப்படி ஆனதற்கு காரணம் என்னுடைய வளர்ப்புதான். ஒப்புக்கொள்கிறேன். அசல் விஷயம் என்னவென்றால் அந்த ஹேமாவின் கணவன் வருமானம் இல்லாமல் கஷ்டப்படுகிறான். இந்த பைத்தியக்காரி அவர்களுக்கு ஒரு வழி காட்டுவதாக நினைத்துக்கொண்டு இந்த ஸ்கூல் வேலையின் கணக்கு வழக்குகளை பார்த்துக்கொள்ளச் சொல்லி பொறுப்பை ஒப்படைத்திருக்கிறாள். இதை வாய்ப்பாக எடுத்துக்கொண்டு பழைய ஆட்களை அனுப்பிவிட்டு புதிய ஆட்களை போட்டுக்கொண்டு காண்ட்ராக்ட் முழுவதையும் தன் கையில் எடுத்துக்கொண்டு விட்டான். நீங்க ஆரம்பத்திலேயே எங்களிடம் ஒரு

கையெழுத்து வாங்கியிருந்தால் இந்த பிரச்சனை வந்திருக்காது. மாதுரி ரொம்ப அப்பாவி. சுவர்க்கத்தில் இருக்கும் உங்கள் தம்பியை நினைத்தாவது மாதுரியை மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விஷயத்தை விட்டுவிடுவோம். இனிமேல் இப்படி எதுவும் நடக்காமல் நான் கவனமாக இருக்கிறேன். இந்த உலகில் எனக்கு உங்களைத் தவிர வேறு மனிதர்கள் இல்லை. எங்களுடைய குடும்ப பிரச்சனைகளை உங்கள்மீது சுமத்தி உங்களுக்கு தொல்லை கொடுப்பதற்கு மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜெயம்மா

மகளை கட்டுப்படுத்தமுடியாத ஜெயம்மாள் பெரிய அத்தானை சமாதானப்படுத்துவற்காக மூளையை உபயோகித்து, கொஞ்சம் கற்பனையை ஜோடித்து கடிதம் எழுதி அனுப்பினாள்.

தம்பியின் மனைவி அனுப்பியிருந்த கடிதத்தை படித்ததும் அக்னியில் கொதித்துக்கொண்டிருந்த நாகபூஷணத்தின் மனம் உண்மையிலேயே கொஞ்சம் அமைதி அடைந்தது.

ஜெயம்மா சொன்னது உண்மைதான். இந்த இரண்டு குடும்பங்களுக்கும் இடையே கருத்து வேற்றுமை எதுவும் வரக்கூடாது. அப்படியே வந்தாலும் மூன்றாவது ஆளுக்கு தெரியக்கூடாது. வேண்டுகோள் விடுப்பதுபோல் ஜெயம்மா எழுதிய கடிதத்தை படித்த பிறகு இந்த விஷயத்தில் மாதுரியை மன்னித்துவிடவேண்டும் என்று முடிவு செய்தார்.

அன்ற மாலை அவரே சுயமாக சென்று ஜெயம்மாவை குசலம் விசாரித்தார். "நீ சொன்னதுபோலவே செய்கிறேன். மாதுரியை ஒன்றும் சொல்லமாட்டேன். சரிதானே" என்றார்.

அதைக் கேட்டதும் ஜெயம்மா ரொம்ப மகிழ்ச்சி அடைந்தாள். ஆனால் அந்த மகிழ்ச்சி ரொம்ப நேரம் நீடிக்கவில்லை.

"நான் நாளை சென்னைக்கு போகவேண்டும். சமயத்திற்கு எதிர் பார்த்த பணம் கைக்கு வரவில்லை. வங்கியில் உன் பெயரில் இருக்கும் முப்பதாயிரத்திற்கு செக் எழுதி கொடு. ஊரிலிருந்து திரும்பி வந்த

தும் தந்துவிடுகிறேன்" என்று அவர் சொன்னபோது ஜெயம்மாவுக்கு கொஞ்சம் பணம் இருப்பது வாஸ்தவம்தான் என்றாலும் இன்னும் ஆறு மாதங்கள் கழித்துதான் கைக்கு கிடைக்கும்.

மற்றதெல்லாம் நாகபூஷணத்தின் வியாபாரத்தில் ஷேர்களாக இருந்தன. வங்கியில் இருக்கும் இந்த பணம்தான் செலவுகளுக்காக வைத்திருந்தாள். ஸ்கூல் கட்டுமான வேலைகளுக்கும் இந்த பணம் ஆதாரம்.

வாடகை பணம் வந்தாலும் வீட்டுச் செலவுகளுக்கும், மருந்துகளுக்கும், டாக்டர் ஃபீசுகளுக்கும் சரியாக இருக்கும்.

ஜெயம்மாவுக்கு திடீரென்று மூளையில் ஏதோ மின்னியது. வங்கியில் இருக்கும் பணத்தை இப்படி எடுத்துக்கொண்டு போய்விட்டால் ஸ்கூல் கட்டுவதற்கு கையில் பணம் இருக்காது. வேலை நின்று விடும். மாதுரியை மன்னித்துவிட்டதாக வாயால் சொல்லிக் கொண்டே எத்தனை திறமையாக திட்டம் போட்டிருக்கிறார்?

"அப்படியே ஆகட்டும் பெரிய அத்தான். பேபீயிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு....."

"இதில் அவளிடம் சொல்வதற்கு என்ன இருக்க ஜெயம்மா. மறுபடியும் பிரச்சனை வரும். இன்னிக்கு இந்த கையால் வாங்கிக் கொள்கிறேன். நாளை மறுநாள் அதே கையால் திருப்பித் தந்து விடுவேன். நீ தந்தது, நான் வாங்கிக்கொண்டது மூன்றாம் பேருக்குக் கூட தெரியாது."

ஜெயம்மா வெளிறிப் போன முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நாகபூஷணம் நினைத்த காரியத்தை முடிக்கும் ஆள். அவர் போகும்போது முப்பதாயிரத்திற்கு செக் வாங்கிக்கொண்டுதான் போனார்.

மாதுரி மாலையில் வீட்டுக்கு வந்தபோது நர்ஸ் எதிரே வந்தாள்.

"அம்மாவுக்கு நெஞ்சுவலி வந்திருக்கிறது" என்று சொன்னாள்.

மாதுரி உடனே தாயின் அறைக்கு ஓடினாள். ஜெயம்மா வாடிய கீரைத்தண்டைபோல் கட்டிலில் படுத்திருந்தாள். மகள் அருகில்

உட்கார்ந்து கொண்டதும் அவளுடைய கையை பற்றி மார்பின்மீது வைத்துக்கொண்டே, "பேபீ! என்றோ ஒருநாள் என் உயிர் இப்படியே பிரிந்துவிடும். உன் கல்யாணத்தை பார்க்கும் அதிர்ஷ்டம் எனக்கு இல்லை" என்று கண்ணீர் வடித்தாள்.

"அம்மா! நீ இப்படி வருத்தப்பட்டுக் கொண்டால் இப்பொழுதே கடைத்தெருவுக்கு போய் கண்ணில் தென்பட்டவனை கல்யாணம் செய்துகொண்டு வந்துவிடுவேன்" என்றாள்.

"அது இல்லை பேபீ! உன்னை வற்புறுத்தி கல்யாணத்திற்கு சம்மதிக்க வைக்க என்னால் முடியாது. நீயாகவும் யாரையும் தேர்ந்து எடுத்து கல்யாணம் செய்துகொள்ளவும் மாட்டாய். இந்த உலகில் திருமண வயதில் எத்தனை ஆண்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருத்தன் கூடவா உனக்கு பிடிக்கவில்லை? இது என்னுடைய துரதிர்ஷ்டம் இல்லாவிட்டால் வேறு என்ன?" என்றாள்.

மாதுரியின் கண்களுக்குமுன் அவளையும் அறியாமல் கட்டட வேலையை மேற்பார்வையிட்டுக் கொண்டு வெயிலில் நின்றதால் சுன்றிவிட்ட ரமேஷின் முகம் நிழலாடியது. 'எனக்கு பிடித்தவன் கண்ணில் படும்போது நேரம் கடந்துவிட்டது மம்மீ!' என்று நினைத்துக்கொண்டாள்.

"பேபீ! இன்று மதியம் பெரியப்பா வீட்டுக்கு வந்திருந்தார்." ஜெயம்மா பலவீனமாக குரலில் சொன்னாள்.

"அப்படியா? நான்தான் சொன்னேனே. பெரியப்பாவை பார்த்து நாம் அனாவசியமாக பயந்துகொண்டு இருக்கிறோம். அவ்வளவு தான்" என்றாள் மாதுரி.

நேற்று அவ்வளவு மிரட்டிய பெரியப்பா இன்று தானாகவே வீட்டுக்கு வந்திருந்தார் என்ற செய்தியை கேட்டபோது மாதுரிக்கு பெருமையாக இருந்தது.

23

சேற்றில் மாட்டிக்கொண்ட வாகனத்தை யாராவது தள்ளிவிட்டு உதவி செய்தால், மறுபடியும் வேகமாக ஓடுவதுபோல் ரமேஷின் வாழ்க்கை மாதுரியின் வரவால் ஏழ்மையின் விலங்குகளை உடைத்துக் கொண்டு வேகமாக முன்னேறத் தொடங்கியது.

வங்கியில் இருந்த பணம் முழுவதையும் கடன் என்ற பெயரில் தனக்குத் தெரியாமல் பெரியப்பா வாங்கிச் சென்றுவிட்டார் என்று தெரிந்ததும் மாதுரியின் கோபம் தலைக்கேறிவிட்டது. மறுநாள் சனிக்கிழமை. வேலை செய்பவர்களுக்கு கூலி தரவேண்டும். கையில் சல்லிகாசு இல்லை.

மாதுரி சுழல் காற்றுபோல் ஹேமா வீட்டுக்கு வந்தாள். அந்த நேரம் ரமேஷும் வீட்டிலேயே இருந்தான். ஆவேசத்தினால் உடல் நடுங்க மாதுரி நடந்ததை சொன்னாள். கடைசியில் சோர்வு அடைந்தவளாக நாற்காலியில் சரிந்தாள். "நாளைக்கு ஆட்களுக்கு கூலி கொடுக்க முடியாத பட்சத்தில் காரை எடுத்துக்கொண்டு எந்த மரத்தின் மீதாவது மோதி உயிரை விடுவது நல்லது" என்றாள்.

"தீரா! என்ன பேச்சு இதெல்லாம்" ஹேமா சட்டென்று மாதுரியின் அருகில் சென்று தோள்மீது கையை பதித்தாள்.

மாதுரிக்கு ஏதாவது வழியை காட்டச்சொல்லி ஹேமா கண்களாலேயே ரமேஷுக்கு வேண்டுகோள் விடுத்தாள்.

மாதுரியின் சுபாவத்தை கொஞ்சம் கொஞ்சமாக புரிந்து கொண்டிருந்த ரமேஷ் தயங்காமல் நேராக கேட்டான். "உங்கள் பெயரில் சொத்து ஏதாவது இருக்கிறதா?"

"இல்லாமல் என்ன? நாங்கள் இருக்கும் வீடு என் பெயரில்தான் இருக்கிறது. கார் என்னுடையதுதான். நகைகள் வேறு இருக்கின்றன."

"போதும். வீட்டின்மீது கடன் வாங்கி நிலைமையை சமாளிக்க முடியும். நான் வாங்கித் தருகிறேன். நீங்கள் கவலைப்படவேண்டாம்."

மாதுரியின் முகம் உற்சாகத்தின் மிகுதியில் மின்னியது. எழுந்து கொண்டே, "தாங்க்யூ. இன்னிக்கு நிஜமாகவே எனக்கு புது உயிரை கொடுத்திருக்கீங்க. இரவு நிம்மதியாக தூங்கப் போகிறேன்" என்றாள்.

"தீரா! வீட்டுக்கு போனதும் அம்மாவிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு அவளுடைய சம்மதமும் எடுத்துக்கொள்" ஹேமா எச்சரித்தாள்.

"மைகாட் மம்மியிடமா? மாதுரியின் கண்கள் ஒரு நிமிடம் ரமேஷ் பக்கம் 'கேட்டீங்களா?' என்பது போல் பார்த்தன. உடனே

கலகலவென்று நகைத்துவிட்டு கிளம்பிப்போனாள்.

"ரமேஷ்! இந்த விவகாரத்தினால் மாதுரிக்கும் அவளுடைய பெரியப்பாவுக்கும் மேலும் விரிசல் ஏற்படாது இல்லையா?" ஹேமா கேட்டாள்.

"விரிசல் வரட்டுமே. நமக்கென்ன?"

"அவர் நம்மீது பாய்ந்தால்?"

"அவரால் நம்மை என்ன செய்ய முடியும்?" ரமேஷ் அலட்சிய மான குரலில் சொன்னான். அவருடைய பெயரைக் கேட்டால் போதும் அவன் முகத்தில் வெறுப்பு தென்படும்.

ஹேமா ரமேஷ் அருகில் வந்தாள்.

"அவர் ரொம்ப வில்லங்கம் பிடித்த ஆள் என்று ஜெகதாம்பாள் மாமி அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பாள்."

"இப்போ என்னை என்ன செய்யச்சொல்கிறாய்? நாளைக்கே உன் சினேகிதியிடம் என்னால் இந்த காரியம் செய்ய முடியாது என்று சொல்லிவிடட்டுமா?"

"ஊஹூம். மாதுரிக்கு நீ உதவி செய்துதான் ஆகவேண்டும். ஆனால் அவளுடைய பெரியப்பாவுடன் சண்டை வைத்துக்கொள்ள வேண்டாம்."

"தண்ணீரில் இறங்கியபிறகு ஆழத்தைபற்றி யோசித்தால் எப்படி? இந்த பிரச்சனையெல்லாம் வரும் என்று தெரிந்துதான் நமக்கு எதுக்கு ஹேமா? என்று சொன்னேன். இல்லை. மாதுரிக்கு நாம் உதவி செய்துதான் ஆகவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தது நீதான். நான் சம்மதம் சொல்லும்வரை சாப்பிடக்கூட மறுத்து விட்டு இப்போ இப்படிச் சொன்னால் எப்படி?" என்றான் ரமேஷ்.

"நாம் சுவனமாக இருந்தால் நம்மை யாரும் எதுவும் செய்ய முடியாது" ஹேமா சொன்னாள்.

"அந்த நம்பிக்கை இருக்கு இல்லையா? இனி சுவலைப்படாமல் நிம்மதியாக இரு" என்றான்.

தடைகளை எல்லாம் தாண்டி மாதுரி நினைத்ததுபோல் ஸ்கூல் மூடுவு செய்த தேதிக்குள் தயாராகிவிட்டது.

ரமேஷுக்கு தெரிந்த மார்வாடியிடம் வீட்டை அடகு வைத்து கடன் வாங்கினார்கள்.

"உங்க பெரியப்பாவிடம் பணத்தை பெற்றுக்கொண்டு கூடிய சீக்கிரம் கடனை அடைத்துவிடுங்கள். தாமதம் ஆக ஆக வட்டி ரொம்ப அதிகமாகிவிடும்" ரமேஷ் எச்சரித்தான்.

* * *

வேண்டுமென்றே ஊரிலிருந்து பலநாட்கள் கழித்து தாமதமாக திரும்பி வந்த நாகபூஷணத்திற்கு பள்ளித்திறப்பு விழாவின் அழைப் பிதழை மேஜைமீது பார்த்ததும் தலையை சுற்றிக்கொண்டு வந்தது. நேராக ஜெயம்மாவின் வீட்டுக்கு போய் "பணம் எங்கிருந்து வந்தது?" என்று கேட்டார்.

தாய்க்கு மருந்துகளை கொடுத்துக்கொண்டிருந்த மாதுரி, "கடன் வாங்கினோம் பெரியப்பா! அப்பாவின் நினைவாக கட்டிக்கொண்டி ருக்கும் ஸ்கூல் இல்லையா? அடிக்கல் நாட்டியது யாரோ இல்லை. நீங்கதான். கட்டடம் பாதியிலேயே நின்றுபோனால் எல்லோரும் நம்மை பார்த்து சிரிக்க மாட்டார்களா? அதான் கடன் வாங்கினோம் வட்டி கொஞ்சம் அதிகம்தான். ஆனால் வேறு வழியில்லையே? நீங்க சீக்கிரமாக பணத்தை திருப்பிக்கொடுத்தால் அந்தக் கடனை அடைத்துவிடுவோம்" என்றாள்.

வீட்டை அடகு வைத்து கடன் வாங்கியிருக்கிறார்கள் என்ற செய் தியை கேட்டதும் அவருக்கு உள்ளூர பற்றிக்கொண்டு வந்தது. இத் தனை நாட்கள் கழித்து அவருக்குத் தெரியாமல், அவரை கலந்து யோசிக்காமல் அந்த வீட்டில் ஒரு காரியம் நடந்திருக்கிறது. மாதுரிக்கு இந்த தைரியம் வருவதற்கு காரணம் யார் என்று அவரால் சுலபமாகவே ஊகிக்கமுடிந்தது. ரமேஷ் தன் மகனின் வாழ்க்கையை கொள்ளையடித்த போதுகூட அவர் இவ்வளவு வேதனையை அனுபவித்ததில்லை. மாதுரிக்கு பக்கபலமாக நின்று அவள் தன்னை எதிர்த்து நிற்கும்விதமாக ஊக்கப்படுத்தி வருவதை அவரால் சகித்துக் கொள்ளமுடியவில்லை. இது போன்ற துரோகிகளுக்கு முடிவு கட்டு வது அவரை பொறுத்தவரையில் பெரிய விஷயம் இல்லை. புத்திசாலியாக இருப்பவன் மரத்தை வெட்ட மாட்டான். அதன்

வேர்களை வெட்டுவான். அதனால் தன்னுடைய உணர்ச்சிகளை வெளியில் காட்டிக்கொள்ளாமல், "ரொம்ப நல்லது. சந்தோஷம்" என்று சொல்லிவிட்டு வந்துவிட்டார்.

பள்ளித்திறப்பு விழாவை மாதுரி ரொம்ப பெரிய அளவில் கொண்டாடினாள். தெரிந்தவர்கள் எல்லோரையும் அழைத்தாள். எல்லோரும் வந்தார்கள். வராதது ரமேஷ் மட்டும்தான். மாதுரி வற்புறுத்தி அழைத்தபோதும் அவன் சம்மதிக்கவில்லை.

"நீங்க நினைத்ததுபோல் ஸ்கூல் வேலை முடிந்துவிட்டது. என்னால் முடிந்த உதவியை செய்தேன். அத்துடன் என் கடமை முடிந்துவிட்டது. ஹேமா வர்றேன்னு சொன்னால் அழைத்துச்செல்லுங்கள்" என்றான்.

ஆனால் ரமேஷ் மாட்டேன் என்று சொல்லிவிட்டதால் ஹேமாவும் கிளம்பவில்லை.

இரண்டு நாட்கள் கழித்து, மாதுரி காலை வேளையில் வந்தாள். ஹேமா உள்ளே குளித்துக்கொண்டிருந்தாள்.

ரமேஷ் மாதுரியை உட்காரச்சொல்லிவிட்டு வெளியில் போவதற்காக செருப்புகளை அணிந்து கொண்டிருந்தான். மாதுரி பேக்கிலிருந்து கனமான கவரை எடுத்து நீட்டிக்கொண்டே, "தாமதமாகி விட்டது. சாரி. தவறாக நினைக்காதீர்கள்" என்றாள்.

"என்ன அது?" நெற்றியை சுளித்துக்கொண்டே கேட்டான்.

"உங்களுடைய ஃபீஸ். ஸ்கூல் விஷயத்தில் நீங்கள் மேற்கண்ட சிரமத்திற்கு பிரதிபலன்."

"பிரதிபலனை நான் எதிர்பார்க்கவில்லையே?"

"நீங்க எதிர்பார்க்காவிட்டாலும், கொடுக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கு இல்லையா?

"அது என்னவோ? நீங்களும், ஹேமாவும் பேசிக்கொள்ளுங்கள். எனக்குத் தெரியாது" என்று சொல்லிவிட்டு அவன் வெளியில் போய்விட்டான்.

மாதுரிக்கு அவனுடைய போக்கு ரொம்ப விசித்திரமாக இருந்தது. ஸ்கூல் கட்டுமான வேலைகளில் பங்கு பெற்றபோது, கணக்கு வழக்குகளை பார்க்கும்போது, அறிவுரைகளை வழங்கும்போது

அவன் ரொம்ப நெருக்கமானவனாக தோன்றினான். அறிமுகம் மேலும் வளர்ந்து போல் இருந்தது. ஆனால் இன்று அவன் பேசிய தோரணையை பார்த்தால் அவனும் இவனும் ஒன்றுதானா? என்று தோன்றியது.

மாதுரி ஹேமாவிடம் பணத்தைக்கொடுத்தாள்.

ஹேமா ரொம்பவும் தயங்கினாள்.

"நம் இருவருக்கும் நடுவில் பணத்தை பற்றிய பிரஸ்தாபனை எதுக்கு? உனக்கு உதவி தேவையாக இருந்தது. ரமேஷ் செய்தான். அவ்வளவுதான்" என்றாள்.

மாதுரிக்கு ரொம்ப கோபம் வந்தது.

"நீங்க இருவரும் என்னைப்பற்றி என்ன நினைத்துக்கொண்டு இருக்கிறீர்கள்? ராப்பகல் பார்க்காமல் உன் கணவரிடமிருந்து உழைப்பை பெற்றுக்கொண்டு இது வெறும் நட்புதான் என்று சும்மா இருக்கச் சொல்கிறாயா? தவறு முழுவதும் என்னுடையதுதான். முன்னாடியே இந்தப் பணத்தை பேசி முடிவு செய்திருக்க வேண்டும். ஹேமா நம் நட்புக்கும் இதுக்கும் நீ கனவில்கூட முடிச்சுப் போடாதே. அது வேறு இது வேறு. நீ இந்த பணத்தை பெற்றுக் கொள்ள மறுத்தால் நான் உங்க வீட்டுக்கே வரமாட்டேன்."

ஹேமா சட்டென்று மாதுரியின் வாயை பொத்தினாள். "இந்த சின்ன விஷயத்திற்கு அவ்வளவு பெரிய வார்த்தைகள் எதற்கு? நீ வற்புறுத்திச் சொன்னால் நான் மறுக்கப்போவதில்லை. ஆனால் ரமேஷ் உனக்கு இந்த உதவியை செய்தது உனக்கும் எனக்கும் இடையே உள்ள நட்புக்காக. அதை மறந்துவிடாதே. அன்று நீ எங்களுக்கு செய்த உதவிக்கு நாங்க என்ன செய்தாலும் உன் நன்றிக் கடனை தீர்க்க முடியாது."

"அந்த நன்றிக்கடன் அப்படியே தனியாக இருக்கட்டும். சமயம் வரும்போது வட்டியுடன் சேர்த்து வசூல் செய்து கொள்கிறேன் போதுமா? இப்போ இந்த கணக்கை முடித்துவிடு. நான் ஆபத்தில் இருக்கும்போது எனக்கு உதவி செய்தீர்கள். ரமேஷின் பக்கபலம் இல்லாவிட்டால், அந்த ஸ்கூல் இந்த ஜென்மத்தில் முடித்திருக்க முடியாது. உன்னுடைய கணவர் என்ற முறையில் நான் இந்த

பணத்தை தரவில்லை. ஒரு காண்ட்ராக்டர் என்ற முறையில் தருகி றேன். இந்த பேச்சை இத்துடன் முடித்துக்கொள்வோம்" என்றாள்.

ஹேமாவால் எதையும் சொல்ல முடியவில்லை. மாதுரி கிளம்பிப் போனபிறகு கவரை எடுத்துப் பார்த்தாள். அதில் இருந்த பணத்தை பார்த்ததும் இதயத்திலிருந்து பெரிய பாரம் நீங்கி விட்டதுபோல் உணர்ந்தாள். கடனை அடைத்துவிட்டு மீதி பணத்தில் சிக்கனமாக செலவு செய்தால் குறைந்தபட்சம் ஆறுமாதங்கள்வரை எந்த பிரச் சனையும் இருக்காது. அந்த நிமிடம் ஹேமாவின் மனம் முழுவதும் மாதுரியின் பால் நன்றி உணர்வும், நட்பின் நெருக்கமும் பரவிக்கிடந் தன. கடவுள் தன்னுடைய வேண்டுகோளை ஏற்றக்கொண்டு மாதுரி மூலமாக தங்களுக்கு உதவி புரிவதுபோல் தோன்றியது.

அன்று மதியம் முழுவதும் சுந்தரம் வீட்டிலேயே இருந்ததாலும், பிறகு ரமேஷ் வெளியில் கிளம்பிப்போய் விட்டதாலும் ஹேமாவுக்கு இந்த விஷயத்தை உடனே ரமேஷிடம் தெரிவிக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. மாதுரி முதலில் ரமேஷிடம்தான் இந்த பணத்தை கொடுக்க முயன்றாள் என்ற விஷயமும் ஹேமாவுக்கு தெரியாது. அன்று இரவு தூங்குவதற்குமுன் மாதுரி கொடுத்த கவரை எடுத்து வந்தாள்.

"காலையில் தீரா பணம் கொடுத்துவிட்டு போனாள்" என்றாள்.

ரமேஷ் உடனே எதுவும் சொல்லவில்லை. அந்த கவரை பார்த்ததும் அவன் கண்களில் கோபம் எட்டிப்பார்த்தது.

"வேண்டாம் என்று சொன்னாலும் கேட்கவில்லை. மறுத்தால் இனி வீட்டுக்பக்கம் வரவே மாட்டேன்னு மிரட்டினாள்." விளக்கம் தருவதுபோல் சொன்னாள் ஹேமா.

"அந்த மிரட்டல்களுக்கு நீ பணிந்துபோய் விட்டாய். அப்படித் தானே?"

"அப்படி இல்லை. ஒரு விதமாக பார்த்தால் இந்தப் பணத்தை எடுத்துக்கொள்வது நியாயமற்ற செயலாக எனக்குத் தோன்றவில்லை. இந்த ஒரு மாதம் வேளைக்கு சாப்பிடாமல், தூங்காமல் நீ எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்தாய் என்று எனக்குத்தான் தெரியும்."

"அந்தப் பேச்செல்லாம் இப்பொ அனாவசியம். உனக்கு பணத்தை வாங்கிக் கொள்ள வேண்டும் என்று தோன்றினால் வாங்கிக்கொள். நான் ஒன்றும் விளக்கம் கேட்கவில்லை."

"உனக்கு விருப்பம் இல்லை என்றால் எடுத்துக்கொள்ள மாட்டேன்."

"இந்த விஷயத்தில் என் விருப்பு, வெறுப்புகளின் பிரஸ்தாபனை தேவையில்லை. உன் சினேகிதிக்கு உதவி செய்ய வேண்டும் என்று நீ கேட்டாய். நான் செய்தேன். அதற்குப் பிறகு எனக்கு எந்த சம்பந்த மும் இல்லை".

"அப்படி என்றால் நான் எடுத்துக்கொள்ளலாம் இல்லையா?"

"முன்னாடியே சொல்லிவிட்டேன். எனக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்று."

"நமக்கு இந்த பிரச்சனைகள் இல்லை என்றால் நானும் எடுத்துக் கொண்டிருக்கமாட்டேன். ஆனால் அந்தக் கடன்.... வட்டி எல்லாம் நினைவுக்கு வந்தால்....."

"ரொம்ப தவறாக யோசிக்கிறாய். அந்தக் கடனை இந்தப் பணத் தால் தீர்க்கப் போவதில்லை."

"அப்படி என்றால்? இந்தப் பணத்தை வாங்குவதில் உனக்கு விருப் பம் இல்லை என்றுதானே அர்த்தம். கடனை தீர்க்கப்போவதில்லை என்றால் இந்தப் பணம் எதற்கு? எனக்கும் தேவையில்லை. பிடிவாதம் பிடிப்பதுபோல் சொன்னாள்" ஹேமா.

"உன் விருப்பம் என்று சொன்னேனே. அமைதியான குரலில் சொன்னான்."

ரமேஷ் சொன்னதுபோல் நடந்துகொண்டான். ஹேமா எதிர்பார்த்ததுபோல் சில நாட்கள் போனபிறகும் கடனை அடைக்க அந்த பணத்தை பயன்படுத்திக்கொள்ளவில்லை.

24

"ஹேமா! உனக்கு ஒரு நல்ல செய்தியை கொண்டு வந்திருக் கிறேன். சொன்னால் எனக்கு என்ன பரிசு தருவாய்?" மாதுரி கேட்டாள்.

"நானா? என்னால் உனக்கு என்ன தரமுடியும்?"

"வாழ்நாள் முழுவதும் என்னுடைய உயிர் சினேகிதியாக இப்படியே இருப்பேன் என்று சத்தியம் செய்துகொடு."

"வெறுமே சினேகிதியாக இருப்பது மட்டும்தானா? என் உயிரைக் கொடுக்கச் சொன்னாலும் தருகிறேன்."

"என் உயிரையே சுமக்க முடியாமல் நான் திண்டாடிக் கொண்டிருக்கும் போது உன்னுடைய உயிர் எனக்கெதுக்கு?"

"சரி. நீ எது கேட்டாலும் தருகிறேன். விஷயம் என்னவென்று சொல்லு." ஹேமா பதட்டத்துடன் கேட்டாள்.

"எனக்குத் தெரிந்தவர்கள் பெரிய வீடாக கட்ட வேண்டும் என்று திட்டம் போட்டிருக்கிறார்கள். அதனுடைய காண்ட்ராக்ட் உன்னுடைய ஹீரோவுக்குக் கிடைக்கப்போகிறது."

பெரியப்பா கொடுத்த இடைஞ்சல்களை எல்லாம் சமாளித்து, நினைத்த நேரத்திற்குள் ஸ்கூல் கட்டடத்தை ரமேஷ் முடித்துக் கொடுத்த பிறகு மாதுரி அவனுக்கு "ஹீரோ" என்ற பட்ட பெயரை சூட்டிவிட்டாள்.

"நிஜமாகவா?" ஹேமாவின் கண்களில் மகிழ்ச்சி தென்பட்டது.

"உன் மீது சத்தியம். நான் அவர்களுடன் எல்லா விவரங்களையும் பேசி முடித்துவிட்டேன். உன் கணவர் வந்து சரி என்று ஒரு வார்த்தை சொல்வதுதான் பாக்கி."

"தீரா! உன் நன்றிக்கடனை என்றாவது என்னால் தீர்க்க முடியுமா?" ஹேமாவின் கண்கள் பனித்தன.

"சொன்னேனே. வாழ்நாள் முழுவதும் நீ என்னுடைய பிரிய சகியாய் இருந்தால் நானே உனக்கு நன்றிக்கடன் பட்டவள் ஆகிவிடுவேன். மாலையில் உன் கணவர் வந்தால் இந்த நல்ல செய்தியை தெரிவித்துவிடு. நாளை காலையில் சரியாக பத்து மணிக்கு காரை எடுத்துக்கொண்டு வருகிறேன். இருவரும் தயாராக இருங்கள். அவர்கள் வீட்டுக்குப் போவோம்."

மகிழ்ச்சியால் மின்னிக் கொண்டிருந்த ஹேமாவின் கண்களில் திடீரென்று சந்தேகம் எட்டிப் பார்த்தது. சட்டென்று மாதுரியின்

அருகில் வந்து இரண்டு கைகளையும் பற்றிக்கொண்டாள்.

"தீரா! நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்.

"என்ன?"

"இந்த நல்ல செய்தியை ரமேஷிடம் நீதான் தெரிவிக்க வேண்டும். நான் சொல்ல மாட்டேன். எதுவும் தெரியாதவள் போல் இருந்துவிடுகிறேன். தானே வந்து என்னிடம் சொல்லட்டும்."

"இந்த கண்ணா மூச்சி விளையாட்டு எதுக்கு?"

"இது போன்ற சின்னச் சின்ன விளையாட்டுகள் இருந்தால்தான் தாம்பத்திய வாழ்க்கை மேலும் இனிக்கும்."

"ஐஸி! அந்தப் பெரிய மனிதன் நீ இல்லாமல் எங்க வீட்டுக்கு வருவான் என்ற நம்பிக்கை என்ன?"

"நான் அனுப்பி வைக்கிறேன்."

"வரவில்லை என்றால்?"

"அனுப்பி வைக்கும் பொறுப்பு என்னுடையது."

"சரி உன் விருப்பம்."

ஹேமாவின் மனதில் இருந்த எண்ணம் வேறு. தான் சொன்னால் ரமேஷ் மறுத்துவிடுவானோ என்று அவள் அஞ்சினாள். நிறைய செலவு செய்து பெரியவீடாக கட்டப் போகிறார்களாம். பத்து பர்சென்ட் தருவார்களாம். ரமேஷ் மறுப்பு சொல்லாமல் இந்த காண்ட்ராக்டை எடுத்துக் கொண்டால் நன்றாக இருக்கும். கடவுளின் கருணை இருப்பதால்தான் இந்த வாய்ப்பு தங்களை தேடி வந்திருக்கிறது. ஹேமா குட்டிப் போட்ட பூனையை போல் ஒரு இடத்தில் நிற்காமல் அறையை சுற்றிச் சுற்றி வந்தாள். ரமேஷின் வருகைக்காக வழிமேல் விழி வைத்து காத்திருந்தாள்.

தற்போது வீட்டில் பணத்திற்கு தட்டுப்பாடு இல்லை என்றாலும் அவன் வேலை தேடுவதை நிறுத்தவில்லை. "இப்போ அவ்வளவு பிரச்னையாக இல்லையே? எதற்கு அவ்வளவு அவசரப்படுவானேன்?" என்று ஹேமா சொன்னபோது, "உனக்குத் தெரியாது என்று ஹேமா! உட்கார்ந்து சாப்பிட்டால் அந்தப் பணம் எத்தனை நாட்களுக்கு வரும்?" என்றான்.

வீட்டில் ஒரு நிமிடம் தங்குவதில்லை. இரவில் அமைதியாக உறங்குவதும் இல்லை. அவன் போக்கு, நடவடிக்கையை பார்த்தால் இரையைத் தேடும் புலியை போல் இருந்தான்.

மாலை ஆகும்போது ரமேஷ் வீட்டுக்கு வந்தான். வெயிலில் அலைந்து திரிந்து வாடிப்போன முகத்துடன் தென்பட்டவனை பார்க்கும்போது ஹேமாவுக்கு என்னவோ போல் இருந்தது. திருமணம் ஆன புதிதில் அவன் எவ்வளவு உற்சாகமாக இருந்தான்? நாளுக்கு நாள் அந்த உற்சாகமும், மகிழ்ச்சியும் குறைந்து கொண்டே வந்ததை அவளால் உணர முடிந்தது. அடிக்கடி அவன் பார்வை வேறு எங்கேயோ நிலைத்திருப்பதை பார்க்கும்போது கூண்டுக்குள் அடைக்கப்பட்ட சிங்கத்தின் நினைவு வந்தது.

ரமேஷ் வீட்டுக்கு வந்ததும் தண்ணீர் எடுத்து வந்து தந்தாள். மாதுரி சொன்ன நல்ல செய்தியை அவனிடம் அந்த நிமிடமே சொல்லிவிட வேண்டும் என்று பலமாகத் தோன்றியது. ஆனால் எப்படியோ கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"போன காரியம் என்ன ஆச்சு?" தினமும் கேட்பதுபோல் கேட்டாள்.

எங்கேயோ வேலை காலி இருப்பதாக செய்தி தெரிந்ததும் எத்தனை எதிர்பார்ப்புடன் அந்த இடத்திற்கு விரைவதும், ஆனால் ஏற்கனவே ஆளை எடுத்துவிட்டார்கள் என்றோ, அது போன்ற வேகன்ஸீ எதுவும் இல்லை என்றோ தெரியும் போது ரொம்ப ஏமாற்றமாக இருக்கும். தாகத்தால் தவித்துக் கொண்டிருப்பவன் காணல் நீரை பார்த்து ஏமாந்து போவதுபோல், இந்த ஏமாற்றம் வாழ்க்கையில் ஒரு பகுதியாக மாறிவிட்டிருந்தது. செல்வாக்கு இல்லாமல், லஞ்சம் கொடுக்காமல் சாதாரண மக்களுக்கு வேலை கிடைப்பது சாத்தியமில்லை என்ற கசப்பு உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை.

"காலி எதுவும் இல்லை என்று சொன்னார்களா?" ஹேமா மறுபடியும் கேட்டாள். வழக்கம்போல் அவள் குரலில் இன்று ஏமாற்றம் பிரதிபலிக்கவில்லை.

"நீ என்னுடன் வாழ்க்கையை தொடருவதற்கு பயந்து கொண்டு

உன் அண்ணனிடம் திரும்பிப் போகும் வரை எனக்கு வேலை கிடைப்பதுபோல் தெரியவில்லை." டம்ளரை திருப்பிக் கொடுத்துக் கொண்டே புன்முறுவலுடன் சொன்னான். அந்த முறுவலில் வெளிப்படையாக தெரிந்த தோல்வி ஹேமாவின் மனதை ஈட்டியால் குத்தியது போல் இருந்தது.

"மாதுரி உன்னை அர்ஜென்டாக வரச் சொன்னாள்" என்றாள்.

"எதற்காகவாம்?" அவன் குரலில் கொஞ்சம்கூட ஆர்வம் தெரியவில்லை.

"தெரியாது."

"நீ கேட்கவில்லையா?"

இல்லை என்பதுபோல் தலையை அசைத்தாள்.

"சினேகிதி தென்பட்டால் போதும், வேறு எதுவும் நினைவு இருக்காது உனக்கு. வரச்சொல்லி சொன்னால் 'எதுக்கு?' என்று கேட்க வேண்டுமென்ற நினைவுகூட வராத அளவுக்கு பேச்சில் ஆழ்ந்து போய்விட்டாய். அப்படித்தானே."

"நான் கேட்டேன். அவள் சொல்லவில்லை. உன்னிடம் சொன்ன பிறகுதான் என்னிடம் சொல்வாளாம்."

"முதலில் உன்னிடம் சொல்லாமல் நான் கேட்டுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் எதுவும் இல்லை என்று நான் சொன்னதாக தெரிவித்துவிடு."

ஷர்ட்டை கழட்டி ஸ்டாண்டில் மாட்டிவிட்டு கட்டில்மீது படுத்துக்கொண்டான்.

"உன்னை கட்டாயம் அனுப்பி வைப்பதாக மாதுரியிடம் சொல்லியிருக்கிறேன்." எச்சரிப்பது போல் சொன்னாள்.

"எதற்காக அப்படிச் சொன்னாய்? அவள் சொன்னதும் ஓடிப் போய் பார்ப்பதற்கு நான் அவளிடம் சம்பளம் வாங்கும் வேலைக்காரனா என்ன?"

"நீ இப்படி பேசுவாய் என்று எதிர்பார்க்கவில்லை. ரொம்ப அவசரமான விஷயமாம்."

"அவ்வளவு அவசரமான விஷயம் என்றால் அவளே வருவாள்."

ஹேமாவுக்குக் கோபம் வந்துவிட்டது. "நீ எப்போதும் இப்படித் தான். ஒவ்வொரு சின்ன விஷயத்தையும் இழுத்தடித்து சண்டை போட்டால்தான் உனக்கு திருப்தி. மாதுரி நம்முடைய நலனை விரும்புகிறவள். நீ போய் பார்த்தால் தவறென்ன இருக்கு? உன்னைக் கட்டாயம் அனுப்பி வைப்பதாக சொல்லியிருக்கிறேன். இஷ்டம் இருந்தால் போய்ப்பாரு. இல்லாவிட்டால் விடு. நீ போகா விட்டால் மனைவியிடம் கணவனுக்கு அவ்வளவுதான் லட்சியம் போலும் நினைத்துக் கொள்வாள். அதனால் உனக்கு ஏற்படப் போகும் நஷ்டம் எதுவும் இல்லையே?"

ரமேஷ் ஒரு நிமிடம் ஹேமாவின் முகத்தை பார்த்தான். அவன் பார்வை கூர்மையாக இருந்தது. உடனே சட்டென்று எழுந்து டவலை எடுத்துக்கொண்டு குளியல் அறைக்குள் நுழைந்தான். ஹேமா சமையல் அறைக்குள் சென்றாள். ரமேஷின் போக்கை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

சில சமயம் மனைவி கிழித்த கோட்டை தாண்டாதவன் போல் நடந்து கொள்வான். சில சமயம் உன் பேச்சு எனக்கு ஒரு பொருட்டு இல்லை என்பதுபோல் அலட்சியமாக பார்ப்பான். மாதுரி சொன்ன காண்ட்ராக்டை ரமேஷ் ஒப்புக்கொண்டால் நன்றாக இருக்கும். பொருள் வசதி வந்தால் சின்னச் சின்ன பிரச்னைகள் தானாகவே சரியாகிவிடும்.

ரமேஷ் முகம் கை கால்களை அலம்பிக்கொண்டு வெளியில் வந்தான்.

ஹேமா காபி கலந்து எடுத்து வந்தாள். டவலால் முகத்தைத் துடைத்துக் கொண்டிருந்தவன் ஹேமாவை பார்க்காதவன்போல் நடந்துபோய் ஸ்டாண்ட்மீது மாட்டியிருந்த ஷர்ட்டை எடுத்து அணிந்து கொள்ளத் தொடங்கினான்.

"இதோ காபி" என்றாள்.

பித்தான்களை போட்டு முடித்து விட்டு, காதில் விழாததுபோல் செருப்புகளை அணிந்து கொண்டான்.

"ரமேஷ்! உன்னைத்தான். காபி எடுத்துக்கொள். "ஹேமா குரலை

உயர்த்திச் சொன்னாள்.

"காதில் விழுந்தது. நீயே குடித்துவிடு. எனக்கு வேண்டாம்" என்று சொல்லிவிட்டு வேகமாக வெளியில் சென்றுவிட்டான். ஹேமா ஒரு நிமிடம் அப்படியே நின்றுவிட்டாள்.

25

ரமேஷ் மாதுரியின் வீட்டை அடையும்போது உள்ளே சந்தடியாக இருந்தது. "சின்னம்மா உள்ளே இருக்காங்க. உட்காருங்கள். அழைக்கிறேன். வேலைக்காரன் வரவேற்று உபசரித்துவிட்டு உள்ளே போய் விட்டான்.

ரமேஷ் உட்கார்ந்து கொண்டான். அந்த அறையும் அதில் இருந்த பொருட்களும் ரொம்ப ஆடம்பரமாக இருந்தன. சுவற்றில் அரை நிர்வாணமாக ஒரு பெண்ணின் ஓவியம் மாட்டியிருந்தது. அதற்கு நேர் எதிரில் காந்திஜியின் ஆயில் பெயிண்டிங் இருந்தது. அந்த இரண்டையும் பார்த்ததும் ரமேஷுக்கு சிரிப்புத்தான் வந்தது. மாதுரிக்கு புடவையிலும், நகைகளிலும் இருக்கும் ஆர்வம் வீட்டை அலங்கரிப்பதில் இல்லை என்று அந்த வீட்டில் காலடி எடுத்து வைத்த முதல்நாளே புரிந்துகொண்டு விட்டான்.

மாதுரியின் அறையிலிருந்து சிரிப்புச்சத்தம் அலை அலையாக கேட்டுக் கொண்டிருந்தது. ரமேஷ் சட்டைப்பையிலிருந்து சிகரெட் பெட்டியை எடுத்துக் கொண்டான்.

வேலைக்காரன் உள்ளே போய் சொன்னானோ இல்லையோ மாதுரி ஓட்டமும் நடையுமாக ரமேஷ் இருந்த இடத்திற்கு வந்தாள்.

"அட நீங்க வந்துவிட்டீர்களா?" வரமாட்டீர்கள் என்றே நினைத்தேன். ஹேமா என்னை முற்றிலுமாக தோற்கடித்து விட்டாள்" என்றாள்.

சிகரெட்டை பற்ற வைத்துக்கொள்ளப் போனவன் அந்த முயற்சியை நிறுத்திவிட்டு, தீக்குச்சியை அணைத்து டீபாய்மீது இருந்த ஆஷ்ட்ரேயில் போட்டுவிட்டான்.

"பரவாயில்லை. சிகரெட் பற்ற வைத்துக் கொள்ளுங்கள். ஐ டோண்ட் மைண்ட்" மாதுரி உட்கார்ந்து கொண்டே சொன்னாள்.

உள்ளே இருந்து மறுபடியும் சிரிப்பு சத்தம் கேட்டது.

"சாரி... உங்களை டிஸ்டர்ப் செய்துவிட்டேன் போல் இருக்கிறது." ரமேஷ் சொன்னான்.

"நோ... நோ... நான் இதோ வந்துவிடுகிறேன். நீங்க காபி சாப்பிடுவீர்களா இல்லை டீயா?"

"எதுவும் வேண்டாம். கிளம்பும்போது ஹேமா கொடுத்த காபியை குடித்துவிட்டுத்தான் வருகிறேன்.

"உங்கள் வீட்டிலிருந்து இங்கே வர வேண்டும் என்றால் குறைந்த பட்சம் அரைமணி நேரமாவது ஆகும். ஜூஸாவது குடியுங்கள்."

"ப்ளீஸ்! எதுவும் வேண்டாம்."

"பயப்படாதீங்க. அதில் நான் எந்த மயக்க மருந்தும் கலந்துவிட மாட்டேன்." மாதுரி குறும்பாக பார்த்துவிட்டு உள்ளே ஓடினாள்.

ரமேஷ் டீபாய்மீது இருந்த பத்திரிகையை புரட்டத் தொடங்கினான். தன்னைப் பார்த்ததும் மாதுரி அடைந்த ஆச்சரியம் அவனுக்கு வியப்பை ஏற்படுத்தியது. வரமாட்டேன் என்று நினைத்தாளாம். தோற்றுப்போய் விட்டதாக வேறு சொல்கிறாள். ஹேமா இல்லாமல் மாதுரியுடன் தனியாக பேசுவது இதுதான் முதல்தடவை. கலகலவென்று சிரிப்பு சத்தம் அருகில் வருவது போல் கேட்டதும் தலையை உயர்த்தி பார்த்தான். வண்ண வண்ண உடைகள் அணிந்த இளம்பெண்கள் அவனைத் தாண்டி வெளியில் போய்விட்டார்கள்.

பத்து நிமிடங்கள் கழித்து மாதுரி ட்ரேயில் ஜூஸ் டம்ளர்களை எடுத்து வந்தாள்.

"நீங்க எடுத்துக் கொண்டுதான் ஆகவேண்டும்." வேண்டுகோள் விடுப்பதுபோல் சொன்னாள்.

"உங்க சினேகிதிகள் போய்விட்டார்கள் போலிருக்கே?"

"ஆமாம். நான்தான் அனுப்பிவிட்டேன். சில்லென்று ஜூஸை குடித்துக் கொண்டே இனிமையான செய்தியை கேளுங்கள். நான் உங்களுக்கு ஒரு நல்ல செய்தியை சொல்லப் போகிறேன். பதிலுக்கு என்ன தருவீங்க?" மையல் கலந்த பார்வையுடன் கேட்டாள் மாதுரி.

"ஏழைகள் எங்களால் என்ன தரமுடியும்? "ரமேஷ் மாதுரியின் பார்வையை கவனிக்காதவன் போல் சொன்னான்.

"பணக்காரராக இருந்திருந்தால் கேட்டதை தந்திருப்பீர்களா?"

"உங்களைவிட பணக்காரனாக என்றுமே ஆக முடியாது. விஷயம் என்னவென்று சொல்லுங்கள்."

"உங்களுக்கு இன்னொரு காண்ட்ராக்ட் கிடைக்கப் போகிறது. பல லட்சங்கள் பெருமானமுள்ள பங்களாவை சுட்டித் தரவேண்டும். பேச்சு வார்த்தை எல்லாம் முடிந்துவிட்டது. நீங்க வந்து கையெழுத்து போடுவதுதான் பாக்கி. அந்த ஆள் கொஞ்சம் பழங்காலத்து மனிதர். எதுவும் எழுத்து மூலமாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர்."

ரமேஷ் நிமிர்ந்து உட்கார்ந்தான். மாதுரி மேலும் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"ஆனால் ஒரே ஒரு நிபந்தனை. நான் உங்களுக்கு அதை வாங்கித் தர வேண்டும் என்றால் நீங்க எனக்கு ஒரு பிராமிஸ் செய்து தர வேண்டும்."

"என்ன?"

அவன் மனதில் ஆயிரம் எண்ணங்கள் சந்தேகங்கள் அலை மோதிக் கொண்டிருந்தன. தானாக முயற்சி செய்தபோது எந்த வாய்ப்பும் கிடைக்கவில்லை. மறுபடியும் மாதுரி மூலமாக தனக்கு இந்த வாய்ப்பு கிடைக்கப்போகிறது. ஒப்புக் கொள்வதா வேண்டாமா? ஒப்புக்கொள்ளக் கூடாது என்று அவனுடைய சுய அபிமானமும், மறுக்கக்கூடாது என்று கவலை நிறைந்த ஹேமாவின் முகமும் அவன் மனதில் போராட்டத்தை தொடங்கிவிட்டன.

"நான் சொல்வதை கேட்டுக்கொண்டு தானே இருக்கீங்க?" நினைவு வேறு எங்கேயோ இருப்பதுபோல் தென்பட்ட ரமேஷை பார்த்து மாதுரி கேட்டாள்.

"ஊம்" என்றான்.

"இந்த காலத்தில் லஞ்சம் கொடுக்காமல் எந்த காரியமும் செய்ய மாட்டார்கள். நீங்களும் எனக்கு லஞ்சம் கொடுத்துதான் ஆகணும்."

"என்ன கொடுக்க வேண்டும்?"

"நான் உங்களை ஓவியமாக வரைய வேண்டுமென்று விரும்பு கிறேன். நீங்க எனக்கு சிட்டிங்க்ஸ் தரணும்."

அவன் தன்னையும் அறியாமல் தீவிரமாக பார்த்தான்.

"இதை நீங்க சுயநலம் என்று எடுத்துக் கொண்டாலும் சரி. உங்களுடைய ஓவியத்தை வரைய வேண்டுமென்று ரொம்ப தீவிர மாக விரும்புகிறேன். கிட்டத்தட்ட பைத்தியமாக இருக்கிறேன் என்றும் சொல்லலாம்."

வேண்டுமென்றே மாதுரி அதிகமாக உரிமை கொண்டாடுவதை அவனுடைய உள்மனம் சட்டென்று உணர்ந்துகொண்டு விட்டது. இப்படிப் பேசுவது அவளுடைய சுபாவமா இல்லை தன்னை பரீட்சை செய்கிறாளா?

"ஓவியம் வரைதில் என்னுடைய சுயநலம் மட்டுமே இல்லை. வேறு ஒரு விஷயமும் இருக்கின்றது. உங்களை எப்பொ கூப்பிட்டா லும் அழைத்து வருவதாக காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்திருக் கிறேன். இந்த விதமான ஏற்பாடு ஏதாவது இருந்தால் நீங்க அடிக்கடி என் கண்ணில் பட்டுக் கொண்டு இருப்பீர்கள். அதுவும் ஒரு கார ணம்."

"அது போன்ற சந்தேகம் எதுவும் உங்களுக்கு வேண்டாம். வேண்டுமானால் தினமும் நானே வந்து உங்களிடம் ஆஜர் கொடுத்து விட்டுப் போகிறேன்." அவன் வார்த்தைகள் கூர்மையாக இருந்தன.

"தாங்க்யூ. ஆனால் தினமும் நீங்க என் வீட்டுக்கு வந்து போனால் இந்த உலகம் சும்மா இருக்குமா?"

அவன் உள்ளத்தில் கோபம் பொங்கி கொண்டு வந்தது. 'இந்தப் பெண்ணின் உத்தேசம்தான் என்ன? இப்படி பூடகமாக பேசுவா னேன்?'

"நான் உங்களை ஓவியமாக வரையப் போகிறேன். நீங்களும் சிட்டிங்க்ஸ் கொடுப்பதாக ஒப்புக் கொண்டுவிட்டீர்கள். அது எப்பொ என்று இப்பொழுதே சொல்ல மாட்டேன். எனக்கு வேண்டும் என்ற போது கேட்பேன். அப்பொ கொடுத்தால் போதும்."

"அப்பொ என்னால் கொடுக்கமுடியாமல் போனால்? ஐ மீன் எனக்கு ஒய்வு கிடைக்கவில்லை என்றால்?"

"அதைக்கூட புரிந்துகொள்ள முடியாத முட்டாள் இல்லை நான். தவறாக நினைத்துக்கொள்ள மாட்டேன். நாளை காலையில் காரை எடுத்துக்கொண்டு வருகிறேன். ஹேமாவும், நீங்களும் தயாராக இருங்கள். அவர்களிடம் அழைத்துப் போகிறேன். சரிதானே?"

ரமேஷ் சரி என்று சொல்லவில்லை. கிளம்புவதற்காக எழுந்து கொண்டான்.

"இன்னொரு விஷயம். உங்களை ஓவியமாக வரையும் விஷயம் நீங்க ஹேமாவிடம் சொல்ல வேண்டாம். திடீரென்று காண்பித்து அவளை வியப்பில் ஆழ்த்தப் போகிறேன். இந்த விஷயம் நம் இருவருக்குமிடையேதான் இருக்க வேண்டும்."

ரமேஷ் வெறுப்பும், வியப்பும் கலந்த பார்வையுடன் நோக்கி னான்.

"காண்ட்ராக்ட் வாங்கித் தருவதற்கு இதுவும் ஒரு நிபந்தனையா?"

"நீங்க எப்படி நினைத்துக் கொண்டாலும் எனக்கு ஆட்சேபனை இல்லை."

"கிளம்புகிறேன்."

"விஷ் யூ குட்லக் மிஸ்டர் காண்ட்ராக்டர்." மாதுரி சிரித்துக் கொண்டே விடைகொடுத்தாள்.

ரமேஷ் பார்க்கில் பெஞ்சின்மீது அமர்ந்து கொண்டான். யோசித்து யோசித்து அவனுடைய மூளையே சூடாகிவிட்டதுபோல் இருந்தது. இன்று மாதுரியின் பேச்சு, நடந்துகொண்ட முறை எல் லாமே வித்தியாசமாக இருந்தன. இந்த காண்ட்ராக்டை ஒப்புக் கொள்வதா வேண்டாமா என்று அவனால் முடிவு செய்ய முடிய வில்லை. வேண்டாமென்று சுலபமாக சொல்லிவிடலாம். நாளை மாதுரி வரும் நேரத்தில் வீட்டில் இல்லாமல் வேறு எங்கேயாவது போய்விட்டால் போதும். ஆனால் அரிதாக கிடைத்த வாய்ப்பு. அவன் கண்களுக்கு முன்னால் கவலை தோய்ந்த ஹேமாவின் முகம் தெரிந்தது. இந்த காண்ட்ராக்டை எடுத்துக் கொண்டால் சில மாதங் கள் நிம்மதியாக இருக்கமுடியும். ஆனால் மாதுரி போட்ட நிபந்

தனைகள், சொன்ன விஷயங்கள் அவன் மனதை கலவரப்படுத்திக் கொண்டிருந்தன. இன்னதென்று புரியாத பயமும், சந்தேகமும் அவன் மனதை துளைத்தெடுத்துக் கொண்டிருந்தன. இந்த விவகாரத்தில் தலையிடுவது நல்லது இல்லை என்று தோன்றிக் கொண்டே இருந்தது.

"என்னை இன்னும் எத்தனை நாட்கள் இப்படி அமைதி இல்லாமல், எதிர்காலத்தை பற்றிய ஆவலுடன் வாழச் சொல்கிறாய்?" ஹேமா எதிரே நின்று கேட்பதுபோல் இருந்தது.

"விஷ் யூ குட்லக் மிஸ்டர் காண்ட்ராக்டர்," மாதுரியின் குரலும், மையல் நிறைந்த பார்வையும் கண்முன்னால் தோன்றியது.

எந்த முடிவும் எடுக்க முடியாத நிலையில் ரமேஷ் வீட்டுக்கு வந்தான்.

"மாதுரி இருந்தாளா?" ஹேமா ஆர்வத்துடன் கேட்டாள்.

"இருந்தாள்." சுருக்கமாக சொன்னான்.

அவன் முகத்தை பார்க்கும் போதே ஹேமாவுக்கு பயமாக இருந்தது. மேற்கொண்டு விவரம் கேட்கும் துணிச்சல் இருக்கவில்லை.

சாப்பிடும்போது இனியும் பொறுக்க முடியாமல் கேட்டு விட்டாள்.

"மாதுரி ஏதாவது பேசினாளா?"

"பேசினாள்." அவன் சரியாக சாப்பிடவில்லை. ஹேமாவுக்கும் சாப்பிட வேண்டும் என்று தோன்றவில்லை. பாத்திரங்களை ஒழித்துப் போட்டுவிட்டு வேலையை முடித்துக் கொண்டு முன் அறைக்கு வந்தாள்.

ரமேஷ் நெற்றிமீது கையை வைத்துக் கொண்டு படுத்திருந்தான். ரமேஷ் எதற்காக வேதனைப்படுகிறான் என்று ஹேமாவால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு நிமிடம் தயங்கியவள், அருகில் சென்று கட்டில்மீது உட்கார்ந்து கொண்டாள். மெதுவாக அவன் கையை நீக்கினாள்.

"என்ன ஆச்சு ரமேஷ்? மாதுரி என்ன சொன்னாள்?" என்று கேட்டாள்.

ரமேஷ் சுருக்கமாக காண்ட்ராக்ட் விஷயத்தைத் தெரிவித்தான்.

"நீ என்ன சொன்னாய்?" பதட்டத்தை அடக்கிக் கொண்டே கேட்டாள்.

"எதுவும் சொல்லவில்லை. எனக்கு ஏனோ ஒப்புக் கொள்ள வேண்டும் என்று தோன்றவில்லை ஹேமா!"

"ரமேஷ்! உண்மையைச் சொல்லு. உன்னுடைய சந்தேகம்தான் என்ன? சந்தோஷமாக உடனே ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயத்தில் இவ்வளவு தயங்குவானேன்?"

"உனக்குத் தெரியாது ஹேமா!" அவனால் சரியான காரணத்தை சொல்ல முடியவில்லை.

"எனக்குத் தெரியும். நன்றாகவே தெரியும். மாதுரியிடமிருந்து உதவியை பெற்றுக் கொள்வதாக ஆகிவிடும் என்று பயப்படுகிறாய். ஏன்? பெற்றுக் கொண்டால் அதில் தவறு என்ன? மாதுரி நம் நன்மையை விரும்புகிறவள்தானே. அவளுக்கு தேவையாக இருக்கும் போது நாம் உறுதுணையாக இருக்கவில்லையா? மறுபடியும் ஏதாவது தேவை ஏற்பட்டால் கட்டாயம் உதவி செய்து நன்றிக் கடனை தீர்த்துக் கொள்வோம். இந்த உலகில் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளாமல் இருந்தால் மனிதர்களால் உயிர் வாழ முடியுமா?"

ஹேமா திடீரென்று அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். "ரமேஷ்! தயவு செய்து இந்த காண்ட்ராக்டை மறுக்காதே. நமக்கு இதைவிட நல்ல வாயப்பு கிடைக்காது. ஒப்புக்கொள்வேன் என்று சத்தியம் செய்து கொடு."

"ஹேமா!"

ஹேமா வலுக்கட்டாயமாக அவன் கையை தன்னுடைய தலை மீது வைத்துக்கொண்டே, - "எனக்கு சத்தியம் செய்து கொடுத்து விட்டாய். இனிமேல் உன்னால் மறுக்கமுடியாது" வலிய வர வழைத்துக் கொண்ட புன்முறுவலுடன் சொன்னாள்.

ஆகட்டும் ஹேமா, வேறு வழியில்லாதவன் போல் தலையை அசைத்தான். அவனுடைய தயக்கங்கள், பயங்கள் எல்லாம் ஹேமாவின் கண்களில் பிரதிபலித்த கவலையை பார்த்ததும் மாயமா

மறைந்துவிட்டன.

26

ரமேஷின் உலகம் திடீரென்று மாறிப்போய்விட்டது. எப்போதும் அவன் மனதில் குடி கொண்டிருந்த புத்தகங்கள், பிரபலங்கள் எழுதிய கட்டுரைகள், சொற்பொழிவுகள் எல்லாம் கலைந்து போய் அந்த இடத்தில் மணல், சிமெண்ட், செங்கல் ஆக்கிரமித்துக் கொண்டன.

ரமேஷ் மாதுரி சொன்ன காண்ட்ராக்டை ஏற்றுக்கொண்டான். அந்த வீட்டை இரண்டு மாதங்களில் முடித்துத் தருவதாக அக்ரிமெண்டில் கையெழுத்து போட்ட நாள் முதலாக அவன் வாழ்க்கையின் திசை திரும்பிவிட்டது. நாட்கள் வேகமாக ஓடிக்கொண்டிருந்தன. உண்மையில் அவனுக்கு கட்டட வேலையில் எந்த அனுபவமும் இருந்தது இல்லை. ஸ்கூல் கட்டட வேலையை மாதுரி ஒப்படைத்தபோது அனுபவம் வாய்ந்த பரமேஸ்வரன் மேஸ்திரியை பிடித்தான். அவருடைய அறிவுரைகளை ஏற்று நடந்துகொண்டான்.

முன்னால் போனால் கிணறு, பின்னால் போனால் குழி என்ற நிலையில் கொஞ்சம் நீச்சல் தெரியும் என்ற தைரியத்தில் கிணற்றில் குதித்துவிட்ட மனிதனை போல மாதுரி சொன்ன காண்ட்ராக்டில் கையெழுத்து போட்டுவிட்டான். வீட்டுக்கு திரும்பி வரும்போது அவன் மனம் முழுவதும் குழப்பம் பரவியிருந்தது.

வீட்டுக்கு வந்ததும், "நான் இப்போதே வருகிறேன் ஹேமா" என்று சொல்லிவிட்டு பதிலைகூட எதிர்பார்க்காமல் பரமேஸ்வரனிடம் ஓடினான்.

"எனக்கு இன்னொரு காண்ட்ராக்ட் கிடைத்திருக்கிறது. உங்களுடைய ஒத்துழைப்பும், உதவியும் தேவை. வருகிற பணத்தை ஆளுக்கு பாதியாக எடுத்துக்கொள்வோம்" என்று ஒளிமறைவு இல்லாமல் சொல்லிவிட்டான்.

அதற்கு பிறகு எல்லா விஷயங்களையும் பரமேஸ்வரனே பார்த்துக் கொண்டார். அந்த காண்ட்ராக்ட்டில் கையெழுத்து போட்ட வேளை நல்ல வேளையாக இருக்கவேண்டும். ஒரு மாதம் முடிவதற்குள் இன்னொரு வீடு கட்டித் தரும் வாய்ப்புக் கிடைத்தது.

அன்று ரமேஷ் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. வீட்டுக்கு வரும்போது ஸ்வீட்ஸ், பழம் பூக்கள் என்று நிறைய வாங்கி வந்தான். ஹேமாவை கடைத்தெருவுக்கு அழைத்துச் சென்று அவள் வேண்டாமென்று மறுத்தபோதும் கேட்காமல் புடவையை வாங்கினான்.

இருவரும் கை நிறைய பாக்கெட்டுகளுடன் வீட்டுக்கு வந்தபோது, பூட்டியிருந்த கதவுக்கு முன்னால் சுந்தரம் தரையில் அமர்ந்து இருந்தான்.

"அட்டா— போகும் அவசரத்தில் சாவியை வீட்டுக்காரர்களிடம் கொடுக்க மறந்துவிட்டேன்." நொந்து கொள்வதுபோல் சொன்னாள் ஹேமா.

"சாரி பிரதர்" என்றான் ரமேஷ். உள்ளே போனதும் ஹேமா மைசூர்பாக்கை ஒரு தட்டில் வைத்து சுந்தரத்திடம் கொடுத்தாள்.

"என்ன விசேஷம்?" சுந்தரம் கேட்டான்.

"புது காண்ட்ராக்ட் கிடைத்திருக்கு" என்றாள் ஹேமா.

"நிஜமாகவா! அடிக்கடி இப்படி கிடைத்துக் கொண்டிருந்தால் நன்றாக இருக்கும் இல்லையா!" சுந்தரம் சொன்னான்.

ரமேஷ் அருகில் வந்தான். தட்டில் இருந்த மைசூர்பாக்கை எடுத்து சுந்தரத்தின் வாயில் திணித்துக் கொண்டே, "ஆறுமாதங்களுக்கு ஒருமுறை கிடைத்தாலும் போதும். நீ வேண்டாமென்று மறுத்தாலும் உன் வாயில் ஸ்வீட்டை திணிப்பேன்" என்றான்.

ரொம்ப நாட்கள் கழித்து ரமேஷ் பழையபடி கலகலப்பாக இருந்ததை பார்த்த ஹேமா திருப்தியாக உணர்ந்தாள். பாழாய்போன பணம்! மனிதர்களை எப்படி மாற்றிவிடுகிறது?

சுந்தரம் சாப்பிட்டுவிட்டு கிளம்பிப் போனபிறகு ரமேஷ் ஹேமாவை புதுப்புடவையை கட்டிக்கொள்ளச் சொன்னான்.

"இப்பொழுதா? நாளைக்கு கட்டிக் கொள்கிறேனே?"

"ஊஹூம். இப்பொழுதே புதுப்புடவையில் உன்னை பார்க்க வேண்டும்" என்றான்.

ஹேமா சமையல் அறைக்குள் சென்று புதுப்புடவையை கட்டிக்

கொண்டாள். நேராக ரமேஷிடம் வராமல் சுவாமி படத்திற்கு முன்னால் நின்று கண்களை மூடிக்கொண்டு கைகளை கூப்பினாள். சலனமற்று அப்படியே ஒரு நிமிடம் நின்றிருந்தாள்.

அகல்விளக்கு வெளிச்சத்தில், சுவாமி படத்தின் முன்னால் கண்களை மூடிய நிலையில், புதுப்புடவையில் சிலையைபோல் நின்றிருந்த ஹேமாவின் உருவம் அவன் மனதில் முழமாக பதிந்து விட்டது.

"இது ரொம்ப அநியாயம் ஹேமா!" என்றான்.

"எது?" ஹேமா தலையைத் திருப்பிப் பார்த்தாள்.

"புடவையை வாங்கிக் கொடுத்தது நான் என்றால் நன்றி சொல்வது அந்த கடவுளுக்கா?"

"கடவுளின் கருணை இருந்ததால்தான் அந்தப் பணம் இன்று உன் கைக்கு வந்திருக்கிறது. இந்தப் புடவையும் எனக்குக் கிடைத்தது". ஹேமா புன்முறுவலுடன் அவன் முன்னால் வந்து நின்று கொண்டாள்.

"நன்றாக இருக்கிறதா?" என்று கேட்டாள்.

"வாயால் சொல்ல முடியாத அளவுக்கு," ரமேஷ் ஹேமாவை அருகில் இழுத்துக்கொண்டான்.

"என் புடவை! புதுபுடவை கசங்கிப்போய்விடும்," ஹேமாவின் முணுமுணுப்பை அவன் லட்சியம் செய்யவில்லை.

27

ஒப்புக்கொண்ட காண்ட்ராக்டுகளை சொன்ன நேரத்திற்குள் முடித்துக் கொடுத்துவிட்டான். அது முடியும் முன்பே வேறு சின்னச் சின்ன காண்ட்ராக்டுகள் அவன் கைக்கு கிடைத்தன. ஒரு வருடம் போவதற்குள் அவன் நன்றாக ஸ்திரப்பட்டு விட்டான். இப்பொது அவனுக்கு ஒரு நிமிடம்கூட ஓய்வு இல்லை. காலத்துடன் போட்டி போட்டுக் கொண்டு ஓடுவதே அவனுடைய தினசரி வாழ்க்கையாக அமைந்துவிட்டது. ஹேமாவுக்கு ரொம்ப திருப்தியாக, மகிழ்ச்சியாக இருந்தது. சோபா, பீரோ என்று சாமான்கள் சேர்ந்ததும் வீடு சின்னதாகி கால் வைக்க இடமில்லாமல் போய்விட்டது. ரமேஷ்

வேறு வீடு பார்க்கப் போவதாகச் சொன்னான். ஹேமா ஒப்புக் கொள்ளவில்லை. கொஞ்சம் பணம் இருந்தால் சேர்த்து வைக்க வேண்டுமே தவிர அனாவசியமாக செலவு செய்யக்கூடாது என்றாள். ரமேஷ் அவள் சொன்னதற்கு ஒப்புக்கொண்டது போல் நடித்தான்.

இரண்டு மாதங்கள் போவதற்குள் பக்கத்துத் தெருவில் புதுவீடு ஒன்று காலியானதும் அதற்கு அட்வான்ஸ் கொடுத்துவிட்டு வந்தான்.

"என்ன? இதைவிட பெரிய வீட்டுக்கு அட்வான்ஸ் கொடுத்து விட்டு வந்திருக்கிறாயா? உனக்கு மூளை இருந்துதான் இந்த வேலை செய்தாயா? இஷ்டம் வந்ததுபோல் செலவு செய்ய நாம் என்ன ஜமீன்தார்களா? நாலு காசு கையில் இருந்தால் செலவு செய்யும் வரையில் உனக்கு தூக்கம் வராவில்லையா?" ஹேமா கத்தினாள். ரமேஷ் எதுவும் சொல்லாமல் அவள் சொல்வதையெல்லாம் பொறுத்துக்கொண்டான்.

ரமேஷ் வேறு வீட்டுக்கு குடி போகிறான் என்றதும், சுந்தரம் "இனிமேல் எனக்கு ஹோட்டல் சாப்பாடுதாடு ப்ராப்தம் போல் இருக்கு" என்றான்.

"யார் சொன்னது? நீயும் எங்களுடன் வரவேண்டியதுதான். உன் பிரச்னைகள் தீர்ந்து உன் மனைவி குடித்தனத்திற்கு வரும்வரையில் நீயும் இந்த வீட்டில் ஒரு மெம்பர்தான்." ஹேமா சொன்னாள்.

"அதன் பிறகும் ஏன் நம்முடன் இருக்கக் கூடாது. அந்தப் பெண்ணுக்கு இதுதான் புகுந்தவீடு. நான் சொல்வது சரிதானே!" ரமேஷ் சிரித்துக் கொண்டே சொன்னான்.

சுந்தரத்தின் கண்கள் பனித்தன. ரமேஷ் குடும்பத்தின் பொருளாதார நிலைமை சீரடைந்ததற்கு அவனுக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

ரமேஷ் ஹேமாவை அழைத்துக் கொண்டு போய் புதிய வீட்டைக் காண்பித்தான். விசாலமாக இருந்த அறைகள், நல்ல காற்றோட்டம்... வீடு ரொம்ப வசதியாக இருந்தது.

"வீடு எப்படி இருக்கு?" ரமேஷ் கேட்டான்.

"ரொம்ப நன்றாக இருக்கு. ஆனால் வாடகைதான்." முணு

முணுப்பது போல் ஹேமா.

"வாடகை பற்றிய கவலை உனக்கு எதற்கு?"

ஹேமாவுக்கு பழைய வீட்டை விட்டு போகும்போது பிரியமான பொருளை இழப்பதுபோல் ரொம்ப வேதனையாக இருந்தது. தடுக்க நினைத்தாலும் விழிகளில் நீர் சுழன்றது.

"என்ன ஹேமா! சின்னக் குழந்தையை போல் அழுவார்களா?" ரமேஷ் ஹேமாவின் தோள்களில் மெதுவாக தட்டினான்.

ஹேமா அவன் பக்கம் பார்த்தாள். இதைவிட வசதியான வீட்டுக்குக் குடிபோகிறோம் என்ற மகிழ்ச்சி அவன் கண்களில் பரதிபலித்துக்கொண்டு இருந்தது.

சுந்தரத்தின் உதவியால் புதிய வீட்டுக்கு அதிகம் சிரமப்படாமல் குடிபோனார்கள்.

ரமேஷ் வீட்டில் தானும் இருக்கவேண்டும் என்றால் சுந்தரம் ஒரு நிபந்தனையை போட்டான். வீட்டு வாடகையை தான் கொடுப்பதாகவும், அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை என்றால் தான் வேறு இடம் பார்த்துக் கொள்வதாகவும் சொல்லிவிட்டான்.

"உன் விருப்பம் போல் செய்துகொள். வரமாட்டேன் என்று மட்டும் சொல்லிவிடாதே. நீ வரவில்லை என்றால் புதிய வீட்டுக்கு போனதால், நீ எங்களை விட்டு தொலைவுக்கு போய்விட்டாய் என்று ஹேமா என்னை நிம்மதியாக வாழவிடமாட்டாள்" என்றான் ரமேஷ்.

புதுவீட்டுக்கு குடிபோன அன்றே ரமேஷுக்கு வேறு ஒரு காண்ட்ராக்ட் கிடைத்தது. வீட்டுக்கு வந்ததும் ஹேமாவிடம் இந்த செய்தியை தெரிவித்த ரமேஷ் ஹேமாவின் கைகளை பற்றி அருகில் இழுத்துக்கொண்டான். "பார்த்தாயா, இந்த வீடு எவ்வளவு ராசியானதோ. நீதான் புதுவீடு வேண்டாம் என்று ரகளை செய்தாய்" என்றான்.

வீட்டை அலங்கரிப்பதற்காக ரமேஷ் வங்கியிலிருந்து பணத்தை எடுத்து செலவு செய்வதை பார்க்கும்போது ஹேமாவின் மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. ஒவ்வொரு நாளும் புதிதாக ஏதாவது ஒரு பொருள் வாங்கி வருவான். தானே சுயமாக கதவுகளுக்கு,

ஜன்னல்களுக்கு திரைச்சீலைகளை மாட்டுவான். டைனிங்க் டேபிள், சோபா எல்லாவற்றையும் அந்தந்த இடத்தில் வைத்துவிட்டு "ஹேமா! ஒரு முறை இங்கே வாயேன். நன்றாக இருக்கிறதா? பார்த்துச் சொல்லு" என்பான்.

"அத்தனை பணம் கொட்டி வாங்கினால் நன்றாக இல்லாமல் வேறு எப்படி இருக்கும்?" ஹேமா உள்ளூர முணுமுணுப்பாள்.

படுக்கை அறையின் தோற்றமே மாறிவிட்டது. விலை உயர்ந்த கட்டில்கள், மெத்தென்ற படுக்கை, அழகான போர்வைகள்—

"சுந்தரம் கொடுத்த கட்டில் நன்றாகத்தானே இருக்கு. மறுபடியும் வாங்குவானேன்?" ஹேமா சண்டை போட்டாள்.

"என்றாவது நான் ஷேவ் செய்து கொள்ளவில்லை என்று வைத்துக்கொள். என்தாடி உனக்கு குத்திவிடுமோ என்று பயப்படாமல் நீ தனியாக உன் கட்டில்மீது படுத்துக்கொள்ளலாம் இல்லையா!" குறும்பாக நினைவுப்படுத்தினான்.

"ச்சீ— ச்சீ" சுந்தரத்தின் காதில் விழுந்துவிடப்போகிறது என்று ஜாடை செய்தாள்.

வீட்டை எத்தனை அலங்கரித்தாலும் ரமேஷுக்கு திருப்தி ஏற்படவில்லை. எங்கேயோ ஏதோ குறை இருப்பதுபோல் தோன்றும்.

"ஹேமா! இப்போ எப்படி இருக்கிறாய்?" அடிக்கடி கேட்டுக் கொண்டே இருப்பான்.

"நன்றாக இருக்கிறேன்."

"மகிழ்ச்சியாக இருக்கிறாய் இல்லையா?"

"ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன்."

"ஊஹூம். நீ மனபூர்வமாக சொல்லவில்லை."

"உண்மையைச் சொல்லட்டுமா? நான் எப்போதும் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன்."

ரமேஷ் ஹேமாவின் கண்களில் ஊடுருவுவது போல் பார்த்தான். ஹேமா சொன்னதில் பொய் இருப்பது தோன்றவில்லை.

ரமேஷுக்கு ஓய்வு கிடைப்பது சிரமமாக இருந்தாலும் மாதுரி

சினிமா, டிராமா என்று ஏதாவது பிரோகிராம் போட்டுக்கொண்டு ரமேஷ், ஹேமாவை வற்புறுத்தி அழைத்துப் போய்க்கொண்டிருந்தாள். ஹேமா, ரமேஷ் சுந்தரத்தையும் தங்களுடன் வரச்சொல்லி அழைப்பார்கள். ரமேஷ், ஹேமா மட்டும் போவதாக இருந்தால் சுந்தரம் எத்தனை வேலைகள் இருந்தாலும் அவற்றை ஒதுக்கிவிட்டு கிளம்புவான். மாதுரியும் வருவாள் என்று தெரிந்தால் 'வேலை இருக்கிறது' என்று சாக்கு சொல்லி மறுத்துவிடுவான்.

ஆரோக்கியமும், சீரான உடற்கட்டும் கொண்ட ரமேஷுக்கு விலை உயர்ந்த ஆடைகள் மேலும் அழகை, கம்பீரத்தை சேர்த்தன. எந்த விஷயத்தையும் சுலபமாக புரிந்து கொள்ளக்கூடிய புத்திக் கூர்மை இருந்ததால் காண்ட்ராக்ட் தொழிலில் இருக்கும் சுளிவு நெளிவுகளை சீக்கிரமாகவே கற்றுக்கொண்டு விட்டான்.

சின்ன வயதிலிருந்தே அவன் புத்தகங்களை ரொம்ப விரும்பி வந்தான். கொஞ்சம் ஓய்வு கிடைத்தாலும் நூலகத்திற்குச் சென்று புத்தகங்களை படித்துக் கொண்டிருப்பான். சிறுவனாக இருந்த போது அவன் வேலை செய்து வந்த வீடுகளில் அவன் வயதில் இருக்கும் குழந்தைகள் எல்லோரும் மிடுக்காக உடுத்திக்கொண்டு பள்ளிக்குப் போவதை பார்க்கும்போது, தானும் எப்படியாவது நன்றாக படிக்க வேண்டும் என்றும், பெரியவன் ஆன பிறகு லெக்சரர் ஆக வேலைபார்க்க வேண்டும் என்றும் கனவு கண்டுவந்தான். இப்பொழுதுதான் கட்டிக் கொண்டு வரும் வீடுகளை, கடைகளை பார்க்கும்போது அவனுக்கே வியப்பாக இருக்கும்.

கண்களுக்கு முன்னால் குவியலாக கிடக்கும் மணலை, செங்கல் களை பார்க்கும்போது சில சமயம் அவை எல்லாம் புத்தகங்கள் போலவும், தான் அவற்றுக்கு நடுவில் அமர்ந்து படித்துக் கொண்டிருப்பது போலவும் தோன்றும்.

அது போன்ற எண்ணங்கள் வந்த போதெல்லாம் தலையை உதறிக்கொண்டு தன்னைத்தானே சமாளித்துக் கொள்வான். நான் சென்ஸ்! படிப்பு என்றால் வெறுமே பள்ளிக்கு போய் பாடங்களை ஒப்பிப்பது மட்டுமே இல்லை. எந்தத் தொழிலைக் கைப்பற்றினாலும், அதுதான் படிப்பு! செய்யும் தொழிலே தெய்வம். அதை வைத்துக் கொண்டு

தான் வாழ்க்கையில் முன்னேற வேண்டும்.

மூச்சுவிட முடியாத அளவுக்கு கை நிறைய வேலை இருந்த போதும், வங்கியில் கணிசமான தொகை சேமிப்பு உருவில் இருந்த போதும் அவன் மனதில் ஏதோகுறை. இந்தப் பணம் போறாது இன்னும் நிறைய வேண்டும் என்ற தவிப்பு.

அந்த தவிப்பு மனதில் ஆழமாக பதிந்துவிட்டதாலோ என்னவோ ஒரிருமுறை அவனுக்கு தன்னிடம் இருக்கும் பணம் எல்லாம் திடீரென்று காணாமல் போய்விட்டது போலவும், ஹேமா தன்னை விட்டுவிட்டு அண்ணனிடம் போய்விட்டது போலவும் கனவு வந்தது.

"ஹேமா! ஹேமா! என் பேச்சை கேள்." தூக்கத்திலேயே அழைத்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

பக்கத்திலேயே உறங்கிக் கொண்டிருந்த ஹேமா இந்த அழைப்பை கேட்டு திடுக்கிட்டு எழுந்தாள்.

ரமேஷ் முகத்தில் வியர்வை அரும்பி இருந்தது. எல்லாவற்றையும் இழந்துவிட்டதுபோல் அவன் பார்வை தீனமாக, பயந்து விட்டது போல் இருந்தது.

"ரமேஷ்! என்ன ஆச்சு? உடம்பு சரியாக இல்லையா? சுந்தரத்தை எழுப்பட்டுமா?" ஹேமா அவனுடைய தோள்களைப் பற்றி குலுக்கிக்கொண்டே பதட்டமாக கேட்டாள்.

அதற்குள் சுய உணர்வு பெற்றுவிட்ட ரமேஷ் "ஒன்றுமில்லை" என்றான்.

"உண்மையைச் சொல்லு. என்ன ஆச்சு?"

"ஏதோ கெட்ட கனவு வந்தது."

"இப்படி வியர்த்துக் கொட்டும் அளவுக்கு அப்படி என்னதான் கனவு வந்ததோ?," ஹேமா புடவைத் தலைப்பால் அவன் நெற்றியை ஒற்றினாள்.

"ஹேமா!" என்றுமே இல்லாதவிதமாக ரமேஷ் சின்னக் குழந் தையை போல் ஹேமாவின் மார்பில் முகத்தை புதைத்துக் கொண் டான். எப்படிப்பட்ட சூழ்நிலை வந்தாலும் தன்னை விட்டு போகக்

கூடாது என்று ஹேமாவிடம் சத்தியம் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது. ஆனால் குரல்வளையத்தில் ஏதோ தடுத்து விட்டதுபோல் அவனால் பேச முடியவில்லை. ஹேமாவின் ஸ்பரிசம் அவனுக்கு தைரியம் அளிப்பது போல் இருந்தது.

"ரமேஷ் எதற்காவது வேதனைப்படுகிறாயா?" ஹேமா மென்மையாக குரலில் கேட்டாள்.

"ஊஹூம். எனக்கு என்ன வேதனை இருக்க முடியும்?" சற்று நிறுத்தி மேலும் சொன்னான். "ஹேமா! இந்த உலகில் உன்னால் தவிர எனக்கு எந்த விஷயத்திலும் வேதனை ஏற்படாது."

"இதென்ன பேச்சு? இன்னும் தூக்கக் கலக்கம் போகவில்லையா?"

"உண்மையைச் சொல்கிறேன் ஹேமா! எனக்கு வேதனை ஏற்படுவதாக இருந்தால் அது உன் ஒருத்தியால்தான் வரமுடியும்."

ரமேஷின் குரல் சீரியஸாக ஒலித்தது.

"ஹேமாவும் சீரியஸாக பதில் சொன்னாள்." அப்படி வேதனை ஏதாவது போல் இருந்தால் அதை நான் ஒருத்தி மட்டுமே அனுபவிப் பேன். உன் வரையில் வரவிடமாட்டேன். போதுமா."

"நான் உயிரோடு இருக்கும் வரை அப்படிப்பட்ட நிலைமை ஒருநாளும் வராது. அதை நீயும் புரிந்துகொள்" என்றான்.

"ஹேமாவுக்கும் அது உண்மைதான் என்று தோன்றியது.

28

ரமேஷ் மேஜைமீது இருந்த போன் ஒலித்தது. சிகரெட் பிடித்துக் கொண்டே நாற்காலியில் அமர்ந்திருந்த ரமேஷ், அந்த போன் காலுக்காக காத்திருந்தவன் போல் சட்டென்று ரிசிவரை எடுத்து "ஹலோ" என்றான்.

"ஹலோ" மறுமுனையிலிருந்து மாதுரியின் குரல் கேட்டது.

ரமேஷ் முகத்தில் ஏமாற்றம் வெள்ளம் போல் பொங்கி வந்தது.

சமீபத்தில் அவன் கட்டி முடித்த கடைகளில் ஒன்று விற்பனைக்கு வந்திருந்தது. பணம் உடனே வைப்பட்டதால் அந்தக் கடையின் முதலாளி அதை மிகக் குறைந்த விலைக்கு விற்க முன் வந்தான்.

ரமேஷ் அந்தக் கடையை வாங்க வேண்டுமென்று மிகவும் விரும்பினான். தற்போது அவனிடம் அந்த அளவுக்கு பணம் இருக்கவில்லை. காலையில் மார்வாடியிடம் பேசியபோது கட்டாயம் கடன் தருவதாக வாக்குக் கொடுத்தான். கடையை வாங்கிவிட்டால் அதிலிருந்து வரும் வாடகையை வட்டியாக கொடுத்துவிடலாம். இந்த காண்ட்ராக்ட் தொழிலுக்கு வந்த பிறகு மார்வாடியிடம் அடிக்கடி பெரிய மொத்தமாக கடன் வாங்கிக் கொள்வதும், பில் செட்டில் ஆன பிறகு தீர்த்துவிடுவதுமாக செய்து கொண்டிருந்தான்.

காலையில் முதலாளியின் வீட்டுக்கு போனபோது அவன் வீட்டில் இல்லை. வந்ததும் தனக்கு போன் செய்யச் சொல்லி செய்தியை தெரிவித்துவிட்டு வந்தான். ரமேஷ் அந்தக் கடையை வாங்க வேண்டும் என்பதற்கு பலமான காரணம் இருந்தது. சரியாக நாகபூஷணத்தின் துணிக்கடைக்கு எதிரே இந்தக் கடை இருந்தது. அந்த இடத்தில் தானும் ஒரு துணிக்கடையை ஆரம்பிக்க வேண்டும். தயவு தாட்சண்யம் இல்லாமல் நாகபூஷணத்தின் கடையிலிருந்து வெளியேற்றப்பட்ட தான் அவர்களுக்கு போட்டியாக மாற வேண்டும். ரமேஷ் இரவு முழுவதும் சரியாக தூங்கவில்லை. இந்த விஷயம் அவன் மனதை துளைத்துக் கொண்டிருந்தது.

போன்மணி ஒலித்ததும் எத்தனையோ எதிர்பார்ப்புகளுடன் ரிசிவரை எடுத்தவன் உற்சாகமாக "ஹலோ" என்றான். ஆனால் மறுமுனையில் மாதுரியின் குரலைக் கேட்டதும் அவன் உற்சாகம் அப்படியே வடிந்துவிட்டது.

"ஹலோ! மிஸ்டர் காண்ட்ராக்டர்! உங்களுக்கு ஒரு நல்ல செய்தியை சொல்லப் போகிறேன். உண்மையைச் சொல்லணும் என்றால் இதற்கு முன் எப்போதும் கேட்டிராத அளவுக்கு நல்ல செய்தி." ஆர்வத்தை தூண்டுவதுபோல் சொன்னாள்.

"என்ன செய்தி?" அவன் குரலில் லேசான எரிச்சல் வெளிப்பட்டது. மாதுரி பேசிக்கொண்டிருக்கும் போது கடை முதலாளி போன் செய்ய முயற்சி செய்தால்?

"அவ்வளவு சுலபமாக சொல்லிவிடுவேனா? சொன்னால் எனக் கென்ன தருவீங்க?

இவள் என் உயிரை எடுக்கத்தான் போகிறாள் என்று நினைத்துக் கொண்டான்.

"என்ன? பதிலையே காணும்?"

"நான் ரொம்ப பிஸியாக இருக்கிறேன்."

"ஐ.ஸீ. அப்பொ போனை வைத்து விடட்டுமா? வாட் எ பிட்டீ! இவ்வளவு நல்ல செய்தியை சொல்லலாம் என்று போன் செய்தால்—"

"மறுபடியும் ஏதாவது காண்ட்ராக்டா?"

"எப்போதும் தொழிலை பற்றிய யோசனைதானா?"

"வேறு என்னவாக இருக்கும்?"

"எனக்கேதாவது பரிசு தருவதாக பிராமிஸ் செய்தால் சொல்கிறேன்."

'ஒரே வார்த்தையில் உன் வாயை அடைத்து இனி ஒருபோதும் இப்படி தொந்தரவு கொடுக்காமல் செய்து விடுகிறேன். பார்த்துக் கொண்டே இரு' உள்ளூர கருவிக்கொண்டான். திடீரென்று நினைவுக்கு வந்தது. இந்தக் கடையை வாங்கினால் ஜவுளி வியாபாரத்தை தொடங்குவதற்கு மாதுரியை கூட்டாளியாக சேர்த்துக் கொள்ள வேண்டும். மனதில் எழும்பிய எரிச்சலை அடக்கிக் கொண்டான்.

"புதிர் போடாமல் சீக்கிரமாக சொல்லக்கூடாதா?" நயமான குரலில் கேட்டான்.

"அதெல்லாம் நடக்காது. நீங்க எனக்கு பரிசு ஏதாவது தருவதாக சொன்னால்தான்." மாதுரி பிடிவாதமாக இருந்தாள்.

மாதுரி பேச்சால் தன்னைத் தூண்டுவது ஏன் என்று அவனுக்கு புரியவில்லை.

"இந்த ஏழையால் என்ன பரிசு....." என்று ஏதோ சொல்லப் போனான்.

"போதும் நிறுத்துங்க. இன்னும் பணக்காரன் ஆக வேண்டும் என்று விரும்புகிறீர்களா?"

"விருப்பம் இருந்தால் மட்டும் போதுமா? ஒரு முக்கியமான

விசிட்டருக்காக காத்திருக்கிறேன். எந்த நேரமும் வரலாம்."

"தாமதம் உங்களுடையதுதான். சீக்கிரமாக பிராமிஸ் செய்து விடுங்கள்."

"ஓ.கே. பிராமிஸ்."

"பரிசு என்னவென்று சொல்லவே இல்லையே?"

"அவ்வளவு பொறுமை இப்பொ எனக்கு இல்லை. நீங்க எது கேட்டாலும் சரி."

பெண்பிள்ளை. அவளுக்கே தயக்கம் இல்லாத போது தான் எதற்கு பயப்பட வேண்டும்?

"அப்பொ ப்ளாங்க் செக் என்னிடம் தந்துவிட்டீர்கள். அப்படித் தானே. விஷயத்தை சொல்லி விடட்டுமா. ரெடியாக இருக்கிங்களா?"

"தயாராக இருக்கிறேன்."

"கங்கிராஜுலேஷன்ஸ் மிஸ்டர் வுட் பி ஃபாதர்."

"என்ன!!

"அட கடவுளே! இது கூட புரியவில்லையா? நீங்க அப்பாவாக போறீங்க. உங்களுடைய மார்பில் காலால் உதைக்க குட்டி பையன் பிறக்கப் போகிறான்."

ரமேஷுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

"தீரா! நிஜமாகவா?"

"மைகாட்! என்னை தீரா என்று அழைக்கும் உரிமை ஹேமாவுக்கும், சுதாகருக்கும் தவிர வேறு யாருக்கும் இல்லை. இனிமேல் இப்படி எல்லை மீறினால் ஐ வில் பனிஷ் யூ!

ரமேஷுக்கு மாதுரி சொன்னது எதுவும் காதில் விழவில்லை. இது நிஜம்தானா? சொல்லமுடியாத ஆச்சரியமும், எல்லை இல்லாத மகிழ்ச்சியும் ஒரு சேர அவனை சூழ்ந்து கொண்டன. வேகமாக நாற்காலியிருந்து எழுந்து கொண்டான். நிற்க முடியாமல் கால்கள் தள்ளாட நாற்காலியில் சரிந்தான்.

"மாதுரி! இது உண்மைதானா?" அந்த நிமிடம் மாதுரி அங்கே இருந்தால் என்ன செய்திருப்பானோ அவனுக்கே தெரியவில்லை.

"நூற்றுக்கு நூறு உண்மை. ஹேமாவும் நானும் சற்று முன்தான் லேடீ டாக்டரிடம் போய்விட்டு வந்தோம். ஹேமாவுக்கு ஏற்கனவே சந்தேகமாக இருந்ததாம். டாக்டர் உறுதிப்படுத்தி விட்டாள். இப்பொழுதுதான் ஹேமாவை வீட்டில் இறக்கிவிட்டு வருகிறேன். வந்ததுமே உங்களுக்கு போன் செய்தேன்."

"தாங்க்ஸ் தீரா!"

"மறுபடியும் அதே அழைப்பா?"

"சாரி. மெனி மெனி தாங்க்ஸ் மாதுரி பை" போனை வைத்து விட்டான். உடனே புயல்காற்றுபோல் அறையை விட்டு வெளியேறினான்.

29

ரமேஷ் வீட்டுக்கு வந்தபோது வீடு முழுவதும் நிசப்தமாக இருந்தது. அவன் உள்ளே வரும்போது ஹேமா துணிகளை இஸ்திரி செய்து கொண்டிருந்தாள். ரமேஷ் வாசற்படியில் ஒரு நமிஷம் அப்படியே நின்று கொண்டு ஹேமாவை கண் இமைக்காமல் பார்த்தான்.

ஹேமா தரையில் பாய்மீது புடவையை குனிந்து எடுத்து மேஜைமீது வைத்து மடித்துக் கொண்டிருந்தாள். ரமேஷ் சத்தம் போடாமல் பின்னாலிருந்து வந்து ஹேமாவை சட்டென்று உயரே தூக்கினான்.

ஏதோ நினைவில் இருந்த ஹேமா வீலென்று கத்தினாள். ரமேஷும் அவளை பின்பற்றி வீலென்று கத்தினான்.

"நீதானா? நான் பார்க்கவே இல்லையே. வந்து எத்தனை நேரமாச்சு?"

ஹேமா கேட்டதை ரமேஷ் காதில் வாங்கவே இல்லை. அவளை அப்படியே கைகளுக்கு இடையில் சிறைப்படுத்தியவன், வேகமாக தட்டா மாலை சுற்றினான். ஹேமா கலகலவென்று நகைத்து விட்டாள். வலதுகையை அவன் கழுத்தை சுற்றிலும் போட்டு பலமாக பற்றிக் கொண்டே "ரமேஷ்! போதும். நிறுத்து. எனக்கு தலையை சுற்றுகிறது" என்று கத்தினாள்.

ரமேஷ் உடனே நிறுத்திவிட்டான். ஆனால் ஹேமாவை கீழே இறக்கவில்லை. நேராக உள்ளே சென்று கட்டில்மீது மெதுவாக படுக்க வைத்தான்.

"என்ன விசேஷம்?" ஹேமா கேட்டாள். ரமேஷின் முகம் எப்போதும் விட மகிழ்ச்சியுடன், பெருமையுடன் ஜொலித்துக் கொண்டிருந்தது. மறுபடியும் ஏதாவது காண்ட்ராக்ட் கிடைத்திருக்குமோ என்று நினைத்தாள்.

ரமேஷ் கட்டில்மீது அமர்ந்துகொண்டு ஹேமாவுக்கு இருபுறமும் கைகளை ஊன்றி கொண்டு "விசேஷம் இல்லையா?" என்றான்.

ஹேமா ஒரு நிமிடம் கேள்விக்குறியுடன் நோக்கினாள். அவன் பார்வை கூர்மையாக இருந்தது.

"மாதுரி போன் செய்தாளா?" சந்தேகமாக கேட்டாள்.

ஆமாம் என்பதுபோல் தலையை அசைத்தான். ஹேமாவின் பார்வை தாழ்ந்துவிட்டது. "போன் செய்ய வேண்டாமென்று அவளிடம் சொல்லியிருந்தேனே?"

சற்றுமுன் மாதுரி சொன்ன போதே அத்தனை சந்தோஷத்திலும் இந்த செய்தியை ஹேமாவின் வாயால் கேட்கவில்லையே என்ற ஏமாற்றம் அவனுக்கு ஏற்பட்டது.

"முதலில் என்னிடம் ஏன் சொல்லவில்லை?" அவன் குரலில் நிஷ்டுரமும், அன்பும் கலந்திருந்தன.

"எனக்கே உறுதியாக தெரியவில்லை. இருக்கலாமோ என்று நினைத்தேன்."

"டாக்டர் கன்ஃபார்ம் செய்துவிட்டாளா?"

ஹேமா தலையை அசைத்தாள்.

ரமேஷின் மனம் தளிர் அலைபோல் துடித்தது. அவன் விரல்கள் ஹேமாவின் தோள்களை பலமாக பற்றியிருந்தன. அருகில் இழுத்து கொண்டு மார்போடு அணைத்துக் கொள்வான் என்று எதிர்பார்த்தாள். ஆனால் அதற்கு நேர்மாறாக அவன் ஹேமாவை மெதுவாக பின்னால், தலையணையில் சாயும் விதமாக உட்காரவைத்தான்.

"ஹேமா! என் தலைமீது கையை வைத்துக்கொள்" என்று

சொல்லிக்கொண்டே அவள் கையை பற்றி தலைமீது வைத்துக் கொண்டான்.

"அவள் அவன் தலைமுடியை கோதிவிட்டாள். என்ன இது? சின்னக் குழந்தையை போல்" என்றாள்.

"எனக்கே தெரியவில்லை ஹேமா! ஏனோ ரொம்ப பயமாக, பதட்டமாக, மகிழ்ச்சியாக இருக்கிறது. பைத்தியமாகி விடுவேனா என்று தோன்றுகிறது. நான் பிறந்தபோது யாரும் மகிழ்ச்சி அடைய வில்லை. என் வாழ்க்கை அழுகையுடன், வெசவுகளுடன் தொடங்கியது. எனக்கு விவரம் தெரிந்த நாள் முதல் ஒருத்தர்கூட என்னிடம் அன்பாகப் பேசியது இல்லை. எனக்கென்று யாருமே இருந்ததாக எனக்கு நினைவு இல்லை. உறவு என்று சொல்லிக்கொள்ள யாருமே இல்லாமல் வளர்ந்த அந்த பயங்கரமான தனிமையை அனுபவித்தால் தான் புரியும். ஹேமா! நீ என்னுடைய வாழ்க்கையில் காலடி எடுத்து வைத்த பிறகு நானும் ஒரு மனிதன்தான் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. இன்று எனக்கு என்று ஒரு ஜீவன் இந்த உலகிற்கு வரப்போகிறது என்று நினைக்கும் போது ரொம்ப பெருமையாக இருக்கிறது. ஹேமா! இந்த உலகில் இதுவரையில் எந்த தந்தையும் வளர்த்து இராத அளவுக்கு அபூர்வமாக அந்தக் குழந்தையை வளர்க்க வேண்டும் என்று என் உள்மனம் தவித்துக் கொண்டிருக் கிறது" அவனுடைய குரல் ஆவேசமாக, கம்பீரமாக ஒலித்தது.

30

அன்புள்ள ஹேமாவுக்கு,

உன் சின்ன அண்ணி எழுதும் மடல். உனக்கு ரொம்ப நாளாக கடிதம் எழுத வேண்டும் என்று நினைத்தாலும் என்ன நினைத்துக் கொள்வாயோ என்ற தயக்கம் என்னைத்தடுத்து விட்டது. இன்று துணிந்து எழுதுகிறேன். ஹேமா! எனக்கு ஒரு சின்ன உதவியை செய்ய முடியுமா? என் உறவினர்களில் ஒருவர் சமீபத்தில் யாத்திரை களுக்கு போய்விட்டு வந்தார். அவர் மூலமாக உன் சின்ன அண்ணன் ரிஷிகேஷ் ஆசிரமத்தில் மூளை கலங்கிவிட்ட நிலையில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதைக் கேட்டதிலிருந்து எனக்கு இருப்பு கொள்ளவில்லை. அவரை

இங்கே அழைத்து வந்து சாதாரண மனிதனாக மாற்றி உங்கள் எல்லோரையும் போல் ஒரு இல்லத்தரசியாக குடித்தனம் செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். என்னை ரிஷிகேஷுக்கு அழைத்துப் போகச் சொல்லி அண்ணனிடம் கேட்டபோது எரிந்து விழுந்தான். அங்கே இங்கே சின்னச் சின்ன வேலைகளை செய்து கொஞ்சம் பணம் சேர்த்து வைத்திருக்கிறேன். அப்படியும் ஐநூறு ரூபாய் குறைகிறது. என் சித்தியின் மகனும், அவன் மனைவியும் ரிஷிகேஷ் போவதாக இருக்கிறார்கள். அவர்களுடைய துணையுடன் போகலாம் என்று நினைக்கிறேன். நீ இப்பொ வசதியாக வாழ்ந்து வருகிறாய் என்று கேள்விப்பட்டேன். எனக்கு உதவி செய்வாய் என்று நம்பிக்கையுடன் இந்தக் கடிதம் எழுதுகிறேன். உன்ன பதிலுக்காக காத்திருக்கிறேன்.

இப்படிக்கு உன்
சின்ன அண்ணி சாவித்ரி

ஹேமா கடிதத்தை படித்துவிட்டு ரமேஷிடம் கொடுத்தாள்.

ரமேஷ் அன்றே ஹேமா அனுப்பி வைத்ததுபோல் சாவித்ரிக்கு ஐநூறு ரூபாயை மணிஆர்டர் செய்தான்.

"தன்னுடைய தேவைக்கு கடிதம் எழுதி இருக்கிறாளே தவிர நான் எப்படி இருக்கிறேன் என்ன செய்கிறேன் என்று எழுதினாளா? பணம் தேவைப்படவில்லை என்றால் இப்பொழுதும் என் நினைவு வந்திருக்காது." ஹேமா சொன்னாள்.

"போகட்டும் ஹேமா. அவள் ஏதோ கஷ்டத்தில் இருக்கிறாள் பாவம். கஷ்டங்களில் இருப்பவர்களுக்கு மற்றவர்களை பற்றி நினைக்கத் தோன்றாது. அதைவிடு. நீ இன்னிக்கு பழச்சாறு குடித்தாயா? விட்டமின் மாத்திரைகளை போட்டுக் கொண்டாயா?" ரமேஷ் கேட்டான்.

ஹேமா கருவுற்று இருக்கிறாள் என்று தெரிந்தது முதல் அவன் செய்யும் ரகளை கொஞ்சம் நஞ்சம் இல்லை. மனைவியை தரையில் நடக்க அனுமதிப்பதில்லை. "ஹேமா! இந்த விஷயத்தில் எனக்கு எதுவும் தெரியாது. உனக்கும் யாரும் இல்லை. உன் மனதில் ஏதாவது விருப்பம் இருந்தால் தயங்காமல் என்னைக் கேள்" என்று வற்புறுத்தி

னான்.

"சரி. சொல்கிறேன்." பதில் சொன்னாள் ஹேமா.

ரமேஷ் இரண்டு நாட்கள் வரை பொறுமையாக காத்திருந்தான். ஹேமா வாயிலிருந்து 'தனக்கு இது வேண்டும்' என்ற வார்த்தையே வராது.

"எதுவுமே கேட்கவில்லையே?" பொறுமையின்றி கேட்பான்.

"எனக்கு எதுவும் தேவையில்லை என்ற போது என்ன கேட்கட்டும்?" ஹேமா சொல்லுவாள்.

"உண்மையைச் சொல்லு. நிஜமாகவே உன் மனதில் எந்த விருப்பமும் இல்லையா?"

"ஊஹூம்." ஹேமா தலையை குறுக்காக அசைப்பாள்.

"எந்த விருப்பமும் இல்லாமல் இருப்பது நல்லது இல்லை ஹேமா. பிறக்கப் போகிற குழந்தை சன்னியாசியாக பிறக்குமோ என்னவோ?" என்பான்.

எல்லா தேவைகளையும் பார்த்துப் பார்த்து அவன் முன்னாடியே பூர்த்தி செய்யும்போது அவளால் என்ன கேட்க முடியும்?

மாதம் ஆக ஆக ஹேமாவை இனம் தெரியாத பயமும், கவலையும் சூழந்து கொள்ளத் தொடங்கின.

எத்தனையோ முறை அண்ணன் அண்ணியின் நினைவு வந்தது. ஒரு தடவை ஏதோ யோசனையில் ஆழ்ந்துபோய் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

ரமேஷ் எப்போ வந்தானோ தெரியவில்லை. பின்னாலேயே வந்து தோள்மீது கையை பதித்து தன் பக்கம் திருப்பிக் கொண்டான். ஹேமாவின் கண்களிலிருந்து கண்ணீர் வெளியேறிக் கொண்டிருந்தது.

"ஹேமா!" வாயடைத்து விட்டவனை போல் பார்த்தான். அன்று அவன் செய்த ஆர்ப்பாட்டம் கொஞ்சம் நஞ்சம் இல்லை. உடனே போன் செய்து மாதுரியை வரவழைத்தான். சுந்தரத்தை வரச் சொன்னான். "ஹேமா எதற்காகவோ வேதனைப்படுகிறாள். விஷயம் என்னவென்று என்னிடம் சொல்ல மறுக்கிறாள். நீங்களாவது

கேட்டுச் சொல்லுங்கள்" என்று அவர்களை அவசரப்படுத்தினான்.

"ஒன்றுமில்லை. கண்ணில் தூசி விழுந்து கண்ணீர் வந்தது. அதற்கு போய் இவ்வளவு ரகளையா?" ஹேமா புன்முறுவலுடன் சொன்னாள். அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. வெட்கமாகவும் இருந்தது.

இந்த உலகில் தான் ஒருத்தன்தான் தந்தை ஆகப்போவது போலவும், அந்த சந்தோஷம், பொறுப்பு வேறு யாருக்கும் இருக்காது என்பது போலவும் நடந்து கொள்கிறான்.

"ஹேமா ப்ளீஸ்! உன் மனதில் இருக்கும் வேதனையை வாயால் சொல்லமுடியவில்லை என்றால் கடிதமாக எழுதிக் கொடு. நீ இப்படி கவலைப்பட்டுக் கொண்டு இருந்தால் பிறக்கும் குழந்தையும் கவலை தோய்ந்த முகத்துடன் பிறப்பானோ என்னவோ?" நிஜமாகவே கவலைப்பட்டான்.

"ரமேஷ்! நீ இப்படி ரகளை செய்வாய் என்று எதிர்பார்க்கவில்லை. சும்மா உட்கார்ந்திருந்தபோது அண்ணன் அண்ணியின் நினைவு இருந்தது. எனக்கு பிறக்கப் போகும் குழந்தையை பற்றி அண்ணி செய்த பரிகாசங்கள் எல்லாம் நினைவுக்கு வந்தன. அவ்வளவுதான். வேறு எதுவும் இல்லை" என்று சொல்லிவிட்டாள்.

ரமேஷ் கற்சிலையை போல் ஆகிவிட்டான்.

"ஹேமா! உன் அண்ணியிடம் போய் கெஞ்சி எப்படியாவது அவர்களை இங்கே அழைத்து வரட்டுமா?"

"வேண்டாம். கனவில்கூட அது போன்ற வேலையை செய்ய வேண்டாம்."

"போகட்டும். வேறு யாரிடமாவது சொல்லி கடிதம் எழுத ஏற்பாடு செய்யட்டுமா?"

"ஊஹூம். குழந்தை பிறக்கட்டும். குழந்தையை தூக்கிக் கொண்டு நானே போகிறேன்."

ஹேமா அப்படி சொல்லியிருக்காவிட்டால் ரமேஷ் நிஜமாகவே ரங்கநாயகியை அழைத்துவரப் போயிருப்பான்.

ரமேஷ் மார்வாடியிடம் கடன் வாங்கி அந்த கடையை வாங்கி

விட்டான். மாதுரியை பார்ட்னர் ஆக சேர்த்துக் கொண்டு ஜவுளிக் கடையை திறந்து விட்டான்.

ஹேமாவுக்கு ஐந்து மாதங்கள் நிரம்பிவிட்டன. உடல் லேசாக பூசியதோடு, முகம் பளபளவென்று ஒளி வீசியது. மூச்சுவிட முடியாத அளவுக்கு வேலைகள் இருந்தபோதும் ரமேஷ் நேரம் தவறாமல் மதியம் சாப்பிட வீட்டுக்கு வந்துவிடுவான். ஹேமாவும் அவனுக்கு எதிரே உட்கார்ந்து கொண்டு சாப்பிட்டாக வேண்டும். சைல்ட் சைக்காலஜி பற்றி நிறைய புத்தகங்களை வாங்கி வந்து ஹேமாவின் முன் குவியலாக போட்டு படிக்கச் சொல்லி வற்புறுத்தினான்.

புத்தகம் படிப்பது என்றாலே ஹேமாவுக்கு வேப்பெண்ணையை குடிப்பதுபோல் இருக்கும். ஏதாவது சால்ஜாப்பு சொல்லி தப்பித்துக் கொள்ள பார்ப்பாள். ஹேமாவுக்கு படிப்பதில் விருப்பம் இல்லை என்று புரிந்து கொண்ட ரமேஷ் இரவில் தூங்குவதற்கு முன் தானே புத்தக்தை படித்துக் காட்டத் தொடங்கினான்.

அவன் படிக்க ஆரம்பித்த ஐந்தாவது நிமிடமே ஹேமாவுக்கு தூக்கம் சுழற்றிக் கொண்டு வரும். எப்படியோ பத்து நிமிடங்கள் வரை தாக்குப் பிடிப்பாள். தலையணையில் சாய்ந்துகொண்டு பக்க வாட்டில் தெரியும் அவன் கன்னத்தை, செதுக்கி வைத்தது போல் தீர்க்கமாக இருக்கும் மூக்கை, பலமாக, ஆரோக்கியமாக இருக்கும் கைகளை பார்த்துக் கொண்டே உறக்கத்தில் ஆழந்துவிடுவாள். புத்தகத்தை படித்துக்கொண்டிருக்கும் ரமேஷுக்கு நடுவில் தலையை உயர்த்தி பார்த்தபோது ஹேமா உறங்கி விட்டது புரியும். புத்தகத்தை மூடிவிட்டு ஹேமாவுக்கு போர்வையை சரியாக போர்த்தி, விளக்கை அணைத்துவிட்டு விடுவான். அடுத்த அறைக்குப் போய் இரவில் ரொம்ப நேரம் புத்தகத்தை படித்துக் கொண்டு இருப்பான். பிறக்கப்போகும் குழந்தையை பற்றிய எண்ணங்கள் அவன் மனம் முழுவதும் பரவியிருந்தன.

நாள் ஆக ஆக ரமேஷின் பதட்டம் அதிகரித்தது. தினமும் ஒரு தடவையாவது காலெண்டரில் நாட்களை எண்ணுவான்.

"பிள்ளை பெறப்போவது நீயா இல்லை உன் மனைவியா?" என்று சுந்தரம் சில சமயம் ரமேஷை கேலி செய்திருக்கிறான்.

"சுந்தரம்! பையனா? பெண்ணா? என்ன குழந்தை பிறக்கும் சொல்லு?! ரமேஷ் கேட்டான்.

"பெண் குழந்தைதான். நூறுரூபாய் பந்தயம்" சுந்தரம் சொன்னான்.

ரமேஷ் மாதுரியிடம் கேட்டான். "நீங்க சொல்லுங்க பையனா? பெண்ணா?"

"பையன்தான். அப்படியே உங்களை போல் இருப்பான்."

"பெண் குழந்தை பிறந்தால்?"

"பெண் குழந்தை பிறந்தால் நான் நூறுரூபாய் உங்களிடம் தருகிறேன். பையன் பிறந்தால் என்னிடம் கொடுத்து விடுங்கள். நான் வளர்த்துக் கொள்கிறேன்". மாதுரி புன்முறுவலுடன் சொன்னாள்.

ரமேஷ் எதிர்பார்த்த அந்த நாள் வந்துவிட்டது. ஹேமாவுக்கு அன்று காலையிலேயே உடம்புக்கு முடியாமல் இருந்தது. ரமேஷ் வேலைக்குப் போகாமல் வீட்டிலேயே இருந்து விடுவதாகச் சொன்னான். ஏதாவது தேவை ஏற்பட்டால் போன் செய்வதாகச் சொல்லி ஹேமா அவனை வலுக்கட்டாயமாக அனுப்பி வைத்தாள்.

மாலை மூன்று மணி ஆகும் போது ஹேமாவை ஆஸ்பத்திரியில் சேர்த்திருப்பதாக மாதுரி போன் செய்தாள். ரமேஷ் நேராக நர்ஸிங் ஹோமுக்கு வந்துவிட்டான்.

வியர்வை படிந்து, வெளிறிப்போன முகத்துடன் தென்பட்ட ஹேமா ரமேஷை பார்த்ததும் இரண்டு கைகளையும் நீட்டினாள். "ரமேஷ்! எனக்கு ரொம்ப பயமாக இருக்கிறது. நீ அண்ணியை அழைத்துக் கொண்டு வா. என் பக்கத்தில் அண்ணி இருக்க வேண்டும்" ஹோவென்று அழுதாள்.

ரமேஷ் சட்டென்று ஒரே எட்டில் ஹேமாவின் அருகில் சென்று தலைமீது கையை வைத்து மாபோடு அழுத்திக் கொண்டான்.

"எனக்கு பயமாக இருக்கு. செத்துப்போய் விடுவேனோ என்னவோ_ அண்ணியை அழைச்சுக்கிட்டு வா_ உடனே_"

ஹேமாவின் கண்ணீரால் அவன் சட்டை முழுவதும் நனைந்து விட்டது. ரங்கநாயகியை அழைத்து வருவதற்கு ரமேஷ்

தயாராகத்தான் இருந்தான். ஆனால் திருக்காட்டுப்பள்ளி பக்கத்தில் இல்லையே? சுந்தரத்தை அனுப்பி வைத்தால்! அவன் மனம் குழம்பிவிட்டது.

ஹேமாவை செக் செய்ய வந்த டாக்டர் அழுதுகொண்டிருந்த ஹேமாவை, பக்கத்திலேயே நின்றிருந்த ரமேஷை பார்த்துவிட்டு நீங்க வெளியில் போய்விடுங்கள் என்று எச்சரித்தாள்.

ரமேஷ் வெளியில் வந்தான். சற்று நேரத்தில் ஹேமாவை லேபர் ரூமுக்கு அழைத்துச் சென்றார்கள்.

வேதனை தாங்காமல் ஹேமா அலறுவதை கேட்டபோது ரமேஷின் இதயம் கரைந்துவிட்டது. ஹேமாவை மறுபடியும் தன்னால் பார்க்க முடியுமா? ஹேமாவின் கண்ணீரால் நனைந்து ஈரமாக இருந்த ஷர்ட்டை தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

லேடி டாக்டர் வெளியில் வந்தாள்.

"இன்னும் நிறைய நேரம் இருக்கிறது. போன் நம்பரை கொடுத்துவிட்டு உங்களுடைய வேலையை பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு போய்விட்டாள்.

இவள் மனுஷியா! இல்ல ராட்சசியா? மனைவி பிரசவ வேதனையில் துடித்துக் கொண்டு இருக்கும்போது, போய் உங்க வேலையை பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறாளே?

செய்தி தெரிந்ததும் சுந்தரம் ஓடிவந்தான்.

"ரமேஷ்! டெலிவரி ஆகிவிட்டதா? நான் ஜெயித்தேனா?" ஆர்வத்துடன் கேட்டான்.

"இன்னும் நிறைய நேரமிருக்கிறதாம். அந்த லேடி டாக்டர் என்னை இங்கே இருக்கவிடாமல் துரத்துகிறாள். நானும் போய் விட்டால் இங்கே ஹேமாவுக்கு அருகில் யார் இருப்பார்கள்? மாதுரிக்கு ஆஸ்பத்திரி சூழ்நிலை என்றாலே பயமாம். இப்போ என்ன செய்வது?"

அவனுக்கு அந்த நிமிடம் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. சுந்தரத்தின் தாயை துணைக்கு அழைத்திருக்கலாமோ?

சுந்தரம் ரமேஷை கட்டாயப்படுத்தி தெருமுனையில் இருந்த

ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றான். அங்கே காபி சாப்பிட உட்கார்ந்திருந்த அரைமணி நேரத்திற்குள் ரமேஷ் இரண்டுமுறை நர்ஸிங் ஹோமுக்கு போன் செய்தான். 'இன்னும் நேரம் இருக்கிறது' என்றுதான் பதில் வந்தது.

இரவு எட்டுமணி ஆகும்போது ஹேமாவுக்கு பெண் குழந்தை பிறந்தது. ரமேஷும், சுந்தரமும் நர்ஸிங் ஹோம் வாசலில் காத்திருக்கும்போது நர்ஸ் வந்து செய்தியை தெரிவித்தாள். அதைக் கேட்டதும் மகிழ்ச்சியின் மிகுதியில் ரமேஷ் திக்குமுக்காடி விட்டான்.

"ரமேஷ்! நான்தான் ஜெயித்தேன். நீ தோற்றுப் போய்விட்டாய்" என்று சொல்லிக் கொண்டே சுந்தரம் ரமேஷின் கைகளை பற்றி குறுக்கினான். ரமேஷின் இதழ்கள் புன்னகையாய் விரிந்தன.

கிட்டத்தட்ட ஒருமணி நேரம் கழித்து ரமேஷும், சுந்தரமும் ஹேமா இருந்த அறைக்குள் வந்தார்கள். ஹேமாவின் முகம் களைப் பினால் வாடிப் போய் இருந்தாலும் கண்கள் நட்சத்திரங்களை போல் ஜொலித்துக் கொண்டு இருந்தன.

"ஹேமா!" ரமேஷின் குரலில் அன்பு வெளிப்பட்டது. அவன் கண்கள் அறைமுழுவதும் பார்வையிட்டன. ஹேமாவின் பக்கத்தில் இருந்த தொட்டில் காலியாக இருந்தது.

"குழந்தை எங்கே?"

"தெரியாது." பலவீனமான குரலில் சொன்னாள்.

"நீ பார்க்கவில்லையா?" பதட்டத்துடன் கேட்டான்.

"ஊஹூம்."

அதற்குள் நர்ஸ் குழந்தையை தூக்கிக் கொண்டு வந்தாள். ரமேஷின் அருகில் வந்து காண்பித்தாள். "பார்த்துக் கொள்ளுங்கள் உங்கள் இளவரசியை" என்றாள்.

குழந்தை செக்க செவேலென்று, கைப்பிடிகள் இருக்கி, கண்களை மூடிக் கொண்டிருந்தது.

"தூக்கிக் கொள்ளத் தெரியுமா?" நர்ஸ் கேட்டாள்.

தெரியும் என்பதுபோல் தலையை அசைத்தான். அபூர்வமான

ஒன்றை மிகக் கவனமாக பாதுகாப்பது போல் தூக்கிக் கொண்டான்.

"பிறக்கும் போதே அங்கிளுக்கு லாபத்தை கொண்டு வந்தாய் கண்ணே!" சுந்தரம் குழந்தையை கொஞ்சினான்.

ஹேமா ரமேஷையே ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

முதல் முறையாக தன்னுடைய மகளை பார்த்துக் கொண்டிருக்கும் அந்த நிமிடத்தில் ரமேஷின் முகத்தில் பெருமையும், மகிழ்ச்சியும் வெளிப்படையாகத் தெரிந்தன.

ஹேமா திருப்தியாக உணர்ந்தாள்.

"யாராவது போய் கொஞ்சம் சூடாக காபி வாங்கி வந்து அந்தப் பெண்ணிடம் கொடுங்கள்" நர்ஸ் சொன்னாள்.

"நான் போய் வாங்கி வருகிறேன்" சுந்தரம் வெளியில் ஓடினான்.

"கொஞ்சம் இருங்க. ப்ளாஸ்க் தருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே நர்ஸ் அவனை பின்பற்றினாள்.

அறையில் ரமேஷும், ஹேமாவும் தனியாக இருந்தார்கள்.

"ஹேமா!" அவன் இதழ்கள் தெளிவற்று அசைந்தன. குரல் கம்மியது. சட்டென்று குனிந்து ஹேமாவின் நெற்றியில் மென்மையாக முத்தம் பதித்தான்.

31

இருபத்தோராவது நாளன்று மகளுடைய பெயர் சூட்டு விழாவை பெரிய அளவில் ஏற்பாடு செய்தான். ஹேமா வேண்டாமென்று மறுத்தபோதும் தெரிந்தவர்களை எல்லோரையும் அழைத்தான். அழைக்கப்பட்டவர்களில் ஜெகதாம்மாள், சுசீலா மாமி, சுப்பலக்ஷ்மியின் தாய் போன்றவர்களும் இருந்தார்கள்.

"ரமேஷ்! அவர்களை அழைப்பதில் எனக்குக் கொஞ்சம்கூட விருப்பம் இல்லை." ஹேமா சொன்னாள்.

பிடிவாதம் பிடித்து எனக்குக் கோபத்தை வரவழைக்காதே. நல்ல எண்ணத்துடன் நாம் எல்லோரையும் அழைப்போம். விருப்பம் இருப்பவர்கள் வருவார்கள். இல்லாதவர்கள் வரமாட்டார்கள். தன்னைக் கூப்பிடவில்லையே என்று யாரும் நினைக்கக்கூடாது."

பணம் அதிகமாக செலவு செய்து நகரத்திலேயே பெயர்போன சமையல்காரர்களை வரவழைத்து விருந்துச் சாப்பாடு தயாரிக்கச் செய்தான்.

குழந்தைக்கு என்ன பெயர் வைப்பது என்ற பிரச்னை வந்தது. மாதுரி நூறு பெயர்களை, சுந்தரம் ஆயிரம் பெயர்களை பட்டியல் போட்டார்கள். ரமேஷுக்கு அவற்றில் எதுவும் பிடிக்கவில்லை. ஹேமா தன்னுடைய தாயாரின் பெயரையும், ரமேஷின் தாயாரின் பெயரையும் இணைத்து வைக்கச் சொன்னாள். பழைய பெயர்கள் வேண்டாம் என்று ரமேஷ் மறுத்துவிட்டான்.

"என்னுடைய கண்மணி கருணைக்கு மறுபெயராகத் திகழ வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே, "கருணா பிரியதர்சினி" என்று வைத்தான். அவ்வளவு பெரிய பெயரை யார் அழைக்கப் போகிறார்கள். கருணா என்ற பெயர்தான் நிலைக்கப் போகிறது என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.

ஹேமா உறவினர்களை தவிர ரமேஷ் அழைத்திருந்த எல்லோரும் வந்திருந்தார்கள். விழா முடிந்து எல்லோரும் கிளம்பிப் போய் விட்டார்கள். சாப்பாடு நிறைய மீந்து போய்விட்டது.

"நாம் அழைத்தாலும் அவர்கள் வரமாட்டார்கள் என்று சொன்னால் கேட்டாயா? இப்பொ பாரு எவ்வளவு சாப்பாடு மீந்து விட்டது. வேஸ்ட்தானே?" என்றாள் ஹேமா.

ஏற்கனவே அவமானத்தினால் உள்ளூர எரிமலையாக கொந்தளித்துக் கொண்டிருந்த ரமேஷ் ஹேமாவை கோபமாக பார்த்தான்.

சாப்பிட்டுவிட்டு வெற்றிலை பாக்கு போட்டுக் கொண்டிருந்த பரமேஸ்வரனை அழைத்து ஏதோ சொல்லி அனுப்பினான்.

அரைமணி நேரத்திற்குள், பிச்சைக்காரர்களின் கும்பல் ஒன்று அந்த வீட்டு வாசல் முன்னால் வந்து நின்றது. ரமேஷ் தானே சுயமாக அவர்களுக்கு பரிமாறினான். வயிறார சாப்பிட்டுவிட்டு போகும் போது அவர்கள் வாய் நிறைய வாழ்த்திவிட்டுச் சென்றார்கள். ரமேஷுக்கு திருப்தியாக இருந்தது.

கருணா தொட்டிலில் உறங்கிக் கொண்டு இருந்தாள். குழந்தை தூங்குவதற்கு முன் ஹேமா திருஷ்டி கழித்து விட்டாள். ரமேஷ்

எங்கே போனானோ, ஒருமணி நேரமாக காணவில்லை. இரவு நேரத்தில் எங்கே போயிருப்பான் என்று நினைத்துக் கொண்டே படுக்கை அறைக்குள் நுழைந்தவள் விளக்கை போட்டாள். ரமேஷ் எங்கேயும் போகவில்லை. படுக்கை அறையில் ஈசிச்சேரில் உடைகளை கூட மாற்றாமல் கண்கள்மீது முழங்கையை ஊன்றி அமர்ந்திருந்தான்.

"ரமேஷ்! இங்கே இருக்கிறாயா?" என்று சொல்லிக் கொண்டே அவன் அருகில் சென்றாள்.

அண்ணன் அண்ணி இல்லை என்ற குறையை தவிர மகளுடைய பெயர்சூட்டு விழா, ஹேமா நினைத்ததை விட ரொம்ப நன்றாக நடந்தது. ஹேமாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

"விளக்கை அணைத்துவிடு ஹேமா!" என்றான். அவன் குரல் கரகரப்பாக ஒலித்தது.

"ரொம்ப நேரமாகிவிட்டது. இன்னுமா உடைகளை மாற்றிக் கொள்ளவில்லை?"

"விளக்கை அணைத்துவிடு. எனக்கு தூக்கம் வரவில்லை."

"அவர்கள் வரவில்லை என்று வருத்தப்படுகிறாயா? நான் முன்னாடியே சொன்னேன், அவர்களை அழைக்க வேண்டாம் என்று. அவர்கள் வரமாட்டார்கள் என்று எனக்குத் தெரியும்."

"மனிதர்களாக இருப்பார்கள் என்று நினைத்தேன். மனித நேயம் இருக்கும் என்று எதிர்பார்த்தேன். என்ன தவறு செய்துவிட்டோம் என்று நம்மை ஒதுக்கி வைக்கிறார்கள்? எல்லோரையும் போல் திருமணம் செய்துகொண்டோம், குடித்தனம் நடத்துகிறோம். அவர்கள் நம்மை எதற்காக தண்டிக்க வேண்டும்?"

"ரமேஷ்! ஆவேசப்படாதே. இது உலகத்து வழக்கம்." ஹேமா அவனை சமாதானப்படுத்தினாள்.

ரமேஷுக்கு சுரீர் என்று கோபம் வந்துவிட்டது.

"எது உலகத்து வழக்கம்? சக மனிதர்களை மனிதனாக மதிக்காமல் இருப்பதா? பெற்றோர்கள் விருப்பப்பட்டு கல்யாணம் செய்து கொண்டால் குழந்தைகளை தண்டிப்பதா? அவர்கள் இன்று வராமல் போனதில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை. ஆனால்

நாளைக்கு கருணா வளர்ந்த பிறகு யாரும் நம் வீட்டுக்கு வராமல், நாமும் யார் வீட்டுக்கும் போகாமல் இருந்தால் என்ன நினைத்துக் கொள்வாள்? தன்னுடைய பெற்றோர்கள் குற்றம் செய்துவிட்டார்கள் என்ற எண்ணம் அவள் மனதில் பதிந்துவிடாதா. கடவுளே! நான் உயிரோடு இருக்கும்வரை அவளுக்கு அந்த நிலைமையை வரவிடமாட்டேன். இந்த உலகத்தின் வாயை எப்படி அடைக்க வேண்டும் என்று எனக்கு நன்றாகவே தெரியும். எல்லாவற்றுக்கும் மூலம் பணம்! பணம் இருந்தால் போதும். எல்லாரும் நம்மை தேடிக் கொண்டு வருவார்கள்."

நாற்காலியின் பின்பக்கமாக வந்து நின்ற ஹேமா ரமேஷின் தலையை கோதிவிட்டாள்.

"ரமேஷ்! ஆவேசப்படாதே. எல்லாம் சரியாகிவிடும்." நயமான குரலில் சொன்னாள்.

32

"அம்மா! பந்தல் போட்டுவிட்டேன். சரியாக இருக்கான்னு வந்து பாருங்க." கொல்லைப்புறத்திலிருந்து வேலையாள் குரல் கொடுத்தான்.

ரங்கநாயகி கைவேலையை விட்டுவிட்டு கைகளை துடைத்துக் கொண்டே வந்தாள். பாகற்கொடிக்கு மூங்கில் குச்சிகளால் அழகாக பந்தலை போட்டு முடித்த வேலைக்காரன், கிணற்று அருகில் சென்று தண்ணீரை சேந்தி வாழைச் செடிகளுக்கு ஊற்றிக் கொண்டிருந்தான்.

தொலைவில் மலைகளுக்குப் பின்னால் சூரியன் மறைந்து கொண்டிருந்தான். வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டே வந்தது. ரங்கநாயகி கொல்லை முழுவதும் பார்வையை சுழற்றினாள். வலதுபக்கம் வெண்டை, கத்தரி போன்ற செடிகள், கீரை வகைகள் இருந்தன. சுவற்றுக்கு அருகில் வாழைச் செடிகள் இருந்தன. இன்னொரு பக்கம் பாகல், புடலை போன்ற கொடி வகைகள் இருந்தன.

பட்டணத்திலிருந்து தொலைவாக, கிராமத்து சூழ்நிலை ரொம்ப வித்தியாசமாக இருந்தது. தொலைவிலிருந்த மலைத்

தொடர்களிலிருந்து வேகமாக காற்று வீசிக் கொண்டிருந்தது. பட்டணத்திலிருந்து வந்த புதிதில் இந்தத் தூய்மையான காற்றை மட்டுமே சுவாசித்து உயிர் வாழ்ந்துவிடலாம் என்ற அளவுக்கு நிம்மதியாக இருந்தது.

பட்டணத்தில் தாங்கள் குடியிருந்த வீட்டில் எப்போதும் தண்ணீருக்கு பஞ்சம்தான். நாள் ஒன்றுக்கு ஒருமணி நேரத்திற்கு மேல் குழாயில் தண்ணீர் வராது. அதுவும் விடியற்காலை வேளையில்தான் வரும். எழுந்து கொள்ள சோம்பல் பட்டால் அன்று முழுவதும் தண்ணீர் இல்லாமல் காலம் தள்ள வேண்டிய நிலைமை. உறவினர்கள் வந்தால் சமாளிக்க முடியாமல் திண்டாட வேண்டியதுதான். பட்டண வாசம் என்று பெயர் தானே தவிர எந்த சுகமும் இல்லை. எல்லாவற்றுக்கும் பஞ்சம்தான். பால் என்ற பெயரில் வழங்கப்படும் தண்ணீர்— கறிகாய் பற்றி கேட்கவே வேண்டாம். எப்போதோ பறித்த காய்கள்மீது அடிக்கடி தண்ணீர் தெளித்து தெளித்து ஜீவனே இல்லாததுபோல் வாடி வதங்கிய நிலையில் இருக்கும். எதற்கெடுத்தாலும் க்யூதான். காலை எழுந்ததும் "லேட்டாக வந்தால் எப்படி நடக்கும்?" என்று வேலைக்காரியுடன் ஆரம்பமான சண்டை இரவு படுத்துக் கொள்ளும்போது "பாழாய்போன கரண்ட்! எப்போதும் மின்வெட்டுதான்" என்று திட்டிக் கொண்டே— படுத்துக் கொள்ளும்வரை நிம்மதியற்ற வாழ்க்கைதான்.

கிராமத்திற்கு குடிபோவதில் ரங்கநாயகிக்குக் கொஞ்சம்கூட விருப்பம் இருக்கவில்லை. முணுமுணுத்துக் கொண்டே கிராமத்தில் காலடி எடுத்து வைத்தவள், பத்து நாட்கள் போவதற்குள் அந்த மண்ணை நேசிக்கத் தொடங்கிவிட்டாள். ஊர்மக்கள் அவர்களை ரொம்பவும் மதிப்புக் கொடுத்து நடத்தினார்கள். தூய்மையான சூழ்நிலை அவள் மனதை கவர்ந்துவிட்டது. நல்லகதியாய் கிடைக்காமல் வருடக் கணக்கில் ஏங்கிக் கொண்டிருந்த ரங்கநாயகிக்கு, கொல்லைப் புறத்தில் கிணற்றையும், தினமும் ஒரு கூடைக்கு குறையாமல் காய்க்கும் செடிகளையும் பார்த்த பிறகு பெட்டி நிறைய பணமும், உடம்பு முழுவதும் நகைகளும் இருப்பதுபோல் மகிழ்ச்சியும், திருப்தியும் ஏற்பட்டன.

ஓட்டு வீடாக இருந்தாலும் சிமெண்ட்தரை.... விசாலமான அறைகள்— காற்றும், வெளிச்சமும் தாராளமாக இருந்தது. பட்டணத்

தில் இருக்கும் யாராவது உறவினர்கள் வந்தால் உதட்டளவில் குசலம் விசாரித்தாலும் எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்ற கவலை உள்ளூர ஓடிக் கொண்டே இருக்கும். இங்கே சொல்லாமல் கொள்ளாமல் பத்துபேர் வந்தாலும் கவலை இல்லை.

ஹேமா எப்படி இருக்கிறாளோ? பெண்குழந்தை பிறந்து பெயர் சூட்டு விழா நடந்தது என்று சுசிலா மாமி கடிதம் எழுதியிருந்தாள். நாட்கள் எவ்வளவு வேகமாக ஓடுகின்றன! தாங்கள் இங்கே சௌக்கியமாக இருப்பது ஹேமாவுக்கு தெரிந்தால் நன்றாக இருக்கும் என்று ரங்கநாயகி நினைத்துக் கொண்டாள்.

"அம்மா! சாப்பிட ஏதாவதுகொடு" கேட்டுக் கொண்டே மது உள்ளே வந்தான்.

"இப்பொழுதுதானே தோசையை சாப்பிட்டாய்?" ரங்கநாயகி சொன்னாள்.

"எனக்கு பொழுதுபோகவில்லை சாப்பிட ஏதாவது கொடு." எரிச்சலுடன் சொன்னான் மது.

சாப்பிடுவது, ஊரைச் சுற்றுவது தவிர வேறு வேலை எதுவும் இல்லாததால் அவனுக்கு எரிச்சலாக இருந்தது. அந்த ஊரில் இருக்கும் அவன் வயதை ஒற்ற பையன்களுக்கு கிரிக்கெட் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று முயற்சி செய்தான். தொடக்கத்தில் ஆர்வம் காட்டினாலும் பிறகு "இதைவிட சடுகுடு நன்றாக இருக்கும். அதை விளையாடுவோம்" என்று சொல்லிவிட்டார்கள். மதுவுக்கு அந்த விளையாட்டு அவ்வளவாக வரவில்லை. கிட்டி பள்ளு விளையாட கற்றுக் கொண்டான். ஆனால் அதுவும் பிடிக்கவில்லை.

திருக்காட்டுப் பள்ளிக்கு வந்த இந்த ஒரு வருடத்திற்குள் மது உயரமாக வளர்ந்துவிட்டான். அவனுடைய படிப்பு வீணாகி விட்டதே என்ற கவலை ரங்கநாயகியை வாட்டிக் கொண்டுதான் இருந்தது. "படித்து பெரிய ஆஃபிசராக தட்டுக் கெட்டுப் போறது. உழவுத்தொழிலை கற்றுக் கொள்ளச் சொல்லு அவனை." சேஷாத்ரி மனைவியை கடிந்து கொண்டான். விபத்தில் கையில் அடிப்பட்ட பிறகு ஏற்கனவே சிடுசிடுவென்று இருக்கும் சேஷாத்ரி முன் கோபக்காரனாக மாறி விட்டான். ரங்கநாயகிக்கு மகனுடைய எதிர்காலம் பிரச்னையாக மாறிவிட்டது.



யத்தனபூடி சுலோசனாராணி தெலுங்கு இலக்கிய உலகில் 'நாவல் ராணி' என்று அழைக்கப்படும் இவர் 2.4.1939-ல் ஆந்திர மாநிலத்தில் பிறந்தவர். 'ஆந்திரப் பத்திரிகா வீக்லி' யில் இவரது முதல் சிறுகதை 1956 ம் வருடம் பிரசுரமானது. 1965-ல் இவர் தனது முதல் நாவலான 'செக்ரட்ரி'யை வெளியிட்டார். இதுவரை இவர் சுமார் ஐம்பது நாவல்களும், 30 சிறுகதைகளையும் எழுதியுள்ளார். இதில் சுமார் 16 நாவல்கள் திரைப் படமாகவும், 10 நாவல்கள் டியோவில் தொடராகவும், 4 நாவல்கள் தொலைக் காட்சித் டராகவும். வெளிவந்துள்ளது. 1962 ல் 'ஒய்.எஸ்.எஸ்.' இடமிருந்து த கதைக்கான விருதும், 1969-ல் 'கேசரி கட்டீர்' விருதான தங்கக் பையும்; 1978-ல் ஆந்திர மாநிலத்தின் 'சானித்திய அகாடமி' தும், 1998-ல் கோபிசந்த் ஸ்மாராகா விருதும், 1999-ல் ராகசப்தசாரம் த்தினரால் வழங்கப்பட்ட தங்கப் பதக்கத்தையும்; 1989-ல் ஆந்திர ாலைக்காட்சி நிலையத்தார் வழங்கிய சிறந்த தொலைக்காட்சி லுக்கான விருதையும் பெற்றார். இவரது திரைக் கதைகள் 1965, 6, 1978, 1983-ம் ஆண்டுகளில் சிறந்த திரைக் கதைக்கான துகளைப் பெற்றுள்ளது. இந்தியாவிலேயே முதன்முதலாக 1998ல் ர் 'கோகிலா' என்ற ஆடியோ கேஸட் பத்திரிகையை வெளியிட்டார். ருடைய சில நாவல்கள் கன்னட மொழியில் வெளி வந்து அமோக வேற்பைப் பெற்றுள்ளது.


களரி கிருபாநந்தன் 2.9.1956-ல் பிறந்த இவர், மொழி தமிழானாலும், தந்தை ஆந்திராவில் வேலை பார்த்து தால் பள்ளி, கல்லூரி படிப்பு முழுவதும் தெலுங்கில். 1976-ல் து திருமணத்திற்குப் பிறகே தமிழைப் படிக்கவும், எழுதவும் கற்றார்.

சையை அடுத்த கிராமத்தில் ஐந்து வருடம் த்ததில், மாவட்ட நூலகத்தில் தமிழ்ச் கதைகள், நாவல்கள் படித்து தனது இலக்கிய த்தை வளர்த்துக் கொண்டார். இவரது ழிபெயர்ப்புச் சிறுகதை முதலில் 1955 ல் ணையாழியில் வெளிவந்தது. தொடர்ந்து ர் 13 நாவல்களையும், 4 சய முன்னேற்ற களையும் மொழிபெயர்த்து, அவை நூல் க வெளிவந்துள்ளன. இவர் சொந்தமாகச் சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.



தொடுவானம் – பாகம் 2 ★ யத்தனபூடி சுலோசனாராணி

தொடுவானம்



யத்தன்னபூடி சுலோசனா ராணி

தமிழில்: கௌரி கிருபானந்தன்

2

உரிமை பதிப்பு
முதற் பதிப்பு – டிசம்பர், 2001

721407

© ஆசிரியைக்கு

விலை : ரூ. 55.00

Laser Typeset by Sakthi Graphics, Chennai - 5.
Printed at Jai Ganesh Printing Works, Chennai - 600 004.

GIFT
RRLP
CALCUTTA

கருணாவுக்கு மூன்று மாதங்கள் நிரம்பிவிட்டன. வாயில் வரலை போட்டுக் கொண்டு கைகால்களை உதைத்துக் கொண்டு விளையாடும் மகளை பார்க்கப் பார்க்க ரமேஷின் இதயம் மகிழ்ச்சியால் பொங்கிக் கொண்டிருந்தது. பொக்கை வாயுடன் சிரித்துக் கொண்டே குப்புற விழுவதை, தவழ்வதை, கட்டில் விளிம்பை பிடித்துக் கொண்டே மெதுவாக எழுந்து கொள்ள முயற்சி செய்தது– இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் போது இதயம் என்ற வானத்தில் உதயம் ஆன பிறைச்சந்திரன் நாளுக்கு நாள் வளர்ந்து வருவது போலவும், அந்த நிலவின் ஒளியில் தன் மனமும், வாழ்க்கையும் புனிதமாவதுபோல் தோன்றியது.

அவன் சுண்டு விரலை தன்னுடைய தளிர்விரல்களால் பிடித்துக் கொண்டு தட்டு தடுமாறி விழுந்து எழுந்து நடக்கக் கற்றுக் கொள்ளும் மகளை பார்க்கும்போது அவனுக்கு எவரெஸ்ட் மலை உச்சியில் நிற்பதுபோல் சந்தோஷமாக இருந்தது.

வீட்டுக்கு வந்தவர்களில் யாராவது "மகள் அப்படியே உங்களுடைய சாயல்தான்" என்று சொல்லிவிட்டால் போதும். அவன் இதயம் பெருமையால் பொங்கிவிடும். கருணாவுடன் அவன் வாழ்க்கையில் நுழைந்துவிட்ட ஐஸ்வரியமும், சந்தடியும் ஒன்றோடு ஒன்று போட்டி போட்டுக் கொண்டு கருணாவுக்கு சமமாக வளர்ந்து கொண்டிருந்தன.

கருணாவின் முதல் பிறந்தநாள் வந்தது. ஹேமா தானே சுயமாக இனிப்புகளை செய்தாள். சந்தரமும், மாதுரியும் வந்திருந்தார்கள். வேறு யாரையும் அழைக்கவில்லை.

இரண்டாவது பிறந்தநாள் வந்தபோது மாதுரி வற்புறுத்தியதால் அவளுடைய சினேகிதிகளையும் அழைத்து ஹோட்டலில் பார்ட்டி கொடுத்தார்கள். அந்தச் சமயத்தில் ரமேஷ் இன்னும் மாதுரியின் சொத்து விவகாரங்களை பார்த்துக் கொண்டிருந்தான். எங்கே போனாலும் என்ன செய்தாலும் மாதுரிக்குத்தான் முக்கியத்துவம் இருந்து வந்தது.

கருணாவுக்கு மூன்றாவது பிறந்தநாள் வரும் போது பட்டணத்

தில் இருக்கும் பணக்காரர்களுக்குள் ஒருவனாக ரமேஷுக்கு அடையாளம் கிடைத்துவிட்டது. அவன் வாழ்க்கையில் மாதுரியின் முக்கியத்துவம் குறைந்துவிட்டது.

கருணாவுக்கு நான்கு வயது ஆகும்போது ஜவுளிக்கடைக்கு பக்கத்திலேயே ரெடிமேட் ஆடைகளின் கடையை திறந்துவிட்டான். வெளி மாநிலங்களுக்கு அரிசி ஏற்றுமதி செய்வதற்கான பர்மிட்டுக்காக தீவிரமாக முயற்சி செய்துகொண்டு இருந்தான்.

நாகபூஷணத்தின் வியாபாரம் எண்ணை தீர்ந்துவிட்ட அகல் விளக்கு போல் கொஞ்சம் கொஞ்சமாக மங்கிக் கொண்டிருந்தது. அதற்கு முக்கிய காரணம், ரமேஷ்தான். நாகபூணத்தின் வலதுகை போல் செயல்பட்டுக் கொண்டிருந்த மேனேஜர் ரமேஷிடம் வந்து சேர்ந்துவிட்டார் வியாபாரத்தின் சுளிவு நெளிவுகள் அவருக்கு நன்றாகவே தெரியும். ரமேஷ் அவருக்கு இருமடங்கு சம்பளம் தருவதாகவும், வருகிற லாபத்திலும் பங்கு தருவதாக ஆசைக்காட்டி தன் பக்கம் ஈர்த்துக் கொண்டான். ரமேஷின் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை. கோவிந்தன் மேனேஜராக வந்த பிறகு ரமேஷின் வியாபாரம் மேலும் முன்னேறத் தொடங்கியது. மாதுரிக்கு ஏனோ கோவிந்தனின் நிழல்கூடப் பிடிக்காது. ஆனால் மாதுரியின் விருப்பமின்மையை ரமேஷ் பொருட்படுத்தவில்லை. வருடம் போவதற்குள் வியாபாரத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தையும், கணிசமாக வந்த லாபத்தையும் பார்த்த பிறகு மாதுரியால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

ரமேஷின் வாழ்க்கை ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரையை போல் நாளுக்கு நாள் மலர்ந்து கொண்டிருந்தது. அவனுடன் பழகும் மனிதர்களின் எண்ணிக்கைக் கூடியது. சிலர் தாமாக வந்து அவனுடன் அறிமுகம் ஏற்படுத்திக் கொண்டால், இன்னும் சிலருடன் அவனாக போய் வியாபார தொடர்புகளை வளர்த்துக் கொண்டான். எல்லோரையும் சந்தித்து பேசுவதற்கு ஏதாவது ஒரு சந்தர்ப்பம் தேவைப்பட்டது. அதனால் அடிக்கடி ஏதாவது விழாவோ, பார்ட்டியோ நடைபெற்று வந்தது. பெரும்பாலும் அவன் வீட்டிலேயே இந்த சந்திப்புகள் நிகழ்ந்துகொண்டு இருந்தன.

ரமேஷின் வாழ்க்கையில் மிக வேகமாக ஏற்பட்டுக் கொண்டிருக்

கும் மாற்றங்களுக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொள்வதற்கு ஹேமா நிறைய முயற்சி செய்தாள். ஆனால் சாத்தியப்படவில்லை.

சிலசமயம் ரமேஷ் திடீரென்று வீட்டுக்கு வந்து "ஹேமா! இன்று நம் வீட்டுக்கு பத்து பேர் சாப்பிட வருவார்கள். சமையல் மிகப் பிரமாதமாக இருக்க வேண்டும்" என்று அவசரப்படுத்துவான். ஆரம்பத்தில் ஹேமாவும் ரொம்ப சிரத்தை எடுத்துக் கொண்டு எல்லா ஏற்பாடுகளையும் செய்து வந்தாள். சொன்னால் சொன்னது போல் விருந்தாளிகளின் எண்ணிக்கை இருக்காது. நான்கு பேர் கூடவோ குறைவாகவோ இருப்பார்கள். கூடினால் சாப்பாடு போறாமல் இருப்பது, குறைந்தால் மீந்து போவது என்றாகி விடும். எது நடந்தாலும் ஹேமாவுக்குக் கஷ்டமாக இருக்கும். விருந்தாளிகள் கிளம்பும்வரை வீடு முழுவதும் ஒரே சந்தடிதான்.

ஹேமாவுக்கு வீடு துப்புரவாக இல்லை என்றால் கொஞ்சம்கூட பிடிக்காது. அதனால் இரவு எத்தனை நேரம் ஆனாலும் எல்லாவற்றையும் சுத்தம் செய்துவிட்டுத்தான் படுக்கப் போவாள்.

போகப் போக எரிச்சலடைந்த ஹேமா பார்ட்டி கொடுப்பதாக இருந்தால் ஹோட்டலில் ஏற்பாடு செய்து கொள்ளச் சொல்லி ரமேஷிடம் சொல்லிவிட்டாள். இந்த விஷயத்தில் அவனுக்குக் கோபம் வந்தாலும் மனைவியை ஒன்றும் சொல்லவில்லை.

ரமேஷுடன் அந்த பார்ட்டிகளுக்கு போக வேண்டிய நிர்பந்தம் சில சமயம் ஹேமாவுக்கு ஏற்பட்டது. மற்றவர்களின் மனைவியரும் அந்த பார்ட்டிகளுக்கு வருவார்கள். ஆண்கள் சாப்பிட்டுக் கொண்டே வியாபார விஷயங்களை பேசிக்கொண்டு இருந்தால் பெண்கள் சமையல்காரியை பற்றி, வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட அலங்கார பொருட்களை பற்றி பேசிக் கொண்டிருப்பார்கள். வைர நெக்லஸை அணிந்துகொண்டு, விலை உயர்ந்த பட்டுப் புடவையை உடுத்திக் கொண்டு, சாப்பிடுவதை தவிர வேறு எந்த வேலையும் செய்யாத காரணத்தினால் பெருத்துபோன உடலுடன் இருக்கும் ஒரு அம்மாள் சோபாவில் கால்மீது கால் போட்டுக் கொண்டு அமர்ந்திருப்பதை பார்க்கும்போது ஹேமாவுக்கு வியப்பாக இருக்கும். போறாத குறைக்கு அந்த அம்மாள் பணப்பற்றாக் குறையை பற்றி சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்தாள்.

இன்னொரு பிரிவைச் சேர்ந்தவர்கள் இருப்பார்கள். பெருமை களை பீற்றிக் கொள்வதை தவிர இவர்களுக்கு வேறு எதுவும் தெரி யாது. "என் மகள் ஐஸ்கீரீம் தவிர வேறு எதையும் சாப்பிட மாட்டாள். எங்களுக்கு தரையில் உட்கார்ந்து சாப்பிடத் தெரியாது." இப்படித்தான் இவர்களுடைய பேச்சு அமைந்திருக்கும்.

ராப்பகல் பார்க்காமல் கண்வன்மார்கள் உழைத்து பொருளை ஈட்டிக் கொண்டிருக்கும்போது சினிமா, ஷாப்பிங் என்று கண்டபடி செலவு செய்து கொண்டு ஷோகேஸ் பொம்மையை போல் அலங் கரித்துக் கொண்டு ஊரைச் சுற்றுவதுதான் இவர்களுடைய வேலை. கொஞ்சம் பணவசதி குறைவாக இருப்பவர்களைக் கண்டால் இவர் களுக்கு இளப்பம், இரண்டு கைகளாலும் சம்பாதித்துக் கொட்டும் கணவன் மட்டும் இல்லை என்றால் தங்களுடைய நிலைமை என்ன ஆகும் என்ற யோசனை ஒருநாள்கூட இவர்களுக்கு வராது. கணவன் கிளப் டான்சருடன் சுற்றிக்கொண்டு ஆயிரக்கணக்கில் பணத்தை செலவு செய்கிறான் என்று தெரிந்தும் எதுவும் செய்ய முடியாத இவர்கள், குழந்தைக்கு உடல் நலம் சரியாக இல்லையென்று வேலைக்காரி பத்து ரூபாய் அட்வான்ஸ் கேட்டு, தன் கணவன் கொடுத்துவிட்டால் போதும் சந்தேகப்படுவார்கள். தன் வீட்டை கொள்ளை அடிக்க வந்தவளை போல் பார்ப்பார்கள்.

கணவனின் வருமானத்தின் மீதுதான் ஆசையே தவிர அவன்மீது கொஞ்சம் கூட மதிப்பு இருக்காது. கணவன் மூலமாக கிடைக்கும் அந்தஸ்து, ஐஸ்வரியம், சுகம் எல்லாவற்றையும் அனுபவித்துக் கொண்டு தங்கக் கூண்டில் வாழும் பறவையைபோல் வாழ்நாள் முழுவதும் கைதியாக, நிம்மதியாக வாழ்ந்துவிடுவார்கள்.

கணவனாக இருப்பவனும் அப்படித்தான். அழகான மனைவி வீட்டில் இருந்தால் போதும். படிப்பு இருந்தாலும் இல்லாவிட்டா லும் பரவாயில்லை. தாம்பத்திய வாழ்க்கையின் இனிமையை திருமணம் ஆன புதிதில் அனுபவித்து இருப்பார்களோ என்னவோ. அதன் பிறகு எந்த உணர்ச்சியும் இல்லாமல் இயந்திர கதியில் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். குழந்தைகள் பிறப்பது, வளர்ந்து பெரியவர்கள் ஆவது– திருமணம்– மருமகளுடன் சண்டை– பேரன் பேத்தி பிறப்பது– தலைமுறை தலைமுறையாக இதே கதைதான்.

ஹேமாவுக்கு தன்னைச் சுற்றி இருக்கும் உலகத்தை பார்க்கும் போது கவலை ஏற்படத் தொடங்கியது. இந்த இயந்திர உலகில் ரமேஷும் ஒரு இயந்திரமாக மாறிவருவதுபோல் தோன்றியது. ஹேமாவுக்கு அவனுடன் இன்னும் வாழ்க்கை தொடங்கியது போலவே இல்லை.

பொருளாதார ரீதியாக கொஞ்சம் ஸ்திரப்பட்டதும் இருவரும் அனுபவிக்கமுடியும் என்று கனவு கண்டு கொண்டிருந்த ஹேமா இந்த உண்மையை எதிர்கொள்ளத் தயங்கினாள். இதற்கு முன்பாக இருந்தால் தன் மனதில் ஏதாவது எண்ணங்கள் வந்தால் உடனுக் குடனே ரமேஷிடம் சொல்லிவிடுவாள். அவனும் பதிலுக்கு ஏதாவது சொல்வான். ஆனால் இப்போ அவனுக்கு ஓய்வோ, கேட்கும் பொறு மையோ இரண்டுமே இருக்கவில்லை.

அப்படியே ஓய்வு கிடைத்தாலும் தூங்கிக் கொண்டிருந்த மகளை எழுப்பி கொஞ்சி பேசி விளையாடிக் கொண்டிருப்பான். கருணாவு டன் அவன் பேசுவதை கேட்கும்போது ஹேமாவுக்கு வேடிக்கையாக இருக்கும்.

மகளை மார்பின்மீது படுக்க வைத்துக் கொண்டே "ஜாதி பெயர் தெரியாதவனுக்கு பிறந்த ரத்தினமே! நாளை இந்த உலகம், ஜாதி என்னவென்று உன்னைக் கேட்டால் 'மனிதநேயம்தான் என் ஜாதி' என்று தைரியமாக சொல்லு. உன்னுடையது புதிய தலை முறை. நீ தலைகுனியும் அளவுக்கு தவறான எந்த காரியமும் உன் தந்தை செய்யவில்லை. செய்யவும் மாட்டான்." என்பான்.

"என்ன பேச்சு இது ரமேஷ்! குழந்தையுடன் விளையாடுகிறாயா இல்லை உனக்குள் நீயே பேசிக் கொள்கிறாயா? அங்கேயே இருந்த ஹேமா எச்சரித்தாள். ரமேஷ் கையை நீட்டி ஹேமாவின் கையை பற்றி அருகில் இழுத்துக் கொண்டான். மறுபடியும் மகளை பார்த்துக் கொண்டே, "எனக்கும் உன் அம்மாவுக்கும் நடந்த கல்யாணம் கல்யாணமே இல்லை என்று இந்த உலகம் குத்தலாக பேசுகிறது. கண்ணம்மா நீ சீக்கிரமாக வளர்ந்து பெரியவள் ஆனதும் இந்த உலகமே வியக்கும் அளவுக்கு கிராண்டாக உன் திருமணத்தை நடத்திக் காட்டுவேன்." சொல்லும்போதே அவன் கண்கள் முன்னால் கருணா இளம்பெண்ணாக திருமண கோலத்தில்

மாலையும் சுழுத்துமாக தன்னை நோக்கி வருவதுபோல் தோன்றும்.

"இன்னும் எத்தனை ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமோ!"

அவனையும் அறியாமல் பெருமூச்சு விட்டான்.

ஹேமா சரிந்துவிட்டாள். "ரொம்ப நன்றாக இருக்கு. கனவுகளுக்கும் ஒரு எல்லை இருக்க வேண்டும்" என்றாள்.

ரமேஷ் ஹேமாவின் கழுத்தைச் சுற்றி கையை போட்டுக் கொண்டு அருகில் இழுத்துக் கொண்டான்.

"ஹேமா! கருணாவுக்கு நான்கு வயது நிரம்பிவிட்டது."

"ஆகட்டுமே. அதனால் என்ன?"

"குழந்தைகளை பெறுவதைத் தவிர எனக்கு வேறு வேலை இல்லையா என்ன? அவன் கையை விலக்கிவிட்டு நகர்ந்து கொண்டாள்."

"ஏன்? உனக்கு விருப்பம் இல்லையா?" அவன் கண்களில் ஏமாற்றம் தெளிவாகத் தெரிந்தது.

"ஒரு குழந்தை பிறந்ததற்கே நீ பணம் சம்பாதிப்பதில் குறியாய் இருக்கிறாய். இன்னும் ஒரு குழந்தை பிறந்தால் பணத்தை துரத்திக் கொண்டு போவதைத் தவிர உனக்கு வேறு நினைப்பு இருக்காதோ என்னவோ. இப்பொ இரவு வேளைகளிலாவது உன்னைப் பார்க்க முடிகிறது. அப்பொ கண்ணில் படவே மாட்டாய் என்று தோன்றுகிறது." ஹேமா நிஷ்டூரமாக சொன்னாள்.

"என்ன ஹேமா? எந்த பெற்றோர்களும் தங்களுடைய குழந்தைகளை அபூர்வமாக வளர்க்க வேண்டும் என்றுதானே நினைப்பார்கள்."

"அதற்காக இப்படியா? நான் எங்கேயும் பார்த்ததில்லை."

மனைவி சொல்லுவதில் மறைமுகமான எச்சரிக்கை இருப்பது போல் அவனுக்குத் தோன்றியது.

34

கருணாவின் ஐந்தாவது பிறந்தநாளை பெரிய விழாவாகக் கொண்டாடினார்கள். ரமேஷ் ஹோட்டலில் ஆர்டர் செய்து இனிப்பு வகைகளை வரவழைத்துவிட்டான். பண்டிகைகளை கொண்டாடுவதை

ரமேஷ் ஹேமாவின் விருப்பத்திற்கு விட்டுவிடுவான். தனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லாததுபோல் நடந்து கொள்வான். அவளைப் பொறுத்த வரையில் கருணாவின் பிறந்தநாள் ஒன்றுதான் பெரிய பண்டிகை.

பிறந்தநாள் விழாவுக்கு வந்திருந்தவர்கள் எல்லோரும் அன்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும் கருணாவை கொஞ்சி முத்தம் தருவதை பார்க்கும்போது ஹேமாவுக்கு அருவருப்பாக இருந்தது. பார்ட்டி முடியும் போது இரவு எட்டி மணி ஆகிவிட்டது.

ஒவ்வொரு பிறந்தநாள் அன்று கருணாவை காலையில் தலைக்குக் குளிக்கச் செய்து, புதிய உடைகளை அணிவித்து கோவிலுக்கு அழைத்துச் செல்வாள் ஹேமா. ஆனால் அன்று காலையிலிருந்தே விருந்தாளிகள் வரத்தொடங்கி விட்டதால் சாத்தியப்படவில்லை.

பிறந்த நாளன்று கோவிலுக்குப் போய் வர வேண்டும் என்பது ஹேமாவின் நம்பிக்கை. வந்தவர்கள் எல்லோரும் கிளம்பிப் போய்க் கொண்டிருந்தார்கள். ஹேமா கருணாவை உள்ளே அழைத்துச் சென்று புதிய உடைகளை மாற்றி இஸ்திரி செய்த வெள்ளை ப்ராக்கை அணிவித்தான்.

"செருப்புகளை போட்டுக்கொள் கருணா" என்றான்.

"எங்கே போகிறோம் மம்மீ?"

"கோவிலுக்கு."

"டாடீ வருவார் இல்லையா?"

ரமேஷ் வீட்டில் இருந்தால் கருணா அவனை ஒரு நிமிடம்கூட விடமாட்டாள்.

"டாடீ வரமாட்டார்."

கருணா பிறந்து இருப்பத்தோராவது நாள் அன்று ஹேமா ரமேஷை கோவிலுக்கு வரச்சொல்லி அழைத்தபோது மறுத்துவிட்டான். "எனக்கு நம்பிக்கை இல்லாத வேலைகளை என்னால் செய்ய முடியாது. வேண்டுமானால் நீ போய்க்கொள்."கச்சிதமாக சொல்லிவிட்டான். அதற்கு பிறகு ஹேமா அந்த பிரஸ்தாபனையை மறுபடியும் அவனிடம் கொண்டு வரவில்லை.

இன்று தந்தை வந்தால்தான் தானும் வருவேன் என்று கருணா அடம் பிடித்தபோது ஹேமாவுக்குக் கோபம் வந்தது. பிறந்தநாள் என்று பொறுத்துக் கொண்டாளே தவிர இல்லை என்றால் முதுகில் ஒரு அடி கொடுத்திருப்பாள்.

விருந்தாளிகளை வழியனுப்பி விட்டு உள்ளே வந்த ரமேஷ் கருணா செய்து கொண்டிருந்த ரகளையை பார்த்துவிட்டு "என்ன ஆச்சு" என்று கேட்டான்.

"கோவிலுக்கு போகிறோம்." மகளுக்கு செருப்புகளை அணிவித்துக் கொண்டே சொன்னாள்.

"இந்த இரவு நேரத்திலா?"

"இன்னும் ஒன்பதுமணி கூட ஆகவில்லை. கோவில் கதவுகள் இன்னும் திறந்துதான் இருக்கும்."

"டாடீ வரவில்லை என்றால் நானும் வரமாட்டேன்." தாயை தள்ளிவிட்டு கருணா அழத் தொடங்கினாள்.

"பிறந்தநாள் அதுவுமா அவளை எதற்காக அழவிடுகிறாய்? நாளைக்கு போக்ககூடாதா? இன்றுதான் போக வேண்டும் என்று சட்டம் ஏதாவது இருக்கிறதா?"

"ரமேஷ்! ஒரு விஷயம் சொல்லு. ஒருதாய் என்ற முறையில் எனக்கு அவள்மீது கொஞ்சமாவது உரிமை இருக்கிறதா இல்லையா?

"உரிமை, அதிகாரம் என்று பெரிய பெரிய வார்த்தைகள் எதுக்கு? சின்னக் குழந்தை— களைத்துப் போயிருக்கிறாள். நாளைக்கு போகக் கூடாதா என்றுதான் சொல்கிறேன்."

கருணா தாயின் பிடியிலிருந்து நழுவி தந்தையின் கைகளில் சரணடைந்துவிட்டாள்.

"இப்பொ போய்த்தான் ஆக வேண்டுமா?"

ஹேமா ஆமாம் என்பதுபோல் தலையை அசைத்தாள்.

"கிளம்பு. நானும் வருகிறேன்." ரமேஷ் மகளை தூக்கிக்கொண்டே செருப்புகளை அணிந்து கொள்ளப் போனான்.

"வேஷ்டி உடுத்திக் கொண்டு வா ரமேஷ்" என்றாள் ஹேமா.

ரமேஷ் ஹேமாவை ஒரு நிமிடம் ஆழமாக பார்த்தாள். பிறகு

என்ன நினைத்துக் கொண்டானோ தெரியவில்லை. தோள்களை குலுக்கிவிட்டு உள்ளே சென்றான்.

இருவரும் மகளை அழைத்துக் கொண்டு காரில் கோவிலுக்குக் கிளம்பினார்கள்.

கருணா தந்தையின் மடியில் அமர்ந்து கொண்டாள்.

"டாடீ.. உம்மாச்சி நம் வீட்டிலியே இருக்கு இல்லையா. மறுபடியும் கோவிலுக்கு எதுக்கு போகணும்?" கருணா கேட்டாள்.

"வீட்டில் இருந்தால் சரியாக ஞாபகம் வைத்துக் கொள்ள மாட்டோம் என்று சிலசமயம் கடவுள் கோவிலில் போய் உட்கார்ந்து கொள்வார். அதான் கோவிலுக்கு போகிறோம்."

"உம்மாச்சிக்குக் கோபம் வருமா டாடீ?"

"வராதும்மா.

"உம்மாச்சிக்கு கோபம் வரும் என்று மம்மீ சொன்னாளே?"

அம்மாவுக்கு ஒன்றும் தெரியாது. கடவுளுக்கு எப்போதுமே கோபம் வராதும்மா.

"உன்னைப் போலவா டாடீ"

ரமேஷ் சட்டென்று மகளை மார்போடு அணைத்துக் கொண்டான்.

கார் வேகமாக போய்க் கொண்டிருந்தது. இருள் படர்ந்திருந்த சூழ்நிலை, மெள்ள மெள்ளமாக நிசப்தம் பரவிக் கொண்டிருந்தது. ஜன்னல் வழியாக கடைத் தெருவை பார்த்துக் கொண்டிருந்த ஹேமா தலையை திருப்பிக் பார்த்தாள். தந்தை மகளின் உரையாடல் ரொம்ப வேடிக்கையாக இருந்தது. எத்தனையோ நாட்களுக்கு பிறகு ரமேஷும், அவளும் குழந்தையுடன் சேர்ந்து ஒரு இடத்திற்கு போய்க் கொண்டு இருக்கிறார்கள்.

கார் கோவிலின் முன்னால் வந்து நின்றது. ரமேஷ் கருணாவை தூக்கிக் கொண்டு. ஹேமா சொன்னது போல் மூன்றுமுறை பிரகாரத்தை சுற்றி வந்தான். ஹேமா கையோடு கொண்டு போன அர்ச்சனை தட்டை குருக்களிடம் கொடுத்தாள். கருணா பெயரிலும், ரமேஷ் பெயரிலும் அர்ச்சனை செய்யச் சொன்னாள்.

கருணா தாய் சொன்னதுபோல் கடவுள் சிலையை பார்த்ததும் கண்களை மூடி கைகளை கூப்பினாள். கருணாவை தூக்கிக் கொண்டு கோவில் பிரகாரத்தில் நின்றிருந்த ரமேஷுக்கு திடீரென்று மனம் அமைதி பெற்றுவிட்டது போல் இருந்தது. எந்த கவலையும் இல்லாதது போல் தோன்றியது.

ஹேமா எங்கே? அறுந்துபோன காற்றாடியை போல் சுற்றிக் கொண்டிருந்த தான் எங்கே? தங்களுடைய அன்பின் சின்னமாக கருணா! வாழ்க்கையில் தான் கனவில்கூட நினைத்து பார்க்க முடியாத விஷயங்கள் தனக்குக் கிடைத்திருக்கின்றன. ரமேஷ் தன்னையும் அறியாமல் கைகளை கூப்பி வணங்கினான்.

திரும்பிவரும் போது ஹேமா குறும்பாக கேட்டாள். "என்ன விசேஷம்? வழக்கத்திற்கு மாறாக கடவுளை சிரத்தையாக வணங்கினாயே?"

ஹேமா எதிர்பார்த்தது போல் ரமேஷ் உடனே "மகளுக்காக" என்று சொல்லவில்லை. மடியில் உறங்கிவிட்ட மகளின் தலையை வருடிக் கொண்டே "ஆமாம் ஹேமா! என் கண்ணம்மாவுக்கு உன்னுடைய கடவுளின் அனுகிரகமும், ஆசீர்வாதமும் எப்போதும் இருக்க வேண்டும். அதற்காகத்தான்" என்றான்.

35

ரமேஷ் சம்பெனி வேலையாக அன்று மாலை பாம்பே கிளம்புகிறான். மதியமே வீட்டுக்கு போன் செய்து சூட்கேஸில் உடைகளை எடுத்து வைக்கச் சொல்லி ஹேமாவிடம் சொல்லியிருந்தான்.

நாலு மணிக்கு அரக்க பரக்க வீட்டுக்கு வந்தான். ஹேமா அவனுக்காக டிபன் காபியை தயாராக வைத்திருந்தாள்.

"கருணா எங்கே?" டிபனை சாப்பிட்டுக் கொண்டே கேட்டான்.

அவன் வீட்டுக்கு வந்ததுமே எங்கே இருந்தாலும் "டாடி!" என்று ஓடிவந்து கால்களை கட்டிக் கொள்வாள்.

"இது வரையில் இங்கேதான் இருந்தாள். எங்கேயாவது விளையாடிக் கொண்டு இருக்கிறாளோ என்னவோ?" ஹேமா சொன்னாள்.

"பக்கத்து வீட்டுக்கு போயிருப்பாள். போய் அழைத்துக் கொண்டு வா." சமையல் செய்யும் பையனை அனுப்பினான்.

சமையல் பையன் ஐந்தாவது நிமிடம் திரும்பி வந்தான். "சின்னம்மா அங்கே இல்லைங்க."

"அங்கே இல்லைன்னா எதிர்வீட்டுக்கு போயிருப்பாள். போய் அழைத்துக் கொண்டு வா. டாடி வந்து விட்டார் என்று சொல்லு" . விரட்டுவது போல் சொன்னான் ரமேஷ்.

"அவன் ஓடிப்போய் அதே வேகத்தில் திரும்பி வந்தான்." அவங்க வீட்டுக்கு இன்னிக்கு வரவே இல்லையாம்.

"எங்கே போயிருப்பாள்?" ரமேஷ் கேட்டான்.

ஹேமா பதில் சொல்லவில்லை. இருவரும் சேர்ந்து வீடு முழுவதும் தேடினார்கள். கருணாவின் அறையில் விளையாட்டு பொருட்கள், பொம்மைகள் எல்லாம் அப்படியே இருந்தன. அக்கம் பக்கத்து வீடுகளில் எங்கேயும் இல்லை.

"எங்கே போயிருப்பாள்? நீ அவளை கடைசியாக பார்த்தது எப்பொ?" ரமேஷ் கேட்டான்.

"சற்றுமுன்தான் பார்த்தேன். அறையில் உட்கார்ந்து பொம்மைகளுடன் விளையாடிக் கொண்டு இருந்தாள்." என்றாள் ஹேமா.

அதற்குள் பரமேஸ்வரன் ஏதோ வேலையாக அங்கே வந்தார். ஆபிஸிலிருந்து சுந்தரமும் வந்துவிட்டான். ஆளுக்கொரு பக்கமாக தேடினார்கள். கருணா கிடைக்கவில்லை.

ரமேஷ் உடனே காவல் நிலையத்திற்கு போன் செய்து குழந்தையை காணவில்லை என்று ரிப்போர்ட் கொடுத்தான். அந்த நிமிடம் அவனுடைய முகத்தை பார்க்கும்போது நடுக்கம் பரவியது. கருணாவுக்கு என்ன ஆகியிருக்குமோ என்ற கவலை வேறு.

ரமேஷின் சூட்கேஸ் திறந்தது திறந்தபடியே இருந்தது. காபி குடித்துக் கொண்டிருந்தவன் அப்படியே பாதியில் எழுந்து விட்டிருந்தான்.

ஒருமணி... இரண்டுமணி என்று நேரம் கழித்து கொண்டே இருந்தது. இரவு எட்டுமணி ஆகிவிட்டது. கருணா இருக்கும் இடம்

தெரியவில்லை. எல்லோருக்கும் கவலையும், பதட்டமும் அதிகரித்துக் கொண்டிருந்தன.

ரமேஷ் பைத்தியம் பிடித்தவனை போல் தெருவில் அலைந்து கொண்டிருந்தான். மதியம் மூன்றுமணி அளவில் கருணா குழந்தையுடன் விளையாட பக்கத்து வீட்டுக்கு போனது உண்மைதான். ஆனால் பிறகு வீட்டுக்கு போய்விட்டாள். அதற்கு பிறகு அவளை யாரும் பார்க்கவில்லை.

ரமேஷின் மனதில் வேண்டாத எண்ணங்கள் அலைபோல் மோதிக் கொண்டிருந்தன. இந்தக் காலத்தில் எத்தனை விபத்துக்கள் நடக்கின்றன? எத்தனை குழந்தைகள் கடத்திச் செல்லப்படுகின்றன? எந்த நிமிடத்தில் எந்த செய்தியை கேட்க வேண்டி வருமோ என்று அவன் இதயம் தவித்துக் கொண்டிருந்தது.

தேடித் தேடி களைத்துப்போன ரமேஷ் பார்க்கிற்கு வந்து பெஞ்சியின் மீது உட்கார்ந்து கொண்டான். இனி ஜென்மத்தில் கருணாவை பார்க்கவே முடியாதோ!

நிலா வெளிச்சத்தில் தொலைவில் இருக்கும் பெஞ்சியின் மீது யாரோ பிச்சைக்கார பெண் சுருண்டு படுத்திருப்பது கண்ணில் பட்டது. அனாதையாக இருக்கும். எத்தனையோ பேர் பகல் முழுவதும் பிச்சை எடுத்து, இரவு வேளைகளில் இப்படி பார்க்குகளில் உறங்குவது அவனுக்குத் தெரியும்.

ஏதோ யோசனையில் அந்த பெஞ்சியை நோக்கி நடந்து போய்க் கொண்டிருந்தவன், திடீரென்று நின்றுவிட்டான். பிறகு ஓட்டமும், நடையுமாக அந்த இடத்திற்கு விரைந்தான்.

"கருணா" அவன் அலறிய அலறல் அந்த பார்க் முழுவதும் எதிரொலித்தது. கருணா எத்தனை நேரமாக அங்கே இருக்கிறாளோ? பெஞ்சிமீது கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்கிறாள்.

ரமேஷ் ஒரே எட்டில் அருகில்சென்று கைகளில் அவளை தூக்கிக்கொண்டு, மார்போடு அழுத்திக்கொண்டான். கருணா தூக்கக் கலக்கத்தில் மெதுவாக கண்களைத் திறந்தாள்.

கருணாவை வீட்டுக்கு அழைத்து வரும்போது அவன் கேட்ட கேள்விகளுக்கு தூக்கக் கலக்கத்திலேயே பதில் சொன்னாள். கோவில் யானை தெருவில் வந்ததாம். அதன் பின்னாடியே போயிருக்கிறாள். அதன்பிறகு வீட்டுக்கு வரும் வழி தெரியவில்லை. கடைசியில் பார்க்கில் போய் உட்கார்ந்துகொண்டு விட்டாளாம்.

"நான் எங்கே போனாலும் என்னைத் தேடிக்கொண்டு நீ வருவாய் என்று எனக்குத் தெரியும் டாடி. அதான் பயப்படாமல் உட்கார்ந்து கொண்டேன். அப்படியே தூங்கிப் போய்விட்டேன். அப்பாவியாக சொன்னாள்.

கருணாவை தூக்கிக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்த ரமேஷை பார்த்ததும் ஹேமா, சுந்தரம் மற்றவர்கள் நிம்மதியாக மூச்சைவிட்டுக் கொண்டார்கள். ரமேஷ் வந்ததும் வராததுமாக ஹேமா மீது எரிந்து விழுந்தான்.

"வீட்டில் குழந்தை இருக்கிறாளா? இல்லையா? என்று கூட்த் தெரியாத அளவுக்கு நீ செய்யும் காரியம்தான் என்ன? இன்னிக்கு நான் ஊருக்குக் கிளம்பி போயிருந்தால் என்னவாகி இருக்கும்? ச்சி....ச்சி.... இருப்பது ஒரு குழந்தை. அதையும் சரியாக பாதுகாத்துக் கொள்ளத் தெரியவில்லை என்றால் உன்னை என்ன சொல்லி அழைப்பது."

ஹேமா கருணாவின் ஷூக்களை கழட்டி, உடைகளை மாற்றுவதற்காக அருகில் போகப்போனாள்.

"செய்தது போதும். இங்கிருந்து போய்விடு" எரிந்து விழுந்தான்.

தானே சுயமாக குழந்தைக்கு சாதம் ஊட்டிவிட்டான். உடைகளை மாற்றி தூங்கவைத்தான்.

ஹேமா மௌனமாக எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டாள்.

ரமேஷ் உடனே ஹரி என்ற நண்பனுக்கு போன் செய்து "என் மகளை பார்த்துக்கொள்வதற்கு ஒரு ஆயா வேண்டும். காலையில் பத்து மணிக்குள் இங்கே இருக்க வேண்டும். நாளை நான் ஊருக்கு போகிறேன். வந்ததும் சம்பளம் மற்ற விவரங்களை பேசிக் கொள்கிறேன்" என்றான்.

இதற்கு மேல் ஹேமாவால் பொறுமையாக இருக்க முடிய

வில்லை. ரமேஷ் போனை வைத்ததும் "உன்னுடைய எண்ணம்தான் என்ன?" என்று நேராகவே கேட்டுவிட்டாள்.

"உனக்குத் தெரியும். நான் வேறு தனியாக சொல்ல வேண்டுமா?"

"குழந்தையைக் கூட பார்த்துக்கொள்ளத் தெரியாத துப்புக் கெட்டவள் என்று ஊரெல்லாம் பறைச்சாற்றும் நோக்கமா?"

"அப்படியே நினைத்துக்கொள்"

"ரமேஷ்"! ஹேமாவின் விழிகளில் கிர்ரென்று நீர் சுழன்றது.

"ச்சீ.... ச்சீ.... இப்போ என்ன ஆகிவிட்டதென்று இந்த அழுகை? இன்னொரு ஆள் இருந்தால் உனக்கு உதவியாக இருக்கும் என்று ஆயாவை ஏற்பாடு செய்தால் உன்னை அவமதிப்பதாக ஏன் எடுத்துக்கொள்கிறாய்?" ரமேஷின் குரல் உச்சஸ்தாயில் ஒலித்தது.

ஹேமா சாட்டையால் அடி வாங்கியது போல் பின் வாங்கினாள்.

"நேற்றும் இப்படித்தான். குழந்தை பார்கிற்கு அழைத்துப் போகச் சொன்னாள். தலைவலியாக இருக்கு என்று சொல்லி மறுத்து விட்டாய். உன்னால் முடியவில்லை என்றால் சமையல்காரனை துணைக்கு அனுப்பியிருக்கலாமே? உனக்குக் குழந்தையை வளர்க்கத் தெரியவில்லை. சொன்னால் மட்டும் ரோஷம் பொத்துக்கொண்டு வந்துவிடும் உனக்கு."

மறுநாள் விடியற்காலையில் அவன் பாம்பேக்கு கிளம்பிப் போனான்.

மறுநாள் முழுவதும் ஹேமாவின் மூட் சரியாக இல்லை. மனதில் ஏதோ வேதனையை அனுபவித்துக்கொண்டிருப்பது போல் முகம் வாடியிருந்தது. முதல்நாள் இரவு ரமேஷ் சொன்ன வார்த்தைகள் அவள் மனதை காயப்படுத்திவிட்டதை உணர்ந்த சுந்தரம் "ரமேஷ் சொன்னதை நீ சீரியஸாக எடுத்துக்கொள்ளாதே ஹேமா! வியாபார வேலைகளில் அவன் ரொம்ப பிஸியாக இருக்கிறான். அந்த டென்ஷனில் அவனுக்கு சட்டென்று கோபம் வந்துவிடுகிறது" என்று சமாதானப்படுத்துவதுபோல் சொன்னான்.

"இல்லை சுந்தரம் ரமேஷ் மாறிக்கொண்டு வருகிறான். நான் அந்த விஷயத்தை கொஞ்ச நாட்களாகவே கவனித்து வருகிறேன்."

ஹேமாவின் குரலில் வருத்தம் வெளிப்பட்டது.

"ச்சீ.... ச்சீ.... அப்படி சொல்லாதே ஹேமா! நீ தவறாக யோசிக்கின்றாய் என்று தோன்றுகிறது" என்றான் சுந்தரம். வெளியில் அப்படி சொன்னானே தவிர, அவனுக்கும் ரமேஷிடம் ஏதோ மாறுதல் இருப்பதுபோல் தோன்றியது.

36

ரமேஷ் பாம்பேயிலிருந்து திரும்பிவந்தான். அவன் போன வேலை வெற்றிகரமாக முடிந்தது. அந்த சந்தோஷத்தில் வீட்டில் இருக்கும் எல்லோருக்கும் பரிசு பொருட்களை வாங்கி வந்தான். காரைவிட்டு இறங்கி வீட்டுக்குள் நுழையும்போதே "கருணா! கருணா!" என்று உரத்த குரலில் அழைத்தான்.

கார் வந்து நின்ற சத்தம் கேட்டதும் ஆயாவுடன் விளையாடிக் கொண்டிருந்த கருணா "டாடா!" என்று அழைத்துக்கொண்டே ஓடி வந்தாள்.

ரமேஷ் கருணாவை தூக்கிக் கொண்டான். பெட்டியை திறந்து மகளுக்காக வாங்கி வந்த பொம்மைகளை எடுத்துக் காண்பித்தான். ஒவ்வொன்றாய் கீ கொடுத்து காண்பித்துக் கொண்டிருக்கும்போது கருணா மகிழ்ச்சியுடன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள்.

பின்பக்கமாக வந்து நின்ற ஹேமாவை இருவருமே கவனிக்கவில்லை. ஹேமா சமையல்காரனிடம் டீ தயாரிக்கச் சொல்லிவிட்டு உள்ளே சென்றுவிட்டான்.

கிட்டத்தட்ட கால் மணி நேரம் கழித்து ரமேஷ் படுக்கை அறைக்குள் வந்தான். ஹேமா அவனுக்காக உடைகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

"ஹேமா! இங்கே வாயேன்" உற்சாகம் பொங்கும் குரலில் அழைத்தான். அவன் கையில் ஏதோ பாக்கெட் இருந்தது.

ஹேமா அருகில் வந்தாள்.

கட்டில் மீது அமர்ந்து கொண்ட ரமேஷ் கையில் இருந்த அழகான பாக்கெட்டை காண்பித்துக்கொண்டே "இதில் என்ன இருக்கு சொல்லு?" என்றான்.

கருணாவுக்கு புதிய டிரெஸ்ஸா?

"எத்தனை அநியாயம்? கருணாவுக்குத் தவிர வேறு யாருக்கும் நான் எதுவும் வாங்கி வரமாட்டேன் என்று உன் எண்ணம். அப்படித்தானே" அவன் குரல் நிஷ்டூரமாக ஒலித்தது.

ரமேஷ் பாக்கெட்டை பிரித்தான். அதில் கத்திரிப்பூ வண்ணத்தில் ஜரிகையில் எம்பிராயிடரி செய்யப்பட்ட விலை உயர்ந்த புடவை இருந்தது.

"நன்றாக இருக்கிறதா?" ஆர்வத்துடன் கேட்டான்.

அவள் தலையை அசைத்தாள்.

"ஏன் என்னவோ போல் இருக்கிறாயே? உடம்பு சரியாக இல்லையா?" சட்டென்று ஹேமாவின் நெற்றிமீது கையை வைத்துப் பதித்தான்.

ஹேமாவின் பார்வை தரையில் பதிந்திருந்தது.

"ஏதாவது விசேஷமா?" தாழ்ந்த குரலில் கேட்டான்.

ஹேமா இல்லை என்பதுபோல் தலையை அசைத்தாள். அவன் முகத்தில் ஏமாற்றம் மின்னல்போல் தோன்றி மறைந்துவிட்டது.

"கண்களை மூடிக்கொள்" ரமேஷ் சொன்னான்.

ரமேஷ் ஹேமாவின் பின்பக்கமாக வந்து நின்றான்.

இரண்டு நிமிடங்கள் கழித்து, கழுத்துப் பகுதியில் சில்லென்று ஏதோ பட்டதும் திடுக்கிட்டு கண்களைத் திறந்தாள். எதிரே டிரெஸ்ஸிங் டேபிளில் இருக்கும் கண்ணாடியில் இருவரின் உருவங்களும் தெரிந்தன.

ரமேஷின் கைகள் விலை உயர்ந்த சிவப்பு கல் நெக்லஸை ஹேமாவின் கழுத்தில் அணிவித்துக் கொண்டிருந்தன.

"எப்படி இருக்கு ஹேமா?"

"நன்றாக இருக்கிறது."

"என்ன விலை என்று தெரியுமா?"

"எவ்வளவு?"

"ஊஹூம். சொல்ல மாட்டேன். சொன்னால் அவ்வளவு விலையா

என்பாய். பணத்தை கண்டபடி செலவு செய்கிறேன் என்று என்னை திட்டுவாய்" என்று சொல்லிக்கொண்டே அவளை தன்பக்கம் திருப்பிக்கொண்டு நகைப் பெட்டியிலிருந்து கல்வளையலை எடுத்து ஹேமாவின் கைகளில் அணிவித்தான். "இதை வாங்க எத்தனை கடை ஏறி இறங்கினேன் தெரியுமா? விலை உயர்ந்த நகைகள் நிறைய இருக்கலாம். ஆனால் அழகாக, அம்சமாக இருக்கும் நகைகள் ரொம்ப அறிதாகத்தான் கிடைக்கும். இந்த செட்டை பார்த்ததும் நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி என்று நினைத்துக் கொண்டேன்." ரமேஷ் மளமளவென்று சொல்லி முடித்தான்.

ஹேமாவால் எதுவும் பேசமுடியவில்லை. பேசுவதற்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை.

ரமேஷ் ஹேமாவின் கைகளை பற்றி தன் கழுத்தில் மாலையாக போட்டுக் கொண்டே சொன்னான்.

"நான்கு நாட்கள் கழித்து வீட்டுக்கு வருகிறேன். நீயானால் வந்த அரைமணி கழித்து சாவகாசமாக தரிசனம் தருகிறாய்."

"நீ வந்ததுமே கருணா! என்றுதானே அழைத்தாய்."

"என்ன ஹேமா! பெற்ற மகள் மீதே பொறாமையா?"

"ரமேஷ்!" ஹேமா சரேலென்று தலையை உயர்த்தினாள். கண்களிலிருந்து வெளியேறப் போன கண்ணீரை வலுக்கட்டாயமாக அடக்கிக் கொண்டாள்.

ரமேஷ் ஹேமாவின் கைகளை விடுவித்துவிட்டு டையை கழட்டிக் கொண்டே கண்ணாடி அருகில் சென்றான்.

"ஹேமா! இரவு எட்டு மணிக்கு நம் வீட்டுக்கு முக்கியமான விருந்தாளிகள் இருவர் டின்னருக்கு வரப்போகிறார்கள். மாதுரிக்கு போன் செய்துவிட்டேன். வருவதாக சொல்லிவிட்டாள். விருந்தாளிகள் தங்களுடைய மனைவிகளையும் அழைத்து வருவார்கள்."

கட்டில்மீது இருந்த புடவையை எடுத்துக் கொள்ள போன ஹேமா சட்டென்று நின்றுவிட்டாள். அசல் விஷயம் இதுவா! தான் எல்லா நகைகளையும் பூட்டிக் கொண்டு அவன் பக்கத்தில் அலங்காரப் பதுமையை போல் நிற்க வேண்டும். அவர்கள் கேட்காமலேயே ரமேஷின் ஐஸ்வரித்தை பற்றி மௌனமாக பறைச்சாற்ற

வேண்டும். அவளுக்கு திடீரென்று சோர்வாக இருந்தது. சற்றுமுன் ரமேஷின் சொற்களால் கொஞ்சம் தேற்றிக் கொள்ளப் போன அவன் மனம் இரு மடங்கு பாரமாகிவிட்டது போல் இருந்தது.

விருந்தாளிகள் வரும் நேரமாகிவிட்டது. எளிமையான முறையில் அலங்கரித்துக் கொண்ட ஹேமாவை பார்த்ததும் ரமேஷின் புருவங்கள் முடிச்சேறின.

"இதென்ன கோலம்?"

"ரமேஷ்! என்னால் இப்போ அந்த அலங்காரம் எல்லாம் செய்து கொள்ள முடியாது. உடம்பு சரியாக இல்லை."

அவன் கண்களில் கோபம் எட்டிப் பார்த்தது.

"உனக்கு எப்பொழுதுதான் உடம்பு சரியாக இருந்தது? நான் ஏதாவது சொல்லும் முன்பே உனக்கு சோர்வு வந்துவிடும். உன்னைப் பற்றி எனக்கு நன்றாகவே தெரியும். சுந்தரத்தின் மூலமாகவோ, வேறு யார் மூலமாகவோ வரப்போகிற கெஸ்டுகளை பற்றி கேள்விப்பட்டிருப்பாய். அவர்கள்மீது உனக்கு வெறுப்பு ஏற்பட்டிருக்கும். அப்படித்தானே."

ஹேமா திடுக்கிட்டாள். அந்த விஷயம் உண்மைதான். வருகிறவர்களில் ஒருவர் கள்ளநோட்டு அச்சடித்து, ஜெயிலுக்கு போய்விட்டு வந்தவர். அதைக்கேட்டதும் ஹேமாவுக்கு உடல்மீது கம்பளிப் பூச்சி ஊறுவது போல் இருந்தது. சமுதாயத்திற்கு தீங்கு செய்பவர்களின் நிழல்கூட நம்மீது படக்கூடாது என்பது அவளுடைய எண்ணமாக இருந்தது.

"ஹேமா! உள்ளே போய் பத்தே நிமிடங்களில் நான் சொன்னது போல் அலங்கரித்துக் கொண்டு வா. ஒரு விஷயம் சொல்கிறேன். நன்றாக நினைவில் வைத்துக்கொள். உனக்கு விருப்பம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நீ நன்றாக டிரெஸ் செய்து கொள்ள வேண்டும். எனக்கு அழகான மனைவி இருக்கிறாள் என்றும், வேறு பெண்ணை ஏறெடுத்துப் பார்க்கும் தலையெழுத்து எனக்கு இல்லை என்றும் இந்த உலகத்திற்கு தெரிய வேண்டும். உனக்கு வெளியில் வருவதற்கு இஷ்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எனக்காக வந்துதான் ஆக வேண்டும்." அவன் குரலில் நயமோ, வேண்டுகோளோ எதுவும் இருக்கவில்லை. ஆணையிடுவது போல் இருந்த அந்த போக்கைக்

கண்டு அவள் திகைத்து போய்விட்டாள்.

பத்துநிமிடங்கள் கழித்து ஹேமா ரமேஷ் சொன்னதுபோல் அலங்கரித்துக் கொண்டு வந்தாள்.

அதற்கு முன்பே விருந்தாளிகள் வந்துவிட்டார்கள்.

ஹேமாவைப் பார்த்ததும் ரமேஷின் கண்களில் வெற்றிப் பெருமிதம் மின்னியது.

அவர்கள் இருந்த இரண்டுமணி நேரமும் ஹேமாவுக்கு முட்கள் மீது அமர்ந்திருப்பது போல் தோன்றியது.

கூண்டில் அடைப்பட்ட பறவையை போல் இந்த சடங்கு எப்போது முடியும்? எப்போ அறைக்கு திரும்பலாம் என்பது போல் நிமிடங்களை கணக்கிட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

37

பஞ்சாரா ஹில்ஸில், நவாபு பேரன் ஒருவன் பங்களாவை விற்கப் போவதாக செய்தி தெரிந்தது. ஊரில் இருக்கும் பெரிய பெரிய பணக்காரர்கள் அதை வாங்க போட்டி போட்டார்கள். ரமேஷ் அவர்களை எல்லோரையும் முந்திக் கொண்டு சொன்ன விலையை விட ஐம்பதாயிரம்கூட கொடுத்து அந்த வீட்டை வாங்கி விட்டான்.

இந்த விஷயத்திலும் ரமேஷ் ஹேமாவுக்கு இடையில் கருத்து வேற்றுமை வந்தது. விலைமுடிவாகி அட்வான்ஸ் கொடுப்பதற்கு முன் ரமேஷ் ஹேமாவை அழைத்துச் சென்று அந்த வீட்டைக் காண்பித்தான். விசாலமான தோட்டம். கோட்டையை போல் இருந்த காம்பவுண்ட் சுவர். முன் ஒரு காலத்தில் நாவபு வம்சத்தின் வைபவத்தை பறைச் சாற்றும் இரண்டு அடுக்கு மாளிகை. சுற்றிலும் பெரிய பெரிய மரங்கள். சரியான பராமரிப்பு இல்லாததால் காய்ந்து போன புல்வெளி.

கட்டடம் நல்ல உயரமான இடத்தில் அமைந்திருந்தது. வராண்டாவை அடைய வேண்டும் என்றால் இருபது படிகளை ஏறித்தான் போக வேண்டும். வராண்டாவுக்கு இருபக்கமும் கல்லில் செதுக்கப்பட்ட சிங்கங்கள் வாயைத் திறந்த நிலையில் இருந்தன. அவற்றை பார்த்ததும் ஹேமா மிரண்டுவிட்டாள். "அம்மாடி. யோவ்!"

என்றாள்.

ரமேஷ் சிரித்துவிட்டான். ஹேமாவின் தோள்களை பற்றி இழுத்து அதன் அருகில் சென்று வலுக்கட்டாயமாக அவள் கையை சிங்கத்தின் வாயில் வைத்தான். "கடித்துவிட்டதா?" என்றான்.

"கடித்திருக்கும். ஆனால் என் பக்கத்தில் வேறோரு சிங்கம் இருப்பதை பார்த்து விட்டு பயந்துவிட்டது போலும்" என்றாள்.

ரமேஷ் உரத்த குரலில் சிரித்துவிட்டான்.

"உண்மைதான் ஹேமா! என்னுடையதும் சிம்மராசிதானே. என்றாவது எனக்குக் கோபம் வருவதுபோல் நடந்து கொண்டாயோ, உன்னை அப்படியே விழுங்கிவிடுவேன்" என்று சொல்லிக் கொண்டே ஹேமாவின் தளிர் விரல்களை வாயில் வைத்துக் கொண்டு பற்களால் லேசாக கடித்தான்.

வராண்டாவைத் தாண்டி உள்ளே போனால் பெரிய ஹால் இருந்தது. மாடியில் இருக்கும் அறைகள் விசாலமாக இருந்தன. படுக்கை அறையுடன் ஒட்டிய குளியல் அறையை பார்த்துவிட்டு ஹேமா வியப்பு அடைந்தாள்.

"இவ்வளவு பெரிய குளியல் அறையா? ஒவ்வொன்றும் நாம் இப்போ குடியிருக்கும் வீட்டு அளவுக்கு பெரிதாக இருக்கே?"

"ஹேமா! இப்போ நாம் இருக்கும் வீடு மனிதர்கள் குடியிருப்பதற்காக கட்டியது. இது மனிதர்கள் சுகத்தை அனுபவிப்பதற்காக கட்டப்பட்டது. இந்த வீட்டுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது நம்வீடு குருவி கூட்டை போல் இருக்கிறது இல்லையா!"

"சுகம் என்பது வீட்டின் அளவை பொறுத்து இருக்காது. மனதில் தான் இருக்கும்." ஹேமா சொன்னாள்.

"சரி... சரி... இந்தப் படுக்கை அறைகளை பார்த்தாயா? வடக்கு பக்கமாக இருப்பது உன்னுடையது. அதை அடுத்த அறை என்னுடையது." ரமேஷ் உற்சாகமாக சொன்னான்.

"ஹேமா கண்களை பெரியதாக்கி பார்த்தாள். "என்ன? அரசமாளிகையை போல் இருக்கும் இந்த வீட்டில் எனக்கு தனியாக படுக்கை அறையா? இரவு வேளையில் எனக்கு பயமாக இருக்காதா? என்னால் நிம்மதியாக தூங்க முடியுமா?"

"சில்லியாக பேசாதே ஹேமா! இந்த இரண்டு அறைகளுக்கு நடுவில் இருக்கும் கதவைப் பார்த்தாயா? இது எப்போதும் திறந்து தான் இருக்கும். சுருணா உறங்கிப் போனதும் சத்தம் போடாமல் என்னிடம் வந்துவிடு. நீ இல்லாமல் எனக்கு மட்டும் தூக்கம் வருமா?"

ஹேமாவின் முகத்தில் வெட்கம் திரையாய் படிந்தது.

ரமேஷ் ஹேமாவின் தோள்களை பற்றி அவள் கண்களுக்குள் ஊடுருவதுபோல் பார்த்தான்.

"ஹேமா! எப்போதும் நீ இதே போல் ஏன் இருக்கக் கூடாது?

"என்ன?" வெட்கத்தை விடுவித்துக் கொள்ள முயற்சி செய்து கொண்டே கேட்டாள்.

"இதே போலவா? அப்படின்னா?"

"உற்சாகமாய்... என்னைத்தூண்டி விடுவதுபோல். நீ அப்படி இருந்தால் எனக்கு எவ்வளவு உற்சாகமாக இருக்கும் தெரியுமா? இந்த உலகத்தையே என் கைப்பிடிக்குள் அடக்கிவிட முடியும் என்ற அளவுக்கு தைரியம் வந்துவிடும். சில சமயம் உனக்கு என்ன ஆகி விடுமோ தெரியவில்லை. என் சக்தி முழுவதும் குன்றி விடுவதுபோல் நடந்துகொள்வாய்." ரமேஷ் சொன்னான்.

ஜன்னல் வழியாக உள்ளே விழுந்து கொண்டிருந்த மாலை வெயிலின் வெளிச்சத்தில் ரமேஷின் முகம் வித்தியாசமாக தென்பட்டது. அந்தச் சமயத்தில் அவனைப் பார்க்கும் போது அக்னி ஜ்வாலை நினைவுக்கு வந்தது. அவன் பார்வையில் இந்த உலகையே ஜெயிக்க முடியும் என்ற துணிச்சல் வெளிப்படையாக தெரிந்தது. ஹேமா அவனையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய உள்மனதில் எங்கேயோ "நான் அறிந்த ரமேஷ் இவன் இல்லை" என்று பயம் கலந்த உணர்வு ஏற்பட்டது. அவன் வாழ்க்கையின் ஓட்டத்திற்கு இணையாக தன்னால் ஓட முடியுமா? அந்த சக்தி தனக்கு இருக்கிறதா? ஹேமாவின் மனதில் ஆயிரம் சந்தேகங்கள்.

ரமேஷ் ஹேமாவின் கையை பிடித்துக்கொண்டு வீட்டை முழுவதுமாக சுற்றி காண்பித்தான். ரொம்ப நேரமாக நடந்ததில் ஹேமா

வுக்கு கால்கள் வலித்தன.

"எப்படி இருக்கு?" ரமேஷ் கேட்டான்.

பாலைவனத்தில் நூறு மைல் ஓடியதுபோல் இருக்கு." ஹேமா வேகவேகமாக மூச்சு எடுத்துக் கொண்டே படிகள்மீது உட்கார்ந்து கொண்டாள்.

"உண்மையைச் சொல்லு ஹேமா! உனக்கு பிடித்திருக்கிறதா இல்லையா?" அவன் குரலில் கொஞ்சம்கூட களைப்பு தெரியவில்லை.

"வீடு பார்ப்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. நாம் குடியிருப் பதற்கு என்றால் கொஞ்சம்கூட நன்றாக இல்லை."

"ஏன் அப்படி சொல்கிறாய்?"

"ஏனா? இது வீடா இல்லை அரசமாளிகையா? நீயோ நானோ ஒருவரை ஒருவர் அழைத்தால் காதில் விழுமா? திருடன் யாராவது வந்து சுழுத்தை நெறித்துக் கொன்றாலும் ஏன் என்று கேட்க நாதி யில்லை."

ஹேமாவின் முகத்தில் தெரிந்த கவலையை பார்த்ததும் ரமேஷ் சிரித்துவிட்டான்.

"அதுவா உன் சந்தேகம்? நாம் இந்த வீட்டுக்கு வந்த பிறகு ஒருவரை ஒருவர் கூப்பிட வேண்டிய அவசியம் என்ன இருக்கும்? எல்லாவற்றுக்கும் வேலைக்காரர்கள் இருப்பார்கள். இனி திருடர்கள் பற்றிய பயம் உனக்கு வேண்டவே வேண்டாம். நல்ல நாய் ஒன்று வாங்கி வளர்த்துக் கொண்டால் பிரச்னை தீர்ந்தது."

"எதுக்கு வந்த தொல்லை இது? இவ்வளவு பெரிய வீட்டை வாங்குவானேன்? அதை பராமரிக்க இவ்வளவு பாடுபடுவானேன்? எதுவும் வேண்டாம். இப்பொ நாம் இருக்கிற வீடே போதும். நிம்மதியாக இருப்போம்."

ரமேஷ் உடனே பதில் எதுவும் சொல்லவில்லை. ஒரு நிமிடம் தாமதித்து பிறகு ஹேமாவின் கையை தன் கையில் எடுத்துக் கொண்டான்.

"கொஞ்சம் என் பக்கத்திலிருந்து யோசிக்கக் கற்றுக் கொள்

ஹேமா! நான் கஷ்டங்களில் பிறந்து வளர்ந்தவன். அதனால்தானோ என்னவோ இந்த உலகில் இருக்கும் சுகங்களை எல்லம் அனுபவிக்க வேண்டும் என்ற தவிப்பு எனக்கு அதிகம். வாழ்க்கையில் முன்னேற வேண்டியது மனிதனின் தர்மம். மேலே இருக்கும் படியில் கால் வைத்த பிறகு கீழே இருக்கிற படியை விட்டுத்தான் ஆக வேண்டும். இருப்பதை வைத்துக் கொண்டு நிம்மதியாக இருந்துவிடுவோம் என்று சும்மா இருக்கும் மனிதர்களை நான் வெறுக்கிறேன். இவர் களால் வாழ்க்கையில் முன்னேற முடியாது. எதையும் விதியுடன் இணைத்து தங்களுடைய இயலாமையை மூடி மறைக்க பார்ப்பார் கள். நடைபிணமாக வாழ்ந்து வருவார்கள். உடலில் சக்தி இருக்கும் வரை மனிதன் கஷ்டப்பட வேண்டும். சந்தோஷத்தை அனுபிக்க வேண்டும். கஷ்டப்படுவது, மகிழ்ச்சியாக இருப்பது இரண்டுமே வாழ்க்கை என்ற நாணயத்தின் இரண்டு பக்கங்கள். லட்சியத்தை அடைந்த பிறகும் மனிதன் உழைப்பதை விட்டுவிடக் கூடாது. கஷ்டங்கள் வந்தாலும், துணிச்சலாக எதிர்த்து நிற்க வேண்டுமே தவிர களத்தை விட்டு ஓடக்கூடாது. வாழ்க்கை துடிப்பு நிறைந்ததாக இருக்க வேண்டும். உண்மையான சுகம் உழைப்பில்தான் இருக்கிறது."

ஹேமா கண் இமைக்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந் தாள்.

"புரிந்ததா?" என்றான்.

ரொம்ப வருடங்களுக்கு முன் ரமேஷ் ஹேமாவுக்கு படிப்பு சொல்லித் தரும்போது சரியாக இதே போல் நடக்கும். அவன் ஏதோ சீரியஸாக சொல்லிக் கொண்டிருப்பான். ஹேமா இந்த உலகத் தையே மறந்துவிட்டவள்போல் அவனையே பார்த்துக் கொண்டிருப் பாள். ஹேமாவை ஈர்த்தது அவன் சொல்லும் விஷயம் இல்லை. அவனுடைய உச்சரிப்பு, அதில் இருக்கும் தீவிரம், கண்களில் தெரியும் கம்பீரம்... எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு தன்னைத்தானே மறந்து போய்விடுவாள்.

"என்ன அப்படி பார்க்கிறாய்?" என்று கேட்டாள். அன்றும் இதே கேள்வியைத்தான் கேட்பான்.

ஹேமா தலையை குனிந்துகொண்டாள், சரியாக அன்று செய்தது போலவே.

ரமேஷுக்கும் பழைய நினைவுகள் வந்திருக்க வேண்டும். ஹேமாவின் காதைப் பிடித்து ஆட்டினான். "சொன்ன சொல்லை கேட்கும் வழக்கம் உனக்கு எப்போதுமே இருந்தது இல்லையே?" என்றான்.

ரொம்ப நாட்கள் கழித்து ஹேமாவுக்கு ரமேஷின் தொடுகையில் மகிழ்ச்சியும், உற்சாகமும் ஏற்பட்டன. மனம் முழுவதும் சந்தோஷமாக காற்றில் பறப்பது போல் இருந்தது. ஆனால் அந்த சந்தோஷம் ரொம்ப நேரத்திற்கு நீடிக்கவில்லை.

ரமேஷ் ஹேமா வீட்டுக்கு வந்தபோது மாதுரி கருணாவுடன் விளையாடிக் கொண்டு இருந்தாள். சுந்தரமும் இருந்தான்.

"தீரா! வந்து எத்தனை நேரமாகிறது?" ஹேமா கேட்டாள்.

"அரைமணிக்கு மேல் ஆகிவிட்டது அப்பாடா! நீ வந்து என்னைக் காப்பாற்றிவிட்டாய். சுந்தரம் அவருடைய ஆபிஸ் விஷயங்களை விடாமல் சொல்லி போரடித்துவிட்டார்." மாதுரி சொன்னாள்.

"அநியாயமான குற்றச்சாட்டு இது. நான் எவ்வளவு பழங்காலத்து ஆசாமியாக இருக்கிறேன் என்று விதவிதமான பெயர்களை சூட்டி என்னைக் கிண்டல் செய்ததோடு, இன்றைய நாகரீகத்தை பற்றி கிளாஸ் எடுத்து எனக்கு தலை சுற்றும் விதமாக செய்தது மாதுரி தான்." சுந்தரம் புகார் செய்வதுபோல் சொன்னான்.

ரமேஷ் வந்ததுமே கைளை நீட்டி மகளை தூக்கிக் கொண்டான். கருணாவுக்கு ஜலதோஷம் பிடித்து உடம்பு கதகதவென்று இருந்ததால் ஆயாவிடம் விட்டு சென்றிருந்தார்கள். ரமேஷ் மகளை மார்போடு அணைத்துக் கொண்ட விதத்தை பார்த்தால் மகளை பிரிந்து இரண்டு மணி நேரம் இல்லை, இரண்டு யுகங்கள் ஆகியிருக்கும் என்று நினைப்பார்கள்.

"ரமேஷ்! நான் உன்னைத் தேடித்தான் வந்தேன். உனக்கு பணம் எப்போ தேவைப்படும்?" மாதுரி கேட்டாள்.

"பணமா! என்ன விஷயம் தீரா?" ஹேமா கேட்டாள்.

மாதுரி ஹேமாவை வியப்புடன் பார்த்தாள். பிறகு ரமேஷை கேள்விக் குறியுடன் நோக்கினாள்.

ரமேஷின் முகம் ஒரு நிமிடம் களை இழந்தது உண்மைதான் என்றாலும் மகளை கொஞ்சும் சாக்கில் அதை மறைத்துவிட்டான்.

"என்ன ரமேஷ்? பதிலையே காணும்?" இரட்டிப்பது போல் கேட்டாள் ஹேமா.

"வீட்டுக்காக மாதுரியிடம் கடன் கேட்டிருந்தேன்."

"மார்வாடியிடம் வாங்கப் போவதாக சொல்லி இருந்தாயே?"

"அது போறாது."

"போறாது என்றால் வேறு இடத்தில் முயற்சி செய். எங்கேயும் கிடைக்கவில்லை என்றால் வீட்டை வாங்கும் முயற்சியை விட்டுவிடு. அவ்வளவுதானே தவிர, தீராவிடம் மட்டும் கடன் வாங்காதே. தீரா! உனக்கும் சொல்லி வைக்கிறேன். என்மீது உனக்குக் கொஞ்சமாவது மதிப்பு இருந்தால் ரமேஷுக்கு கடன் கொடுக்காதே. ரமேஷ்! உன்னிடமும் சொல்லி வைக்கிறேன். நீ வெளியில் என்ன வேண்டுமானாலும் செய்துகொள். தீராவை மட்டும் உன் தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளாதே. ஏற்கனவே நான்கு பேர் நாலுவிதமாக பேசிக்கொள்கிறார்கள். அதைக் கேட்கும்போது என்னால் தலை நிமிர்ந்து நடக்க முடியவில்லை."

திடீரென்று ஹேமா ஆவேசமாக இப்படிச் சொன்னதும் எல்லோரும் வியப்புடன் வாயடைத்து விட்டதுபோல் நின்று விட்டார்கள்.

ரமேஷ் கையிலிருந்த மகளை பக்கத்தில் இருந்த ஆயாவிடம் ஒப்படைத்துவிட்டு எழுந்து நின்றுகொண்டான்.

அந்த நிமிடத்தில் அவன் முகத்தைப் பார்க்கும் போது மாதுரிக்கும், சுந்தரத்திற்கும் பயமாக இருந்தது.

ஹேமாவின் அருகில் சென்ற ரமேஷ் அவள் முகத்தை நேராக பார்த்துக்கொண்டே கேட்டான்.

"நீ சொல்ல வந்ததுதான் என்ன? உன் மனதில் என்ன இருக்கிறதென்று சுற்றி வளைக்காமல் நேராக சொல்லிவிடு."

"வெளி உலகில் நீ எத்தனை வேண்டுமானாலும் கொடுக்கல் வாங்கல்களை வைத்துக்கொள். ஆனால் தீராவை என் சினேகிதியாக

இருக்கவிடு. உன் காரணமாக எங்கள் நட்பில் விரிசல் ஏற்படும் ஆபத்தை ஏற்படுத்தாதே. பொருளை ஈட்டும் முயற்சியில் மூழ்கி விட்ட உனக்கு மற்றவர்கள் பேசிக்கொள்வது காதில் விழ வில்லையோ என்னவோ. தீராவுக்கு திருமணம் ஆகாமல் இருப்ப தற்கு காரணம் நீதான் என்றும், இதற்கு நானும் ஊக்கம் கொடுப்ப தாகவும் பேசிக் கொள்கிறார்கள். இதையெல்லாம் கேட்கும்போது எனக்கு செத்துப் போய்விடலாம் என்று தோன்றுகிறது. தீரா என் னுடைய கினேகிதி மட்டும்தான் என்று சொன்னால் மறைமுகமாக சிரித்துக் கொள்கிறார்கள்."

பதில் சொல்ல முடியாதவன் போல் ரமேஷ் நின்றுவிட்டான்.

மாதுரியின் முகம் வெளிறிப்போய் விட்டது. சட்டென்று எழுந்து டீபாய் மீது வைத்திருந்த ஹேண்ட் பேக்கை எடுத்துக் கொண்டு "சுந்தரம் சார்! நான் கிளம்புகிறேன். சினிமாவுக்கு போகப் போவதாக சொன்னீர்களே. வாங்க. வழியில் இறக்கிவிட்டு போகிறேன்" என்றாள்.

"மாதுரி! போய்விடாதே. உட்கார்ந்துகொள்." ரமேஷின் குரலில் இயலாமை வெளிப்பட்டது.

"தாங்க்ஸ். கணவன் மனைவி சண்டையில் என்னை இழுக்காதீர் கள். ஹேமா! நான் வருவது உனக்குக் கஷ்டமாக இருந்தால் சொல்லு. வராமல் இருந்து விடுகிறேன்."

"தீரா! என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாதே. உன்னையும் உன்னுடைய நட்பையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று தான் தவிக்கிறேன்."

மாதுரி முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

சுந்தரம் செருப்புகளை மாட்டிக் கொண்டே "கிளம்பு மாதுரி" என்றான்.

மாதுரி போய் வருகிறேன் என்றுகூட சொல்லவில்லை.

அடுத்த நிமிடம் இருவரும் கிளம்பிக்போய் விட்டார்கள்.

அவர்கள் போனபிறகு சிவந்துபோன முகத்துடன் ஹேமா பக்கம் திரும்பிய ரமேஷ் "உனக்கு மூளை இருக்கிறதா!!!" என்றான்.

"இருக்கு. இருப்பதால்தான் இந்த விஷவளையத்திலிருந்து உன்னை, உன்னிடமிருந்து தீராவையும் காப்பாற்ற வேண்டும் என்று நினைக்கிறேன்."

"யாரோ ஏதோ உளறினால் அதை அந்தப் பெண்ணின் முன்னிலையில் சொல்வாயா?"

"அந்தப் பெண்ணின் முன்னிலையில் நான் சொல்வது இருக் கட்டும். அவளுடைய அம்மாவே அவள் முன்னாடி கேள்வி கேட்டு என்னை உண்டு இல்லை என்று ஆக்கிவிட்டாள்."

"ஜெயம்மாவா? எப்பொ?"

"கருணாவின் பிறந்த நாளுக்காக அழைக்கப் போன போது. கினேகிதி என்று கூடப்பார்க்காமல் நான் அவளுடைய வாழ்க்கையை நாசமாக்கிக் கொண்டிருக்கிறேனாம்."

ரமேஷின் கண்கள் அக்னிக் கோளங்களாக ஜொலித்துக் கொண்டிருந்தன.

"இந்த விஷயத்தை அப்பொதே என்னிடம் ஏன் சொல்ல வில்லை?"

"கேட்கும் பொறுமை உனக்கு எங்கே இருக்கு? மாதுரியாவது கவனமாக இருப்பாள் என்று நினைத்தேன். தாயின் பேச்சை விளையாட்டாக எடுத்துக் கொண்டுவிட்டாள்."

ரமேஷ் ஏதோ சொல்லப் போனான். அதற்குள் பரமேஸ்வரன் அங்கே வந்தார்.

"சாரீ! உங்களை தேடிக் கொண்டு யாரோ வந்திருக்கிறார்கள். நீங்க ஒருதடவை சைட்டுக்கு வர்றீங்களா?" என்றான்.

ரமேஷின் கண்கள் ஹேமாவின் முகத்தின் மீதே நிலைத்திருந்தன.

பிறகு பரமேஸ்வரன் பக்கம் திரும்பி "கிளம்புவோம்" என்றான்.

இருவரும் கிளம்பிப் போனார்கள்.

ஹேமாவின் மனம் என்னவோ போலாகிவிட்டது. எப்படியாவது ரமேஷை அந்த வீட்டை வாங்க விடாமல் செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

38

ரமேஷ் எத்தனையோ முயற்சி செய்து, எல்லோரையும் முந்தி கொண்டு, வாங்க வேண்டும் என்று நினைத்த அந்த வீட்டை, கடைசி நிமிடத்தில் மாதுரி வாங்கிவிட்டது எல்லோருக்கும் வியப்பை ஏற்படுத்தியது. அந்த வீட்டை ஆஸ்பத்திரியாக மாற்றப் போவதாக மாதுரி அறிவித்தாள்.

ரமேஷ் அந்த வீட்டை வாங்கும் முயற்சியிலிருந்து விலகிக் கொண்டான் என்று தெரிந்ததும், ஹேமா எத்தனை வியப்பு அடைந்தாளோ, அதற்கு இருமடங்கு மகிழ்ச்சியும் அடைந்தாள்.

"ரமேஷ்! கடைசி நிமிடத்தில் உன் எண்ணத்தை மாற்றிக்கொள்வானேன்?" கணவனை கேட்காமல் அவளால் இருக்க முடியவில்லை.

"பல காரணங்கள் இருக்கு ஹேமா. அதில் ஒன்று, அந்த வீட்டை வாங்குவதை நீ விரும்பாதது." கட்டில்மீது படுத்துக் கொண்டே, புத்தகத்தை புரட்டிக் கொண்டிருந்த ரமேஷ் தலையை உயர்த்தாமலேயே சொன்னான்.

ஹேமா அவன் கையிலிருந்த புகுத்தகத்தை பிடுங்கி பக்கத்தில் வைத்துவிட்டு கட்டில்மீது அமர்ந்து கொண்டாள்.

"உண்மையாகவா?" என்று கேட்டாள்.

"பல காரணங்களில் அதுவும் ஒன்று."

"மற்ற காரணங்கள் எதுவாக இருந்தாலும் என்னுடைய விருப்பமின்மை உனக்கு முக்கியமாக தோன்றியது எனக்கு சந்தோஷமாக இருக்கிறது."

"ரமேஷ் வலதுகையை உயர்த்தி தலைக்கு அண்டை கொடுத்தான். எத்தனையோ நாட்கள் கழித்து உரிமையாக தன் அருகில் வந்து அமர்ந்து கொண்ட மனைவியை ஒரு நிமிடம் கவனமாக பார்த்தான்.

"தாங்க்ஸ், எனக்கு மகிழ்ச்சி தரும் விதமாக நடந்து கொள்வதை நீயும் பழக்கப்படுத்திக் கொண்டால் நன்றாக இருக்கும் இல்லையா?" ரமேஷ் சொன்னான்.

மகிழ்ச்சியுடன் ஒளிவீசிக் கொண்டிருந்த ஹேமாவின் முகம் சட்டென்று மாறியது. தலையை குனிந்து கொண்டே "எனக்குத்

தெரிந்த வரையில் உனக்கு அதிருப்தி ஏற்படும் எந்த காரியமும் நான் செய்யவில்லை. ஒருவேளை எனக்கே தெரியாமல் ஏதாவது நடந்தால் அதை சுட்டிக்காட்டி என்னை சரிப்படுத்துவது உன்னுடைய கடமை" தாழ்ந்த குரலில் சொன்னாள்.

"உண்மையாகத்தான் சொல்கிறாயா?"

"பின்னே இல்லையா?" ஹேமா கண்களை உயர்த்தி பார்த்தாள். அந்தக் கண்களில் அன்பும் அபிமானமும் போட்டியிட்டன.

"ஒப்புக் கொள்கிறேன் ஹேமா!" மனைவியின் கையை தன் கையில் எடுத்துக் கொண்டே சொன்னான்.

"என் நடவடிக்கைகளில் எது உனக்கு பிடிக்கவில்லை?" ஹேமாவின் குரலில் ரோஷம் பிரதிபலித்தது.

"ஒன்று இல்லை. ஆயிரம் இருக்கு. எடுத்துக் காட்டுக்கு ஒன்று சொல்லட்டுமா? உலகத்தில் இருக்கும் பெண்களில் நூற்றுக்கு தொண்ணூறு பேர் கணவன் எத்தனை கொண்டு வந்தாலும் அது வேண்டும் இது வேண்டும் என்று சாதிப்பார்கள். நீயோ அதற்கு நேர் மாறாக நான் எது செய்யப் போனாலும் - வேண்டாம் என்று தடுத்துவிடுகிறாய். ஒவ்வொரு விஷயத்திலும் முட்டுக்கட்டை போடுகிறாய்"

"அப்படி சொல்வதற்கு பின்னால் இருக்கும் எண்ணம் என்னவென்று உனக்குத் தெரியாதா? உனக்கு எந்த இடைஞ்சலும் ஏற்படக்கூடாது என்றுதான் நினைக்கிறேன்."

"உனக்குத் தெரியாது ஹேமா. வெளி உலகத்தில் ஆண்களுக்குக் கிடைக்கும் அங்கீகாரம் கூடுதல் ஆக ஆக அவனுடைய மகிழ்ச்சியும் அதிகரிக்கும். அந்த மகிழ்ச்சிக்காக அவன் எது வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருப்பான்" என்றான்.

"சரி. இன்றிலிருந்து எல்லாமே உன் இஷ்டம். நான் எதையும் மறுக்கப் போவதில்லை."

"சத்தியமாக சொல்கிறாயா?"

ஹேமா தலையை அசைத்தாள்.

"வாழ்க்கையில் நாம் சந்தோஷமாக இருப்பதற்காக நான் செய்யும் முயற்சிகளை பற்றி உன்னிடம் கலந்து பேச வேண்டிய அவசிய

மில்லையே. எல்லாவற்றுக்கும் உன் சம்மதம் இருப்பதாக எடுத்துக் கொள்ளலாம் இல்லையா?"

"தாராளமாக எடுத்துக்கொள்ளலாம்."

ரமேஷ் மனைவியை இரண்டு கரங்களாலேயும் பற்றி அருகில் இழுத்துக் கொண்டான்.

"ஹேமா! நான் எது செய்தாலும் உனக்காக... கருணாவுக்காக. மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறாமைப்படும் அளவுக்கு யாருமே எட்டமுடியாத உயரத்தில் உங்களை உட்கார வைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய தவிப்பு" என்றான்.

கிட்டத்தட்ட ஒருவாரம் கழித்து...

ரமேஷ் வீட்டுக்கு வரும்போதே "ஹேமா! சீக்கிரமாக ரெடி ஆக வேண்டும். பத்து நிமிடங்களுக்கு மேல் தரமாட்டேன்" என்றான்.

கடந்த நான்கு நாட்களாக ரமேஷ் மூச்சுகூட விடமுடியாத அளவுக்கு ஏதோ வேலையில் பிசியாக இருந்தான்.

இன்று அவனுடைய முகம் களைப்பாக தென்பட்டாலும் கண்கள் மட்டும் உற்சாகமாக, எதையோ சாதித்து விட்டதுபோல் மின்னிக் கொண்டிருந்தன.

"கருணா எங்கே? ஆயா! குழந்தைக்கு உடைகளை மாற்றி ஷூக்களை மாட்டிவிடு." ஆணையிடுவது போல் சொன்னான்.

அவனுடைய உற்சாகத்தை, மகிழ்ச்சியை பார்த்த பிறகு "எங்கே? எதற்கு?" என்று கேட்கவில்லை. அவன் சொன்ன நேரத்திற்கு முன்பே மளமளவென்று தயாராகி விட்டாள். கருணா தந்தையின் சுண்டு விரலை பிடித்துக்கொண்டு ரெடியாக நின்றிருந்தாள்.

ரமேஷ் ஹேமாவை காரில் ஏறச்சொன்னான். ஹேமா அப் போதும் எங்கே என்று கேட்கவில்லை.

மாலை வேளை. சில்லென்று காற்று வீசியது. கருணா இருவருக் கும் நடுவில் உட்கார்ந்திருந்தாள். காரில் போகும்போதே ஹேமாவின் மனம் மகிழ்ச்சியால் பொங்கியது. கடந்த ஒரு வாரமாகவே தான் திருப்தியாக இருப்பது போல் உணர்ந்தாள்.

'இனிமேல் எந்த விஷயத்திற்கும் ரமேஷுடன் சண்டை போடக்

கூடாது. வாழ்க்கை நிம்மதியாக கழிய வேண்டுமென்றால் ஒருவரு டைய எண்ணங்களை மற்றவர்கள் புரிந்து கொள்வது ரொம்ப முக்கியம்' என்று நினைத்துக் கொண்டாள்.

ரமேஷ் டிரைவ் செய்து கொண்டிருந்த கார் கடைத் தெருவுகளை தாண்டி, திரும்பி ஹேமாவுக்கு நன்கு அறிமுகமான தெருவுக்குள் நுழைந்தது. வேறு ஏதோ நினைவுகளில் மூழ்கியிருந்த ஹேமா அந்த தெருவை பார்த்ததும் திடுக்கிட்டாள்.

"ரமேஷ்! இந்தப் பக்கம் எங்கே?" என்றாள்.

"பார்க்கத்தானே போகிறாய். முன்னாடியே தெரிந்துகொண்டு என்ன செய்யப் போகிறாய்?" ரமேஷ் புன்முறுவலுடன் எதிர்க் கேள்வி கேட்டான்.

கார் சரியாக நாகபூஷணத்தின் பங்களா கேட் முன்னால் வந்து நின்றது.

"இதென்ன? இவர்களுடைய வீட்டுக்கு நாம் இப்போ வருவா னேன்?" ஹேமா குழப்பமாக பார்த்தாள்.

மனைவி கேட்டதற்கு ரமேஷ் பதில் சொல்லவில்லை. ஹாரனை அடித்தான். தோட்டக்காரனை போல் தென்பட்ட ஒருவன் வேகமாக ஓடிவந்து கேட்டைத் திறந்தான். கார் வேகமாக உள்ளே சென்று போர்டிகோவில் நின்றது. மாலி பணிவாக குனிந்து ஹேமா இறங்குவதற்காக கார் கதவைத் திற்நதான்.

ரமேஷ் காரிலிருந்து இறங்கினான். சட்டைப் பையிலிருந்து சாவிக் கொத்தை எடுத்து மாலியிடம் நீட்டிக் கொண்டே "வீட்டுக் கதவுகளை திறந்து எல்லா அறைகளிலும் விளக்கை போடு" என்றான்.

"இதென்ன? இந்த வீட்டுக்கு நாம் ஏன் வந்திருக்கிறோம்?' தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவள் போல் ஹேமா இன்ன மும் குழப்பமாக பார்த்துக் கொண்டிருந்தாள்.

ரமேஷ் ஹேமாவின் அருகில் வந்தான். "மிஸஸ் ஹேமா சந்திரா! இப்போ இது நாகபூஷணத்தின் வீடு இல்லை. பிரபல வியாபாரி, ரமேஷ் சந்திரனின் இல்லம். இனிமேல் நீதான் இதனுடைய யஜமானி."

"ரமேஷ்!" ஹேமாவின் கண்கள் அகலமாக விரிந்தன.

கருணா தாயின் மடியிலிருந்து இறங்கி தந்தையிடம் ஓடினாள்.

"நாம் யார் வீட்டுக்கு வந்திருக்கிறோம் டாடி?"

"நம் வீட்டுக்குத்தான் கண்ணம்மா. இது உன்னுடைய வீடு."

மாலி எல்லா கதவுகளையும் திறந்துவிட்டான். ஒவ்வொரு அறையிலும் விளக்கு எரிந்தது.

ஹேமா இந்த வீட்டை தொலைவிலிருந்து ஓரிருமுறை பார்த்திருக்கிறாளே தவிர எப்போதும் உள்ளே போனது இல்லை.

'ரமேஷ்! மகளை தூக்கிக் கொண்டு ஹேமா பக்கம் கையை ஸ்டைலாக நீட்டினான். "தேவியார் காரிலிருந்து இறங்குவீர்களா?" என்றான். அவன் முகம் கம்பீரமாக, மகிழ்ச்சியாக, பெருமையாக பல உணர்வுகளுடன் வேடிக்கையாக இருந்தது.

"ரமேஷ்! நீ சொல்வது எனக்கு ஒன்றும் புரியவில்லை." ஹேமாவின் முகம் வெளிறிப் போய் இருந்தது.

"புரியும் விதமாக நான் சொல்கிறேன். மாதுரி தன்னுடைய பெரியப்பா மீது போட்ட வழக்கில் ஜெயித்தாள். நாகபூஷணத்திடம் பணம் இல்லாததால் தன்னுடைய வீட்டை மாதுரியிடம் ஒப்படைத்துவிட்டார். தந்தையின் பெயரில் திறக்கப் போகும் ஆஸ்பத்திரிக்கு தேவையான பொருட்களை வாங்குவதற்காக மாதுரிக்கு நிறைய பணம் தேவைப்பட்டதால் அந்த வீட்டை விற்க முன் வந்தாள். நல்ல ஏரியா. அழகான வீடு. நாம் ஏன் வாங்கக்கூடாது என்று தோன்றியது. வாங்கிவிட்டேன்." கடைசி வார்த்தைகளை உச்சரிக்கும் போது ஏதோ பகைமை, தீவிரம் வெளிப்பட்டன.

சுய நினைவு அற்றவள் போல் ஹேமா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'ரமேஷ் இந்த வீட்டை வாங்கியிருக்கிறானா? இந்த வீட்டில் தான் குடியிருக்கப் போகிறானா? ரமேஷ் மூளை இருந்துதான் இந்த காரியம் செய்திருக்கிறானா?' ஹேமாவின் காதுகளில் பேரிரைச்சல் கேட்கத் தொடங்கியது. எப்போதோ நடந்த நிகழ்ச்சிகள் கண் முன்னால் திரைப்படமாக ஓடின. நாகபூஷணம் தன்னுடைய மகன் சுதாகரை அழைத்துக் கொண்டு நிச்சயதாம்பூலம் செய்வதற்காக

வந்த காட்சி நிழலாக தோன்றி மறைந்தது.

காரிலிருந்து இறங்குவதற்காக கையை நீட்டிக்கொண்டிருந்த ரமேஷின் உருவம் மறைந்து அந்த இடத்தில் சுதாகர் நிற்பதுபோல் தோன்றியது. ஹேமாவின் இதயம் பாரமாகிவிட்டது. இந்த ஊரில் ஆயிரக்கணக்கான வீடுகள் இருக்கும்போது ரமேஷுக்கு இந்தவீடு தான் வேண்டியிருந்ததா?

ஹேமாவுக்கு திடீரென்று புரிந்துவிட்டது. நவாபின் பங்களாவை வாங்க வேண்டுமென்று மிகவும் விரும்பிய ரமேஷ், திடீரென்று அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டது... மாதுரி அந்த வீட்டை வாங்கும் விதமாக செய்தது... திட்டம் போட்டுத்தான் ரமேஷ் இந்த காரியங்களை செய்திருக்கிறான் என்று ஹேமாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

39

ரமேஷ் கிரகபிரவேசத்தை ரொம்ப ஆடம்பரமாக ஏற்பாடுகளை செய்து, எல்லோருடைய பாராட்டுகளையும் பெற்றுக் கொண்டான். ஊரில் கொஞ்சம் செல்வாக்கு இருந்த அனைவரையும் அழைத்தான். ஹேமா பக்கத்து உறவினர்களை அழைக்கவில்லை.

வீட்டு விஷயத்தை சாதாரணமாக எடுத்துக் கொள்வதற்காக ஹேமா சக்திளை திரட்டிக் கொண்டாள். மனதில் இல்லாத உற்சாகத்தை வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொண்டு கிரகபிரவேசத்திற்கான ஏற்பாடுகளை மேற்பார்வையிட்டாள். இந்த வீடு தனக்கு வேதனையை அளித்திருக்கலாம். ஆனால் அதை ரமேஷ் கொஞ்சம்கூட உணர்ந்துவிடாத வகையில், உள்மனதிலேயே புதைத்துவிட நிச்சயித்துக் கொண்டாள்.

கிரகபிரவேசத்திறகு நான்கு நாட்கள் இருக்கும்போது ஹேமா, ரமேஷ் அருகில் வந்தாள்.

"கருணாவை அழைத்துக் கொண்டு நம் இருவரும் திருக்காட்டுப் பள்ளிக்கு போய்வரலாம். அண்ணன், அண்ணி கட்டாயம் வருவார்கள்" என்றாள்.

ரமேஷ் உடனே பதில் சொல்லவில்லை. கருணா பிறந்தபோது, நடந்ததை எல்லாம் மறந்துவிட்டு, பெயர் சூட்டு விழாவுக்கு வந்து

குழந்தையை ஆசிர்வதிக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து ரமேஷ் சேஷாத்ரிக்குக் கடிதம் எழுதியிருந்தான். சேஷாத்ரி பதில் எழுதவில்லை, பதினைந்து நாட்கள் கழித்து ரங்கநாயகி ஹேமாவுக்குக் கடிதம் எழுதியிருந்தாள். வீட்டைவிட்டு வரமுடியாத சூழ்நிலையில் தான் இருப்பதாகவும், குழந்தைக்கு தங்களுடைய ஆசீர்வாதங்கள் என்று எழுதியிருந்தாள். அந்தக் கடிதம் ரமேஷுக்கு ஏமாற்றத்தை அளித்தது. சேஷாத்ரி பெயருக்கு இரண்டு வரிகளை எழுதியிருந்தாலும் அவன் கருணாவையும், ஹேமாவையும் அழைத்துக் கொண்டு போயிருப்பான்.

அண்ணன் அண்ணி விழாவுக்கு வந்தால் நன்றாக இருக்குமென்று ஹேமா முணுமுணுத்துக் கொண்டு இருந்ததை, வேலை மும்மரத்தில் காதில் வாங்காததுபோல் ரமேஷ் நடித்தாலும், அவன் உள் மனதில் அந்த விஷயம் துளைத்துக் கொண்டுதான் இருந்தது. அவர்களை அழைத்துக் கொண்டு வந்து இந்த வீட்டை, இந்த வைபவத்தை காண்பித்து 'என்னைத் திருமணம் செய்து கொண்டதற்கு ஹேமாவை துரதிர்ஷ்டம் பிடித்தவள் என்று சொன்னீர்களே! இப்பொ என்ன சொல்கிறீர்கள்' என்று சவால் விடுவதுபோல் கேட்க வேண்டும் என்று தோன்றியது.

விழாவுக்கு இன்னும் இரண்டு நாட்கள் இருக்கும்போது ரமேஷ் அன்று காலையில் "திருக்காட்டுப் பள்ளிக்கு போய் உன் அண்ணன் அண்ணியை அழைத்து வருகிறேன்" என்று சொன்னபோது ஹேமாவுக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

ரமேஷ் கிளம்பிப் போனான். அவன் போனால் எப்படியாவது அண்ணன் அண்ணியை அழைத்துக் கொண்டு வருவான் என்று ஹேமா ஆழமாக நம்பினாள்.

ஐந்து வருடங்கள் எவ்வளவு சீக்கிரமாக கழிந்துவிட்டன! எல்லாமே நேற்று நடந்ததுபோல் இருக்கிறது.

கருணாவை அருகில் உட்கார வைத்துக் கொண்டு "மாமாவும், மாமியும் வரப் போகிறார்கள். மாமா எவ்வளவு நல்லவர் தெரியுமா? உனக்கு நிறை கதைகளை சொல்லுவார். மாமி உனக்காக நிறைய இனிப்புகளை செய்துகொண்டு வருவாள் தெரியுமா. "ஒவ்வொரு விஷயமும் மகளின் மனதில் பதிய வேண்டும் என்பது போல்

சொல்லிக் கொண்டிருந்தாள்.

மாலையாகிவிட்டது. வீட்டின் முன்னால் கார்வந்து நின்றது. இதயம் வேகமாக துடிக்க ஹேமா மகளையும் தூக்கிக் கொண்டு வெளியில் வந்தாள். காரிலிருந்து ரமேஷ் மட்டும் கீழே இறங்கினான். அவன் தலையில் கட்டு போடப்பட்டிருந்தது.

"என்ன? என்ன ஆகிவிட்டது?" ஹேமா ஓட்டமும் நடையுமாக அவன் அருகில் சென்றாள்.

"அழையாத விருந்தாளியாக நான் போனதற்கு உன் அண்ணன் கொடுத்த பரிசு."

"என்ன நடந்தது? உண்மையைச் சொல்லு," அண்ணன் அண்ணி வரவில்லையே என்ற ஏமாற்றம் ஒரு பக்கம் வாட்டினாலும் பதட்டத்துடன் கேட்டாள்.

"சொல்வதற்கு எதுவும் இல்லை ஹேமா! இதுநாள் வரையில் அவர்களுடைய பிடிவாதத்தை பொருட்படுத்தாமல் மதித்து வந்தேன். இனி மேலும் அப்படி இருக்க முடியாது. நீ உன் கணவனை மதிப்பவளாக இருந்தால் அவர்களை மறந்துவிடு. திருமணம் முடிந்து ஐந்து வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. குழந்தையும் பிறந்து வளர்ந்து வருகிறாள். இன்னமும் உண் அண்ணன் தன்னுடைய முட்டாள் தனமான பிடிவாதத்தை விடுவதாக இல்லை. நமக்கு நடந்தது திருமணமே இல்லையாம். நீ என்னுடன் ஓடி வந்துவிட்டாயாம். இல்லை- இல்லை- நான்தான் உன்னை இழுத்துக் கொண்டு ஓடிவிட்டேனாம். இனி போதும். என்னுடைய பொறுமைக்கும் ஒரு எல்லை இருக்கிறது. அவர்கள் உனக்கு எப்படிப்பட்ட இடத்தில் திருமணம் செய்ய வேண்டும் என்று நினைத்திருந்தார்களோ, அந்த நிலையை நான் எட்டிய பிறகும் அவர்கள் என்னை ஏற்றுக் கொள்ள மறுத்தால் என்னாலும் அவர்களை மன்னிக்க முடியாது."

ஹேமா கவலையுடன் அப்படியே நின்றுவிட்டாள். அண்ணன் அண்ணி வருவார்கள் என்று மனதில் ஏதோ ஒரு மூலையில் இருந்த சின்ன எதிர்பார்ப்பும் அடியோடு நசிந்துபோய் விட்டது.

ரமேஷ் நிறைய செலவு செய்து வீட்டை மேலும் மெரு

கேற்றினான். வீட்டை அலங்கரிக்கும் விஷயத்தில் மாதுரி ரமேஷுக்கு ரொம்ப உதவியாக இருந்தாள். வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்குவதில், திரைச்சீலைகளை தேர்வு செய்வதில், தரை விரிப்புகளை முடிவு செய்வதில்.... அப்படி ஒவ்வொரு சின்ன விஷயத்திலும் மாதுரி ரமேஷுடன் அலைந்து திரிந்து அவனுடைய வேலைகளை பகிர்ந்து கொண்டாள். சிலசமயம் ஹேமா கூட போனாலும், பெரும்பாலான நேரங்களில் ஏதாவது சாக்கு சொல்லி கடைக்கு போவதை தவிர்த்து விட்டாள்.

கிரகபிரவேசத்தன்று அணிந்து கொள்வதற்காக ரமேஷ் பாம்பேக்கு சென்று ஹேமாவுக்காக விலை உயர்ந்த புடவையை நகைகளை வாங்கினான்.

"வீட்டுடன் சேர்த்து என்னையும் அலங்கரிக்க வேண்டுமென்று நினைக்கிறாயா?" வலிய வரவழைத்துக் கொண்ட சிரிப்புடன் கேட்டாள் ஹேமா.

"இவை உனக்கு பிடிக்கவில்லையா ஹேமா!"

"ஏற்கனவே லாக்கர் நிறைய நகைகளும், பீரோ நிறைய புடவைகளும் இருப்பது உனக்குத் தெரியும். நானோ அதிகமாக நகைகளை அணிந்து கொள்ள மாட்டேன். அதுவும் உனக்குத் தெரியும். அப்படி இருக்கும்போது இவ்வளவு பணத்தை செலவுச் செய்து இந்த நகைகளை, புடவையை...."

"பணத்தை பற்றி பேச வேண்டாம் என்றேனே?" ரமேஷின் குரல் திடீரென்று உயர்ந்தது.

"ஆமாம். நான் எதுவும் பேசக் கூடாது. அப்படி செய்யலாமா என்று உன்னைக் கேட்கவும் கூடாது. நீ ஆட்டுவிக்கும் பொம்மையை போல் உன் பின்னாடியே சுற்றிக் கொண்டிருக்க வேண்டும் நீ வாங்கித் தரும் புடவைகளை, நகைகளை பார்த்துப் பார்த்து சந்தோஷப்பட்டுக் கொண்டு இருக்க வேண்டும் அப்படித்தானே!"

"நீ என்னை புரிந்து கொண்டது இவ்வளவுதானா? உன் மூளையில் வெறும் களிமண்தான் இருக்கு என்று முன்னாடியே தெரிந்திருந்தால், உன்னைத் திருமணம் செய்து கொண்டிருக்க மாட்டேன்" விளையாட்டாக சொன்னான்.

"இப்பொ மட்டும் என்ன மிஞ்சப்போய் விட்டது? விட்டுவிடு."

ரமேஷ் தீவிரமாக பார்த்தான். அவன் கண்களில் வேதனை திரையாக படிந்து மறைந்தது.

"விட்டு விடலாம்தான். ஆனால் நான் உன்னை அனுப்பி விட்டால் ஆதரிக்க யாரும் இல்லை. உன் அண்ணன் அண்ணி உன்னை வாசற்படி ஏறவிடமாட்டார்கள். அதான் உன்னை வைத்துக் கொண்டிருக்கிறேன். போதுமா!"

இமைகள் படபடக்க ஹேமா அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள். இதயமே இல்லாததுபோல் வெளிறிப் போயிருந்த ஹேமாவின் முகத்தை பார்க்கும்போது ரமேஷுக்கு என்னவோ போல் இருந்தது.

அறையிலிருந்து போகப் போனவன் பின்னால் திரும்பி சொன்னான். "ஹேமா உன்னுடைய அதிருப்திக்குக் காரணம் என்னவென்று எனக்குத் தெரியும். உன் அண்ணன் அண்ணி வந்திருந்தால் நீ இப்படி சோர்வுடன் இருந்திருப்பாயா? அவர்கள் வரவில்லை என்ற வேதனையை மனதில் வைத்துக் கொண்டு எனக்கு வருத்தம் ஏற்படும் விதமாக நடந்து கொள்ளாதே. அதோடு வேலைகளில் நான் பிஸியாக இருப்பதால் நாம் இருவரும் சேர்ந்து இருக்கும் நேரம் குறைந்து கொண்டே போகிறது. கிடைத்த இந்த குறைவான நேரத்தில் என்னுடன் சந்தோஷமாக இரு. என்னையும் நிம்மதியாக இருக்கவிடு. தேவையற்ற பிரச்னைகளை கிளப்பி எனக்கு எரிச்சல் ஏற்படும் விதமாக நடந்து கொள்ளாதே" என்று சொல்லி விட்டு போய் விட்டான்.

கிரகபிரவேசத்தன்று ஹேமாவுக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் ரமேஷ் வாங்கி வந்த புடவையை உடுத்திக் கொண்டு நகைகளை அணிந்து கொண்டாள். மாதுரி கொடுத்த அறிவுரையின்படி ரமேஷ் ப்யூட்டி பார்லரிலிருந்து ஒரு அம்மாளை வரவழைத்தான். ஹேமாவின் நீளமான கூந்தலை அழகாக கொண்டை போட்டு இரட்டை ரோஜாக்களை சிகையில் சூட்டினாள்.

புதுவிதமான ஜோடனையில் ஹேமாவின் தோற்றமே மாறி விட்டது. மாதுரி ஹேமாவின் இரண்டு கைகளையும் பற்றி குலுக்கினாள். "வாட் எ ப்யூட்டி! உனக்குள் இத்தனை அழகு மறைந்திருப்

பது எங்கள் யாருக்குமே தெரியவில்லை" என்று பாராட்டினாள்.

விருந்தாளிகள் வரும் நேரமாகிவிட்டது. திரும்பிப் போகப் போனவன், ஜன்னல் அருகில் நின்றுகொண்டிருந்த மனைவியை பார்த்ததும் சட்டென்று நின்றுவிட்டான்.

"ஹேமா! நீதானா?" அருகில் வந்தான்.

அவன் கண்கள் ஹேமாவை தலைமுதல் கால்வரை பரிசிலனை யாக பார்த்தன.

"கல்யாண பெண்போல் ரொம்ப அழகாக இருக்கிறாய்." "ஹேமா வின் தோள்களை பற்றி அருகில் இழுத்துக் கொள்ளப் போனான். ஹேமா சட்டென்று அவன் கைகளை உதறித் தள்ளி விட்டு ஒரடி பின்னால் நகர்ந்து நின்றுகொண்டாள்.

"என்ன ஆச்சு ஹேமா?" வியப்புடன் பார்த்தான்.

"நீ இப்பொ ஏதாவது செய்தால் இந்த கொண்டை கலைந்து விடும். மறுபடியும் சிகை அலங்காரம் செய்து கொள்ள ஒருமணி நேரம் பிடிக்கும். ஏற்கனவே உட்கார்ந்து உட்கார்ந்து என் இடுப்பு வலிக்கிறது."

ரமேஷ் ஒருநிமிடம் ஏமாற்றம் அடைந்தவனை போல் பார்த்தாலும், உடனே கலகலவென்று நகைத்துவிட்டான்.

"ஓ.கே. இப்போதைக்கு விட்டுவிடுகிறேன். ஆனால் இரவு வட்டியுடன் சேர்த்து வசூல் செய்துவிடுவேன். ஜாக்கிரதை" என்று மிரட்டினான்.

அவன் கண்கள் மறுபடியும் ஹேமாவை ஏற இறங்க பார்த்தன. அவன் முகத்தில் லேசாக அதிருப்தியின் திரை படிந்தது.

"நம் திருமணம் ஐந்த வருடங்கள் தாமதமாக நடந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? உன் பிடிவாதத்தின் காரணமாக நாமிருவரும் வாழ்க்கையில் ஒரு முக்கியமான நிகழ்ச்சியை, அனுப வத்தை இழந்துவிட்டோம். நம் திருமணம் இன்று நடந்திருந்தால் இதுபோல் அபூர்வமாக, எல்லோருடைய ஆசிகளுடன் உன்னை என் வீட்டுக்கு அழைத்து வந்திருப்பேன் இல்லையா?"

அவன் சொல்லிக் கொண்டிருந்த போதே "டாடீ! நான் புது ப்ராக் போட்டுக்கொண்டிருக்கிறேன். நன்றாக இருக்கிறதா?" என்று கேட்டுக் கொண்டே கருணா ஓடி வந்தாள். தந்தையின் எதிரே நின்று ப்ராக்கை இருபக்கமும் பிடித்துக் கொண்டு டான்ஸ் செய்வதுபோல் சுழன்றாள்.

ரமேஷ் அந்த நிமிடம் உலகத்தையே மற்நதுவிட்டவன் போல் மகளையே பார்த்தான். "எவ்வளவு நன்றாக இருக்கு? இதுபோல் ஒரு டிரஸ்ஸை அதற்கு முன் நான் பார்த்ததே இல்லை." வியப் படைந்துவிட்டது போல் நடித்தான். கருணா புது டிரெஸ்ஸை போட்டுக் கொண்ட போதெல்லாம் அவன் இப்படிச் சொல்வது தான் வழக்கம். கருணா கலகலவென்று நகைத்தாள்.

ரமேஷ் மகளை தூக்கிக் கொண்டான்.

"எங்கே டாடீக்கு ஒரு கிஸ்கொடு" என்றான். கருணா தந்தையின் கன்னத்தில் முத்தம் கொடுத்து விட்டு, அவன் கையிலிருந்து கீழே நழுவினாள்.

"இரு டாடீ! தீரா ஆண்டீக்கு இன்னும் டிரஸ்ஸை காட்டவே இல்லை" என்று சொல்லிவிட்டு ஓடினாள்.

ரமேஷ் ஹேமா பக்கம் திரும்பினான். அவன் முகத்தில் திருப்தி வெளிப்படையாக தென்பட்டது.

"சாரி ஹேமா! சற்று முன் நான் சொன்ன வார்த்தைகளை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். அன்று நீ பிடிவாதம் பிடிக்காமல் இருந்தால் கருணா எனக்குக் கிடைக்க ஐந்து வருடங்கள் தாமதம் ஆகியிருக்கும் இல்லையா" என்றான்.

ரமேஷ் கிளம்பிப் போன பிறகு ஹேமா ஜன்னல் அருகிலேயே நின்றிருந்தாள். கருணா புது டிரஸ்ஸை போட்டுக் கொண்டதும் நேராக தந்தையிடம் காட்டியிருக்கிறாள். மாதுரியிடம் காட்ட வேண்டும் என்று ஓடிவிட்டாள். ஆனால் அங்கேயே நின்று கொண்டிருக்கும் தாயிடம் காட்ட வேண்டும் என்று அந்தப் பிஞ்சு மனதில் தோன்றவில்லை. அதன் காரணம் ஹேமா அறியாதது அல்ல. ரமேஷ், மாதுரி இருவரும் எப்போதும் கருணாவை புகழந்து கொண்டே இருப்பார்கள். 'இவர்களுக்கு என்னைக் கண்டால் ரொம்ப பிடிக்கும்' என்ற எண்ணம் அந்தப் பிஞ்சு மனதில் ஆழமாக

பதியும் விதமாக நடந்து கொள்வார்கள்.

அளவுக்கு மீறிய பாராட்டுகள் தவறான பாதைக்கு வழிவகுக்கும் என்பது ஹேமாவின் நம்பிக்கை. அதையே ரமேஷிடம் சொன்னாள்.

"சின்ன விஷயத்தை இவ்வளவு சீரியஸாக எடுத்துக் கொள்வானேன்? செல்லமாக வளர்ந்த குழந்தைகள் எல்லோரும் தவறான பாதையில் போய் விட்டதாக எங்கேயும் நான் கண்டதில்லை. கருணா வளர்ந்து பெரியவள் ஆனபிறகு அவளே புரிந்து கொள்வாள். இயற்கையாக மலரும் சூழ்நிலையை நாம்தான் அவர்களுக்கு உருவாக்கித் தரவேண்டும்" என்று அவள் பேச்சை தள்ளிவிட்டான்.

ரமேஷ் கிரகபிரவேசத்திற்கு அழைத்தவர்களில் ஒருவர் பாக்கி இல்லாமல் எல்லாரும் வந்தார்கள். ரமேஷ் பத்திரிகையில் பரிசுகளை தவிர்க்க வேண்டும் என்று தெளிவாக அச்சடித்து இருந்தாலும், சிலர் விலை உயர்ந்த பரிசுகளை கொண்டு வந்தார்கள்.

"பத்திரிகையை சரியாக பார்க்கவில்லையா?" என்று ரமேஷ் கேட்டதற்கு, "அது மற்றவர்களுக்கு. நாங்க உங்களுக்கு நெருக்க மானவர்கள். எங்களுக்கு இது பொருந்தாது" என்று இல்லாத உரிமையை கொண்டாடினார்கள்.

ரமேஷ் செகரெட்ரியை அழைத்து அந்த பரிசு பொருட்களை அலமாரியில் பத்திரப்படுத்தி வைக்கச் சொன்னான். கொடுத்தவர்களுடைய பெயர்களையும் எழுதி வைக்கச் சொல்லி ஆணையிட்டான்.

"எல்லோரும் பரிசுகளை கொடுத்துவிட்டார்கள். நான் ஒருத்தி எஞ்சியிருக்கிறேன் போலும்" என்றாள் மாதுரி.

"நீ எங்களுக்கு செய்த உதவியைவிட வேறு பரிசு என்ன இருக்க முடியும்?" ரமேஷ் சொன்னான்.

"நோ... நோ... உதவிசெய்வது வேறு. பரிசு கொடுப்பது வேறு."

மாதுரி உள்ளே போனாள்.

எல்லோரும் மாதுரி கொடுக்கப் போகும் பரிசு என்னவாக இருக்கும் என்று ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மாதுரியின் பின்னால் வந்த வேளையாள் பெரிய அட்டை பெட்டி போன்ற பொருளை கொண்டு வந்து இருந்த மேஜைமீது வைத்துவிட்டு போனான்.

"கமான் ஹேமா! உன் கைகளால் அதைத் திறந்து பார்" மாதுரி சொன்னாள்.

அட்டை பெட்டியைச் சுற்றிலும் அழகாக கட்டப்பட்டிருந்த சில்க் ரிப்பன்களை ஒவ்வொன்றாக அவிழ்க்கும்போது எல்லோரும் சூழ்ந்து கொண்டு என்னவாக இருக்கும் என்று எட்டி எட்டி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஹேமா அட்டை பெட்டியின் மூடியைத் திறந்தாள்.

"ஏதோ போட்டோ மாதிரி இருக்கு" யாரோ சொன்னார்கள்.

"எடு ஹேமா!" மாதுரி உற்சாகப்படுத்தினாள்.

பெட்டியில் கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த அந்த போட்டோவை எடுத்து திருப்பிப் பார்த்தாள் ஹேமா.

அடுத்த நிமிடம் திகைத்துப் போய் அப்படியே நின்றுவிட்டாள்.

ரமேஷின் ஓவியம் அது!

மாதுரி ஹேமாவின் கைகளிலிருந்து கவனமாக அந்த ஓவியத்தை எடுத்துக்கொண்டு, மேஜைமீது சாய்ந்த வாக்கில் எல்லோரும் பார்க்கும் விதமாக வைத்தாள். எல்லோரும் அதையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அது வரையில் கோட்டு, சூட்டு அணிந்து கொண்டு எல்லோருக் கும் நடுவில் நடமாடிக் கொண்டிருந்த ரமேஷ், கோட்டையும் ஷர்ட்டையும் எடுத்துவிட்டு வெறும் பேண்ட் மட்டும் அணிந்து கொண்டு இந்தப் பக்கம் பார்த்துக் கொண்டிருக்கிறானோ என்பது போல் உயிரோட்டமாய் இருந்தது அந்த ஓவியம்.

"வண்டர்ஃபுல்!" யாரோ சொன்னார்கள். எல்லோரும் கைகளை தட்டி பாராட்டினார்கள்.

"மாதுரி இவ்வளவு நல்ல ஆர்டிஸ்ட் என்று எங்களுக்கு தெரியவே தெரியாது."

"ரமேஷ் அங்கே நின்று நம் பக்கம் பார்ப்பதுபோல் இருக்கு

இல்லையா?"

பலர் பலவிதமாக சொன்னார்கள்.

"மாதுரி! இந்த ஓவியத்தை வரைவதற்கு உனக்கு எத்தனை நாட்கள் பிடித்தது?" யாரோ கேட்டார்கள்.

"கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள்." பெருமை பொங்கும் குரலில் சொன்னாள் மாதுரி.

ஹேமாவின் கண்கள் இன்னமும் அந்த ஓவியத்தின் மீதே நிலைத்திருந்தன. அந்த அறையில் இரண்டு ரமேஷ்கள் இருப்பதுபோல் தோன்றியது.

இந்த ஓவியத்தை வரைவதற்கு இரண்டு மாதங்கள் ஆகியிருக்கிறது. ஆனால் ரமேஷோ, மாதுரியோ தன்னிடம் ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. ஹேமாவுக்கு முதல்முறையாக பொறாமை உணர்வு ஏற்பட்டது.

"மாதுரி போன்ற சினேகிதி இருப்பது உங்களுடைய அதிர்ஷ்டம் தான்." யாரோ ஹேமாவைப் பாராட்டினார்கள்.

ஹேமா வலுக்கட்டாயமாக சிரித்துவிட்டு அந்த பாராட்டை ஏற்றுக் கொள்வதுபோல் தலையை அசைத்தாள்.

ஒரு மூலையில் பெண்கள் கும்பலாக நின்றுகொண்டு ஐஸ்க்ரீமை சாப்பிட்டுக்கொண்டே பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டாலும் ஹேமாவின் காதுகளில் தெளிவாகவே விழுந்தது.

"அந்த மாதுரிக்கு கல்யாணம் காட்சி எதுவும் இல்லை போலும்."

"சரிதான். விடிய விடிய ராமாயணம் கேட்டுவிட்டு சீதைக்கு ராமன் சித்தப்பா என்றானாம் ஒருவன். அதுபோல் பேசுகிறாயே?"

"அந்த மனைவி எப்படி சும்மா இருக்கிறாள்?

"பணம்!! பணம் பத்தும் செய்யும் என்பதை மறந்துவிட்டாயா?"

ஹேமாவால் இனி பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

"யாருக்காவது ஐஸ்க்ரீம் வேண்டுமா?" என்று கேட்டுக் கொண்டே அவர்களை நோக்கிச் சென்றாள்.

"நோ_ நோ_ மிஸஸ் ரமேஷ் சந்திரா. வாங்க வாங்க. எங்களோடு சற்று நேரம் உட்காருங்கள்." ஒரு அம்மாள் அன்புடன் வரவேற்றாள்.

"வாட் எ லவ்லி சாரி. உண்மையைச் சொல்லட்டுமா? உங்களைப் பார்த்தால் எனக்கு ரொம்ப பொறாமையாக இருக்கிறது." இன்னொரு பெண்மணி வெளிப்படையாகச் சொன்னாள்.

அங்கிருந்து சற்று தொலைவில் ரமேஷ் மாதுரியிடம் குரலை தாழ்த்திக்கொண்டு, கோபத்தை அடக்கிக்கொண்டே "தீரா! பெயிண்டிங்க் முடிவதற்கு இன்னும் நாளாகும் என்று சொன்னாயே?" என்று கேட்டான்.

"உன்னை வியப்பில் ஆழ்த்த வேண்டுமென்று நினைத்தேன்." சிரித்துக் கொண்டே சொன்னாள் மாதுரி.

"இந்த சமயத்திலா அதைக் கொடுப்பது?"

"ஏன்? இதைவிட நல்ல சந்தர்ப்பம் வேறு என்ன இருக்கமுடியும்? உன்னுடைய மறு உருவத்தை உன் மனைவிக்கு பரிசாக கொடுத்தேன். நீ ஊரில் இல்லாதபோது அந்த ஓவியத்தை பார்த்துக் கொண்டே உன் பிரிவை தாங்கிக் கொள்வாள். அதோ_ அவர்கள் என்னை அழைக்கிறார்கள். நான் போகிறேன்" என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு போய்விட்டாள்.

ரமேஷ் பெருமூச்சு விடுத்தான். மாதுரி சில சமயம் ரொம்பவும் குழந்தைத்தனமாக நடந்து கொள்வாள்.

ஏற்கனவே சொன்னது போல் ஓவியத்தை வரைவதற்காக சிட்டிங்ஸ்க்ஸ் கொடுக்கச் சொல்லி மாதுரி கேட்டபோதே அவன் உள் மனதில் போராட்டம் துவங்கி விட்டது. மாதுரியின் விருப்பத்தை அலட்சியமாக மறுக்க முடியாதவாறு அவனுக்கு அவளால் பல வேலைகள் ஆக வேண்டிய சூழ்நிலை தொடர்ந்து கொண்டே இருந்தது. மாதுரியின் மனம் கொஞ்சம் வருத்தப்பட்டாலும் அவனுடைய வேலைகளில் தடை ஏற்படக்கூடிய இக்கட்டான நிலைமை. அந்த ஓவியத்தை பார்த்து ஹேமா தன்னை தவறாக நினைக்கக் கூடும் என்ற பயம் அவனுக்கு ஒருநாளும் இருந்தது இல்லை.

"திடீரென்று உன்னிடம் காண்பித்து உன்னை வியப்பில் ஆழ்த்த

வேண்டும் என்று நினைத்தேன்" என்று சொன்னால் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு ஹேமா ஒன்றும் முட்டாள் ஒன்றும் இல்லை. அவனுக்கு மனைவியிடம் அந்த நம்பிக்கை அதிகமாகவே இருந்தது. ஆனால் மாதுரி இந்தச் சமயத்தில் கொடுத்தது அவனுக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை.

ரமேஷ் தலையை திருப்பி, தொலைவில் பெண்களின் கும்பலுக்கு நடுவில் நின்று பேசிக் கொண்டிருந்த ஹேமாவை பார்த்தான். ஹேமா அணிந்திருந்த நகைகளும், புடவையும் ஒன்றோடு ஒன்று போட்டி போட்டதுபோல் ஜொலித்துக் கொண்டிருந்தது உண்மைதான். என்றாலும் முகம் மட்டும் வாடியிருந்தது.

பார்ட்டி முடியும்போது ரமேஷுக்கு விஜயவாடாவிலிருந்து போன் வந்தது. அவசரமான வேலை இருப்பதாகவும், உடனே கிளம்பி வரச்சொல்லி கூட்டாளி ஒருவர் போன் செய்தார்.

ரமேஷ் விருந்தாளிகளிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டு உடனே கிளம்பிப் போய்விட்டான்.

விருந்தாளிகள் எல்லோரும் போய்விட்டார்கள். சுந்தரம் ஊரிலேயே இல்லை. தந்தைக்கு உடல்நிலை சரியில்லை என்று சுடிதம் வந்ததால் முதல்நாள் காலையிலேயே கிளம்பிப் போனான்.

ஹேமா நகைகளை கழட்டி, பத்திரமாக வைத்து விட்டு கொண்டையை அவிழ்த்துவிட்டு உடைகளை மாற்றிக் கொண்டாள். தளர்வாக பின்னல் போட்டுக்கொண்டு, காட்டன் புடவையை அணிந்து கொண்ட பிறகுதான் நிம்மதியாக மூச்சு வந்தது.

வேலைக்காரர்கள் எல்லாவற்றையும் சுத்தம் செய்துவிட்டு போய் விட்டார்கள். கருணா உறங்கி விட்டிருந்தாள். வாசற்கதவுகளை சாத்தி விட்டு உள்ளே வந்து கொண்டிருந்த ஹேமா ஒரு நிமிடம் அப்படியே நின்றுவிட்டாள். ஹாலில் மேஜைமீது சாய்த்து வைக்கப் பட்டிருந்த ரமேஷின் ஓவியம் இன்னும் அப்படியே இருந்தது.

திடீரென்று பார்க்கும்போது ரமேஷ் அங்கே நின்று கொண்டிருப்பது போலவே இருந்தது. விளக்கை அணைக்கப் போன ஹேமா அந்த முயற்சியை கைவிட்டு, மெதுவாக ஓவியத்தின் அருகில்

வந்தாள்.

ஓவியத்திலிருந்த ரமேஷின் கண்கள் தன்னையே கூர்ந்து கவனிப்பதுபோல் தோன்றியது. அவன் மார்பில் இடது பக்கம் இருந்த மச்சத்தின்மீது ஹேமாவின் பார்வை நிலைத்தது. திருமணம் ஆன புதிதில் தானும் அவனும் குடித்தனம் நடத்திய நாட்கள் நினைவுக்கு வந்ததும், ஹேமாவின் கன்னங்கள் வெட்கத்தினால் சிவந்தன. அந்த நாட்களில் அவன் அருகில் உட்கார்ந்து கொள்வதற்கோ, அவன் மார்பில் தலையை சாய்த்துக் கொள்வதற்கோ எத்தனை வெட்கப் பட்டாள். எத்தனை தயங்கினாள்... "ச்சீ... ச்சீ... இந்த இருவருக்கும் கொஞ்சம்கூட வெட்கமே இல்லையா? ஓவியம் வரைய வேண்டும் என்றாலும் இப்படி அரை நிர்வாணமாகவா! மாதுரிக்கு மூளை எங்கே போய்விட்டது? ரமேஷ் இதற்கு எப்படி சம்மதித்தான்? திடீரென்று ஹேமாவின் மனதில் மின்னலை போல் அவநம்பிக்கை தோன்றி மறைந்தது. ஒருக்கால் ஊர்மக்கள் பேசிக் கொள்வது உண்மைதானா? இத்தனை நாட்கள் தான் கண்கள் இருந்தும் குருடியாக இருந்திருக்கிறேனா?"

ஹேமாவின் கண்கள் ரமேஷின் கழுத்தின் அருகில் விசாரமாக தென்பட்ட தீக்காயத்தின் தழும்பின்மீது நிலைத்தன. அன்று தானும் அவனும் சமையல் அறையில் சலனமின்றி அப்படியே நின்றுவிட்ட காட்சி நினைவுக்கு வந்தது. மாதுரியின் கையில் இருக்கும் மகிமை என்னவோ! ரமேஷை அப்படியே தத்ரூபமாக வரைந்திருக்கிறாள். அந்தக் கண்களில் எவ்வளவு உயிரோட்டம் தென்படுகிறது! ரமேஷை அப்படிப் பார்க்கும்போது மாதுரிக்கு ஒன்றுமே தோன்றவில்லையா?

அந்தச் சமயத்தில் ஆறுதலாக பேசுவதற்கு சுந்தரமும் அருகில் இல்லாதது ஹேமாவின் வேதனையை மேலும் அதிகரித்தது. ஹேமாவின் தனிமையை துரத்தி அடிப்பதுபோல் போன்மணி ஒலித்தது.

ஹேமா ரிசீவரை எடுத்தாள்.

"ஹலோ..... சுதாகர் இருக்கிறானா?" மறுமுனையில் யாரோ கேட்டார்கள்.

அந்த பெயரைக் கேட்டதும் ஹேமா திடுக்கிட்டாள். ஒரு நிமிடம்

வாயடைத்துவிட்டது போல் அப்படியே நின்றுவிட்டாள்.

"ஹலோ.... சுதாகர் வீட்டில் இருக்கிறானா? கொஞ்சம் கூப்பிடமுடியுமா?"

"அந்தப் பெயரில் இங்கே யாரும் இல்லை."

"இல்லையா?" என்றவன் நம்பரை சொல்லி விட்டு "இது அந்த நம்பர்தானே?" என்று கேட்டான்.

"அதே நம்பர்தான்."

"அது நாகபூஷணத்தின் வீடுதானே?"

"இல்லை. ரமேஷ்சந்திரா வீடு."

"வேடிக்கையாக இருக்கிறதே. ஒருமாதம் முன்னால் கோவாவில் சுதாகர் எனக்கு இந்த நம்பர்தானே கொடுத்தான்!"

"அவர்கள் அப்பொ இங்கே இல்லை. வீடு மாறிவிட்டார்கள்."

"அப்படியா. ப்ளீஸ் அவனுடைய முகவரியை தரமுடியுமா. நான் அவனுடைய நண்பன்." மறுமுனையில் இருந்தவன் இன்னும் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான்.

"சாரி. எனக்குத் தெரியாது." ஹேமா போனை வைத்துவிட்டாள்.

ஹேமா தடுமாறும் நடையுடன் வந்து நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். இந்த வீடு இன்னும் சுதாகருடையது என்று தான் நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். விதி எப்படி விளையாடுகிறது! இந்த வீட்டில்தான் இருந்தாக வேண்டும் என்று தன் நெற்றியில் எழுதியிருக்கிறது போலும். வேண்டாமென்று நினைத்தாலும் பழைய நினைவுகள் மறுபடியும் மறுபடியும் அவள் மனதை அலைக் கழித்தன. தன் ஜாதகத்தில் இந்த வீட்டுக்கு யஜமானி யோகம் இருப்பதாகவும் இவ்வளவு வசதியான வாழ்க்கையை அனுபவிக்கப் போகிறாள் என்றும் யாராவது ஜோஸியம் சொல்லி இருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? அண்ணன் அண்ணியிடமிருந்து இந்த பிரிவு ஏற்பட்டு இருக்காதோ. எந்த வீட்டுக்கு தன்னை அனுப்ப வேண்டும் என்று அண்ணன் துடித்தானோ அதே வீட்டுக்குதான் வந்திருக்கிறாள். ஆனால் அதற்கும் இதற்கும் எவ்வளவு வேறுபாடு!

நிசப்தமாக இருந்த அந்த வீட்டில் தனிமை பூதமாக மாறி மேலும் அவளை பயமுறுத்துவதுபோல் தோன்றியது.

40

"நமக்கு இந்தநிலை ஏற்படுவதற்குக் காரணம் அந்த பேபீதான் கண்ணா! அவள் போய் அவர்களுடன் இணைந்திருக்காவிட்டால் நமக்கு இவ்வளவு கஷ்டம் வந்திருக்காது. அவள் நம் வீட்டை வேறு யாருக்காவது விற்று இருந்தால் எனக்கு இவ்வளவு வேதனை இருந்திருக்காது. அந்த வீட்டை இடித்திருந்தாலோ, எரித்து சாம்பலாக்கி இருந்தாலோ எனக்கு எதுவும் தோன்றாது. ஆனால் அவனுக்கு— நம் வாழ்க்கையை கொள்ளையடித்த அந்த ராட்சசனுக்கு அவள் அந்த வீட்டை விற்றதை என்னால் பொறுத்துக் கொள்ள முடிய வில்லை. என் பேச்சை கேள் சுதா! இனியும் நான் பிழைத்திருப்பது அனாவசியம். எனக்கு தூக்க மாத்திரைகளை வாங்கிக் கொடு. நான் படும் வேதனை உனக்குப் புரியாது. நான் அனுபவித்துக் கொண்டிருக்கும் சத்திரவதை உனக்குத் தெரியாது."

நாகபூஷணம் மகன் கொண்டு வந்து கொடுத்த மருந்தை புறங்கையால் தள்ளிவிட்டு, குழந்தையை போல் கைகளில் முகம் புதைத்து அழுது கொண்டிருந்தார். அவரிடம் முன்பு இருந்த அந்த மிடுக்கு, ராஜகம்பீரம் இப்பொ கொஞ்சம்கூட இல்லை. பற்களை பிடுங்கப் பட்ட பாம்பு போல், வயதாகி ஒடுங்கிவிட்ட விலங்கை போல் தென் பட்டார்.

அவரிடம் வேலை பார்த்துக்கொண்டிருந்த கோவிந்தன் ரமேஷ் பக்கம் சேர்ந்து விட்டதில் தொடங்கிய அவருடைய கஷ்டகாலம், மாதுரி அவர்மீது போட்டிருந்த வழக்கில் தோற்றுப்போய் வீட்டை அவளிடம் ஒப்படைத்ததுடன் முடிந்தது. முன்பு அவரைப் பார்த்தவர்களால் இப்பொ அடையாளம் கண்டுகொள்ள முடியாது. சுண்டு விரலால் மீசையை நீவிக்கொண்டே எந்த பிரச்னை வந்தாலும் புன்முறுவல் மாறாமல் நிமிடத்தில் தீர்வு காணும் அந்த நாகபூஷணத்திற்கும் இவருக்கும் கொஞ்சம்கூட ஒற்றுமையே இல்லை.

"இவருக்கு விரைவில் பைத்தியம் பிடிக்கக்கூடிய சாத்தியம் இருப்பதுபோல் தெரிகிறது. முடிந்த வரையில் அவருக்குக்

கோபமோ, ஆவேசமோ ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்." என்று டாக்டர்கள் எச்சரித்ததிலிருந்து சுதாகர் தன்னால் முடிந்த வரை தந்தையை கண்ணின் இமையை போல் காப்பாற்றி வந்தான்.

நாளுக்கு ஒருமுறையாவது அவர் இந்த பிரஸ்தாபனையைக் கொண்டு வந்து சின்னக்குழந்தையை போல் அழாமல் இருக்கமாட்டார். அந்த சமயத்தில் தந்தையை எப்படி சமாதானப்படுத்துவது, எப்படி தேற்றுவது என்று அவனுக்குப் புரியவில்லை.

"டாடீ! மருந்தை சாப்பிடுங்கள், வேண்டுகோள் விடுப்பதுபோல் சொன்னான்.

"இந்த நிலைமை நமக்கு வருவதற்குக் காரணம் நீதான். அமெரிக்காவுக்குப் போய் படித்துவிட்டுவா என்று அனுப்பினால் படிப்பை முடிக்காமலேயே திரும்பி வந்தாய். போகட்டும். வந்தவன் நேராக வீட்டுக்கு வந்து எனக்கு உதவியாக வியாபாரத்தை கவனித்துக் கொண்டிருக்கலாம் இல்லையா. எவனோ மகேஷ் யோகி பின்னால் ஊரைச் சுற்றிக் கொண்டு இருந்தாய். என்னைப் பற்றியோ, இந்த வீட்டைப் பற்றியோ ஒருநாளும் நீ அக்கறை காட்டியதில்லை. உலகத்தில் எத்தனை இளைஞர்கள் இருக்கிறார்கள். யாராவது உன்னைப்போல் இருக்கிறார்களா? திருமணம் செய்துகொள் கண்ணா என்று கெஞ்சினால் மாட்டவே மாட்டேன் என்று மறுத்துவிட்டாய். இப்பொ மட்டும் எதற்காக வந்தாய்? கோவாவில் ஏதோ ஆசிரமத்தை நிறுவியிருக்கிறாயாமே. போ... போ... அங்கேயே இருந்துகொள். நான் எப்படி போனால் உனக்கென்ன? எனக்கு மகனே பிறக்கவில்லை என்று நினைத்துக் கொள்கிறேன். எத்தனை பெரிய வீடு? சீரோடும், செழிப்போடும் வாழ்ந்த எனக்கு இப்படி ஒரு நிலைமையா? கடவுளே! நான் என்ன செய்வேன்?" என்று மறுபடியும் புலம்பத் தொடங்கிவிட்டார்.

"சுதாகர் தந்தையின் தோளில் கையை பதித்தான். டாடீ! என் பேச்சை கேள். நீ கஷ்டப்பட்டு சம்பாதித்து, சொத்து சேர்த்தது எனக்காகத்தானே? நான் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று தானே?"

ஆமாம் என்பதுபோல் தலையை அசைத்தார்.

"நான் இப்பொ சந்தோஷமாகத்தான் இருக்கிறேன். நீங்க என்னைப் பற்றி கவலைப்படாதீங்க."

"ச்சீ... ச்சீ... உடனே இந்த இடத்தைவிட்டு போய்விடு. பயணம் செய்யும் கப்பல் மூழ்கிப் போகிறதே என்றால் போகட்டுமே என்று சொல்வாய். நீயும் மனிதனா?"

"நம் கையில் எதுவும் இல்லை டாடீ."

"வாயை மூடு. எல்லாம் நம் கையில்தான் இருக்கிறது. தவறு முழுவதும் என்னுடையதுதான். அந்த மேனேஜர் பயலை நம்பி வியாபாரத்தை முழுவதுமாக ஒப்படைத்துவிட்டதால் இன்று இந்த புதை குழியில் தள்ளப்பட்டுவிட்டேன். டேய்! கையால் ஆகாதவனை போல் வெறுமே பார்த்துக் கொண்டு இருப்பேன் என்று நினைத்து விட்டாயா? அவனுடைய குடலை உருவி மாலையாக போட்டுக் கொள்ள மாட்டேனா? அவனுக்கு சரியான பாடம் கற்பிக்கும் வரையில் நிம்மதியாக தூங்குவேன் என்று கனவில்கூட நினைத்து விடாதே."

சற்றுமுன் தூக்க மாத்திரையை கொடு. செத்துப் போகிறேன் என்று புலம்பியவர் இவர்தானா? பந்த பாசங்களுக்கு அடிமையாக இருக்கும் வரை இந்த தவிப்பை தவிர்க்க முடியாது போலும்.

எத்தனை பேரை ஏமாற்றி அந்த சொத்தை சேர்த்திருக்கிறோம் என்பதை மறந்துவிட்டார். தன்வினை தன்னைச்சுடும் என்பது நிரூபணமாகும் போது அந்த வலியை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

மாதுரி சின்ன குழந்தையாக இருந்தது, ஜெயம்மாவுக்கு முன்பின் வேறு யாரும் துணை இல்லாதது... எல்லாவற்றையும் சாதகமாக எடுத்துக் கொண்டு தம்பியின் சொத்தை கொஞ்சம் கொஞ்சமாக தன்னுடைய சொத்தோடு சேர்த்துக் கொண்டு வந்தது அவருக்கே நினைவில் இருக்காது.

"சுதா! முதலில் லாயருக்கு நான் அர்ஜெண்டாக வரச் சொன்னேன் என்று போன் செய்துவிடு." ஆணையிடுவதுபோல் சொன்னார்.

சிவன் நூலகம்,
தூத்துக்குடி மாவட்டம்.

"ஆகட்டும் டாடி முதலில் மாத்திரையை போட்டுக் கொள்ளுங்கள்" என்று கையில் கொடுத்தான்.

இந்த முறை அவர் மறுக்கவில்லை. போட்டுக் கொண்டார்.

சுதாகர் தந்தையை தன்னுடன் கோவாவுக்கு அழைத்துப் போக வேண்டும் என்று ரொம்பவும் முயற்சி செய்தான். ஆனால் அவர் சம்மதிக்கவில்லை. "அந்த காட்டுக்கு நான் வரமாட்டேன். நான் இந்த ஊரில்தான் இருக்கவேண்டும். அவர்களை பழி வாங்காமல் சுவர்க்கத்திற்குக்கூட வரமாட்டேன்" என்று மறுத்து விட்டார். இன்றோ நாளையோ வாழ்க்கைப் பயணத்தை முடித்துக் கொள்ள தயாராக இருந்த அவருக்கு, ரமேஷை பழிவாங்க வேண்டும் என்ற பிடிவாதம் மட்டும் போகவில்லை.

பாண்டுரங்கன் என்பவர் நாகபூஷணத்தை சந்திக்க வீட்டுக்கு வந்தார். அவரைப் பார்த்ததும் நாகபூஷணம் உற்சாகமாக வரவேற்றார்.

"வாங்க... வாங்க... என்ன விசேஷம்?"

பாண்டுரங்கள் முதல்நாள் ரமேஷ் வீட்டு கிரகபிரவேசத்திற்கு போய் விட்டு வந்தாராம். பெரிய அளவில் நடந்த அந்த விழாவை பற்றி, மாதுரி பரிசாக கொடுத்த ஒவியத்தை பற்றி விலாவாரியாக தெரிவித்தார்.

"அந்தப் பெண் ஹேமா அதிர்ஷ்டசாலியாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நாடோடியை போல் சுற்றிக் கொண்டிருந்தவனுக்கு அஷ்ட ஐஸ்வரியம் எப்படி கிடைத்திருக்கும்?" என்று முடித்தார்.

சுதாகர் இருவருக்கும் டீயை எடுத்துக் கொண்டு வந்தான்.

"பார்த்தீர்களா. இந்த வேலைகளை எல்லாம் என் மகனே செய்ய வேண்டிய நிலைமை" என்றார் நாகபூஷணம். அவர் கண்களில் நீர் சுழன்றது. எவ்வளவு அபூர்வமாக வளர்த்தேன் அவனை! கடைசியில் எங்களுடைய தலையெழுத்து இப்படி மாறிவிட்டது."

"வருத்தப்படாதீங்க. எதுவும் நம் கையில் இல்லை. "பாண்டுரங்கன் ஆறுதல் சொல்ல முயன்றார்.

"இதற்கெல்லாம் காரணம் அந்த ரமேஷ்தான். அவன் கையில் விளையாட்டுப் பொருளாக மாதுரி மாறிவிட்டாள்."

"உண்மைதான்," ஒப்புக்கொள்வதுபோல் பாண்டுரங்கன் தலையை அசைத்தார்.

பாண்டுரங்கன் வந்தால் லேசில் கிளம்பமாட்டார். தந்தைக்கும் நன்றாக பொழுது போகும்.

சுதாகர் தன்னுடைய அறைக்கு வந்து, பேனாவை எடுத்து சட்டைப் பையில் வைத்துக் கொண்டு, டைரியை எடுத்துக்கொண்டு வெளியில் வந்துவிட்டான்.

சமீபகாலமாக அவனுக்கு வீட்டுக்கு வெளியில் நேரத்தை கழிப்பது வழக்கமாகிவிட்டது. தந்தைக்காக வலுக்கட்டாயமாக இந்த நான்கு சுவர்களுக்கு நடுவில் வாழ்ந்து வருகிறான். மாலை வேளையிலாவது இப்படி வெளியில் போவில்லை என்றால் மூச்சு முட்டுவது போல் இருக்கும்.

தினமும் ஏதாவது புத்தகத்தையோ, பேப்பரையோ மையோடு கொண்டு போய், பார்க்கில் உட்கார்ந்து கொள்வான். சில சமயம் உலகத்தையே மறந்துவிட்டவனை போல், தன் மனதை அலைக் கழிக்கும் எண்ணங்களை டைரியில் எழுதிக்கொண்டிருப்பான்.

நடுநடுவில் பார்க்கில் கலகலவென்று சத்தம் போட்டுக் கொண்டு குழந்தைகள் விளையாடுவதை தலை உயர்த்தி பார்ப்பான். அன்று மலர்ந்த பூக்களை போல் இருக்கும் அந்தக் குழந்தைகளையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருப்பான். மனித பிறவி எத்தனை உயர்வானது! பகை, துவேஷம் போன்றவற்றால் மனிதன் வாழ்க் கையை வியர்த்தமாக்கிக் கொண்டிருக்கிறானோ என்று தோன்றும்.

சிலசமயம் அவன் இருப்பதையும் பொருட்படுத்தாமல் குழந்தை கள் அவன் உட்கார்ந்திருக்கும் பெஞ்சியை சுற்றிச் சுற்றி ஓடுவார்கள். அது போன்ற நேரங்களில் அவன் மனம் என்னவோ போல் ஆகி விடும். வாழ்க்கையில் மிக முக்கியமான ஏதோ ஒன்றை தான் இழந்து விட்டது போல் வெறுமையாக தோன்றும். அதுநாள் வரை அவன் கஷ்டப்பட்டு அடக்கி வைத்திருந்த அவன் மனம் திடீரென்று கட்டு களை அவிழ்த்துக் கொண்டு தன்னுடைய அதிருப்தியை வெளிப் படுத்தும். அது போன்ற நேரங்களில் அவனுக்கு உடனே கோவா வுக்கு போய்விட வேண்டும் என்று தீவிரமாக தோன்றும்.

41

"ஹேமா! ஹேமா! உடனே வா. முன் அறையில் யார் உட்கார்ந்து இருக்கிறார்கள் என்று வந்து பாரு," ரமேஷ் வேகமாக உள்ளே வந்து கொண்டே சொன்னான்.

"யாரு?" ஹேமா கேட்டாள்.

"வந்துதான் பாரேன்." ரமேஷ் மனைவியின் தோள்களை பற்றி எழுப்பினான்.

ரமேஷ் இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறான் என்றால் வந்தவர்கள் ரொம்ப முக்கியமானவர்களாக இருப்பார்கள். யாராக இருக்கும். யோசித்துக் கொண்டே ஹேமா முன் அறைக்கு வந்தாள்.

அங்கே சுப்பலக்ஷ்மி, அவளுடைய கணவரும், தந்தையும் உட்கார்ந்திருந்தார்கள். ஹேமா திகைத்துப் போய் நின்றுவிட்டாள்.

ஹேமாவை பார்த்ததும் சுப்பலக்ஷ்மி நாற்காலியிலிருந்து எழுந்து அருகில் வந்தாள். உயிர் தோழியாக பழகியவள் போல் கைளை பற்றிக்கொண்டு, "ஹேமா! எப்படி இருக்கிறாய்?" என்று கேட்டாள்.

ஹேமா சுப்பலக்ஷ்மியின் கைகளை மெதுவாக விடுவித்துக் கொண்டு "என்ன விசேஷம்?" என்றாள்.

சுப்பலக்ஷ்மி ஹேமாவின் கையை மறுபடியும் அழுத்தமாக பிடித்துக் கொண்டாள். "விசேஷங்களுக்கு என்ன? நிறையவே இருக்கு. உன்னைப் பார்த்து ரொம்ப நாளாகிவிட்டது. வா... உட்கார்ந்து கொண்டே பேசுவோம்" என்று கையை பிடித்து சோபாவின் அருகில் அழைத்துப் போனாள்.

தேவைக்கு அதிகமாக சுப்பலக்ஷ்மி கொண்டாடும் உரிமையைக் கண்டு ஹேமா வியப்பு அடைந்தாள். இருவரும் சோபாவில் அருகருகில் அமர்ந்து கொண்டார்கள்.

சுப்பலக்ஷ்மி ரமேஷிடம் சொன்னாள். "ஹேமா என்னுடைய சினேகிதி என்று சொன்னால் மட்டும் யாருமே நம்பமாட்டேன் என்கிறார்கள். அவள் எங்கே நீ எங்கே என்பதுபோல் பார்க்கிறார்கள். எத்தனையோ நாளாக உங்க வீட்டுக்கு போய்வரலாம் என்று என் கணவரிடம் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறேன். அவர்

கேட்டால்தானே. நாம் போனால் அவர்கள் பேசுவார்களோ, மாட்டார்களோ என்று பார்த்தார். இப்பொ எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. ஹேமா கொஞ்சம் கூட மாறவே இல்லை. நீங்க கொஞ்சம் மாறியிருக்கீங்க."

"ஏன்? எனக்கு மட்டும் கொம்பு முளைத்திருக்கிறதா என்ன?" சிரித்துக் கொண்டே சொன்னான் ரமேஷ்.

"ச்ச... ச்ச... அப்படி இல்லை. முன்னைவிட நீங்க கொஞ்சம் உடல் பூசியிருக்கீங்க. ஆனால் உங்களுடைய சுபாவம் கொஞ்சம்கூட மாறவில்லை. பணம் வந்தால் போதும் சிலருக்கு தலைகால் புரியாது. நான் எல்லோருடனும் சொல்லிக் கொண்டிருப்பேன் நீங்க இருவரும் ரொம்ப நல்லவர்கள் என்று."

ரமேஷ் ஹேமா தங்களையும் அறியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

சுப்பலக்ஷ்மி கொஞ்சம்கூட மாறவில்லை. அதே பேச்சு! வீட்டையும், ரமேஷையும் விழுங்கிவிடுவதுபோல் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தாள்.

அதற்குள் வேலைக்காரன் குளிர்பானங்களை கொண்டுவந்து மேஜைமீது வைத்தான். ரமேஷ் எல்லோருக்கும் எடுத்துக் கொடுத்தான்.

சுப்பலக்ஷ்மி சட்டென்று எழுந்து கொண்டு ஹேமாவின் கையை பிடித்துக் கொண்டே "வா ஹேமா! உன் வீட்டை பார்ப்போம்" என்றாள்.

ஹேமா உடனே எழுந்து கொள்ளவில்லை. தேவைக்கு அதிகமாக சுப்பலக்ஷ்மி உரிமை கொண்டாடுவதைக் கண்டு ஹேமாவின் முகத்தில் எரிச்சல் தென்பட்டது. அதைக் கவனித்த ரமேஷ் நயமான குரலில், "போ ஹேமா! உன் சினேகிதிக்கு நம் வீட்டை சுற்றிக் காட்டு" என்றான்.

ஹேமாவுக்குக் கோபம் வந்தாலும் வேறு வழியில்லாமல் எழுந்து கொண்டாள்.

சுப்பலக்ஷ்மியின் வீட்டை முழுவதும் சுற்றி பார்த்தாள்.

"எவ்வளவு பிரம்மாண்டமாக இருக்கு" என்று மூச்சுக்கு மூச்சு

வியப்பு அடைந்து கொண்டிருந்தாள்.

அறையில் கட்டில்மீது உறங்கிக்கொண்டிருந்த கருணாவை பார்த்து "உன்னுடைய மகளா?" என்று கேட்டாள்.

ஆமாம் என்பதுபோல் ஹேமா தலையை அசைத்தாள்.

"ஒருத்திதானா? மறுபடியும் விசேஷம் ஒன்றும் இல்லையா? கொடுத்து வைத்தவள். அதான் உனக்கு ஏற்ற கணவன் கிடைத்திருக்கிறான். என்னைப் பார். நான்கு குழந்தைகள். என் கணவரின் வருமானம் மட்டும் வளரவில்லை."

மறுபடியும் இருவரும் முன் அறைக்கு வந்தபோது ரமேஷ் "ஆகட்டும். அவரை எனக்கு நன்றாகத் தெரியும். என்னால் முடிந்த உதவியை செய்கிறேன்" என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

அவர்கள் போன பிறகு ஹேமா "என்ன விஷயம்?" என்று கேட்டாள்.

சுப்பலக்ஷ்மியின் கணவனுக்கு வரவேண்டிய பிரமோஷன் நின்று போய் விட்டதாம். எனக்குத் தெரிந்தவர் மூலமாய் அந்த கார்யம் நடக்க வாய்ப்பு இருக்கிறது. சிபாரிசு செய்யச் சொல்லி கேட்பதற்கு வந்திருக்கிறார்கள்" என்றான்.

"இப்பொ புரிகிறதா? அவர்களுக்கு நம்மீது இவ்வளவு அன்பு திடீரென்று வந்த காரணம்." ஹேமாவின் குரலில் கோபம் வெளிப் படையாக தென்பட்டது.

"புரியாமல் இருப்பதற்கு நான் என்ன முட்டாளா? எதுவாக இருந்தாலும் அவர்களாக நம்மை தேடி வந்திருக்கிறார்கள். நம்மால் முடிந்த உதவியை செய்வோம்." என்றான்.

வாய்வார்த்தை சொல்லி உதவி செய்வதாக சொன்ன ரமேஷ் பணத்தையும் செலவழித்ததை பார்த்தபோது ஹேமாவின் கோபம் மேலும் அதிகரித்தது. தகுதியில்லாதவர்களுக்கு ரமேஷ் உதவி செய்வதுபோல் தோன்றியது.

"சுப்பலக்ஷ்மியின் கணவனுக்கு பிரமோஷன் ஏன் கிடைக்கவில்லை தெரியுமா? நிறைய லஞ்சம் வாங்குவானானம். இதற்குமுன் லஞ்சம் வாங்கும்போது பிடிபட்டு வேலையே போகும் அளவுக்கு விஷயம் தீவிரமாகி விட்டதாம். பிறகு யாருடைய

காலையோ பிடித்துக் கொண்டு வேலை போகாமல் தக்க வைத்துக் கொண்டானானம். அப்படிப்பட்டவனுக்கு நீ உதவி செய்து கொண்டிருக்கிறாய்." ஹேமா சொன்னாள்.

ரமேஷ் மாலையில் கிளப்புக்கு போவதற்காக தயாராகிக் கொண்டிருந்தான். சமையல்காரன் டீயை கொண்டு வராமல் ஹேமா சுயமாக டீ கோப்பையை கொண்டு வந்ததும், இப்படி ஏதோ இருக்கும் என்று எதிர்பார்த்தான்.

"இந்தச் செய்தியை உன்னிடம் சொன்னது யாரு?" என்று கேட்டான்.

"சுந்தரம்."

"அவனுக்கு வேறு வேலை இல்லை எதுவும் இல்லையா? இன்னொரு தடவை வேண்டாத விஷயங்களை எல்லாம் உன்னிடம் சொல்லி உன்னை என்மீது சண்டைக்கு அனுப்பினால் சும்மா இருக்கமாட்டேன். கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளிவிடுவேன் என்று அவனிடம் சொல்லு." ரமேஷ் சிரித்துக் கொண்டே மிரட்டினான்.

"ஆமாம். வரவர உன் போக்கே ரொம்ப மாறிவிட்டது. ரமேஷ்! நீ உதவி செய்வதாக இருந்தால் நல்லவர்களுக்கு, நேர்மையை கடை பிடிப்பவர்களுக்கு செய்தால் நன்றாக இருக்கும். சமுதாயத்திற்கு கேடு விளைவிப்பவர்களுக்கு ஒருநாளும் நீ உதவி செய்யக்கூடாது."

"தேவியாரின் ஆணை. நல்லவர்கள் யாராவது இருந்தால் எங்கள் வீட்டுக்கு வந்து உதவியை பெற்றுக் கொள்ளலாம். என்று ஊர் முழுவதும் தண்டோரா போடச் சொல்லட்டுமா?"

"நான் இந்த விஷயத்தை ரொம்ப சீரியஸாக சொல்கிறேன். நீ விளையாட்டாக எடுத்துக் கொள்ளாதே."

"நானும் சீரியஸாகத்தான் சொல்கிறேன். தேவையற்ற விஷயங் களில் நீ தலையிட வேண்டாம்."

"அப்பொ. சுப்பலக்ஷ்மியின் கணவனுக்கு உதவி செய்வதாக தீர் மானித்து விட்டாய். அப்படித்தானே?"

"அது என்னுடைய விருப்பம்."

"ரமேஷ்! நேர்மையற்றவர்களை தள்ளி வைப்பது போய் அவர்

களை வானளாவுக்கு உயர்த்துவதா? உன்னைப் போன்ற திறமை சாலிகளே இந்த காரியம் செய்தால், சாதாரணமானவர்களை என்ன சொல்லமுடியும்?"

"என்னைப் போன்றவர்களை வெளியேற்றி, தொலைவில் நிறுத்திய இந்த சமுதாயத்திற்கு இந்த தண்டனை வேண்டியதுதான்." ரமேஷ் டீயை குடிக்காமலேயே கார் சாவியை எடுத்துக் கொண்டு போய்விட்டான்.

ரமேஷ் செய்த முயற்சிகளால், ஒரு மாதம் திரும்புவதற்குள் சுப்பலக்ஷ்மியின் கணவனுக்கு பிரமோஷன் ஆர்டர் கைக்கு வந்துவிட்டது.

சுப்பலக்ஷ்மி, அவளுடைய கணவன், தந்தை மூவரும் வீட்டுக்கு வந்து ரமேஷை பெரிதும் புகழ்ந்தது பேசினார்கள். ஆயிரம் முறை நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். போகும்முன் ரமேஷ், ஹேமாவை தங்கள் வீட்டுக்கு சாப்பிட வரவேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னார்கள்.

கட்டாயம் வருவதாக ரமேஷ் அவர்களுக்கு சத்தியம் செய்து கொடுத்தான்.

அவர்கள் கிளம்பிப் போனதுமே, எரிமலையை பேல் பொங்கி வந்த கோபத்தை அதுவரையில் அடக்கி வைத்திருந்த ஹேமா ரமேஷ் பக்கம் திரும்பி, "நீ அந்த அளவுக்கு வெட்கம் கெட்டவன் என்று நான் கனவில்கூட நினைக்கவில்லை" என்றாள்.

"அப்படின்னா?" ரமேஷ் அப்பாவியைபோல் நடித்துக் கொண்டே கேட்டான்.

"இன்று அவர்கள் வந்து நாலு வார்த்தைகள் பாராட்டி பேசியதும் உனக்கு தலைகால் புரியவில்லை. கடந்த காலத்தை ஒருமுறை நினைவுப்படுத்திக்கொள். அன்று அவர்கள் வீட்டில் நடந்த பிறந்த நாள் விழாவுக்கு நாம் போனபோது அவர்கள் நடந்து கொண்ட முறையை நீ மறந்து போனாலும் என்னால் மறக்க முடியாது."

ரமேஷ் ஹேமாவின் கையை பற்றி வேகமாய் தன் பக்கம் இழுத்துக் கொண்டான். "ஹேமா! நான் உண்மையாகவே அவர்கள் வீட்டுக்கு போய்விடுவேன் என்று நீ நம்புகிறாயா?"

"இப்பொழுதுதானே அவர்களுக்கு சத்தியம் செய்து கொடுத்தாய்."

"போகிறேன் என்று சொல்வதற்கும், நிஜமாகவே போவதற்கும் ஆகாயத்திற்கும், பூமிக்கும் இருக்கும் அளவுக்கு வேறுபாடு இருக்கிறது. அவர்கள் வற்புறுத்திச் சொல்லும்போது வரமாட்டேன் என்று மறுத்துச் சொல்வதற்கு என் மனம் ஒப்பவில்லை. நான் உண்மையிலேயே அவர்கள் வீட்டுக்கு போயிருந்தால் நீ இப்படி என்மீது குற்றம் சாட்டியிருக்கலாம். அவசரப்பட்டு முன்னாடியே சொல்லிவிட்டாய். கன்னத்தில் போட்டுக்கொள். அதுதான் உனக்கு தண்டனை." ரமேஷ் வலுக்கட்டாயமாக ஹேமாவின் கைகளை பற்றிக் கொண்டு அவள் கன்னங்களில் ஒற்றி எடுத்தான்.

"எனக்கு என்ன தெரியும்? நீ நிஜமாகவே சொல்கிறாய் என்று நினைத்துவிட்டேன். மனதில் ஒன்று வைத்துக் கொண்டு வெளியில் வேறு விதமாக பேசுபவர்களை நான் வெறுக்கிறேன்."

"உண்மையாகவா! எனக்குத் தெரியாதே?"

"உனக்குத் தெரியும். நன்றாகவே தெரியும் இருந்தாலும் என் முன்னால் நீ நடித்துக் கொண்டு தான் இருக்கிறாய்."

ரமேஷ் சட்டென்று ஹேமாவின் கைகளை விடுவித்தான். அவன் முகம் சீரியஸாக மாறியது. ஒரு நிமிடம் கழித்து தாழ்ந்த குரலில் சொன்னான்.

"நான் எத்தனை சொன்னாலும் நீ அந்த பெயின்டிங்க் விஷயத்தை நம்பவில்லை. அப்படித்தானே."

"என்னால் நம்பமுடியவில்லை. நம்பிவிட்டது போல் நடிச்சவும் எனக்குத் தெரியவில்லை."

"உன் தலையெழுத்தை யாராலும் மாற்றமுடியாது."

"ஆமாம். நானும் அப்படித்தான் நினைக்கிறேன்." விரக்தியாக ஹேமா சொன்ன இந்த வார்த்தைகள் ரமேஷுக்கு சாட்டையால் அடிப்பது போல் இருந்தன.

"எப்போதும். உன் பக்கத்திலிருந்தே யோசித்து என்னைக் குற்றவாளியாக சுட்டிக் காட்டுவது உனக்கு வழக்கமாகிவிட்டது. ஹேமா! மறுபடியும் சொல்கிறேன். ஏதாவது பிரச்னை இருந்தால் நேரடியாக

பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் அந்த விஷயத்தை மறந்து போய்விட வேண்டும். அவ்வளவுதானே தவிர இப்படி மறை முகமாக பேசுவது எனக்கு பிடிக்காது. அனாவசியமாய் என் பொறு மையை சோதிக்காதே. சமுதாயத்தில் பத்து பேருக்கு நடுவில் இருக்க வேண்டியவன். உனக்கு அனாவசியம் என்று பட்ட விஷயங்கள் எனக்கு அவசியமாக தோன்றலாம். உன்னால் ஏற்றுக்கொள்ள முடி யாத சில விஷயங்களை என்னால் தவிர்க்க முடியாமல் போகலாம். உன் புடவைத் தலைப்பை பிடித்துக்கொண்டு உன் பின்னாடியே சுற்றிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. ச்சீ.. ச்சீ.. கொஞ்சம் ஓய்வு கிடைத்தால் நாலு வார்த்தை சந்தோஷமாக பேசினோம், சிரித்தோம் என்று எதுவும் இல்லை. வரவர இந்த வீட்டில் நிம்மதியே இல்லாமல் போய்விட்டது."

ரமேஷ் சட்டென்று எழுந்து உடைகளை மாற்றிக்கொண்டு கிளப்புக்கு போய்விட்டான்.

42

நான்கு நாட்கள் கழிந்தன.

திருமணம் ஆன பிறகு முதல் முறையாக ரமேஷ் ஹேமாவுடன் பேசாமல் நான்கு நாட்கள் கழிந்துவிட்டன.

ரமேஷ் கோபமாக இருப்பதை ஹேமா முதலில் உணரவில்லை. முதல்நாள் கிளப்புக்கு போனவன் இரவு ரொம்ப நேரம் கழித்து வந்தான். இரண்டாவது நாள் சீக்கிரமாகவே வந்துவிட்டான். கிளப்பிலேயே இரவு உணவை முடித்துக் கொண்டு வந்தான். புதுவீட்டுக்கு வந்த பிறகு இருவரின் படுக்கை அறைகள் தனித் தனியாக இருந்தன. இரண்டு அறைகளுக்கும் நடுவில் கதவு இருந்தது. அது எப்போதும் திறந்தே இருக்கும்.

ரமேஷ் இரவு எத்தனை நேரம் கழித்து வந்தாலும் சரி, தூங்கு வதற்கு முன்பு, ஹேமாவின் அறைக்கு வந்து, தூக்கத்தில் இருக்கும் சுருணாவின் நெற்றியில் மென்மையாக முத்தம் பதிப்பது வழக்கம். காலையில் சுருணா எழுந்து கொண்டதும் நேராக தந்தையின் அறைக்கு ஓட்டமெடுப்பாள். மேலே விழுந்து புரண்டு கலாட்டா செய்து தந்தையை எழுப்புவாள். ரமேஷ், ஹேமா காலையில் காபி

குடிப்பது, சுருணா பாலை அருந்துவது எல்லாமே ரமேஷின் அறையில்தான் நடக்கும். என்றாவது ரமேஷ் சீக்கிரமாக வீட்டுக்கு வந்து அந்த நேரத்தில் சுருணா விழித்துக் கொண்டு இருந்தால் தந்தையிடம் பேசி விளையாடிக் கொண்டே தூங்கிவிடுவாள். பிறகு ரமேஷ் சுருணாவை மெதுவாக தூக்கிக் கொண்டு வந்து ஹேமாவின் கட்டில்மீது படுக்க வைப்பான்.

மூன்றாவது நாள் இரவு ரமேஷ் வரும்போது சுருணா விழித்துக் கொண்டுதான் இருந்தாள். அவன் படுக்கை அறைக்குள் வந்ததும் "டாடீ!" என்று ஓடினாள். இருவரும் ரொம்ப நேரம் பேசி பொழுதை போக்கினார்கள். சுருணா தந்தையின் கட்டில்மீது உறங்கிவிட்டாள். ரமேஷ் ஹேமாவை அழைத்து சுருணாவை தூக்கிக்கொண்டு போகச் சொல்லவும் இல்லை. தானும் தூக்கிக் கொண்டு வந்து ஹேமாவின் படுக்கையில் கொண்டு விடவும் இல்லை. சுருணாவுக்கு போர்வையை போர்த்தி விட்டு, சோபாவில் படுத்துக் கொண்டு உறங்கிவிட்டாள்.

காலையில் எழுந்ததும் ரமேஷ் காபியை குடித்தான். சுருணாவும் பாலை குடித்துவிட்டாள். வேலைக்காரன் வழக்கம்போல் ஹேமா வுக்காக கொண்டு வந்த காபியை ரமேஷ் கட்டில் பக்கத்திலிருந்த மேஜைமீது வைத்துவிட்டு போனான். "காபி ஆறிப் போகிறது வந்து எடுத்துக்கொள்" என்று ரமேஷ் ஹேமாவை அழைக்கவில்லை. ஹேமாவும் தானாகப் போய் காபியை எடுத்துக் கொள்ளவில்லை. அந்த விதமாக நான்கு நாட்கள் ஓடிப் போய்விட்டன.

'ரமேஷுக்குக் கோபம் வரும் அளவுக்கு நான் என்ன செய்து விட்டேன்?' ஹேமா தன்னையே கேட்டுக் கொண்டாள். கணவன் மனைவி என்ற பிறகு சின்னச் சின்ன பிரச்னைகள், சண்டைகள் வராமல் இருக்குமா? கணவன் தவறான பாதையில் போகிறான் என்று தெரிந்தால், அது சரியில்லை என்று எச்சரிக்கும் உரிமையும், அதிகாரமும் அந்த மனைவிக்கு இருக்காதா? ரமேஷ் மனதில் இருக் கும் எண்ணம் ஹேமாவால் புரிந்து கொள்ள முடிந்தது. வீட்டை அலங்கரிக்க வாங்கிய பொருளைபோல் மனைவியும் ஒரு அலங் காரப் பதுமையாக இருக்க வேண்டும் என்று அவன் நினைக்கிறான்.

"என்னால் அப்படி இருக்கமுடியாது." ஹேமாவின் மனதில்

திரும்பத் திரும்ப இந்த எண்ணம் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

அன்று மதியம் மூன்று மணிக்கு மாதுரி ரமேஷை அவசரமாக வரச்சொல்லி போன் செய்தாள். ரமேஷ் உடனே கிளம்பிப் போய்விட்டான்.

மாலையில் வீட்டில் தனியாக உட்கார்ந்திருந்த ஹேமாவுக்கு கவலையினால், தனிமையினால் மனம் குன்றியிருந்தது.

"மம்மீ என்னோடு விளையாட யாருமே இல்லை. பார்கிற்கு போகலாம்." கருணா பிடிவாதம் பிடித்தாள். ஹேமாவுக்கு அந்த நிமிடத்தில் எங்கேயும் போவதற்கு தெம்பு இல்லாவிட்டாலும், மகளுக்காக பார்கிற்கு கிளம்பினாள். கார் தேவையில்லை என்று சொல்லிவிட்டு கருணாவின் கையை பிடித்துக்கொண்டு காலார நடக்கத் தொடங்கினாள். தெருவில் மக்கள் வேகவேகமாக போய்க் கொண்டிருந்தார்கள்.

"இவர்களுக்கு எந்த கவலையும் இல்லை போலும்." ஹேமா பெரு மூச்சுவிட்டாள்.

இருவரும் பார்க்கை அடைந்தார்கள். ஏற்கனவே அங்கே நிறைய குழந்தைகள் விளையாடிக் கொண்டு இருந்தார்கள்.

கருணா அடிக்கடி அந்த இடத்திற்கு வந்து போவதால் பெரும் பாலான குழந்தைகளை அவளுக்கு தெரியும். ஹேமா மகளை ஒரு கண்ணால் கவனித்துக் கொண்டே சற்று இடைவெளி விட்டு புல்தரையில் உட்கார்ந்துகொண்டாள்.

தொலைவில் இருந்த பெஞ்சியின்மீது அந்தப் பக்கமாக திரும்பி கொண்டு யாரோ புத்தகத்தை படித்துக்கொண்டு இருந்தார்கள். இந்த சத்தம், சந்தடி எதுவும் அந்த நபரின் காதில் விழுந்ததுபோல் தெரியவில்லை. ஒருவேளை காது கேட்காதோ?

ஹேமாவின் யோசனைகள் ரமேஷை சுற்றி வந்தன. தலையை குனிந்துகொண்டே பசும்புல்லை பிடுங்கிக் கொண்டிருந்தாள். ரமேஷுக்கு தகுந்த மனைவி நான் இல்லையோ? திருமணம் ஆன புதிதில் எத்தனை மகிழ்ச்சியாக இருந்தோம்! பாழாய் போன பணம்! மனிதனின் தேவைகளுக்கு மிஞ்சி பணம் இருக்கக்கூடாது. அன்று அவனைச்சுற்றி இத்தனை பேர் இருக்கவில்லை. பணம் போற

வில்லை என்ற பிரச்னையை தவிர வேறு எந்த இடைஞ்சலும் இருந்தது இல்லை. பணம் அதிகம் ஆகஆக பிரச்னைகளும் அதிகரித்து விட்டன. ரமேஷுக்கு குடி, சீட்டாட்டம் போன்ற பழக்கங்கள் இல்லைதான். ஆனால் அதைவிட பயங்கரமான பழக்கம் அவனை பிசாசுபோல் ஆட்டுவித்துக் கொண்டிருந்தது. அதுதான் பணம்! அவனுடைய எண்ணங்கள் எப்போதும் பணத்தை சுற்றி வந்தன. எத்தனை சம்பாதித்தாலும் இன்றும் வேண்டும் என்ற தவிப்பு. பணம் தான் உலகம் என்று நினைத்துவிட்ட மனிதனுக்கு இயந்திரமாக மாறுவதை தவிர வேறு வழியில்லை.

தலையை குனிந்து கொண்டு, ஏதோ நினைவுகளில் மூழ்கிவிட்ட ஹேமா "அம்மா!" என்ற கத்தலை கேட்டதும் சரேலென்று தலையை திருப்பிப் பார்த்தாள். கருணா முள்வேலியின்மீது விழுந்து கிடந்தாள்.

ஹேமா மின்னலைவிட வேகமாக அந்த இடத்திற்கு ஓடினாள்.

கருணா விளையாடும்போது எப்படி விழுந்தாளோ தெரிய வில்லை. முள்வேலியின்மீது குப்புற விழுந்துவிட்டாள். இருட்டி, ஒரு கண்ணுக்கு அருகில் ஆழமாக குத்தி, ரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தது.

ஹேமா சட்டென்று மகளை எடுத்து அணைத்துக்கொண்டாள். பார்த்துக் கொண்டிருக்கும்போதே கண் நன்றாகவீங்கி விட்டது.

"மம்மீ! கண் எரிகிறது. கண்ணைத் திறக்க முடியவில்லை." கருணா அழத் தொடங்கிவிட்டாள்.

குழந்தைகள், பெரியோர்கள் எல்லோரும் கும்பலாக சூழ்ந்து கொண்டார்கள். தொலைவில் பெஞ்சிமீது அமர்ந்து புத்தகத்தை படித்துக்கொண்டிருந்த சுதாகர் கூட இந்த சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தான். மக்கள் கும்பலாக கூடியிருந்தார்கள். கருணாவின் அலறலை கேட்டு அவனும் ஓடி வந்தான்.

காயம் ஆழமாக பட்டிருந்தது. இரத்தப் பெருக்கை நிறுத்துவதற் காக ஹேமா சட்டென்று புடவைத் தலைபை எடுத்து காயத்தின்மீது அழுத்தினாள். அப்படியும் இரத்தம் வெறியேறுவது நிற்கவில்லை.

கருணாவின் அழுகையை, இரத்தத்தை பார்த்ததும் ஹேமாவுக்கு

கையும், காலும் ஓடவில்லை.

"என்ன ஆச்சு?" பின்னாலிருந்து வந்த சுதாகர் ஹேமாவின் அனுமதிக்காக காத்திருக்காமலேயே கருணாவின் முகவாயை பற்றி காயத்தை பரிசிலித்தான்.

"ஆழமாக பட்டிருக்கு. உடனே டாக்டரிடம் அழைத்துப்போவது நல்லது" என்று சொல்லிக் கொண்டே சட்டைப் பையிலிருந்து கைக்குட்டையை எடுத்து காயத்தின் மீது ஒற்றினான்.

"இங்கே டாக்ஸி ஏதாவது கிடைக்குமா?" கார் வேண்டாமென்று மறுத்து விட்டு வந்ததற்கு ஹேமா தன்னைத்தானே உள்ளூர கடிந்து கொண்டாள்.

"நோ... நோ... பக்கத்திலேயே என்னுடைய நண்பன் க்ளினிக் வைத்திருக்கிறான். அங்கே அழைத்துச் போவோம். வாங்க" என்று சொல்லிக் கொண்டே ஹேமாவின் கையிலிருந்து கருணாவை தூக்கிக் கொண்டான்.

"டாடீ டாடீ எனக்கு டாடீ வேணும்." கருணா துடித்துக் கொண்டே அழுது கொண்டிருந்தாள்.

ஹேமா சுதாகரை பின்பற்றி நடந்தாள். கருணாவுக்கு அடிபட்டு விட்டதே என்ற வேதனை ஒரு பக்கம்! திடீரென்று வானத்திலிருந்து குதித்தது போல் வந்து நின்ற சுதாகரை பார்த்த அதிர்ச்சி மற்றொரு பக்கம்! அவளுடைய மூளை செயல்பட மறுத்துலிட்டது.

டாக்டர் கருணாவை பரிசோதித்து, காயத்திற்கு தையல் போட்டு, கட்டு கட்டினார்.

"உடனே அழைத்து வந்தது நல்லதாகி விட்டது. காயம் சிக்கரமாக ஆறிவிடும். கவலைப்பட வேண்டாம்" என்றார் டாக்டர்.

"வாசு! உன்னுடைய கார் சாவியை கொடு. அவர்களை இறக்கி விட்டு வருகிறேன்." சுதாகர் சொன்னான்.

"பரவாயில்லை. டாக்ஸியில் போய் விடுகிறேன்" என்றாள் ஹேமா.

சுதாகர் அவள் சொன்னதை காதில் வாங்காதது போல் கார் சாவியை பெற்றுக் கொண்டு "வாங்க" என்று சொல்லிக்கொண்டே வெளியில் நடந்தான்.

"டாக்டர் உங்கள் ஃபீஸ்" ஹேமா தயங்கிக்கொண்டே கேட்டாள்.

"பரவாயில்லை. சுதாகர் என்னுடைய பெஸ்ட் ஃபிரண்ட்" என்றார் டாக்டர்.

சுதாகர் காரை டிரைவ் செய்து கொண்டிருந்தான். ஹேமா கருணாவை மடியில் படுக்க வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

சுதாகர் வழியில் எதுவும் பேசவில்லை. கார் வீட்டின் முன்வந்து நின்றது. சுதாகர் காரிலிருந்து இறங்கி, ஹேமா இறங்குவதற்காக கதவைத் திறந்தான்.

ஹேமா கருணாவை தூக்கிக்கொண்டு இறங்கினாள்.

நன்றியைத் தெரிவிக்கும் வகையில் அவனிடம் ஏதாவது சொல்ல வேண்டும் என்று ஹேமாவின் இதழ்கள் லேசாக அசைந்தன, பிறகு சாத்தியப்படாதது போல் நின்றுவிட்டன.

சுதாகர் குழந்தையின் பக்கம் பார்த்துக் கொண்டே "பெயர் என்ன?" என்று கேட்டான்.

"கருணா!"

"ரொம்ப நல்ல பெயர்."

மறுபடியும் இருவருக்கும் இடையே நிசப்தம் நிலவியது.

"போய் வருகிறேன்." சுதாகர் தலையை உயர்த்தினான். அந்த கண்களில் தென்பட்ட ஆயிரம் உணர்வுகள் மனதைத் தாக்கியது போல் இருந்தது.

ஹேமா கருணாவை தூக்கிக்கொண்டு அப்படியே நின்றிருந்தாள். அவன் காரை மெதுவாக ஸ்டார்ட் செய்துகொண்டு கிளம்பிப் போய்விட்டான்.

அவள் கற்சிலையாக நின்றுவிட்டாள். சுதாகர் உள்ளே வரவில்லை. வரச்சொல்லி அழைப்பதற்கு அவள் குரல் ஒத்துழைக்கவும் இல்லை. இந்த வீடு அவன் பிறந்து வளர்ந்த வீடு. அப்படி இருக்கும் போது ஒருமுறைகூட அந்த வீட்டை ஏறெடுத்து பார்க்கவில்லை

வேற்று மனிதர்களின் வீட்டுக்கு வந்தது' போல் வாசலோடு போய்விட்டான்.

ஹேமா வீட்டில் காலடி எடுத்து வைத்ததும் ரமேஷுக்கு போன் செய்தாள். அவன் கிளப்பில் இருந்தான்.

"என்ன? கருணா முள்வேலி மீது விழுந்துவிட்டாளா? அடி ரொம்பபட்டுவிட்டதா? கண்ணுக்கு ஆபத்து எதுவும் இல்லையே?" பதட்டத்துடன் கேட்டான்.

"பரவாயில்லை. ஆபத்து எதுவும் இல்லை என்று டாக்டர் சொன்னார்."

"நான் இப்பொழுதே வீட்டுக்கு வருகிறேன்." போனை வைத்து விட்டான்.

ரமேஷ் காரிலிருந்து இறங்கி வேகமாக உள்ளே வந்தான். கருணா உறங்கிவிட்டிருந்தாள்.

ஹேமா சுதாகரை பற்றி சொல்ல வேண்டும் என்று நினைத்தாள். ஆனால் எவ்வளவு முயற்சி செய்தாலும் வாயிலிருந்து வார்த்தைகள் வெளியில் வரவில்லை.

"பரவாயில்லை. உன் மூளை சுறுசுறுப்பாகத்தான் செயல் பட்டிருக்கிறது. பதட்டபடாமல் உடனே டாக்டரிடம் அழைத்துச் சென்றிருக்கிறாய்." ரமேஷ் சொன்னான்.

கருணாவுக்கு அடிபட்டுவிட்டது என்று தெரிந்ததும் எத்தனை ரகளை செய்வானோ என்று பயந்துகொண்டே இருந்த ஹேமாவுக்கு ரமேஷ் சொன்னதை கேட்டதும் இதயத்திலிருந்து பெரிய பாரம் இறங்கிவிட்டதுபோல் இருந்தது.

அந்த விதமாக கருணாவுக்கு காயம் ஏற்பட்ட நிகழ்ச்சி, கணவன் மனைவிக்கு நடுவில் இருந்த மௌனத்திரையை களைத்தெரிந்து, மறுபடியும் பழைய நிலைக்கு திரும்பும் விதமாக செய்தது.

43

ஹேமா மகளுக்காக ஹார்லிக்ஸ் கலந்து எடுத்துக் செல்லும் போது ஹாலில் போன்மணி ஒலித்தது.

ஹேமா ஒரு நிமிடம் நின்றாள். அந்த போன்கால் தனக்காகத்

தான் என்பது போலவும், சிக்கிரமாக வந்து எடுக்கச் சொல்லி அவசரப்படுத்துவது போலவும் மணி ஒலித்துக் கொண்டே இருந்தது. ஆனால் அவளால் உடனே போகமுடியவில்லை. ஸ்பூனால் டம்ளரில் இருந்த ஹார்லிக்ஸை கலக்கிக் கொண்டு ஒரு நிமிடம் அப்படியே இருந்தாள். ஹாலுக்குள் எட்டிப் பார்த்த வேலைக்காரனும், சமையல்காரனும் ஹேமா அங்கே இருப்பதை பார்த்துவிட்டு மறுபடியும் தங்களுடைய வேலைகளில் ஈடுபட்டார்கள். ஹேமா போய் ரிசிவரை எடுத்தாள்.

மறுமுனையில் இருந்தவர்கள் உடனே ஹலோ என்று சொல்ல வில்லை.

"ஹலோ" ஹேமா சொன்னாள்.

"யார் பேசுவது?"

அந்தக்குரலை ஹேமா இதுவரையில் எப்போதும் கேட்டது இல்லை.

"நான்தான். மிஸஸ் ரமேஷ்சந்திரா."

"ஹலோ ஹேமா! நான்தான் சுதாகர் பேசுகிறேன். குழந்தைக்கு இப்போ எப்படி இருக்கு?" சுதாகரின் குரல் பதட்டமாய் ஒலித்தது.

ஹேமாவின் வாயிலிருந்து உடனே எந்த பதிலும் வரவில்லை.

"ஜுரம் எதுவும் வரவில்லையே?" மறுபடியும் அவனே கேட்டான்.

"ஊஹூம்."

"நன்றாக விளையாடுகிறாளா?"

"ஊம்."

சுதாகர் ஒரு நிமிடம் நிசப்தமாக இருந்துவிட்டான். ஹேமா அவன் போன் வைத்துவிடட்டும் என்று காத்திருப்பதுபோல் நின்றிருந்தான்.

"இந்த விஷயம் தெரிந்துக் கொள்வதற்காகத்தான் போன் செய்தேன்."

"ஊம்."

அவன் வைத்துவிடுவான் என்று அவளும், அவள் வைத்து விடுவாள் என்று அவனும் ஒரு நிமிடம் காத்திருந்தார்கள்.

"ஓகே. ஹேமா!" அவன் குரல் வித்தியாசமாக ஒலித்தது.

சுதாகர் போனை வைத்துவிட்டான். ஹேமா ரிசிவரை மெதுவாக வைத்தாள்.

இரவு முழுவதும் எத்தனையோ சிரமப்பட்டு அடக்கி வைத்திருந்த ஹேமாவின் மனம் மறுபடியும் அல்லகல்லோலமாய் மாறியது. அவன் எவ்வளவு சாதாரணமாக பேசுகிறான்? எத்தனை முயற்சி செய்தாலும் தன்னால் அப்படி பேசமுடியாது என்று தோன்றியது.

ஹேமா ஹார்லிக்ஸ் எடுத்துக்கொண்டு அறைக்குள் வந்தபோது ரமேஷ் மகளை மடியில் உட்கார வைத்துக்கொண்டு பேசிக் கொண்டிருந்தான். கருணாவுக்கு தந்தையின் தலைமுடியை சீப்பால் வாரிவிடுவது ரொம்ப பிடிக்கும். அவனும் மகளின் கையில் தலையை ஒப்படைத்துவிட்டு, மகள் இஷ்டம் வந்ததுபோல் தலைமுடியை கலைத்துக் கொண்டிருப்பதை ரசித்துக்கொண்டிருந்தான்.

ஹேமா அறையில் நுழையும்போது ரமேஷ், "யாரும்மா அந்த அங்கிள்?" என்று கேட்டுக்கொண்டிருந்தான்.

"புது அங்கிள் டாடி!" எப்போதும் பார்க்கில் உட்கார்ந்து கொண்டு புத்தகம் படித்துக்கொண்டிருப்பார்."

"அப்படியா? அந்த கடவுள்தான் என் கண்ணாம்மாவுக்காக அங்கிளை அந்த இடத்திற்கு அனுப்பிவைத்திருப்பார் போலும்." மகள் நெற்றியின் காயத்தை பார்த்துக்கொண்டே சொன்னான்.

நேற்று பார்க்கில் அடிப்பட்டதும் யாரோ ஒரு அங்கிள் பயப்பட வேண்டாம் என்று சொன்னது, தன்னை தூக்கிக் கொண்டு டாக்டரிடம் அழைத்துச் சென்றது, கட்டு போட வைத்துவிட்டு காரில் வீட்டுக்கு அழைத்து வந்தது, எல்லா விவரங்களையும் மழலை மொழியில் தந்தையிடம் சொல்லிவிட்டாள்.

"மம்மி அந்த அங்கிளை வீட்டுக்குள் அழைத்து காபியாவது கொடுத்தாளா?" ரமேஷ் கேட்டான்.

"ஊஹூம்." சுருணா தலையை குறுக்காக அசைத்தாள்.

"மம்மிக்கு கொஞ்சம்கூட மேனர்ஸ் தெரியவில்லை சுண்

ணம்மா!" ரமேஷ் மனைவி பக்கம் பார்த்துக்கொண்டே சொன்னான். ஹேமா தலையை உயர்த்தாமலேயே மகள் கையில் ஹார்லிக்ஸ் டம்ளரை கொடுத்தாள்.

"என்ன ஹேமா! வரவர உற்சாகமே இல்லாததுபோல் வளைய வருகிறாய். அவன் யாரோ கடவுளைபோல் வந்து நம் குழந்தையை காப்பாற்றி இருக்கிறான். அவனை உள்ளே அழைத்து ஒரு வாய் காபியாவது கொடுத்து நன்றி தெரிவித்துக்கொள்ள வேண்டும் என்று உனக்கு தோன்றவில்லையா?" ரமேஷின் குரலில் வருத்தம் தென்பட்டது.

"ச்சி..... ச்சி..... ஹார்லிக்ஸ் ஆறிப்போச்சு. எனக்கு வேண்டாம்." கருணா டம்ளரை கீழே வைத்துவிட்டாள்.

"ரொம்ப சூடாக குடிக்கக் கூடாது கண்ணம்மா! நல்ல பெண் இல்லையா? குடித்துவிடு" ரமேஷ் கெஞ்சினான்.

"கொஞ்சம்கூட சூடே இல்லை டாடி!"

"அப்படியா?" ரமேஷ் டம்ளரை கையில் எடுத்துப் பார்த்தான். சில்லென்று இருந்தது.

அவன் வியப்புடன் தலையை உயர்த்திப் பார்த்தான்.

"என்ன ஹேமா? இதை கலந்தது நீதானா?"

ஹேமா தலையை அசைத்தாள்.

"நீ விழித்துக் கொண்டுதான் இருக்கிறாயா? இல்லை தூக்கத்தில் நடக்கிறாயா? இவ்வளவு சில்லென்று இருந்தால் எப்படி குடிப்பாள்?"

"இப்படி கொடுங்க. மறுபடியும் கலந்துகொண்டு வருகிறேன்." ஹேமா தலையை உயர்த்தாமலே டம்ளரை எடுத்துக்கொண்டு அங்கிருந்து போய்விட்டாள்.

"அடுத்த தடவை அங்கிளை பார்த்தால் நானே தாங்க்ஸ் சொல்லட்டுமா டாடி!"

"டாடியும் தாங்க்ஸ் சொன்னார் என்று சொல்லு. நம் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வா."

சுருணா பொம்மைகளுடன் விளையாடுவதில் மூழ்கிவிட்டாள்.

ரமேஷின் மனம் ஹேமாவை சுற்றி சுற்றி வந்தது.

"ஹேமா ஏன் இப்படி மாறிவிட்டாள்? அவளுக்கு நான் என்ன குறைய வைத்திருக்கிறேன்?" என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

தலையை குனிந்துகொண்டு அறையைவிட்டு வெளியேறிய ஹேமாவின் முகத்தை பார்க்கும்போது அவனுக்கு என்னவோபோல் இருந்தது. அவள் மனதில் இருக்கும் அதிருப்திக்கு காரணம் என்ன வென்று அவனுக்குப் புரிந்தது.

44

கருணாவை மறுபடியும் அந்த பார்க்கிற்கு போகவிடாமல் தடுக்க வேண்டும் என்று ஹேமா ரொம்ப முயற்சி செய்தாள். ஆனால் சாத்தியப்படவில்லை. குழந்தைகள் விளையாடுவதற்காக எல்லா வசதிகளும் நிறைந்த பூங்கா என்பதால் கருணா அந்த இடத்திற்குத் தான் போக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள்.

ரமேஷ் கருணாவுக்கு துணையாக வேலைக்காரனை அனுப்பி வைத்தான். இருட்டும் நேரம் கருணா உற்சாகமாக குதித்துக் கொண்டு வீட்டுக்கு திரும்பி வந்தாள்.

"மம்மீ! அந்த அங்கிளை பார்த்தேன். தாங்க்ஸ் சொன்னேன். வீட்டிற்குள் அழைத்து உபசாரம் செய்யவில்லை என்று மம்மியை டாடி கோபித்துக்கொண்டார்" என்று சொன்னேன்.

மகளுடைய உடைகளை மாற்றிக்கொண்டிருந்த ஹேமா சட்டென்று நின்றுவிட்டாள். பிறகு கருணாவின் கன்னத்தில் பளா ரென்று ஒரு அடி கொடுத்தாள்.

"யார் சொல்லச் சொன்னாங்க உன்னை? வரவர உனக்கு வாய் ரொம்ப அதிகமாகிவிட்டது."

ஒரு நிமிடம் திகைத்துப்போன கருணா பிறகு உரத்த குரலில் அழத் தொடங்கினாள். ஹேமா பொறுமையை கடைபிடித்து மகளை சமாதானப்படுத்த முயன்றாள். கருணா அழுகையை நிறுத்துவதாக இல்லை.

கோபத்தினால் ஹேமாவுக்கு உடல்பற்றி எரிவதுபோல் இருந்தது.

ஏமாற்றமாகவும் இருந்தது. இருப்பதோ ஒரே ஒரு குழந்தை. தன்னிடம் கொஞ்சம்கூட மதிப்போ, பயமோ கிடையாது. தாயின் பேச்சை லட்சியம் செய்யாத, பிடிவாத குணம்.

ரமேஷ் வீட்டுக்கு வந்தான். தந்தையை பார்த்ததும் கருணாவுக்கு துக்கம் பொங்கிக்கொண்டு வந்தது.

"என்ன கண்ணம்மா? என்ன ஆச்சு?" மகளை தூக்கிக் கொண்டே கேட்டான்.

"மம்மீ அடித்துவிட்டாள்." கருணா அழுகையினூடே சொன்னாள்.

"மம்மீ உன்னை அடித்தாளா? இரு நாம் இருவரும் சேர்ந்து அம்மாவுக்கு பனிஷ்மெண்ட் கொடுப்போம்." ரமேஷ் மகளை தூக்கிக்கொண்டே ஹேமாவின் அருகில் சென்றான். ஹேமாவின் பின்னலை பிடித்து அவளை குனியச்செய்து முதுகில் அடி கொடுப்பதுபோல் நடித்தான். ஹேமா அவனுடைய கையை வேகமாக தள்ளிவிட்டாள்.

"நீ அவளுக்கு கொடுக்கிற செல்லம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. தெரியுமா?"

"தெரியும். பெற்றோர்கள் அடிப்பார்களோ என்ற பயம் குழந்தைகளுக்கு இருக்கவேண்டும். அவ்வளவுதானே தவிர, குழந்தைகளை ஒருநாளும் கையை நீட்டி அடிக்கக்கூடாது." சீரியஸாக சொன்னான்.

"வயதுக்கு மீறிய பேச்சுகளை பேசிக்கொண்டிருந்தால் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கச் சொல்கிறாயா?"

"சும்மா இருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லையே? தவறுகள மென்மையான முறையில் எடுத்துச்சொல்லி திருத்த முயற்சி செய்ய வேண்டும்."

"கருணாவின் விஷயத்தில் உன் போக்கு ரொம்ப விபரீதமாக இருக்கிறது."

"எனக்கு இருப்பது அவள் ஒருத்திதான். அதை மறந்துவிடாதே."

கருணா அழுகையை நிறுத்திவிட்டு தீவிரமாக வாதம் புரிந்து

கொண்டிருந்த பெற்றோரை மாறி மாறி பார்த்துக்கொண்டிருந்தாள். அதைக் கவனித்த ரமேஷ் மகளை தூக்கிக் கொண்டு கன்னத்தில் முத்தம் பதித்தான்.

"மம்மீக்கு விளையாடுவதற்கு பிரண்ட் யாருமே இல்லை என்று கோபம் கண்ணம்மா. பொழுது போகவில்லை இல்லையா? என்னுடன் சண்டை போடுகிறாள். உன்னை அடிக்கிறாள். பாவம் மம்மீ. நாம் ஒன்றுமே சொல்லவேண்டாம். சரிதானே?" என்றான்.

சரி என்பதுபோல் கருணா தலையை அசைத்தாள்.

"எங்கே மம்மிக்கு ஒரு கிஸ் கொடு." ஹேமாவின் அருகில் மகளை அழைத்துச் சென்றான்.

கருணா விருப்பம் இல்லாமலேயே தாயின் கன்னத்தில் இதழ்களை ஒற்றி எடுத்தாள்.

அன்று இரவு கருணா தந்தையின் கட்டில் மீதே தூங்கிப் போய்விட்டாள். இரவு பத்து மணி ஆன பிறகு ஹேமா கருணாவை தூக்கிக் கொண்டு போவதற்காக வந்தாள்.

ஏதோ ஃபைல்களை பார்த்துக்கொண்டிருந்த ரமேஷ் "வேண்டாம். இங்கேயே இருக்கட்டும்" என்றான்.

ஹேமா தன்னுடைய அறைக்கு வந்தாள். கருணாவை அடித்ததற்கு தண்டனையாக மறுபடியும் நான்கு நாட்களாவது தன்னுடன் பேசமாட்டான் போலும். ஹேமாவுக்கு திடீரென்று அந்த வீடு பயங்கரமாக, சூனியமாக தோன்றியது. தூங்குவதற்கு முன் கீழே சென்று எல்லா கதவுகளும் சரியாக பூட்டியிருக்கிறதா? என்று பார்த்துவிட்டு வருவது வழக்கம். இன்றும் அதேபோல் சரி பார்த்து விட்டு ஹாலுக்கு வந்தவள் மாடிபடி அருகில் ஒரு நிமிடம் நின்று விட்டாள். மாடிக்கு போகவேண்டும் என்று தோன்றவில்லை. ஆனால் வேலைக்காரர்கள் இருக்கும் வீட்டில் ரொம்ப கவனமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் சின்ன விஷயம்கூட கண்ணும் மூக்கும் வைக்கப்பட்டு ஊர் முழுவதும் பரவிவிடும்.

ஹேமா உடலில் இருக்கும் சக்தி முழுவதும் திரட்டிக்கொண்டு மெதுவாக படியேறி மாடிக்கு போனாள்.

ஏதோ நினைவில் உள்ளே வந்து, படுக்கை அறையின் கதவுகளை

சாத்திவிட்டு திரும்பிய ஹேமா கற்சிலையாக நின்றுவிட்டாள். அறையில் கட்டில்மீது உட்கார்ந்திருந்த ரமேஷ் தலையணையில் சாய்ந்துக்கொண்டு, ஏதோ ஆழமாக யோசித்துக்கொண்டிருந்தான். அவனுடைய புருவங்கள் முடிச்சேறியிருந்தன.

கதவு சாத்திய சத்தம் கேட்டதும் தலையை உயர்த்தினான்.

"ஹேமா! இங்கே வா. உன்னிடம் சில விஷயங்களை பேச வேண்டும்" என்றான்.

ஹேமா கட்டில் அருகில் சென்றாள். ஆனால் உட்காரவில்லை. கட்டில் பக்கத்தில் இருந்த டிரெஸ்ஸிங் டேபிள் மீது சாய்ந்து நின்றுகொண்டாள்.

"நம் இருவருக்கும் இடையே இப்படி அடிக்கடி சண்டை, சச்சரவுகள் வருவானேன் ஹேமா? "என்றான்.

ஹேமா பதில் சொல்லவில்லை. தலையை குனிந்துகொண்டு நின்றிருந்தாள்.

"சில சமயம் யோசிக்கும்போது, பணம் இல்லாத அந்த ஆரம்ப காலத்தில் நாம் ரொம்ப சந்தோஷமாக வாழ்ந்ததுபோல் தோன்றுகிறது. பொருள் ரீதியாக வசதி வந்துவிட்டால் நாம் இன்னும் சந்தோஷமாக இருக்க முடியும் என்று எதிர்பார்த்தேன். நம் இருவரில் தவறு யாருடையது என்று தெரியவில்லை. சுகமாக வாழ்க்கை நடத்தவேண்டிய நாம் எதனாலோ அதை இழந்து கொண்டிருக்கிறோம்."

ஹேமா மௌனமாக கேட்டுக்கொண்டு இருந்தாள்.

ரமேஷ் திடீரென்று கையை நீட்டி ஹேமாவின் கையை பற்றிக் கொண்டே கேட்டான்.

"ஹேமா! உன் மனதில் இருப்பதை எந்த தயக்கமும் இல்லாமல் சொல்லு. என்னால் உனக்கு ஏதாவது அதிருப்தி ஏற்பட்டதா?"

ஹேமாவால் பதில் சொல்லமுடியவில்லை. எதுவாக இருந்தாலும் தயங்காமல் சொல்லு என்று கேட்கிறான். சொன்னால் அவனால் தாங்கிக் கொள்ள முடியுமா?

ரமேஷ் ஹேமாவை மெதுவாக தன்பக்கம் இழுத்துக்

கொண்டான். ஹேமா கட்டில்மீது அவனுக்கு அருகில் அமர்ந்து கொண்டாள்.

அவன் சொல்லத் தொடங்கினான். "ஹேமா! வாழ்க்கையே ஒரு ஒட்டப்பந்தயம் போல் எனக்குத் தோன்றுகிறது. சில விஷயங்களில் நான் முரண்பாடாக நடந்துகொள்வது எனக்கே புரிகிறது. ஆனால் எது நல்லது, எது கெட்டது என்று யோசித்து முடிவு செய்யும் அளவுக்கு சில சமயம் நேரம் இருப்பதில்லை. தாமதம் செய்தால் மற்றவர்களைவிட பின்தங்கி விடுவேனோ என்ற பயம் என்னை எப் போதும் துரத்திக்கொண்டே இருக்கிறது. நான் எதையும் எதிர் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால் பசியும், பட்டினியும் நிறைந்த அந்த பழைய வாழ்க்கைக்கு திரும்ப என்னால் முடியாது. எனக்குத்தான் தோன்றுகிறதோ இல்லை உலகில் ஒவ்வொரு ஆணும் இதேபோல் யோசிப்பானோ தெரியாது. ஆனால் வெளி உலகில் எனக்கென்று ஒரு அடையாளம், மதிப்பு இல்லாமல் என்னால் உயிர் வாழ முடியாது என்று தோன்றுகிறது."

ரமேஷ் ஹேமாவின் மார்பில் தலையை சாய்த்துக்கொண்டான்.

"அந்த அடையாளத்திற்காக, அந்த மதிப்பை பெறுவதற்காக ஏதாவது செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். நீ என்னை புரிந்துகொள்ள முயற்சி செய் ஹேமா! ஒருக்கால் நான் செய்யும் வேலைகள் உனக்கு பிடிக்கவில்லை என்றால் எடுத்துச்சொல்ல முயற்சி செய். ஆனால் என்மீது கோபம் மட்டும் கொள்ளாதே. புரிந்ததா?"

அவன் சொன்ன வார்த்தைகளில் எந்த சக்தி இருந்ததோ தெரிய வில்லை. ஹேமாவின் மனதை அலைக்கழித்துக் கொண்டிருந்த சந்தேகங்கள் மாயமாய் மறைந்துவிட்டன. அவனுடைய தோளைச் சுற்றி கையை போட்டாள்.

"இன்னொரு விஷயமும் உன்னிடம் சொல்ல விரும்புகிறேன் ஹேமா! ஏதாவது பிரச்சனைகள், சந்தேகங்கள் இருந்தால் நாம் இரு வரும் தனிமையில் இருக்கும்போது பேசிக்கொள்வோம். கருணா வின் முன்னாடி வாதம் புரிய வேண்டாம். அப்பாவுக்கும், அம்மாவுக் கும் ஒத்துப் போகாது என்ற எண்ணம் அந்த பிஞ்சு மனதில் பதிய

இடம் தர வேண்டாம்."

அவள் தலையை அசைத்தாள்.

சற்று நேரம் கழித்து ரமேஷ் தன் பக்கத்தில் படுத்திருந்த மனைவியின் தலையை உயர்த்தி மார்போடு அணைத்துக்கொண்டே "ஹேமா! உன் அதிருப்திக்குக் காரணம் என்னவென்று சொல்லட் டுமா?" என்றான்.

"என்ன?"

"நமக்கு இன்னொரு குழந்தை வேண்டும். கருணா வளர்ந்து விட்டாள். உனக்கு பொழுதே போகவில்லை. அதான் என்னுடன் சண்டை போடுகிறாய்."

"நன்றாக இருக்கு" கலகலவென்று சிரித்துவிட்டாள்.

"உன் சிரிப்பை கேட்டு எத்தனை நாளாகிறது? இப்படி காதருகில் உன் சிரிப்பை கேட்கும்போது திருமணம் ஆன புதிதில் நாம் வாழந்த வாழ்க்கை நினைவுக்கு வருகிறது." ரமேஷ் சொன்னான்.

"அப்போ சந்தோஷம் இருந்தது. சுகம் இருக்கவில்லை. இன்று சுகம் இருக்கிறது. ஆனால் சந்தோஷம்தான் குறைந்துகொண்டே போகிறது." ஹேமா பெருமூச்சுவிட்டாள்.

45

ரமேஷ் அன்று மாலை வீட்டிலேயே இருந்தான். ஐந்து மணி ஆனதும் டிரெஸ் செய்துகொண்டு தயாராக இருந்த கருணா தந்தையையும் தன்னுடன் வரச்சொல்லி அடம் பிடித்தாள்.

"மம்மீயை ரெடியாகச் சொல்லு. போகலாம்." பேப்பரை பார்த்துக் கொண்டே ரமேஷ் சொன்னான்.

"சினிமாவுக்கு போகலாம் என்றால்கூட நேரம் தாண்டிவிட்டது. இந்த நேரத்தில் எங்கே போகமுடியும்?" ஹேமா கேட்டாள்.

"பார்க்கிற்கு போகலாம்." கருணா உடனே சொன்னாள்.

ஹேமா திடுக்கிட்டாள்.

"இந்த நேரத்திலா? இருட்டிக்கொண்டு வருகிறது. டாடி காலை யில் மறுபடியும் ஊருக்கு போக வேண்டும். இன்னொரு தடவை போய்க்கொள்ளலாம். சரிதானா!" ஹேமா மகளை சமாதானப்

படுத்த முயன்றாள்.

"இன்னொரு தடவை வேண்டாம். இப்போதே போகலாம். பார்க்கிற்கு போகலாம் டாடீ!" கருணா குரலை உயர்த்தினாள்.

ரமேஷ் பேப்பரை மடித்து பக்கத்தில் வைத்துவிட்டான். "போகலாம் கண்ணம்மா. இந்த சின்ன விஷயத்திற்கு யாராவது அழுவார்களா? "ஹேமா! உடனே கிளம்பு. கருணாவுடன் அப்படியே ஒரு ரவுண்ட் போய்விட்டு வருவோம்."

"நீங்க இருவரும் போய் வாருங்கள். எனக்கு சோர்வாக இருக்கு." ஹேமா தப்பித்துக் கொள்ள முயன்றாள்.

"கிளம்பு ஹேமா!" ரமேஷின் குரல் பொறுமையின்றி ஒலித்தது. ஹேமா வேறு வழியில்லாமல் புடவையை மாற்றிக்கொண்டு வந்தாள்.

மூவரும் காரில் போகும்போது ஹேமா சொன்னாள்.

"பார்க்கிற்குதான் போகணுமா. ஹோட்டலுக்கு போய் ஜாலியாக ஐஸ்க்ரீம் சாப்பிடலாமே."

"என்ன கண்ணம்மா? உன் விருப்பம் என்ன?" ரமேஷ் மகளிடம் கேட்டான்.

"ஊஹூம். முதலில் பார்க். பிறகு ஐஸ்கிரீம் சாப்பிடலாம்."

"ரைட். பார்க்கிற்குதான் எங்கள் வோட்டு!" ரமேஷ் காரை இடதுபக்கம் திருப்பினான்.

"அவளுடைய பிடிவாதத்தை மேலும் மேலும் ஊக்குவிப்பது போல் நடந்து கொள்கிறாய். அவள் சொன்னதற்கெல்லாம் நாம் தலையை ஆட்ட வேண்டியதுதானா? நாம் சொல்வதை அவள் ஒருதடவைகூட கேட்க வேண்டிய அவசியம் இல்லையா?" ஹேமா கோபமாக சொன்னாள்.

"ஷ்!! குழந்தையின் முன்னிலையில் வாதம் புரியவேண்டாம் என்று எத்தனைமுறை சொல்லியிருக்கிறேன்?" எச்சரிப்பதுபோல் ஆங்கிலத்தில் சொன்னான் ரமேஷ். ஹேமா ஜன்னல் வழியாக வெளியில் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கார் பார்க்கில் நுழையும்போது ஹேமாவின் இதயம் வேகமாக

துடிக்கத் தொடங்கியது. பார்க்கில் சுதாகர் தென்பட்டால்? கருணா அவனை பார்த்ததும் 'அங்கிள்!' என்று அழைத்தால் ரமேஷின் முகம் எப்படி இருக்கும்? எதற்காக வீட்டுக்குள் அழைக்கவில்லை என்று அவனைப் பார்த்ததுமே புரிந்துவிடும். குழந்தையை டாக்டரிடம் அழைத்துச் சென்றது அவன்தான் என்று முதலிலேயே ஏன் சொல்லவில்லை என்று கோபித்துக் கொண்டால்? என்ன பதிலை சொல்வது? இருக்கையுடன் ஒட்டிக்கொண்டுவிட்டதுபோல் ஹேமாவால் காரை விட்டு இறங்க முடியவில்லை.

கருணா அன்று தான் விழுந்த இடத்தை தந்தையிடம் காண்பித்தாள். அங்கிள் தினமும் எங்கே உட்கார்ந்து கொள்வானோ அதையும் காட்டினாள். அதிர்ஷ்டவசமாக சுதாகர் அங்கே இல்லை. ஆனால் எந்த நிமிடத்தில் வந்துவிடுவானோ என்ற பயம் ஹேமாவை துரத்திக்கொண்டு தான் இருந்தது.

ரமேஷ் புல்தரையில் உட்கார்ந்து கொண்டு மகளுடன் ரொம்ப நேரம் விளையாடினான்.

"நேரமாகிவிட்டது. நாளை காலையில் ஊருக்கு போக வேண்டும்." ஹேமா நினைவுபடுத்தினாள்.

'ஆமாம்' ரமேஷ் எழுந்து கொண்டான். நிம்மதியாக இருந்தது.

திடீரென்று தன்னுடைய கோழைத்தனத்தை நினைத்து அவளுக்கே வெட்கமாகவும் இருந்தது. சுதாகரைப் பற்றிச் சொன்னால் என்ன ஆகிவிடும்? ரமேஷ் ஒருநிமிடம் வியப்பு அடையலாம். அவ்வளவுதானே! அதைவிட என்ன ஆபத்து நேர்ந்துவிடப் போகிறது? கணவன் மனைவி என்றால் உயிர் நண்பர்கள் போல் இருக்க வேண்டும். எந்தவிதமான ஒளிமறைவும் இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் அது தாம்பத்தியமே இல்லை. சுதாகரின் பெயரைச் சொல்வதற்கு தனக்கு தயக்கமாக இருப்பது உண்மைதான். இருந்தாலும் இந்த விஷயத்தை ரமேஷிடம் சொல்ல வேண்டும். இது போன்ற சின்னச் சின்ன விஷயங்களை முதலிலேயே சொல்லாமல் விட்டால் எதிர்காலத்தில் கருத்து வேற்றுமைகளுக்கு வழி வகுக்கக் கூடும்.

மூவரும் சாப்பிட்ட பிறகு கருணாவை தூங்க வைத்துவிட்டு ஹேமா ரமேஷின் அறைக்கு வந்தாள்.

மறுநாள் காலையில் கிளம்புவதற்காக தேவையான பேப்பர்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தான். ஹேமா பீரோவை திறந்து அவனுக்கு வேண்டிய உடைகளை எடுத்து சூட்கேசில் வைத்துக் கொண்டே "ரமேஷ்! உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்" என்றாள்.

பேப்பர்களை சரிபார்த்துக் கொண்டிருந்தவன் தலையை உயர்த்தாமலேயே "என்ன விஷயம்?" என்று கேட்டான்.

ஹேமா வார்த்தைகளுக்காக தேடிக் கொண்டிருந்தாள்.

"ரொம்ப முக்கியமானதா?"

"அப்படி என்றால் இப்பொ சொல்லாதே. முக்கியமான விஷயம் என்று நீ சொன்னால் அது சீரியஸ் ஆன விஷயமாகத்தான் இருக்கும். ஊரிலிருந்து வந்த பிறகு கேட்டுக் கொள்கிறேன்."

"அவ்வளவு முக்கியமானது இல்லை. ரொம்ப சின்ன விஷயம் தான்."

"அப்பொ இவ்வளவு அவசரம் எதற்கு? ஊரிலிருந்து வந்த பிறகு பொறுமையாக கேட்டுக் கொள்கிறேன்." பேப்பர்களை அடுக்கி பேக்கில் வைத்துவிட்டு அருகில் வந்தான்.

ஹேமா சூட்கேஸின் மூடியை பரிசிலிப்பது போல் அப்படியே நின்றுகொண்டிருந்தாள். அவன் ஊருக்குக் கிளம்புமுன் இந்த விஷயத்தை சொல்வது சரிதானா? முன்னாடியே ஏன் சொல்லவில்லை என்று கேட்டால்? பேச்சு வார்த்தை தடித்து சண்டையாக மாறினால்?

பின்பக்கமாக வந்த ரமேஷ் ஹேமாவின் இடுப்பை சுற்றி கைகளை பிணைத்து தன்பக்கம் திருப்பிக் கொண்டான்.

"தேவியாரின் தரிசனம் கிடைக்க பதினைந்து நாட்களுக்குமேல் ஆகிவிடும். டில்லியிலிருந்து உனக்கு என்ன வேண்டுமோ சொல்லு."

"எல்லாமே இருக்கு எதுவும் வேண்டாம்."

"நிஜமாகவா!" வியப்படைந்ததுபோல் நடித்தான்.

"தயவு செய்து புடவைகளை மட்டும் வாங்க வேண்டாம். பீரோ முழுவதும் நிரம்பிவிட்டது. அதில் பல புடவைகளை நான் ஒரு

தடவைக்கு மேல் கட்டவே இல்லை."

அவன் கண்களில் ஏமாற்றம் தெரிந்தது

"உனக்கு பிடிக்கவில்லை என்றால், தேலையில்லாதவற்றை யாருக்காவது கொடுத்துவிடு."

"அவ்வளவு விலை உயர்ந்த புடவைகளையா?"

"எத்தனை விலை இருந்தால் என்ன? அவற்றைவிட உயர்வான வற்றை வாங்கிக் கொள்ளக்கூடிய நிலையில் நாம் இருக்கும்போது!".

ஹேமா தலையை குறுக்காக அசைத்தாள்.

"உனக்குத் தெரியாது ரமேஷ். அவற்றை வாங்குவதற்காக நீ செலவு செய்த பணம், அந்தப் பணம் சம்பாதிக்க நீ பட்ட கஷ்டம் எல்லாம் நினைவுக்கு வரும்போது என்னால் அந்த காரியம் செய்ய முடியாது."

"சில்லி செண்டிமெண்ட்ஸ். உன்னைப் போன்ற முட்டாள் மனைவியாக வந்தது என்னுடைய துரதிர்ஷ்டம். அவன் குரல் நொந்து கொள்வது போல் இருந்தாலும், கைகள் ஹேமாவை அன்புடன், தவிப்புடன் அணைத்துக் கொண்டன.

46

ரமேஷ் ஊருக்கு போன மறுநாளே ஜெயம்மா அர்ஜெண்டாக வரச்சொல்லி ஹேமாவுக்கு போன் செய்தாள்

"நீ வரவில்லை என்றால் நானே உன்னிடம் வரவேண்டிய சூழ் நிலை வந்துவிடும்." மிரட்டுவது போல் சொன்னாள். கடைசியில் போனில் அரைமணி நேரம் பேசி, கட்டாயம் வருவதாக ஹேமா விடம் சத்தியம் வாங்கிக் கொண்ட பிறகுதான் போனை வைத்தாள்.

எத்தனை முயற்சி செய்தாலும் விஷயம் என்னவாக இருக்க முடியும் என்று ஹேமாவால் ஊகிக்க முடியவில்லை. சுருணாவின் பிறந்தநாள் விழாவுக்காக அழைக்கப் போனபோது அந்த அம்மாள் பேசிய பேச்சுக்களை இன்னமும் ஹேமாவால் மறக்கமுடியவில்லை. இனி ஒருபோதும் அந்த வீட்டுக்கு போக வேண்டாம் என்று ரமேஷ் எச்சரித்து இருந்தான்.

மாலையில் ஹேமா போனபோது ஜெயம்மா தனியாகத்தான்

இருந்தாள். மாதுரி ஊரில் இருக்கவில்லை. சினேகிதிகளுடன் கோவாவுக்கு போயிருந்தாள். ஜெயம்மா ஹேமாவை பார்த்ததும் "வந்து விட்டாயா..... வா..... வா. நீ வருவாய் என்று எனக்குத் தெரியும்" என்று வரவேற்றாள்.

ஹேமா எதிரில் இருந்த நாற்காலியல் அமர்ந்து கொண்டாள்.

"வயதில் பெரியவள். உடல்நிலை சரியில்லாதவள். அன்று வாய் தவறி ஏதோ சொல்லிவிட்டேன். நீ எதையும் மனதில் வைத்துக் கொள்ளக்கூடாது." பீடிகை போடுவது போல் சொன்னாள்.

"அதையெல்லாம் நினைவில் வைத்திருந்தால் இன்று வந்திருக்கவே மாட்டேன். அவசரமாக வரச்சொல்லி சொன்னீங்க. விஷயம் என்னவென்று சொல்லுங்கள்" என்றாள் ஹேமா.

"தீராவுக்கு நல்ல வரன் ஒன்று வந்திருக்கு பையன் ரொம்ப நல்லவன். பேபிக்கு எல்லா விதத்திலும் பொருத்தமானவன். எல்லா வற்றையும் விட முக்கியமாக தீராவை அவனுக்கு ரொம்ப பிடித்திருக் கிறது. நீ எப்படியாவது தீராவை இந்த சம்பந்தத்தை ஒப்புக் கொள்ளும் விதமாகச் செய்ய வேண்டும்."

"நானா?"

"நீ இல்லாவிட்டால் உன் கணவன் இல்லையா? இந்த வேலை உங்க இருவரின் மூலமாகத்தான் ஆக வேண்டும்."

"தீரா சின்னக் குழந்தை இல்லையே."

"அது உண்மைதான். ஆனால் நட்புக்காக உயிரையும் கொடுப்பாள் என்று உனக்குத் தெரியும்."

"நீ இந்த திருமணத்திற்கு சம்மதித்தால் தவிர என் வீட்டுக்கு வரக் கூடாது என்று மிரட்டிப்பார். அப்படி செய்தால் நிச்சயமாக சம்மதிப்பாள். உண்மையிலேயே தீராவுக்கு திருமணம் ஆக வேண்டும் என்று நீ விரும்பினால் நான் சொன்னது போல் கூட்டாயம் செய்வாய்."

ஹேமா திகைத்துப் போனவளாக பார்த்துக் கொண்டிருந்தாள். நன்றாகத்தான் இருக்கு இந்த அம்மாள் சொல்வது. அவள் சொல்வது போல் செய்ய வேண்டும் என்றால் தீராவுக்கு வேதனை தர வேண்டும். அப்படி செய்யமுடியவில்லை என்றால் இந்த அம்மாள் செய்யும் ரகளையை பொறுத்துக் கொள்ள வேண்டும். எப்படி பார்த்தாலும் தொல்லை தனக்குத்தான்.

"என்ன சொல்கிறாய்?" இரட்டிப்பதுபோல் ஜெயம்மா கேட்டாள்.

"விஷயத்தை சொல்லி விட்டீர்கள் இல்லையா. என்னால் முடிந்த வரை முயற்சி செய்கிறேன்."

"முயற்சி செய்தால் மட்டும் போதாது. இந்தத் திருமணம் நடந்தாக வேண்டும். உன்னுடைய நலனுக்காகத்தான் இதைச் சொல்கிறேன்."

"அப்படியே செய்கிறேன்."

அதற்குள் யாரோ அந்த அறைக்குள் எட்டிப் பார்த்து விட்டு ஹேமா அங்கே இருப்பதை உணர்ந்ததும் சட்டென்று நகர்ந்து கொண்டார்கள்.

"யாரு? சுதா! நீதானா. உள்ளே வா. அங்கே வேற்று மனிதர்கள் யாரும் இல்லை. நம் ஹேமாதான்."

சுதாகர் உள்ளே வந்தான்.

ஹேமாவின் பார்வை தரையில் பதிந்தது.

"உடல்நிலை எப்படி இருக்கு சித்தி?" மென்மையான குரலில் கேட்டான்.

"நன்றாகத்தான் இருக்கிறது. உண்மையிலேயே நீ கடவுளின் மறு அவதாரம்தான். அதான் பேபி செய்த குழப்பங்களை, குளறு படிகளை எதையும் மனதில் வைத்துக் கொள்ளாமல் இந்த வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருக்கிறாய். ஹேமாவை வீட்டுக்கு வரச் சொல்லியிருந்தேன். தீராவின் திருமணம் நடக்க வேண்டும் என்றால் உன்னால் மட்டும்தான் முடியும் என்று அவளிடம் சொல்லி விட்டேன்.

ஹேமா எழுந்து கொண்டாள்.

"நல்லது மாமி. விஷயத்தை சொல்லிவிட்டீர்கள் இல்லையா!. என்னால் முடிந்தவரையில் முயற்சிக்கிறேன். வரட்டுமா."

"உட்கார்ந்து கொள் ஹேமா. சுதாகர் வேற்று ஆள் ஒன்றும் இல்லையே. கடவுள் முடிச்சு போட்டு வைக்கவில்லை என்பதால் தப்பிவிட்டதே தவிர, இல்லை என்றால் நீ இந்த வீட்டுக்கு மரு மகளாக வந்து இந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பாய் இல் லையா. அப்படி நடந்திருந்தால் எனக்கு இந்தப் பிரச்னையே வந்திருக்காதோ என்னவோ."

"இப்பொ அந்த பேச்சு எல்லாம் எதுக்கு சித்தி!" சுதாகர் தடுப்பது போல் சொன்னான்.

"என்னவோ தம்பி! எந்த விஷயத்தை நினைத்தாலும் அதன் தொடர்ச்சியாக பல நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருவதை தவிர்க்க முடியவில்லை. சுதா! உள்ளே போய் சமையல்காரம்மாவிடம் காபி அனுப்பச் சொல்லேன்" வேண்டுகோள் விடுத்தாள்.

சுதாகர் எழுந்து உள்ளே போனான்.

ஹேமா காபி சாப்பிடாமல் போகக்கூடாது என்று ஜெயம்மா பிடிவாதம் பிடித்தாள். முள்மேல் அமர்ந்திருப்பது போல் இருந்தது ஹேமாவுக்கு. சுதாகர் மறுபடியும் அந்த அறைக்கு வரவில்லை.

ஹேமா கிளம்பும்போது ஜெயம்மா ஹேமாவின் கைகளை பிடித்துக் கொண்டாள். "ஹேமா! உன்னை கையெடுத்து கும்பிடு கிறேன். என் மகளின் வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும் விதமாக செய். உன்னுடைய குடித்தனத்தையும் சீர்படுத்திக் கொள். இதைத் தான் நான் வேண்டுகிறேன்" என்றாள்.

ஹேமா அந்த அம்மாளின் கைகளை மெதுவாக விடுவித்துக் கொண்டாள். "நீங்க இத்தனை முறை சொல்ல வேண்டியதில்லை. தீரா என்னுடைய உயிர்த்தோழி. அதை மறந்துவிடாதீர்கள். வரட்டுமா" என்று கிளம்பினாள்.

வாசற்கதவைத் தாண்டும்போது வராண்டாவில் சுதாகர் நின்றிருந்தான். அவன் அங்கே நின்ற விதத்தை பார்த்தால் ஹேமா வின் வருகைக்காக காத்திருப்பது போல் இருந்தது.

ஹேமா சட்டென்று அவனை பார்க்காதது போல் போகப் போனாள். ஆனால் அவன் அதற்குள் ஓரடி முன்னால் வைத்து அவளுக்கு எதிரில் வந்து நின்றான்.

"நான் உங்களுடன் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும்" என்றான்.

ஹேமாவுக்கு சுரீர் என்று கோபம் வந்துவிட்டது. என் கணவர் பற்றி இவன் கொடுக்கும் அறிவுரைகளை கேட்டுக்கொள்ள வேண்டும் போலும்!

அவள் தயக்கம் இல்லாமல் கண்களை உயர்த்தி அவன் பக்கம் பார்த்தாள்.

"உங்களுக்கு ஏதாவது சொல்ல வேண்டும் என்று இருந்தால் எங்க வீட்டுக்கு வாங்க. ரமேஷின் முன்னிலையில் சொல்ல வேண்டி யதை சொல்லுங்க. எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ரமேஷ் இல்லாமல் நீங்க சொல்லப் போகும் விஷயம் எதுவாக இருந்தாலும் கேட்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை."

முகத்தில் அடித்தாற்போல் அவள் சொன்ன தோரணைக்கு அவன் திகைத்து விட்டான்.

அடுத்த நிமிடம் அவனையும் அறியாமல் பக்கத்தில் நகர்ந்து அவளுக்கு வழியை விட்டான்.

ஹேமா வேகமாக அந்த இடத்தை விட்டுப் போய்விட்டாள்.

47

இரண்டு நாட்களாக ஹேமாவின் மனம் ரொம்ப குழம்பி யிருந்தது. அன்று இரவு மாதுரி ஊரிலிருந்து வரப்போகிறாள். மறு நாள் காலையிலேயே தீராவுடன் பேசவேண்டும் என்று ஜெயம்மா சொன்னதுபோல் செய்வதுதான் சரி என்று ஹேமாவுக்கு தோன்றி யது. மாதுரியின் வாழ்க்கையும் சிரடையும். தன் குடும்பத்தின்மீது இருக்கும் பழிச் சொல்லும் நீங்கும். கூடிய சிக்கிரம் தீராவுக்கு திரு மணம் ஆவது இரு குடும்பங்களுக்கும் நல்லது. ரமேஷ் சொன்னால் தான் மாதுரி கேட்பாள். அவனும் நாளை மாலையில் ஊரிலிருந்து திரும்பி வருகிறான். இருவரையும் ஒரு இடத்தில் உட்கார வைத்து இந்தப் பேச்சை எடுக்க வேண்டும்.

ஹேமாவின் மனதில் பல எண்ணங்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டிருந்தன. கொஞ்சம் சுவனக்குறைவாக இருந்தால்

போதும் வாழ்க்கையில் பல பிரச்னைகள் சூழ்ந்து விடுகின்றன. உடனுக்குடன் தீர்வு காணவில்லை என்றால் ஒன்றோடு ஒன்று சேர்ந்து பிரச்னை மேலும் தீவிரமாகிவிடும்.

மாலை ஆனால் போதும் கருணா ஒருநிமிடம் வீட்டில் இருக்க மாட்டாள். எங்கேயாவது வெளியில் கிளம்பித்தான் ஆக வேண்டும். மகளுக்கு உடைகளை மாற்றி வேலைக்காரனை துணைக்கு அனுப்பி வைத்தாள். கொஞ்சநேரம் வெளியில் போய்விட்டு வரவில்லை என்றால் பைத்தியம் பிடித்துவிடும் போல் இருந்தது ஹேமாவுக்கு. கோவிலுக்கு போய்விட்டு வரலாம் என்று கிளம்பினாள்.

அன்று வெள்ளிக்கிழமை என்பதால் கோவிலில் கூட்டம் அதிக மாக இருந்தது. எதிரே வானில் சந்திரன் உதயமாகும் காட்சி ரொம்ப அற்புதமாக இருந்தது. மனிதனுக்கு நம்பிக்கையைவிட பலம் தருவது வேறு எதுவும் இல்லையோ. அரைமணி நேரத்திற்கு முன்னால் குழம்பிக் கிடந்த ஹேமாவின் மனம் கொஞ்சம் கொஞ்சமாக தெளியத் தொடங்கியது. மனிதன் தன்னுடைய தனிமையை போக்கிக் கொள்ளத்தான் கடவுளின் துணையை நாடுகிறானோ!

திடீரென்று பின்னாலிருந்து குரல் கேட்டது. ஹேமா திடுக்கிட்டது போல் திரும்பிப் பார்த்தாள். சுதாகர் நின்றிருந்தான்.

அவன் ஏற்கனவே அங்கே இருந்தான் போலும். தான் கவனிக்கவே இல்லை. மண்டபத்தின் தூணில் சாய்ந்து, கைகளை கட்டிக்கொண்டு நின்ற விதத்தை பார்த்தால் அவன் ரொம்ப நேர மாக தன்னையே கவனித்துக் கொண்டிருப்பது போல் தோன்றியது. சுற்று வட்டாரத்தில் என்ன நடக்கிறதென்று தெரியாத அளவுக்கு தான் சுயஉணர்வு அற்று இருந்ததற்கு தன்னைத்தானே கடிந்து கொண்டாள்.

"ஹேமா!" மற்றவர்கள் தன்னை அப்படி அழைப்பதை கேட்டு ரொம்ப நாட்களாகிவிட்டது. இப்பொழுது எல்லோரும் மிஸஸ் ரமேஷ் சந்திரா என்றுதான் அழைக்கிறார்கள். ரமேஷும் சிலசமயம் மிஸஸ் ஹேமா சந்திரா என்று அழைப்பான். மாதுரியும் மிஸஸ் சந்திரா என்று அழைப்பதை பழக்கப்படுத்திக் கொண்டுவிட்டாள். சுந்தரத்திற்கு ஹேமாவை பெயர் சொல்லி அழைக்க வேண்டிய அவசியமே இருந்தது இல்லை.

சுதாகர் "ஹேமா!" என்று அழைக்கும்போது ரமேஷ் அழைப்பது போல் இருந்தது.

சுதாகர் ஹேமா இருந்த இடத்தை நோக்கி வந்தான்.

"உட்கார்ந்து கொள் ஹேமா. ஒரு நிமிடம் என்னுடன் பேசுவதால் உலகம் தலைகீழாக மாறிப் போகாது இல்லையா?"

விருப்பம் இல்லாமலேயே ஹேமா உட்கார்ந்து கொண்டாள்.

சுதாகர் சற்று தொலைவில் இருந்த கல்யானைமீது சாய்ந்து கொண்டு நின்றிருந்தான்.

"திருக்காட்டுப்பள்ளிக்கு போயிருந்தேன் ஹேமா!"

"அண்ணன், அண்ணி நலம்தானே?"

"மது வீட்டைவிட்டு ஓடிவிட்டான். இரண்டு மாதங்கள் ஆகிறது."

இடி விழுந்தது போல் பார்த்தாள் ஹேமா.

"உன் அண்ணன் நிலை கொஞ்சம் பரவாயில்லை. கொஞ்சம் தைரியமாகத்தான் இருக்கிறார். ஆனால் உன் அண்ணி....." மேற்கொண்டு பேசமுடியாதவன் போல் நின்றுவிட்டான்.

ஹேமா இன்னமும் வாயடைத்துவிட்டவள் போல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"உன் அண்ணி வேதனைப்படுவதை பார்க்கும்போது ரொம்ப கஷ்டமாக இருந்தது. மதுவின் போட்டோவை கொண்டு வந்தேன். மதுவை தேடுவதற்காக என்னால் ஆன முயற்சிகளை செய்து கொண்டுதான் இருக்கிறேன். ஆனால் இதுவரையில் பலன் கிடைக்கவில்லை. இந்த விஷயம் எனக்குக்கூட தெரிந்திருக்காது. திருக்காட்டு பள்ளிக்கு இருபது மைல் தொலைவில் மலைமீது அழகான இடம் இருக்கிறதாம். அதை வாங்கி அந்த இடத்தில் ஆசிரமம் நிறுவ வேண்டும் என்று எங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நினைத்தார்கள். அந்த இடத்தை பார்த்துவிட்டு முடிவு செய்யச் சொல்லி கடிதம் போட்டிருந்தார்கள். திருக்காட்டுப்பள்ளி வழியாகத்தான் அந்த இடத்திற்குப் போக வேண்டும். உன் அண்ணன் அண்ணி அந்த ஊரில் இருக்கிறார்கள்

என்று தெரியும். பார்த்துவிட்டு வரலாம் என்று போனபோது இந்தச் செய்தி தெரிந்தது."

அக்னி பற்றிக்கொண்டது போல் ஹேமாவின் இதயத்தில் எரிச்சல் கிளம்பியது. இதற்கெல்லாம் காரணம் தானேதான் என்ற வேதனை அவளை தகிக்கத் தொடங்கியது.

"மது வீட்டை விட்டு போய் இரண்டு மாதங்கள் ஆகிறதா? இந்த விஷயம் எனக்குக் கடிதம் எழுத வேண்டும் என்று அண்ணிக்குக் கூடத் தோன்றவில்லையா? அண்ணியின் பார்வையில் நான் இறந்து போனவளுக்கு சமம் என்று இதுவரையில் புரிந்துகொள்ளவில்லை."

"அவர்களை குற்றம் சொல்லாதே ஹேமா! உன் அண்ணியை ஒரு தடவை நேரில் பார்த்தால் நீ இப்படி பேசமாட்டாய். சாபத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் மனிதர்கள் போல் இருக்கிறார்கள்."

"எப்படியோ எங்கள் திருமணம் நடந்து முடிந்துவிட்டது. நாங்கள் சுகமாகத்தானே இருக்கிறோம். அவர்களுக்கு அவ்வளவு பிடிவாதம் ஏன்? ரமேஷ் நேரில் சென்று கிரகபிரவேசத்திற்கு வரச்சொல்லி அழைத்தபோதும் வரவில்லை. அது போறாது என்று ரமேஷை அவமானப்படுத்தி அனுப்பியிருக்கிறார்கள். பெரியவர்களாக இருப்பவர்கள் செய்ய வேண்டிய காரியம் இதுதானா?"

"அவர்கள் பழைய தலைமுறையை சேர்ந்தவர்கள். அவர்களுடைய பிடிவாதத்தை நாம் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும் ஹேமா."

"எதற்காக பொறுத்துக் கொள்ள வேண்டும்? அவர்களுடைய பிடிவாத குணத்தினால் யாருக்கு என்ன நன்மை விளைந்திருக்கிறது? என்னையும் தள்ளி வைத்துவிட்டார்கள். மகனையும் பிரிந்திருக்க வேண்டிய நிலைமை. இதுதான் பெரிய மனிதர்களின் லட்சணமா?"

சுதாகர் பதில் சொல்லவில்லை. சட்டைப் பையிலிருந்து டைரியை எடுத்து அதிலிருந்த போட்டைவையும், கடிதத்தையும் எடுத்து ஹேமாவிடம் கொடுத்தான். "இந்தக் கடிதத்தை படித்துப் பாரு ஹேமா! கொடுத்தான். மது தன்னுடைய தாய்க்கு எழுதிய கடிதம் இது. ரொம்ப தீவிரமாக எழுதியிருக்கிறான். இந்த காலத்து கல்வி முறையும், சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் குழந்தையின்

மனதில் எப்படிப்பட்ட பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறதென்று உனக்கே புரியும்."

"ஹேமா! அந்த கடிதத்தை கையில் பிடித்துக்கொண்டே அங்கே இருந்த விளக்கு வெளிசத்தில் போட்டோவை பரிசீலனையாக பார்த்தாள். மது நன்றாக வளர்ந்துவிட்டான். மெலிதாக மீசை அரும்பியிருந்தது ஸ்பஷ்டமாக தென்பட்டது.

"நான் அறிந்த மதுதானா இது?" வியப்புடன் போட்டோவை பார்த்தாள். முகத்தில் இன்னும் குழந்தைத்தனம் மாறவில்லை.

"உன் அண்ணிக்கு தைரியம் சொல்லி நீ கடிதம் எழுதினால் நன்றாக இருக்கும் ஹேமா."

"கடிதம் எழுதுவதா? நாளைக்கு ரமேஷ் வந்ததும் நானே கிம்பிக் போகிறேன்" என்றாள்.

"இந்த விஷயம் சொல்வதற்காகத்தான் இரண்டு நாட்களுக்கு முன்பு சித்தி வீட்டில் உன்னைப் பார்த்தபோது முயற்சி செய்தேன். உன் வீட்டுக்கு வந்து ரமேஷின் முன்னாடி இந்த விஷயத்தை உன்னிடம் சொல்லும் உரிமையோ, அதிகாரமோ எனக்கு இல்லை என்று உனக்குப் தெரியும்." சுதாகர் சொன்னான்.

"மன்னித்துக் கொள்ளுங்கள்." கண்களை உயர்த்தி அவன் பக்கம் பார்த்துக்கொண்டே சொன்னாள்.

சுதாகரின் பார்வை அவள் கண்களை ஒருநிமிடம் சிறைப்படுத்தி விட்டது போல் இருந்தது.

"நேரமாகிவிட்டது. நான் கிளம்பறேன்." தடுமாறிக்கொண்டே சொன்னாள்.

"கார் இருக்கிறதா?" சுதாகர் கேட்டான்.

"ஊம்."

வேகமாக படி இறங்கிக் கொண்டிருந்த ஹேமா சட்டென்று நின்று பின்னால் திரும்பினாள்.

"நீங்க! நான் ட்ராப் செய்யட்டுமா?" என்று கேட்டாள்.

"தாங்க்ஸ். வேண்டாம். நான் நடந்து போய் விடுவேன். தினமும்

குறைந்த பட்சம் ஒருமைலாவது நடக்கவில்லை என்றால் எனக்கு தூக்கம் வராது". புன்முறுவலுடன் சொன்னான்.

ஹேமா கார் பார்க் செய்த இடத்திற்கு வந்தாள். டிரைவர் பணிவாக கார் கதவைத் திறந்து வைத்தான். அவள் காரில் ஏறி உட்கார்ந்து கொண்டு தலையை திருப்பிப் பார்த்தாள். சுதாகர் அதே இடத்தில் நின்றுகொண்டிருந்தான். அவன் தலை மட்டும் ஹேமாவை பார்த்துக் கொண்டிருப்பது போல் இந்தப் பக்கம் திரும்பி இருந்தது.

இன்னதென்று புரியாத உணர்வு ஏதோ அவள் மனம் முழுவதும் பரவியது.

48

கணகணவென்று எரிந்து கொண்டிருந்த அடுப்பு கொஞ்சம் கொஞ்சமாக அணைந்துவிட்டது. அடுப்பில் தளதளவென்று கொதித்துக் கொண்டிருந்த குழம்பும் கொதிப்பு அடங்கி சம நிலைக்கு வந்துவிட்டது.

அடுப்புக்கு சற்று தொலைவில் சுவற்றில் சாய்ந்து கொண்டிருந்த ரங்கநாயகியின் கண்கள் இயந்திர கதியில் குழம்பு பக்கம் பார்த்துக் கொண்டிருந்தாலும் நினைவு வேறு எங்கேயோ இருந்தது.

பத்து நாட்களுக்கு முன்பு சேஷாத்ரிக்கு பக்கவாதம் வந்து வலது காலும் கையும் செயலிழந்து விட்டன. மது வீட்டை விட்டு போன பிறகு நடைபிணமாக மாறிவிட்ட ரங்கநாயகிக்கு, கணவனுக்கு 'பெறாவிடிக் அட்டாக்' வந்த பிறகு வாழ்க்கையே வேரோடு சாய்ந்து விட்டது போல் இருந்தது.

இரண்டு நாட்களாக சேஷாத்ரிக்கு கொஞ்சம் வேலை என்றாலும், மனதளவில் தளர்ந்து விட்ட ரங்கநாயகி உடல் ரீதியாக ஓய்வு கிடைத்தாலும் அமைதியின்றி தவித்துக் கொண்டிருந்தாள்.

தனியாக உட்கார்ந்திருந்தால் துக்கம் மடைதிறந்த வெள்ளம் போல் பொங்கிக்கொண்டு வந்தது. எந்த வேலையை செய்து கொண்டிருந்தாலும் காதுகள் மட்டும் 'அம்மா!' என்ற அழைப்பை கேட்பதற்காக தவித்துக் கொண்டிருந்தன. மறுபடியும் அவனை

கல் ணால் காணமுடியுமா என்ற வேதனை அவள் மனதை துளைத்தெடுத்துக் கொண்டிருந்தது.

'நான் என்ன செய்துவிட்டேன்? சொல்லாமல் கொள்ளாமல் வீட்டைவிட்டு போகவேண்டிய அவசியம் அவனுக்கென்ன இருந்தது? என்னால் முடிந்தவரை அவன் கேட்டதை எல்லாம் தந்தேன். இருந்தாலும் அவன் மனதில் ஏதோ அதிருப்தி ஏற்பட்டு இருக்கிறது. பெற்ற தாயாக இருந்தும் அவன் மனதில் இருப்பதை கண்டு பிடிக்காத முடியாத முட்டாளாகிவிட்டேன். ஹேமா என்னிடம் சொல்லாமல் திருமணம் செய்துகொண்டபோது எவ்வளவு செய்தாலும், வளர்த்தாலும் நான் அவளுக்கு சொந்த தாய் இல்லையே என்னிடம் சொல்வதற்கு என்று மனதை தேற்றிக் கொண்டேன். மது விஷயத்தில் நான் செய்த தவறு என்ன?

'என்ன குழந்தைகள் இவர்கள்? கண்ணை இமை காப்பதுபோல் ஒவ்வொரு தாயும் தன் குழந்தைகளை காப்பாற்றி வருவாள். அவர்களை வளர்த்து ஆளாக்குவதே தன் வாழ்க்கையின் லட்சியம் என்பதுபோல் வாழ்ந்து கொண்டிருப்பாள். கொஞ்சம் பெரியவர்கள் ஆனதும் தாய் தந்தையே அவர்களுக்கு வேற்று மனிதர்களாகி விடுவார்கள். வீடே சிறைச்சாலையாகத் தோன்றும்.

'சின்ன வயதில் தான் இப்படி இருக்கவில்லையே? அம்மாவிடம் சொல்லாமல் வாசற்படியைகூட தாண்டியதில்லை. இப்போதும் தாயை பார்த்தால் தனக்கு பயம்தான். தன்னைப் போல் பயந்து நடுங்கக் கூடாது என்று ஹேமாவையும், மதுவையும் சுதந்திரம் கொடுத்து வளர்த்ததற்கு தனக்கு இந்த தண்டனையா? என்ன உலகம் இது?

இத்தனை நாட்கள் மது தன்னை பிரிந்து இருக்கிறான் என்றால் எவ்வளவு கல் நெஞ்சக்காரனாக இருக்க வேண்டும்? அவனுக்காக தான் இவ்வளவு வேதனைப்படுவானேன்? ஆனால் யாருக்காகவும் வேதனைப்படாமல், அந்த எதிர்பார்ப்புகளும் இல்லாமல் இந்த வாழ்க்கை எதற்கு? வாழ்க்கை என்றாலே "நான், என் மனிதர்கள்" என்ற பந்தங்கள் தானே!'

"ரங்கா!" முன் அறையிலிருந்து பலவீனமான குரலில் சேஷாத்ரி

அழைப்பது கேட்டது. ரங்கநாயகியால் உடனே பதில் குரலை கொடுக்க முடியவில்லை.

கண்ணீரை துடைத்துக் கொண்டு, அடுப்பிலிருந்த குழம்பை இறக்கிவிட்டு, விறகுகளை நகர்த்தி தண்ணீரை தெளித்து அணைத்தாள்.

"ரங்கா!" மற்றொருமுறை குரல் கேட்டது.

"வந்துவிட்டேன்." கம்மி போன குரலில் சொல்லிக்கொண்டே முன் அறைக்கு வந்தாள்.

தாடி வளர்ந்து, உருகுலைந்து போன உடலுடன் தோற்றமளித்த சேஷாத்ரி முற்றிலும் மாறுபட்ட மனிதனாக தென்பட்டான்.

"மருந்து எங்கே?"

ரங்கநாயகி அலமாரியிலிருந்து மருந்தை எடுத்து சேஷாத்ரியின் வாயில் ஊற்றினாள்.

"இன்றுகூட சுதாகரிடமிருந்து சடிதம் வரவில்லையா?" ரங்கநாயகி கேட்டாள்.

"இல்லை."

"சுதாகருக்கு நினைவு இருந்தாலும் மது இவ்வளவு சீக்கிரம் கிடைத்துவிடப் போகிறானா? அதிலும் அவன் ஹைதராபாத்துக்குத் தான் போயிருப்பான் என்ற நம்பிக்கை என்ன?"

"உனக்குத் தெரியாது ரங்கா! அவனுக்கு அந்த ஊரைத்தவிர வேறு எந்த இடமும் தெரியாது." சேஷாத்ரி சொன்னான்.

மருந்து பாட்டிலை மறுபடியும் அலமாரியில் வைக்கும்போது ரங்கநாயகியின் கண்களில் நீர் நிறைந்துவிட்டது.

"அம்மா பசிக்குது. சாப்பிட ஏதாவது கொடு" என்று எப்போதும் ஏதாவது கேட்டுக்கொண்டே இருப்பான். இப்போ யாரிடம் கேட்கிறானோ? மகன்மீது இவ்வளவு பாசம் வைத்திருப்பது, அவனைப் பிரிந்த பிறகுதான் ரங்கநாயகிக்கு புரிந்தது. மகனை பிரிந்து வேதனையை அனுபவிக்கப் போகிறோம் என்று முன்னாடியே தெரிந்திருந்தால், குழந்தைகளே வேண்டாமென்று கடவுளிடம் வேண்டியிருப்பாள்.

ரங்கநாயகி சேஷாத்ரியை சரியாக படுக்க வைத்துவிட்டு வெளியில் வரும்போது மூலையில் இருந்த கிரிக்கெட் பேட் கண்ணில்பட்டது. அதைப் பார்த்ததும் ரங்கநாயகியின் இதயத் துடிப்பு ஒரு நிமிடம் நின்றது. வேகமாக சென்று பேட்டை எடுத்து கொல்லைப்புறம் வீசி எறிந்தாள்.

மருந்து குடித்த பிறகு சேஷாத்ரி தூக்கத்தில் ஆழ்ந்து போய் விட்டான். ரங்கநாயகி கொல்லைப்புற கதவு அருகில் நின்றாள். தொலைவில் சூரியன் மலை வாயில் விழுந்து கொண்டிருந்தான். இதுநாள் வரை அந்த கிராமம், இயற்கையான அந்த சூழ்நிலை மனதுக்கு இதமளித்து வந்தது. ஆனால் மது வீட்டை விட்டுப் போனபிறகு எல்லாமே வெறுப்பாக மாறிவிட்டது. 'பாழாய் போன ஊரு, என் மகளை எனக்கு இல்லாமல் செய்துவிட்டது' என்று திட்டிக் கொண்டாள். எத்தனை திட்டினாலும் அவளுடைய கோபம் தீருவதாக இல்லை. 'அம்மா!' என்ற மகனின் அழைப்புக்காக அந்த தாயின் இதயம் ஏங்கிக் கொண்டிருந்தது.

49

"ஹேமா! சேகர் மனைவி சியாமளா இன்று நம் வீட்டுக்கு வரப் போகிறாள். நீ அந்தப் பெண்ணிடம் கொஞ்சம் பேச வேண்டும்." ரமேஷ் சொன்னான்.

"என்ன பேச வேண்டும்?" ஹேமாவின் குரல் பலவீனமாக ஒலித்தது.

"கணவன் மனைவிக்குள் தகறாரு ரொம்ப முற்றிவிட்டது. டைவர்ஸ் செய்து கொள்ளும் அளவுக்கு விஷயம் தீவிரமாகி விட்டது. யாராவது எடுத்துச் சொன்னால்தான் சரியாக இருக்கும்."

"நாம் சொன்னால் கேட்பார்களா?"

"கட்டாயம் கேட்டுக்கொள்வார்கள். சியாமளா நம்மீது மதிப்பு வைத்திருக்கிறாள். முயற்சி செய்து பார்ப்போம்."

"இந்த விஷயத்தில் நான் என்ன சொல்ல முடியும்? எனக்கென்ன தெரியும்?"

"எது வேண்டுமானாலும் சொல்லு. கணவனுடன் இருக்கும் வரையில்தான் மனைவிக்கு மரியாதை கிடைக்கும் என்று சொல்லு.

பிறந்த வீட்டில் மதிக்கமாட்டார்கள் என்று மிரட்டு. குழந்தைகளின் எதிர்காலம் நாசமாகிவிடும் என்று பயமுறுத்து. நானும் சேகரிடம் சொல்லிப் பார்க்கிறேன்."

"மற்றவர்களின் சொந்த விஷயத்தில் நாம் தலையிடுவானேன்?" முணுமுணுப்பது போல் சொன்னாள் ஹேமா.

"ஆரம்பித்து விட்டாயா உன் தொணதொணப்பை, எந்த விஷயத்திலும் உனக்கு முன்னாடியே சோர்வு வந்துவிடும். சிலசமயம் யோசித்து பார்த்தால் நீ எனக்கு தகுந்த மனைவி இல்லையோ என்று தோன்றுகிறது."

ஹேமா சரேலென்று தலையை உயர்த்திப் பார்த்தாள்.

"இரண்டு நாட்களுக்கு முன் அந்த லேடீஸ் கிளப் மெம்பர்ஸ் வந்து உன்னை பிரசிடெண்டாக இருக்கச் சொன்னால் மாட்டவே மாட்டேன் என்று மறுத்துவிட்டாய். குறைந்த பட்சம் என்னைக் கலந்து கொண்டு பேசி முடிவு தெரிவித்திருக்கலாம் இல்லையா. மிஸஸ் மூர்த்தி வந்த ஃப்ளவர் ஷோ திறந்து வைப்பதற்காக அழைப்பு விடுத்தால் அதற்கும் மறுப்பு சொன்னாய். எதைப் பார்த்தாலும் உனக்கு எரிச்சல் வருகிறது. யாரும் உன்னை நெருங்கக்கூடாது என்று உனக்கு நீயே ஒரு வட்ட போட்டுக்கொண்டு விட்டாய். வெளி உலகில் உன்னைப் பற்றி நாலு பேர் நாலு விதமாக பேசுவதை கேட்கும்போது எனக்கு தலைகுனிவாக இருக்கிறது. அழகாக உடை உடுத்திக் கொள்ளச் சொன்னால் உனக்குப் பிடிக்காது. யாராவது வீட்டுக்கு வந்தால் கலகலப்பாக பேசமாட்டாய். எனக்குத் தெரியாமல்தான் கேட்கிறேன். வீட்டில் நீ செய்யும் காரியம்தான் என்ன. எப்போ பார்த்தாலும் யாரோ செத்துவிட்டது போல் அழுது வடியும் முகத்துடன் காட்சி தருவானேன்? இப்போ உனக்கு என்ன குறைச்சல்? இன்னும் என்ன செய்ய வேண்டும் என்று எதிர் பார்க்கிறாய்? ஒருதடவை கண்களைத் திறந்துகொண்டு பாரு. உன் வயதில் இருக்கும் பெண்கள் உன்னைப் பார்த்து எவ்வளவு பொறாமைப்படுகிறார்கள் என்று உனக்கே புரியும். உன் இடத்தில் வேறு பெண் இருந்திருந்தால் உற்சாகமாக இருந்திருப்பாள். எனக்கும் மகிழ்ச்சியை தந்திருப்பாள். இரண்டு நாட்களாக உன்னைக் கவனித்துக்கொண்டுதான் வருகிறேன். காரணமே இல்லாமல் முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டு வளையம் வந்து கொண்டு இருக்கிறாய். உன்னைப் பார்த்தால் எனக்கும் சோர்வு வந்துவிடும் போலிருக்கு. ச்சீ_ ச்சீ_ உன்னைச் சொல்லி குற்றம் இல்லை. என் தலையெழுத்து அப்படி இருக்கிறது."

ஹேமாவுக்கு உயிரே போய்விட்டது போல் இருந்தது. எப்படி சக்தியை திரட்டிக் கொண்டு தலைகுனிந்து கொண்டு நின்றிருந்தாள்.

மது வீட்டை விட்டு ஓடிப்போன விஷயத்தை ரமேஷிடம் சொல்ல வேண்டும் என்று ஹேமா இரண்டு நாட்களாக தவித்துக் கொண்டு இருந்தாள். ஆனால் அவனுக்கு கம்பெனி வேலைகளினால் ஒருநிமிடம் கூட ஓய்வு இருக்கவில்லை. அதோடு பிஸ்கட் ஃபாக்டரி துவங்குவதற்காக ஏற்பாடு செய்து கொண்டிருந்தான். அது போன்ற சமயங்களில் அவனுக்கு நேரத்திற்கு உணவும், உறக்கமும் இருக்காது. இரவு பகல் வித்தியாசம் பாராமல் உழைத்துக் கொண்டே இருப்பான். கெட்ட பழக்கங்கள் எதுவும் இல்லாததாலும், கட்டுப்பாடுகள் நிறைந்த வாழ்க்கை என்பதாலும் அவனுடைய உடல்நிலை பாதிக்கப் படவில்லை என்பது உண்மைதான். இருந்தாலும் பணத்தை துரத்திக் கொண்டு போவதில் அவனுக்கு சோர்வே இருக்காது என்பது போல் நடந்து கொள்கிறான்.

ரமேஷ் ஊரிலிருந்து வந்ததுமே மதுபற்றி சொல்லிவிட வேண்டும் என்று ஹேமா நினைத்திருந்தாள். ஆனால் அன்று திடீரென்று வருமானவரி இலாகாவிலிருந்து சோதனைக்கு வந்து விட்டதில் எல்லாமே தலைகீழாகிவிட்டது. ரமேஷ் வீட்டிலோ, அலுவலகத்திலோ அவர்களுக்கு கணக்கில் இல்லாத பணமோ, தஸ்தாவேஜுகளோ கிடைக்கவில்லை என்பது உண்மைதான் என்றாலும், அவர்கள் சோதனை நடத்திக் கொண்டிருந்தபோது ரமேஷ் கொஞ்சம்கூட தடுமாறவில்லை. கருணாவுடன் விளையாடிக் கொண்டும், நடுநடுவில் ஆஃபீசர்களுடன் ஜோக் செய்து பேசிக் கொண்டு கலகலப்பாக தென்பட்டாலும், ஹேமாவின் கண்களுக்கு அவன் இயல்பாக இருக்கவில்லை என்று புரிந்துவிட்டது. புலிக் குகைக்குள் நுழைந்தவன் போல் அவன் கண்களில் ஏதோ ஒரு உணர்வு திரையாகத் தோன்றி மறைவதை ஹேமா உணர்ந்து

கொண்டாள்.

அவர்கள் கிளம்பிப் போன பிறகு, ரமேஷ் கருணாவை உயரே தூக்கிப் போட்டு பிடித்துக்கொண்டே கலகலவென்று சிரிக்கத் தொடங்கினான். எப்போதும் இவ்விதவிதமாக காரணமே இல்லாமல் ரமேஷ் உரத்த குரலில் சிரித்துக் கொண்டிருப்பதை பார்த்து விட்டு ஹேமாவுடன் வேலைக்காரர்களும் வியப்பு அடைந்தார்கள்.

மாலையில் சேகரும், சியாமளாவும் வரும் நேரமாகி விட்டது. ரமேஷ் சொல்லாமலேயே ஹேமா நன்றாக அலங்கரித்துக் கொண்டு அவர்களை வரவேற்க தயாராகிவிட்டாள். வலுக்கட்டாயமாக உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டு இரவு உணவுக்கான ஏற்பாடுகளை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தாள்.

அரிசி ஏற்றுமதி வியாபாரத்தில் சேகர் ரமேஷின் பார்ட்னர் ஆக இருந்தான். அவனுடைய மாமனார் வீட்டில் ரொம்ப வசதி படைத்தவர்கள். மனைவி சியாமளா மூலமாக அவனுக்கு நிறைய சொத்து வந்து சேர்ந்தது. சேகர் ரொம்ப ஸ்டயிலாக, அழகாக, நடிகனை போன்ற உருவத்தோற்றத்துடன் இருப்பான். அவன் மனைவி சியாமளா கறுப்பாக, குள்ளமாக ரொம்ப சுமாராக இருப்பாள். சேகர் சொத்துக்காகத்தான் அவளைத் திருமணம் செய்து கொண்டுள்ளான் என்ற விஷயம் எல்லோருக்கும் தெரியும். இருவருக்கும் ஒருநிமிடம் கூட ஒத்துப் போகாது. ஒருவர்மீது ஒருவர் புகார் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். சேகர் வேறு ஒரு பெண்ணுடன் நெருங்கி பழகுகிறான் என்றும், சமீபத்தில் இருவரும் ரகசியமாக திருமணம் செய்து கொண்டுவிட்டார்கள் என்றும் செய்திகள் ஊர் முழுவதும் பரவியிருந்தன.

சியாமளா இந்த விஷயம் வெளி உலகத்திற்கு தெரிய வேண்டும் என்று நிறைய செலவு செய்து, கஷ்டப்பட்டு அதற்கான சாட்சியங்களை சேகரித்தாள். விஷயம் வெளியில் வந்தால் உயிரை மாய்த்துக் கொள்வதாக சேகர் மிரட்டத் தொடங்கினான். வதந்தி செய்திகளை கேட்டு வயிற்றை நிரப்பிக் கொள்ளும் பிரிவினருக்கு இந்தச் செய்தி விருந்துச் சாப்பாடாக அமைந்துவிட்டது.

இந்த விஷயத்தில் ரமேஷ் நன்றாக யோசித்து ஒருமுடிவுக்கு வந்தான். இருவரையும் தன் வீட்டுக்கு டின்னருக்கு அழைத்து புத்திமதி சொல்ல வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். ஆனால் சியாமளாவுடன் இந்த விஷயம் பற்றி தான் நேராக பேசுவதைவிட ஹேமா எடுத்துச் சொன்னால் நன்றாக இருக்கும் என்று நினைத்தான்.

சேகர், சியாமளா இருவரும் ரமேஷிடம் மதிப்பு வைத்திருந்தார்கள்.

இருவரும் மாலையில் வந்தார்கள். ஹேமா சியாமளாவை படுக்கை அறைக்குள் அழைத்துச் சொன்றாள். ஹேமா கேட்பதற்கு முன்பே சியாமளா அந்த பேச்சை எடுத்தாள்.

"நீயே சொல்லு ஹேமா! கறுப்பாக குள்ளமாக இருப்பது என்னுடைய குற்றமா? இந்த கறுப்பும், குள்ளமும் திருமணம் செய்து கொள்ளும்போது அவருடைய கண்ணில் படவில்லையா? அன்று பணம்தான் முக்கியம் என்று தோன்றியது. இப்போ சொத்து கைக்கு வந்த பிறகு என்னுடைய விகாரமான தோற்றம் உறுத்துகிறது. எங்கள் திருமணம் முடிந்து பத்து வருடங்கள் முடிந்துவிட்ன. இப்போ யோசித்து பார்த்தால் இத்தனை வருடங்களாக நாங்கள் செய்த குடித்தனம் ஒரு நாடகம் போல் தோன்றுகிறது. அந்ப் பெண்ணுடன் ரசகியமாக குடித்தனம் நடத்த வேண்டிய தலையெழுத்து இவருக்கு எதற்கு? என்வழியை நான் பார்த்துக்கொண்டால் பகிரங்கமாகவே வீட்டுக்கு அழைத்து வரலாம் இல்லையா. அவருடன் சேர்ந்து எங்கேயும் போகும் அதிர்ஷ்டம் எனக்கு இல்லை. வெளியில் போனால் அவளுக்கு பக்கத்தில் இருக்கும் என்னை ஒரு புழுவைவிட கேவலமாக பார்க்கிறார்கள். சுய அபிமானத்தை கொன்று புதைத்து விட்டு யார் எப்படி இருந்தால் நமக்கு என்ன என்று நினைத்துக் கொண்டு எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு வந்தேன். ஆனால் இவரும் என்னை வெறுக்கிறார் என்று தெரிந்த பிறகு எப்படி சேர்ந்து வாழ முடியும்? ஹேமா! நீயே சொல்லு. ரமேஷை நீ கடவுளுக்கு மேலாக மதித்து வருகிறாய். அவன் உன்னை வெறுக்கிறான் என்று தெரிந்த அடுத்த நிமிடம் உன்னால் இந்த வீட்டில் இருக்க முடியுமா?"

ஹேமா சட்டென்று சியாமளாவின் தோள்களைபற்றி அருகில் இழுத்துக் கொண்டாள். சியாமளாவின் நிறம் கறுப்புத்தான். முகமும் விகாரமாக இருப்பது உண்மைதான். ஆனால் காயப்பட்ட மனதின் வேதனை அந்த கண்களில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. உருவ அமைப்பு கடவுள் கொடுத்ததாக இருக்கலாம். ஆனால் ரொம்ப மென்மையான மனம் அவளுடையது. சேகருடன் சமாதானம் செய்துகொண்டு குடித்தனம் செய்வது நல்லது என்று சியாமளா வுக்கு அறிவுரை வழங்க ஹேமாவுக்கு வாய் வரவில்லை.

டின்னருக்கு முன் ரமேஷ் சேகரிடம் என்ன பேசினானோ தெரிய வில்லை. சாப்பாடு முடிந்து வெற்றிலைபாக்கு போட்டுக்கொள்ளும் போது கணவன் மனைவி இருவருக்கும் புத்திமதி சொன்னான். சேகரை கடிந்து கொண்டான். சியாமளாவுக்கு சில அறிவுரைகளை வழங்கினான்.

ரமேஷ் பேக்கில் இருந்த மகிமை என்னவோ தெரியவில்லை. சியாமளா, சேர் இருவரும் சமாதானமாகி விட்டதோடு என்றும் இல்லாமல் சிரித்த முகத்துடன் கிளம்பிப் போனார்கள்.

சியாமளா போகும்முன் ஹேமாவின் கையை பிடித்து லேசாக அழுத்தினாள். "ஹேமா!. நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி. நீ அழகாக இருப்பது சரி உனக்கு சரியான ஜோடி என்பதுபோல் தோற்றமளிக்கும் ரமேஷ் கணவனாக கிடைத்திருக்கிறான். ரமேஷ் உனக்கு சரியான ஜோடி மட்டுமே இல்லை. திறமைசாலியாகவும் இருப்பது கடவுள் கொடுத்த தவரம் கவனமாக இருந்துகொள். உங்க இருவருக்கும் என்னைப் போன்றவர்களின் கண்பட்டுவிடப்போகிறது." புன்முறுவலுடன் சொல்லிவிட்டு போனாள்.

அவர்கள் கிளம்பிப் போனபிறகு ரமேஷ், "எனக்கு எழுத வேண்டிய வேலை நிறைய இருக்கு. இரவு ஒரு கப் டீ போட்டுக் கொடுக்கச் சொல்லு" என்று சொல்லிவிட்டு தன்னுடைய அறைக்கு போய்விட்டான்.

கிட்டத்தட்ட அரைமணி நேரம் கழித்து ஹேமா தானே சுயமாக டீயை தாயாரித்து அவன் அறைக்கு எடுத்துச் சென்றாள்.

ரமேஷ் இரவு உடைகளை அணிந்து கொண்டு மேஜை அருகில்

ரொம்ப சீரியஸாக எழுதிக் கொண்டிருந்தான்.

ஹேமா டீயை கொண்டு வந்து அவன் மேஜைமீது வைத்தாள்.

"தாங்க்ஸ்."

அவன் தலையை குனிந்து கொண்டு மறுபடியும் எழுதுவதில் ஆழ்ந்து போய்விட்டான். அவன் போக்கை பார்த்தால் டீயை கொண்டு வந்தது யாரு என்று கவனித்ததாக தெரியவில்லை.

"ரமேஷ்! உன்னிடம் பேசவேண்டும்" என்றாள் ஹேமா.

"இப்பொ வேண்டாம். நாளைக்கு பேசுவோம். இந்த வேலை முடிந்தால் தவிர எனக்கு நிம்மதியாக இருக்காது." டீ கோப்பையை எடுத்துக்கொண்டே காகிதங்களை சுட்டி காண்பித்தான்.

அவன் டீயை குடித்து முடிப்பதற்குள் சொல்லிவிடலாம் என்று நினைத்தாள். ஆனால் அந்த வேலை ரொம்ப முக்கியம் என்று சொல் கிறான். தான் சொல்வதை கேட்டு அவனுடைய கவனம் சிதறி விட்டால்?

"என்ன? இன்னும் நின்றுகொண்டே இருக்கிறாய்?"

"கோப்பைக்காக." ஹேமாவுக்குக் கோபம் வந்தது. ஓய்வு என்பதே இவனுடைய அகராதியில் இல்லையோ?

"தாங்க்ஸ்." டீயை குடித்து முடித்துவிட்டான். ஹேமா அவன் கையிலிருந்து கோப்பையை எடுத்துக் கொள்ளப் போனாள். ரமேஷ் இடதுகையால் கோப்பையை மேஜைமீது வைத்துவிட்டு வலது கையால் ஹேமாவின் கையை பற்றிக்கொண்டான்.

"என்றும் வராதவள் இன்று நீயாக என் அறைக்குள் காலடி எடுத்து வைத்திருக்கிறாய். உன்னை வெறுமே அனுப்புவதற்கு என் மனம் ஒப்பவில்லை." அவன் கண்களில் குறும்பு மின்னியது. ஹேமா வின் கையை வேகமாக இழுத்தான். ஹேமாவின் கன்னம் அவன் முகத்தை நெருங்கியது. சட்டென்று இதழ்களை அவள் கன்னத்தில் ஒற்றி எடுத்தான். ஹேமாவின் தோள்களில் கையை பதித்துவிட்டு கண்களுக்குள் ஆழமாக பார்த்துக்கொண்டே, "போகும்முன் சேகர் என்ன சொன்னான் தெரியுமா? உன்னை மனைவியாக அடைந்த நான் ரொம்ப அதிர்ஷ்டசாலியாம்."

ஹேமாவின் இதழ்கள் அசைந்தன.

சியாமளாவும் இதே வார்த்தையைச் சொன்னாள் என்று சொல்ல நினைத்தாள்.

அதற்குள் ரமேஷ் மறுபடியும் சொன்னான்.

"ஹேமா! அந்த வார்த்தையை பிறர் சொல்ல வேண்டியது இல்லை. நானே என்றோ ஒப்புக்கொண்டுவிட்டேன். என்னைக் கணவனாக அடைந்தது அதிர்ஷ்டம்தான் என்று நீயும் ஏற்றுக் கொள்ளும் நாள் வரும்வரையில் எனக்கு அமைதி இருக்காது. சரி தானா! தேவியாருக்கு கோபம் வராது என்றால் இந்த பக்தனை அனுகிரகித்து தனியாக விட்டுவிட வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்."

ஹேமா கோப்பையை எடுத்துக்கொண்டு மௌனமாக வெளியேறிக் கொண்டிருந்தாள்.

வாசற்கதவைத் தாண்டும்போது இரண்டே எட்டில் வந்தது போல் பின்பக்கமாக ரமேஷ் அவளை நெருங்கினான். ஹேமாவின் தோள்களை பற்றி வேகமாக தன்பக்கம் திருப்பிக்கொண்டான்.

"ஹேமா! இப்படி போகச் சொல்கிறேன் என்று என்மீது கோபம் இல்லையே?"

இல்லை என்பதுபோல் தலையை அசைத்தாள்.

"நாளை காலையில் நீ சொல்வதை எல்லாம் கவனமாக கேட்டுக் கொள்கிறேன். ஓ.கே.வா."

சரி என்பதுபோல் பார்த்தாள்.

ரமேஷ் ஹேமாவை இறுக்கமாக அணைத்துக் கொண்டான். அவன் இதழ்கள் ஹேமாவின் நெற்றியில், கண்களில், கன்னத்தில் ஆவேசமாக பதிந்தன.

"ஹேமா! எனக்கு வேலை பளு கொஞ்சம் குறைந்த பிறகு எங்கே யாவது போய் ஒரு மாதம் நிம்மதியாக இருப்போம்." என்றான்.

சமீபகாலமாக அவன் அடிக்கடி இந்த வார்த்தையைச் சொல்லிக் கொண்டிருந்தான்.

"இனி போய்விடு. இன்னும் இரண்டு நிமிடங்கள் நீ இங்கே இருந்

தால் இன்று இரவு என் வேலை முடிந்தாற்போல்தான்" என்று சொல்லிக்கொண்டே ஹேமாவின் தோள்களை பிடித்து வெளியில் தள்ளிவிட்டு கதவுகளைச் சாத்தினான். மறுபடியும் மேஜை அருகில் வந்து பேப்பர்களை எடுத்துக் கொள்ளும்போது அவன் இதழ்கள் மீது புன்முறுவல் மலர்ந்தது. களைப்பு நீங்கியதோடு இரு மடங்கு சக்திவந்துவிட்டது போல் தோன்றியது.

டீ கோப்பையை எடுத்துக் கொண்டு மெதுவாக படிகளில் இறங்கிக் கொண்டிருந்த ஹேமாவின் இதயத்திலிருந்து பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது. இன்றும் மதுவை பற்றி ரமேஷிடம் சொல்ல முடியவில்லை என்ற வருத்தம் ஏற்பட்டது.

50

காலையில் ரமேஷ் எழுந்துகொள்ளும் போதே அவனுடைய பார்ட்னர்கள் வந்து காத்துக்கொண்டு இருந்தார்கள். அவர்களுடன் சேர்ந்து காபி சாப்பிட்டு வெளியில் கிளம்பிப் போன ரமேஷ் இரவு நேரம் கழித்து வீட்டுக்கு வந்தான். வரும்போதே தலைவலி மண்டையை பிளப்பதாக சொல்லிவிட்டு சாப்பிடாமலேயே மாத்திரையை போட்டுக்கொண்டு விளக்கை அணைத்து படுத்து விட்டான். அன்று இரவு சுருணாவைகூட அவன் அழைக்கவில்லை.

மறுநாளும் மூச்சுவிடமுடியாத அளவுக்கு வேலைகள் அவனை சூழ்ந்து கொண்டன. மூன்றாவது நாள் லேசாக ஜ்ரம் வந்துவிட்டது. படுக்கையைவிட்டு எழுந்து கொள்ளவில்லை. டாக்டர் வந்து பரி சோதித்துவிட்டு, "அலைச்சலினால் ஏற்பட்ட பாதிப்பு இது. வேறு ஒன்றும் இல்லை. நீ ரொம்பவும் இயந்திரம் போல் வேலை செய்து கொண்டே இருக்கிறாய். ரமேஷ். குறைந்த பட்சம் ஒரு வாரமாவது ஓய்வு எடுத்துக்கொண்டால் நன்றாக இருக்கும்." டாக்டர் அறிவுரை வழங்கினார்.

"இதோ— கையில் இருக்கும் வேலை முடிந்ததுமே ஒருமாதம் எங்கேயாவது போய் இருக்கிறேன்". ரமேஷ் சொன்னான்.

"இதே வார்த்தையை ஆறுமாதங்களாக சொல்லி வருகிறாய்." டாக்டர் கடிந்து கொண்டார்.

"இல்லை. இல்லை. இந்த தடவை கட்டாயம் போகிறேன்."

ரமேஷ் வாக்கு தருவதுபோல் சொன்னான்.

அன்று மதியம்...

ரமேஷ் தூங்கி எழுந்ததும் கருணாவுடன் விளையாடிக்கொண்டு இருந்தான்.

ஹேமா காலையிலிருந்து மதுவிஷயம் ரமேஷிடம் சொல்வதா வேண்டாமா என்று குழம்பி கடைசியில் சொல்லிவிடுவது என்று முடிவு செய்து அவன் அறையில் நுழைந்தாள். ஹேமா போனபோது கருணா பொம்மை புத்தகத்தை மடியில் வைத்துக்கொண்டு, தந்தையை கண்களை மூடிக்கொள்ளச் சொல்லி பக்கங்களை திருப்பிக் கொண்டே பொம்மை வருமா வராதா என்று கேட்டுக் கொண்டிருந்தாள். ரமேஷ் ஒருதடவை பொம்மை வரும் என்றும், மற்றொரு தடவை வராது என்றும் சொல்லிக்கொண்டே, நடுநடுவில் ஓரக்கண்ணால் பார்த்துச் சொல்வதுபோல் நடித்து, வேண்டுமென்றெ கருணாவிடம் பிடிப்பட்டு, அவள் கோபித்துக் கொள்வதை ரசித்துக் கொண்டிருந்தான். அறையில் நுழைந்த ஹேமா தந்தை மகளும் விளையாடுவதை பார்த்து ஈர்க்கப்பட்டு விட்டது போல் ஒரு நிமிடம் அப்படியே நின்றுவிட்டாள். பக்கங்கள் முடிந்து போனதால் கருணா புத்தகத்தை மூடிவிட்டாள்.

"ரமேஷ்! உன்னிடம் ஒரு விஷயம் சொல்லணும்" என்றாள் ஹேமா.

ரமேஷ் தலையை உயர்த்தி ஹேமா பக்கம் பார்த்தான்.

ஹேமா கருணாவின் தலைமுடியை கோதிக்கொண்டே "மது வீட்டைவிட்டு ஓடி விட்டானாம். அண்ணன் அண்ணி ரொம்ப வருத்தப்பட்டுக் கொண்டிருப்பதாக செய்தி தெரிந்தது" என்றாள்.

"சுசீலா மாமி சொன்னாளா? வீட்டைவிட்டுபோய் எத்தனை நாளாச்சு?" பதட்டத்துடன் கேட்டான்.

"ரொம்ப நாளாகி விட்டதாம்."

"டாடீ! இந்த பொம்மையை பாரு." புத்தகத்தை புரட்டிக் கொண்டிருந்த கருணா உற்சாகமாக ஏதோ சொல்லப் போனாள்.

ரமேஷ் மகளை கட்டிலைவிட்டு கீழே இறக்கிவிட்டான்.

"கருணா! கொஞ்சம் வெளியில்போய் விளையாடு கண்ணம்மா."

"ஊஹூம்." கருணா மறுப்பதுபோல் தலையை அசைத்தாள்.

"என் தங்கம் இல்லையா. அப்பா சொன்னதை கேளும்மா." அவன் குரல் கெஞ்சுவதுபோல் இருந்தாலும் கண்கள் ஆணையிடுவதுபோல் இருந்தன.

கருணா முகத்தை தூக்கிவைத்துக் கொண்டு தாயின் பக்கம் கோபமாக பார்த்துவிட்டு விருப்பம் இல்லாமலேயே அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

சற்று நேரம் கணவன் மனைவி இருவரும் மௌனமாக இருந்தார்கள். ரமேஷ் கருணா வைத்துவிட்டு போன புத்தகத்தை புரட்டிக் கொண்டிருந்தான்.

"இந்த ஊரில் எங்கேயாவது இருக்காலாம் இல்லையா. தேடினால் கிடைப்பானோ என்னவோ". ஹேமா தாழ்ந்த குரலில் சொன்னாள்.

"எதற்காக தேடணும்? குறைந்த பட்சம் நமக்கு ஒரு கடிதமாவது எழுதினார்களா? நாம் உயிரோடுதான் இருக்கிறோம் என்ற விஷயம் அவர்களுக்கு நினைவு இருக்கிறதா?"

ரமேஷ் குரலில் ரோஷமும், கோபமும் போட்டியிட்டன. புருவங்கள் முடிச்சிட்டுக் கொண்டன.

சற்று தாமதித்துவிட்டு மீண்டும் சொன்னான்.

"இவ்வளவு முட்டாள்தனமாக பிடிவாதம் பிடிக்கும் மனிதர்களை நான் இப்பொழுதுதான் பார்க்கிறேன். நம்மீது இருக்கும் கோபத்தினால் மதுவின் எதிர்காலத்தை வீணாக்கிவிட்டார்கள். மதுவை என்னிடம் அனுப்பச்சொல்லி எத்தனை கடிதங்களை எழுதியிருப்பேன்? அவனுடைய படிப்பு விஷயத்தில் நான் பொறுப்பு ஏற்றுக் கொள்வதாகவும், அவனுடைய நலனை மனதில் வைத்துக் கொண்டாவது எங்களை மன்னித்துவிடச் சொல்லி கடிதங்களை எழுதினேன். என் பேச்சை கேட்டார்களா?"

"நீ அண்ணனுக்குக் கடிதம் எழுதினாயா? எப்போ? என்னிடம் சொல்லவே இல்லையே?"

"என்னவென்று சொல்லட்டும்? உன் அண்ணன் எழுதிய

பதில்களை படித்தால் இனி ஜென்மத்தில் அவர்களுடைய முகத்தில் விழிக்கக்கூடாது என்ற அளவுக்குக் கோபம் வரும். அந்த கடிதங்களை நினைவுபடுத்திக் கொள்வதில் எனக்கு விருப்பம் இல்லை." ரமேஷ் கையில் இருந்த புத்தகத்தை மேஜைமீது போட்டுவிட்டு, அலமாரியை திறந்தான். கீழ்தட்டில் ஒரு கவரில் இருந்த கடிதங்களை எடுத்து ஹேமாவின் கையில் திணித்தான்.

"இதைப்படி. படித்த பிறகு, மானம், ரோசம் இருப்பவன் அவர்களைப்பற்றி அக்கறைக் காட்டுவானா? நீயே முடிவு செய்துகொள்."

ஹேமா அந்த கடிதங்களை படித்தாள். ரமேஷ் சொன்னது முற்றிலும் உண்மை. சுய அபிமானம் இருப்பவன் அவர்கள் வீட்டு வாசற்படியை ஏறமாட்டான்.

ரமேஷ் வந்து கட்டிலின்மீது அமர்ந்து கொண்டான். பக்கத்து அறையிலிருந்து சுவற்று கடிகாரத்தில் மூன்றுமணி அடிக்கும் சத்தம் கேட்டது.

"சமையல்காரனை காபி கொண்டுவரச் சொல்லு. மாத்திரை போட்டுக் கொள்ளணும்." கைகடிகாரத்தை பார்த்துக் கொண்டே சொன்னான்.

ஹேமா அந்த கடிதங்களை ரமேஷ் கட்டில் பக்கத்தில் இருக்கும் மேஜைமீது வைத்துவிட்டு வெளியில் வந்தாள். அந்த கடிதங்களில் எழுதியிருந்ததை நினைவுபடுத்திக் கொள்ளும்போது ஹேமாவின் முகம் சுன்றிவிட்டது. ச்சி... ச்சி.... எதிரே இருப்பவன் யாராக இருந்தாலும் மதிப்பு தந்து, அன்பாக பேசும் அண்ணன்தானா இந்த கடிதங்களை எழுதியது!

கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளுக்கு பிறந்த மகளை எதிர்காலத்தில் யாரும் திருமணம் செய்து கொள்ளமாட்டார்கள் என்று பயந்து ரமேஷ் மதுவை படிக்க வைக்கும் சாக்கில் இருவருக்கும் முடிச்சுப்போட பார்க்கிறானாம். தன் உடம்பின் உயிர் இருக்கும் வரையில் ரமேஷின் எண்ணம் ஈடேறாது என்று எழுதியிருந்தான். அதைப்படித்ததும் ஹேமாவுக்கு ஆத்திரமும், கோபமும் வந்தன.

ஹேமா தானே சுயமாக காபி கலந்து எடுத்து வந்தாள். ரமேஷ் இப்படி தனியாக இருக்கும் நேரமே அரிதாகிவிட்டது. அது போன்ற வாய்ப்பு கிடைக்கும்போது அவனுடைய வேலைகளை ஹேமாவே பார்த்துக் கொள்வாள்.

ஹேமா காபி கொண்டு வந்தபோது ரமேஷ் கட்டில்மீது தலையணையில் சாய்ந்துகொண்டு கண்களை மூடியிருந்தான். அவன் வலது கையில் கடிதங்கள் இருந்தன. ஏதோ யோசனையில் இருந்ததுபோல் அவன் முகம் சீரியஸாக இருந்தது.

"காபி இதோ." ஹேமா அருகில் வந்து கோப்பையை நீட்டினாள்.

அவன் உடனே கோப்பையை எடுத்துக் கொள்ளவில்லை. தலையை உயர்த்தி பார்த்தவன் "இதற்கெல்லாம் காரணம் நீதான்" என்றான்.

ஹேமா வியப்புடன் பார்த்தாள்.

"அன்று நம் திருமண விஷயத்தை முன்னாடியே உன் அண்ணாவிடம் சொல்லிவிடுகிறேன் என்று சொன்னால், வேண்டாம் என்றாய். சில நாட்கள் கழித்து திருமணம் செய்து கொள்வோம் என்றால் அதற்கும் ஒப்புக்கொள்ளவில்லை. உடனே செய்துகொள்ள வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாய். அதுவும் போகட்டும். திருமணம் முடிந்த பிறகாவது கடிதம் எழுதியோ, நேரில் சென்றோ உன் அண்ணன் அண்ணியை சமாதானப்படுத்தியிருக்கலாம். அவர்கள் உன்னை தள்ளி வைத்ததைவிட நீயே அவர்களிடமிருந்து விலகிவிட்டாய். பிரிவு அதிகரிக்கும் விதமாக நடந்து கொண்டாயே தவிர குறைக்க முயற்சி செய்யவில்லை."

"ரமேஷ்! அவர்களை சமாதானப்படுத்த நீ செய்த முயற்சிகள் பலன் தரவில்லையே."

"நான் செய்தால் நீ செய்ததுபோல் ஆகிவிடுமா? எவ்வளவு கோபமாக இருந்தாலும் நீ நேரில் சென்று பேசி இருந்தால் அவர்கள் மறுத்து இருக்கமாட்டார்களோ என்னவோ."

ஹேமா மௌனமாக நின்றிருந்தாள். ரமேஷ் காபி கோப்பையை பெற்றுக்கொண்டே சொன்னான். சில சமயம் யோசிக்கும்போது என்மீதே எனக்குக் கோபம் வருகிறது. எத்தனை பேருக்கு எத்தனை

விதமாக உதவி செய்கிற என்னால் அந்த குடும்பத்திற்கு சின்ன உபகாரம்கூட செய்ய முடியாமல் போகிறது. இந்த உலகில் எனக்கு என்று ஒரு இடம் இல்லாத சமயத்தில் அவர்கள்தான் எனக்கு ஆதரவு கொடுத்தார்கள். நான் சாப்பிடவில்லை என்று தெரிந்து கொண்டு உன் அண்ணி வற்புறுத்தி என்னை சாப்பிடவைத்ததை, எனக்கு வேலை கிடைக்க வேண்டும் என்பதற்காக உன் அண்ணன் என்னையும் உடன் அழைத்துக் கொண்டு நேரம் காலம் பார்க்காமல் சுற்றியதை இந்த ஜென்மத்தில் என்னால் மறக்க முடியுமா? அன்று அவர்களைத் தவிர எனக்கு யாருமே இல்லை. இன்று அவர்களைத் தவிர மற்றவர்கள் என்னிடம் அன்பாக நடந்துக் கொள்கிறார்கள். இந்த வேடிக்கை எங்கேயாவது நடக்குமா? இந்த உலகில் நான் யாருக்காவது கடன் பட்டிருக்கிறேன் என்று சொன்னால் அது உன் அண்ணனுக்கு மட்டும்தான். நான் உன்னைத் திருமணம் செய்து கொள்ளாமல் இருந்தால் பெற்ற மகனைப்போல் எனக்கு ஆதரவு தந்திருப்பார்கள். அவர்கள் என்னை மன்னிக்காமல் இருப்பது நியாயம்தான். உண்ட வீட்டுக்கே துரோகம் செய்தவனாகி விட்டேன்."

அதற்கு மேல் கேட்க முடியாதவள்போல் ஹேமா உதட்டைக் கடித்துக்கொண்டு அந்த இடத்தை விட்டு வெளியில் வந்து விட்டாள். திருமணம் பற்றி பிரஸ்தாபனை வந்த போதெல்லாம் ரமேஷ் இப்படி பேசுவதைக் கேட்டால் ஹேமாவுக்கு வேதனையாக இருக்கும்.

51

லேடீஸ் கிளப்பில் ஏற்பாடு செய்திருந்த "மேட்ஃபார் ஈச் அதர்" போட்டியில் முதலாவது இடத்திற்கு ரமேஷ்-ஹேமா தம்பதிகள் தேர்வு செய்யப்பட்டார்கள். அந்த விழாவுக்கு ஹேமா அணிந்திருந்த புடவையை, நகைகளை பார்த்து அங்கே இருந்த பெண்களின் இதயங்கள் பொறாமை என்ற தீயில் வெந்து சாம்பலாகிவிட்டன. அழகும், ஐஸ்வரியமும் ஒரே இடத்தில் இருப்பது ரொம்ப அபூர்வம். அதற்கு துணையாக திறமையும் சேர்ந்து கொண்டுவிட்டது. அந்த இருவரையும் பார்க்கும்போது கண் கொள்ளாத காட்சியாக இருந்தது. ரமேஷை கணவனாக அடைந்த ஹேமாவின் அதிர்ஷ்

டத்தைக் கண்டு உள்ளூர பொறாமைப்பட்டுக் கொண்டிருந்தாலும், வாழ்த்துகளை தெரிவித்தார்கள்.

கிளப்புக்கு முன்னால் இருந்த இடத்தில் பெரிதாக ஷாமியானா போட்டு மேடை ஏற்பாடு செய்திருந்தார்கள். விழாவுக்கு வந்திருந்த பிரமுகர்கள் ரமேஷை வாய் நிறைய பாராட்டினார்கள். ரமேஷ் பல நிறுவனங்களுக்கு நன்கொடை அளித்திருந்தான். அந்த நிறுவனத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் ரமேஷை வானளாவுக்கு புகழ்ந்து பேசும்போது, ரமேஷ் மேஜைமீது வைக்கப் பட்டிருந்த பூமாலையில் இதழ்களை பரிசிலிப்பதுபோல் பார்த்துக் கொண்டு புன்முறுவலுடன் அமர்ந்திருந்தான். அவன் கண்களில் திருப்தியும், நினைத்ததை சாதித்துவிட்ட பெருமையும் பிரதிபலித்தன. இந்த உலகத்தையே தன் கையில் அடக்கிவிட்டபோது ஏற்படும் பெருமை அது. ஹேமா மட்டும் அந்த புகழ்ச்சிகளை, பாராட்டுகளை கேட்க முடியாதவள் போல்தலையை குனிந்துகொண்டு உட்கார்ந் திருந்தாள்.

கிளப் நிர்வாகிகள் விழா முடிந்தபிறகு 'பஃபே' டின்னருக்கு ஏற்பாடு செய்து இருந்தார்கள். நகரத்திலேயே விலை உயர்ந்த ஹோட்டலில் ஆர்டர் கொடுத்திருந்ததால், அந்த ஹோட்டலை சேர்ந்த வெயிட்டர்கள் வந்து பரிமாறிக் கொண்டிருந்தார்கள்.

சிலர் நாசூக்காக தட்டில் இரண்டு மூன்று 'ஐடம்'களை மட்டுடே பரிமாறிக் கொண்டால், இன்னும் சிலரோ 'மேனர்ஸ்' என்ற வார்த்தையை மறந்துவிட்டதுபோல் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். எல்லோரும் பேசிக்கொண்டே இருந்ததில் அந்த இடம் முழுவதும் சந்தடியாக இருந்தது.

பெண்களில் பெரும்பாலானவர்கள் ஹேமாவை சூழ்ந்து கொண்டார்கள்.

கிளப் பிரசிடெண்டாக இருந்த அம்மாள் இரண்டு குலாப் ஜாமூன்களை எடுத்து ரமேஷின் தட்டில் போட்டுவிட்டு "உங்களுக்கு என்னுடைய தனிப்பட்ட வாழ்த்துக்கள்" என்றாள்.

"நோ... நோ. அப்பொதே ரொம்ப அதிகமாகிவிட்டது." ரமேஷ் சட்டென்று தட்டைகீழே வைக்கப்போனான்.

"வாழ்த்துக்களை மறக்கக்கூடாது. அந்த அம்மாள் நிஷ்டூரமாக பார்த்துக் கொண்டே சொன்னாள்."

"இக்கட்டில் மாட்டி விட்டீர்களே என்னை? நான் பருமன் ஆகி விட்டால் ஹேமா எனக்கு டைவர்ஸ் தந்துவிடுவேன் என்று மிரட்டிக்கொண்டு இருக்கிறாள். டாக்டர் வேறு இனிப்பை குறைக்க வேண்டும் என்று எப்போதோ சொல்லிவிட்டார். ஹேமாவும் நானும் திருமணம் செய்து கொள்ளும்போதே யார் வெயிட் ஏறினாலும் அடுத்தவர் டைவர்ஸ் செய்து விடுவதாக உறுதிமொழி எடுத்துக் கொண்டோம்." ரொம்ப சீரியஸாக சொல்வதுபோல் சொன்னான்.

எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

"நீங்கள் சொல்வது உண்மையாக இருந்தால் நீங்க ஜாக்கிரதையாக இருக்க வேண்டியதுதான். உங்கள் மனைவி சொன்ன சொல்லை காப்பாற்றிக் கொள்வதுபோல் ஒல்லியாகத்தான் இருக்கிறாள். நீங்க எங்கள் பிரிவில் சேர்ந்துவிடும் அபாயம் இப்பொழுதே தெரிகிறது" - சற்று பருமனாக இருந்த பெரியவர் சொன்னார்.

"என்ன செய்ய முடியும் சொல்லுங்க? பெண்கள் வீட்டைவிட்டு வெளியே அதிகம் வரமாட்டார்கள். உணவு விஷயத்தில் கட்டுப் பாடும் இருக்கும். நாம் வெளியில் இருக்கும் நேரம் அதிகம். இது போன்ற அன்பு கலந்த உபசாரங்களை தவிர்க்க முடியாது. இன்னும் கொஞ்சம் ஸ்வீட் போடுங்கள். தேவைப்பட்டால் நாளைக்கு பட்டினி இருந்து இதை ஈடுகட்டி விடுகிறேன். அன்புடன் நீங்கள் பரிமாறியதை வேண்டாம் என்று சொல்ல என் மனம் ஒப்பவில்லை." தட்டை முன்னால் நீட்டிக்கொண்டே சொன்னான். ரமேஷ் சொன்னதைக் கேட்டு அந்த அம்மாளின் முகம் மலர்ந்துவிட்டது.

திருமணத்தை பற்றி அவன் பேச்சு எடுத்தபோது, சிலர் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். சிலர் அடுத்தவர்களின் தோளில் தட்டி கண்களால் ஜாடை காட்டினார்கள்.

எல்லோருடைய பேச்சையும் கவனமாக கேட்டுக்கொள்வது போலவும், கலகலப்பாக இருப்பது போலவும் ஹேமா நடித்துக் கொண்டு இருந்தாலும், அவள் மனம் இங்கே இருக்கவில்லை. இந்த இடத்தை விட்டு எப்போ கிளம்புவோம் என்பதுபோல் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

வெள்ளை சீருடையில் இருந்த சர்வர்கள் மேஜைமீது இருந்த உணவு பொருட்கள் தீர்ந்து போசாமல் உடனுக்குடன் கொண்டு வந்து வைத்துக் கொண்டிருந்தார்கள்.

"சர்வர்! உன்னைத்தான்! கொஞ்சம் தண்ணீர் வா!" ஹேமாவின் பக்கத்தில் இருந்த பெண்மணி தொலைவில் போய்க்கொண்டிருந்த சர்வரை குரலை உயர்த்தி அழைத்தாள்.

அவன் பின்னால் திரும்பிப் பார்த்து சரி என்பதுபோல் தலையை அசைத்துவிட்டு போய்விட்டான்.

"மதூ!" திடீரென்று ஹேமா உரத்தகுரலில் கத்திவிட்டாள்.

அங்கே இருந்த எல்லோரும் இந்த கத்தலைக் கேட்டு பேச்சை நிறுத்திவிட்டு திரும்பிப் பார்த்தார்கள். ஹேமா சாப்பிட்டுக் கொண்டிருந்த தட்டை மேஜைமீது வைத்துவிட்டு "மதூ! மதூ!" என்று அழைத்துக்கொண்டே ஓடினாள். எதிரே வந்து கொண்டி ருந்த சர்வரை மோதியதில் அவன் கையில் இருந்த சாம்பார் கிண்ணம் தளும்பியது. கீழே விழப்போன ஹேமா டேபிள்மீது கையை ஊன்றி சமாளிக்க முயன்றாள். ஹேமாவின் கை கண்ணாடி டம்ளர்மீது பட்டு கீழே விழுந்து உடைந்துவிட்டது.

ஹேமா தன்னை நோக்கி வருவதை கவனித்த அந்த சர்வர் நடையின் வேகத்தை அதிகரித்தான்.

"மதூ!" ஹேமா கத்திக்கொண்டே வேகமாக சென்று அவனை இரண்டு கைகளால் பலமாக பற்றிக் கொண்டுவிட்டாள்.

அவன் ஹேமாவின் கைகளை விடுவித்துக்கொள்ள முயன்று கொண்டிருந்தான்.

ஹேமா அந்த நிமிடத்தில் ரமேஷ் உயிருக்கும் மேலாக போற்றி வந்த பண்புகளை, மதிப்புகளை முற்றிலும் மறந்துவிட்டாள். மதுவை இறுக்கமாக பிடித்துக்கொண்டே அந்த இடத்தை நோக்கி வந்துகொண்டிருந்த ரமேஷை பார்த்து "ரமேஷ்! மது..." என்றாள். ரமேஷுடன் மற்றவர்களும் அந்த இடத்திற்கு வந்தார்கள். மதுவின்

முகம் சிவந்துவிட்டது. எப்படியோ சக்தியை திரட்டிக் கொண்டு ஹேமாவின் கைகளை விடுவித்துக் கொண்டான்.

"சாரி. நீங்கள் யாரென்று எனக்குத் தெரியவில்லை" என்றான்.

"ரமேஷ் அவன்தான் மது அவனைப்பிடித்துக்கொள். போக விடாதே." ஹேமா ரமேஷின் கையை பிடித்துக் கொண்டே சொன்னாள்.

"உனக்கு மூளை கலங்கிவிட்டது ஹேமா!" பற்களை இறுக கடித்துக்கொண்டே சொன்னான் ரமேஷ்.

"மது! வீட்டுக்கு போகலாம் வா!" ஹேமா மறுபடியும் மதுவின் பக்கம் போகப் போனாள். ஆனால் ரமேஷின் கை ஹேமாவை பலமாக பற்றி நிறுத்திவிட்டது.

"அவங்க என்னை வேறு யாரோ என்று தவறாக நினைத்து விட்டாங்க போல் இருக்கு" மதுவின் குரலில் கேலி செய்வதுபோல் ஒலித்தது.

"யெஸ்... ஐயாம் சாரி" கம்பீரமாக மொழிந்தான் ரமேஷ்.

மதுவின் கண்கள் ரமேஷை சுட்டெரிப்பது போல் தீவிரமாக பார்த்தன. பிறகு வேகமாக அந்த இடத்தைவிட்டு போய் விட்டான்.

"நான் சரியாகத்தான் பார்த்தேன். அவன் மதுதான். ரமேஷ்! அவனை நிறுத்து. போய்விடப் போகிறான்." ஹேமாவின் குரல் பதட்டமாய் ஒலித்தது.

"ஹேமா! நான் சொல்வதை கேள்." அவன் குரல் நயமாக ஒலித்தாலும் கண்கள் மட்டும் ஆணையிடுவதுபோல் கோபமாக இருந்தன.

ஹேமாவுக்கு திடீரென்று சுயஉணர்வு வந்துவிட்டதுபோல் இருந்தது. சுற்றிலும் பார்த்தாள். விழாவுக்கு வந்திருந்த எல்லோரும் கும்பலாக கூடி அவளையே வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

52

"உனக்குக் கொஞ்சம்கூட அறிவு இல்லை. நான்கு பேருக்கு நடுவில் இருக்கிறோம் என்ற ஞானம்கூட இல்லாமல் இப்படி நடந்து

கொள்வாயா?" விழா முடிந்த பிறகு வீட்டுக்கு வரும்போது ரமேஷ் சொன்னான்.

"அவன் மது இல்லை என்கிறாயா?"

"அவன் மதுதான். ஆனால் நாம் அவனை அடையாளம் தெரிந்து கொள்வதை அவன் விரும்பவில்லை. அதை நீ புரிந்துகொள்ள வேண்டாமா?"

"திடீரென்று அவனை அப்படி பார்த்ததும் எனக்கு மூளை வேலை செய்யவில்லை. கைக்கு கிடைத்தவனை விட்டுவிட்டாய். மறுபடியும் தென்படுவானோ... மாட்டோனோ?"

இருவரும் வீட்டுக்கு வந்தார்கள். ஹேமா உடைகளை மாற்றிக் கொண்டாள். அரைமணி சுழித்து ரமேஷ் ஹேமாவை அழைத்து "கிளம்பு ஹேமா! போய் மதுவை அழைத்துக்கொண்டு வருவோம்" என்றான்.

"எங்கே இருக்கிறான்?" ஹேமா வியப்புடன் கேட்டாள்.

"அந்த ஹோட்டல் முதலாளியும், மேனேஜரும் எனக்கு நன்றாக தெரிந்தவர்கள். இப்பொழுதுதான் போன் செய்தேன். மது இருக்கிறானாம்."

ஹேமா மளமளவென்று செருப்புகளை அணிந்துகொண்டு வந்தாள்.

கிட்டத்தட்ட நள்ளிரவு ஆகப்போகிறது. எங்கும் நிசப்தம் பரவியிருந்தது. ரமேஷ் டிரைவ் செய்துகொண்டிருந்த கார் அந்த ஹோட்டல் முன்னால் வந்து நின்றது.

மேனேஜர் எதிரில் வந்தார். போனில் ரமேஷ் என்ன சொல்லியிருந்தானோ தெரியவில்லை. ரமேஷ் காரை விட்டு இறங்கியதும் "இந்தப்பக்கமாக வாங்க சார். அவர்களுடைய அறைகள் இந்தப் பக்கம் தான் இருக்கு" என்று சொல்லிக் கொண்டே, ஹோட்டலுக்கு ஒட்டினார்போல் இருக்கும் கட்டடத்திற்கு அழைத்துச் சென்றார். நீளமான வராண்டாவில் வரிசையாக அறைகள் இருந்தன. ஒரிரு அறைகளில் இன்னமும் விளக்கு எரிந்து கொண்டு இருந்தது. பேச்சுக் குரலும் கேட்டது. மேனேஜர் ஒரு அறையின் முன்னால் நின்று "மது!" என்று அழைத்தார்.

"வந்துவிட்டேன்" என்று சொல்லிக்கொண்டே உள்ள இருந்து மது வெளியில் வந்தான்.

வாசலில் மேனேஜருக்கு பக்கத்தில் நின்றிருந்த ரமேஷையும், ஹேமாவையும் பார்த்ததும் பாம்பு தீண்டியதுபோல் அப்படியே நின்றுவிட்டான்.

"இவங்க உனக்காக வந்திருக்கிறார்கள்" மேனேஜர் சொன்னார்.

"அவர்கள் யாரென்று எனக்குத் தெரியாது" அலட்சியமான குரலில் பதில் வந்தது.

ரமேஷ் ஒரு அடி முன்னால் வைத்தான்.

"மதூ! என்பக்கம் சரியாக பார். நான் யாரோ தெரியவில்லை என்று சத்தியம் செய்து சொல்லு. நீ அப்படி செய்தால் உடனே இங்கிருந்து போய்விடுகிறேன்."

"சற்றுமுன், பார்ட்டியில் உங்களுக்கு என்னை அடையாளம் தெரியவில்லை என்று சத்தியம் செய்து சொல்லுங்க முதலில்."

"அதுவா! உனக்காகத்தான் அப்படிச் சொன்னேன். அப்படி சொல்லவில்லை என்றால் ஹேமா உன்னை விடமாட்டாள். உன்னை வலுக்கட்டாயமாக வீட்டுக்கு அழைத்துப்போக வேண்டிய சூழ்நிலையை உருவாக்கிவிடுவாள். ரொம்ப ரகளை ஆகிவிடும்."

"ஆமாம். எல்லோரும் இருக்கிறார்கள். அவர்கள் முன்னாடி உங்களுடைய மதிப்பும், மரியாதையும் குறைந்துவிடும்."

"நீ எப்படி வேண்டுமானாலும் எடுத்துக்கொள். வீட்டுக்கு போகலாம் வா." ரமேஷின் குரல் நயமாக ஒலித்தது.

"எனக்கு வீடு என்பதே இல்லை." முகத்தில் அடித்தாற்போல் பதில் சொன்னான்.

ரமேஷ் ஒருநிமிடம் அப்படியே நின்றுவிட்டான். பிறகு அன்பு ததும்பும் குரலில் "நீ ஏன் இப்படி மாறிவிட்டாய் என்று எனக்குப் புரியவில்லை. அந்த மது நீதானா என்று தோன்றுகிறது."

"எனக்கும் அப்படித்தான் நினைக்கத் தோன்றுகிறது. எனக்கு படிப்பு சொல்லிக் கொடுத்த மனிதர் நீங்கதானா என்று. அந்த நாட்களை நினைத்தால் உங்களுக்கு தலைகுனிவாக இருக்குமோ

என்னவோ."

"வாய்க்கு வந்தபடி பேசாதே. வீட்டுக்கு போகலாம் வா."

"நீங்களும் மரியாதையாக பேசக் கற்றுக்கொள்ளுங்கள்."

மதுவுடன் வேலை பார்க்கும் இளைஞர்களில் நான்கைந்து பேர் அங்கே வந்துவிட்டார்கள்.

ஹேமாவால் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமுடியவில்லை. இரண்டடிகள் முன்னால் வைத்து, மதுவின் கையை பிடித்துக் கொண்டே "மதூ! என்ன பேசுகிறோம் என்று புரிந்துதான் பேசுகிறாயா?" என்றாள்.

மது கைகளை உதறுவதுபோல் விடுவித்துக் கொண்டான்.

"எனக்காகவாவது வீட்டுக்கு வா மதூ!" வேண்டுவது போல் சொன்னாள்.

"எதுக்காக வரணும்? உனக்கும் எனக்கும் என்ன உறவு? நீ இங்கே எதற்காக வந்தாய்? உனக்கு வேண்டிய மனிதர்கள் என்று எங்களை நீ நினைத்திருந்தால் அன்று அம்மா அப்பாவிடம்கூட சொல்லாமல் இவருடன் ஓடிப்போயிருக்கமாட்டாய்."

"வாயை மூடு!" ரமேஷ் சட்டென்று கை உயர்த்தினான். பக்கத்தில் இருந்த மேனேஜர் சட்டென்று ரமேஷின் கையைபற்றி தடுத்து விட்டார்.

மது பக்கத்தில் நின்றிருந்த இளைஞர்கள் மேலும் அவனுக்கு நெருக்கமாக வந்து நின்றுகொண்டார்கள். "மேலே கையை வைத்தால் தெரியும் சேதி" என்பது போல் பார்த்தார்கள்.

மது அவர்களை விரலால் கூட்டிக் காட்டினான். "என்மீது கையை வைத்தால் அடுத்த நிமிடம் உங்கள் உடல் உங்களுக்கு சொந்தமாக இருக்காது. கையை நீட்டி அடிப்பது உங்களால்தான் முடியும் என்று இல்லை. எங்களுக்கும் தெரியும்." அவன் குரலில் கொஞ்சம்கூட தயக்கமோ, தடுமாற்றமோ இல்லை.

ரமேஷ் திகைத்துப் போனவனாக பார்த்துக் கொண்டிருந்தான். ஹேமா இயலாமையுடன் நின்று கொண்டிருந்தாள்.

"சார்! அந்தப் பையனுக்கு வீட்டுக்கு வருவதில் விருப்பம் இல்லை

போல் தெரிகிறது. இப்பொ விட்டுவிடுவோம். பிறகு பார்த்துக் கொள்வோம்." மேனேஜர் சமாதானப்படுத்துவது போல் சொன்னார்.

"போகலாம் வா ஹேமா!" ரமேஷ் சொன்னான். அவன் கண்கள் மதுவையே பார்த்துக் கொண்டிருந்தன.

வேறு வழியில்லாதவள் போல் ஹேமா ரமேஷின் அருகில் வந்தாள்.

இந்தக் காலத்து குழந்தைகளே இப்படித்தான். இதற்கெல்லாம் காரணம் இந்த சினிமாவும், டிவியும்தான். என் தங்கை மகன் இதே போல் வீட்டை விட்டு ஓடிவிட்டான். இரண்டு முறை தேடி கண்டு பிடித்து வீட்டுக்கு அழைத்து வந்தோம் மறுபடியும் ஓடிவிட்டான். வேறு வழியில்லை என்று விட்டுவிட்டோம்." ரமேஷின் பின்னால் நடந்து வந்துகொண்டிருந்த மேனேஜர் ஆறுதல் அளிப்பது போல் சொன்னார்.

இருவரும் காரில் திரும்பி வரும்போது, ஹேமா கைகளில் முகம் புதைத்து அழுது கொண்டே சொன்னாள்.

"ரமேஷ்! இதற்கு முன்னால் ஜெகதாம்பாள் மாமி போன்றவர்கள் எத்தனையோ முறை குத்தலாக பேசி இருக்கிறார்கள். ஆனால் இன்று மது சொன்னதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. செத்துப் போய் விடலாம் என்று தோன்றுகிறது."

"ஹேமா! எவ்வளவு அப்பாவியாக இருக்கிறாய்?" ரமேஷ் ஒரு கையால் டிரைவ் செய்துகொண்டே இடதுகையை நீட்டி அவள் தோளைச் சுற்றிலும் போட்டு அருகில் இழுத்துக் கொண்டான்.

அவன் முகம் போர்களத்தில் தோற்றுப்போன போர்வீரன் போல் இருந்தது.

53

இரவு முழுவதும் ஹேமா உறங்கவே இல்லை. ரமேஷும் உறங்க வில்லை என்று சிவந்து கணகணவென்று இருந்த அவன் விழிகள் பறை சாற்றிக் கொண்டிருந்தன. காலையில் காபி குடிக்கும்போது ஹேமா சொன்னாள்.

"ரமேஷ்! பணத்தால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை என்று சொல்வாயே. அந்தப் பணத்தால் மதுவை வீட்டுக்கு அழைத்து வா பார்ப்போம்" என்றாள்.

ரமேஷ் சரேலென்று தலையை உயர்த்திப் பார்த்தான். அவன் பார்வை சிறையில் அடைக்கப்பட்ட புலியைபோல் இருந்தது.

ரமேஷ் வழக்கத்தைவிட சீக்கிரமாக குளித்துமுடித்து வெளியில் போய்விட்டான். ஹேமாவின் கண்களுக்கு முன்னால் மதுவின் உருவமே நிழலாடிக் கொண்டிருந்தது.

"எப்படி மாறிப்போய்விட்டான்?"

மது தன்னைப்பற்றி சொன்னது நினைவுக்கு வந்ததும் ஹேமா வின் விழிகளில் நீர் சுழன்றது. தான் திருமணம் செய்துகொண்ட பிறகு ரங்கநாயகி எழுதிய கடிதம் நினைவுக்கு வந்தது. பெட்டி அடியில் பத்திரமாக வைத்திருந்த அந்தக் கடிதத்தை எடுத்து மறுபடியும் படித்தாள். அதைப் படித்த பிறகு தன்மீது வெறுப்பு ஏற்பட்டதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

மதியம் பன்னிரண்டு மணி ஆகும்போது ரமேஷ் திரும்பி வந்து விட்டதற்கு அறிகுறியாக வெளியில் கார் ஹாரன் சத்தம் கேட்டது. ஹேமா கடிதத்தை மடித்து உள்ளே வைத்துவிட்டு வெளியில் வரும்போதே "ஹேமா! ஹேமா!" ரமேஷ் உரத்த குரலில் அழைப்பது கேட்டது. வேகமாக படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்த ஹேமா சட்டென்று நின்றுவிட்டாள்.

எதிரே ரமேஷ் பக்கத்தில் மது நின்றிருந்தான்.

"மதூ!" ஹேமா குறாவளி காற்றுபோல் அவன் அருகில் சென்றாள். அவன் கைகளை பற்றிக் கொண்டே "மதூ! வந்து விட்டாயா. உன்னை நினைத்துக் கொண்டு இருந்ததில் இரவு முழுவதும் தூங்கவே இல்லை" என்றாள்.

மது எரிச்சல் அடைந்தவன் போல் ஹேமாவின் கைகளை விடுவித்துக்கொண்டான்.

"எவ்வளவு உயரமாக வளர்ந்துவிட்டாய்? எத்தனை நாளாச்சு உன்னைப் பார்த்து" என்றாள்.

"சரி... சரி... நாங்க இருவரும் இன்னும் சாப்பிடவில்லை. அந்த ஏற்பாடுகளை கவனி." ரமேஷ் சொன்னான்.

"இதோ... மதூ! குளிக்கப் போகிறாயா?" என்று கேட்டாள்.

"ஊஹூம்." மறுப்பது போல் தலையை அசைத்தான்.

"உட்கார்ந்து கொள் மதூ!" ரமேஷ் சொன்னான்.

மது காதில் விழாதது போல் நின்றிருந்தான். அவன் கண்கள் ஐஸ்வரியம் நிரம்பிய அந்த வீட்டை பொறாமையுடன் பரிசிலித்துக் கொண்டிருந்தன.

ஹேமா சமையல் அறைப்பக்கம் சென்றாள்.

"உட்கார்ந்து கொள் மதூ," இரண்டாவது முறை சொன்னான்.

மது சோபாவின் விளிம்பில் உட்கார்ந்து கொண்டான்.

"மதூ! உன்னிடம் ஒரு விஷயம் கேட்க வேண்டும் பதில் சொல்கிறாயா?" ரமேஷ் கேட்டான்.

"கேளுங்கள்."

"எங்கள் மீது இவ்வளவு கோபம் வரக் காரணம் என்ன?"

"எங்களுக்குத் தெரியாமல் ஹேமாக்காவை அவ்வளவு ரகசிய மாக நீங்க திருமணம் செய்து கொள்ள வேண்டிய அவசியம் என்ன?" மது தடுமாறாமல் எதிர்க்கேள்வி கேட்டான்.

ரமேஷ் மௌனமாக பார்த்துக் கொண்டிருந்தான்.

"நீங்க திருட்டுத்தனமாக அக்காவைத் திருமணம் செய்து கொண்டு என்னுடைய அப்பாவுக்கு தலைகுனிவு ஏற்படுத்தி இருக்கா விட்டால் எங்களுக்கு இத்தனை கஷ்டங்கள் வந்திருக்காது. நாங்களும் அந்த பட்டிக்காட்டுக்கு குடி போயிருக்க மாட்டோம்."

"ரமேஷால் பதில் சொல்ல முடியவில்லை. அதற்குள் ஹேமா அங்கே வந்தாள்.

"ரமேஷ்! உடைகளை மாற்றிக்கொள். மதூ! சாப்பிட வா கண்ணா!" என்றாள்.

"நான் சாப்பிட மாட்டேன். எனக்கு பசி இல்லை." மது சொன்னான்.

உடைகளை மாற்றிக்கொள்வதற்காக உள்ளே போகப் போன ரமேஷ் நின்றுவிட்டான். பின்னால் திரும்பி மதுவின் அருகில் வந்தான். "மதூ! காரில் வரும்போதே உன்னிடம் சொல்லிவிட்டேன். அதன்படிதான் நடந்தாக வேண்டும். சாவகாசமாக யோசித்து முடிவு செய்துகொள். ஒன்று என்னிடம் தங்கி படிப்பை தொடர வேண்டும் இல்லையா உன் பெற்றோரிடம் போய் இருக்க வேண்டும். அவ்வளவுதானே தவிர மூன்றாவது இடத்தில் நீ இருக்கக்கூடாது."

மது ஒரு நிமிடம் தலையை குனிந்துகொண்டு தரையை பார்த்தான். பிறகு கண்களை உயர்த்தி "நான் வீட்டுக்கே போகிறேன். என்னை அனுப்பி விடுங்கள்" என்றான்.

"சரி... முதலில் சாப்பிடுவோம் வா." ரமேஷ் முகத்தில் ஏமாற்றம் வெளிப்படையாகத் தெரிந்தது.

"எனக்கு பசியில்லை என்று முன்னாடியே சொல்லிவிட்டேன்."

"சாப்பிடவில்லை என்றால் உன்னை இங்கிருந்து அனுப்ப மாட்டேன்."

"நீங்க இருக்கும் இடத்தில் பச்சைத்தண்ணீர் கூட குடிக்க மாட்டேன் என்று என் அம்மாமீது சத்தியம் செய்திருக்கிறேன். நீங்க சாப்பிட வேண்டும் என்று கட்டாயப்படுத்தினால் சாப்பிடுவேன். ஆனால் அது எனக்கு விஷம் போல் இருக்கும் என்று மறந்து விடாதீங்க."

ஹேமா இயலாமையுடன் ரமேஷ் பக்கம் பார்த்தாள்.

ரமேஷ் வியப்படைந்துவிட்டவனைப் போல் நின்றுவிட்டான்.

"சரி, உடனே கிளம்பிவிடலாம். ஹேமா! நீ சாப்பிட்டு விட்டு தயாராக இரு. மதுவை திருக்காட்டுப்பள்ளியில் கொண்டு விடணும்" என்றான்.

ரமேஷ் அறையில் உடைகளை மாற்றிக்கொள்ளும்போது ஹேமா அவன் பின்னாடியே வந்தாள். "ரமேஷ்! நிஜமாகவே என்னையும் கூடப் போகச் சொல்கிறாயா?" பதட்டம் கலந்த குரலில் கேட்டாள்.

ஹேமாவின் முகத்தில் மகிழ்ச்சியும், பதட்டமும், குழப்பமும் கலந்து தென்பட்டன.

"நீயும் வருகிறாயா?"

"ஊஹூம்."

"வரக்கூடாதா!" வேண்டுவது போல் கேட்டாள்.

எனக்கு வேலை இருக்கிறது. நீ சிக்கரமாக தயாராவது நல்லது. மது சாப்பிடமாட்டேன் என்கிறான்."

ஹேமாவுக்கு கையும் காலும் ஓடிவில்லை. கருணாவுக்கு உடைகளை மாட்டிவிட்டாள். பசி இல்லாவிட்டாலும் ரமேஷுக்கு பயந்து தட்டு முன்னாடி உட்கார்ந்து எழுந்துகொண்டாள்.

"சீக்கிரமாக செருப்பை போட்டுக்கொள். மகளை அவசரப்படுத்தினாள்."

"கருணா எங்கே போகிறாள்?" அறைக்குள் நுழைந்து கொண்டே கேட்டான் ரமேஷ்.

"ஏன் அப்படி கேட்கிறாய்?" என்னுடன் ஊருக்கு வர வேண்டாமா?

"கருணா உன்னோடு வருகிறாள் என்று யார் சொன்னது?" ரமேஷ் சட்டைப் பையிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுத்தான்.

ஹேமாவின் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது.

"என்ன? நீயும் இல்லாமல் கருணாவும் வராமல் நான் ஒருத்தி மட்டும் போவதா? நானும் போகமாட்டேன்." பிடிவாதம் பிடிப்பது போல் சொன்னாள்.

"போகாதே. டிரைவர் போய் இறக்கிவிட்டு வருவான்" என்றான்.

மறுபேச்சு பேசாமல் ஹேமா கிளம்ப முற்பட்டாள்.

அரைமணி கழித்து ஹேமா, மது ஏறிய கார் கிளம்பியது. ரமேஷ் மகளை தூக்கிக்கொண்டு படிகள்மீது நின்று கைகளை அசைத்தான். கார் கிளம்பிவிட்டது.

திடீரென்று இதயத்தில் சூனியம் பரவிக்கொண்டிருப்பது போல் ரமேஷ் உணர்ந்தான். திருமணம் ஆன இத்தனை வருடங்களில் ஹேமா வீட்டை விட்டு வெளியே போவது இதுதான் முதல் தடவை.

காலையில் எழுந்ததும் தெரிந்த காவல் அதிகாரிகளுக்கு போன்

செய்து அவர்களின் உதவியோடு ஹோட்டலிலிருந்து மதுவை வலுக்கட்டாயமாக வீட்டுக்கு அழைத்து வந்தான். மதுவை தன்னுடன் ஒரிரு நாட்கள் தங்க வைத்து மெதுவாக எடுத்துச் சொல்லி அவனை வழிக்குக்கொண்டு வந்துவிடலாம் என்று எதிர்பார்த்தான். ஆனால் அவனுடைய எதிர்பார்ப்புகளை மது ஒரே வார்த்தையில் தகர்த்து விட்டான்.

நினைத்தது ஒன்று. நடந்ததோ வேறு ஒன்று. ரொம்ப நாட்கள் கழித்து அவன் போட்ட கணக்கு பொய்த்துவிட்டது.

54

கார் வேகமாக திருக்காட்டுப்பள்ளியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. ஹேமா மதுவின் கையை தன்னுடைய கையில் எடுத்துக்கொண்டே சொன்னாள்.

"நீ மட்டும் எங்களை விட்டுவிட்டு போகவில்லையா? எங்களை பார்க்காமல் இத்தனை வருடங்கள் கழிக்கவில்லையா? அந்த நாள் இன்னும் எனக்கு நினைவு இருக்கிறது. நான் பிக்னிக் போய்விட்டு வந்தபோது நீ வீட்டிலிருந்து மாயமாகிவிட்டாய். திருமணம் செய்து கொண்டு போய்விட்டாயென்றும், அப்பாவுக்கு ரொம்ப வேதனை ஏற்படுத்திவிட்டாய் என்றும் அம்மா சொன்னாள்."

"உண்மைதான் கண்ணா! அம்மா சொன்னது முற்றிலும் உண்மை."

"ஏன் அப்படி செய்தாய் அக்கா? உனக்கு ரமேஷ் என்றால் அத்தனை பிடிக்கும் என்றால் வீட்டில் சொல்லியிருக்கலாமே? குறைந்த பட்சம் என்னிடமாவது சொல்லியிருக்கலாம் இல்லையா!"

"அதுதான் கண்ணா நான் செய்த தவறு." பலவீனமான குரலில் சொன்னாள்.

"திருக்காட்டுப்பள்ளியை நெருங்கிவிட்டோம். இந்த ஊருக்குள் காலடி எடுத்து வைக்கக் கூடாது என்று நினைத்திருந்தேன். வர வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுவிட்டது." மதுவின் குரலில் வருத்தம் வெளிப்பட்டது.

ரொம்ப சின்ன கிராமம் அது. விலை உயர்ந்த கார் ஊருக்குள் நுழைந்து கொண்டிருப்பதை கண்டு எல்லோரும் வியப்புடன்

பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒடு வேய்ந்த வீட்டின் முன்னால் கார் வந்து நின்றது.

"வீடு இதுதானா? "ஹேமா கேட்டாள்.

"இதுதான். முதலில் நீ இறங்கிக்கொள் அக்கா!" ஹேமா இறங்கினாள். பின்னாலேயே மதுவும் இறங்கினான்.

வாசலில் பூச்செடிகளுக்கு ஊற்றுவதற்காக வாளியில் தண்ணீரைக் கொண்டு வந்து கொண்டிருந்த வேலைக்காரி வாளியை அப்படியே கீழே வைத்துவிட்டு, "அம்மா! மது தம்பி வந்தாச்சு" என்று சுத்திக்கொண்டே வீட்டுக்குள் ஓடினாள்.

ரங்கநாயகி வெளியில் வந்தாள். மகன் வந்துவிட்டான் என்ற செய்தியை கேட்டதும் அவள் முகத்தில் பொங்கி வந்த மகிழ்ச்சி ஹேமாவைப் பார்த்ததும் வியப்பாக மாறியது.

"அண்ணீ!" ஹேமா எப்படியோ குரலை உயர்த்தி அழைத்தாள். ரங்கநாயகி வாயடைத்து போனவளாய் நின்றுவிட்டாள். நடக்கக் கூட முடியாததுபோல் இருந்த இடத்திலேயே கைகளை நீட்டினாள். ஹேமா சட்டென்று ஓட்டமும் நடையுமாக அருகில் வந்து "அண்ணீ!" என்று அழைத்துக்கொண்டே ரங்கநாயகியின் மார்பில் முகத்தை புதைத்துக்கொண்டாள். ஒரு கையால் ஹேமாவை அணைத்துக்கொண்டே மற்றொரு கையால் மதுவை அருகில் இழுத்துக்கொண்டாள். அந்த நிமிடம் ரங்கநாயகி முகத்தில் தெரிந்தது அழுகையா சிரிப்பா என்று யாராலும் சொல்ல முடியவில்லை.

55

ரங்கநாயகி, ஹேமா, மது மூவரும் உள்ளே வந்தார்கள்.

"என்னங்க! உங்களைத்தான்! ஹேமா வந்திருக்கிறாள். மதுவும் வந்திருக்கிறான். விழித்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

ரங்கநாயகி எத்தனை எழுப்பினாலும் சேஷாத்ரி எழுந்து கொள்ளவில்லை. ஒரு மாதிரி குறட்டை விட்டுக் கொண்டு மயக்க நிலையிலேயே இருந்தான்.

நரைத்து விட்ட தலைமுடி— வளர்ந்துவிட்ட தாடி— அங்கங்கே கிழிந்து போன சட்டை நினைவு இல்லாதவன் போல் கட்டையாய்

கட்டிலில் கிடந்த சேஷாத்ரியை பார்த்து ஹேமா சற்சிலையாக நின்றுவிட்டாள். யாரிந்த நபர்? தன்னுடைய அண்ணன்தானா? முகத்தில் இருந்த தேஜஸ் எங்கே? அடிக்கடி அண்ணியை மிரட்டும் அதிகாரம் எங்கே? சில வருடங்களுக்குள் இத்தனை மாற்றங்களா? ஹேமாவால் தன்னுடைய கண்களையே நம்ப முடியவில்லை. காலமாகப்பட்டது சில மனிதர்களிடம் மட்டும் இவ்வளவு கொடூரமான மாற்றங்களை ஏற்படுத்துவது ஏன்?

"உன் அண்ணன் சமீபகாலமாக சுஞ்சா பிடிப்பதை பழக்கப் படுத்திக் கொண்டு இருக்கிறார். ஹேமா!" வேதனையை புன்முறுவலால் மறைத்துக் கொண்டே சொன்னாள் ரங்கநாயகி. "உள்ளே வா" என்று சமையல் அறைக்கு அழைத்துச் சென்றாள். மது தாயின் கையை உதறிவிட்டு எரிச்சலுடன் ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொண்டான்.

மது வந்துவிட்டான் என்று தெரிந்ததும் அக்கம் பக்கத்து வீட்டில் இருக்கும் குழந்தைகள் எல்லோரும் ஓடி வந்தார்கள். மதுவுக்கு வீட்டுக்குள் இருக்க பிடிக்கவில்லை. வாசலில் போய் நின்றுகொண்டான்.

"ஹேமா! குளிக்கிறாயா? வென்னீர் போடட்டுமா?" ரங்கநாயகி கேட்டாள்.

"வேண்டாம் அண்ணீ! நீயும் இங்கே வந்து உட்கார்ந்து கொள்." என்றாள் ஹேமா.

"ஒரு நிமிஷம் இதோ வந்து விடுகிறேன்." ரங்கநாயகி ஹேமாவின் கையை பிடித்துக்கொண்டே அங்கே இருந்த சொம்பை எடுத்து கொல்லைப் புறத்திலிருந்த வேலைக்காரியை அழைத்து "லக்ஷ்மீ! இந்த வேளைக்கு பாலை நீயே கறந்துவிடு. எனக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை." என்றாள்.

"ஆகட்டும் அம்மா." லக்ஷ்மியின் கண்கள் ஹேமாவையே பார்த்துக் கொண்டிருந்தன.

"என்னுடைய நாத்தனார்" ரங்கநாயகி சொன்னாள்.

ஹேமா வேண்டாமென்று சொன்னாலும் ரங்கநாயகி கேட்க வில்லை. "சமையல் முடிவதற்குள் கொஞ்சம் காபி குடிக்கலாம்

எப்போ சாப்பிட்டதோ என்னவோ?" என்று சொல்லிக்கொண்டே மளமளவென்று அடுப்பைப் பற்ற வைத்துவிட்டு பில்டருக்காக வெண்ணீரை போட்டாள்.

ஹேமா ஜன்னல் அருகில் நின்று பரபரவென்று இயங்கிக் கொண்டிருந்த ரங்கநாயகியை பார்த்துக்கொண்டிருந்தாள். ரங்க நாயகியிடம் உடல் ரீதியான மாற்றம் எதுவும் தெரியவில்லை என்றா லும், நூறு ஆண்டுகள் முழுவதுமாக வாழ்ந்துவிட்டது போன்ற களைப்பு அவள் முகத்தில் வெளிப்படையாக தெரிந்தது. அந்த வீட்டில் ஏழ்மை ஆட்சி செலுத்திக்கொண்டிருப்பது முதல் பார்வை யிலேயே புரிந்து போயிற்று.

அதற்குள் வாசற்கதவு அருகில் அரவம் கேட்டது. ஹேமா திரும்பிப் பார்ப்பதற்குள் பால் சொம்பை வாங்கிக் கொண்ட ரங்க நாயகி "நீயா? சமயத்திற்கு வந்தாய் வா... வா....." என்றாள்.

ஹேமா திடுக்கிட்டாள். எதிரே வாசற்கதவு அருகில் சுதாகர் நின்றிருந்தான். அவன் கையில் இருந்த கூடையில் பிஸ்கெட் பொட்டலம், ஹார்லிக்ஸ் பாட்டில், பழங்கள் இருந்தன.

ஹேமா கலவரமடைந்துவிட்டதுபோல் பார்த்தாள்.

"சுதாகர்! ஹேமா வந்திருக்கிறாள். மதுவையும் அழைத்துக் கொண்டு வந்தாள்" ரங்கநாயகி சொன்னாள்.

ஒரு நிமிடம் சுதாகரும் வார்த்தைகளுக்காக தேடுவதுபோல் அப்படியே நின்றுவிட்டான்.

ரங்கநாயகி பாலை பாத்திரத்தில் ஊற்றி அடுப்பில் வைத்துக் கொண்டே, "ஹேமா! நீ எங்களை விட்டுவிட்டு போனாலும் சுதாகர் விடவில்லை. இந்த ஊருக்கு அருகில் ஆசிரமத்தை கட்டுகிறார் களாம். அங்கே வந்த போதெல்லாம் இங்கே வந்து எங்களை குசலம் விசாரித்துவிட்டு போவான். ரொம்பவும் வற்புறுத்தி கேட்டுக் கொண்ட பிறகு நம் வீட்டில் ஓரிருமுறை கையை நினைத்திருக் கிறான்" என்றாள்.

சுதாகரின் முகம் கன்றிவிட்டது. சட்டென்று பேச்சை மாற்றுவது போல் "ஹேமா! சௌக்கியமாக இருக்கிறாயா? குழந்தை எங்கே?" என்றான்.

கும்மிட்டி அடுப்பை விசிறிக்கொண்டிருந்த ரங்கநாயகி சட் டென்று திரும்பினாள். "ஆமாம். உங்களைப் பார்த்த மகிழ்ச்சியில் எனக்கு மூளையே கலங்கிவிட்டது. குழந்தை எங்கே?" என்று கேட்டாள்.

ஹேமாவால் உடனே பதில் சொல்ல முடியவில்லை.

"தந்தையை பிரிந்து இருக்கமாட்டாள் என்று நினைக்கிறேன். அப்படித்தானே ஹேமா!" நிலைமையை சீர்படுத்தும்விதமாக சொன்னான் சுதாகர்.

ஆமாம் என்பதுபோல் ஹேமா தலையை அசைத்தாள்.

"உலகத்திலேயே இல்லாதவிதமாக இது என்ன பழக்கம்? குழந் தைக்கு தந்தையிடம் நெருக்கம் இருக்கட்டும். ஆனால் தந்தையை விட்டு ஒரு இரவுகூட இருக்கமாட்டாள் என்றால் எப்படி? குழந் தையை முழுவதுமாக வேலைக்காரர்களிடம் விட்டுவிட்டாயா ஹேமா? அந்தப் பழக்கம் உனக்கும், குழந்தைக்கும் நல்லது இல்லை." ரங்கநாயகி உரிமையுடன் கண்டித்தாள்.

சுதாகர் அப்புறமாய் வருகிறேன் என்று கிளம்பிப்போனான். ரங்க நாயகி தடுத்து நிறுத்தி பத்து நிமிடங்களில் காபி கலந்து கொடுத் தாள். அவன் கிளம்பும்போது மறக்காமல் இரவுக்கு சாப்பிட வரச் சொல்லி எச்சரித்து அனுப்பினாள்.

"ரொம்ப நல்ல பையன் ஹேமா தங்கமான குணம். தொடக்கத் தில் நம் வீட்டுக்கு வருவதற்கு ரொம்பவும் தயங்கினான். ஆசிரமத்திற் காக அவன் பார்த்திருந்த நிலத்தின் சொந்தக்காரன் அதை விற்பதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. அந்த ஆளை உன் அண்ணாவுக்கு நன்றாகத் தெரியும். அந்த பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக சுதாகர் மற்ற விவசாயிகளுடன் நம் வீட்டிற்கு வந்தான். முதல் தடவை நம் வீட்டுக்கு வந்தபோது ரொம்ப சங்கோஜப்பட்டான். குடிக்க தண்ணீர் கொடுத்தாலும் குடிக்கவில்லை. சில நாட்கள் போனபிறகு ரொம்ப சகஜமாக பழக ஆரம்பித்தான். மது வீட்டைவிட்டு போன பிறகு ரொம்ப நெருக்கமானவனாக மாறிவிட்டான். சாப்பிட வருவ தாக தானாகவே சொல்லி அனுப்புவான். அந்த சாக்கில் வேண்டா மென்று சொன்னாலும் கேட்காமல் இதோ இப்படி ஏதாவது

வாங்கி வருவான்." பழக்கூடையை சுட்டிக் காண்பித்துக்கொண்டே ரங்கநாயகி சொன்னாள். "அது போகட்டும் விஷயம் என்னவென்று சொல்லு. மதுவை எங்கே பார்த்தாய்?"

ஹேமா நடந்ததையெல்லாம் சுருக்கமாக தெரிவித்தாள்.

ரங்கநாயகி சமையல் செய்துகொண்டே மதுவால் தான் பட்ட வேதனைகளை ஹேமாவிடம் சொல்லித் தன் இதயத்திலிருந்த சுமையை பகிர்ந்துகொண்டாள்.

பலகையின் மீது முழங்கால்களை கட்டிக்கொண்டு அமர்ந்திருந்த ஹேமா அண்ணி சொல்வதை கேட்டுக் கொண்டிருந்தாள்.

அதற்குள் மது வந்து "டிரைவர் கூப்பிடுகிறான்" என்று சொன்னான்.

ஹேமா எழுந்து வெளியில் சென்றாள்.

ரங்கநாயகி சமையல் முடிந்ததும் ஹேமா, சுதாகர், மது மூவரையும் உட்கார்ந்து வைத்து பரிமாறினாள். சுதாகர்பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு ஒன்றாக சேர்ந்து சாப்பிடும் போது ஹேமாவுக்கு எப்படியோ இருந்தது.

சேஷாத்ரி எழுந்து கொண்டான். ஹேமா அண்ணன் அருகில் போவதற்கு பயந்தாள். ரங்கநாயகி ஹேமாவின் தோள்களை பற்றி வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்றாள்.

"ஹேமா வந்திருக்கிறாள். பார்த்தீர்களா?" என்று ரங்கநாயகி சொன்னபோது சேஷாத்ரி ஒன்றுமே சொல்லவில்லை. வெறுமே தலையை அசைத்துவிட்டு சும்மா இருந்தான். எந்த கேள்விகளும் கேட்கவில்லை. அவன் முகம் களை இழந்து தென்பட்டது. வாழ்க்கைப் பயணத்தில் நடந்து நடந்து களைத்துப்போய் மரணத்திற்காக காத்திருப்பவன்போல் தென்பட்டான். இந்த வயதிலேயே அண்ணன் இப்படி ஆகிவிட்டதை நினைக்கும்போது ஹேமாவால் துக்கத்தை கட்டுப்படுத்த முடியவில்லை.

ரங்கநாயகி தரையில் பாயை விரித்து ஹேமா மதுவுக்கு நடுவில் படுத்துக்கொண்டாள். இது கனவு இல்லை நினைவுதான் என்பதை உறுதிபடுத்திக் கொள்வதற்காக ஹேமா மதுவின் தலைகளை இரண்டு கைகளாலேயும் தடவிக் கொடுத்தாள்.

சுதாகர் வாசலில் கயிற்றுக் கட்டில்மீது படுத்திருந்தான். முன் அறையிலிருந்து சேஷாத்ரியின் குறட்டை ஒலி கேட்டுக் கொண்டிருந்தது. ரங்கநாயகி ஹேமாவின் குடித்தனத்தை பற்றி கேள்விகளை கேட்டுத் தெரிந்து கொண்டே உறக்கத்தில் ஆழ்ந்து போய்விட்டாள்.

எத்தனை முயற்சி செய்தாலும் ஹேமாவுக்கு தூக்கமே வரவில்லை. எல்லா வசதிகளும் நிறைந்த வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருந்த ஹேமாவுக்கு அந்த வீட்டில் வெளிப்படையாக தென்பட்டுக் கொண்டிருந்த ஏழ்மையை பார்க்கும்போது வருத்தமாக இருந்தது. ரமேஷும் இது போன்ற அடிமட்ட நிலையிலிருந்துதான் இந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறான் என்று நினைக்கத் தோன்றியது.

ஒரு காலத்தில் ரமேஷ் ஒரு வேளை சாப்பாட்டுக்குக்கூட வழியில்லாமல் இருந்திருக்கிறான் என்று சொன்னால் யாரும் நம்பமாட்டார்களோ என்னவோ. யாரோ எதுக்கு? தனக்கே அந்த வாழ்க்கை கனவுபோல் தோன்றியது.

56

மறுநாள் எழுந்ததுமே ஹேமா கிளம்ப முற்பட்டாள்.

"நன்றாக இருக்கு நீ சொல்வது. இத்தனை வருடங்கள் கழித்து பிறந்த வீட்டுக்கு வந்திருக்கிறாய். உடனே கிளம்புகிறேன். என்கிறாயே." ரங்கநாயகி ஹேமாவை கடிந்து கொண்டாள்.

"கிளம்பும்போது எத்தனை நாட்கள் தங்கட்டும்?" என்று ரமேஷிடம் ஒரு வார்த்தை கேட்கவில்லை. அண்ணன் அண்ணியை பார்க்கப் போகிறோம் என்ற பதட்டத்தில் அவளுக்கு எதுவும் தோன்றவில்லை. இரண்டு நாட்கள் தங்கினால் ரமேஷ் ஒன்றும் சொல்லப் போவதில்லை. இருந்தாலும் கருணாவை பிரிந்திருப்பது அவளுக்கு கஷ்டமாக இருந்தது. கருணாவை விட்டு தனியாக வந்த பிறகுதான் அவள்மீது எவ்வளவு பாசம் வைத்திருக்கிறோம் என்று புரிந்தது. கணவனின் அன்பு பாசத்தின் மதிப்பு புரியவேண்டும் என்றால் ஒவ்வொரு பெண்ணும் பிறந்த வீட்டுக்குப் போய் சில நாட்கள் தங்கியிருக்க வேண்டும். முதல்முறையாக ரமேஷை விட்டு தனியாக இருக்கும் இந்த சமயத்தில் தன்னுடைய தாம்பத்திய வாழ்க்கையை பற்றி நினைத்துப் பார்க்கும்போது ரமேஷுடன் தான்

போட்ட சண்டைகள் எல்லாமே அர்த்தமற்றதாகத் தோன்றின.

ரங்கநாயகி அன்று மாலையில்கூட ஹேமாவை கிளம்ப விட வில்லை. "முதல்முறையாக பிறந்த வீட்டுக்கு வந்திருப்பவள் வெறுமே எப்படி அனுப்புவது? இனிப்பு ஏதாவது செய்து தர வேண்டாமா?" என்று சொல்லிக்கொண்டே அதிரசம் செய்வதற்காக அரிசியை ஊற வைத்தாள்.

அன்று இரவு சாப்பிடும்போது ஹேமா, "அண்ணீ! மதுவை என்னுடன் அழைத்துப் போகிறேன். அவனுடைய படிப்பு முடியும் வரை என்னிடமே இருக்கட்டும்" என்றாள்.

"அதைவிட எனக்கு வேறு என்ன வேண்டும்? இந்த பட்டிக் காட்டுக்கு அழைத்து வந்து படிப்பை வீணாக்கிவிட்டேன் என்று தானே அவன் என்மீது கோபமாக இருக்கிறான்? உன்னிடம் இருந்தால் எனக்கும் நிம்மதியாக இருக்கும்." ரங்கநாயகி சொன்னாள்.

"நான் போகமாட்டேன்." மது சொன்னான்.

ஏன்? எதனால் போக மறுக்கிறாய்? "ரங்கநாயகி மகனைக் கேட்டாள்.

"அவர்கள் வீட்டில் பச்சைத்தண்ணீர்கூட குடிக்கமாட்டேன் என்று சத்தியம் செய்துகொண்டேன்."

"சத்தியம் செய்தாயா? ஏன்?" ஹேமா வியப்புடன் கேட்டாள்.

ரங்கநாயகியின் கண்களில் வேதனை தெரிந்தது. அன்று "அக்கா வீட்டைவிட்டு போய் விட்டாளே என்ற கோபத்தில் அவளை நீ மறக்க வேண்டும் என்று ஏதேதோ சொல்லி வைத்தேன். அதையெல்லாம் மனதில் வைத்துக் கொள்ளாதே மதூ! அக்காவுடன் பட்டணத்திற்கு போய் நன்றாக படி." என்றாள்.

சாப்பிட்டுக் கொண்டிருந்த மது தலையை உயர்த்தினான். "ஏதேதோ சொன்னாயா? அப்பொ அதெல்லாம் பொய் என்றுதானே அர்த்தம்?"

ரங்கநாயகி ஆமாம் என்பது போல் தலையை அசைத்தாள்.

"பொய்யா!" மதுவின் கண்கள் வியப்பால் விரிந்தன. ஒரு சின்ன பொய் சொன்னாலே என் முதுகுதோலை உரியும் அளவுக்கு

அடிக்கும் நீ இவ்வளவு பெரிய பொய்யை எப்படி சொன்னாய்?"

மகன் நேராக கேட்ட இந்தக் கேள்விக்கு ரங்கநாயகி திகைத்து விட்டாள். ஹேமாவும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மது வேகவேகமாக சாப்பிட்டுக்கொண்டே சொன்னான். "அக்கா! இந்த பெரியவர்கள் எப்போதுமே இப்படித்தான். அவர்கள் கடைபிடிக்காத நெறிமுறைகளை எல்லாம் எங்கள்மீது திணிக்க பார்ப்பார்கள். பொய் சொல்வது பாவம் என்று நீதிக்கதைகள் சொன்னால் மட்டும் போதுமா? அம்மாவே பல தடவை பொய் சொல்வதை நானே பலமுறை பார்த்திருக்கிறேன். பெரியவர்கள் செய்யும் தவறுகளை யார் திருத்துவதாம்? அம்மா சொன்னது உண்மையா பொய்யா என்று எனக்குத் தெரியாது. இனி ஒருநாளும் அவர்கள் வீட்டு வாசற்படி ஏறக்கூடாது என்று முடிவு செய்து விட்டேன். இந்த விஷயமாக யாரும் என்னை வற்புறுத்த வேண்டாம்." யாரோ துரத்திக்கொண்டு வருவதுபோல் மது வேக வேகமாக சாதத்தை அள்ளிப் போட்டுக்கொண்டு அங்கிருந்து போய்விட்டான்.

ரங்கநாயகி கற்சிலையாகிவிட்டாள். ஹேமா வலிந்த சிரிப்பை உதிர்த்துவிட்டு "மது ரொம்ப பெரியவனாகி விட்டான் அண்ணீ!" என்றாள்.

ரங்கநாயகி சுயஉணர்வு பெற்றவள்போல் மூச்சுவிட்டுக் கொண்டாள். "என்னவோ ஹேமா! இந்தக் காலத்தில் குழந்தைகள் எல்லோரும் இப்படித்தான் இருக்கிறார்கள். இவர்களுக்கு புத்திசாலித்தனமும் அதிகம். ஒவ்வொரு விஷயத்தையும் ஆராய்ந்து பார்ப்பதை சின்ன வயதிலிருந்தே கற்றுக்கொள்கிறார்கள். எங்க தலைமுறையை சேர்ந்தவர்களுக்கு இதுபோன்ற எண்ணங்களே வந்தது இல்லை. பெற்றோர்கள் தவறு செய்திருக்கக்கூடும் என்ற நினப்பே ஒருநாளும் ஏற்பட்டது கிடையாது. குழந்தைகளை சுவனமாக வளர்க்க வேண்டும் என்ற தவிப்பில் நாமும் அவர்களுக்கு சில சலுகைகளை கொடுத்து விடுகிறோம். அந்த தைரியத்தில் அவர்கள் நம்மையே எதிர்த்து கேள்விகளை கேட்கிறார்கள். கண்டால்ட நடுங்க வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் பெரியவர்கள் பொய் சொன்னால் அதற்கு பின்னால் இருக்கும் நன்மையை பற்றி

யோசிக்க வேண்டாமா?. நாம்தான் இன்னும் கவனமாக இருக்க வேண்டும்."

ஹேமா தலையை குனிந்து சாதத்தை பிசைந்து கொண்டாள். "ஆமாம். அண்ணி சொன்னது உண்மைதான். இந்த காலத்து குழந்தைகளின் குணமே வேறு. பெரியவர்களிடம், பெற்றோர்களிடம் பக்தி, மரியாதையும் குறைவு. கொஞ்சம்கூட பயமே இல்லை. கருணாவை நான் கவனமாக வளர்க்க வேண்டும். ரமேஷ் மகளுக்கு கொடுக்கும் செல்லத்தை பார்க்கும்போது எதிர்காலத்தில் அவள் தன்னை மதிப்பாள் என்று தோன்றவில்லை" என்று நினைத்துக் கொண்டாள்.

சுதாகர் அன்று காலையில் சாப்பிட வரவில்லை. இரவு ரொம்ப நேரம் கழித்து வந்தான். ரங்கநாயகி அவனுக்கு உணவு பரிமாறிக் கொண்டு இருக்கும்போது ஹேமா வாசல் வராண்டாவில் உட்கார்ந்து கொண்டாள். ரமேஷ் எப்படி இருக்கிறானோ? கருணா பிடிவாதம் பிடிக்காமல், அழாமல் இருந்திருப்பாளா? ஹேமாவின் உடல் மட்டும்தான் இங்கே இருந்தது. உள்ளம் மட்டும் வீட்டையே சுற்றி வந்தது.

சுதாகர் சாப்பிட்டுமுடித்து விட்டு வாசலுக்கு வந்தான். மது சுயிற்றுக் கட்டிலை வாசலில் கொண்டுவந்து போட்டான்.

ஹேமா உள்ளே போவதற்காக எழுந்து கொண்டாள்.

"உட்கார்ந்துகொள் ஹேமா!" சுதாகர் சொன்னான்.

அந்த குரலில் இருந்த சக்தி என்னவோ தெரியவில்லை. அதை மீறிக்கொண்டு ஹேமாவால் உள்ளே போகமுடியவில்லை.

"உட்காரு ஹேமா." மறுபடியும் சொன்னான். ஹேமா திண்ணையின்மீது உட்கார்ந்து கொண்டாள். பௌர்ணமி நிலவின் ஒளி எங்கும் பரவியிருந்தது. சுதாகர் கட்டில்மீது படுத்திருந்தான். நிலா வெளிசத்தில் போர்வைகூட இல்லாமல் வெறும் கட்டில்மீது ரொம்ப சாதாரணமாக படுத்திருந்தவனை பார்க்கும்போது ஹேமாவுக்கு என்னவோ போல் இருந்தது. அத்தனை ஐஸ்வரியமும் கனவுபோல் கரைந்துவிட்டதற்கு அவன் கொஞ்சம்கூட வருத்தப் பட்டதாகத் தெரியவில்லை. ஒரு காலத்தில் தரையில் கால்படாமல் காரிலேயே சுற்றிக் கொண்டிருந்த சுதாகர்! நாகபூஷணத்தின் ஒரே மகனாய் அபூர்வமாக வளர்ந்த சுதாகர்! அவனும் இவனும் ஒன்றுதானா என்ற சந்தேகம் வந்தது. விதியின் விளையாட்டை யாரால் புரிந்து கொள்ள முடியும்? கடவுள் வேறு விதமாக முடிச்சுப் போட்டிருந்தால் சுதாகர் இந்த வீட்டுக்கு மாப்பிள்ளையாக வந்திருக்க வேண்டியது. அந்த விஷயம் எதுவும் அவனுக்கு நினைவில் இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தால் இப்படி சகஜமாக ஹேமாவுடன் பேசிக்கொண்டிருக்க மாட்டானோ என்னவோ."

"நிலா வெளிச்சம் ரொம்ப நன்றாக இருக்கு இல்லையா." திடீரென்று சுதாகர் சொன்னான்.

பழைய நினைவுகளில் மூழ்கியிருந்த ஹேமா திடுக்கிட்டது போல் பார்த்தாள்.

"நிலா வெளிச்சத்தில் இயற்கையின் அழகை கோவா கடற் கரையில், ஸ்ரீ சைலத்தின் மலைகளில் கண்டிருக்கிறேன். இன்று இந்த ஊரில் அந்த உணர்வை மறுபடியும் உணருகிறேன்."

ஹேமாவுக்கு நிலா வெளிச்சத்தில் அழகும், அமைதியும் தெரிய வில்லை. ஊசி கீழே விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தமாக இருந்த அந்த சூழ்நிலையில் அவளுக்கு மூச்சுத்திணறுவது போல் இருந்தது. கட்டிலில் சுதாகருக்கு பதிலாக ரமேஷ் இருந்திருந்தால் நன்றாக இருக்கும் என்று அந்த நிமிடம் ஹேமாவுக்கு தோன்றியது.

57

மதுவை தன்னுடன் அழைத்துப் போக வேண்டும் என்று ஹேமா கடைசிவரை முயற்சி செய்தாள். ஆனால் மது தன்னுடைய பிடிவாதத்தை தளர்த்துவதாக இல்லை.

"வேண்டாம் அக்கா. நான்வரமாட்டேன்" தீர்மானமாக சொல்லி விட்டான். யாராலும் எதுவும் செய்ய முடியவில்லை.

ஹேமா கிளம்பும்போது ரங்கநாயகியால் கண்ணீரை அடக்க முடியவில்லை. "ஹேமா! குழந்தையை அழைத்துக்கொண்டு கட்டாயம் வா. நாங்கள் ஏதாவது தவறு செய்திருந்தால் எங்களை

மன்னித்துவிடச் சொல்லி கேட்டதாக ரமேஷிடம் சொல்லு. எங்கள் மீது கோபம் கொள்ள வேண்டாம் என்று சொன்னதாக சொல்லு. போனதும் கடிதம் எழுது" கார் நகரும் வரையில் ரங்கநாயகி சொல்லிக் கொண்டே இருந்தாள்.

காரில் திரும்பி வந்துகொண்டிருந்தபோது மதுவை அழைத்து வரமுடியவில்லையே என்ற வருத்தம் ஒரு பக்கம், ரொம்ப வருடங்களுக்குப் பிறகு அண்ணன் அண்ணியை பார்த்த மகிழ்ச்சி மற்றொரு பக்கம் ஹேமாவின் மனதை அலைக்கழித்துக் கொண்டிருந்தன.

கார் வீட்டின் முன்னால் வந்து நின்றது. ஹேமாவுக்கு இருப்பு கொள்ளவில்லை. ரமேஷ் கேட்கும் கேள்விகளுக்கு, மூச்சு விடாமல் தான் சொல்லப்போகும் பதில்களை ஊகித்துக் கொண்டே காரைவிட்டு இறங்கி படிகளை ஏறியவள் அப்படியே நின்று விட்டாள். வாசல்கதவில் பெரிய பூட்டு தொங்கிக் கொண்டு இருந்தது. ஏமாற்றம் வெள்ளமாக பொங்கி அவளுடைய உற்சாகத்தை அப்படியே வடித்துவிட்டது.

அதற்குள் அவுட்ஹவுஸ்ஸிலிருந்து சமையல்காரன் ஓடி வந்து சாவியை எடுத்து பூட்டைத் திறந்தான்.

"அய்யா எங்கே?" ஹேமா கேட்டாள்.

"காலைதான் ஊருக்கு போயிருக்கிறார்."

"எப்பொ வருவதாகச் சொன்னார்."

"நாளை மறுநாள்."

ஹேமாவை திடீரென்று சோர்வு ஆட்கொண்டது. சமையல் காரன் உள்ளே சென்று ஹேமாவுக்காக சமையல் செய்யும் முயற்சிகளில் மூழ்கிவிட்டான்.

ஹேமா பொறுமையே இல்லாதவள்போல் மெதுவாக படிகளில் ஏறி மாடிக்குச்சென்றாள். ரமேஷ் வீட்டில் இல்லாமல் இருப்பது பழக்கம்தான். ஆனால் கருணா இல்லாமல் ஒருநாளும் இருந்தது இல்லை. கருணாவின் மழலை குரல் கேட்காமல் வீடே வெறிச் சென்று இருப்பதுபோல் ஹேமாவுக்கு தோன்றியது.

ஏற்கனவே கருணாவை பிரிந்து இரண்டு நாட்களாக ஏங்கிக் கொண்டிருந்த ஹேமாவுக்கு அவளைப் பார்க்க மேலும் இரண்டு நாட்கள் காத்திருக்க வேண்டும் என்று நினைக்கும்போது இதயம் பாராமாகிவிட்டது.

ஹேமா குளித்து முடித்து, உணவருந்திவிட்டு உறங்கச் சென்றாள். தூக்கம் வரும் ஜாடையே தெரியவில்லை. ஹேமாவின் மனம் ரமேஷின் வருகைக்காக ஆயிரம் கண்களுடன் காத்திருக்கத் தொடங்கியது. அவனைப் பார்க்காமல் தன்னால் உயிர்வாழ முடியாதவள் போல் தோன்றியது. யதேச்சையாக அவளுடைய பார்வை ஜன்னல் திரைச்சிலையின் மீது நிலைத்தது. அந்த டிசைன் நன்றாக இல்லை என்று எவ்வளவு சண்டை போட்டாள்? "உனக்கு எதுவும் தெரியாது. சும்மா இரு" என்று சொல்லிவிட்டான். அப்படிச் சொன்னதற்காக அவன்மீது கோபமும் ஏற்பட்டது. அதற்குப் பிறகு வீட்டுக்கு வந்தவர்கள் எல்லோரும் பாராட்டியபோது ரமேஷ் முகத்தில் தென்பட்ட வெற்றி கலந்த பெருமையை பார்க்கப் பார்க்க ஹேமாவின் கோபம் மேலும் அதிகரித்தது.

ஹேமா ஜன்னல் அருகில் சென்று அந்த திரைச்சிலையின் டிசைனை விரலால் நீவிவிட்டாள்.

ஹேமாவுக்கு பொழுதே போகவில்லை. வீடு முழுவதும் சுற்றி வந்தாள். அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த பொருட்களை எடுத்து, துடைத்து மறுபடியும் அடுக்கினாள். வீட்டை அலங்கரிக்கும் விஷயத்தில் ரமேஷுக்குத்தான் எத்தனை சிரத்தை! எங்கேயாவது சின்ன குறை இருந்தாலும் அவனால் பொறுத்துக் கொள்ள முடியாது. அவனுக்குத் தெரியாத விஷயமே இருக்காதோ. வீட்டை நன்றாக கவனித்துக்கொள்ளும் கிருகஸ்தன், மனைவியை அன்பாக பார்த்துக்கொள்ளும் கணவன், மகளை கண்ணின் இமையைபோல் காப்பாற்றும் தந்தை, சமுதாயத்தில் நல்ல பெயரும் புகழும்.... இப்படி எல்லா நல்ல குணங்களும் ஒரே இடத்தில் அமைந்திருப்பது எவ்வளவு அபூர்வமான விஷயம்! தன்னுடைய மகிழ்ச்சி, ஐஸ்வரியம் எல்லாமே ரமேஷைச் சார்ந்திருப்பதுபோல் ஹேமாவுக்குத் தோன்றியது.

"நீ எனக்கு தகுந்த மனைவியே இல்லை" என்று ரமேஷ் சொன்ன

வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. இப்பொ அந்த சொற்கள் ஹேமாவுக்கு வருத்தத்தை தரவில்லை. அவள் இதழ்களில் புன்முறுவல் மலர்ந்தது.

"அம்மா! கொஞ்சம் நகர்ந்துக்கறீங்களா... அறையை பெருக்கணும்" வேலைக்காரி உள்ளே வந்தாள்.

"சரி." கனவுலகில் மிதப்பதுபோல் நடந்துபோய் கட்டில்மீது அமர்ந்து கொண்டிருந்தாள்.

ஹேமா விளக்குமாறு கால்களில் படாமல் கால்களை உயர்த்தி கட்டில்மீது வைத்துக்கொண்டு தலையணையில் சாய்த்துக் கொண்டாள்.

குனிந்து பெருக்கிக்கொண்டிருந்த வேலைக்காரி கட்டில் அடியில் கிடந்த பிரா ஒன்றை எடுத்து ஹேமாவிடம் நீட்டிக்கொண்டே "இந்தாங்கம்மா" என்றாள். ஏதோ நினைவுகளில் மூழ்கியிருந்த ஹேமா அதை கையில் பிடித்துக் கொண்டாள். ஹேமாவின் கண்கள் முன்னால் திருமணம் ஆன புதிதில் ரமேஷுடன் தான் அனுபவித்த தாம்பத்திய வாழ்க்கையின் இனிமையான நிகழ்ச்சிகள் திரைப்படமாக ஓடிக்கொண்டிருந்தன.

பெருக்கி முடித்துவிட்டு வேலைக்காரி போய்விட்டாள். ஹேமா கையிலிருந்த உள்ளாடையை கட்டில்மீது வீசி, எழுந்து போய் மறுபடியும் ஜன்னல் அருகில் நின்று கொண்டாள்.

பழைய நினைவுகள் மறுபடியும் ஹேமாவை சூழ்ந்து கொண்டன. ரமேஷ் இன்னொரு குழந்தை வேண்டுமென்று தீவிரமாக விரும்புகிறான். கருணாவுக்கு பிறகு இவ்வளவு தாமதம் ஆவானேன்? இன்று கோவிலுக்கு போய்விட்டு வந்தால் என்ன!

சமையல்காரன் அறைக்குள் எட்டிப் பார்த்தான்.

"அம்மா! இரவுக்கு என்ன சமைக்கட்டும்?"

"எது வேண்டுமானாலும்."

அவன் போகப்போனான்.

"ஒரு நிமிடம்." ஹேமா அழைத்தாள். அவன் நின்று திரும்பிப் பார்த்தான்.

"காரை வெளியில் எடுக்கச்சொல்லி டிரைவரிடம் சொல்லு. நான் கோவிலுக்கு போகணும்."

அவன் தலையை அசைத்துவிட்டு போய்விட்டான்.

ஹேமா ரொம்ப உற்சாகமாக பீரோவைத் திறந்தாள். ரமேஷுக்கு மிகவும் பிடித்தமான பச்சைநிற ஜரிகைப் புடவையை அதற்கேற்ற ப்ளவுஸை வெளியில் எடுத்தாள்.

புடவையை கட்டில்மீது வைத்துக் கொண்டிருந்த ஹேமாவுக்கு தலையணை அருகில் கிடந்த பிரா கண்ணில்பட்டது. அதை எடுத்து வண்ணான் கூடையில் போடப் போனவள் அப்படியே நின்று விட்டாள்.

விலை உயர்ந்த, லேஸ் வேலைப்பாடுகளுடன் ரொம்ப ஃபாஷனாக இருந்த அந்த உள்ளாடையை பார்த்ததும் கனவுலகிலிருந்து யாரோ தள்ளிவிட்டதுபோல் இந்த உலகிற்கு வந்தாள்.

ஹேமா அது போன்ற உள்ளாடையை பயன்படுத்தமாட்டாள். அது அவளுடையது இல்லை. மாதுரியோடது. மாதுரியின் உள்ளாடை இந்த அறையில் கட்டிலுக்கு அடியில் ஏன் கிடக்க வேண்டும்? ஹேமாவின் மனதில் சரேலென்று எழுந்த சந்தேகத்தை நம்பிக்கை என்ற கை பலமாக தள்ளிவிட்டது.

ஹேமா கீழே வந்தாள்.

சமையல்காரனை கேட்பதா வேண்டாமா என்று தயங்கினாள். தன மனதில் இருக்கும் சந்தேகத்தை அவன் உணர்ந்துவிட்டால் அசிங்கம் இல்லையா? ரமேஷுக்கு தலைகுனிவாக இருக்காதா?

ஆனால் ஹேமாவால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

"என்ன சமைக்கப் போகிறாய்?"

"வெண்டைக்காய் பொறியல் அம்மா."

ஹேமா சமையல்காரன் நறுக்குவதற்காக எடுத்து வைத்திருந்த வெண்டைக்காயில் முற்றலாக இருந்தவற்றை பொறுக்கினாள்.

"நான் இல்லாதபோது மாதுரி இங்கே வந்தாளா?" இயல்பான குரலில் கேட்டாள்.

"வந்தாங்கம்மா."

"எப்பொ?"

நேற்றுக்கு முன் தினம். ரொம்ப நேரம் தங்கி இங்கேயே சாப்பிட்டு விட்டு போனாங்க நேற்றும் வந்திருந்தாங்க. எத்தனை நேரம் இருந்தாங்க என்று தெரியாது. அய்யா என்னை சினிமாவுக்கு போகச்சொல்லி பணம் கொடுத்தாங்க. நான் கிளம்பும்போது மாதுரி யம்மா வந்தாங்க. அப்பொ அய்யா வீட்டில் இருக்கவில்லை. "நான் இருக்கிறேன். நீ போயக்கொள்" என்று மாதுரி அம்மா சொல்லி விட்டதால் நான் கிளம்பிப்போய் விட்டேன்." இன்னும் ஏதோ சொல்ல வேண்டும் என்ற ஆர்வம் அவன் முகத்தில் தென்பட்டது.

ஹேமா அதற்கு மேல் உரையாடலை தொடரவில்லை.

ரொம்ப நாட்களாக அவளை பயமுறுத்தி வந்த விஷயம் யதார்த்த மாக உருவம் பெற்று அவள் கண்களுக்கு முன்னால் வந்து நின்று "நீ எவ்வளவு முட்டாளாக இருக்கிறாய் என்று பார்த்தாயா?" என்று ஏளனம் புரிவதுபோல் இருந்தது.

உடலில் இருக்கும் சக்தி முழுவதும் வற்றிவிட்டதுபோல் சோர்வாக உணர்ந்தாள். மனதை கட்டுப்படுத்திக் கொள்ள நினைத் தாலும் எண்ணங்கள் அவள் வசத்தில் இருக்கவில்லை. கண்கள் இருந்தும் குருடியாக இருந்துவிட்டாய். "யாரோ செவிக்குள் புகுந்து கத்துவதுபோல் தோன்றியது.

"அம்மா! கோவிலுக்குக் கிளம்ப வேண்டாமா?" சமையல்காரன் நினைவுப்படுத்தினான்.

"கோவிலுக்கு போகவில்லை. காரை ஷெட்டில் விட்டு டிரைவரை வீட்டுக்கு போச்சொல்லு," என்றாள் ஹேமா.

58

வாசலில் கார் ஹாரன் சத்தம் கேட்டது.

படுக்கை அறையில் ஈசிச்சேரில் கண்கள்மீது கையை வைத்து உட்கார்ந்திருந்த ஹேமாவுக்கு தூக்கிவாரி போட்டது.

சந்தேகமே இல்லை. ரமேஷ்தான்! ஊரிலிருந்து வந்துவிட்டான். கருணாவின் குரலும் கேட்டுக் கொண்டிருந்தது.

இருக்கையை விட்டு எழுந்து கொள்ளக்கூட முடியாததுபோல்

அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

இந்த இரண்டு நாட்களில் ஹேமாவுக்கு ஆயிரம் வருடங்கள் வாழ்ந்துவிட்டது போல் களைப்பாக இருந்தது. வேண்டாத யோசனைகள், பயங்கள், எதிர்காலத்தை பற்றி கவலை எல்லாமாக சேர்ந்து ஹேமாவின் உடலில் இருக்கும் சக்தி முழுவதும் உரிஞ்சி விட்டது போல் இருந்தது. கணவனால் துறக்கப்பட்ட மனைவியர் கள், பிறந்தவீட்டாரின் ஆதரவு இல்லாததால் மாமியார் வீட்டி லேயே நடைபிணமாக வாழ்ந்து கொண்டிருக்கும் இல்லத்தரசிகள், கணவனால் கைவிடப்பட்டு சாப்பாட்டுக்கு வழியில்லாத நிலைக்கு தள்ளப்பட்டு தற்கொலை செய்துகொண்ட துர்பாக்கியசாலிகள்.... இப்படி பலதரப்பட்ட பெண்கள் ஹேமாவின் கண்கள் முன்னால் வலம் வந்து கொண்டிருந்தார்கள். நேற்று வரையில் வாழ்க்கையிடம் அவளுக்கு இருந்து வந்த அழகான கனவுகள், பிரமைகள் விலகி விட்டன. கடினமான, மிகக் கசப்பான உண்மை கண்ணெதிரில் வந்து நிற்பதுபோல் இருந்தது.

ரமேஷ், கருணா மாடிபடி ஏறும் சத்தம் கேட்டது. ஹேமா கையால் மார்பை அழுத்திக் கொண்டாள். தன்னைத்தானே சமாளித்துக் கொள்வதற்கு, இயல்பாக இருப்பதற்கு தீவிரமாக முயற்சி செய்து கொண்டிருந்தாள்.

கருணா அறைக்குள் ஓடிவந்தாள். ஆனால் ரமேஷ் உள்ளே வர வில்லை. பக்கத்து அறைக்குப்போய் விட்டதுபோல் காலடிச் சத்தம் கேட்டது.

"மம்மீ! என்னுடைய பின்னலை பார்த்தாயா? ஆன்ட்டீ எனக்கு ஒற்றை பின்னலை போட்டுவிட்டாள்." ஒல்லியாக எலிவால் போல் இருந்த பின்னலை காண்பித்தாள் கருணா.

ஹேமா மகளை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டாள்.

கருணா தாயை தள்ளிவிட்டாள். "உன்னுடன் பேசமாட்டேன் போ. என்னை உன்னோடு ஊருக்கு ஏன் அழைத்துப் போகவில்லை?"

ஹேமா வலுக்கட்டாயமாக புன்முறுவல் செய்தாள்.

"அதான் உன்னை அழைத்துப் போகாமல் நானும் டாடியும்

மட்டும் ஊருக்கு போனோம்" பெருமையுடன் சொன்னாள்.

இத்தனை நாளாக தாயைவிட்டு பிரிந்திருக்கோமே என்ற ஏக்கம் கருணாவிடம் கொஞ்சம்கூட தெரியவில்லை. வந்த ஐந்து நிமிடங்களுக்குள் ஏதோ நினைவுக்கு வந்தவள்போல் "டாடீ!" என்று அழைத்துக் கொண்டே இரு அறைகளுக்கு நடுவில் இருந்த கதவு வழியாக அடுத்த அறைக்குள் ஓடினாள்.

பக்கத்து அறையிலிருந்து கருணா ஏதோ கேள்விகளை கேட்பதும் ரமேஷ் பதில் சொல்வதும் ஹேமாவின் காதுகளில் விழுந்து கொண்டுதான் இருந்தது. நடுவில் இருக்கும் கதவில் திரைச்சீலை தொங்கிக்கொண்டு இருந்தது.

சற்று நேரம் கழித்து ரமேஷ் கருணாவை தூக்கிக்கொண்டு கீழே இறங்கிப்போன சத்தம் கேட்டது.

ஹேமாவின் இதயத்திலிருந்து சுமக்க முடியாத பாரம் ஏதோ நீங்கிவிட்டதுபோல் இருந்தது. ஆனால் அந்த உணர்வு ரொம்ப நேரம் நீடிக்கவில்லை. ரமேஷ் தான் இருக்கும் இடத்திற்கு வரவில்லை. என்ன விசேஷம் என்று கேட்கவில்லை. எத்தனை எதிர் பார்ப்புகளுடன் ஓடி வந்தாள்? ரமேஷைப் பார்க்காமல் ஒரு நிமிடம் கூட வாழ முடியாது என்று நினைத்தாளே எல்லாமே பிரமைதானா?

ரமேஷ் சாப்பிட்டுவிட்டு வெளியில் கிளம்பிப்போய் விட்டான். பயணக்களைப்பினால் கருணாவும் சாப்பிட்டதுமே உறங்கி விட்டாள். அறையில் ஹேமா தனித்துவிடப்பட்டாள். கணவன் குடும்பம், குழந்தைகள் என்று சின்ன வட்டத்திற்குள் பெண்கள் வாழ பழகிவிட்டால் ஏற்படும் பின்விளைவுகளை பற்றி யோசித்துக் கொண்டிருந்தாள். ரமேஷுடன் தன்னுடைய வாழ்க்கை பிரித்தெடுக்க முடியாத அளவுக்கு ஆழமாக பிணைந்துவிட்டது. தனக்கு சினேகிதிகள் என்று யாரும் கிடையாது. உயிர் சினேகிதியாக இருந்த மாதுரியும் ரமேஷால் ஈர்க்கப்பட்டு தன்னிடமிருந்து விலகிப்போய் விட்டாள். வெளி உலகத்துடன் தனக்கு எந்த பந்தமும் இருந்தது இல்லை.

மாலையில் ரமேஷ் வீடு திரும்பினான். ஆனால் மாடிக்கு வரவில்லை. எட்டுமணி ஆகும்போது சமையல்காரன் வந்து கருணாவும்,

ரமேஷும் சாப்பிட உட்கார்ந்து இருப்பதாகவும் ஹேமாவுக்காக காத்திருக்கிறார்கள் என்றும் சொன்னான்.

"எனக்கு பசிக்கவில்லை என்று சொல்லு" என்றாள்.

சமையல்காரன் கீழே போய்விட்டான்.

ரொம்ப நேரம் கழித்து தூங்கிக் கொண்டிருந்த கருணாவை தூக்கிக்கொண்டு ரமேஷ் ஹேமாவின் அறைக்குள் வந்தான்.

அவனுடைய காலடிச் சத்தம் கேட்டபிறகும் ஹேமா கண்கள் மீது வைத்திருந்த கைகளை எடுக்கவில்லை.

"பசி இல்லை என்று சொன்னாயாமே? உடம்பு சரியாக இல்லையா?" ரமேஷ் கேட்டான்.

ஆமாம் என்பதுபோல் தலையை அசைத்தாள் ஹேமா.

"இதென்ன? இந்த அறையில் இருந்த கட்டில்கள் எங்கே?" வியப்புடன் கேட்டான்.

"நான்தான் எடுத்துவிடச் சொன்னேன்."

அவன் ஒரு நிமிடம் திகைப்பு அடைந்தவன் போல் நின்று விட்டான். பிறகு நடுக்கதவு வழியாக திரைச்சீலையை விலக்கிக் கொண்டு அடுத்த அறைக்கு போய்விட்டான்.

ஹேமா சக்தியை திரட்டிக்கொள்ள தீவிரமாக முயற்சி செய்து கொண்டிருந்தாள். 'ச்சீ... ச்சீ... இந்த அளவுக்குக் கோழையாக ஏன் இருக்கிறேன்? தைரியமாக நடந்துகொள்ள வேண்டிய சமயத்தில் இப்படி குன்றிப் போவானேன்? ரமேஷையும், மாதுரியையும் நாக்கைப் பிடுங்கிக் கொள்வதுபோல் கேள்விகளை கேட்டு இந்த விஷயத்திற்கு ஒரு முடிவு கட்டியிருக்க வேண்டும். அப்பாவியாக இருப்பவர்களை இந்த உலகம் மேலும் மேலும் துன்புறுத்திக் கொண்டே இருக்கும். குடும்பத்தை காப்பாற்றிக் கொள்ள வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு இல்லத்தரசியின் மீதும் இருக்கிறது. விஷயம் இதுவரையில் வந்துவிட்டது என்றால் தவறு அந்த இருவருடையது இல்லை. என்னுடையது. நான் எதற்காக பயப்பட வேண்டும்? அந்த உள்ளாடையை காண்பித்து அது என் படுக்கை அறையில் எப்படி வந்தது என்று கேட்டு விடுகிறேன். என்ன பதில் சொல்வார்களோ

சொல்லட்டும். இத்தனை வருடங்கள் அவனுடன் குடித்தனம் செய்த எனக்கு அந்த அளவுக்குக்கூட துணிச்சல் இல்லை என்றால் வெட்கக்கேடு ஹேமா தனக்குத்தானே தைரியம் சொல்லிக் கொண்டாள்.

ஆனால் ஹேமா கீழே வந்தபோது ரமேஷ் இருக்கவில்லை. "அய்யா கிளப்புக்கு போயிருக்காங்க. வருவதற்கு நேரமாகும் என்று சொன்னார்" சமையல்காரன் தெரிவித்தான். ஹேமா ஹால் சோபாவிலேயே சரிந்ததுபோல் உட்கார்ந்துவிட்டாள். அன்று இரவு ரமேஷ் வீட்டுக்கு வரவில்லை. விடியும் நேரம் வந்தான். நேராக தன்னுடைய அறைக்கு சென்றுவிட்டான்.

ஏழு நாட்கள் இப்படியே கழிந்துவிட்டன.

59

ரமேஷுடன் தனியாக பேசும் வாய்ப்பு ஹேமாவுக்குக் கிடைக்கவே இல்லை. கூர்ந்து கனித்தால் ரமேஷ் வேண்டுமென்றே அதற்கு வாய்ப்பு தராமல் தவிர்ப்பதுபோல் ஹேமாவுக்குத் தோன்றியது.

காலையில் எழுந்தது முதல் அவனுக்கு ஆயிரம் வேலைகள் இருக்கும். மூச்சுகூட விட முடியாத அளவுக்கு பிஸியாக இருப்பான். மாலையில் அவன் வீட்டுக்கு வரும்போதே சுருணா தந்தையை பிடித்துக் கொண்டுவிடுவாள். தந்தையும், மகளும் பேசி விளையாடி பொழுதை போக்குவார்கள். ஹேமா அங்கேயே இருந்தாலும் பார்த்தும் பார்க்காதது போல் சும்மா இருந்துவிடுவான்.

திருக்காட்டுப்பள்ளியிலிருந்து வந்த மறுநாளே அவன் தன்னிடம் கொடுத்திருந்த பணத்தை "என்னிடம் செலவு ஆகவில்லை" என்று திருப்பி கொடுத்துவிட்டாள்.

ரமேஷின் கண்களில் கோபம் ஜுவாலையாய் தோன்றி மறைந்தது. மறு பேச்சு பேசாமல் அதை எடுத்துக்கொண்டவன், அப்பொழுதுதான் டீயை கொண்டு வந்து வைத்துவிட்டுப் போன சமையல்காரனை அழைத்து அப்படியே கொடுத்துவிட்டான்.

"உன் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று சொன்னாய் இல்லையா. இந்தப் பணத்தை மணியார்டர் செய்துவிடு. நல்ல வைத்தியம் பார்க்கச் சொல்லி உன் அப்பாவுக்குக் கடிதம் எழுது"

என்றான்.

பணம் அதிகமாக இருந்ததை கண்டு அவன் கண்கள் வியப்பால் விரிந்தன. தடாலென்று ரமேஷின் கால்களில் விழுந்துவிட்டான்.

"என்ன இது? எழுந்திரு" என்றான்.

"உங்களைப்போன்ற நல்ல மனம் படைத்தவர்களை நான் எங்கேயும் பார்த்தது இல்லை. இன்னிக்கே வீட்டுக்குக் கடிதம் எழுதுகிறேன்." நன்றி உணர்ச்சி அவன் குரலில் வெளிப்பட்டது.

"புகழ்ந்தது போதும். போய் வேலையை கவனி." ரமேஷ் டீ கோப்பையை கையில் எடுத்துக் கொண்டான். அவன் முகத்திலிருந்த எரிச்சல் மறைந்து அந்த இடத்தில் திருப்தி பரவியது வெளிப்படையாக தெரிந்தது. ஹேமாவுக்கு ஏனோ இந்த நிகழ்ச்சி முகத்தில் அடித்தாற்போல் இருந்தது.

இரண்டு நாட்கள் கழித்து ஹேமா கடைத்தெருவுக்குப் போய் கட்டில்களுக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு வந்தாள். அன்று மாலையே கட்டில்கள், மெத்தை, போர்வைகள், தலையணைகள் எல்லாமே வந்துவிட்டன.

கட்டில்கள் வந்தபோது ரமேஷ் வீட்டில்தான் இருந்தான். கடையிலிருந்து வந்த ஆட்கள் கட்டில்களை அறையில் கொண்டு போட்டு ஃபிக்ஸ் செய்துவிட்டு, போகும்போது பில்லை ரமேஷுடம் நீட்டினார்கள். ரமேஷ் பில்லை எடுத்துக் கொண்டு செக்கை எழுதிக் கொடுத்துவிட்டான். அன்றோ, மறுநாளோ அவன் ஹேமாவை "இவற்றை ஏன் வாங்கினாய்?" என்று கேட்கவில்லை. ஹேமாவுக்கு ரொம்ப ஆத்திரமும் கோபமும் வந்தன. அவனை சண்டைக்கு இழுக்க வேண்டும் என்று அவள் செய்த சின்னச் சின்ன முயற்சிகள் எல்லாமே வியர்த்தனமாகிவிட்டன.

அன்று மதியம் ஜெயம்மா மறுபடியும் போன் செய்தாள். மாதுரியின் திருமண விஷயத்தில் கொஞ்சம்கூட அக்கறைக் காட்டவே இல்லை என்று ஹேமா மீது குற்றம் சாட்டினாள். அந்த அம்மாள் பேசும் தோரணைக்கு ஹேமாவுக்கு உடல் பற்றி எரிவதுபோல் இருந்தது. மகளை ஒன்றும் சொல்ல முடியாத அந்த அம்மாள் வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் ஹேமாவை குத்தலாக பேசி தன்னுடைய

திருப்தியை வெளிப்படுத்திக்கொள்ள முயன்றாள்.

ரமேஷிடம் பேசி இருவருமாக சேர்ந்து மாதுரியை திருமணத்
்கு சம்மதிக்க வைப்பதாகச் சொன்ன பிறகுதான் அந்த அம்மாள்
ானை கீழே வைத்தாள்.

அன்று இரவு சாப்பிடும்போது ஹேமா வலுவில் இந்தப் பேச்சை
ுத்தாள்.

"ஜெயம்மா இன்று மதியம் போன் செய்தாள்." முன்னுரை
ுவும் இல்லாமல் நேராக விஷயத்திற்கு வந்தாள்.

"என்னவாம்?"

"இதுக்கு முன்னாடி சொன்னதுதான். மாதுரியின் திருமண
ஷயம்! நாம் இருவரும் அவளை சம்மதிக்க வைக்க வேண்டுமாம்."

"அவளுக்கு எடுத்துச் சொல்வதற்கு நாம் யாரு?"

"மாதுரியின் உயிர் நண்பர்கள் என்று ஊர் முழுவதும் மக்கள்
சிக் கொள்கிறார்களே."

"பேசிக்கொண்டால்?"

"மாதுரியை சம்மதிக்க வைக்கும் பொறுப்பு நம்மீது இருக்கிறது."

"திருமணம் என்றால் சாதாரண விஷயம் இல்லை. எல்லாம்
ாருத்தமாக இமைய வேண்டாமா? மாதுரி என்ன சின்னக்
ுந்தையா நாம் எடுத்துச் சொல்வதற்கு?"

"சில சமயம் மனிதர்கள் குழந்தைத்தனமாக நடந்து கொள்வார்
. அது போன்ற சமயத்தில் நெருக்கமானவர்கள்தான் அவர்களை
யான வழிக்கு திருப்ப வேண்டும்."

"அப்படி செய்ய வேண்டும் என்று தோன்றினால்... உன்னால்
டிந்தால் நீயே அந்த பொறுப்பை ஏற்றுக்கொள்."

"என்னால் முடிந்தால் அந்தக் காரியத்தை என்றோ செய்திருப்
ன்."

"உன் எண்ணம்தான் என்ன?" தயிரை பரிமாறிக் கொள்ளப்
ானவன் அதை அப்படியே நிறுத்திவிட்டுக் கேட்டான்.

"மாதுரியை திருமணத்திற்கு சம்மதிக்க வைக்க உன்னால்தான்
முடியும்."

"நீ பேசுவது எனக்கு சரியாக விளங்கவில்லை."

"நீ சொன்னால் கட்டாயம் சம்மதிப்பாள்."

"சொல்ல நினைத்ததை நேராகச் சொல்லு"

"மாதுரி திருமணம் ஆக வேண்டிய பெண் என்று உனக்கு நினைவுப்படுத்துகிறேன்."

"அவளுக்கு திருமணம் ஆகாமல் நான் தடுத்துக் கொண்டு இருக்கிறேனா என்ன?"

"எனக்குத் தெரியாது. அவள் உன்மீது ஏதாவது எதிர்பார்ப்பு களை வைத்துக் கொண்டிருந்தால்..."

ஹேமா வார்தையை இன்னும் முடிக்கக்கூட இல்லை.

"வாயை மூடு." கத்திவிட்டான்.

"உடம்பில் கொஞ்சமாவது சுரணை இருந்துதான் பேசுகிறாயா? ச்சி... ச்சி." தட்டிலேயே கையை அலம்பிவிட்டான்.

எழுந்து போகப் போனவன் "உலகம் ஆயிரம் சொல்லட்டும். நீ எப்படி வேண்டுமானாலும் நினைத்துக் கொள். நான் பொருட் படுத்தப் போவதில்லை. மாதுரியின் திருமணம் என்பது முழுக்க முழுக்க அவளுடைய விருப்பம். அதில் யாரும் தலையிட வேண்டிய அவசியம் இல்லை. அடுத்த முறை ஜெயம்மா போன் செய்தால் எனக்குத் தெரியாது என்று சொல்லு. மறுபடியும் இந்தப் பேச்சை என்னிடம் எடுக்க வேண்டிய தேவையில்லை. புரிந்ததா!" படபடவென்று மொழிந்துவிட்டு போய் விட்டான்.

ஹேமா சற்சிலையாக உட்கார்ந்து விட்டாள். மாதுரிக்கு திருமணம் நடப்பதை ரமேஷ் விரும்பவில்லை என்று தெளிவாக புரிந்துவிட்டது.

சக்தி முழுவதும் வற்றிவிட்டதுபோல் ஹேமாவின் உடல் துவண்டுவிட்டது. "நீ எனக்கு தகுந்த மனைவி இல்லை" என்று ரமேஷ் சொன்ன வார்த்தைகள் ஹேமாவின் காதுகளில் மறுபடியும் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

இல்லை தீரா! திருமணம் ஆனதுமே ஒரு பெண்ணின் உற்சாகம் பாதியாக வடிந்துவிடும். என் பேச்சை கேள். நீ திருமணமே செய்து கொள்ளாதே திருமணம் என்ற யதார்த்தத்தைவிட அதைப்பற்றிய கனவுகள்தான் அழகாக இருக்கும்' கையோடு கொண்டு வந்திருந்த ரோஜா பூவை மகளின் தலையில் சூடிக்கொண்டே சொன்னாள் ஹேமா.

ரமேஷ் முகத்தைத் திருப்பிக்கொண்டான். மாதுரி தரையில் பார்வையை பதித்தாள்.

"உங்களுடைய பேச்சுக்கு இடைஞ்சலாக வந்துவிட்டேனா?" ஹேமா கேட்டாள்.

"அப்படி எதுவும் இல்லை." பதட்டத்துடன் சொன்னாள் மாதுரி.

ரமேஷின் கண்கள் ஹேமாவை எரித்துவிடுவது போல் பார்த்தன.

அதிர்ஷ்டவசமாக அப்பொழுதுதான் விருந்தாளிகள் வரத் தொடங்கிவிட்டார்கள். ரமேஷ் அவர்களை வரவேற்க எழுந்து போனான். வந்தவர்களை மாதுரிக்கும் தெரியும் என்பதால் அவளும் எழுந்து போனாள்.

கால் தரையில் பதிந்துவிட்டதுபோல் ஹேமா அந்த இடத்திலேயே நின்றுவிட்டாள்.

அரைமணியில் அந்த இடம் முழுவதும் விருந்தாளிகளின் வருகையால் நிரம்பிவிட்டது. வந்தவர்கள் · எல்லோரும் பரிசுப் பொருட்களை கொடுத்து கருணாவை திணறடித்துக் கொண்டிருந்தார்கள்.

மாதுரி மின்னல் கொடியை போல் அந்த இடம் முழுவதும் வலம் வந்துகொண்டிருந்தாள். ரமேஷும் அப்படித்தான். எல்லோரும் ஏதோ சாக்கு வைத்துக்கொண்டு அவனிடம் பேச வேண்டும் என்று முயற்சி செய்துகொண்டிருந்தார்கள். யாரோ அழைக்கும் குரலை கேட்டு அந்தப் பக்கம் வேகமாக போய்க்கொண்டிருந்த மாதுரி சட்டென்று நின்றுவிட்டாள். எதிரே பிரதான வாசல் வழியாக சுதாகர் உள்ளே வந்துகொண்டிருந்தான்.

ரமேஷ் அவனை நோக்கிச் சென்றான். 'ஹலோ' தன் எதிரில் வந்து நின்ற ரமேஷை பார்த்து சுதாகர் கை குலுக்குவதற்காக கையை

நீட்டினான்.

ரமேஷின் கை ஒரு வினாடி தயங்கி பிறகு நீண்டு சுதாகரின் கையை பற்றி குலுக்கியது.

"சாரி. வருவதற்கு கொஞ்சம் தாமதம் ஆகிவிட்டது. அப்பாவுக்கு ஃபிட்ஸ் வந்துவிட்டது. அது குறைந்து நான் கிளம்புவதற்குள் தாமதமாகிவிட்டது". சுதாகர் சொன்னான்.

"இப்போ எப்படி இருக்கிறது?" ரமேஷ் கேட்டான். அவன் குரல் வித்தியாசமாக ஒலித்தது.

"கொஞ்சம் தேவலை."

"வாங்க" ரமேஷ் சுதாகரை உடன் அழைத்துச் சென்றான்.

ஹேமா யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள். ரமேஷ் ஹேமாவின் தோள்களை பற்றி வேகமாய் தன் பக்கம் திருப்பினான்.

"என் மனைவி ஹேமா" சுதாகருக்கு அறிமுகப்படுத்தினான்.

கோட்டு சூட்டில் இருந்த சுதாகரை ஹேமாவுக்கு ஒரு நிமிடம் அடையாளம் தெரியவில்லை. வழக்கம்போல் இயந்திர கதியில் கைகளை கூப்பி வணக்கம் தெரிவிக்கப் போனவள் அப்படியே நின்றுவிட்டாள். அவள் இதழ்களில் மலர்ந்திருந்த புன்னகை மாயமாகிவிட்டது.

"வணக்கம்" என்றான்.

ஹேமாவும் கைகளை ஜோடித்தாள்.

"கருணா எங்கே?" ரமேஷ் பார்வையை சுழற்றினான். சற்று தொலைவில் யாருடைய மடியிலேயோ உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தாள். ரமேஷ் இரண்டே எட்டில் சென்று கருணாவை தூக்கிக் கொண்டு வந்தான். கருணா சுதாகரை பார்த்ததும் ரமேஷ் சொல்லாமலே "அங்கிள்"! என்று மகிழ்ச்சியுடன் அழைத்தாள்.

"ஏற்கனவே அங்கிளை தெரியுமா?" ரமேஷ் வியப்புடன் கேட்டான்.

"என்னை இன்னும் மறக்கவில்லை இல்லையா? குட் கேர்ல்" சுதாகர் கருணாவின் கன்னத்தை லேசாக தட்டிவிட்டு கையோடு

கொண்டு வந்த பரிசை கருணாவிடம் கொடுத்தான்.

"தாங்க்யூ அங்கிள்" மழலை மொழியில் சொன்னாள் கருணா.

"ஸ்வீட் பேபீ" அங்கிளுக்கு என்ன பரிசு தரப் போகிறாய்?" சுதாகர் கேட்டான்.

கருணா குனிந்து சுதாகர் கன்னத்தில் முத்தம் பதித்தாள்.

"தாங்க்யூ" கருணா சொன்னது போலவே சொன்னான். எல்லோரும் சிரித்தார்கள். ரமேஷ் சுய நினைவு இல்லாததுபோல் ஒரு நிமிடம் அசைவில்லாமல் அப்படியே நின்றுவிட்டான். அவன் மனதில் பல காட்சிகள் அலைமோதிக்கொண்டு இருந்தன. கருணாவுக்கு அடிப்பட்ட போது, உடனே டாக்டரிடம் அழைத்துச் சென்று கட்டுப்போடச் செய்த நபர் வேறு யாரோ இல்லை. சுதாகர் என்று தெரிந்ததும் அதுவரையில் வெற்றி பெருமிதத்துடன் மின்னிக்கொண்டிருந்த ரமேஷின் முகம் சட்டென்று கறுத்து விட்டது. அவன் பார்வை கேள்விக்குறியுடன் ஹேமாவின் முகத்தின் மீது படிந்தது. தலையை குனிந்து கொண்டிருந்த ஹேமாவின் முகத்தில் அவனுக்கு தேவையான பதில் கிடைத்துவிட்டது போல் இருந்தது.

61

பிரளயம் வரப் போகிறதென்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காத்திருக்கும்போது அப்படி எதுவும் நடக்காமல் தென்றல் காற்று வீசிவிட்டு போனதுபோல் அன்று இரவு பார்ட்டி முடிந்த பிறகு ரமேஷ் வாயிலிருந்து வரப்போகும் கேள்விக் கணைகளுக்காக காத்திருந்த ஹேமாவுக்கு அவனுடைய மௌனம் ஏமாற்றத்தை அளித்தது.

சற்று நேரம் யோசித்த பிறகு ஏதோ முடிவுக்கு வந்துவிட்டவள் போல் தானே அவனிடம் பேசுவதற்காக அவனுடைய அறைக்குச் சென்றாள்.

"ரமேஷ்! நான் உன்னிடம் சில விஷயங்களை சொல்லணும். சில கேள்விகளை உன்னிடம் கேட்கணும்" என்றாள்.

"எனக்கு தூக்கம் வருகிறது. நாளை பேசிக்கொள்வோம்." இரவு

உடையின் பித்தான்களை போட்டுக்கொண்டே, அவள் பக்கம் பார்க்காமலேயே சொன்னான்.

"ஆனால் ....." ஹேமா ஏதோ சொல்லப் போனாள்.

"ப்ளீஸ் ஹேமா!" அவன் தடுப்பதுபோல் கையை நீட்டினான். "இந்த ஒரு வேளைக்கு என்னை விட்டுவிடு. ரொம்ப களைத்துப் போயிருக்கிறேன். தயவு செய்து என்னைத் தூண்டிவிடாதே. இப்பொ நீ எது சொன்னாலும் எனக்கு ஆவேசம் ஏற்படுவது நிச்சயம். அது நம் குடும்ப வாழ்க்கையையே தகர்த்துவிடக்கூடும். சில காரணங்களினால் என் மனம் எரிமலையைபோல் கொந்தளித்துக் கொண்டு இருக்கிறது. எது நல்லதோ எது கெட்டதோ முடிவு செய்யும் நிலையில் இப்பொ நான் இல்லை. கருணாவுக்காக அவளுடைய எதிர்காலத்தை நினைத்தாவது இன்று நாம் இருவரும் சண்டை போட வேண்டாம். இந்த இடத்தை விட்டு போய்விடு."

ஹேமா கற்சிலையாக நின்றுவிட்டாள். ரமேஷ் ஹேமாவை பார்ப்பதற்குக்கூட விருப்பம் இல்லாதவன்போல் சுவற்று பக்கம் திரும்பி நின்றுகொண்டிருந்தான்.

இந்த சின்ன விஷயத்திற்கே அவனுடைய மனம் எரிமலையாகி விட்டதாமா? அப்பொ தன் மனதில் எத்தனை பிரளயங்கள் பொங்கியிருக்க வேண்டும்? யுகங்கள் மாறினாலும் ஆண்களின் மனம் அப்படியேதான் இருக்கிறது. தன் ஒருவனுக்கு மட்டும்தான் இதயம் இருப்பது போலவும், தான் மட்டும்தான் வேதனையை அனுபவிப்பதுபோல் நடந்து கொள்கிறான். பெண்களுக்கு இதயமே இருக்காது என்று நினைத்துவிட்டான் போலும்.

தான் கேட்க நினைத்ததை, சொல்ல வந்ததை வலுக்கட்டாயமாக மனதில் அடக்கிக் கொண்டாலும் மறுநாள் காலையில் தானே ரமேஷிடம் பேச வேண்டும் என்று ஹேமா திடமாக முடிவு கொண்டாள்.

ஆனால் காலையில் எழுந்துகொள்ளும் போதே ரமேஷ் வீட்டில் இல்லை. விடியற்காலையில் போன் வந்ததும் அவசர அவசரமாக கிளம்பிப் போனதாக சமையல்காரன் தெரிவித்தான்.

ரமேஷ் மாலையில் நான்கு மணிக்குமேல் வீட்டுக்கு வந்தான்.

அவனுடன் முஸ்லீம் இனத்தைச் சேர்ந்த இளம்பெண்கள் இரண்டு பேர் வந்திருந்தார்கள். ஹேமாவுக்கு அவர்களை அறிமுகப்படுத்தினான்.

"ஹேமா! ரஜியா, ஜுபேதா சில நாட்கள் நம் வீட்டிலேயே தங்கியிருப்பார்கள். நேற்று இரவு பேகம் இறந்துவிட்டாள்" என்றான்.

பேகம் என்பவள் ரமேஷின் தாயை ஆதரித்த முஸ்லீம் பெரியவரின் மனைவி. ரமேஷுக்குக் கொஞ்சம் வசதி வந்த பிறகு அந்த குடும்பத்துடன் மறுபடியும் நெருக்கம் ஏற்பட்டது. பொருளாதார ரீதியாக சீர்குலைந்துவிட்ட அந்தக் குடும்பத்திற்கு ரமேஷ் அடிக்கடி உதவி செய்து வருவது ஹேமாவுக்கும் தெரியும்.

பேகம்க்கு ஒரு மகன் இருந்தான். குடிகாரன்.பணக்கார வீட்டுப் பண்ணை திருமணம் செய்துகொண்டு பாகிஸ்தானுக்கு குடி பெயர்ந்துவிட்டான். பேகம் இறந்து போனால் போய்ப் பார்த்து விட்டு வந்தவரையில் சரி. ஆனால் அவளுடைய மகள்களை இப்படி வீட்டுக்கு அழைத்து வந்தது ஹேமாவுக்குன் கொஞ்சம்கூட பிடிக்க வில்லை. இந்த விஷயத்தில் ரமேஷ் தன்னிடம் கலந்து கொள்ளாமல் முடிவு செய்துவிட்டதற்கு கோபம்கூட வந்தது.

ரமேஷ் சமையல்காரனை அழைத்து, வந்தவர்களின் குளியல், சாப்பாடு முதலியவற்றுக்கான ஏற்பாடுகளை செய்யச் சொன்னான்.

ஹேமாவிடம் "இதுவரையில் அவர்கள் வீட்டைவிட்டு வெளியில் வந்ததே இல்லை. நீதான் கொஞ்சம் உரிமையுடன் அவர்களுடைய தேவைகளை கேட்டு தெரிந்துகொள்" என்று ஆணையிடுவது போல் சொன்னான்.

ஹேமா அவர்களை கெஸ்ட் ரூமுக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்துவிட்டு நேராக ரமேஷ் அறைக்கு வந்தாள்.

ரமேஷ் மேஜை முன்னால் நின்று ஃபீசிலிருந்து வந்த கடிதங்களை பார்த்துக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் களைப்பு வெளிப்படையாக தெரிந்தது.

"ரமேஷ்! இவர்களை நம் வீட்டுக்கு எதற்காக அழைத்து

வந்தாய்?" என்று கேட்டாள்.

"ஏன் அழைத்து வரக்கூடாது?" கடிதங்களை படித்துக் கொண்டே இரட்டிப்பதுபோல் கேட்டான்.

"அவர்களுக்கும் நமக்கும் என்ன உறவு?" ஹேமா குரலை உயர்த்தினாள்.

"இந்த உலகில் இருக்கும் ஒவ்வொரு அனாதைக்கும் எனக்கும் இருக்கும் உறவுதான்.

"நாதியில்லாமல் வாழ்வது என்றால் என்னவென்று உனக்குத் தெரியாது ஹேமா! தெரிந்திருந்தால் இப்படி பேசமாட்டாய். அவர்களுடைய தாய் இறந்துவிட்டாள். உறவு என்று சொல்லிக் கொள்ள யாருமே இல்லை. அனாதை இல்லங்களுக்கு ஆயிரக் கணக்கில் நன்கொடைகளை அள்ளித்தரும்போது திக்கற்ற இரண்டு பெண்களுக்கு ஆதரவு தருவது தவறு இல்லை என்று நினைக்கிறேன்".

"நன்றாக இருக்கிறது? பணத்தை நன்கொடையாக தருவது வேறு. பொறுப்பை ஏற்றுக் கொள்வது வேறு. இளம் வயதில் இருக்கும் பெண்களை அதிலும் வேறு இனத்தைச் சேர்ந்தவர்களை நம் வீட்டில் தங்க வைத்தால் உலகம் என்ன நினைக்கும்?"

"உலகம் அப்படி ஒன்றும் குருடு இல்லை. ஒருக்கால் முதலில் தவறாகப் புரிந்து கொண்டாலும் போகப் போக கட்டாயம் புரிந்து கொள்ளும். புரிந்து கொள்ளவில்லை என்றாலும் நான் கவலைப்பட மாட்டேன். யாரோ ஏதோ தவறாக நினைத்துவிடப் போகிறார்கள் என்று, எனக்கு நல்லது என்று தோன்றியதை செய்யாமல் என்னால் இருக்கமுடியாது" தீர்மானதாக சொல்லிவிட்டான்.

ஹேமாவால் பதில் சொல்ல முடியவில்லை. கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டு நின்றுவிட்டாள்.

"உன் பயம் எனக்குத் தெரியும். உன் மதிப்பு, மரியாதைகளுக்கு எந்த இழுக்கும் வரவிடமாட்டேன். கூடிய சீக்கிரத்தில் அவர்களுக்கு ஏதாவது ஏற்பாடு செய்து விடுகிறேன்."

அதற்குள் சமையல்காரன் அறைக்குள் எட்டிப்பார்த்து "யாரோ சுதாகராம். உங்களை பார்க்க வந்திருப்பதாகச் சொல்லச்

சொன்னார்" என்றான்.

"இதோ வந்துவிட்டேன். உட்காரச் சொல்லு" என்றான் ரமேஷ்.

"சுதாகரா! அவன் எதுக்கு வந்தான்? "பதட்டத்தை மறைத்துக் கொண்டே ஹேமா கேட்டாள்.

"நான்தான் வரச்சொன்னேன். அவன் ஏதோ ஆசிரமத்தை நிறுவப் போகிறானாம். எனக்குத் தெரிந்தவர் அந்த ஆசிரமத்தின் விவரங்களை கேட்டார். நல்ல வசதி படைத்தவர். நன்கொடை நிறைய தருவார். சுதாகர் வந்தால் அவரை அறிமுகப்படுத்தி வைப்பதாகச் சொன்னேன். " முன் அறைக்கு போகப் போன ரமேஷ் நின்று "நீயும் என்னுடன் வா" என்றான்.

"நானா? எதுக்கு அந்த விஷயங்கள் எல்லாம் எனக்கென்ன தெரியும்?"

"அவற்றை தெரிந்து கொள்வதற்காக அல்ல. வீட்டுக்கு வந்தவர்களை உபசரித்து நாலு வார்த்தைகள் பேசுவது இல்லத்தரசியான உன்னுடைய கடமை. அதை மறந்துவிடாதே. சமையல்காரனை டீ தயாரிக்கச் சொல்லு."

அந்த நிமிடத்தில் அவன் முகத்தை பார்க்கும்போது வெடிக்கத் தயாராக இருக்கும் எரிமலை நினைவுக்கு வந்தது. ஹேமாவுக்கு பயமாக இருந்தது. ரமேஷ் மனதில் பெரும் புயல் ஏதோ வீசிக் கொண்டிருக்க வேண்டும். அதன் பாதிப்பு வெளியில் தெரியாமல் கம்பீரம் என்ற திரையினால் மறைக்க முயற்சி செய்து கொண்டிருந்தான்.

ரமேஷ் ஹாலுக்கு போய்விட்டாள். ஹேமா அங்கேயே நின்று கொண்டிருந்தாள்.

'சுதாகர் எதிரில் போவதற்குதான் பயப்படுவானேன்? ஒருவேளை ரமேஷ் மனதில் வேறு ஏதாவது எண்ணம் இருந்தால் அது முற்றிலும் தவறு என்று நிரூபித்துக் காட்டுகிறேன்' ஹேமா முடிவு செய்தாள்.

பத்து நிமிடங்கள் கழித்து ஹேமா முன் அறைக்கு போனாள். பின்னாலேயே சமையல்காரன் டீயை எடுத்துக்கொண்டு வந்தான்.

ரமேஷ், சுதாகர் நடுவில் இருக்கும் டீபாய் மீது கட்டடத்தின் ப்ளானை வைத்துக்கொண்டு பரிசீலித்துக் கொண்டு இருந்தார்கள். ரமேஷ் மடியில் இருந்த கருணா பெரிய மனுஷி போல் கவனமாக பார்த்துக்கொண்டிருந்தாள்.

சுதாகர் ஹேமாவை பார்த்ததும் புன்முறுவல் செய்தான்.

"வா ஹேமா! ஆசிரமத்தின் கட்டடத்திற்கு முதல் நன் கொடையை ரமேஷை தரச்சொல்லி கேட்டுக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

ஹேமா வந்து ரமேஷ் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.

"இது போன்ற ஆசிரமங்கள் மீது எனக்கு நம்பிக்கை இல்லை. மனிதர்களை சோம்பேறிகளாக மாற்றிவிடும். வைராக்கியமாக இருப்பதும் நல்லது இல்லை. வாழ்க்கையே நடைபிணமாக மாறிவிடும்." சோபாவின் பின்னால் சாய்ந்துகொண்டே கம்பீரமான குரலில் மொழிந்தான் ரமேஷ்.

ஹேமா எதிர்பார்த்தது போல் அந்த சொற்கள் சுதாகரை பாதித்ததாக தெரியவில்லை. புன்முறுவல் மாறாத முகத்துடன் ரமேஷை பார்த்துக்கொண்டே, "நீங்க வாழ்க்கையை தவறான கண்ணோட்டத்தில் பார்க்கிறீங்க. கண்ணாடி மாளிகையை போன்ற வாழ்க்கையில் வைராக்கியத்தையும் பழக்கப்படுத்திக்கொள்வது நல்லது. இல்லை என்றால், என்றாவது ஒருநாள் வாழ்க்கை தடம் புரளும்போது மனதளவில் அதைத் தாங்கிக் கொள்ளமுடியாது. நன் கொடை நீங்க தராவிட்டால் என்ன? ஹேமா தருவாள்" என்றான்.

"அது அவளுடைய விருப்பம். கொடுத்தால் நான் ஆட்சேபணை சொல்லமாட்டேன். ஒருவருடைய விருப்பத்தை தடை செய்யும் உரிமை மற்றவர்களுக்கு இல்லை என்று நான் நம்புகிறேன்."

ரமேஷ் பேசியதில் மறைமுகமான பொருள் ஏதோ இருப்பது போல் ஹேமாவுக்குத் தோன்றியது.

சுதாகர் ஆர்வத்துடன் ஹேமா பக்கம் பார்த்தான்.

"மன்னித்துக்கொள்ளுங்கள். சுதாகர்! இந்த நாட்டில் இருக்கும் பெரும்பாலான இல்லத்தரசிகளைப் போல் நானும் கணவரைச் சார்ந்துதான் வாழ்ந்து வருகிறேன். எனக்கு என்று தனியாக எந்த

பணமும் கிடையாது. அதனால் நன்கொடை தரவேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் அதை செயல்படுத்த முடியாத நிலையில் இருக்கிறேன்." ஹேமா சொன்னாள்.

"பொய் அவள் பெயரில் வங்கியில் நிறைய பணம் இருக்கிறது." ரமேஷ் புகார் செய்வதுபோல் சொன்னான்.

"பணம் இருப்பது உண்மைதான். ஆனால் அது கணவர் கஷ்டப் பட்டு உழைத்து சம்பாதித்தது. அதைப்பார்த்து சந்தோஷப்பட்டுக் கொள்வதை தவிர அதிலிருந்து ஒரு ரூபாய்கூட எடுத்து செலவு செய்தது இல்லை."

"பண விஷயத்தில் பெண்களுக்கு கஞ்சத்தனம் அதிகம் சுதாகர். கொடுக்க முடியாது என்று நேராக சொல்லாமல் இப்படி சுற்றி வளைத்து பேசுகிறாள். புரிந்ததா?" சிரித்துக்கொண்டே சொன்னான் ரமேஷ்.

"ஆமாம். பெண்களுக்கு பணத்தையும், கணவனையும் விட்டுக் கொடுக்க மனசு வராது. அதை நீங்களும் புரிந்துகொள்ளுங்கள்" ஹேமா சொன்னாள்.

"பணம், கணவன் என்று தனித்தனியாக பிரிப்பானேன். பணக் கார கணவன் என்று சொன்னால் இன்னும் பொருத்தமாக இருக்கும் இல்லையா?" ரமேஷ் சீண்டுவதுபோல் சொன்னான்.

சுதாகர் கலகலவென்று நகைத்துவிட்டான்.

"ரொம்ப நன்றாக இருக்கிறது. கணவன், மனைவி இருவரும் ஒன்றாக சேர்ந்து நன்கொடை தராமல் தப்பிக்க பார்க்கிறீர்கள். சரி. போகட்டும். சுயமாக கொடுக்காவிட்டாலும் கொடுக்கும் வள்ளலை அறிமுகப்படுத்தி வைப்பதாக சொன்னீங்களே. அதுபோதும்." காகிதங்களை மடித்து வைத்துக்கொண்டே சொன்னான் சுதாகர்.

ஹேமா இருவருக்கும் டீயை கொடுத்தாள்.

ஒரே சோபாவில் அருகருகில் அமர்ந்துகொண்டு, ரொம்ப அந்யோன்யமாக, ஒருவரை ஒருவர் சீண்டுவது போல் பேசிக் கொண்டிருந்த ஜோடியை சுதாகரின் கண்கள் பொறாமையாக பார்த் தன. ஒரே ஒரு வினாடிதான். பண்பு நிறைந்த அவனது உள்ளம் அந்த பொறாமை உணர்வை உடனே அடக்கிவிட்டது.

சுதாகர் கிளம்பும்போது, கருணாவை தூக்கிக் கொண்டு கன்னத் தில் முத்தம் பதித்துவிட்டு "என்னுடன் வந்து விடு. உன்னுடைய அப்பா, அம்மா இன்னொரு குழந்தையை கொண்டு வருவார்கள்" என்றான்.

"நான் வரமாட்டேன்" சுதாகரின் கைகளிலிருந்து நழுவி தந்தையின் கழுத்தை கட்டிக்கொண்டே சொன்னாள் கருணா.

ரமேஷ் கருணாவை தன்னையும் அறியாமல் மார்போடு அணைத்துக்கொண்டான். "என்னுடைய ஐஸ்வரியம் எல்லாமே கருணாதான் சுதாகர். நீங்க எது வேண்டுமானாலும் கேளுங்கள். இந்த ஐஸ்வரியத்தை மட்டும் கேட்காதீர்கள்" என்றான்.

"ஒருவருடைய சொத்தை இன்னொருவர் கொள்ளை அடித் தாலும் அதை தக்கவைத்துக்கொள்வது சுலபம் இல்லை ரமேஷ்." சுதாகர் சொன்னான்.

ரமேஷ் கருணாவை ஹேமாவிடம் கொடுத்தான். பிறகு சுதாகர், ரமேஷ் இருவரும் ரமேஷின் காரில் கிளம்பிப் போய்விட்டார்கள்.

ஹேமா வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொண்ட உற்சாகம் அப்படியே வடிந்துவிட்டது.

ரமேஷ் வேண்டுமென்றே சுதாகரிடம் இந்தவிதமாக நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது ஏன் என்று அவளுக்கு புரியவில்லை. ஒன்று மட்டும் உண்மை. ரமேஷ் முன் பின் யோசிக்காமல் எப்போதும் எந்த காரியத்தையும் செய்யமாட்டான். அவன் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கு பின்னால் ஏதாவது ஒரு உபயோகம், எதிர்பார்ப்பு நிச்சயமாக இருக்கும். சுதாகர் விஷயத்தில் அவன் என்ன எதிர் பார்க்கிறான் என்று இப்போ தெரியாவிட்டாலும் சில நாட்களுக்குப் பிறகாவது வெளியில் வராமல் இருக்காது. ஹேமா பொறுமையாக அந்த நாளுக்காக காத்திருக்க நிச்சயித்துக் கொண்டாள்.

62

அன்புள்ள ஹேமா அக்காவிற்கு,

வணக்கம். என்னுடைய கடிதம் கிடைத்ததும் எனக்கு தைரியம் சொல்லி நீங்க எழுதிய கடிதம் கிடைக்கப்

பெற்றேன். அதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றுடன் என்னுடைய அம்மா இறந்துபோய் இரண்டு மாதங்கள் முடிகின்றன. அம்மா போனதற்கு தகவல் அனுப்பிய பிறகும் என்னுடைய மாமனாரோ, இவரோ வரவில்லை. என்னைப்பற்றி அவர்களுக்குக் கொஞ்சம்கூட அக்கறை இருப்பதாக தெரியவில்லை. இந்த நிலையில் என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை. இதற்கு முன் நீங்க எனக்கு எழுதிய கடிதங்களை பலமுறை படித்தேன். எனக்கு சரியான வழியைக் காட்டக் கூடியவர்கள் யாராவது இருக்கிறார்கள் என்றால் அது நீங்கள் மட்டும்தான். அதான் தயக்கத்தை விடுத்து, உங்களுக்கு கடிதம் எழுதுகிறேன். இதற்கு முன்பே உங்களுக்குக் கடிதம் எழுத வேண்டும் என்று நினைத்தாலும் எழுதக் கூடாது என்று அம்மா தடை போட்டுவிட்டாள். அம்மாவை மீறிக்கொண்டு என்னால் எதுவும் செய்யமுடியாது. என்னுடைய பிரச்சனைக்கு நீங்கள்தான் சரியான தீர்வு சொல்லவேண்டும். அம்மா போன பிறகு என்னுடைய வாழ்க்கையை பற்றி கவலைப்படுபவர்கள் வேறு யாரும் இல்லை. அவருக்கு என் நமஸ்காரங்கள். உங்களுடைய கடிதத்திற்காக ஆயிரம் கண்களுடன் காத்திருப்பேன்.

இப்படிக்கு,
உங்களுடைய உடன் பிறவாத
சகோதரி கமலா

சுந்தரத்திற்கு சமீபத்தில் பதவி உயர்வு கிடைத்திருக்கிறது. புதிய வேலையில் பொறுப்புகள் அதிகம். மாதத்தில் இருபது நாட்களுக்கு மேல் கேம்புக்கு போய்விடுவான். அதிர்ஷ்டவசமாக அவன் கேம்ப் பிலிருந்து இன்று காலையில்தான் வந்திருக்கிறான். மறுபடியும் இரவு கிளம்பிவிடுவான்.

மதியம் தபாலில் வந்த கடிதத்தை படித்ததிலிருந்து ஹேமாவின் மனம் இளகிவிட்டது. மாலையில் சுந்தரம் வீட்டுக்கு வந்ததும் கடிதத்தை காண்பித்தாள்.

ஆனால் ஹேமா எதிர்பார்த்ததுபோல் அவன் முகத்தில் எந்த மாறுதலும் தெரியவில்லை. படித்து முடித்ததும் நெற்றியை சுழித்தான்.

கடிதத்தை மடித்து ஹேமாவிடம் கொடுத்துக் கொண்டே, "உடனே மனதிற்கு பிடித்தவனாக பார்த்து கல்யாணம் பண்ணிக் கொள்ளச்சொல்லி கடிதம் எழுதிவிடு" அலட்சியமாக மொழிந்தான்.

"ரொம்ப அநியாயமாக பேசாதே" ஹேமா சொன்னாள்.

"நான் அநியாயமாக பேசுகிறேனா? அவள் முட்டாள்தனமாக நடந்துகொண்டதால் என்னுடைய வாழ்க்கையில் பொன்னான ஆறு வருடங்கள் வியர்த்தமாகி விட்டன." கோபமாகச் சொன்னான்.

"வாழ்க்கை என்ற பிறகு பிரச்சனைகள் வராமல் இருக்குமா சுந்தரம்? ஒவ்வொருத்தரின் வாழ்க்கையிலும் ஏற்ற இறக்கங்கள் தவிர்க்க முடியாது."

"நீ எதுவேண்டுமானாலும் சொல்லு ஹேமா. இனி அந்தப் பெண்ணுடன் எனக்கு எந்த சம்பந்தமும் கிடையாது. கோர்டில் கேஸ் ஜெயிக்கப்போகும் இந்த நேரத்தில் மறுபடியும் அவளுடன் தொடர்பு எனக்கெதற்கு? என் வாழ்க்கையில் அந்த அத்தியாயம் முடிந்துபோய் விட்டது."

"இவ்வளவு கடினமாக பேச ஆண்களால்தான் முடியும். இதில் அந்த பெண் செய்த தவறு என்ன? சொல்லு. கேட்கிறேன்."

"அவள் என்ன சின்னக் குழந்தையா?"

"என் அண்ணாவிடம் நான் போக வேண்டும் என்று எதிர்த்து பேசியிருக்க வேண்டாமா? இருவரின் வாழ்க்கையும் வியர்த்தம் ஆகிவிடும் என்று தாயிடம் பேசி அவளை சமாதானப்படுத்தி இருக்கலாமே?"

"அம்மாவை எதிர்த்து பேச தெரியாதவள் என்ற விஷயம் ஏற்கனவே தெரிந்ததுதானே. அவளை குற்றம் சொல்லும்முன் நீ என்ன செய்தாய் என்று கொஞ்சம் யோசித்துபாரு. அந்த துணிச்சல் உனக்கு ஏன் இல்லாமல் போய்விட்டது? அந்தப் பெண்ணின் சுழுத்தில் மூன்று முடிச்சுகளை போட்டவன் நீ. நேராக உன் மாமியாரிடம் போய் பேசி இந்த விஷயத்திற்கு அப்போதே ஏன் முடிவு கட்டவில்லை? இதில் நஷ்டம் உனக்கு மட்டும்தானா? அந்தப்

ரமேஷ் பேப்பரை டீபாய்மீது வீசிவிட்டு குளிப்பதற்காக பாத்ரூமுக்குள் நுழையப் போனவன் ஒரு நிமிடம் நின்று திரும்பிப் பார்த்து "போவதற்கு முன் ஒரு விஷயம் மட்டும் நினைவில் வைத்துக்கொள். திருக்காட்டுப்பள்ளிக்கு போக வேண்டும் என்று நீ முடிவு செய்தால் மறுபடியும் இங்கே வரவேண்டிய அவசியம் இருக்காது" என்று சொல்லிவிட்டு பாத்ரூம் கதவுகளைச் சாத்திக் கொண்டுவிட்டான்.

ஹேமா சற்சிலையாக நின்றுவிட்டாள். ரமேஷின் எண்ணம்தான் என்ன? பிறந்தவீட்டு உறவை சாகவதமாக மறந்துவிட வேண்டும் என்றா? இல்லை... அந்த ஏழைகளின் வீட்டுக்கு போவது தனக்கு மதிப்புக் குறைவு என்றா? கருணாவை, அவளுடைஎதிர் காலத்தை நினைத்து மனதைக் கொன்று புதைத்துவிட்டு அவனுடன் சமாதானமாக போவதற்கு முயற்சி செய்து வருகிறாள். காரணமே இல்லாமல் அவன் தன்மீது காட்டும் கோபத்தைக்கூட பொறுத்துக் கொள்ள முடியுமோ என்னவோ. இந்த அலட்சிய போக்கை எப்படி தாங்கிக் கொள்வது?

"போக வேண்டும் என்று முடிவு செய்துவிட்டால் இனி இங்கு வரவேண்டிய அவசியம் இருக்காது" என்று அவ்வளவு கச்சிதமாக, கொஞ்சம்கூட தயங்காமல் அவன் சொல்வதன் பின்னால் வேறு ஏதாவது எண்ணம் மறைந்திருக்குமோ!

ஹேமாவின் இதயம் பாரமாகிவிட்டது. வெறும் உணவுக்காவும், உடைக்காகவும் கணவனின் வீட்டில் வேலைக்காரியைவிட ஹீனமாக வாழும் மனைவியின் நிலையைவிட பயங்கரமானது வேறு எதுவும் இருக்கமுடியாது. வாழ்க்கையில் வேறு ஏதாவது மகிழ்ச்சியை பெறுவதற்கு தான் இடைஞ்சலாக இருப்பதாக நினைக்கிறானோ? அந்த பயங்கரமான உண்மை தனக்கு தெரியாமல் இருப்பதே நல்லதோ!.

ஹேமா தனக்கு தெரிந்த சில குடும்பங்களில் கணவரின் கையில் வெறும் பொம்மைகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களை நினைவு கூர்ந்தாள். பணக்காரர் ஒருவர் மனைவி இருக்கும்போதே காதலியுடன் ஊரைச்சுற்றிக் கொண்டிருந்தார். இன்னொருவர் நான்கு குழந்தைகளுக்கு தந்தையாக இருந்தும் கொஞ்சம்கூட பொறுப்பு இல்லாமல் லேடீ செகரெட்டரியுடன் தொடர்பு வைத்திருந்தார். மாதம் இவ்வளவு என்று மனைவியிடம் ஏதோ கொஞ்சம் பணம் கொடுப்பதுடன் சரி. இன்னொரு வீட்டில் மேற்படிப்புக்காக வீட்டில் தங்கியிருந்த அக்காவின் மகளையே தன்னுடைய விருப்பத்திற்கு இணங்க வைத்துவிட்டார். இந்த கல்யாணத்திற்கு சம்மதிக்க வில்லை என்றால் பிறந்த வீட்டுக்கு அனுப்பிவிடுவதாக மிரட்டிய போது வேறு வழியில்லாமல் அந்த அம்மாளும் சம்மதித்து இருக்கிறாள். இப்பவும் அந்த அம்மாள் கணவனுக்கும், வேலைக்கு போகும் சக்களத்திக்கும், குழந்தைகளுக்கும் இயந்திரமாக உழைத்துக் கொண்டு இருக்கிறாள்.

என்ன பெண்கள் இவர்கள்? கொஞ்சம்கூட ரோஷம், வெட்கம், மானம் எதுவுமே இல்லையா என்று ஹேமா நினைத்தது உண்டு. அவர்களை பார்க்கும்போது இரக்கமாக இருந்தாலும் அநியாயத்தை தட்டிக் கேட்காத அவர்களுடைய கோழைத்தனத்தை நினைக்கும் போது வெறுப்பும் ஏற்பட்டதுண்டு.

இன்று தன்னுடைய நிலைமையும் அதுதானே? ரமேஷுடன் சமாதானமாக போவதா இல்லை எதிர்த்து பிரிந்து போய்விடுவதா? சமாதானமாக போனால் நடைபிணமாக, அவன் கைப்பாவையாக வாழ வேண்டும். பிரிந்து போனால் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் ஏற்ற இறக்கங்களை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும். நாளுக்கு நாள் தீவிரமாகிக் கொண்டிருந்த மனபோராட்டத்திற்கு இடையில் ஹேமா நலிந்துபோய்க் கொண்டிருந்தாள்.

எண்ணங்களில் மூழ்கி, வெளி உலகத்து நினைவே இல்லாதது போல் பெஞ்சிமீது உட்கார்ந்திருந்த ஹேமா சுதாகர் பார்கிற்கு வந்ததை கவனிக்கவில்லை. கருணாவை தூக்கிக் கொண்டு தன் முன்னால் வந்து நிற்கும் வரையில் அவள் உணரவே இல்லை.

"என்ன ஹேமா! ரொம்ப பலமான யோசனையா?" சுதாகர் கேட்டான்.

"அப்படி எதுவும் இல்லை." புன்முறுவலை வரவழைத்துக் கொண்டாள். "உங்க ஆசிரம விஷயம் என்ன ஆச்சு?" சட்டென்று பேச்சை மாற்றினாள்.

"கட்டட வேலை ஆரம்பமாகி விட்டதே. ரமேஷ் சொல்லவில்லையா?" சுதாகர் கேட்டான்.

"நான் கேட்டது உங்களைப்பற்றி. ஆசிரம வேலைகள் தொடங்குவதற்குமுன் அத்தனை தடவை எங்கள் வீட்டுக்கு வந்திங்க. சமீபகாலமாக கண்ணில் படவே இல்லையே?"

"சாரி ஹேமா! நானே நேரில் வந்து சொல்லியிருக்க வேண்டும். நான் உங்கள் வீட்டுக்கு வரவில்லை என்றாலும் ரமேஷை தினமும் அலுவலகத்தில் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறோம். சொல்ல மறந்துவிட்டேன். மெனி மெனி தாங்க்ஸ் ஹேமா. இந்த ஆசிரமத்தின் கட்டட வேலை இவ்வளவு சீக்கிரமாக தொடங்கிவிட்டது என்றால் அது உன்னுடைய கைராசிதான். அந்த ஆசிரமத்தில் சேரப் போகிறவர்கள் உனக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறார்கள்."

"நானா? நான் என்ன செய்துவிட்டேன்?"

"ரமேஷ் எனக்கு எல்லா விஷயங்களையும் சொல்லிவிட்டான். இந்த ஆசிரம விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொள்ளதான் வேண்டும் என்று நீ பிடிவாதம் பிடித்தாயாம். ரமேஷ் தனக்கு இது போன்ற விவகாரங்களில் விருப்பம் இல்லாவிட்டாலும், உன் காரணமாகத்தான் எங்களுக்கு உதவி செய்து வருகிறான். பக்க பலமாக அவன் இல்லை என்றால் இந்த விவகாரம் இவ்வளவு சீக்கிரம் முன்னேறி இருக்காது. புடவைகளுக்காக, நகைகளுக்காக கணவனுடன் சண்டை போடும் பெண்களை பார்த்திருக்கிறேன். இது போன்ற விவகாரங்களில் அவர்களுக்கு ஈடுபாடு இருக்காது. மேலும் கணவனுக்கு கோபம் வரக்கூடும் என்று பயப்படுவார்கள். உன் பிடிவாதம் காரணமாகத்தான் ரமேஷ் இந்த விவகாரத்தில் ரொம்ப சிரத்தை எடுத்துக்கொண்டான். அது மட்டுமே இல்லை. ஆசிரமத்தின் பக்கத்திலேயே குழந்தைகளுக்காக அன்னாதை இல்லத்தை கட்டுவதற்கு ஏற்பாடு செய்கிறான். அதற்கு தேவையான நன்கொடையை வசூல் செய்து, அரசாங்கத்திடமிருந்து உதவி கிடைக்கும் விதமாக ஏற்பாடு செய்வது அவனுடைய பொறுப்பு. அதன் பிறகு அதை சரியாக நிர்வாகம் செய்வது என்னுடைய பொறுப்பு. அந்த விதமாக இருவரும் பொறுப்புகளை பகிர்ந்து கொண்டுவிட்டோம்."

சுதாகர் ரொம்ப உற்சாகமாக சொல்லிக் கொண்டிருந்தான்.

தலையை குனிந்துகொண்டு புல்தரையின்மீது பார்வையை

பதித்திருந்த ஹேமாவின் மனதில் ஆயிரம் எண்ணங்கள் அலைமோதிக் கொண்டிருந்தன.

"ஆசிரமத்தின் விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொண்டுதான் ஆக வேண்டும் என்று ரமேஷிடம் பிடிவாதம் பிடித்தாளா? ரமேஷ் மனதில் இருக்கும் எண்ணம்தான் என்ன? காரணம் தெரிய வில்லையே தவிர, ரமேஷ் ஏனோ சுதாகருக்கு உதவி செய்ய வேண்டும் என்று தீவிரமாக முடிவு செய்துவிட்டான் அவனுடைய சொத்து முழுவதும் மாதுரிக்கு வரும் விதமாக செய்து விட்டோமே என்ற பச்சாதாபம் ஏற்பட்டு இருக்கலாம். சுதாகருக்கு உதவி செய்து பாபத்திற்கு பரிகாரம் தேடும் முயற்சியாகவும் இருக்கலாம். இதை யெல்லாம் மனதில் வைத்துக்கொண்டுதான் கருணாவின் பிறந்தநாள் விழாவுக்கு சுதாகரை அழைத்திருக்க வேண்டும். அந்த அழைப்புக்கும் இந்த மாதிரி உதவி செய்வதற்கும் நிச்சயம் ஏதாவது தொடர்பு இருக்கிறது."

வானம் மேகமூட்டமாக இருந்தது. திடீரென்று குளிர்ந்த காற்று வீசத் தொடங்கியது. பார்க்கில் இருந்த மக்கள் மளமள வென்று வீட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்கள்.

சுதாகர் தலையை உயர்த்தி பார்த்து "மழை வரும் போலிருக்கு" என்றான்.

"ஆமாம். சீக்கிரமாக வீட்டுக்குப் போவது நல்லது. வா கருணா! போகலாம்" சொல்லிக் கொண்டே ஹேமா கைகளை நீட்டினாள்.

சுதாகர் கருணாவை ஹேமாவிடம் தரவில்லை. "கிளம்பு வீடுவரையில் கொண்டுவிட்டுப் போகிறேன்" என்றான்.

மூவரும் சேர்ந்து பார்க்கை விட்டு வெளியேறி நான்கு அடிகள் வைத்தார்களோ இல்லையோ படபட்வென்று தூற்றல் போட ஆரம்பித்தது. காற்றின் வேகமும் அதிகமாக இருந்தது.

"பெரிய மழை வரும் போல் இருக்கு" என்றாள் ஹேமா.

"ஆமாம். அவ்வளவு தூரம் போவது கஷ்டம்தான். நடுவிலேயே நன்றாக நனைந்து விடுவீர்கள். எங்கள் வீட்டுக்கு போகலாம். மழை விட்டதும் கிளம்பிப் போகலாம்." சுதாகர் சொன்னான்.

"வேண்டாம்.... வேண்டாம். பரவாயில்லை. வீட்டுக்கு போய்

விடுவோம்." பதட்டத்துடன் சொன்னாள்.

சுதாகர் முகத்தில் சிரிப்பு மறைந்தது.

"ஏன் ஹேமா! எங்க வீட்டுக்கு நீ வரக்கூடாதா? அந்த தகுதி எங்களுக்கு இல்லையா? இல்லை... நான் மறந்துபோன கடந்த காலத்தை உன்னால் மறக்க முடியவில்லையா?" சந்தேகமாக பார்த்தான்.

"அது... வந்து... அப்படி எதுவும் இல்லை."

"அப்பொ கிளம்பு. காற்றின் வேகம் ரொம்ப அதிகமாக இருக்கிறது. உன்னை இப்படி விட்டுவிட்டால் நாளை நான் ரமேஷ்க்கு பதில் சொல்ல வேண்டாமா? வா..." என்று முன்னால் நடந்தான்.

வேறுவழி இல்லாதவள் போல் ஹேமா அவனை பின்பற்றினாள். அந்த காற்றையும், மழையையும் பார்க்கும்போது வீட்டுக்கு போவதோ... இல்லை அங்கேயே எங்காவது ஒதுங்குவதோ இரண்டுமே சாத்தியம் இல்லை என்று தோன்றியது.

64

ஹேமா சுதாகரின் வீட்டில் காலடி எடுத்து வைத்தாளோ இல்லையோ வேகமாக மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது.

வீடு ரொம்ப சிறியது. மரப்பலகைகளால் தடுக்கப்பட்ட வராண்டாவைத் தாண்டியதும் ஒரு அறை இருந்தது. அங்கே நான்கு நாற்காலிகள் ஒழுங்கற்ற முறையில் இங்கும் அங்குமாக சிதறிக் கிடந்தன. அந்த அறையில் மேஜைமீதும், நாற்காலிகள் மீதும்... எங்கு பார்த்தாலும் புத்தகங்கள்தான் தென்பட்டன. சுதாகர் நாற்காலியின்மீது இருந்த புத்தகங்களை எடுத்து மேஜைமீது வைத்துவிட்டு "உட்காரு ஹேமா!" என்றான்.

கருணா மேஜைமீது இருந்த ஜப்பான் மடக்கு விசிறியை எடுத்துக் கொண்டாள். சுதாகர் கையில் எடுத்துக்கொண்டு அதைத் திறந்து மூடும் வித்தத்தை செய்து காண்பித்தான். கருணாவும் அந்த விசிறியை கையில் எடுத்துக்கொண்டு திறந்து மூடினாள்.

"குட்" புன்முறுவலுடன் சொன்னான்.

வேண்டாத பேப்பர்களை எடுத்து கருணாவுக்கு காகித கப்பல்

களை செய்து கொடுத்தான். கருணாவின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

மும்முரமாக விளையாடிக் கொண்டிருந்த அந்த இருவரையும் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த ஹேமாவுக்கு வேண்டாமென்று நினைத்தாலும் சில காட்சிகள் மனதில் தோன்றி மறைந்தன.

சுதாகர் கருணாவை கீழே இறக்கிவிட்டான். "நீ புத்தகங்களை பார்த்துக் கொண்டிரு ஹேமா! நான் டீ தயாரித்துக்கொண்டு வருகிறேன்" என்று எழுந்து கொண்டான்.

"வேண்டாம். எனக்கு இப்பொ எதுவும் வேண்டாம்." ஹேமா சொன்னாள்.

"ஒரு தடவை நான் தயாரித்த டீயை குடித்து பாரு. நீயே மறுபடியும் எங்கள் வீட்டுக்கு வந்து டீயை தரச்சொல்லி கேட்காவிட்டால் என் பெயரை மாற்றிக் கொள்கிறேன். "புன்முறுவலுடன் சொன்னான் சுதாகர்.

"கருணா... உள்ளே வா. உனக்கு பிஸ்கெட்ஸ் தருகிறேன் கருணாவின் விரலை பற்றிக்கொண்டு உள்ளே அழைத்துச் சென்றான்.

"யாரு வந்திருக்காங்க சுதா?" உள்ளே இருந்து குரல் கேட்டது.

"எனக்கு தெரிந்தவர்கள் டாடீ மழை அதிகமாகிவிட்டதால் உள்ளே வந்து உட்காரச் சொன்னேன். நீங்க மருந்து சாப்பிட்டீங்களா?"

"இன்னும் இல்லை. இந்தக் குழந்தை யாரு?"

"என்னுடைய நண்பனின் மகள்." சுதாகர் கருணாவை தூக்கிக் கொண்டு தந்தையின் அருகில் சென்று காண்பித்தான்.

"துலக்கி வைத்த குத்துவிளக்குபோல் பளிச்சென்று இருக்கிறாள் பெயர் என்ன?" நாகபூஷணம் கேட்டார்.

"இது யார் தெரியுமா?" சுதாகர் தந்தையை காண்பித்துக் கொண்டே கேட்டான்.

"தெரியும் தாத்தா!"

"தாத்தாவா? உனக்கெப்படி தெரியும்?" சுதாகர் சிரித்துக் கொண்டே கேட்டான்.

"தலைமுடி எல்லாம் வெள்ளையாக இருக்கே. வெள்ளைமுடி இருந்தால் தாத்தாதானே." கருணா சொன்னாள்.

"போக்கிரி குட்டி! புத்திசாலியாகத்தான் இருக்கிறாள்." நாகபூஷணமும் சிரித்தார். அந்தச் சிரிப்புடன் இருமலும் சேர்ந்து கொண்டது.

"மருந்து சாப்பிடுங்கள் டாடி! சூடாக டீ எடுத்து வருகிறேன்." சுதாகர் அவருடைய முதுகை நீவிவிட்டான்.

"இந்த லாயர் இன்றுகூட வரவில்லை சுதா!" மூச்சு இறைப்புக்கு நடுவிலேயே சொன்னார்.

சுதாகர் சட்டென்று சமையல் அறைக்குள் சென்றுவிட்டான். அவர் வாயிலிருந்து வெளியேறப்போகும் வெசவுகளை, சாபங்களை கேட்டாக வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது ரமேஷையும், மாதுரியையும் திட்டினால்தான் அவருக்கு திருப்தியாக இருக்கும். இப்போ அந்த புராணத்தை அவிழ்த்துவிட்டார் என்றால் நிறுத்துவது கஷ்டம். முன் அறையில் ஹேமா வேறு இருக்கிறாள்.

முன் அறையில் அமர்ந்திருந்த ஹேமா இந்த உரையாடலை கேட்டுக்கொண்டுதான் இருந்தாள். ஏனோ ஹேமாவுக்கு இந்த சூழ் நிலையில் மூச்சுத்திணறுவதுபோல் இருந்தது. தான் இந்த வீட்டுக்கு வருவதாவது! ஏதோ கனவுபோல் தோன்றியது. இருக்கையை விட்டு எழுந்து ஜன்னல் அருகில் சென்றாள். மழை குறைவதாகத் தெரியவில்லை. சுதாகரால் இவ்வளவு இயல்பாக, எதுவுமே நடக்காததுபோல் எப்படி இருக்க முடிகிறது? தன்னைப்பார்க்கும் போது அவனுக்கு எதுவும் தோன்றவில்லையா?

ஹேமா மேஜை அருகில் வந்து சிதறிக்கிடந்த புத்தகங்களை சீராக அடுக்கத் தொடங்கினாள். கால் மணி நேரம் கழித்து டீயை எடுத்துக்கொண்டு வந்த சுதாகர் அறை முழுவதையும் பார்த்தான். "என்ன? குப்பையாக இருந்த அறையை சீர்படுத்திவிட்டீர்கள் போல் இருக்கிறதே?" வியப்புடன் கேட்டான்.

ஹேமா டீ கோப்பையை எடுத்துக் கொண்டே "இந்த அறையில் காலடி எடுத்து வைத்ததுமே உங்கள் வீட்டில் பெண்கள் யாரும் இல்லை என்ற விஷயம் பளிச்சென்று புரிந்துவிடும்" என்றாள்.

"அது உண்மைதானே."

"நீங்கள் கொஞ்சம் சிரத்தை எடுத்துக்கொண்டு இருந்தால் இந்த நிலை வந்திருக்காது இல்லையா?"

"நான் என்ன செய்யட்டும்? நல்ல வேலைக்காரிக்காக தேடித் தேடி களைத்துப் போய்விட்டேன். நல்ல ஆளாக கிடைத்தால் நீங்களே ஏற்பாடு செய்து கொடுங்களேன்."

"வேலைக்காரிக்காக தேடுவானேன்? பி.ஏ. படித்திருக்கிறாள். ரொம்ப நல்ல பெண்." ஹேமா ரொம்ப சீரியஸாக சொன்னாள்.

"தாங்க்ஸ். இத்தனை நாட்கள் கழித்து எனக்கு திருமணம் செய்து வைக்க ஆள் கிடைத்திருக்கிறார்கள். ஆனால் எனக்கு இப்போ கொஞ்சம்கூட ஒய்வு இல்லையே. எத்தனை வேலைகள். ஒரு நிமிஷம் கூட மூச்சுவிட முடியாது. அப்பாவுக்காக வலுக்கட்டாயமாக இந்த ஜெயில் வாழ்க்கையை சகித்துக் கொண்டு வருகிறேன்."

ஹேமா உடனே பதில் எதுவும் சொல்லவில்லை. இந்த உரை யாடலை மேலும் நீடிக்க விரும்பாதவள் போல் மௌனமாக இருந்து விட்டாள். சற்று நேரம் கழித்து சுதாகர் திடீரென்று சொன்னான். அவன் முகத்தில் பல உணர்வுகள் கொந்தளித்துக் கொண்டிருந்தன.

"ஹேமா மறுபடியும் நாம் இந்தவிதமாக சந்தித்துக் கொள்வது வேடிக்கையாக இருக்கிறது இல்லையா? மறுபடியும் உன்னைப் பார்ப்பேன் என்று கனவில்கூட நான் நினைக்கவில்லை."

அவன் பார்வை ஹேமாவையும் தாண்டி எங்கோ சூனியத்தில் நிலைத்திருந்தது. தனக்குத்தானே பேசிக்கொள்வது போல் மென்மை யான குரலில் சொல்லத் தொடங்கினான்.

"என் வாழ்க்கையில் ஏற்பட்ட பெரிய திருப்புமுனைக்கு காரணமே நீதான். முதல் முறையாக ஏமாற்றம் என்றால் எப்படி இருக்கும் என்று உன் மூலமாகத்தான் உணர்ந்தேன். அன்று மாலை யில் நடந்தது இன்னும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது. நானும் என்னுடைய அப்பாவும் உன் வீட்டுக்கு வந்தது——"

"சுதாகர்! ப்ளீஸ்..... இப்போ அந்த விஷயங்கள் எல்லாம் எதுக்கு?"

"ஒரு தடவை மனம் விட்டு பேசிக்கொண்டால் என்ன ஆகிவிடும் ஹேமா? இது போன்ற வாய்ப்பு நமக்குக் கிடைப்பது விசித்திரம் தான். சின்ன வயதிலிருந்தே எனக்கு வாழ்க்கையிடம் ஒரு விதமான விரக்தியான போக்கு இருந்து வந்தது. ஒருமுறை வேலைக்காரன் எனக்கு குடிக்க தண்ணீரை வெள்ளி டம்ளரில் கொடுக்காமல் கண்ணாடி டம்ளரில் கொடுத்தான் என்று டாடி அவனை அடித்து வேலையிலிருந்து நீக்கிவிட்டார். எனக்கு தேவை தண்ணீர் மட்டும் தானே. எந்த டம்ளரில் குடித்தால் என்ன என்று நினைத்தேன். வாழ்க்கையிடம் எந்த பற்றும் இல்லாமல் இருந்தேன். என்னை வளர்த்த ஆயா திடீரென்று ஒருநாள் இறந்துவிட்டாள். அவள் என்னை உயிருக்கு மேலாக பார்த்துக்கொண்டாள். எனக்கு சின்ன அடிப்பட்டாலும் துடி துடித்துப் போய்விடுவாள். ஒருநாள் காலையில் சாப்பாடு போட்டு என்னை பள்ளிக்கு அனுப்பி வைத்தாள். மதியம் மூன்று மணிக்கு நான் திரும்பி வந்தபோது, அவள் இருக்கவில்லை. சிலமணி நேரங்களுக்குமுன் என்னை அன்பாக ஸ்பரிசித்த கைகள் கட்டையாக இருந்தன. ஹாலுக்கு நடுவில் கிடத்தியிருந்த ஆயாவின் உடலை பார்க்கும்போது எனக்கு அழுகை வரவில்லை. திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தேன். காலை வரையில் உயிரோடு இருந்தவள் மாலையில் பிணமாக மாறிவிட்டாள். என்னால் நம்ப முடியவில்லை. அன்றிலிருந்தே என் மனதில் மனித வாழ்க்கை சாசுவதமற்றது என்ற எண்ணம் ஆழமாக பதிந்து விட்டது."

"இளமை பருவம் வந்த பிறகு அந்த உணர்வு தானாக குறைந்து விட்டது. என்னையே நான் நேசிக்கத் தொடங்கினேன். மற்ற இளைஞர்களை போல் திருமணத்தைப் பற்றி எனக்கும் சில கனவுகள் இருந்தன. மாதுரியின் பிறந்தநாள் அன்று அவளுடைய வீட்டில் உன்னைப் பார்த்தேன். என்னைச் சுற்றியிருக்கும் நாகரீக மங்கைகளுக்கு நடுவில் நீ தனியாக தென்பட்டாய். ஏனோ தெரியவில்லை. உன்மீது ரொம்ப விருப்பம் ஏற்பட்டது. எனக்கு எது வேண்டும் என்றாலும் கை சொடுக்கும் நேரத்தில் டாடி எனக்குக் கொண்டு தந்துவிடுவார். அப்படிப்பட்ட அப்பாவின் நிழலில் வளர்ந்த எனக்கு ஏமாற்றம் எப்படி இருக்கும் என்று கொஞ்சம்கூடத் தெரியாது. உன்னுடன் வாழப்போகும் வாழ்க்கையை பற்றி பலவிதமாக ஜகித்துக் கொண்டேன். நான் போய் பெண் கேட்க வேண்டியதுதான் தாமதம். நீ என் மனைவியாக வந்துவிடுவாய் என்று நம்பிவிட்டேன். அந்த நம்பிக்கை வேரோடு சாய்ந்தபோது என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனக்கு மனைவியாக வரவேண்டியவளை ரமேஷ் அநியாயமாக கடத்திக்கொண்டு போய்விட்டான் என்ற அளவுக்குக் கோபம் வந்தது. உன் வீட்டிலிருந்து வந்த அன்று தற்கொலை செய்து கொண்டுவிட்டால் என்ன? என்றுகூடத் தோன்றியது. என் அப்பாவின் சொத்து, செல்வாக்கு எதுவும் வாழ்க்கையில் முதல் முறையாக நான் விரும்பியதை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டன."

"எதிர்பாராத இந்த ஏமாற்றம் என் அடிமனதில் புதைந்து கிடந்த விரக்தி மனப்பான்மையை தட்டி எழுப்பியதுபோல் இருந்தது. வாழ்க்கையில் நாம் சுகமாக, சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று கஷ்டப்பட்டு உழைத்து சொத்துகளை சேர்த்து வருவோம். எல்லாம் பிரமைதான். நம் தலையில் என்ன எழுதியிருக்கிறதோ, அதுதான் நமக்குக் கிடைக்கும். நாம் சம்பாதித்து வைத்த சொத்து, பணம் எதுவும் நமக்கு துணையாக இருக்கப்போவதில்லை. எனக்கு படிப்பு மீது சிரத்தை குறைந்துவிட்டது. ரொம்ப நாட்கள் வரை மகேஷ் யோகியின் பின்னால் சுற்றினேன். எனக்கு என்ன வேண்டும் என்று எனக்கே தெரியவில்லை. கடைசியில் நான்கு வருடங்களுக்கு முன் ரிஷிகேஷில் ஒரு சுவாமிகளின் ஆசிரமத்தில் ஆறுமாதங்கள் தங்கினேன். அவர் கண்களில் தென்பட்ட தேஜஸ்ஸை நான் எங்கேயும் பார்த்ததில்லை. அவருடைய கண்கள் அக்னி ஜ்வாலையை போல் இருந்தன. புதிதாக அவரை சந்திப்பவர்கள் அந்தப் பார்வையின் தீட்சின்யத்தைத் தாங்க முடியாமல் தவிப்பது உண்டு. அவருடைய ஆசிரமத்தின் கட்டுப்பாடுகள் ரொம்ப கடினமானவை. அவற்றைக் கடைப்பிடிப்பது சாதாரண விஷயம் அல்ல. பிடிவாதமாக நான் அதைச்சாதித்தேன். ஆறுமாதங்கள் முடியும்போது புதிய பிறவி எடுத்ததுபோல் உணர்ந்தேன். சுயமகிழ்ச்சிக்காக தவிக்கும்போது

தான் மனிதனுக்கு துக்கம் ஏற்படுகிறது. மற்றவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும்விதமாக செயல்படத் தொடங்கினால் அந்த திருப்தி மனிதனை உயர்வான நிலைக்கு அழைத்துச் செல்கிறது. இதுதான் நான் அவரிடம் கற்றுக் கொண்ட பாடம். சுயநலத்தை துறப்பது சாதாரண விஷயம் இல்லை. ஆனால் விடாமுயற்சி இருந்தால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. சுகங்களை துறந்தேன். என்னுடைய துக்கம், அமைதியற்ற தன்மை எல்லாமே மாயமாகிவிட்டன. என் மனம் தெளிந்துவிட்டது."

"அதனால்தான் சுருணாவின் பிறந்தநாள் விழாவுக்கு ரமேஷ் அழைப்பு விடுத்தபோது நிலை தடுமாறாமல் வர முடிந்தது. ரமேஷ் மூலமாக எங்கள் சொத்து முழுவதும் மாதுரிக்குக் கிடைத்து விட்டது என்று தெரிந்த போதுகூட எனக்கு வேதனையாக இருக்க வில்லை. ஒருவிதமாக பார்த்தால் ரமேஷுக்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன் என்று சொல்ல வேண்டும். இந்த சொத்து எதுவும் இல்லாததால் நான் டாடிக்கு நெருக்கமாகிவிட்டேன். அவருக்கு என்னால் முடிந்த உபசாரங்களை செய்ய முடியுமே தவிர, அவருடைய சொத்தை காவல் காக்க முடியாது. அந்த சொத்தை மேலும் அபிவிருத்தி செய்யவும் எனக்குத் தெரியாது. அப்பா சம்பாதித்து வைத்ததை போக்கடித்துவிட்டேன் என்ற கெட்ட பெயர் எனக்கு வராமல் ரமேஷ் என்னை தப்பிக்கச் செய்தான். இந்த பணமே இருந்தால் அப்பாவுக்கும், எனக்கும் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டு இருக்கும். பரம விரோதிகளாக மாறி இருப்போமோ என்னவோ? ரமேஷ் அவனையும் அறியாமல் என்னைக் காப்பாற்றி இருக்கிறான்."

"ரமேஷை நீ திருமணம் செய்துகொண்டது உன்னுடைய அதிர்ஷ்டம்தான் ஹேமா! என்னுடன் உன் திருமணம் நடந்திருந்தால் வேதனை உனக்கு பரிசாக கிடைத்திருக்கும். என்னுடைய ஆழ் மனதில் புதைந்திருந்த வைராக்கியம் என்றாவது ஒருநாள் வெளிப்பட்டு இருக்கும். என்னை நீ வெறுக்கும் நிலை உருவாகி இருவரும் பிரிந்து போயிருப்போமோ என்னவோ? அந்த விதமாகவும் ரமேஷ் நம் இருவருக்கும் நன்மையைத்தான் செய்திருக்கிறான். இன்று அந்நோன்யமாக இருக்கும் உங்கள் இருவரையும் பார்க்கும்போது எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது." சுதாகர் சொல்லி முடித்தான்.

வெளி உலகத்தை மறந்து, பதுமையை போல் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்த ஹேமா திடுக்கிட்டு வெளியில் பார்த்தாள். மழை நன்றாக குறைந்துவிட்டது. நேரமாகிவிட்டது என்று எச்சரிப்பது போல் கடியாரத்தில் மணி அடித்தது.

"வீட்டுக்கு போகலாம் மம்மீ!" கருணா தாயின் கையை பற்றி இழுத்தாள்.

65

மழை முழுவதுமாகக் குறைந்துவிட்டது. சாலையில் ஆங்காங்கே தண்ணீர் தேங்கியிருந்தது. மேகங்கள் விலகி சந்திரன் உதயத்தால் நிலவின் ஒளி எங்கும் பரவியிருந்தது.

சுதாகர், ஹேமா ரமேஷ் வீட்டை நோக்கி மெதுவாக நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். சுதாகர் டாக்ஸியை கூப்பிடுவதாக சொன்னபோது ஹேமா வேண்டாமென்று மறுத்துவிட்டாள். சில்லென்று காற்று வீசிக்கொண்டிருந்தது.

அவர்களுடன் சேர்ந்து நடந்துகொண்டிருந்த கருணா சுதாகர் தனக்கு பரிசாகக் கொடுத்த ஜப்பான் மடக்கு விசிறியை பார்த்துப் பார்த்து சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தாள்.

ஹேமா மௌனமாக நடந்து கொண்டிருந்தாள். வாழ்க்கையை பற்றி சுதாகர் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தபோது ஹேமாவின் மனதில் அமைதி குடிகொண்டது. இதயத்தை அழுத்திக் கொண்டிருந்த வேதனை ஏதோ நீங்கிவிட்டது போல் தோன்றியது.

திடீரென்று சுதாகர் "ஹேமா! எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்" என்றான்.

"என்ன உதவி?"

"உங்க வீட்டில் பழைய புடவைகள், போர்வைகள் ஏதாவது இருந்தால் கொடுக்க முடியுமா?"

"எதுக்கு?" ஹேமா திகைப்புடன் பார்த்தாள். ஹேமாவின் முகத்தில் தெரிந்த வியப்பை பார்த்து சுதாகர் சிரித்துவிட்டான்.

"எனக்காக இல்லை. இரண்டு நாட்களுக்கு முன்னால் வீசிய புயல்

காற்றில் கரையோர கிராமங்கள் மூழ்கிவிட்டன. வீடுவாசலை இழந்து மக்கள் தவித்துக்கொண்டு இருக்கிறார்கள். பேப்பரில் படிக்க வில்லையா? ஏதோ நம்மால் முடிந்த உதவி செய்வோமே என்று தான்..." விளக்கமாக சொன்னான்.

"இருப்பவர்களிடமிருந்து வசூல் செய்து இல்லாதவர்களுக்கு கொடுக்கப் போறீங்களா?"

சரியாகச் சொன்னால் அப்படித்தான். இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் நடுவில் பாலமாக இருக்க விரும்புகிறேன்."

வீடு அருகில் வந்ததும் கருணா தாயின் கையை விட்டு வேகமாக ஓடினாள்.

ரமேஷ் ஹாலில் அமர்ந்து கொண்டு, சீட்டுக்கட்டை பயன்படுத்தி பொறுமையாக கோபுரத்தை கட்டிக் கொண்டிருந்தான். தந்தையை பார்த்ததும் "டாடீ!" என்று ஓடி வந்த கருணா, "டாடீ! இந்த விசிறியை பாரு. எவ்வளவு அழகாக இருக்கு பார்த்தாயா?" உற்சாகமாக காண்பித்தாள்.

"எங்கே போயிருந்திங்க கண்ணம்மா!" ரொம்ப நேரமாக காத்துக் கொண்டிருந்தவன் போல் கேட்டான். கருணா அவன் கேட்டதை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. விசிறியை மூடி திறந்து காண்பித்துக் கொண்டே "பாரு டாடீ! ரொம்ப அழகாக இருக்கு இல்லையா. பார்க் அங்கிள் எனக்கே எனக்கு கொடுத்துவிட்டார் டாடீ இனி இது எனக்குத்தான்" என்றாள்.

ரமேஷ் மேலும் ஏதோ கேட்பதற்குள் ஹேமா சுதாகர் உள்ளே வந்தார்கள்.

ஜோடியாக உள்ளே நுழைந்து கொண்டிருந்த அந்த இருவரையும் பார்த்தபோது ரமேஷ் முகத்தில் உத்வேகம் மின்னல்போல் தோன்றி மறைந்தது.

"ரமேஷ்! சீக்கிரமாக வீட்டுக்கு வந்துவிட்டாய் போலிருக்கு. இன்னிக்கு என்ன விசேஷம்?" கேட்டுக் கொண்டே சுதாகர் அருகில் வந்தான்.

"இன்னிக்கு வேலை சீக்கிரமாக முடிந்துவிட்டது. ஹேமாவையும், கருணாவையும் அழைத்துக்கொண்டு ஏதாவது சினிமாவுக்கு போகலாம் என்று எண்ணி சீக்கிரமாக வந்தேன். ஆனால் மகாராணி அவர்கள் வெளியில் எங்கேயோ சுற்றப் போய்விட்டார்கள்" புன்முறுவலுடன் சொன்னான்.

ஹேமா ரமேஷ் பக்கம் பார்க்காமலேயே உள்ளே போய் விட்டாள். ரமேஷ், சுதாகர் ஆசிரமத்து விவகாரங்களை பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். பத்து நிமிடங்கள் கழித்து ஹேமா உள்ளே இருந்து பழைய புடவைகள் போர்வைகளை கொண்டு வந்து சுதாகர் எதிரில் இருந்த டீபாய் மீது வைத்தாள். அவற்றில் ரமேஷ் எத்தனையோ விருப்பப்பட்டு வாங்கிய போர்வைகளும் இருந்தன.

"தற்போதைக்கு இவைதான் இருக்கு. நாளை நான் இன்னும் சிலருக்கு போன் செய்து துணிகளை சேர்த்து தருகிறேன்" என்றாள்.

"மெனி மெனி தாங்க்ஸ்." சுதாகர் ஹேமாவுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ரமேஷிடம் அவற்றின் தேவையை பற்றி விவரமாக சொன்னான்.

"ஐஸீ." ரமேஷ் கம்பீரமாக மொழிந்தான்.

ஹேமா பிளாஸ்டிக் கவர்களை கொண்டு வந்தாள். சுதாகர் துணிகளை கவர்களில் வைத்துக் கொண்டு கிளம்ப முற்பட்டான்.

"நாழியாகி விட்டதே. சாப்பிட்டுவிட்டு போகலாமே" ரமேஷ் சொன்னான்.

"அடுத்த முறை கட்டாயம் சாப்பிடுகிறேன். அப்பாவுக்கு இன்னும் டயட் தரவில்லை. நான் போய் பிரட்டை டோஸ்ட் செய்து தரணும். குட் நைட் போய் வருகிறேன் ஹேமா!" விடைபெற்றுக் கொண்டு சுதாகர் கிளம்பிவிட்டான்.

சுதாகர் கிளம்பிப் போனதும் கணவன் மனைவிக்கு நடுவில் திடீரென்று நிசப்தம் நிலவியது. அந்த நிசப்தம் தகர்க்க முடியாத இரும்பு சுவர்போல் ஹேமாவுக்குத் தோன்றியது. ஹேமா உள்ளே போக முற்பட்டபோது ரமேஷ் அழைத்தான். அவன்முகம் கடினமாக இருந்தது.

"புது போர்வைகளை அப்படியே கொடுத்து விட்டாய். உன் உத்தேசம்தான் என்ன?"

"அவற்றை நான் பயன்படுத்துவதை விட்டுவிட்டு ரொம்ப நாளாகிவிட்டது. எனக்கு பயன் படாதவை வேறு யாருக்காவது உபயோகப்பட்டால் நல்லது தானே என்ற எண்ணத்தில் கொடுத்தேன்."

"இந்த வீட்டில் நான் ஒருத்தன் இருப்பதையே மறந்துவிட்டாயா? கொடுப்பதற்குமுன் ஏன் என்னிடம் கேட்கவில்லை?"

"கேட்கணும் என்று நினைத்தால் நிறைய விஷயங்கள் கேட்க வேண்டியிருக்கும். அந்த விஷயங்களை கிளறுவது உனக்கும், எனக்கும் நல்லது இல்லை."

"உன் மனதில் என்ன இருக்கிறதென்று எனக்குப் புரியவில்லை. நான் பொறுத்து போகப் போக உன் நடத்தை ரொம்ப எல்லைமீறி போய்க் கொண்டிருக்கிறது. இப்பொழுதே சொல்கிறேன். இது என்னுடைய வீடு. என் விருப்பம் இல்லாமல், எனக்குத் தெரியாமல் இந்த வீட்டில் எந்த சின்ன விஷயமும் நடக்கக்கூடாது. சின்ன துரும்பு வெளியில் போக வேண்டுமென்றால்கூட என் அனுமதி பெற்று இருக்க வேண்டும். நன்றாக நினைவில் வைத்துக்கொள். அது மட்டுமே இல்லை. இனி ஒரு நாளும் கார் இல்லாமல் வெளியில் போகாதே. மழை என்று, வெயில் என்று சாக்கு போக்கு சொல்லிக் கொண்டு சுதாகருடன் வெளியில் சுற்ற வேண்டாம். மதிப்பு மரியாதைகளை பெற வேண்டும் என்றால் பல வருடங்கள் தேவைப்படும் ஆனால் இழப்பதற்கு ஒரு நிமிடம் போதும். இந்த வீட்டு இல்லத்தரசியாக உன்னுடைய பொறுப்புகளை நீ மறந்து போனால் நினைவுப்படுத்த வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. நடக்கக் கூடாதது ஏதாவது நடந்துவிட்டால் நான் நியாய அநியாயங்களைக்கூட பார்க்க மாட்டேன். பொல்லாதவனாக மாறிவிடுவேன். அதை நினைவில் வைத்துக்கொண்டு செயல்படுவது உனக்கு நல்லது."

அன்று இரவு ஹேமா சாப்பிடவில்லை. சாப்பிடச் சொல்லி அவனும் கேட்கவில்லை. ஹேமா தன் அறையில் கட்டில்மீது இன்னமும் திகைப்பிலிருந்து மீளாதவள் போல் உள்ளங்கைகளையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

பக்கத்து அறையிலிருந்து ரமேஷ், கருணா பேசுவதை ஹேமா

கேட்டுக்கொண்டு தான் இருந்தாள். கருணா தந்தையின் பக்கத்தில் படுத்துக்கொண்டு பார்க்கிலிருந்து சுதாகர் வீட்டுக்கு போனது முதல் வீட்டுக்கு வரும்வரையில் நடந்ததை எல்லாம் ஒப்பித்துக் கொண்டிருந்தாள். அங்கிள் வீட்டில் தாய் புத்தகங்களை அடுக்கி வைத்தது, டீயை குடித்தது எல்லாமே சொன்னாள். ஆனால் சுதாகர் ஹேமாவுடன் அத்தனை நேரம் என்ன பேசிக் கொண்டிருந்தாள் என்று அவளுக்கு சொல்லத் தெரியவில்லை. "ரொம்ப நேரம் ஏதோ பேசிக் கொண்டிருந்தாங்க டாடீ!" நெற்றியை சுளித்துக்கொண்டே சொன்னாள்.

"உன்னைப் பார்த்து அந்த தாத்தா என்ன சொன்னார்?" ரமேஷ் இரண்டு மூன்று முறை கேட்டுத் தெரிந்து கொண்டான்.

தந்தைக்கும், மகளுக்கும் நடுவில் நடந்து கொண்டிருந்த உரையாடல் துல்லியமாக ஹேமாவின் காதுகளில் விழுந்து கொண்டு தான் இருந்தது. ஹேமாவின் முகம் சிவந்துவிட்டது. 'ச்சீ... ச்சீ... இத்தனை கீழ்தரமாய் குழந்தையிடம் தூண்டித் துருவி கேட்பானேன்? நேராக என்னிடம் கேட்டிருக்கலாமே' என்று நினைத்துக் கொண்டாள்.

அவன் கேட்காவிட்டாலும், தானே எழுந்துபோய் சொல்லி விட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த மனதை வலுக்கட்டாயமாக அடக்கினாள். 'தன் வீடாம்! தன்னுடைய விருப்பம் இல்லாமல் இந்த வீட்டில் எதுவும் நடக்கக் கூடாதாம். வேலைக்காரியிடம் சொல்வதுபோல் சொல்கிறான். ஹேமாவுக்கு அவன் பேசியது ரொம்ப அவமானமாகத் தோன்றியது. இன்னும் நான்கு நாட்கள் போனால் வேறுவிதமாக பேசினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை."

எப்போதும் வீட்டைவிட்டு வெளியில் வராத ஹேமா, யாரிடமும் ரொம்ப பழகாமல் ஒதுங்கியே இருக்கும் ஹேமா திடீரென்று எல்லோருடனும் கலகலப்பாக பழக ஆரம்பித்ததும் எல்லோரும் வியப்பு அடைந்தார்கள். நன்கொடைகளை வசூல் செய்வதற்கு ஹேமா உற்சாகம் காட்டியதும் அவர்களுடைய வியப்பு மேலும் அதிகரித்தது. ரமேஷின் அபிமானத்தை பெறுவதற்காக ஹேமா கேட்டதைவிட அதிகமாவே தந்தார்கள்.

ஹேமா வசூல் செய்த பொருட்களை பார்த்து சுதாகர் வியப்பு அடைந்தான். "பார்த்தாயா ஹேமா! எந்த வேளையும் பணக் காரர்கள் செய்தால்தான் சிறப்பாக இருக்கும். மிஸஸ் ராமன் எத்தனைமுறை என்னை அலைக்கழித்து இருக்கிறாள் தெரியுமா? ஒரு ரூபாய்கூட தரவில்லை. இத்தனை துணிகள், நூறுரூபாயும் கொடுத்தாள் என்றாள் என்னால் நம்பவே முடியவில்லை" என்றான்.

தினமும் மாலையில் சுதாகரும், ஹேமாவும் இது விஷயமாக பேசிக்கொள்வது, வசூலான பொருட்களை பட்டியல் போடுவது, சிரித்து பேசுவது எல்லாவற்றையும் ரமேஷ் கவனித்துக் கொண்டு தான் இருந்தான். அவன் ஹேமாவை தடுக்கவில்லை. எச்சரிக்கவும் இல்லை.

சுதாகர் வெளி ஊருக்கு போகும்போது "ஹேமா! நான் வருவ தற்கு ஒரு வாரமாவது ஆகும். அப்பாவை பார்த்துக்கொள்ள வேலைக்காரன் ஒருவன் இருக்கிறான். ஒய்வு கிடைக்கும்போது போய் அப்பாவை பார்த்துவிட்டு வரமுடியுமா" என்றான். ஹேமா தலையை அசைத்தாள். ரமேஷின் முகம் கோபத்தினால் சிவந்து சுன்றிவிட்டதை ஹேமா கவனிக்காமல் இல்லை.

66

ஹேமா சருணாவுக்காக புதிய டிசைனில் ஸ்வெட்டரை பின்னிக்கொண்டு இருந்தாள். கைகள் பாட்டுக்கு பின்னிக் கொண்டிருந்தாலும், மூளை தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தது. சுதாகர் ஊருக்கு போய் நான்கு நாட்களாகி விட்டன. ஒரு காலத்தில் ஹேமாவின் வாழ்க்கையில் மாதுரி உயிருக்கு மேலாக இருந்தாள். ரமேஷுடன் அறிமுகம் வளர்ந்த பிறகு மாதுரி ஹேமாவை விட்டு தொலைவாக போய்விட்டாள். சுந்தரம் நெருக்கமானவன்தான். ஆனால் சில விஷயங்களை அவனிடம் பகிர்ந்து கொள்ள முடியாது. தனிமையினால் ஹேமா ரொம்ப வேதனைப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் சுதாகர் வந்தான். அவனுடன் எண்ணங்களை பகிர்ந்து கொள்வதில் ஹேமாவுக்கு திருப்தியும், மனநிறைவும் கிடைத்தன. இந்தமுறை சுதாகரை பார்த்தால் தனக்கு ஏதாவது வேலையை தேடி தரச்சொல்லணும். தன்னுடைய தாம்பத்திய வாழ்க்கையில் பிரச்னை

இருப்பது அவனுக்கு தெரியவே கூடாது. எந்த குழ்நிலையிலும் தான் ரமேஷைவிட்டு தொலைவுக்கு போகமுடியாது. தனக்கென்று ஒரு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். முக்கியமாக பொருளாதார ரீதியாக ரமேஷ்மீது ஆதாரப்படக்கூடாது.

சில நாட்களிலேயே சுவலையுடன் பாரமாக இருந்த ஹேமா வின் மனம் எதிர்காலத்தை பற்றி நினைக்கும்போது மேலும் குன்றி விட்டது.

அதற்குள் டெலிபோன் மணி ஒலித்தது. எழுந்து கொள்ள விருப்பம் இல்லாதவள்போல் ஹேமா அப்படியே உட்கார்ந் திருந்தாள். சற்று நேரம் ஒலித்துவிட்டு தானே நின்று விட்டது.

ரமேஷ் வீட்டில் இல்லை. அவனுக்காகத்தான் யாராவது செய்தி ருப்பார்கள் என்று நினைத்தாள். இரண்டு நிமிடம் போவதற்குள் மறுபடியும் போன் ஒலித்தது.

அடுத்த அறையில் விளையாடிக் கொண்டிருந்த சுருணா ஓடி வந்து ரிசிவரை எடுத்து அப்படியே ரமேஷ் சொல்வதுபோல் கம்பீரமாக "ஹலோ" என்றாள்.

மறுமுனையில் யார் என்று தெரியவில்லை. சுருணா தலையை அசைத்துக் கொண்டே "இங்கேதான் இருக்கிறாள். இதோ கூப்பிடு கிறேன்" என்று சொல்லிவிட்டு "மம்மீ! உனக்குத்தான். வா" என்று அழைத்தாள்.

"ஹலோ!"

"யாரு? ஹேமாதானே?" மறுமுனையில் ஜெயம்மாவின் குரல் கேட்டது.

ஹேமா திடுக்கிட்டாள். அவசரமாக வீட்டுக்கு வரச்சொல்லி ஹேமாவுக்கு தகவல் அனுப்பியிருந்தாள் ஜெயம்மா. அந்த அம்மாள் பேசப்போகும் விஷயம் தெரியும் என்பதால் ஹேமா போகவில்லை. காலையில் வேலைக்காரன் வந்து ஜெயம்மாவிடமிருந்து போன் வந்திருப்பதாக சொன்னபோதுகூட அம்மா வீட்டில் இல்லை என்று சொல்லச் சொன்னாள். ஆனால் இந்தமுறை போனை சுருணா எடுத்துவிட்டதால் ஹேமாவால் தப்பித்துக் கொள்ள முடியவில்லை.

ரிசிவரை எடுத்த அந்த ஹேமா அந்த அம்மாள் பேசுவதற்கு

குடிகொண்டிருக்கும் தனிமை... இவை இரண்டும் ஒன்றாக சேர்ந்து அவனுடைய பழி உணர்வை மேலும் தூண்டி விட்டுக் கொண்டிருந்தன.

ரமேஷ் காரைவிட்டு இறங்கி, லாக் செய்து மெதுவாக சுதாகர் வீட்டுக்கு வந்தான். மரப்பலகைகளால் தடுக்கப்பட்ட வராண்டா கதவு சாத்தி இருந்தது. விரல்களால் சத்தப்படுத்தினான். இரண்டு நிமிடங்கள் கழித்து பதினைந்து வயது மதிக்கத்தக்க பையன் ஒருவன் வந்து கதவைத் திறந்து "யார் வேண்டும்?" என்று கேட்டான்.

"மிஸ்டர் நாகபூஷணம்" அந்தப் பெயரை உச்சரிக்கும்போது அவனுக்கு என்னவோ போல் இருந்தது.

"இருக்கிறார். உட்காருங்க." உள்ளே போகப் போனவன் திரும்பி "உங்களுடைய பெயர்?" என்று கேட்டான்.

"சுதாகரின் நண்பன் என்று சொல்லு."

உள்ளே போன பையன் மறுபடியும் வந்தான். "அய்யா சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறார். உங்களை உட்காரச் சொன்னார். முடிந்ததும் கூப்பிடுகிறேன்" என்று சொல்லிவிட்டு போய்விட்டான்.

ரமேஷ் அங்கே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். சூழ்நிலை இறுக்கமாக, மூச்சுத் திணறுவதுபோல் இருந்தது அவனுக்கு.

உள்ளே இருந்து அவருடைய குரல் கேட்டுக் கொண்டிருந்தது. அந்தப் பையன் ஏதோ பதில் சொல்லிக் கொண்டிருந்தான். சாப்பாடு முடிந்ததற்கு அறிகுறியாக பாத்திரங்களை எடுத்து வைக்கும் சத்தம் கேட்டது.

பத்து நிமிடங்கள் பத்து யுகங்களாக கழிந்தன. வேலைக்காரன் வந்து "உள்ளே வரச் சொன்னாங்க" என்றான்.

ரமேஷ் உடனே எழுந்துகொள்ளவில்லை. அந்தப் பையனை வெளியில் அனுப்புவது எப்படி என்று சுடந்த பத்து நிமிடங்களாக யோசித்துக்கொண்டு இருந்தான்.

"வீட்டில் ப்ளாஸ்க் இருக்கா?"

"இருக்கு சார்."

"அருகில் ஏதாவது ஹோட்டல் இருக்கிறதா?" இல்லை என்று ரமேஷுக்கு தெரியும்.

"கொஞ்சம் தொலைவில் நல்ல ஹோட்டல் இருக்கு."

"தாமதம் ஆனாலும் பரவாயில்லை." ரமேஷ் சட்டைப் பையிலிருந்து இருபது ரூபாயை எடுத்து வேலைக்காரனிடம் கொடுத்தான்.

"நான் அவருடன் பேசிக் கொண்டிருக்கிறேன் நீ போய் இரண்டு கப் காபியை வாங்கிக்கொண்டு வா. அய்யாவிடம் சொல்லாதே, என்ன பணம் கொடுக்க விடமாட்டார். கொண்டு வந்த பிறகு சொல்லிக் கொள்ளலாம்" என்றான்.

அந்தப் பையன் தலையை அசைத்தான்.

"நீயும் காபியை குடித்து விட்டு வா என்றான்" ரமேஷ்.

இரண்டு நிமிடங்கள் கழித்து கையில் ப்ளாஸ்கை எடுத்துக் கொண்டு அந்தப் பையன் கிளம்பிப் போனான். அவன் முகத்தை பார்த்தால் சிறையிலிருந்து சற்று நேரம் விடுதலை கிடைத்தது போல் உற்சாகமாக இருந்தது.

ரமேஷின் இதயம் வேகமாக துடிக்கத் தொடங்கியது. உடலில் இருக்கும் இரத்தம் வேகமாக பாய்வதுபோல் இருந்தது.

கால்கள் தரையோடு பதிந்துவிட்டது போல் வலுக்கட்டாயமாக பெயர்ந்து ஒவ்வொரு அடியாக வைத்து அவருடைய அறையின் வாசலில் நின்று கொண்டான்.

உள்ளே மேஜை விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது.

"வாங்க. உட்காருங்க. சுதாகர் ஊரில் இல்லை." வரவேற்பதுபோல் சொன்னான்.

ரமேஷ் உடனே உள்ளே போகவில்லை. அங்கேயே நின்று கண் இமைக்காமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் உடல் முழுவதும் நடுக்கம் பரவியது. நடுங்கும் கைகளை பேண்ட் பாக்கெட்டில் திணித்து கைப்பிடிகளை இறுக்கி சமாளிக்க முயன்றான்.

"யாரு?" அவர் நெற்றியை சுளித்துக் கொண்டே கேட்டார்.

எதுவும் பேசமால் சிலையாக நின்று கொண்டிருந்த ரமேஷைப் பார்த்ததும் அவருக்கு சந்தேகம் ஏற்பட்டது.

"யாரு?" உரத்த குரலில் கேட்டுக்கொண்டே கட்டில் பக்கத்திலிருந்த ஸ்விச்சை அழுத்தினார்.

ட்யூப் லைட் வெளிசத்தில் அறையின் நடுவில் வெள்ளை உடைகளுடன், திடமாக, ஆரோக்கியமாக, உயரமாக நின்றிருந்த ரமேஷைப் பார்த்ததும் அவர் கண்கள் வியப்பால் விரிந்தன.

அதிர்ச்சி அடைந்தவர் போல் "நீயா!" என்றார்.

ரமேஷ் எதுவும் சொல்லவில்லை. கட்டில்மீது ஒட்டிப்போன கன்னங்கள்... நரைத்துப் போன தலைமுடி... எலும்புகூடாக காட்சி அளித்த அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். அவரைப் பார்த்து ரொம்ப நாட்களாகி விட்டன. 'அந்த அதிகாரம் ஹேமா எல்லாம் எங்கே' என்று வியப்பு அடைந்து கொண்டிருந்தான்.

"இங்கே எதற்காக வந்தாய்?" இரட்டிப்பது போல் கேட்டார்.

ரமேஷ் முகத்தில் பலவிதமான உணர்ச்சிகள் தோன்றி மறைந்தன. வேகமாக துடித்துக் கொண்டிருந்த இதயத்தை கட்டுப்படுத்த நினைப்பவன்போல் மார்பை கையால் அழுத்திக்கொண்டான்.

"இங்கே எதற்காக வந்தாய்? இந்த வீட்டில் உனக்கு என்ன வேலை?" அதட்டுவது போல் கேட்டார். உடல் இளைத்திருந்தாலும் குரல் மட்டும் சிம்ம கர்ஜனையாக ஒலித்தது.

"உங்களை பார்க்க வேண்டுமென்று வந்தேன்." ரமேஷின் குரல் வித்தியாசமாக ஒலித்தது.

"என்னை பார்ப்பதற்கா! கோடீஸ்வரனாக இருந்த நாகபூஷணம் பிச்சைக்காரன் போல் எப்படி வாழ்கிறான் என்று பார்க்க வந்தாயா?"

"நீங்க செய்த பாபங்களுக்கு இந்த தண்டனை அதிகம் என்று நினைக்கிறீங்களா?"

"வாயை மூடு. நான் யாருக்கும் எந்த அநியாயமும் செய்யவில்லை. உன்னைப் போல் குடும்பங்களை நாசமாக்கவில்லை."

"ஆனால் சிலருடைய வாழ்க்கையை கொள்ளையடித்தீர்கள். வாழ்க்கை முழுவதும் கண்ணீருடன் கழிக்கும் விதமாக செய்தீர்கள்."

"வார்த்தைகளை அளந்து பேசு". உரத்த குரலில் கத்தினார்.

"யாருக்கு செய்தாலும் செய்யாவிட்டாலும் நீங்க எனக்கு அநியாயம் செய்தீர்கள்." அவன் குரல் மென்மையாய், கம்பீரமாக ஒலித்தது.

"நானா? உனக்கா! அநியாயம் செய்தேனா? உனக்கு மூளை கலங்கிவிட்டதா என்ன?"

"ஆமாம். கிட்டத்தட்ட அந்த நிலைதான் ஏற்பட்டது."

"நான் உனக்கு அநியாயம் செய்தேனா? திருட்டு ராஸ்கெல்! அப்பாவியான மாதுரியை வலையில் போட்டுக்கொண்டு எங்களை சர்வ நாசமாக்கிவிட்டாய். எங்களுக்கு நிற்க நிழல்கூட இல்லாமல் செய்து விட்டாய். என் மகன் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நினைத்த பெண்ணைத் தூக்கிக் கொண்டு போய் அவன் வாழ்க்கையை குலைத்துவிட்டாய். உனக்கு சரியான பாடம் கற்பிக்காமல் விட்டது தவறுதான். உன்னை இன்னும் உயிரோடு இருக்க அனுமதித்தது அநியாயம்தான். என்னுடைய உடலில் சக்தி வற்றிவிட்டது. அதான் இன்று என் முன்னால் இப்படி உயிரோடு வந்து நிற்கிறாய். அன்றே உன்னை ஒழித்துக் கட்டியிருந்தால் இன்று எங்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டு இருக்காது."

ரமேஷின் முகம் கன்றிவிட்டது. அதுவரை அவனைப் பிடித்து வைத்திருந்த தயக்கங்கள் படீரென்று அறுந்துவிட்டன.

"நீங்கள் மற்றவர்களுக்கு இழைத்த தீங்குகளின் முன்னால் இது எந்த மூலை? பணம் போனால் மறுபடியும் சம்பாதித்துக் கொள்ளலாம். ஆனால் இரண்டு பேரின் வாழ்க்கையை பலியாக்கி விட்டீர்கள்".

"என்ன உளறுகிறாய்? ஒரு தடவை இல்லை. ஆயிரம் தடவை சொல்வேன். நான் யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யவில்லை."

"நிச்சயமாக தீங்கு இழைத்தீர்கள்!" ரமேஷால் ஆவேசத்தை கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. குறைந்தபட்சம் எனக்கு தெரிந்த ஒரு நபருக்கு நீங்கள் தீங்கு செய்து இருக்கிறீர்கள்."

"யாரந்த நபர்?" உரத்த குரலில் கேட்டார்.

"என்னுடைய தாய்!" பற்களை இறுக கடித்துக்கொண்டே சொன்னான்.

"உன்னுடைய அம்மாவுக்கா? நானா?"

"ஆமாம். இல்லை என்று உங்களால் மறுக்க முடியாது. பொய் என்று தள்ளிவிட முடியாது. என்னிடம் சாட்சியம் இருக்கிறது."

"சாட்சியமா?" அவர் முகம் வெளிறிப்போய் விட்டது.

"ஆமாம். இதோ..... இதைப் பாருங்கள்." ரமேஷ் நடுங்கிக் கொண்டிருக்கும் கரங்களால் சட்டைப் பையிலிருந்து பர்ஸை எடுத்து அதிலிருந்து பழைய கடிதம் ஒன்றை எடுத்தான்.

"என்னது? என்ன இருக்கு அதில்?"

"நீங்க என்னுடைய அம்மாவுக்கு எழுதிய கடிதம்."

"ஷட்டப்! ஒரு நாளும் எந்தப் பெண்ணுக்கும் நான் கடிதம் எழுதியது இல்லை."

"நான் படித்துக் காண்பிக்கட்டுமா?"

"படியேன். எனக்கென்ன பயம்?" துணிச்சலுடன் சொன்னார்.

ரமேஷ் படிக்க ஆரம்பித்தான். " ஜானாவுக்கு—"

"ஜானாவா! அது யாரு?"

"முழுவதுமாக கேளுங்கள். உங்களுக்கே நினைவு வரும்." மேலும் படிக்கத் தொடங்கினான்.

ஜானாவுக்கு,

நீ எழுதிய கடிதம் கிடைத்தது. விஷயத்தை தெரிந்து கொண்டேன். நீ எழுதியதுபோல் நடந்துகொள்வது என்பது நடவாத காரியம். நீ கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டு இருக்கிறாய். கருவுற்று இருக்கும் உன்னை வேறு ஊருக்கு அழைத்துச் சென்று யாருக்கும் தெரியாமல் பிரசவம் ஆகும் வரையில் காப்பாற்ற வேண்டுமா? பிறகு தந்தை என்ற முறையில் அந்தக் குழந்தையின் பொறுப்பை நான் ஏற்க வேண்டுமா? இது நடக்கக் கூடிய காரியம்தானா? விதவையாக

இருக்கும் நீ குழந்தையை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைப்பது சரி இல்லை. எனக்கு நீதான் வேண்டுமே தவிர உன் மூலமாக குழந்தைகள் இருப்பதை நான் விரும்பவில்லை. தாலி கட்டிய மனைவியின் மூலமாகத்தான் வாரிசு வளர வேண்டுமே தவிர வைப்பாட்டியின் மூலமாக அல்ல. குழந்தை குட்டி என்று தேவையற்ற பந்தங்களை வளர்த்துக் கொள்ளாதே. பைத்தியக்காரத்தனமான எண்ணங்களை விட்டுவிட்டு அந்த இடைஞ்சலை அகற்றிவிடு. புத்திசாலியாக இருந்தால் நான் சொன்னது போல் செய்து இந்த பிரச்னையிலிருந்து விடுபடு. அதற்கு சம்மதிக்கவில்லை என்றால் இத்துடன் நம் உறவு முடிந்து விட்டதாக நினைத்துக்கொள். நான் உன்னுடன் குடித்தனம் செய்தேன் என்பதற்கு உன்னிடம் எந்த ஆதாரமும் இல்லை. இந்தக் கடிதத்தை யாரிடமாவது காட்டி ரகளை செய்ய நினைத்தாயோ உன்னுடன் சேர்ந்து அவர்களுக்கும் சமாதி கட்ட என்னால் முடியும். உனக்கு நான் வேண்டுமோ இல்லை இன்னும் கண்ணைக்கூட திறக்காத அந்தக் குழந்தை வேண்டுமா முடிவு செய்துகொள். அடுத்த மாதம் பத்ராசலம் வருகிறேன். நீ அந்த இடத்திற்கு வந்தால் அதுவே உன் சமாதானமாக எடுத்துக்கொள்வேன்.

இப்படிக்கு

நாகபூஷணம்.

ரமேஷ் படித்து முடித்தான். அவன் நெற்றியில் வியர்வை அரும்பியிருந்தது.

கட்டில்மீது நாகபூஷணம் கற்சிலையாக அமர்ந்திருந்தார்.

"இப்போ சொல்லுங்கள். ஜானகி யாரோ இன்னும் உங்களுக்கு நினைவு வரவில்லையா?"

"இது— இந்தக் கடிதம் உன் கைக்கு எப்படி வந்தது?"

"அதுவாக என்னைத்தேடிக் கொண்டு வந்தது. என் பிறப்பின் ரகசியம் குற்றுயிருடன் இந்த கிழிந்து போன கடிதத்தின் உருவில் எனக்காக காத்துக்கொண்டு இருக்கிறதென்று எனக்குத் தெரியாது.

என் அம்மாவுக்கு ஆதரவு கொடுத்த முஸ்லிம் பெரியவரின் மனைவி பேகம் என்பவள் இறந்து போவதற்கு சில நாட்களுக்குமுன் இதை என்னிடம் கொடுத்தாள். அவளுக்கு இந்த விஷயம் முன்பே தெரியும். நான் அவளுடைய கணவன் மூலமாக பிறந்த குழந்தைதான் என்ற பிரமையில் என்னை வேண்டுமென்றே வைத்ததாக அவள் சொன்னாள். ஏன் என்றால் அவர்களை என் சொந்தக்காரர்கள் என்று நினைத்து பெற்ற மகனைவிட அதிகமாக அந்த குடும்பத்திற்கு உழைத்து வந்தேன். இந்த விஷயம் தெரிந்தால் நான் மனம் மாறி அவர்களை விட்டு பிரிந்து போய்விடுவேனோ என்று பயந்து விட்டாளாம்."

"அப்படி என்றால்... நீ... நீ..." வார்த்தைகளை முடிக்க முடியாதவர் போல் நின்றுவிட்டார்.

"ஆமாம். நீங்க நிர்தாட்சியண்யமாக கொலை செய்யச் சொல்லி ஆணையிட்ட அந்தக் குழந்தை நான்தான்."

"நீ... நீ ஜானாவின் மகனா!" அவர் திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

"ஆமாம்... ஜானாவின் மகன்தான். உங்களுடைய பாவத்தின் அடையாளம். நீங்க வாழ்ந்த ரகசிய வாழ்க்கையின் மறுஉருவம்."

ரமேஷ் முகத்தில் ரத்தம் வேகமாக பாய்ந்தது. நெற்றியில் அரும்பியிருந்த வியர்வையை துடைத்துக் கொண்டே சொன்னான். "இந்த கடிதத்தை இதுவரையில் ஆயிரம் தடவைக்கு மேல் படித்து விட்டேன். என்னுடைய அம்மா உண்மையிலேயே ஒரு மூட்டாள் தான். நீங்க சொன்னதுபோல் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். எனக்கும் இந்த பயங்கரமான வாழ்க்கை இருந்திருக்காது. ஆனால் பெண்களுக்கு குழந்தையிடம் இருக்கும் இயற்கையான பாசத்தினால் உங்களுடைய யோசனையை மறுத்துவிட்டாள். இந்த உலகிற்கு என்னை கொண்டு வந்தாள். சின்ன வயதில் எத்தனை பயங்கரமான தனிமையை அனுபவித்திருக்கிறேன் தெரியுமா? எனக்கென்று யாருமே ஏன் இல்லை என்று பலமுறை அழுதிருக்கிறேன். என்னுடைய அம்மா நடத்தை கெட்டவள் என்று எல்லோரும் சொல்லிக்காட்டும்போது எவ்வளவு வருத்தப்பட்டிருக்கேன்

தெரியுமா? இதற்கெல்லாம் காரணம் நீங்கதான். இந்த உலகில் உங்களைப் போன்ற காமாந்தகாரர்கள் இருக்கும் வரையில் என்னைப் போன்ற அனாதைகள் ஆயிரக்கணக்கில் பிறந்து கொண்டுதான் இருப்பார்கள். எந்தப் பாவமும் அறியாத அந்தக் குழந்தைகளை வெறுத்து ஒதுக்குவதுதான் இந்த சமுதாயத்திற்குத் தெரியும். உங்களைப் போன்ற பசுந்தோல் போர்த்திய புலிகளை தண்டிக்க அதுக்கு தெரியாது. நாங்கள் என்ன பாவம் செய்தோம்? இந்த உலகில் ஒவ்வொரு குழந்தையும் பிறப்பது போலவே நாங்களும் பிறந்திருக்கிறோம். பெற்றோர்களின் அன்பும், ஆதரவும் எங்களுக்கு ஏன் கிடைக்கக்கூடாது? நாங்கள் செய்த தவறுதான் என்ன? எங்களை ஏன் இழிவாக, புழுக்களைவிட கேவலமாக மதிக்கிறீர்கள்?' இது என்னுடைய குழந்தை என்று சொல்லிக் கொள்வதை பெற்றவள் தலைகுனிவாக நினைப்பானேன்? எங்களை பெற்றெடுப்பதைவிட செத்துப் போவது நல்லது என்று ஏன் நினைக்க வேண்டும்? பிறந்த குழந்தையை கொன்று குப்பைத் தொட்டியில் போடுவானேன்?

"சமுதாயத்தில் மதிப்பாக இருப்பதற்காக படிதாண்டாத மனைவியும், குழந்தைகளும் இருக்க வேண்டும். சொந்த விருப்பு வெறுப்புகளை தீர்த்து வைக்க வைப்பாட்டியும் வேண்டும். உங்களைப் போன்ற அரக்கர்கள் இருக்கும்வரை சமுதாயத்தில் புல்லுருவிகளைபோல் நாங்கள் வளர்ந்து கொண்டுதான் இருப்போம். இதற்கெல்லாம் காரணம் ஒன்றுதான். உங்களைப் போன்ற பெரிய மனிதர்களுக்கு ஒழுங்காக வாழ வேண்டும் என்ற நியமமோ, கட்டுப்பாடுகளோ எதுவும் கிடையாது. ஸ்ரீராமரை போல் பத்து பேருக்கு முன்னால் நடிப்பீர்கள். திரைமறைவில் ராவணனைவிட கீழ்தரமாக நடந்து கொள்வீர்கள்."

நாகபூஷணம் கட்டில்மீது ஒரு மூலையில் மழையில் நனைந்த பூனையை போல் பயந்துபோய் முடங்கி இருந்தார்.

ஆவேசத்துடன், கோபத்துடன், அஜானுபாகுவாய் நின்றிருந்த ரமேஷ் அவருடைய கண்களுக்கு சிறுத்தை புலியை போல் தென்பட்டான். எத்தனையோ வருடங்களாக தான் செய்து வந்த தவறுகள் எல்லாம் ஒன்றாக சேர்ந்து உயிர் பெற்று, அவனுடைய உருவத்தில்

வந்து தட்டிக் கேட்பதுபோல் இருந்தது.

சுதாகர் இல்லாத நேரமாக வந்திருக்கிறான். ஏதாவது தீங்கு செய்து விடுவானோ? முதுகுத் தண்டில் தொடங்கிய நடுக்கம் உடல் முழுவதும் பரவியது. தெளிவற்ற குரலில் தீனமாக சொன்னார்.

"இப்போ என்னிடம் எதற்காக வந்தாய்? என்னை ப்ளாக் மெயில் செய்வதற்கா? என்னிடம் பணம் எதுவும் இல்லை. இருப்பதை யெல்லாம் நீ முன்னாடியே கொள்ளையடித்து விட்டாயே?"

ரமேஷ் சோர்வடைந்துவிட்டவன் போல் பார்த்தான். "பணமா! யாருக்கு வேண்டும் பணம்?"

"பின்னெ என்ன வேண்டும்?"

"சுதாகரிடம் என்னைப் பற்றி சொல்ல வேண்டும். நான் யாரென்று அவனுக்குத் தெரியவேண்டும். அதைத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு உங்களுடையது."

நாகபூணத்தின் குழிவிழுந்த கண்களில் வெறுப்பு பளிச்சென்று தெரிந்தது.

"ச்சீ.... ச்சீ... உன்னைப் பற்றியா? என் உடம்பில் உயிர் இருக்கும் வரை அது நடக்காது".

"நடக்கும். நடந்தாக வேண்டும்." ரமேஷ் அவருடைய கட்டில் அருகில் வந்தான்.

அவர் மிரண்டுவிட்டார்.

"சொல்ல மாட்டேன் என்றால் என்ன செய்வாய்? கொன்று விடுவாயா? உன் போக்கை பார்த்தால் ஏதோ திட்டத்துடன்தான் வந்திருக்கிறாய் என்று தோன்றுகிறது."

திடீரென்று முதுகில் கத்தி குத்து வாங்கியவன் போல் ரமேஷ் பார்த்தான்.

நாகபூஷணத்தின் முகத்தில் வெறுப்பும், எரிச்சலும் போட்டி யிட்டன. "ச்சீ... ச்சீ... உன் முகத்தை பார்க்கவே எனக்கு பிடிக்க வில்லை. போய்விடு. உடனே இந்த இடத்தைவிட்டு போய்விடு."

ரமேஷ் வாயடைத்துப் போனவன் போல் நின்றிருந்தான்.

"பாண்டு... பாண்டு!" குரலை உயர்த்தி கத்தினார்.

"பாண்டு இல்லை. கடைத்தெருவுக்கு போயிருக்கிறான். இப்போதைக்கு வரமாட்டான்."

அவர் கண்களில் பயம் தெளிவாக தெரிந்தது.

"அப்படியானால்... நீ... நீ என்னை கொலை செய்யத்தான் வந்திருக்கிறாய். சுதா... சுதா... உடனே வா...."

ரமேஷ் பார்த்துக்கொண்டிருக்கும் போதே கைகால்களை உதைத்துக் கொண்டு கீழே விழுந்துவிட்டார்.

"சுதா! என் அருகில் வா. கடைசியாக உன்னை ஒருமுறை பார்த்துக் கொள்கிறேன். என் உயிர் போயிவிடப் போகிறது. சுதா! சுதா!" தீனமாக கத்திக் கொண்டிருந்தார். வாயிலிருந்து நுரைத் தள்ளி பேச்சு தெளிவில்லாமல் ஒலித்தது.

ரமேஷ் சட்டென்று அருகில் சென்று அவரை பிடித்துக் கொண் டான். ரொம்ப பதட்டமாக உணர்ந்தான். அவருடைய உயிர் போய் விடுமோ என்று பயந்தான்.

அதற்குள் பாண்டு வந்துவிட்டான். அவருடைய கத்தல்கள் வாசல்வரை கேட்டுக் கொண்டிருந்தன.

"என்ன சார்? மறுபடியும் அவருக்கு ஃபிட்ஸ் வந்துவிட்டதா?" கேட்டுக்கொண்டே உள்ளே ஓடி வந்தான்.

"கொஞ்சம் இவரை பார்த்துக்கொள். நான் டாக்டருக்கு போன் செய்கிறேன்." பதட்டத்துடன் சொன்னான் ரமேஷ்.

"டாக்டரை அழைக்க வேண்டிய அவசியம் இல்லை சார்." பாண்டு அலமாரியிலிருந்து மருந்து எடுத்து வந்து மூடியைத் தறிந்து அவருடைய மூக்கின் அருகில் அழுத்தி பிடித்துக்கொண்டான்.

சற்று நேரம் கழித்து அவருடைய கத்தல்கள், அழுகை எல்லாமே குறைந்துவிட்டன. கைகால்கள் உதைத்துக் கொள்வதும் நின்று விட்டது.

"அரைமணி நேரம் போனால் சாதாரண நிலைக்கு திரும்பி விடுவார்". இது வழக்கமாக வரும் உடம்புதான் என்பதுபோல் பாண்டு சொன்னான்.

ரமேஷ் கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக்

கொண்டே முன் அறையில் வந்து அமர்ந்து கொண்டான் பாண்டு காபியை கொண்டு வந்தான்.

"தாங்க்ஸ்." தன்னையும் அறியாமல் சொன்னான் ரமேஷ். பாண்டு மீதி சில்லரையை கொடுக்கப் போனான்.

"உன்னிடமே வைத்துக்கொள்" என்றான் ரமேஷ். பத்து நிமிடங்கள் கழித்து இனி பரவாயில்லை என்று பாண்டு சொன்ன பிறகு ரமேஷ் அங்கிருந்து கிளம்பினான்.

"சுதாகர் அய்யா வந்தால் யார் வந்தாங்கன்னு சொல்லட்டும் சார்."

"ரமேஷ் என்று சொல்லு."

68

ரமேஷ் காரை நோக்கி வேகமாக நடந்தான். கார் அருகில் சென்றவன் ஒரு நிமிடம் அப்படியே நின்றுவிட்டான்.

பிறகு மெதுவாக கார் கதவைத் திறந்து உட்கார்ந்து ஸ்டார்ட் செய்தான். கண்பார்வை மங்கலாக இருப்பது போல் அடிக்கடி கண்களை கசக்கிக் கொண்டிருந்தான். அவன் எத்தனையோ எதிர்பார்ப்புடன் காத்திருந்த அந்த நிமிடம் வந்து போய்விட்டது. அவன் ஊகித்தது போல் நாகபூஷணம் விஷயம் தெரிந்தவுடன் "நீயா!" என்று அவளை அணைத்துக் கொள்ளவில்லை. தலைமீது கையை வைத்து அன்புடன் வருடிக் கொடுக்கவும் இல்லை. அவருடைய அணைப்பில் கரைந்துபோய் அவர் மடியில் தலையை வைத்துக் கொண்டு இத்தனை நாட்களாய் தான் அனுபவித்து வந்த வேதனையை தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற விருப்பம் காணல் நீராகிவிட்டது.

ரமேஷின் இதயத்தில் காடுகள் எரிந்து கொண்டிருந்தன. அந்த ஜ்வாலைகளுக்கு நடுவில் சிக்கிக்கொண்ட புள்ளிமானை போல் அவன் மனம் இருந்தது.

ரமேஷ் காரைவிட்டு இறங்கி வீட்டிற்குள் காலடி எடுத்து வைக்கும்போது அவனுக்காக காத்திருந்த செகரெட்ரி எதிரில் வந்தான்.

"சார்! நாளைக்கு நீங்க பூனா மீட்டிங்கிற்கு எடுத்துப்போக வேண்டிய பைலை மறந்துவிட்டீர்கள். இந்தாங்க" என்று சொல்லிக் கொண்டே பைலை கொடுத்தான்.

"ஓ... ஐயாம் சாரி. தாங்க்ஸ்." ரமேஷ் சொன்னான்.

காலையில் பூனாவுக்குப் போக வேண்டிய பயணம் நினைவுக்கு வந்தது. போகாமால் இருப்பதற்கோ, தாமதப்படுத்துவதற்கோ முடியாத பணம் அது. தாங்கமுடியாத சோர்வும், எரிச்சலும் அவனை ஆட்கொண்டன. விடியற்காலையில் சரியாக நான்கு மணிக்கு எழுந்து கிளம்பினால்தான் நேரத்திற்குள் அங்கே போயச் சேர முடியும். செகரெட்ரி கொடுத்த பேப்பர்களில் அவசர அவசரமாக கையெழுத்து போட்டவன் திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவனை போல் போன் அருகில் சென்று டயல் செய்து மறுநாள் காலையில் நான்கு மணிக்கு 'வேக்அப்' கால்க்கு சொல்லி விட்டு ரிசிவரை வைத்தான்.

அவன் குளித்து முடித்து உணவுமேஜை அருகில் வந்தபோது சமையல்காரன் ஒரே ஒரு தட்டை வைத்து பரிமாறிக் கொண்டிருந்தான்.

"அம்மா சாப்பிட்டாங்களா?" உட்கார்ந்து கொண்டே கேட்டான்.

"இல்லை. உடம்பு சரியாக இல்லையாம். சாப்பாடு வேண்டாம் என்று சொன்னாங்க."

"கருணா தூங்கிவிட்டாளா?"

சமையல்காரன் தலையை அசைத்தான்.

ரமேஷ் பெருமூச்சுவிட்டான். அந்த நிமிடம் அவனுக்கு ஹேமா மீது ரொம்ப கோபம் வந்தது.

சமீபகாலமாக ஹேமா ரொம்ப மாறிவிட்டாள். இதற்கு முன்பாக இருந்தால் இரவு எத்தனை நேரமானலும் சரி எதிரில் உட்கார்ந்து பேசிக்கொண்டே பரிமாறுவாள். இப்போ அந்தப் பழக்கமே போய் விட்டது. வீட்டில் வந்தால் கண்ணில்கூடி படமாட்டாள். எந்த அறையிலேயோ எந்த மூலையிலேயோ இருப்பாள். ஹேமாவிடம் ஏற்பட்ட இந்த மாற்றத்திற்கு காரணம் என்னவென்று எத்தனை

யோசித்தாலும் அவனுக்குப் புரியவில்லை.

அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது ஹேமா அங்கே வந்தாள்.

ரமேஷ் பார்க்காததுபோல் தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

ஹேமாவும் அவன் பக்கம் நேராக பார்க்கவில்லை.

"ரமேஷ்! நான் நாளை ஊருக்கு போகப்போகிறேன்" என்றாள்.

"எந்த ஊருக்கு?" தலையை உயர்த்தாமலேயே கேட்டான்.

"வேறு எந்த ஊர் இருக்கிறது எனக்கு? திருக்காட்டுப்பள்ளி."

ரமேஷ் ஒரு நிமிடம் பேசவில்லை. கிண்ணத்திலிருந்து சாம்பாரை ரொம்ப கவனமாக பரிமாறிக் கொண்டிருந்தான்.

"நாளை காலையில் போகிறேன்." தலையை உயர்த்தி எங்கேயோ பார்த்துக்கொண்டே சொன்னாள்.

"ஒரு தடவை அங்கே போனால் மறுபடியும் இங்கே வர வேண்டிய அவசியம் இருக்காது என்று சொல்லியிருந்தேன். நினைவு இல்லையா? அதிலும் உடல்நிலை சரியாக இல்லாதவள் ஊருக்கு எப்படி போகப்போகிறாய்?"

ஹேமா பதில் சொல்லவில்லை. ஒரு நிமிடம் ஏதோ யோசிப்பது போல் கைவிரல்களை பார்த்துக்கொண்டே நின்றாள். வெளிறிப் போனது போல் தென்பட்ட அந்த முகத்தில் பல உணர்வுகள் ஒன்றாகக் கலந்து தென்பட்டன. ரமேஷ் பக்கம் திரும்பி தீவிரமாக ஏதோ சொல்வதற்காக வாயைத் திறக்கப் போனாள். ஆனால் உடனே அந்த முயற்சியிலிருந்து பின்வாங்கி விட்டதுபோல் இதழ்களை மூடிக்கொண்டாள்.

"இவ்வளவு அர்ஜென்டாக ஊருக்குக் கிளம்ப வேண்டும் என்று நினைக்கும் அளவுக்கு அவரசமான வேலை என்ன வந்துவிட்டது?"

"நான் போன பிறகு உனக்கே புரியும்."

"அதுவரையில் நான் சன்பென்ஸில் தவிக்க வேண்டும் என்ற எண்ணமா?" எகத்தாளமாய் சொன்னான்.

ஹேமா சரெலென்று பின்னால் திரும்பி அந்த இடத்தைவிட்டு போய்விட்டாள்.

ரமேஷின் கோபம் இருமடங்காகிவிட்டது. ஏற்கனவே பிடிக்காமல் சாப்பிட உட்கார்ந்தவனுக்கு உணவு கசப்பதுபோல் தோன்றியது. தட்டிலேயே கையை அலம்பிக் கொண்டு எழுந்தான்.

மாடியில் தன்னுடைய அறைக்கு போனவன் துணிமணிகளை எடுத்து சூட்கேஸில் வைத்துக்கொண்டான். திடீரென்று அவனுக்கு ஹேமாவையும் தன்னுடன் அழைத்துச் சென்றால் என்ன என்று தோன்றியது. இரண்டு அறைகளுக்கு நடுவில் இருந்த கதவைத் தள்ளி பார்த்தான். அந்தப் பக்கமாக தாழ் போடப்பட்டிருந்தது.

வாசல் வழியாக சென்று ஹேமாவின் அறைக்குள் வந்தான். ஹேமா ஜன்னல் கதவில் சாய்ந்து கொண்டு இந்த உலகத்தின் நினைவே இல்லாததுபோல் சூனியத்தை பார்த்துக் கொண்டிருந்தாள். ஏதோ இழந்துவிட்டது போல் பரிதாபமாக நின்று கொண்டிருந்த ஹேமாவை பார்க்கும்போது அவனுடைய இதயத்தில் சுருக்கென்று தைத்தது. என்ன குறை வைத்துவிட்டேன் என்று இந்த பரிதாபத் தோற்றம்?

"ஹேமா!" மென்மையாக விளித்தான். ஹேமா திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள். ரமேஷைப் பார்த்ததும் விறைப்பாக நின்றாள்.

"நாளை காலையில் நான் பூனாவுக்கு போகிறேன். நீயும் என்னுடன் வாயேன்."

"நான் வரமாட்டேன்."

"ஏன்?"

"திருக்காட்டுப்பள்ளிக்கு போகிறேன் என்று சற்றுமுன் சொல்லியிருந்தேனே."

"போகக்கூடாது என்று நானும் சொன்னேனே."

"உன்னால் என்னை தடுத்து நிறுத்த முடியாது."

ரமேஷ் இரண்டடி முன்னால் வைத்தான்.

"ஏன் இந்த பிடிவாதம்? நான் வேண்டாமென்று சொன்ன காரியத்தை செய்துதான் ஆக வேண்டும் என்று கங்கணம் கட்டிக்

கொண்டு இருக்கிறாயா?"

"ஊஹூம். நீ சொல்வதற்கெல்லாம் தலையை ஆட்டிக்கொண்டு இருப்பதுதான் என்னுடைய வேலை. அதுதான் என்னால் முடிய வில்லை. இது உன் வீடு. உன் வீட்டில் இருந்துகொண்டு உன் விருப் பத்திற்கு மாறாக நடந்து கொள்வது சரி இல்லை. அதான் கிளம்பிப் போகிறேன். இன்று அண்ணா வீட்டுக்கு போகக்கூடாது என்று ஆணையிடுவாய். நாளை வாசற்படியைத் தாண்டக்கூடாது என்று சட்டம் போடுவாய். உன் பார்வையில் நான் ஒரு விளையாட்டு பொருளாகிவிட்டேன். எது செய்தாலும் தகும் என்ற மமதையில் இருக்கிறாய். மனைவி என்றால் வீட்டை காவல் காக்கும் நாய்க்கு சமம் என்று நினைக்கும் ஆண்களில் நீயும் ஒருவனாகிவிட்டாய். நாம் இருவரும் ஒற்றுமையாக குடும்பம் நடத்தியதாகவே எனக்கு நினைவு இல்லை. திருமணம் ஆனது முதல் நம் இருவர் நம்பிக்கைகள், வாழ்க்கை பற்றிய மதிப்பீடுகள் எதிர் மறையாய் இருந்து வந்தன. ஆனாலும் சமாதானமாக போக முயற்சி செய்தேன். எதற்காக தெரியுமா? கருணாவுக்காக! ஆனால் நான் சமாதானமாக போகப் போக உனக்கு இளக்காரமாகிவிட்டேன். நான் திருக்காட்டுப் பள்ளிக்கு போனால் மறுபடியும் இங்கே வரமுடியாது என்று நீ சொன்னது எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. அப்படி சொன்னது ஏன் என்றும் எனக்கு நன்றாக புரிந்துவிட்டது. நான்.... நான் மறுபடியும் இங்கே வருவதாக இல்லை".

ரமேஷ் சட்டென்று அருகில் சென்று ஹேமாவின் கையைப் பற்றிக்கொண்டான்.

"உனக்கு மூளை கலங்கிவிட்டதா என்ன?"

ஹேமா ஒரே உதறலுடன் அவன் கையை விடுவித்துக் கொண்டாள். ஹேமாவின் கண்களில் அப்பட்டமாக தென்பட்டுக் கொண்டிருந்த வெறுப்பைக் கண்டு ரமேஷ் வியப்படைந்தவனாக ஒரடி பின்வாங்கினான்.

ஹேமா ரோஷத்துடன் சொன்னாள். "உடன் பிறந்தவர்களின் பிரிவு எப்படி இருக்கும் என்று உனக்கு எப்படி தெரியும்? உயிர் சினேகிதியை இழக்கும்போது ஏற்படும் வேதனை எப்படி இருக்கும் என்று சொன்னாலும் உனக்கு புரியாது. அனாதையாக வளர்ந்த உனக்கு சொந்த மனிதர்களின் அன்பு, அபிமானம் பற்றி எதுவும் தெரியாது. அது உன்னுடைய தவறு இல்லை. உன்னுடைய பிறப்பு அப்படி. உன் இரத்தத்தில் இருக்கும்...."

"வாயை மூடு!!" ரமேஷ் கத்திவிட்டான். ஹேமாவின் கன்னத்தில் பளாரென்று அறை விழுந்தது.

ஹேமா கன்னத்தை பிடித்துக்கொண்டு, வாயிலிருந்து வார்த்தை வராதவள்போல் கண்களை அகலவிரித்து பார்த்துக் கொண்டிருந் தாள்.

"ஆமாம். நீ சொல்வது உண்மைதான். எனக்கென்று யாரும் இல்லை. உண்மையான அன்பு, பாசம் எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியாது. அதெல்லாம் உன்னிடம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் நீகூட என்னை ஏமாற்றிவிட்டாய். மற்றவர் களைபோல் உன் சுயநலத்திற்காக என்ன பயன்படுத்திக் கொண்டாய். நீ என்னை திருமணம் செய்துகொண்டது என்மீது இருக்கும் காதலி னால் அல்ல. உன் அண்ணன் கடனாளி ஆகாமல் இருக்க வேண்டும் என்பதற்காக. அன்று அந்த உண்மையை புரிந்து கொள்ள முடியாத முட்டாளாக இருந்துவிட்டேன். உன் அண்ணனின் நலனை விரும்பி என்னைக் காதலிப்பதுபோல் நடித்தாய். என்னை வற்புறுத்தி திருமணத்திற்கு சம்மதிக்க வைத்தாய். ஆனால் திருமணம் ஆன பிறகு நான் உனக்கு என்ன குறை வைத்தேன் சொல்லு. ராணியைபோல் உன்னைப் பார்த்துக் கொண்டேன். ஐஸ்வரியத்தை சம்பாதித்துக் கொடுத்தேன். உன்ன ஸ்டேட்டஸை உயர்த்தினேன். இதைவிட ஒரு ஆண்மகன் மனைவிக்கு செய்யக் கூடியது வேறு என்ன இருக்க முடியும்?" ரமேஷ் ஹேமாவின் கையை பற்றி வேகமாக இழுத்தான் "பேசு. வாயைத் திறந்து பதில் சொல்லு" இரட்டிப்பதுபோல் கேட்டான்.

"ரமேஷ்! இனி நாம் பேசிக்கொள்ளவேண்டியது எதுவும் இல்லை. எல்லாம் முடிந்துபோய்விட்டது. இனி போதும். விடு என்னை." பொங்கி வந்த அழுகையை அடக்கிக்கொண்டே ஹேமா ரமேஷின் பிடியிலிருந்து தன்னுடைய கையை விடுவித்துக் கொள்ள முயன்றாள். ஆனால் ரமேஷ் விடவில்லை. மேலும் அருகில் இழுத்துக் கொண்டான்.

"நான் உனக்கு என்ன குறை வைத்தேன் என்று கேட்டால் வாயைத் திறக்க மறுப்பானேன்? திருக்காட்டுப்பள்ளிக்கு போய் வந்ததிலிருந்து உன்போக்கை கவனித்துக்கொண்டு தான் வருகிறேன். ரொம்பவும் மாறிவிட்டாய். ஊரிலிருந்து வந்ததுமே அறையிலிருந்த கட்டில்களை அப்புறப்படுத்திவிட்டாய். என்னுடைய தொடுகையே பிடிக்காததுபோல் நடந்து கொள்கிறாய். இத்தனை நாட்களாக இல்லாமல் இன்று திடீரென்று என் பிறப்பு உனக்கு நினைவு வந்து விட்டதா? அதிலும் இத்தனை வருடங்கள் குடித்தனம் செய்த பிறகு. ஆமாம் உன்னுடைய பிடிவாதத்தை சகித்துக்கொண்டது என்னுடைய இயலாமைதான். மனைவி அருகில் இருந்தும் மூன்று மாதங்களுக்கு மேலாக பிரம்மசாரியாக இருப்பது என்னுடைய முட்டாள் தனம்தான். உன்னைப் போன்றவர்களை வாயைத் திறக்க அனுமதிக்கக் கூடாது. அரக்கத்தனமாக அடக்கி வைத்திருக்க வேண்டும். இன்றிலிருந்து நீ என்னுடைய விளையாட்டு பொம்மைதான். என் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றாற்போல் நீ நடக்கத்தான் வேண்டும். என் விருப்பம் இல்லாமல் திருக்காட்டுப்பள்ளி என்ன இந்த அறையின் வாசற்படியை கூடத் தாண்ட முடியாது." ரமேஷ் ஹேமாவை மேலும் அருகில் இழுத்துக்கொண்டான்.

"ரமேஷ்! வீடு என்னை. ஹேமா தீவிரமாக முயற்சி செய்ய செய்ய அவன் பிடி மேலும் இருகியது.

"உன்னைத்தான் ரமேஷ்! விடு என்னை "ச்சி... ச்சி. உனக்கு வெட்கமாக இல்லையா?"

"வெட்கமா! மனைவியை நெருங்குவதற்கு கணவன் வெட்கப்படுவானேன்? அதிலும் நீண்டகால பிரிவுக்குப் பிறகு! "ரமேஷ் கைகள் ஹேமாவை சிறைப்படுத்தி மார்போடு அழுத்திக் கொண்டன். அவன் இதயத்தில் அக்னிக்குழம்பாய் கொதித்துக் கொண்டிருந்த பகையும், கோபமும் அவனுள் உறங்கி கொண்டிருந்த உணர்வுகளை தூண்டி விட்டன. மனமும், உடலும் அவன் வசத்தில் இருக்க வில்லை

ஹேமாவை ஒரு கையால் சிறைப்படுத்தியவன் குனிந்து இரண்டாவது கையை நீட்டி ஸ்விச்சை அழுத்தினான். அறையில் எரிந்து கொண்டிருந்த மேஜை விளக்கு அணைந்துவிட்டது. திடீரென்று அறையினுள் பரவிய அடர்த்தியான இருள் தன்னை விழுங்க வந்த பிசாசுபோல் ஹேமாவுக்கு தோன்றியது. ஹேமாவின் ஒவ்வொரு நரம்பிலும் பரயிருந்த வெறுப்பு! அவன் உடலில் ஒவ்வொரு அணுவில் கலந்திருந்த பகையும், வேட்கையும்! ஹேமா சக்தியை திரட்டிக் கொண்டு அவன் அணைப்பிலிருந்து விடுபட வேண்டுமென்று தீவிரமாக முயற்சி செய்து கொண்டிருந்தாள். ஆனால் சாத்தியப்படவில்லை. அவன் கைகளில் சிறைப்பட்டுவிட்ட ஹேமாவுக்கு துக்கமும், அபிமானமும் வெள்ளமாக பொங்கி வந்தன.

* * *

பக்கத்து அறையிலிருந்து போன் ஒலிக்கும் சத்தம் கேட்டது. ஆழ்ந்த உறக்கத்திலிருந்த ரமேஷ் வலுக்கட்டாயமாக கண்களைத் திறந்தான்.

'நான்கு மணி ஆகிவிட்டது எழுந்துகொள்' என்று எச்சரிப்பது போல் போன் விடாமல் ஒலித்துக் கொண்டிருந்தது. ரமேஷ் வலது கையை நீட்டி மேஜை விளக்கின் ஸ்விச்சை போட்டான். அறையில் மங்கலான வெளிச்சம் பரவியது. மேஜைமீது இருந்த சின்ன கடியாரத்தின் முள் நான்கு மணியை சுட்டிக்காட்டியது. ஊருக்கு போகாமல் மறுபடியும் கண்களை மூடிக்கொண்டு தூங்கிவிட்டால் என்ன என்று அவனுக்கு ஒருநிமிடம் பலமாக தோன்றியது. அடுத்த நிமிடம் ஹேமாவின் கழுத்தை சுற்றி பின்னியிருந்த தன்னுடைய கையை அவளுக்கு விழிப்பு வராமல் மெதுவாக எடுத்துக் கொண்டான். தலையணைமீது நகர்த்திவிட்டு எழுந்துகொண்டான். கால் மாட்டில் கிடந்த போர்வையை எடுத்து ஹேமாவுக்கு போர்த்திவிட்டவன், ஒரு நிமிடம் ஹேமாவின் முகத்திலிருந்து பார்வையை திருப்பிக்கொள்ள முடியாதவன்போல் அப்படியே நின்றுவிட்டான். ஆழமான உறக்கத்தில், களைத்துப் போனதுபோல் தென்பட்ட ஹேமாவின் முகம் அவன் இதற்குமுன் எப்போதும் பார்த்திராத அளவுக்கு அழகாக இருந்தது.

ஹேமாவை எழுப்பி, ஆழமாக முத்தம் பதித்து விட்டு 'ஊருக்கு போய் வருகிறேன்' என்று விடைபெற்றுக் கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தை வலுக்கட்டாயமாக கட்டுப்படுத்திக் கொண்டான்.

ரமேஷ் மேஜை விளக்கை அணைத்துவிட்டு அறைக்கதவை

வெறுமே சாத்திவிட்டு வெளியில் வந்தான். அடுத்த கால்மணி நேரத்திற்குள் அவன் குளித்து முடித்து காபியை குடித்துவிட்டு தயாராகி விட்டான். நிலைக் கண்ணாடியின் முன் நின்று டையை கட்டிக் கொண்டிருந்தபோது வலது கன்னத்தில் ஹேமாவின் நகம் கீறிய காயம் இளம் சிவப்பாக தென்பட்டது. அவன் இதழ்களில் புன்முறுவல் மலர்ந்தது. ஹேமாவுக்கு நகங்களை வளர்த்துக் கொள்வதில் விருப்பம் இருந்தது இல்லை. நகங்களை வளர்த்தால் விரல்கள் அழகாக இருக்கும் என்று அவளிடம் சொன்னது அவன்தான். அந்த அறிவுரையின் விளைவுதான் இந்த தண்டனை! ஹேமாவின் ஸ்பரிசத்தில் ஏதோ மந்திர சக்தி இருக்க வேண்டும். அவன் மனதில் இருந்த எரிச்சல் நீங்கிவிட்டதுபோல், இதயத்தை அழுத்திக் கொண்டிருந்த பாரம் குறைந்து இலேசாகிவிட்டது போல் உற்சாகமாக உணர்ந்தான்.

அறையிலிருந்து வெளியேறப் போன ரமேஷ் ஒரு நிமிடம் நின்றான். ஏதோ நினைத்துக் கொண்டவன் போல் சட்டைப் பையிலிருந்த டைரியை எடுத்தான். அதிலிருந்து ஒருதாளை கிழித்து அவசர அவசரமாக எழுதினான்.

ஹேமா!

நான் ஊருக்கு போகிறேன். நேற்று இரவு முரட்டுத்தனமாக நடந்துகொண்டதற்கு என்னை மன்னித்துவிடு. காலையில் விஷம் போன்ற பயங்கரமான உண்மை ஒன்று எனக்கு தெரிய வந்தது. அதை விழுங்கவும் முடியாமல், வெளியில் சொல்லவும் முடியாமல் திணறிக்கொண்டு இருக்கிறேன். நான்கு நாட்களில் திரும்பி விடுவேன். அங்கே போன பிறகு போன் செய்கிறேன். இரவு நான் கோபத்தில் சொன்னதை எல்லாம் மறந்துவிடு. உன்னை அவமானப் படுத்தினால் என்னை நானே அவமானப்படுத்திக் கொண்டதுபோல் தான்.

உன்

ரமேஷ்

ரமேஷ் ஹேமாவின் அறைக்கு வந்தான். ஹேமா விழித்துக்

கொண்டதும் கண்ணில் தென்படுவதுபோல் கடிதத்தை எதிரே மேஜைமீது வைத்துவிட்டு அதன்மீது ஹேமாவுக்கு மிகவும் விருப்பமான சந்தனமரத்தில் செய்த யானை பொம்மையை வைத்துவிட்டு வெளியில் வந்தான்.

அவன் அறையை விட்டு வெளியேறி, படியில் இறங்கிக் கொண்டிருக்கும்போதே ஜன்னல் வழியாக வீசிய காற்றுக்கு காகிதம் படபடத்தில் யானை பொம்மை இடம் பெயர்ந்து தரையில் விழுந்தது. காகிதம் பறந்து ஜன்னல் விளிம்பில்பட்டு வெளியில் போவதா அங்கேயே இருப்பதா என்று தயங்குவது போல் ஒரு நிமிடம் அங்கேயே நின்றுவிட்டது. அடுத்தமுறை வீசிய சுழல் காற்று அந்தக் காகிதத்தை தன்னுடன் இழுத்துக்கொண்டு போய்விட்டது. காற்றுடன் சேர்ந்து சற்று நேரம் அங்கேயும் இங்கேயும் நாட்டியம் செய்த அந்த காகிதம் திடீரென்று மழைத் துளிகள் படபடவென்று பெய்யத் தொடங்கியதும் அதற்கு மேல் பறக்க முடியாததுபோல் நனைந்து தரையில் சரணாகதி அடைந்து விட்டது.

டிரைவர் ரமேஷின் சூட்கேஸை எடுத்து காரில் வைத்தான்.

"அடடா.... மழை பெய்கிறதே" இரண்டே எட்டில் காரை அடைந்த ரமேஷ் உள்ளே உட்கார்ந்து கொண்டே சொன்னான்.

"ஆமாம் சார். பெரிய மழை வரும்போல் இருக்கிறது." டிரைவர் கதவைச் சாத்திக்கொண்டே சொன்னான்.

கார் நகர்ந்தது.

எத்தனையோ தவிப்புடன், வேண்டுகோள் விடுத்து, மன்னிப்பு கேட்டுக்கொண்டு தான் எழுதிய கடிதம் தன்னுடைய கார் சக்கரங்களுக்குக் கீழே நலிந்துபோய்விட்டதென்று தெரியாத ரமேஷ் திருப்தியாக சீட்டில் சாய்ந்துகொண்டு கண்களை மூடிக் கொண்டான். அவனுடைய கை கன்னத்தில் ஹேமாவின் நகக்கீறல் பட்ட இடத்தை அன்புடன் தடவிக்கொடுத்தது.

69

ஊருக்கு வெளியில்....

மயனாத்தில் அப்பொழுதுதான் தகனகாரியம் முடிந்தது. சுதாகர் வாய்க்காலில் குளித்துவிட்டு வந்தான்.

அன்று காலையில் நாகபூஷணம் இறந்துவிட்டார். முதல்நாள் இரவுதான் சுதாகர் ஊரிலிருந்து திரும்பி வந்தான். மகனை கடைசி முறையாக பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருந்தார் போலும். சுதாகரைப் பார்த்த தும் ஏதோ சொல்ல வேண்டும் என்ற தவிப்பது அவருடைய முகத்தைப் பார்க்கும்போதே புரிந்துகொள்ள முடிந்தது. ஆனால் பேச்சு விழுந்து விட்டதால் அவரால் எதுவும் சொல்ல முடிய வில்லை. ஈர்க்குச்சியைபோல் மெலிந்துவிட்ட கையை மகன் கையில் வைத்தார். அவருடைய கைப்பிடி இறுக்கமாக மூடியிருந்தது.

"டாடீ!" பக்கத்தில் அமர்ந்துகொண்ட சுதாகர் அவர் மனதில் இருப்பதை உணர்ந்து கொண்டவன்போல் வலுக்கட்டாயமாக அவருடைய கைப்பிடியை திறந்தான். அவர் கையில் கசங்கலாக இருந்த காகிதத்தில் ஏதோ எழுதியிருந்தது. அந்த கையெழுத்தை சுதாகரால் உடனே புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு தடவைக்கு இரண்டு தடவை கூட்டி படித்த பிறகு புரிந்தது. 'ரமேஷிடமிருந்து விலகி இரு.'

"டாடீ! என்ன இது? ஏன் இப்படி எழுதினீங்க?" வியப்புடன் கேட்டான்.

வாயால் பதில் சொல்ல முடியாத அவருடைய கண்களில் இயலாமை தென்பட்டது.

"ஏன் டாடீ? என்ன காரணம்?" சுதாகர் மறுபடியும் கேட்டான்.

நாகபூஷணத்திடமிருந்து எந்த பதிலும் ஜாடையாகக்கூட வரவில்லை.

பத்து நிமிடங்கள் கழித்து அவருடைய கண்கள் மூடிக் கொண்டன. அடுத்த இரண்டுமணி நேரத்திற்குள் அவருடைய உயிர் காற்றில் கலந்துவிட்டது.

வாய்க்காலில் குளித்துவிட்டு கரையில் நின்று உடலை துடைத்துக் கொண்டிருந்த சுதாகருக்கு சிறுவயதில் தன்னை தந்தை அபூர்வமாக வளர்த்தது, சிம்ம நடையுடன், மிடுக்காக அவர் நடந்து கொண்ட தோரணை காட்சிகளாகக் கண்முன் நிழலாடின.

வாழ்க்கையில் மனிதனுக்கு அன்பு, பாசம், கோபம், தாபம் என்று எத்தனை விலங்குகள்! வாழ்க்கையிடம் பற்று வைத்திருப்பவர்களால் இந்த விலங்குகளை அவ்வளவு சுலபமாக களைத்துப் போட முடி யாது. மூச்சுக் காற்று பிரிந்து போனால் இந்த உடல் வெறும் கட்டை! ஒரு பிடி சாம்பல்! அதை விட வேறு ஒன்றுமில்லை.

சுதாகருடன் வந்தவர்கள் முன்னால் நடந்துகொண்டே "சார்! வர்றீங்களா?" என்று குரல் கொடுத்தார்கள்.

சுதாகர் அங்கே இருந்த கல்லின்மீது அமர்ந்துகொண்டு பார்வையை சுழற்றினான். இந்த பூமி, வானம், நீர் எல்லாம் எப்போதும் இப்படியே இருக்கும். ஒருநாள் தானும் இறந்து போய் விடுவான். வானத்தில் மேகங்கள், மெதுவாக வீசும் காற்று எல்லாம் அப்படியே இருக்கும்.

சுதாகருக்கு அந்த நிமிடத்தில் திடீரென்று வாழ்க்கையிடம் பற்று தல் ஏற்பட்டது. இருட்டை தவிர மரணத்தில் என்ன இருக்கிறது?

சுதாகர் எழுந்து கொண்டான். ஏதோ நினைவில் மெதுவாக நடந்துகொண்டே பிரதான சாலைக்கு வந்தான்.

சற்று தொலைவில் ஆலமரத்தின் கீழே ரமேஷின் கார் நின்றிருந்தது. ரமேஷ் கார்மீது சாயந்து கைகளை கட்டிய நிலையில் நின்று கொண்டிருந்தான். அவன் முகத்தைப் பார்த்தால் ரொம்ப நேரமாக அங்கே நின்றுகொண்டிருப்பது போல் தோன்றியது.

சுதாகர் சட்டென்று அவன் அருகில் வந்தான்.

"ரமேஷ் நீயா! ஊரிலிருந்து எப்பொழுது வந்தாய்?" என்றான்.

"மாலை நான்கு மணிக்கு" ரமேஷின் பார்வை தொலைவில் எரிந்து கொண்டிருந்த சிதையின்மீது நிலைத்திருந்தது.

சுதாகரும் அந்தப் பக்கம் பார்த்தான். ஆழமாக மூச்சுவிட்டுக் கொண்டே சொன்னான்.

"தன்னுடைய கடைசி நேரத்தில் நான் அருகில் இருப்பேனோ இல்லையோ என்று டாடீ எப்போதும் கவலைப்பட்டுக் கொண்டே இருந்தார். நம் கையில் எதுவும் இல்லை என்று சொன்னாலும் கேட்கமாட்டார். அவருடைய கடைசி விருப்பத்தை தீர்த்து வைப்பதுபோல் நான் நேற்று இரவுதான் ஊரிலிருந்து திரும்பி

வந்தேன்."

"ரமேஷ் உடனே எதுவும் சொல்லவில்லை. சற்று பொறுத்து பாரமாகிவிட்ட குரலுடன் சொன்னான்." சுதாகர்! பெற்றோர்களின் அன்பை எப்போதுமே அனுபவித்திராதவர்கள் எவ்வளவு துரதிர்ஷ்டசாலிகள்? நாம் எதை வேண்டுமானாலும் உழைத்து சம்பாதித்துக் கொள்ள முடியும். ஆனால் பெற்றோர்களை உருவாக்கிக்கொள்ள முடியாது இல்லையா?

"ஆமாம். அதிலும் என் டாடியை போன்றவர்கள் தந்தையாக கிடைப்பது அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்."

ரமேஷ் சட்டென்று பார்வையை திருப்பிக் கொண்டான்.

"கிளம்பு. உன்னை ட்ராப் செய்கிறேன்."

"தாங்க்ஸ் ரமேஷ் கடவுள் போல் வந்தாய். அத்தனை தொலைவு என்னால் நடக்கமுடியாது என்று நினைத்துக்கொண்டுதான் இருந்தேன். ஒரு வாரமாக சரியான தூக்கம் இல்லை. அலைச்சல் அதிகம். நீ வந்திருக்காவிட்டால் இங்கே ஏதாவது மரத்தின்கீழே படுத்து தூங்கிப் போயிருப்பேனோ என்னவோ."

ரமேஷ் சரேலென்று சுதாகர் பக்கம் திரும்பிப் பார்த்தான். சுதாகர் சொன்னது அவன் அடிமனதை தொட்டுவிட்டதுபோல் ரமேஷின் விழிகளில் நீர் பளபளத்தது. எப்படியோ கட்டுப்படுத்திக்கொண்டு சுதாகரின் முதுகில் லேசாக தட்டிக் கொடுத்தான்.

சுதாகர் காரில் ஏறிக்கொண்டான். ரமேஷ் டிரைவிங் சீட்டில் உட்கார்ந்து கொண்டான். காரை ஸ்டார்ட் செய்யப்போனவன் நின்றுவிட்டான். பின்னால் சாய்ந்து உட்கார்ந்துகொண்டே "சுதாகர் உன்னிடம் நான் ஒரு கேள்வி கேட்க வேண்டும். அதற்கு இதைவிட சரியான நேரம் நம் இருவரின் வாழ்க்கையில் எப்போதும் வர முடியாது என்று நினைக்கிறேன்" என்றான்.

சுதாகர் தலையை திருப்பி வியப்புடன் பார்த்தான்.

"எதைப் பற்றி?"

"உன் டாடி இறந்துபோகும்முன் என்னைப்பற்றிய பேச்சு ஏதாவது வந்ததா?"

சுதாகர் உடனே பதில் சொல்லவில்லை.

"உண்மையைச் சொல்லு. நீ சொல்லப்போகும் பதிலில்தான் என் வாழ்நாளின் மன அமைதி அடங்கியிருக்கிறது."

சுதாகர் தலையை திருப்பிக்கொண்டு ஜன்னல் வழியாக சாலையை பார்த்துக் கொண்டிருந்தான்.

"சொல்லு சுதாகர்! என்னைப் பற்றிப் பேச்சு வந்ததா இல்லையா. ஒரே ஒரு வார்த்தையில் பதில் சொல்லு. போதும்."

"வந்தது."

ரமேஷ் மூச்சை இழுத்துப்பிடித்தான்.

"என்ன சொன்னார்?"

"உன்னிடமிருந்து விலகியிருக்கச் சொன்னார்."

ரமேஷ் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். அவன் உடலில் இரத்தம் சூடாக பாய்வதுபோல் இருந்தது. கட்டுகளை அவிழ்த்துக் கொண்டே காட்டு விலங்கைபோல் வாயிலிருந்து வெளியேறப் போன சொற்கள், சக்தியை திரட்டிக்கொண்டு கட்டுப்படுத்தினான்.

"காரணம் என்னவென்று நீ கேட்கவில்லையா?"

"நான் கேட்டாலும் சொல்லும் நிலையில் அவர் இருக்கவில்லை. நான் வரும்போதே அவருக்கு பேச்சு விழுந்து விட்டது. ஒரு காகிதத்தில் எழுதி கையில் வைத்திருந்தார். வீட்டுக்கு போனதும் காண்பிக்கிறேன்."

ரமேஷ் சலனம் இல்லாதவன்போல் உட்கார்ந்து விட்டான்.

சற்றுநேரம் கழித்து சுதாகர் தாழ்ந்த குரலில் சொன்னான்.

"ரமேஷ்! நீ டாடியை தவறாக நினைக்காதே. நீ எங்களுடைய சொத்து முழுவதும் மாதுரிக்குக் கிடைக்கும் விதமாக செய்து விட்டாயென்று அவருக்கு உன்மீது கோபம் இருந்தது. அந்த எண்ணத்தில்தான் அப்படி சொல்லியிருப்பார். ஒன்று மட்டும் என்னால் நிச்சயமாக சொல்ல முடியும். திறமையாக செயல்படுபவர்களை டாடி ரொம்பவும் விரும்புவார். அவர் என்மீது ரொம்ப அன்பு வைத்திருந்தாலும் நான் திறமையற்றவன் என்றும் வேதனைப் பட்டுக் கொண்டுதான் இருந்தார். உங்க இருவருக்கும் நடுவில்

அறிமுகம் வளரவில்லை. ஆனால் உன்னை மட்டும் அவருக்கு நெருக்கமாக தெரிந்திருந்தால் என்னைவிட உன்னைத் தான் அதிகமாக நேசித்து இருப்பார். ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டும் என்றால் மகனிடம் இருக்க வேண்டும் என்று அவர் விரும்பிய லட்சணங்கள் எல்லாம் உன்னிடம் இருக்கின்றன. உன்னைப்போல் நான் இருந்திருந்தால் அவர் ரொம்ப மகிழ்ச்சி அடைந்திருப்பார்."

ஸ்டீரிங்மீது கைகளை வைத்திருந்த ரமேஷ் அப்படியே தலையை அதன்மீது சாய்த்துக்கொண்டான்.

"உனக்குத் தெரியாது சுதா! உனக்கு எதுவும் தெரியாது."

"உண்மைதான். எனக்கு எதுவும் தெரியாது. வேடிக்கை என்னவென்றால் டாடியும் நீ சொன்னதுபோல்தான் சொல்லுவார். ரமேஷ்! இந்த பேச்சை இத்துடன் விட்டுவிடுவோம். எனக்கு எது தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் ஒன்று மட்டும் உண்மை. உலகம் உன்னுடைய தனித்தன்மையை புரிந்துகொண்டு விட்டது. உன்னை மாலையிட்டு வரவேற்கிறது. அது சாதாரண விஷயம் இல்லை. வேண்டுமென்று நினைத்தாலும் எல்லோருக்கும் கிடைக்காது. அது மட்டும் எனக்கு நன்றாகத் தெரியும்."

ரமேஷ் வலது கையால் சட்டைப் பையிலிருந்து கிழியும் நிலையில் இருந்த கடிதத்தை எடுத்து சுதாகரிடம் கொடுத்தான்.

"என்னது?"

"இதைப்படி. படித்த பிறகு தாங்கிக்கொள்ள முடியவில்லை என்றால் உடனே காரை விட்டு இறங்கி போய்விடு. என்னிடம் சொல்லிக்கொள்ள தேவையில்லை. அந்தக்கடிதம் என்னுடைய தாய் ஜானகிக்கு எழுதப்பட்டது. அதை எழுதியவர் உன்னுடைய தந்தை. அந்த இருவரும் இப்போ உயிருடன் இல்லை. அவ்விருவருக்கும் சம்பந்தப்பட்ட நாம் இந்த உண்மையை ஒருமுறை பகிர்ந்து கொள்வதில் தவறு இல்லை என்று நினைக்கிறேன்."

சுதாகர் கடிதத்தை படித்துக்கொண்டிருந்தான். ரமேஷ் மூச்சை அடக்கி காத்திருந்தான். நிமிடங்கள் யுகங்களாக கழிந்தன. நாக பூஷணத்திடம் ஒருதடவை ஏமாற்றத்தை அனுபவித்த ரமேஷ், சுதாகர் வாயிலிருந்து வெளியேறப் போகும் வார்த்தைகள் பற்றி

காத்துக்குடி வடக்கு

கொஞ்சம்கூட எதிர்பார்ப்புகளை வைத்துக் கொள்ளவில்லை. அவன் ஊகித்ததுபோல், பயந்ததுபோல் சுதாகர் காரை விட்டு இறங்கி போய்விடவில்லை.

"ரமேஷ்!" நம்பமுடியாதவன்போல் சொன்னான். அவன் குரலில் ஆச்சரியமும், மகிழ்ச்சியும் ததும்பிக் கொண்டிருந்தன. ரமேஷின் தோளை அழுத்தமாக பற்றிக் கொண்டான்.

"ரமேஷ்! இது உண்மைதானா? இந்த விஷயம் உனக்கு எப்போ தெரிந்தது? இந்த கடிதம் எப்படி கிடைத்தது?"

"மூன்று மாதங்களுக்கு மேல் ஆகிறது." ரமேஷ் மெதுவாக எழுந்து சரியாக உட்கார்ந்துகொண்டான்.

"மூன்று மாதங்களா? மை காட்! அப்போதே ஏன் சொல்லவில்லை? டாடியிடம் சொன்னாயா? அடடா! எவ்வளவு பெரிய தவறு நடந்துவிட்டது. அவருக்கு தெரிந்திருந்தால் எவ்வளவு சந்தோஷப்பட்டு இருப்பார்! உன்னைப் பார்த்து எத்தனை பெருமை அடைந்திருப்பார்! ச்சே.... சில நல்ல செய்திகள் இப்படித்தான். தாமதமாகத்தான் வந்து சேரும். குறைந்த பட்சம் என்னிடம் சொல்லியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்?"

"இந்த விஷயம் தெரிந்தது முதல் என் மனம் ஒரு நிலையில் இல்லை. இதை உன்னிடம் சொல்வதா வேண்டாமா என்று புரியாமல் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் குழம்பிப்போய் விட்டேன். இந்த விஷயம் தெரிந்த பிறகுதான் கருணாவின் பிறந்தநாள் விழாவுக்கு உன்னை அழைத்தேன். நீ வருவாய் என்று நினைக்கவில்லை. ஆனால் வந்தாய். உன்னிடம் சொல்லாமல் இருந்தது என்னுடைய தவறுதான். ஏனோ தெரியவில்லை. அந்தச் சமயத்தில் எனக்கு துணிச்சல் இல்லாமல் போய்விட்டது."

"கருணா! மைகாட்! கருணா எனக்கு மகளைபோல். உறவு முறையில் ஹேமா எனக்கு அண்ணி ஆகிறாள். ஹேமா என்னை மறுத்தாலும் என்னுடைய வம்சத்திற்கே வந்து சேர்ந்திருக்கிறாள். யாருடைய வாழ்க்கையிலாவது இதுபோன்ற அற்புதங்கள் நிகழ்ந்திருக்குமா?" சுதாகரின் வியப்பு இன்னும் அடங்கவில்லை.

"இந்த விஷயம் உனக்குத் தெரியும் போதே ரொம்ப தாமதம்

ஆகிவிட்டது சுதா! அது மட்டும் எனக்கு முன்னாடியே தெரிந்திருந்தால் ஹேமாவுடன் என்னுடைய திருமணம் நடந்து இருக்காது. நானும் உன்னுடைய தந்தையை வெறுத்து இருக்கமாட்டேன். இதெல்லாம் எனக்கு முன்னாடியே தெரியாததால் ஏற்பட்ட அனர்த்தம்.

"அனர்த்தமா! நோ... நோ.... அதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். டாடிக்கு தெரியாமல் போய்விட்டதே என்ற வேதனையை தவிர மற்றதெல்லாம் எப்படி நடக்க வேண்டுமோ அப்படித்தான் நடந்து இருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில் இதுதான் சரி."

ரமேஷ் பேசவில்லை. சுதாகர் கையிலிருந்து கடிதத்தை எடுத்துக் கொண்டான். அடுத்த நிமிடம் சட்டைப் பையிலிருந்து சிகரெட் லைட்டரை வெளியில் எடுத்து அதை கொளுத்தினான்.

"ரமேஷ்! என்ன காரியம் செய்துவிட்டாய்?" பதட்டத்துடன் கேட்டான் சுதாகர்.

"நடக்க வேண்டிய காரியம்தான். இந்த விஷயம் நம் இருவரையும் தவிர வேறு யாருக்கும் தெரிவதில் எனக்கு விருப்பம் இல்லை." கம்பீரமாக மொழிந்தான் ரமேஷ்.

70

கிட்டத்தட்ட ஒருமாதம் கழித்து— திருக்காட்டுப்பள்ளியில்—

ஒரு மாலை வேளை.

"ஹேமா எங்கே?" ஜீப்பிலிருந்து உள்ளே வந்த சுதாகர் ரங்க நாயகியை கேட்டான்.

"கிணற்றடியில் உட்கார்ந்திருக்கிறாள்." சுதாகர் குடித்த தண்ணீர் டம்ளரை கையில் வாங்கிக் கொண்டே ரங்கநாயகி சொன்னாள்.

"என்னுடன் ஊருக்கு வருவதைப் பற்றி என்ன சொன்னாள்? பயணத்திற்கு தயாராக இருக்கிறாளா?" சுதாகர் கேட்டான்.

"நான் எத்தனை சொன்னாலும் கேட்க மறுக்கிறாள். அன்று திடீரென்று குழந்தையுடன் வந்தவளை பார்த்து எங்களை பார்ப்பதற்காக வந்திருக்கிறாள் என்று நினைத்து மகிழ்ச்சி அடைந்தேனே

தவிர, அவள் வருகையின் பின்னால் ஏதோ மர்மம் இருக்கும் என்று ஊகிக்கவில்லை. வந்த மறுநாளே ரமேஷுக்குக் கடிதம் எழுதினாள். அதில் என்ன எழுதினாளோ அந்த கடவுளுக்குத்தான் வெளிச்சம். நான்காவது நாள் டிரைவர் காரை வாசலில் நிறுத்திவிட்டு "அய்யா சின்னம்மாவை அழைச்சுக்கிட்டு வரச்சொன்னார்" என்றான்.

"அதென்ன? ஹேமாம்மா வர வேண்டாம் என்று சொல்லி விட்டாரா?" சிரித்துக்கொண்டே கேட்டேன்.

"தெரியாதுங்க. அய்யா சொல்லச் சொன்னதை அப்படியே சொன்னேன்" என்றான்.

அதைக் கேட்ட ஹேமா "ரமேஷ் அவர்களை ரொம்ப கட்டுத் திட்டமாக வைத்திருப்பான் அண்ணீ! சொன்ன வேலையை அப்படியே செய்வதுதான் அவர்களுடைய கடமை. சுருணாவை அனுப்புகிறேன். நான் போகப் போவதில்லை" என்றாள்.

"அப்பொழுதுகூட நான் வித்தியாசமாக எடுத்துக் கொள்ள வில்லை. மகளை விட்டு பிரிந்திருக்க முடியாமல் தகவல் அனுப்பி யிருக்கிறான் என்றும், நான்கு நாட்கள் கழித்து ஹேமா கிளம்புவாள் என்றும் நினைத்தேன். பதினைந்து நாட்கள் கழிந்த பின்னும் ரமேஷிடமிருந்து மறுபடியும் தகவல் எதுவும் வரவில்லை. ஒருமாதம் ஓடிவிட்டது. ஹேமாவும் கிளம்புகிறேன் என்று சொல்லவில்லை. நேற்று இந்த ஊர் பெரியவர் ராமய்யாவிடம் ஊரில் இருக்கும் குழந்தைகளுக்கு ட்யூஷன் சொல்லித்தர விரும்புவதாக சொன்னபோது எனக்கு எதுவும் புரியவில்லை. "நீ இந்த ஊரில் ட்யூஷன் சொல்லித் தருவதாவது? என்ன விஷயம்? என்று கேட்டபோது தான் இனிமேல் அங்கே போகப் போவதாக இல்லை என்று சொன்னாள். என்ன ஆச்சு? உங்க இருவருக்கும் இடையில் ஏதாவது பிரச்னையா? என்று கேட்டால் எதுவும் சொல்ல மறுக்கிறாள்".

"ஒன்றும் இல்லை அண்ணீ! நீ கவலைப்பட வேண்டாம் என்கிறாளே தவிர, வேறு பேச்சு பேசினால்தானே!. போகட்டும் குழந்தையை அனுப்பாமல் இருந்திருக்கக்கூடாதா? அனுப்பி விட்டாள். இங்கே இருக்கிறாள் என்று பெயர்தானே தவிர குழந்தையை நினைக்காத நேரம் இல்லை. சில சமயம் நள்ளிரவில் எழுந்து

உட்கார்ந்து கொண்டு "கார் சத்தம் கேட்டதுபோல் இருந்தது அண்ணீ! கருணாதான் வந்துவிட்டாளோ" என்று புலம்புகிறாள். இதையெல்லாம் பார்த்தால் எனக்கு மூளை கலங்கி விடும்போல் இருக்கிறது. இன்று உன்னுடன் வரமாட்டேன் என்றால் என்ன நடந்தது என்று அதட்டிக் கேளு. தேவைப்பட்டால் நானும் கொஞ்சம் மிரட்டி, வற்புறுத்தியாவது அவளை அனுப்பி வைக்க தயாராக இருக்கிறேன்" என்றாள் ரங்கநாயகி.

சுதாகர் பெருமூச்சு விட்டுக் கொண்டான். அவன் கொல்லைப் புறம் சென்றபோது ஹேமா புடவைத் தலைப்பை இடுப்பில் சொருகிக்கொண்டு மண்ணில் விதைகளை நட்டுக் கொண்டு இருந்தாள்.

"ஹேமா! "சுதாகர் அழைத்தான்.

"வந்துவிட்டீர்களா. இப்போதே ஊருக்குக் கிளம்புகிறீர்களா?" அவசர அவசரமாக வாளியில் இருந்த தண்ணீரில் கைகளை கழுவிக்கொண்டு புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

சுதாகர் தலையை அசைத்தான். ஹேமா "ஒரு நிமிஷம் இதோ வந்து விடுகிறேன்" என்று உள்ளே சென்று சுதாகர் முன்பு கருணாவுக்கு பரிசாக கொடுத்த ஜப்பான் காகித விசிறியை கொண்டு வந்தாள்.

"அன்னிக்கு போகும்போது அவசரத்தில் இதை எடுத்துப்போக மறந்துவிட்டாள். இது அவளுக்கு ரொம்ப பிடிக்கும். ஒரு நிமிடம் கூட கீழே வைக்கமாட்டாள்" என்று சொல்லிக்கொண்டே கொடுத்தாள்.

"நீ வரப் போவதில்லையா ஹேமா!" நேராக பார்த்துக்கொண்டே கேட்டான்.

"ஊஹூம்." ஹேமாவின் முகத்தில் வேதனை திரையாக படிந்து உடனே மறைந்துவிட்டதை அவன் கவனித்து விட்டான்.

"போகட்டும். ரமேஷை வந்து அழைத்துப் போகச்சொல்லி சொல்லட்டுமா?"

"வேண்டாம். வேண்டாம்." சட்டென்று சொன்னாள்.

"நீயாகவும் போகமாட்டாய். அவனையும் வரச்சொல்லி சொல்ல மாட்டாய். ஏன்? காரணம் என்ன? என்னதான் நடந்தது?"

ரங்கநாயகி கொல்லைப்புற கதவு அருகில் வந்து நின்றாள்.

"என்ன நடந்தது ஹேமா? இங்கே குழந்தைகளுக்கு ட்யூஷன் சொல்லித்தரப் போவதாக சொன்னாயாம். காரணம் என்ன?" சுதாகர் கேட்டான்.

"வெளி ஆள் என்பதால் உன்னை கேள்வி கேட்கும் உரிமை எனக்கு இல்லை என்று நீ நினைக்கலாம். உன் அண்ணியிடமாவது சொல்ல வேண்டாமா? அவளிடமிருந்து விஷயத்தை மறைக்க வேண்டிய அவசியம் என்ன?"

"விஷயத்தை மறைப்பதா! இன்னும் சில நாட்கள் போனால் நான் நினைத்தாலும் அதை மறைக்க முடியாது. எல்லோருக்கும் தெரியத் தான் போகிறது." ஹேமா தலையை குனிந்து கொண்டே சொன்னாள்.

அந்த குரலில் அடங்கியிருந்த வேதனையை உணர்ந்தபோது சுதாகருக்கு வியப்பாக இருந்தது.

ரங்கநாயகி ஹேமாவின் அருகில் வந்தாள். "அவ்வளவுதானே தவிர உன் வாயால் நீ சொல்லப் போவதில்லை. உன் பார்வையில் நானும் வெளி மனுஷி ஆகிவிட்டேன் இல்லையா." நிஷ்டுரமாக சொன்னாள்.

"அண்ணி!" ஹேமா இயலாமையுடன் பார்த்தாள்.

"உண்மையைச் சொல்லு. இங்கேயே இருக்க வேண்டும் என்று நீ விரும்பினால் கழுத்தைப் பிடித்து உன்னை வெளியில் தள்ளப் போவதில்லை. உங்க இருவருக்கும் நடுவில் ஏற்பட்ட கருத்து வேற்று மைக்கு ரமேஷ்தான் காரணம் என்றால் உன்னை என் இதயத்தில் வைத்து காப்பாற்றிக்கொள்வேன். என்ன நடந்தது என்று சொன் னால் எனக்கு இந்த வேதனை இருக்காது இல்லையா?"

ஹேமா தலையை உயர்த்தினாள். அவள் கண்களில் நீர் பளபளத்தது.

"நானும் ரமேஷும் பிரிந்து போவதாக முடிவு செய்துவிட்டோம் அண்ணீ!" என்றாள்.

சுதாகர் இடி விழுந்ததுபோல் பார்த்தான். ரங்கநாயகியால் தன்

காதுகளையே நம்பமுடியவில்லை.

"என்ன?" இரட்டிப்பதுபோல் கேட்டாள்.

ஹேமா தரையில் பார்வையை பதித்துக்கொண்டே சொன்னாள்.

"காரணம் சொல்லு என்று கேட்டால் என்ன சொல்வது? எந்த பெண்ணாவது தன்னுடைய கணவனுக்கு தன்மீது விருப்பம் இல்லை என்று வெளியில் சொல்வாளா?"

"ஹேமா! என்ன இது? இந்த விஷயம் ரமேஷுக்கு தெரியுமா?" சுதாகர் கேட்டான்.

"தெரியும்."

"தெரியுமா? என்னால் நம்பமுடியவில்லை. ரமேஷ் விஷயத்தில் நீ எங்கோ ஏதோ தவறாக புரிந்து கொண்டிருக்கிறாய் என்று தோன்றுகிறது. ஆவேசத்தில் பேசுகிறாய் என்று நினைக்கிறேன்."

"ஆவேசம் இல்லை சுதாகர். எத்தனையோ நாட்களாக இதயத்தில் ஜுவாலையாக எரிந்து கொண்டிருந்த நெருப்பு இது. தாம்பத்திய வாழ்க்கையில் ஒருவரிடம் ஒருவருக்கு அன்பும், நம்பிக்கையும் இருப்பது ரொம்ப முக்கியம். கட்டடத்தில் விரிசல் ஏற்பட்டால் ஒட்டுப் போட முயற்சி செய்யலாம். ஆனால் முழுவதுமாக இடிந்து விழுந்து விட்டால் எதுவும் செய்ய முடியாது. ஒருவரை ஒருவர் வெறுத்துக் கொண்டு, சண்டை போட்டுக்கொண்டு வாழ்க்கையை நரகமாக்கிக் கொள்வதைவிட இப்படி பிரிந்து போவது நல்லது இல்லையா. எனக்கும் இதுதான் சரி என்று தோன்றுகிறது. உதாரணமாக நான் வேதனையுடன் இந்த ஊருக்கு வந்துவிட்டேன். வந்த அடுத்தநாளே என் மனதில் இருக்கும் பயங்களை எல்லாம் வெளிப்படுத்தி நாம் பிரிந்து போவதுதான் நல்லதோ என்று கடிதம் எழுதி அனுப்பினேன். தான் விரும்பியதுதான் நடந்தது என்பது போல் மௌனமாக இருந்துவிட்டான். "ஏன்? என்ன நடந்தது?"என்று கேட்கவில்லை. தெரிந்து கொள்ளவும் முயற்சி செய்யவில்லை. கருணாவைவிட்டு இருக்க முடியாது என்பதால் அவளை அனுப்பச்சொல்லி தகவல் அனுப்பினான். நான் அவனுக்கு தேவையாக இருக்கவில்லை என்பதால் என்னைப் பற்றிய பேச்சே எடுக்கவில்லை."

சுதாகர், ரங்கநாயகி இருவருமே வாடைத்து போனவர்களாக

பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கடைசியில் ரங்கநாயகி சொன்னாள். "உங்க இருவருக்கும் நடுவில் கருத்து வேற்றுமைகள் வந்திருக்கலாம். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் கருணா பற்றி என்ன யோசித்தாய்? அவளுக்காகவாவது நீ சமாதானமாக போக வேண்டும் ஹேமா."

"அந்த நிலை எல்லாம் தாண்டிப் போய்விட்டது அண்ணீ. நான் சமாதானமாக போக முயற்சி செய்தது அவனுக்கு மேலும் இளப்பமாக போய்விட்டது. நடைப்பிணமாக அவனிடம் வாழ என்னால் முடியாது. பிரிந்து போவதை தவிர வேறு வழியே இல்லை. பெயருக்கு மட்டும் கணவனாக இருந்தால் போறாது. உள்ளத்தாலும் உடலாலும் மனைவிக்கு சொந்தமாக இருக்க வேண்டும் என்று நினைப்பவள் நான். வெறுமே உணவுக்காவும், துணிமணிக்காகவும் கணவனைச் சார்ந்து வாழ்க்கை நடத்த வேண்டும் என்றால், அதைவிட உயிரை மாய்த்துக் கொள்வது நல்லது. இனிமேல் இது விஷயமாக என்னை எதுவும் கேட்காதீர்கள். என்னால் சொல்ல முடியாது." ஹேமா அந்த இடத்தை விட்டு போய்விட்டாள்.

"சுதாகர்! என்னப்பா இதெல்லாம்? உனக்கு ஏதாவது புரிகிறதா? ரங்கநாயகி குழப்பமும், வேதனையுமாக கேட்டாள்."

"எனக்கு மூளையே கலங்கிவிட்டதுபோல் இருக்கிறது. ரமேஷ் ஹேமா போன்ற அபூர்வமான தம்பதிகள் வேறு எங்கேயும் இருக்க மாட்டார்கள் என்று நான் நினைத்திருந்தேன்" என்றான்.

சற்று நேரம் சுழித்து சுதாகர் வெளியில் வந்தான். ஹேமா அவன் பின்னாலேயே வெளியில் வந்தாள். சுதாகர் திரும்பிப் பார்த்தான். உள்ளே ரொம்ப நேரமாக அழுதிருக்க வேண்டும். கண்கள் சிவந்து முகம் கன்றி இருந்தது.

"சுதாகர்! நீங்க எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்" என்றாள்.

"என்ன ஹேமா?"

"ரமேஷிடம் நீங்களே பேசி சம்மதிக்கச் செய்யுங்கள். கோர்ட், கேஸ் என்று எந்த ரகளையும் வேண்டாம். அவனுடைய விருப்பத்திற்கு நான் குறுக்கே வரமாட்டேன். கருணாவை மட்டும் என்னிடம் தரச் சொல்லுங்கள். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது.

ரமேஷிடம் எல்லாமே இருக்கு. எனக்குக் கருணானவத் தவிர யாருமே இல்லை. இந்த விஷயத்தை நீங்க எப்படி சொல்வீர்களோ தெரியாது. கருணா என்னிடம் வரும்விதமாக செய்ய வேண்டும். முடிந்தால் அடுத்தமுறை நீங்கள் வரும்போது கருணாவை அழைத்து வந்துவிடுங்கள். அவளை பார்ப்பதற்காக வழிமேல் விழிவைத்து காத்துக்கொண்டு இருப்பேன் என்பதை மட்டும் மறந்து போகாதீர்கள்." நடுங்கும் குரலில் வேண்டுகோள் விடுப்பதுபோல் வேக வேகமாக சொல்லி முடித்த ஹேமா பொங்கி வந்த துக்கத்தை கட்டுப்படுத்திக்கொண்டு வேகமாக உள்ளே போய்விட்டாள்.

ஜீப்பில் வந்து உட்கார்ந்து கொண்ட சுதாகர் உடனே வண்டியை ஸ்டார்ட் செய்யவில்லை. அவன் இதயம் கலங்கிவிட்டது போல் இருந்தது. தந்தை போன பிறகு இருந்த ஒரே ஒரு உறவும் அறுந்து போய்விட்டதால் சுதாகர் முழுவதுமாக ஆசிரமத்து வேலைகளில் மூழ்கிவிட்டான். பணமும், செல்வாக்கும் படைத்த ரமேஷ் துணையாக இருந்ததால் ஆசிரமும், அனாதை இல்லமும் வேகமாக தயாராகிக் கொண்டிருந்தன.

தந்தையை தகனம் செய்த அன்று மாலை ரமேஷ் சுதாகரை வற்புறுத்தி தன்னுடைய வீட்டுக்கு அழைத்துச் சென்றான். வீட்டில் ஹேமா தென்படவில்லை. எங்கே என்று கேட்டபோது திருக்காட்டுப்பள்ளிக்கு போயிருப்பதாக சொன்னான். நான்கு நாட்கள் கழித்து கருணா மட்டும் தென்பட்டாள். ஹேமா வரவில்லையா என்று கேட்டபோது, வரவில்லை என்று சொன்னான். ரமேஷ் முகத்தை பார்க்கும்போது தனக்குக் கொஞ்சம் கூட சந்தேகம் வரவில்லை. இருவருக்கும் நடுவில் என்ன பிரச்னை வந்திருக்கும்? ஹேமா சொன்னதை கேட்கும்போது நடக்கக் கூடாதது ஏதோ நடந்து விட்டது போல் தோன்றுகிறது. ஹேமா வெளியில் சொல்லாத காரணத்தை ரமேஷிடம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். இதற்கு முன்பு நிலைமை வேறு. இப்போ இருக்கும் நிலைமை வேறு. எந்த விஷயத்தையும் ரமேஷிடம் கேட்கும் சுதந்திரம் தனக்கு இருக்கிறது.

சுதாகர் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். வீட்டின் முன்னாடி இருந்த இடத்தில் கருணா சமையல்காரனுடன் சேர்ந்து காற்றாடியை விட்டுக்கொண்டு இருந்தாள். கேட்டைத் திறக்கும் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்த கருணா சுதாகர் உள்ளே வருவதை கவனித்து "அங்கிள்" என்று ஓடி வந்தாள். சுதாகர் கருணாவை தூக்கிக் கொண்டான்.

"உனக்காக ஒரு பொருளை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன் என்னவென்று சொல்லு பார்ப்போம்" என்றான்.

கருணாவின் கண்கள் மகிழ்ச்சியால் மின்னின. தாமதத்தை பொறுக்க முடியாதவள்போல் அவன் சட்டைப் பையில் கையை விடப் போனாள்.

"அவ்வளவு அவசரமா? கொஞ்சம் இரு." கருணாவின் கையை பிடித்துக் கொண்டான்.

"சீக்கிரமாய் கொடுங்க அங்கிள்." கருணாவால் ஆர்வத்தை அடக்கிக் கொள்ளமுடியவில்லை.

சுதாகர் கருணாவை இறக்கிவிட்டு, சட்டைப் பையிலிருந்து ஜப்பான் மடக்கு விசிறியை எடுத்துக் கொடுத்தான்.

"இதுவா!" மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டாள்.

"நீ இதை அங்கேயே மறந்து விட்டாயென்று உன் மம்மி கொடுத்து அனுப்பியிருக்கிறாள்." சுதாகர் சொன்னான்.

தோட்டத்தில் இருந்த நாற்காலியில் சுதாகர் உட்கார்ந்து கொண்டதும் கருணாவும் அவன் மடியில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

ஜப்பான் விசிறியை மூடி திறந்து கொண்டே கருணா கேட்டாள். "அங்கிள்! மம்மிக்கு இன்னும் ஜுரம் குறையவில்லையா?"

"மம்மிக்கு ஜுரமாக இருக்கா? யார் சொன்னது?" வியப்புடன் கேட்டான்.

"டாடி சொன்னாங்களே. ஜுரம் குறைந்த பிறகுதான் மம்மி ஊரிலிருந்து வருவாளாம்."

"மம்மியை பார்க்க நீ ஊருக்கு போகவில்லையா?"

"ஊஹூம். அங்கே போனால் அந்த ஜுரம் எனக்கும் வந்து விடுமாம். அதான் என்னை வரவேண்டாம் என்று மம்மியிடமிருந்து லெட்டர் வந்ததாம்."

"அப்படின்னு டாடீ சொன்னாரா?"

"ஆமாம்."

சுதாகருக்கு விஷயம் புரிந்துவிட்டது. ஹேமாவுக்கு ஜுரமாக இருக்கிறதென்று சொல்லி ரமேஷ் கருணாவை சமாதானப்படுத்தி வருகிறான் போலும்.

"அங்கிள்! திருக்காட்டுப்பள்ளியில் இருக்கும் அத்தை ரொம்ப நல்லவள் தெரியுமா. என்னை அவங்களுக்கு ரொம்ப பிடிக்கும். முறுக்கு, சீடை, தட்டை என்று பட்சணங்கள் செய்து கொடுத்தாங்க, டேஸ்ட் ரொம்ப நல்லாயிருக்கும்."

"ஆமாம்." சுதாகர் ஒப்புக் கொண்டான். "அங்கிள்! அத்தை வீட்டில் ஏன் அப்படி இருக்காங்க?"

"எப்படி?"

"வேலைக்காரர்கள் போல் தரையில் உட்கார்ந்து சாப்பிடுவார்கள். வீடு ரொம்ப சின்னது கட்டில்கூடி இல்லை. பாயில்தான் படுத்துக் கொள்வார்கள்." கருணா சொல்லிக்கொண்டே போனாள்.

சுதாகர் கருணாவின் முன் நெற்றியில் விழுந்த கூந்தலை ஒதுக்கி விட்டான். "கருணா! மம்மிக்கு ஜுரம் குறைந்துவிட்டது. நான் அங்கிருந்துதான் வருகிறேன்."

"ஜுரம் குறைந்துவிட்டதா? அப்பொ ஏன் வரவில்லை?"

"உன்மீது அம்மாவுக்குக் கோபம் வந்துவிட்டது. நீ தன்னை பார்க்க வரவில்லையே அதான். உன்னை வரவேண்டாம் என்று மம்மி எழுதவே இல்லை. அனுப்பச் சொல்லித்தான் கடிதம் போட்டிருக்கிறாள்."

கருணா வியப்புடன் பார்த்தாள்.

"நீ வரவில்லையே என்று மம்மி அழுதுகொண்டு இருக்கிறாள். டாடீ மம்மி மீது கோபமாக இருக்கிறார். அதான் உன்னை அனுப்பவில்லை. மம்மியை உனக்கு பிடிக்கும் இல்லையா."

"ரொம்ப பிடிக்கும்."

"அப்பொ டாடீ வந்ததும் திருக்காட்டுப்பள்ளிக்கு போகணும் என்று கேள். மம்மியை பார்க்க வேண்டும் என்று பிடிவாதமாக சொல்லு. மாட்டேன் என்று சொன்னால் விடாதே. அழுதாவது காரியத்தை சாதித்துக் கொள்ளணும்."

"சரி அங்கிள்."

"டாடீ தன்னால் வர முடியாது என்று சொன்னால் நான் உன்னை அழைத்துப் போகிறேன். நாம் இருவரும் ஜீப்பில் போகலாம் ஓ.கே.வா."

."ஓ.கே. அங்கிள்".

"குட் கேர்ல். வா. நாம் காற்றாடியை விடலாம்" என்று கருணாவை மடியிலிருந்து இறக்கிவிட்டான்.

சுதாகர், கருணா காற்றாடியை விட்டுக் கொண்டிருக்கும்போது கார் சத்தம் கேட்டது. ரமேஷ் வந்துவிட்டான். யஜமான் வந்ததை கவனித்த சமையல்காரன் கேட்டைத் திறக்க வேகமாக ஓடினான்.

சுதாகர் சட்டென்று கருணாவின் காதருகில் குனிந்து "அதோ டாடீ வந்தாச்சு நான் சொன்னதை மறந்துவிட மாட்டாயே" என்றான்.

"ஊஹூம்." என்றாள் கருணா.

சுதாகர் காற்றாடியின் நூலை கருணாவிடம் கொடுத்துவிட்டு ரமேஷை எதிர்நோக்கி சென்றான்.

காரை விட்டு இறங்கி வந்து கொணடிருந்த ரமேஷ் சுதாகரை பார்த்ததும் மலர்ந்த முகத்துடன் "ஊரிலிருந்து எப்பொ வந்தாய்?" என்று கேட்டான்.

"காலையில்தான் வந்தேன்."

இருவரும் வந்து நாற்காலியில் அமர்ந்து கொண்டார்கள்.

"கருணா! சுண்ணம்மா!" ரமேஷ் மகளை அழைத்தான். காற்றாடியை விட்டுக்கொண்டிருந்த கருணா திரும்பிப் பார்த்தாளே தவிர

அருகில் வரவில்லை.

"அப்புறம்! ஏதாவது விஷேம் உண்டா?" சுதாகர் பக்கம் திரும்பிக் கொண்டே ரமேஷ் கேட்டான்.

"வரும் வழியில் திருக்காட்டுப்பள்ளியில் இறங்கி ஹேமாவை பார்த்துவிட்டு வந்தேன்."

ரமேஷ் சட்டென்று பார்வையை திருப்பிக் கொண்டான். சுதாகர் சொன்னது காதில் விழாததுபோல் தொலைவில் இருந்த சமையல் காரனை அழைத்து "சூடாக இரண்டு கப் டீ கொண்டுவா" என்று ஆணையிட்டான்.

சுதாகர் ரமேஷின் முகத்தையே கவனமாக பரிசீலித்துக் கொண்டி ருந்தான். சரியான தூக்கமும், நிம்மதியும் இல்லாததுபோல் கண்களுக்குகீழே கருவளையங்கள் ஏற்பட்டிருந்தன. இந்த சில நாட்களுக்குள்ளேயே ரமேஷை அவனால் நன்றாக புரிந்து கொள்ள முடிந்தது. இதயத்தில் பெரும்புயல் வீசிக்கொண்டிருந்தாலும் முகத் தில் அதன் நிழலைக்கூட படியவிடமாட்டான். ரமேஷை பார்க்கப் பார்க்க அவன் நடத்தையில், போக்கில், குணத்தில் தந்தையின் ஜாடை ஸ்பஷ்டமாக தென்பட்டுக் கொண்டிருந்தது. அவரும் இப்படித்தான். எத்தனை பெரிய பிரச்னை வந்தாலும், வானம் இடிந்து தலையில் விழுந்தாலும் முகத்தில் இருக்கும் கம்பீரம் அப்படியே இருக்கும். அச்சில் ஒருவருடைய குணநலன்கள் அப்படியே அச்சில் வார்த்ததுபோல் அவருடைய வாரிசுக்கு வருவது ரொம்ப ஆச்சரியம் இல்லையா!

சமையல்காரன் டீயை கொண்டு வந்து டீபாய்மீது வைத்தான். ரமேஷ் களைத்துப் போனவன்போல் கண்களைமூடி நாற்காலியில் பின்னால் சாய்ந்து உட்கார்ந்திருந்தான். சுதாகர் கோப்பையில் டீயை நிரப்பி ரமேஷிடம் நீட்டி, தானும் எடுத்துக்கொண்டான்.

"சுதா! மாதுரி ஆஸ்பத்திரியில் இருக்கிறாள். நான் அங்கிருந்து தான் வருகிறேன்". ரமேஷ் சொன்னான்.

"ஆஸ்பத்திரியிலா? ஏன்? என்ன ஆச்சு?" பதட்டத்துடன் கேட்டான் சுதாகர்.

"தூக்க மாத்திரைகளை விழுங்கிவிட்டாள்."

"உண்மையாகவா! அந்த அளவுக்கு என்ன பிரச்னை?" வியப்புடன் கேட்டான்.

"திருமணம் ஆகாத பெண்ணுக்கு எந்த பிரச்னை வரக்கூடாதோ அது."

"அப்படி என்றால்?"

"மாதுரி தாயாகப் போகிறாள்."

சுதாகருக்கு தூக்கி வாரிப்போட்டது. "மைகாட்! நிஜமாகவா?"

"ஆமாம்." ரமேஷின் கண்கள் தொலைவில் காற்றாடியை விட்டுக் கொண்டிருந்த கருணாவின்மீது பதிந்தன. "சுதா! தாய்மை என்பது எவ்வளவு அபூர்வமான விஷயம். அதை இவர்கள் விகாரமானதாக இயற்கைக்கு முரண்பாடானதாக உருவகப்படுத்துவது ஏன் என்று எனக்குப் புரியவில்லை."

"இப்பொ என்ன செய்வது? யாராக இருக்கும்?" சந்தேகமாக கேட்டான்.

"நான் நினைப்பது சரியாக இருந்தால் இதற்குக் காரணம் சுந்தர மாக இருக்க வேண்டும். சுந்தரத்திடம் மாதுரி பழகுவது கொஞ்சம் அளவுக்கு மீறி, அவனைத் தூண்டும் விதமாக இருந்து வந்தது."

"மைகுட்நெஸ்! சுந்தரமா? அவனுக்கு ஏற்கனவே திருமணமாகி விட்டதே."

"இளமைப்பருவம் காட்டாற்று வெள்ளம் போன்றது. அதற்கு திருமணம் என்ற அணைக்கட்டு இருக்க வேண்டும். வயது ஆக ஆக ஆசைகளும் அதிகரிக்கத்தான் செய்யும். உடல் புதிய அனுபவங் களுக்காக தவிக்கும். இந்த இரண்டும் ஒத்துப்போகாத போது போராட்டத்தை தவிர்க்க முடியாது. சில சமயம் உடல் மனதை டாமினேட் செய்துவிடும். அதைத்தான் நாம் நடத்தை கெட்டவள் என்று இழிவுபடுத்தி பேசுவோம்."

"இப்பொ என்ன செய்வது? சுந்தரம் அவளை திருமணம் செய்து கொள்வானா?"

"அதுதான் எனக்கும் தெரியவில்லை. அவனுடைய மனைவி குடித்தனத்திற்கு வரப்போவதாக கேள்விப்பட்டேன்."

"இப்பொ மாதுரி எப்படி இருக்கிறாள்?"

"பரவாயில்லை. ஆபத்து நிலையை தாண்டிவிட்டாள். இன்னும் ஒரு வாரம் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டுமாம். அதற்குள் இந்த செய்தி ஊர் முழுவதும் தெரிந்துவிட்டது. இது போன்ற செய்திகள் காற்றைவிட வேகமாய் பரவிவிடும்."

"நான் போய் வருகிறேன். ஆஸ்பத்திரிக்கு போய் மாதுரியை பார்த்துவிட்டு போகிறேன்." சுதாகர் எழுந்து கொண்டான்.

சுதாகர் கிளம்பிப் போன பிறகு ரொம்ப நேரம் ரமேஷ் அங்கேயே உட்கார்ந்திருந்தான். அவன் மனம் அக்னிக்குழம்பாக கொதித்துக் கொண்டிருந்தது. மாதுரி கருவுற்று இருப்பதற்கும், அவளுடைய தற் கொலை முயற்சிக்கும் அவன்தான் காரணம் என்பதுபோல் எல் லோரும் முறைத்து பார்க்கிறார்கள். மாதுரி கருவுற்று இருக்கும் விஷ யமே அவனுக்கு தெரியாது. சில நாட்களாகவே கிளப்பில் மற்றவர்கள் குசுகுசுவென்று பேசிக்கொள்வது அவன் காதில் விழுந்துகொண்டுதான் இருந்தது. ஆனால் அவன் லட்சியப் படுத்தவில்லை. இன்று சியாமளா போன் செய்து "ரமேஷ்! என்ன இது? நீங்க மாதுரியை திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும், ஹேமா உங்களை விட்டு விட்டு போய் விட்டதாகவும் எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள். இது உண்மைதானா?" என்று சுற்றி வளைக்காமல் நேராகவே கேட்டுவிட்டாள். அதைக்கேட்டதும் ரமேஷ் கற்சிலையாகி விட்டான். அவனுடைய கோபம், அதிருப்தி அப்படியே ஹேமாமீது திரும்பியது. ஹேமாவின் நடத்தையின் காரணமாகத்தான் எல் லோருக்கும் இது போன்ற சந்தேகங்கள் ஏற்பட வாய்ப்பு கிடைத் திருக்கிறது.

வேண்டாமென்று மறுத்தாலும் திருக்காட்டுப்பள்ளியிலிருந்து ஹேமா எழுதிய கடிதம் மறுபடியும் மறுபடியும் நினைவுக்கு வந்து கொண்டிருந்தது. "நாம் பிரிந்துபோவதுதான் நல்லது என்று நினைக் கிறேன்" என்று எழுதியிருந்தாள். அந்த வார்த்தைகள் நினைவுக்கு வந்தபோது அவனுக்கு பைத்தியம் பிடித்துவிடும் போல் இருந்தது. ஹேமா என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள்? சின்ன சுருத்து வேற் றுமை வந்தால் உடனே உனக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை

என்பதுபோல் உதறிக்கொண்டு போய் விடுவதா? கணவன் மனைவி உறவு அவ்வளவு சுலபமாக அறுந்து போய்விடுமா? இத் தனை வருடங்கள் ஒன்றாக வாழ்ந்த வாழ்க்கைக்கு, பகிர்ந்து கொண்ட கஷ்ட சுகங்களுக்கு கொஞ்சம்கூட மதிப்பே இல்லையா?

'நாம் பிரிந்து போவது நல்லது என்று நினைக்கிறேன்' என்று ஹேமா எழுதியது அவனை அவமானப்படுத்துவதுபோல் இருந்தது தற்கொலை செய்துகொண்டு விட்டால் என்ன என்ற அளவுக்கு ஆவேசம் ஏற்பட்டது. அந்த நிமிடம் ஹேமா கண்ணில்பட்டால் சுன்னத்தில் இரண்டு அறை கொடுத்து "இன்னொரு தடவை இந்த பேச்சை என் முன்னால் எடுத்தால் தெரியும் சேதி!" என்று அதட்ட வேண்டும் போல் இருந்தது.

ரமேஷ் எதிரே டீபாய்மீது இருந்த ஜப்பான் விசிறியை கையில் எடுத்துக்கொண்டு திறந்து மூடிக்கொண்டே ஏதோ யோசனையில் ஆழ்ந்து போயிருந்தான்.

அதற்குள் கருணா அங்கே வந்தாள்.

"டாடீ!" சீரியஸாக அழைத்தாள்.

"வா கண்ணம்மா!" கைகளை நீட்டினான்.

"எனக்கு மம்மியிடம் போகணும்."

"போகலாம் கண்ணம்மா. மம்மிக்கு ஜுரம் குறையட்டும்."

"எல்லாம் பொய். மம்மிக்கு ஜுரம் ஒன்றும் இல்லை."

ரமேஷ் திடுக்கிட்டதுபோல் பார்த்தான். "யார் சொன்னது உனக்கு?"

"சுதாகர் அங்கிள் சொன்னார். மம்மி எனக்காக அழுது கொண்டி ருக்கிறாளாம். நீ ரொம்ப கெட்டவன். என்னை ஊருக்கு அனுப்ப வில்லை. நான் மம்மியிடம் போகணும். உடனே ஊருக்கு அனுப்பு.' சுருணா குரலை உயர்த்தி பிடிவாதம் பிடிப்பதுபோல் அழுது கொண்டே சொன்னாள்.

ரமேஷின் கையில் இருந்த ஜப்பான் விசிறி பட்டென்று உடைந்து விட்டது. அதைப் பார்த்ததும் தான் பொய்யாக அழுது கொண்டி ருக்கிறோம் என்பதை சுருணா மறந்துவிட்டாள். தந்தையில் அருகில்

வந்தவள் "என்னுடைய விசிறியை உடைத்துவிட்டாய். எனக்கு இப்பவே வேண்டும்" என்று நிஜமாகவே அழத் தொடங்கினாள்.

ரமேஷ் மகளை சமாதானப்படுத்த தீவிரமாக முயற்சி செய்தான். ஆனால் சாத்தியப்படவில்லை. சுருணா உடைந்துபோன விசிறியை பார்த்துக் கொண்டே மேலும் குரலை உயர்த்தி அழுதுக்கொண்டு இருந்தாள்.

ரமேஷ் மகளை வலுக்கட்டாயமாக தூக்கிக் கொண்டு உள்ளே வந்தான். மாடியில் தன்னுடைய அறைக்கு அழைத்துச் சென்று வீட்டில் இருந்த பொம்மைகளை எல்லாம் கொண்டு வந்து அவள் முன்னால் குவியலாக போட்டான். சுருணா எல்லாவற்றையும் கையால் தள்ளிவிட்டாள்.

"நான் நாளை காலையில் புதிதாக வாங்கித் தருகிறேன் கண்ணம்மா. அதுவரையில் இந்த பொம்மைகளுடன் விளையாடிக் கொண்டிரு." கெஞ்சினான்.

"எனக்கு புதுசு வேண்டாம். அங்கிள் கொடுத்த விசிறிதான் வேண்டும்." சுருணாவின் அழுகை உச்சஸ்தாயியை தொட்டது.

எரிச்சடைந்த ரமேஷ் சுருணாவின் முதுகில் ஒரு அடி வைத்தான். "வாயை மூடு! அழுதாயானால் உதை விழும் ஜாக்கிரதை" என்று மிரட்டினான்.

ஸ்விச்சை போட்டதுபோல் சுருணா அழுகையை நிறுத்தி விட்டாள்.

"இந்த பொம்மை எல்லாம் உன்னுடையது இல்லையா? இதை விடவா அந்த விசிறி உசத்தியாக போய்விட்டது? மறுபடியும் அந்த பேச்சை எடுத்தாயானால் நடக்கும் கதையே வேறு." ரமேஷ் சுருணாவின் கையில் இருந்த உடைந்து போன விசிறியை பிடுங்கி ஜன்னல் வழியாக வெளியில் வீசினான். "இந்த பொம்மைகளை வைத்துக் கொண்டு விளையாடு." ஆணையிடுவதுபோல் சொல்லி விட்டு மேஜை அருகில் சென்றான்.

அவன் மனதில் பலவிதமான எண்ணங்கள் கொந்தளித்துக் கொண்டு இருந்தன. நாற்காலியில் அமர்ந்துகொண்டு உடனே கிளம்பி வரச்சொல்லி ஹேமாவுக்குக் கடிதம் எழுதத் தொடங்கினான்.

ஒருநாளும் கோபித்துக் கொள்ளாத தந்தை இன்று திடீரென்று கடிந்து கொண்டதும் சுருணாவால் அழுகையை அடக்க முடியவில்லை. கீழே கிடந்த பொம்மைகளுடன் தானும் ஒரு பொம்மையாக அமர்ந்து, சத்தம் போடாமல் அழுது கொண்டிருந்தாள். கன்னங்களில் கண்ணீர் வழிந்து உடையை நனைத்துக் கொண்டிருந்தது.

சற்று நேரம் தந்தையை கவனித்த சுருணா மெதுவாக எழுந்து அடிமேல் அடிவைத்து கதவுவரை வந்தாள். அவள் வாசற் படியைத் தாண்டும் முன்பே "சுருணா! எங்கே போகிறாய்?" பின்னாலிருந்து ரமேஷின் குரல் அதட்டுவதுபோல் ஒலித்தது.

சுருணா சட்டென்று உள்ளே வந்து மறுபடியும் விளையாட்டு பொருட்களுக்கு நடுவில் உட்கார்ந்து கொண்டாள். "இந்த இடத்தை விட்டு நகரக்கூடாது என்று சொன்னேனா இல்லையா?" ரமேஷ் கோபமாக பார்த்துவிட்டு மறுபடியும் கடிதம் எழுதுவதில் மூழ்கி விட்டான்.

சற்று நேரம் கழித்து அவன் திரும்பிப் பார்த்தபோது சுருணா அங்கே இல்லை. ரமேஷ் எழுதிக்கொண்டிருந்த கடிதத்தை அப்படியே நிறுத்திவிட்டு எழுந்து வெளியில் வந்தான். சமையல்காரனை அழைத்து "சுருணா எங்கே இருந்தாலும் உடனே அழைத்துக் கொண்டு வா" என்றான்.

சமையல்காரன் வீடு முழுவதும் தேடினான். சுருணா எங்கேயும் தென்படவில்லை.

* * *

இரவு ரொம்ப நேரமாகிவிட்டது. சுதாகர் ஆஸ்பத்திரியில் மாதுரியை பார்த்துவிட்டு, ஜெயம்மாவுக்கு தைரியம் சொலிலிவிட்டு, வீட்டுக்கு வந்தான். குளித்துவிட்டு, சாப்பிட உட்காரும்போது வாசற்கதவை யாரோ பலமாக தட்டிய சத்தம் கேட்டது.

"இதோ வந்துவிட்டேன்."

கதவைத் திறந்த சுதாகர் எதிரே ரமேஷ் நிற்பதை பார்த்து

திகைத்துப் போனான்.

"ரமேஷ்! நீயா? என்ன ஆச்சு?" பதட்டத்துடன் கேட்டான்.

"கருணா இங்கே வந்தாளா?"

"கருணாவா! இந்த நேரத்தில் கருணா இங்கே வருவதாவது?" வற்று கடியாரத்தை பார்த்துக் கொண்டே கேட்டான்.

ரமேஷ் சுருக்கமாக மாலையில் சுதாகர் கிளம்பிய பிறகு நடந்ததை ல்லாம் சொன்னான். எல்லாவற்றையும் கேட்டபிறகு சுதாகர் வலைப்பட்டான். "அப்படி என்றால் கட்டாயம் என்னிடம் வரும் ண்ணத்தில்தான் கிளம்பியிருப்பாள். வா தேடுவோம்" மளமள வென்று வீட்டை பூட்டிவிட்டு ரமேஷுடன் கிளம்பினான்.

"சுதா! நான் பிறந்த நேரம் எப்படிப்பட்டது என்றால் செய்யாத றவுகளுக்கும் தண்டனை அனுபவித்துக் கொண்டு இருக்கிறேன்." ரமேஷின் குரல் நடுங்கியது.

சுதாகர் ரமேஷின் கையை லேசாக அமுத்தினான். "ரமேஷ்! தைரியமாக இரு" என்றான்.

இரண்டு பேரும் புறப்பட்டார்கள்.

இரவு பன்னிரண்டு மணி. ரமேஷ் வீட்டில் எல்லா அறைகளிலும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ரமேஷ் சோபாவின் பின்னால் சாய்ந்துகொண்டு களைத்துப் போனவனைபோல் அமர்ந்திருந்தான். சுதாகர் போன்மணி ஒலிக்கும் சத்தம் கேட்பதற்காக காத்திருப்பது போல் மேஜை அருகில் நின்றிருந்தான். வேலைக்காரர்கள் கவலை நிறைந்த முகத்துடன் அங்கே, இங்கே அலைந்து கொண்டிருந்தார்கள்.

போலீஸில் புகார் கொடுத்தார்கள். இது வரையில் கருணா இருக்கும் இடம் தெரியவில்லை. ஒவ்வொரு நிமிடமும் ஒரு யுகமாகக் சுழிந்து கொண்டிருந்தது.

நிசப்தத்தை கிழித்துக்கொண்டு போன்மணி ஒலித்தது.

ரமேஷ் உடனே சோபாவைவிட்டு எழுந்து கொண்டான். சுதாகர் கையிலிருந்த புத்தகத்தை வீசிவிட்டு ரிசிவரை கையில் எடுத்தான்.

"ஹலோ. ஆமாம் அந்த வீடுதான்." சுதாகர் சொன்னான்.

"கருணா கிடைத்துவிட்டாளா?"

ரமேஷ் ஒரே எட்டில் அருகில் வந்தான்.

"மைகாட்! இதோ உடனே கிளம்பி வருகிறோம்." ரமேஷ் போனை கொடுக்கச் சொல்லி கையை நீட்டிக்கொண்டிருக்கும் போதே சுதாகர் ரிசிவரை வைத்துவிட்டான். இரத்தம் முழுவதும் வற்றிவிட்டது போல் அவன் முகம் வெளிறிப் போயிருந்தது.

"கருணா எங்கே இருக்கிறாள்?" ரமேஷ் குரல் பதட்டத்துடன் ஒலித்தது.

"ஆஸ்பத்திரியில்." தாழ்ந்த குரலில் சொன்னான் சுதாகர்.

"ஆஸ்பத்திரியிலா!" இடி விழுந்தது போல் பார்த்தான் ரமேஷ்.

ஆக்ஸிடெண்ட் ஆகியிருக்காம். கவலைப்படாதே. அதிகமாக அடிபடவில்லையாம். வா— கிளம்புவோம்." ரமேஷின் கையை பற்றிக் கொண்டே சொன்னான் சுதாகர்.

அந்த நிமிடம் ரமேஷின் முகத்தை பார்க்கும்போது சுதாகருக்கு பயமாக இருந்தது. மலையின் உச்சியிலிருந்து குதிக்கப்போகும் மனிதனைப்போல் தென்பட்டான்.

* * *

"டாடீ! என்மீது கோபமாக இருக்கிங்களா?" கொஞ்சம் நினைவு வந்ததும் எதிரே குனிந்திருந்த தந்தையின் முகத்தை பார்த்த கருணா பேசிய முதல் வார்த்தை அது.

"இல்லை கண்ணம்மா— இல்லை!"

"மம்மி எனக்காக அழுதுகொண்டு இருக்கிறாளாம். மம்மியிடம் போகலாம் டாடீ". கடைசி மூச்சு பிரியும் முன் கருண சொன்ன வார்த்தைகள் அவை.

போலீசாரின் தீவிர முயற்சியின் பலனாக கருணா பற்றிய தகவல் உடனே தெரிந்துவிட்டது. அவளை கண்டு பிடிப்பது மேலும் ஒரு மணி நேரம் தாமதம் ஆகியிருந்தால், கடைசி பார்வைகூட கிடைத்திருக்காது என்று டாக்டர் சுதாகரிடம் சொல்லிக் கொண்டிருந்தார். கார் வேகமாக வந்து மோதியதில் கால்கள் இரண்டும் நசுங்கி

விட்டன. இரத்தம் அதிகமாக வெளியேறிவிட்ட போதும் முகம் மட்டும் பூப்போல் அப்படியே இருந்தது. ரமேஷிடம் பேசிய அந்த ஒரு நிமிடம் அந்தப் பிஞ்சு முகத்தில் ஒளி வீசியது.

கருணாவின் உயிர் பிரிந்து விட்டதென்று டாக்டர் சொன்ன போது ரமேஷ் நம்பவில்லை. "நீங்க தவறுதலாக சொல்கிறீர்களோ என்னவோ. இப்பொழுதுதானே என்னிடம் தெளிவாக பேசினாள்" என்றான். நகரத்தில் பெயர் பெற்ற டாக்டர்கள் வந்து பரீட்சை செய்து கருணா இறந்துவிட்டதை உறுதிப்படுத்தினார்கள்.

ரமேஷ் சிலையாக நின்றிருந்தான். அவன் இன்னும் கருணா பார்க்கில் தூங்கிக்கொண்டு இருப்பாள் என்றும், யாரோ அவளை தட்டி எழுப்பி அழைத்து வந்து "இதோ உங்களுடைய மகள்" என்று ஒப்படைக்கப் போகிறார்கள் என்றும் நம்பிக்கையுடன் காத்திருந்தான். கருணா இந்த உலகை விட்டுபோய் விட்டாள் என்றும், டாடீ என்று அவள் தன்னை அழைக்கும் குரலை இனி கேட்க முடியாது என்றும், இனி அந்த உறவு அறுந்துவிட்டது என்றும் மனம் எச்சரித்துக்கொண்டு இருந்ததை அவனால் நம்ப முடியவில்லை.

விடிவதற்குள் ஊர் முழுவதும் செய்தி பரவிவிட்டது. ரமேஷின் வீட்டின் முன்னால் கார்கள் வரிசையாக வந்து நின்றுவிட்டன. துக்கம் விசாரிக்க வந்தவர்களுடன் வீடு முழுவதும் நிரம்பிவிட்டது. கருணாவை சோபாவில் கிடத்தியிருந்தார்கள். ரமேஷ் கால் மாட்டில் அமர்ந்திருந்தான். யார் யாரோ வந்து கொண்டிருந்தார்கள். ஏதேதோ சொல்லிக்கொண்டு இருந்தார்கள். ரமேஷ் காதுகளில் எதுவும் விழவில்லை. அது கனவா இல்லை நனவா என்று புரியாத நிலையில் இருந்தான். தீ கொழுந்துவிட்டு எரிவதுபோல் அவன் இதயத்தில் எரிச்சல் கிளம்பியது. அதைத் தாங்க முடியாதவன் போல் மார்பை கையால் அழுத்திக் கொண்டான்.

ஊரில் ரமேஷை அறிந்தவர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். அவனுக்கு ஆறுதல் சொல்ல துக்கத்தில் பங்கு பெற துடித்தார்கள். அங்கே இல்லாதது ஒரே ஒரு நபர்தான். கருணாவை பத்துமாதம் சுமந்து பெற்ற தாய் ஹேமா! ஹேமாவுக்கு இந்தச் செய்தியை யார் தெரிவிப்பார்கள்? அந்த தைரியம் யாருக்கு இருக்கிறது? சுதாகரால்தான் இந்த காரியம் செய்ய முடியும். ரமேஷ் சுதாகரை அருகில் அழைத்தான். "சுதா! உடனே திருக்காட்டுப்பள்ளிக்கு போ. ஹேமா வந்தால் அழைத்து வா. நீ அங்கிருந்து செய்தியை கொண்டு வரும் வரையில் இந்த இடத்தை விட்டு கருணாவை நகர்த்த அனுமதிக்க முடியாது".

சுதாகருக்கு அந்த நிமிடம் இந்த வேலையை தன்னால் செய்ய முடியாது என்று தோன்றியது. ஆனால் சகலத்தையும் இழந்து விட்டது போல் உயிரற்ற சிலையாய் உட்கார்ந்திருந்த ரமேஷை பார்த்ததும் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு கிளம்பினான்.

72

வாசலில் ஜீப் வந்து நின்ற சத்தம் கேட்டதும் ஹேமா கை வேலையே அப்படியே போட்டுவிட்டு வெளியில் ஓடி வந்தாள். ஜீப்பிலிருந்து தனியாக இறங்கி வந்துகொண்டிருந்த சுதாகரை பார்த்ததும் ஹேமாவின் முகம் களை இழந்தது.

"நீங்க தனியாத்தான் வந்தீர்களா? கருணாவை அழைத்து வரவில்லை அப்படித்தானே. நான் ஒரு பைத்தியக்காரி. ரமேஷ் அவளை அனுப்பி வைக்கப் போகிறானா? அப்படியே அவன் அனுப்பினாலும் அவள் இங்கே வருவாளா. தாயும் தந்தையுமாக அவனே அவளை பார்த்துக்கொள்ளும்போது அவளுக்கு எங்கே என் நினைவு இருக்கப் போகிறது?" ஹேமா ஆவேசத்துடன் வருத்தம் கலந்த குரலில் சொன்னபோது சுதாகரால் எதுவும் சொல்ல முடியவில்லை.

"நீங்க ரமேஷிடம் எடுத்துச்சொல்லி நிச்சயமாக கருணாவை அழைத்து வருவீர்கள் என்று ரொம்ப எதிர்பார்ப்புடன் இருந்தேன். ஏனோ தெரியவில்லை. நேற்று இரவு முதல் கருணா "அம்மா!" என்று அழைப்பது போலவே தோன்றுகிறது. காலையிலிருந்து அவளுக்காக வழிமேல் விழிவைத்து காத்திருந்தேன்." ஹேமா விழிகளில் கிர்ரென்று நீர் சுழன்றது.

"ஹேமா! நான் சொல்வதை கேள்" சுதாகர் தாழ்ந்த குரலில் சொன்னான்.

"கேட்கமாட்டேன். நீங்க சொல்லப் போவது என்னவென்று எனக்குத் தெரியும். கருணாவை பார்க்க வேண்டும் என்ற நினைத்

தால் என்னையே அங்கு வரச்சொல்லி ரமேஷ் சொல்லியிருப்பான். அப்படித்தானே. கருணாவின் பெயரைச் சொல்லி என்னை மறு படியும் அந்த சிறையில் அடைக்க வேண்டும் என்பது அவனுடைய எண்ணம். அதை என்னால் புரிந்து கொள்ள முடியாதா?"

சுதாகர் பதில் சொல்ல முடியாதவன்போல் பார்த்தான்.

அதற்குள் ரங்கநாயகி அங்கே வந்தாள்.

"சுதாகர்! வந்து எத்தனை நேரம் ஆச்சு?" என்றாள்.

"இப்பொழுதுதான்."

"ஆமாம். அண்ணி! இப்பொதுதான் வந்தார். அவரை வாசலி லேயே நிற்க வைத்துவிட்டு பேசிக் கொண்டிருக்கிறேன். குடிக்க தண்ணீர் வேண்டுமா என்று கூட கேட்கவில்லை." விழிநீரை துடைத்துக்கொண்டே ஹேமா சொன்னாள்.

சுதாகர் வலுக்கட்டாயமாக புன்முறுவல் செய்துவிட்டு "இப்ப வாவது கொடுத்தால் மகிழ்ச்சி அடைவேன்" என்றான்.

ஹேமா உள்ளே போனாள்.

"நீங்க ஒரு நிமிடம் இப்படி வர்றீங்களா." சுதாகர் குரலை தாழ்த்தி சற்று ஒதுக்குப்புறமாய் வழி நடந்தான். ரங்கநாயகி அவனை பின் பற்றினாள்.

73

ரமேஷ் ஆணையிட்டதுபோல் தெருமுனையிலேயே காத்திருந்த சமையல்காரன் சுதாகரின் ஜீப் கண்ணில் பட்டதும் ஓடி வந்து "சார்! அம்மா வர்றாங்க" என்று சொன்னான். வெளிறிப்போய் விட்டது போல் இருந்த ரமேஷ் முகத்தில் இரத்தம் வேகமாக பாய்ந்தது. ஹாலில் கும்பலாகக் கூடியிருந்த மக்களுக்கு நடுவில் மெதுவாக நகர்ந்து போய்விட்டான்.

அவன் மனம் ஹேமாவின் குரலை கேட்பதற்காக காத்துக் கொண்டிருந்தது.

"கருணா!!" வீலென்று ஹேமா அலறியது காதில் விழுந்தது.

அறையில் காலடி எடுத்து வைத்த ரமேஷ் அந்தக் குரலை கேட்ட தும் மெதுவாக கைகளை பின்னால் நீட்டி சுதவுகளை சாத்தி

விட்டான்.

நிசப்தத்தை கிழித்துக்கொண்டு வெளியேறிய அழுகை அவன் இயத்தை துளைத்தெடுப்பதுபோல் இருந்தது.

ரமேஷ் இதழ்களை இறுக்கி, கதவில் தலையை சாய்த்து கண் களை மூடிக்கொண்டு நின்றிருந்தான். எத்தனை முயற்சி செய்தாலும் அவனுடைய துக்கம் கண்ணீராக வெளியேற மறுத்தது. அக்னியை போல் அவன் உடலை தகித்துக்கொண்டிருந்ததே தவிர, கண்ணீராக மாறி அவன் மனதை கரைக்கவில்லை.

ரொம்ப நேரம் கழித்து.....

கதவு தட்டிய சத்தம் கேட்டது. ரமேஷ் முழங்காலில் அமர்ந்து தரையில் சிதறிக் கிடந்த பொம்மைகளை ஒவ்வொன்றாய் எடுத்து கூடையில் போட்டுக் கொண்டிருந்தான். அவன் உடனே போய் கதவைத் திறக்கவில்லை.

"ரமேஷ்! கதவைத்திற. நான்தான்" சுதாகரின் குரல் கேட்டது.

"தனியாக வந்திருக்கிறாயா?" கதவு அருகில் தாழ்வான குரலில் ரமேஷ் கேட்டான்.

"ஆமாம்."

ரமேஷ் கதவுகளை திறந்தான்.

"நீ இங்கே கதவைத் சாத்திக்கொண்டு உட்டகார்ந்து விட்டால் எப்படி? ஹேமா வந்திருக்கிறாள். கீழே இறங்கி வா."

"என்னால் வரமுடியாது சுதா. என்னை புரிந்துகொள். வேறு எதையும் கேட்காதே."

"சரி. நான் எதையும் கேட்கமாட்டேன். ஆனால் மற்றவர்கள் சும்மா இருக்கமாட்டார்களே. ஹேமா வந்து இத்தனை நேரமாகியும் அவளுக்கு ஆறுதல் சொல்ல நீ வரவில்லையே என்று பேசிக் கொள்கிறார்கள்."

"எனக்கு அந்த சக்தி இல்லை."

"இருக்கிறதோ இல்லையோ..... அதைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் யாருக்கும் இல்லை ரமேஷ்! உன் தாம்பத்திய

வாழ்க்கையை பற்றி மற்றவர்களுக்கு சந்தேகம் ஏற்படும் விதமாக நடந்து கொள்வது நல்லது இல்லை."

"இப்பொ நான் என்ன செய்ய வேண்டும்?"

"கீழே இறங்கி வா. ஏற்கனவே ரொம்ப நேரமாகிவிட்டது. கருணாவை எடுத்துப் போக வேண்டும்."

"சுதா! ப்ளீஸ்! நடக்க வேண்டியதை நீயே கவனித்துக்கொள். என்னால் முடியாது. என் மனநிலை சரியாக இல்லை. என்னால் இப்பொ எதுவும் செய்ய முடியாது." ரமேஷ் குரல் கம்மிவிட்டது.

"எல்லாவற்றையும் நானே பார்த்துக்கொள்கிறேன். இந்த நிமிடத்திற்காகத்தான் நான் உங்களுடைய வாழ்க்கையில் நுழைந்தேனோ என்னவோ! நான் சொல்வதை கேள். கருணாவை கடைசி முறையாக பார்த்துக்கொள்ள வேண்டாமா? கீழே இறங்கிவா."

"கடைசி முறையா! இல்லை சுதா— இல்லை. கருணா எங்கேயும் போகமாட்டாள். அந்த உடலைவிட்டு போனாலும் என்னைவிட்டு எங்கேயும் போகமாட்டாள். எப்போதும் இங்கேயே சாகவதமாக இருந்துவிடுவாள். இங்கிருந்துதான் பிறந்தாள். மறுபடியும் இங்கேயே வந்துவிட்டாள். அதான் எனக்கு அழுகைகூட வரவில்லை." என்று இதயத்தைத் தொட்டு காண்பித்தான்.

"ரமேஷ்! நீ ஏன் கீழே வர மறுக்கிறாய் என்று எனக்குத் தெரியும். ஹேமாவின் முகத்தை பார்க்கும் துணிச்சல் உனக்கு இல்லை. அப்படித்தானே."

ரமேஷ் சட்டென்று பார்வையை திருப்பிக் கொண்டான். மேஜை மீது இருந்த பேப்பர்களை ஒழுங்குப்படுத்தினான். அவன் விழிகளில் குபுக் என்று நீர் பொங்கியது.

"ரமேஷ்! இப்பொழுதுதானே அழுகைகூட வரவில்லை என்று சொன்னாய்?" சுதாகர் ரமேஷின் தோள்களை பற்றி வலுக்கட்டாயமாக தன் பக்கம் திருப்பிக் கொண்டான்.

"நீ இப்பொ ஹேமாவை பார்க்கவில்லை என்றால், இனி வாழ்க்கையில் ஒருநாளும் அவளைச் சந்திக்கமுடியாது. இந்த கோழைத்தனம் ஏன்? தைரியசாலி என்றும், துணிச்சல்காரன் என்றும்

உன்னைப்பற்றி நான் கேள்விப்பட்டது பொய்தானா?"

ரமேஷ் திடீரென்று நாற்காலியில் சரிந்தான். துக்கம் வெள்ளமாய் பொங்கி அவனை மூழ்கடித்துவிட்டது. கைகளில் முகத்தை புதைத்துக் கொண்டான். அவன் இதயத்தில் வீசிக்கொண்டிருந்த புயல் போன்ற துக்கத்திற்கு அறிகுறியாய் அவன் தோள்கள் ஆலுங்கிக் கொண்டிருந்தன.

சுதாகருக்கு ரமேஷை எப்படி தேற்றுவது என்று தெரியவில்லை. கீழே ஹேமா— இங்கே ரமேஷ் இருவரையும் பார்க்கும்போது அவன் இதயம் கரைந்துவிட்டது.

சுதாகர் ரமேஷின் தோளில் கையை பதித்தான். "ரமேஷ்! எழுந்து கொள். உன் மனதில் எத்தனை எரிமலைகள் வெடித்தாலும் சரி. இப்பொ நீ கீழே வந்துதான் ஆகணும். இந்த நேரத்தில் நீ கீழே வரவில்லை என்றால் ஹேமாவை சாகவதமாக இழந்துவிடுவாய். அதை மறந்துவிடாதே" என்று எச்சரித்தான்.

சற்று நேரம் கழித்து....

முதலில் சுதாகர், பின்னால் ரமேஷ் ஒவ்வொரு படியாக இறங்கி வந்தார்கள். ஹேமா, கருணாவை படுக்க வைத்திருந்த சோபாவின் விளிம்பில் தலையை மோதிக்கொண்டு அழுது கொண்டிருந்தாள். ரங்கநாயகி, சியாமளா இன்னும் இருண்டு பெண்கள் ஹேமாவுக்கு ஆறுதல் சொல்லி அவளை தேற்ற முயற்சி செய்து கொண்டிருந்தார்கள்.

ரமேஷ் ஹேமாவின் அருகில் வந்தான். அவனுக்கு குரல் அடைத்துவிட்டது போல் இருந்தது.

ஹேமா தலையை உயர்த்தினாள். ரமேஷை பார்த்ததும் அடியுண்ட பெண் புலியைபோல் பேவகமாய் எழுந்தாள். "இப்பொ உன் பகை தீர்ந்துவிட்டதா? எனக்கு என்று எதுவும் இல்லாமல் செய்துவிட்டாய். அப்படியும் உனக்கு திருப்தி ஏற்படவில்லை போலும். வலுக்கட்டாயமாக மகளை என்னிடமிருந்து பிடுங்கிக் கொண்டு போய் அவளைக் கொன்றுவிட்டாய். உனக்கென்ன? உனக்கு ஆயிரம் பேர் கிடைப்பார்கள். பணத்தால் மனிதர்களை விலைக்கு வாங்க உன்னால் முடியும். எனக்கு யாருமே இல்லை. என்னையும் கொன்று

அவளுடன் சேர்த்து புதைத்துவிடு. உன்னை பிடித்த சனியை சாக வதமாக போக்கிக்கொள்".

"ஹேமா! என்ன பேச்சு இது?" ரங்கநாயகி ஹேமாவை பின்னால் இழுத்தாள்.

"உனக்கு தெரியாது அண்ணி! பல மாதங்களாய் என் மனதில் எரிந்து கொண்டிருக்கும் தீ இது. அந்த எரிச்சலை அனுபவித்துக் கொண்டே காலத்தை கழித்து வந்தேன். மகளுக்காக உயிர் வாழ வேண்டும் என்று நினைத்தேன். இப்பொ எனக்கு யார் இருக்கிறார் கள். நான் யாருக்காக உயிர் வாழ வேண்டும்" ஹேமா ஹோவென்று கதறினாள்.

"அவளை என்னிடமிருந்து எதற்காக அழைத்துப் போனார்கள்? இப்படி கொலை செய்யவா? பணம் இருக்கிறது என்ற திமிர்தானே இப்படி ஆட்டம் போட வைக்கிறது. எங்கே! அந்த பணத்தால் என் மகளின் உயிரை மீட்டுத் தரச் சொல்லு."

ரமேஷ் கற்சிலையாக நின்றிருந்தான். அவன் முகத்தில் எந்த உணர்ச்சியும் தென்படவில்லை. கண்கள் மட்டும் அக்னிக் கோளங் களாக சிவந்து இருந்தன.

சுதாகரும் இன்னும் இரண்டு பேரும் சேர்ந்து நடக்க வேண்டி யதை கவனித்தார்கள். ரமேஷ் கருணாவை இரண்டு கைகளாலும் தூக்கி சுதாகரிடம் கொடுக்கும் முன் ஒரு தடவை அந்த முகத்தை ஆழ்ந்து நோக்கினான். "டாடீ! வானத்தை தொடும் அளவுக்கு பந்தலைபோட்டு இந்த உலகமே வியக்கும் விதமாக எனக்குத் திருமணம் செய்து வைப்பதாக சொன்னாயே! இப்பொழுதே என்னை வழி அனுப்பி வைக்கிறாயா டாடீ நான் வேண்டாதவளாகி விட்டேனா டாடீ" என்று கருணா கேட்பது போல் இருந்தது. பார்வையை விழிநீர் மறைக்க கருணாவின் முகம் ஒரு நிமிடம் பெண் ஜோடனையில் இருப்பதுபோல் தென்பட்டது. அவன் இதயம் புயலில் சிக்கிய சருகுபோல் நடுங்கியது. அவனுடைய எதிர் பார்ப்புகளை, சக்தியை, மகிழ்ச்சியை கருணா மூட்டைக்கட்டிக் கொண்டு தன்னுடனே எடுத்துச் செல்வதுபோல் தோன்றியது.

ரமேஷின் கைகளிலிருந்து கருணாவை வாங்கிக் கொண்ட சுதாகர் துணியை போர்த்திவிட்டு எடுத்துப் போகும்போது, ரமேஷ் தடுமாறும் நடையுடன் பின்னால் போக முயன்றான். முடியவில்லை. யாரோ அவனுக்கு ஆதரவு தருவது போல் பலமாக பிடித்துக் கொண்டார்கள்.

ரமேஷ் பற்களை இருக்கி நினைவு தப்பிப்போகமால் தன்னை கட்டுப்படுத்திக் கொண்டான்.

* * *

கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் கழித்து....

சுதாகர் கட்டிக்கொண்டிருந்த ஆசிரமம் தயாராகிவிட்டது. ரமேஷ் அதிக அளவில் நன்கொடை தந்ததால் ஆசிரமத்திற்கு "கருணா பிரியதர்ஷினி" என்ற பெயரைச் சூட்டினார்கள்.

கவர்னர் வந்து ஆசிரமத்தை, அனாதை இல்லத்தை திறந்து வைக்கப் போகிறார். திருக்காட்டுப்பள்ளியிலிருந்து ஆசிரமம் வரை வண்ணக் காகித தோரணங்களால் அலங்கரித்து இருந்தார்கள். இந்த விழாவை காண்பதற்காக திருக்காட்டுப்பள்ளி மக்கள் குடும்பங் களுடன் புறப்பட்டு வந்தார்கள்.

கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேற்பட்ட சிறுவர்கள், சிறுமிகள், முப்பது பேருக்குக் குறையாமல் இளம் பெண்கள் ஆசிரமத்தில் தரப் பட்ட சீருடையை அணிந்துகொண்டு, வரிசையில் நின்று பாரதி யாரின் பாடல்களை குரலை உயர்த்தி பாடினார்கள்.

அவர்களை பார்க்கும்போது ரமேஷின் விழிகளில் நீர் நிறைந்தது. பல வருடங்களுக்கு முன் தான் அனுபவித்த பாலியம் நினைவுக்கு வந்தது. தூய்மையாய், மலர்களைபோல் தென்பட்ட அந்த குழந் தைகளை பார்க்கும்போது 'டாடீ!' என்று கருணா அழைப்பது போல் தோன்றியது.

கவர்னர் ரமேஷின் வள்ளல் குணத்தை, அவனுடைய தனித் தன்மையை வாய்நிறைய பாராட்டி பேசினார். அதைக் கேட்கும் போது முன்போல் ரமேஷ் முகத்தில் பெருமை பொங்க வில்லை. கண்கள் ஒளிவீசவில்லை. தலையை குனிந்து கொண்டு பொறுமை யற்றவனாக அமர்ந்திருந்தான்.

விழா முடிந்துவிட்டது. கவர்னர் கிளம்பிப் போய்விட்டார். வேலையாட்கள் மேடையில் போட்டிருந்த நாற்காலி மேஜைகளை அகற்றிக் கொண்டிருந்தார்கள். சுதாகர் மூச்சுவிட முடியாதவன் போல் அங்கே இங்கே அலைந்து கொண்டிருந்தான். ரமேஷ் சுதாகரை அழைத்தான்.

"சுதா! நான் கிளம்புகிறேன்."

"இரவு இங்கே தங்கிவிடு. நாளைக்குப் போகலாமே."

"ஊஹூம். நாளைக்கு லாயரை வரச்சொல்லியிருக்கிறேன். வீட்டை ட்ரஸ்ட் பெயருக்கு மாற்ற வேண்டும்."

"ரமேஷ்! எத்தனை சொன்னாலும் உன் பிடிவாதத்தை தளர்த்த மறுக்கிறாய். காருடன் சேர்த்து எல்லாவற்றையும் விற்றுவிட்டாய். வீட்டையாவது வைத்துக் கொள்ளாமல் ஏன் இப்படி செய்கிறாய்? கருணாவுடன் உன் வாழ்க்கையே முடிந்துபோய் விட்டதா என்ன?"

ரமேஷ் கை நீட்டி தடுத்தான். "சுதா! ப்ளீஸ். அந்தப் பேச்செல்லாம் எப்பவோ முடிந்துவிட்டது என்று உனக்கும் தெரியும். பாலை வனத்தில் எத்தனை மழை பெய்தாலும் பசுமையை உருவாக்க முடியாது".

சுதாகரால் பதில் சொல்ல முடியவில்லை. கருணா போன பிறகு ரமேஷின் தோற்றத்துடன், சுபாவமும் மாறிவிட்டது. ஏற்கனவே கம்பீரமாக இருந்தவன் மேலும் பேச்சை குறைத்துக்கொண்டு விட்டான். அவனிடம் இதற்குமுன் இருந்த உற்சாகம், ஆர்வம் இப்போ கொஞ்சம்கூட தென்படவில்லை.

"டிரைவரை என்னை ஸ்டேஷனில் கொண்டு விடச்சொல்லு. இரவு 9.30 மணிக்கு சரியாக ரயில் இருக்கிறது" என்றான்.

இருவரும் வெளியில் வந்தார்கள். ரமேஷ் ஜீப்பில் ஏறிக் கொண்டான்.

"ஹேமாவை பார்க்காமலேயே, போய் விடப் போகிறாயா?" திடீரென்று சுதாகர் கேட்டான்.

ஹேமாவின் பெயரைக் கேட்டதும் ரமேஷின் முகம் களை இழந்தது.

"அவளைச் சந்தித்து மேலும் வேதனை ஏற்படுத்த வேண்டுமா சுதா! இதுவரையில் நான் அவளுக்கு தந்த வேதனைகள் போறாதா?"

ரமேஷ் குரலில் கலந்திருந்த வேதனையை உணர்ந்தபோது சுதாகரின் இதயம் இளகிவிட்டது.

"வேதனை என்று எடுத்துக்கொண்டால் நீ அனுபவித்து வரும் வேதனையைவிட ஹேமாவின் வேதனை அப்படி ஒன்றும் பெரியது இல்லை. கருணாவின் சாவுக்கு நீதான் காரணம் என்று ஹேமா நினைத்தால் அதைவிட முட்டாள்தனம் வேறு இருக்க முடியாதோ என்னவோ. ஒருக்கால் ஹேமா முட்டாள் தனமாய் உன்னைத்தவறாக நினைத்தாலும் அதைப் பொறுத்துக்கொண்டு நிலைமையை சீர் படுத்த வேண்டிய கடமை உன்னுடையது. அதுதான் நியாயம்."

"தவறு ஹேமாவுடையது இல்லை. என்னுடையது. சிறு வயது முதல் சொந்தம் என்று சொல்லிக்கொள்ள யாருமே இல்லாமல் அனாதையாக வளர்ந்த நான் ஹேமாவையும், கருணாவையும் உயிருக்கும் மேலாக நேசித்தேன். அவர்கள்தான் என் உலகம் என்று நினைத்தேன். அதான் இருவரையும் இழந்துவிட்டேன்." ரமேஷின் குரல் நடுங்கியது. கடைசி வார்த்தை சொல்லும்போது சட்டென்று பார்வையை திருப்பிக்கொண்டான்.

"நீங்க இருவரும் ஏன் பிரிந்துவிட்டீர்கள் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை".

"தொடக்கத்திலிருந்தே வாழ்க்கையில் இருவருடைய கண்ணோட்டமும் மாறுபட்டு இருந்தது. கருணாவின் இறப்பு இந்தப் பிரிவை மேலும் அதிகப்படுத்தி விட்டது. அவ்வளவுதான். அதைவிட வேறு ஒன்றும் இல்லை. வரட்டுமா. நீ ஹைதராபாத்துக்கு வரும்போது நான் இருக்கமாட்டேனோ என்னவோ. கோவாவுக்கு போனதும் உனக்குக் கடிதம் எழுதுகிறேன். அங்கிருந்து எங்கே போவது என்று முடிவு செய்த பிறகு உனக்கு தெரியப்படுத்துகிறேன். சரிதானே!"

சுதாகர் தலையை அசைத்தான்.

ஜீப் கிளம்பியது.

ஹேமா!

என்னுடைய உடல் நலம் சற்று சீர் அடைந்ததும் உனக்குக் கடிதம் எழுத வேண்டும் என்று தவித்துக் கொண்டு இருந்தேன். என்னைப் பற்றி கேள்விப்பட்டு இருப்பாய். என்னை நினைத்தால் உனக்கு அருவருப்பு ஏற்படுகிறது இல்லையா. நீ என்னை வெறுத்தாலும் அதற்காக நான் வருத்தப்படமாட்டேன். நம் நாட்டை பொறுத்தவரையில் பெண்ணாக பிறந்தவள் திருமணம் ஆன பிறகு தான் தாய்மையை அடைவாள். என்னைப் போன்ற துர்பாக்கியசாலிகள் அந்த நெறிமுறையிலிருந்து மாறுபடுவார்கள். ஹேமா! தாயாகப் போகிறேன் என்று சொல்லிக் கொள்வதை நான் தலை குனிவாக நினைக்கவில்லை. ஏன் என்றால் திருமணம் செய்து கொண்டு குழந்தையை பெறுவதற்கு பதில் குழந்தையை பெற்றுக் கொண்டு திருமணம் செய்துகொள்ளப் போகிறேன். என் குழந்தையின் தந்தையாகிய சுந்தரத்தையே நான் திருமணம் செய்து கொள்ளும்போது இந்த உலகின் முன் நான் ஏன் தலை குனிய வேண்டும்? ஒருவிதமாக சொல்லணும் என்றால் எல்லோரும் என்னைப்பற்றி இழிவாகப் பேசிக்கொண்டாலும், என்னுடைய அம்மாவுக்கு நெஞ்சு வலி வந்தாலும் எனக்கு மட்டும் நல்லதுதான் நடந்தது. எப்படி. என்கிறாயா? தொடக்கத்திலிருந்தே திருமணம் என்றால் விலங்கைபோல் பயம் இருந்து வந்தது. இந்த நிகழ்ச்சி மட்டும் நடக்காமல் இருந்திருந்தால் வாழ்நாள் முழுவதும் கன்னிப் பெண்ணாகவே இருந்திருப்பேனோ என்னவோ. சுந்தரத்தை நான் ரொம்ப ஆழமாக நேசிக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் என்மீது அவன் உயிரையே வைத்திருக்கிறான். அவன்மீது எனக்கு மதிப்பு இருக்கிறது.

இதன் தொடக்கவிழா உன் வீட்டில்தான் நடந்தது ஹேமா! நீ திருக்காட்டுப்பள்ளிக்கு போயிருந்தபோது ஒருநாள் மாலையில் உன் வீட்டிற்கு வந்தேன். அந்த நேரத்தில் கருணா வீட்டில் இல்லை. ரமேஷ் அவளை எங்கேயோ அழைத்துப் போயிருப்பதாக தெரிந்தது. அப்பொழுதுதான் கேம்பிலிருந்து திரும்பி வந்த சுந்தரம் உள்ளே குளித்துக் கொண்டிருந்தான். சமையல்காரனும் சினிமாவுக்கு போய் விட்டான்.

காபி குடிக்கப் போன சுந்தரம், என்னை இருக்கச்சொல்லி, நான் வேண்டாமென்று மறுத்தபோதும் பாதி காபியை இன்னொரு கப்பில் ஊற்றி குடிக்கச் சொல்லி வற்புறுத்தினான். வழக்கம்போல் நான் சுந்தரத்தை கிண்டல் செய்து தூண்டிவிடுவதுபோல் பேசினேன். சுந்தரம் அருகில் வந்து என் கையைபற்றிக் கொண்டான். அவன் பிடியிலிருந்து என்னை விடுவித்துக்கொள்ள செய்த முயற்சியில் காபி முழுவதும் என்னுடைய புடவையில் சிந்திவிட்டது. நான் கோபித்துக் கொண்டு மாடியில் உன் அறைக்குச் சென்று புடவையில் காபிபட்ட இடத்தை தண்ணீர்விட்டு அலசிக் கொண்டிருந்தேன். பின்னாலிருந்து சுந்தரம் எப்பொழுது வந்தானோ நான் கவனிக்கவே இல்லை. அவன் அவ்வளவு துணிச்சலாக செயல்படுவான் என்றோ, நானும் அவனுக்கு கீழ்படிந்து விடுவேன் என்றோ நினைக்கவே இல்லை. அதற்கு பிறகு சுந்தரம் என்னிடம் மன பூர்வமாக மன்னிப்பு கேட்டுக்கொண்டான்.

மறுபடியும் அந்த அனுபவத்தை பெறுவதற்காக என் உடலும்,உள்ளமும் தவிக்கத் தொடங்கின. சுந்தரம் என்னுடன் பேச வேண்டும் என்று சொன்னதால் அவன் கேம்ப்க்கு போன ஒருக்குச் சென்று அவனைச் சந்தித்தேன். ஒருவரை ஒருவர் விரும்பினோம். திருமணம் செய்து கொள்வதாக முடிவு செய்து கொண்டோம். திடீரென்று ஒருநாள் சுந்தரம் போன் செய்து இந்தத் திருமணம் நடக்க முடியாது என்றும், தன்னுடைய மனைவி குடித்தனத்திற்கு வரப் போகிறாள் என்றும் சொன்னான். எனக்கு பைத்தியம் பிடித்துவிடும் போல் இருந்தது எனக்கு என்ன வழி சொல்லப் போகிறாய் என்று சுந்தரத்திடம் கேட்டதற்கு அவனால் பதில் சொல்ல

முடியவில்லை. தன்னுடைய மனைவி குடித்தனத்திற்கு வர விரும்புவதாகவும், நீயும் அவளை ஆதரிக்கிறாய் என்றும் சொன்னான். எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. நான் கருவுற்று இருப்பது அப்பொழுதுதான் தெரிந்தது. பதட்டமடைந்து விட்டேன். நேராக உன்னிடம் நடந்ததை எல்லாம் சொல்லிவிட வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் நீ முன்போல் என்னுடன் நெருக்கமாக பழகுவதை நிறுத்திவிட்டாய். அதோடு உன் ஆதரவு சுந்தரத்தின் மனைவி பக்கம்தான் இருக்கும் என்று எனக்குத் தெரியும். அதான் உன்னைச் சந்திக்கவில்லை.

என் அதிர்ஷ்டமோ இல்லை, அந்தப் பெண்ணின் துரதிஷ்டமோ தெரியவில்லை. சுந்தரத்தின் மனைவிக்கு மஞ்சள் காமாலை நோய் வந்து இறந்துவிட்டாள். தான் இறந்து எனக்கு வாழ்க்கையை அளித்திருக்கிறாள். எனக்கு உன்னைத் தவிர சினேகிதி யாருமே இல்லை என்று உனக்குத் தெரியும். என்னைப் புரிந்து கொள்ள முடிந்தால் உடனே கடிதம் போடு. உன் கடிதம் கிடைத்த உடனே கிளம்பி வருகிறேன். கருணாவைப்பற்றி கடிதம் மூலமாக பேசுவது என்னால் முடியாத காரியம். அந்த வேதனையில் உனக்கு துணையாக இருக்க வேண்டிய நான் இந்த நிகழ்ச்சியின் காரணமாக இப்படி தொலைவாக இருக்கவேண்டிய நிர்பந்தம் ஏற்றபட்டுவிட்டது. பறந்து வந்து உன்னைச் சந்திக்க வேண்டும் என்று தவித்துக் கொண்டிருக்கும்

உன்

தீரா

கிணற்றடியில் அமர்ந்து மங்கி வரும் மாலை வெளிச்சத்தில் அந்த கடிதத்தை பத்தாவது முறையாக படித்துக் கொண்டிருந்தாள் ஹேமா. நேற்று மதியம் தபாலில் மாதுரியிடமிருந்து இந்தக் கடிதம் வந்தது முதல் ஹேமாவின் மனம் அப்படியே ஒடுங்கிவிட்டது போல் இருந்தது. கருணா இறந்துபோன வேதனை அன்று இருந்ததைவிட இன்று அதிகம் இருப்பது போல் தோன்றியது.

அன்று கருணாவின் உடலை எடுத்துக்கொண்டு சுதாகர், ரமேஷ் மயானத்திற்கு சென்று திரும்பி வரும்போது ஹேமா வீட்டில் இருக்கவில்லை. உடனே திருக்காட்டுப்பள்ளிக்கு போய்விட வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தாள். அந்த வீட்டில் தன்னால் ஒரு நிமிடம்கூட இருக்க முடியாது என்று அழுது கொண்டிருந்த வளை சியாமளா வற்புறுத்தி தன்னுடைய வீட்டுக்கு அழைத்துப் போனாள். அன்று இரவு ஹேமாவின் உடல்நிலை இறங்க முடியாத அளவுக்கு ஜ்வரம் தீவிரமாக இருந்தது. ஒரு வாரம் உடல்நிலை கொஞ்சம் தேவலை என்று ஆன பிறகு சுதாகரின் உதவியோடு ரங்கநாயகியும், ஹேமாவும் திருக்காட்டுப்பள்ளிக்கு வந்துவிட்டார்கள். அன்று மாலை... ஹேமாவுக்கு இன்னும் நன்றாக நினைவு இருந்தது. அவள் கிளம்புவதற்கு இன்னும் ஒருமணி நேரம் இருக்கும்போது ரமேஷ் அவள் இருந்த அறைக்குள் வந்தான். ஹேமாவுக்கு தலையை பின்னிக் கொண்டிருந்த ரங்கநாயகி ஏதோ வேலை இருப்பதுபோல் மெதுவாக அந்த இடத்தைவிட்டு வெளியேறிவிட்டாள்.

"உடம்புக்கு இப்போ எப்படி இருக்கு ஹேமா?" ரமேஷ் மென்மையான குரலில் கேட்டான்.

ஹேமாவின் பார்வை சுவற்றின்மீது பதிந்து இருந்தது. "எனச் கென்ன? நன்றாகத்தான் இருக்கிறேன்."

அதற்குப்பின் வார்த்தைகள் கிடைக்காதது போல் ஒருநிமிடம் மௌனமாக நின்றுவிட்டான்.

"நீ ஊருக்கு போகப்போகிறாய். போகும்முன் என்னிடம் சொல்ல வேண்டியது ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டான்.

"உனக்கு என்மீது கொஞ்சமாவது மதிப்பு பாக்கி இருந்தால் கூடிய சீக்கிரம் நாம் இருவரும் பிரிந்து போவதற்கான ஏற்பாடுகளை செய்துவிடு."

அவன் ஒருநிமிடம் பேசவில்லை. பிறகு தாழ்வான குரலில், "அப்படியே ஹேமா... உன் விருப்பம் போலவே நடக்கும். உனக்கு வேதனை தரும்விதமாக இனிமேல் நடந்து கொள்ள மாட்டேன்" என்று சொன்னவன் மார்பை கையால் அழுத்திக் கொண்டே அந்த

அறையைவிட்டு வெளியேறிவிட்டான்.

ஒரு வாரம் போவதற்குள் ரமேஷ் விவாகரத்து பெற விரும்பு வதாக வக்கிலிட்டமிருந்து ஹேமாவுக்கு நோட்டீஸ் வந்தது. ரங்க நாயகி தலையில் அடித்துக் கொண்டாள். அழுதாள். ஆனால் கற் பாறையாக இறுகிவிட்ட ஹேமாவின் மனம் இளகவில்லை. அதற்கு பின் நடக்க வேண்டியது மளமளவென்று நடந்து முடிந்து விட்டன. ரமேஷ் ஹேமா இருவரும் பிரிந்து போவதற்கு மனபூர்வமாக சம் மதித்து விட்டதாகவும், ஒருவருடைய வாழ்க்கைமீது மற்றவருக்கு எந்த உரிமையும், அதிகாரமும் இல்லை என்று இருவரும் ஒப்புக்கொண்டு விட்டதாகவும் கோர்ட் அங்கீகரித்து திருமணத்தை ரத்து செய்வதாக தீர்வு அளித்துவிட்டது.

அது நடந்து ஒரு மாதம் முடியவில்லை. ஹேமா தன் உடலில் ஏற்பட்டுக் கொண்டிருந்த மாற்றங்களை கண்டு அரண்டு போய் விட்டாள். மேலும் பதினைந்து நாட்கள் போவதற்குள் ஹேமா பயந்தது உறுதியாகிவிட்டது. ரமேஷின் மறுஉருவம் ஹேமாவின் வயிற்றுக்குள் கருவாக வளர்ந்து கொண்டிருந்தது. ரமேஷுடன் தன் உறவு சாசுவதமாக முடிந்துபோய் விட்டதென்று கோர்ட்டில் உத்தரவு தந்துவிட்டார்கள். அந்தத் தீர்ப்பு சரியில்லை என்று கடவுள் அவளை எச்சரிப்பதுபோல் தோன்றியது. ஹேமாவின் கண்களிலிருந்து மடைதிறந்த வெள்ளமாக கண்ணீர் வெளியேறிக் கொண்டிருந்தது.

எத்தனை நேரம் அப்படியே உட்கார்ந்து இருந்தாளோ அவளுக்கே தெரியவில்லை. இருட்டி ரொம்ப நேரமாகி விட்ட தென்ற நினைப்பும் இருக்கவில்லை.

"ஹேமா!" ரங்கநாயகி அழைத்துக்கொண்டே கொல்லைப்புறம் வந்தாள்.

முழங்காலில் அமர்ந்து கொண்டு விசும்பி, விசும்பி அழுது கொண்டிருந்த ஹேமா அண்ணியின் குரலை கேட்டதும் சட் டென்று புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண் டாள்.

"இங்கே இருக்கிறாயா! சுவர்னர், மற்றவர்கள் எல்லோரும் காரில் கிளம்பிப் போய்விட்டார்களாம். ராமய்யா வந்து சொன்னான். ரமேஷ் இங்கே வரவில்லை பார்த்தாயா."

"எதற்காக வருவான் அண்ணி? அவனுக்கும் எனக்கும் நடுவில் இப்பொ எந்த உறவும் இல்லையே." ஹோவென்று கதறினாள் ஹேமா.

ரங்கநாயகி சட்டென்று அருகில் வந்து ஹேமாவை அணைத்துக் கொண்டாள். "அழாதே ஹேமா. எவ்வளவு அழுது என்ன பிரயோ ஜனம் சொல்லு. அப்பொழுதே சொன்னேன். கருணா இறந்துபோன துக்கத்தை நீங்க இருவரும் பகிர்ந்து கொண்டால்தான் குறையும் என்று. நீ என் பேச்சை கேட்கவில்லை. இருவரும் பிடிவாதமாக இருந்து விட்டீர்கள்."

"அம்மா!" மது ஓடி வந்தான்.

"என்ன மது?"

"அவர் வந்திருக்கிறார்."

"யாரு?"

"அவர்தான். ரமேஷ் சார். அக்காவின் கணவர்."

ரங்கநாயகி சட்டென்று வாசலுக்கு சென்றாள்.

ஹேமாவின் ஆதயம் ஒரு நிமிடம் மீண்டும் இருமடங்கு வேகத் துடன் துடிக்கத் தொடங்கியது.

ஐந்து நிமிடங்கள் கழித்து ரங்கநாயகி வேகமாக உள்ளே வந்தாள்.

"ஹேமா! இன்னும் இங்கேயே நிற்கிறாயா? வாசலுக்கு போய் ரமேஷைப் பாரு. நான் உள்ளே இரவு சமையலுக்கு ஏற்பாடு செய் கிறேன். ரமேஷை இருக்கச் சொல்லி சொல்லு." அவசர அவசரமாக சொல்லிவிட்டு உள்ளே போனாள்.

ஹேமா அடிமேல் தேடி வைத்து நடப்பது போல் மெதுவாக வெளி வராண்டாவுக்கு வந்தாள்.

ரமேஷ் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தான். காலடிச் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தான். ஹேமா சுவற்றில் சாய்ந்து நின்றி ருந்தாள். சற்று நேரம் நிசப்தத்தில் கழிந்தது. அவன் பேசுவான் என்று

அவளும், அவள் பேசுவாள் என்று அவனும் எதிர்பார்த்தது போல் மௌனமாக இருந்துவிட்டார்கள்.

கடைசியில் அவனே கேட்டான்.

"நலமாக இருக்கிறாயா ஹேமா?"

ஹேமா குனிந்த தலையை உயர்த்தவில்லை.

"இத்தனை தூரம் வந்துவிட்டு உன்னைப் பார்க்காமல் போவது சரி என்று எனக்கு படவில்லை. வீட்டை விற்றுவிட்டேன். தற்போது கோவா போய்க்கொண்டு இருக்கிறேன். அங்கே ஆசிரமத்தில் சில நாட்கள் இருப்பேன்".

"வீட்டை விற்றுவிட்டாயா?" ஹேமாவின் குரல் தடுமாறியது.

"ஆமாம். கருணா இல்லை. நீயும் வரப்போவதில்லை. அந்த வீடு— அந்த வைபவம் இனி எனக்கு எதற்கு?"

"கோவாவிலிருந்து எப்போ திரும்பிவரப் போகிறாய்?"

"தெரியாது. ஒருக்கால் திரும்பி வரமாட்டேனோ என்னவோ."

ஹேமா தரையை பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள்.

"போகும் முன் உன்னிடம் ஒன்று சொல்லணும் என்று வந்தேன் ஹேமா. என்னால் உனக்கு வேதனை ஏற்பட்டு இருந்தால் என்னை மன்னித்து..." அவன் வார்த்தையை இன்னும் முடிக்கவில்லை.

ஹேமா இனி தாங்க முடியாதவள்போல் சட்டென்று திரும்பி உள்ளே ஓடிவிட்டாள். பத்து நிமிடங்கள் கழிந்தன.

உணவுக்கான ஏற்பாடுகளை செய்துவிட்டு ரங்கநாயகி ரமேஷை சாப்பிட அழைப்பதற்காக வாசலுக்கு வந்தாள். அங்கே ரமேஷ் இல்லை. நாற்காலி காலியாக இருந்தது.

வாசலில் ஜீப்பும் இல்லை.

"ஹேமா! இதென்ன? ரமேஷ் போய்விட்டானே. சாப்பிட்ட பிறகு போகலாம் என்று நீ சொல்லவில்லையா?" ரங்கநாயகி உள்ளே வந்து கொண்டே கேட்டாள். அறையில் கட்டில்மீது முழங்காலில் முகம் புதைத்து ஹேமா அழுது கொண்டிருந்தாள்.

* * *

ரயில் கிளம்புவதற்கு அறிகுறியாக விசில் சத்தம் கேட்டது.

கையில் இருந்த பத்திரிகையை பார்த்துக் கொண்டிருந்த ரமேஷ் பக்கத்தில் வைத்துவிட்டான். அவன் இதயத்தை கிழித்துக்கொண்டு வருவதுபோல் பெருமூச்சு ஒன்று வெளியேறியது. இளைத்து, கறுத்து, சோகமே உருவானது போல் தோற்றமளித்த ஹேமாவின் உருவம் அடிக்கடி அவன் கண்கள்முன் நிழலாடியது. கண்களில் எவ்வளவு சோகம்! அந்தச் சூழ்நிலையில் எத்தனை ஏழ்மை!

இருவரும் பிரிந்து போன பிறகு வங்கியில் அவள் பெயரில் பணம் போட்டு, பாஸ் புத்தகத்தை அனுப்பி வைத்தபோது வேண்டா மென்று திருப்பி அனுப்பிவிட்டாள். கஷ்டப்பட்டு உழைத்தால்தான் ஹேமாவால் தொடர்ந்து வாழ்க்கையை நடத்த முடியும் என்ற விஷயம் நினைவுக்கு வந்தபோது அவன் இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவது போல் வேதனை ஏற்பட்டது. அவனால் என்ன செய்ய முடியும்? அவள்மீது தனக்கு இருந்த அதிகாரத்தை, உரிமையை வேண்டுமென்றே விட்டுக்கொடுத்துவிட்டான். ஹேமாவின் திருப்திக்காக, அவளுக்கு எந்த வேதனையும் தரக்கூடாது என்ற எண்ணத்துடன் அந்த காகிதங்கள் மீது கையெழுத்து போட்டான். அதற்காக ஹேமா தன்னுடையவள் இல்லை என்றாகி விடுமா? ஹேமாவுடன் தான் பகிர்ந்துகொண்ட அந்த வாழ்க்கை, அனுபவித்த உணர்வுகள் எல்லாம் ஒரே ஒரு கையெழுத்தில் மறைந்து போய் விடுமா?. கருணா உயிரோடு இருந்தால் ஹேமா எத்தனை சண்டை போட்டாலும் விவாகரத்துக்கு சம்மதம் தெரிவித்து இருப்பாளா? ஹேமாவும் தானும் சேர்ந்து வாழும் அதிர்ஷ்டம் தனக்கு இல்லை. அதான் கருணா தங்களை விட்டு பிரிந்து போய்விட்டாள். கருணா வின் நினைவு வந்ததும் அவன் இதயம் பிளந்துவிடுமோ என்ற அள வுக்கு வேதனை ஏற்பட்டது.

ரமேஷ் பின்னால் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். ஹேமாவை சந்தோஷமாக வைத்திருக்க வேண்டும் என்று எத்தனை கனவுகளை கண்டான்? கருணா பிறந்ததும் அவன் கண்ட கனவு களுக்கெல்லாம் ஒரு உருவம் கிடைத்துவிட்டது என்று மகிழ்ச்சி அடைந்தான். வாழ்க்கை வானவில்லாக ஜொலித்தது. அதெல்லாம் சாசுவதம் என்று நம்பிவிட்டான். வாழ்க்கை இனி எப்போதும்

இப்படியே சந்தோஷமாக கழிந்துவிடும் என்று எதிர் பார்த்தான்.

புயலுக்கு பின் ஏற்படும் அமைதியை போல் ரமேஷின் இதயத்தில் மெள்ள மெள்ளமாக அமைதி பரவிக் கொண்டிருந்தது. ஹேமா சொன்னது எத்தனை உண்மை. பணம் இருந்தால் எதையும் சாதித்து விட எல்லோரும் நினைத்துக் கொள்வார்கள். ஆனால் பணத்தால் சிலவற்றை எப்போதும் வாங்கமுடியாது என்று புரியும்போது காலம் கடந்துவிடும்.

ரயில் மெதுவாக நகரத் தொடங்கியது.

ரமேஷ் தலையை திருப்பி ஜன்னல் வழியாக வெளியில் பார்த்துக் கொண்டிருந்தான்.

திருக்காட்டுப்பள்ளி ரொம்ப சின்ன கிராமம். பட்டணத்து நாகரீ கத்திற்கு தொலைவாக... இயற்கை அன்னையின் மடியில் அமைதி யாக உறங்கிக் கொண்டிருந்தது. தன் உயிருக்கும் மேலான ஹேமாவை இந்த ஊருக்கு ஒப்படைத்து விட்டுப்போய்க் கொண்டிருக்கிறான். இந்த இரவை அவனால் என்றுமே மறக்க முடியாது. தன்னுடைய உயிர் கொஞ்சம் கொஞ்சமாக பிரிந்து போய்க் கொண்டிருப்பது போல் தோன்றியது. தன்னால் ஹைதராபாத் வரையில் போய்ச் சேரமுடியுமா?

'எனக்கு யாருமே இல்லை. நான் யாருக்கும் தேவையில்லை' என்ற பயங்கரமான தனிமை அக்னியைபோல் அவனை தகித்துக் கொண் டிருந்தது. சிறுவயதில் பார்க்குகளில், திண்ணைகள் மீதும் அழுது கொண்டே படுத்திருந்த காட்சிகள் உயிர்பெற்று கண்முன்னால் தோன்றின. அன்றும் இன்றும் ஒரே ஒரு வித்தியாசம். அன்று அவ னால் வாய்விட்டு அழமுடிந்தது. அந்த கண்ணீரில் தன்னுடைய வேத னையை கரைத்துக் கொள்ள முடிந்தது. இன்று அவனால் அழ முடி யாது. வாழ்க்கையில் பல அனுபவங்கள் பெற்று கடினமாகிவிட்ட அவன் மனம் கண்ணீர் வெளியில் வராமல் தடுத்துக்கொண்டு இருந் தது. ஹேமா, கருணா இருவருமே தன்னைவிட்டு பிரிந்து போன பிறகு எதிர்காலமே சூனியமாகி விட்டது போல் தோன்றியது.

ஹேமாவும் அவனும் பிரிந்து போன விஷயம் எத்தனைதான் ரகசியமாக வைக்கவேண்டும் என்று நினைத்தாலும் எல்லோருக்கும் தெரிந்து போய்விட்டது. அதற்குள் சிலர் தங்களுடைய மகள்களை ரமேஷுக்கு இரண்டாம் தாரமாக மணம் முடிக்க முன் வந்தார்கள். "ஹேமாதான் என்னைவிட்டு போய்விட்டாள். நான் அவளை பிரிய வில்லை. இன்று மட்டுமே இல்லை. எத்தனை ஜென்மங்கள் எடுத் தாலும் அவளை பிரியவும் மாட்டேன்" என்று கத்திச் சொல்ல வேண்டும் என்ற அளவுக்கு ஆவேசம் வந்தது.

'ச்சீ... ச்சீ... என்ன மனிதர்கள்? ஒருவருடைய வாழ்க்கை எரிந்து கொண்டிருக்கும் போது அந்த நெருப்பில் தன் வீட்டுக்கு வெளிச்சம் தேடுகிறார்கள்.'

ஹேமாவின் மார்பில் முகம் புதைத்து தன்னை அவளிடம் முழுவதுமாக அர்ப்பணித்து விட்டால் என்ன என்று தோன்றியது. ஆனால் அது இந்த ஜென்மத்தில் சாத்தியமில்லை. நடைபிணமாக எஞ்சிய வாழ்க்கையை கழிக்க வேண்டியதுதான்.

'ரமேஷ்!' ஹேமா அழைப்பதுபோல் தோன்றியது. இனி வாழ் நாள் முழுவதும் அவளுடைய நினைவுகள் தன்னை துரத்திக் கொண்டுதான் இருக்கும் கண்களை மூடி உணர்வுகளை ' டுப் படுத்த முயன்றான்.

"ரமேஷ்!!"

ரமேஷ் திடுக்கிட்டு கண்களை திறந்து வெளியில் பார்த்தான்.

"ரமேஷ்!" எதிரே சுதாகர் தென்பட்டான். நகர்ந்து கொண்டிருக் கும் ரயிலுக்கு இணையாய் வேகமாக நடந்து கொண்டிருந்தான்.

ரமேஷ் சட்டென்று கம்பார்ட்மென்ட் கதவு அருகில் சென்று பார்த்தான். கற்சிலையாகிவிட்டான். சுதாகரின் பின்னால் ஹேமா வும் இருந்தாள்.

சுதாகர் ஹேமாவின் கையை பிடித்துக்கொண்டு வேகமாக நடந்து கொண்டிருந்தான். ரமேஷை பார்த்ததும் சுதாகரின் கையை உதறிவிட்டு வேகமாய் முன்னால் ஓடிய ஹேமா "ரமேஷ்!" என்று கையை நீட்டினாள்.

ரமேஷ் இடதுகையால் கம்பியை பிடித்துக்கொண்டே குனிந்து வலதுகையை நீட்டி ஹேமாவின் கையை பிடித்துக் கொண்டான்.

"ஹேமா! என்ன ஆச்சு?" பதட்டத்துடன் கேட்டான்.

"என்னை தனியாக விட்டு போய்விடாதே." அழுது கொண்டே சொன்னாள் ஹேமா.

ரயிலின் வேகம் அதிகரித்தது. ஹேமாவால் ஓடமுடியவில்லை. ஆனால் ரமேஷின் கையை மட்டும் விடவில்லை. ரமேஷ் மேலும் குனிந்தான். அடுத்த நிமிடம் அவன் கீழே குதித்து இருப்பான். ஆனால் பின்னால் ஓடி வந்த சுதாகர் சட்டென்று ஹேமாவின் இடுப்பை பிடித்து உயரே தூக்கினான். ஹேமா லீலென்று சுத்தினாள். ரமேஷ் மின்னல் வேகத்தில் வலது கையால் ஹேமாவை சுற்றி உள்ளே இழுத்துக்கொண்டான்.

"ஹேமா! என்ன இது? பிடி நழுவியிருந்தால் என்ன ஆகியிருக்கும்?"

"கீழே விழுந்திருப்பேன். உயிர் போயிருக்கும். அவ்வளவுதானே. நீ என்னைவிட்டு போவதைவிட அது எவ்வளவோ மேல்."

சுதாகர் பந்தயத்தில் ஓடுவதுபோல் வேகமாக ஓடிக்கொண்டே "ரமேஷ்! ஹேமாவை விட்டுவிடாதே. நீ சொன்னது உண்மைதான். உன்னுடைய கருணா எங்கேயும் போகவில்லை. இன்னும் ஆறு மாதங்களில் உன்னிடமே வரப்போகிறாள்." மூச்சு இறைக்க சொன்னான். அதற்கு மேல் ஓட முடியாதவன் போல் நின்று விட்டான்.

ரயில் வேகமாக போய்க் கொண்டிருந்தது.

"ஹேமா! என்ன? சுதாகர் சொன்னது" - ரமேஷ் சந்தேகமாக பாதியிலேயே நிறுத்திவிட்டான். ஏதோ மாற்றம் இருப்பது போல் தோன்றியது.

ஹேமாவின் பார்வை தாழ்ந்துவிட்டது. ஆமாம் என்பதுபோல் மௌனமாக தலையை அசைத்தான்.

"அதற்காகத்தான் என்னுடன் சமாதானம் செய்து கொள்ள நினைத்தாயா ஹேமா!" அவன் கண்களில் வேதனையும் கவலையும் எட்டிப் பார்த்தன.

இல்லை என்பது போல் தலையை அசைத்தாள்.

"ஊஹூம் பிறக்கப் போகும் குழந்தையை எண்ணி நான் உன்னிடம் வரவில்லை. ரமேஷ்! உன்னை ஒரு விஷயத்தில் நான் ரொம்ப தவறாக நினைத்துவிட்டேன். நாம் இருவரும் இத்தனை வேதனையை, துன்பத்தை அனுபவிக்க அதுதான் காரணம்."

"என்னை தவறாக நினைத்தாயா? எந்த விஷயத்தில்?"

அவள் சட்டென்று அவன் இதழ்கள்மீது கையை பதித்தாள்.

"அதை மட்டும் கேட்காதே. இப்பொழுது மட்டுமே இல்லை. எப்போதும் என்னால் அதை உன்னிடம் சொல்ல முடியாது."

ரமேஷ் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்களில் ஆயிரம் கேள்விகள் பிரதிபலித்துக் கொண்டிருந்தன.

"அது என்னவென்று சொன்னால்தான் நான் உன்னுடன் வர முடியும் என்றால் இப்பொழுதே சொல்லிவிடு. இங்கேயே இறங்கிக் கொள்கிறேன்." ஹேமா ஒரு அடி பின்னால் வைத்தாள்.

ரமேஷ் சட்டென்று ஹேமாவின் தோள்களை சுற்றி கையை போட்டு அருகில் இழுத்துக் கொண்டான்.

"உன்னால் சொல்லமுடியாதவற்றை நான் என்னிக்கையது வற்புறுத்தியிருக்கிறேனா? எதுவாக இருந்தாலும் தவறு என்று நீயே உணர்த்துவிட்டாய் இல்லையா. அதுவே எனக்கு போதும். இன்னிக்கு இல்லை. எப்போதுமே கேட்கமாட்டேன். நம் இருவருக்கும் இடையில் அந்த பேச்சே வராமல் பார்த்துக் கொள்கிறேன். உனக்கு என்மீது நம்பிக்கை இல்லை என்றால் கருணாவின் மீது சத்தியம் செய்கிறேன்."

கருணாவை பற்றி பேச்சு வந்ததும் ஹேமாவின் கண்களில் பொல பொலவென்று கண்ணீர் வெளியேறியது.

"ரமேஷ்!" அவன் மார்பில் முகத்தை புதைத்துக் கொண்டே சொன்னாள். "என்னால் கருணாவை மறக்க முடியவில்லை. உன்னையும் இழந்துவிட்டேன் என்றே நினைத்தேன்". ஹேமாவின் குரல் கம்மிவிட்டது. அதற்கு மேல் வேளால் பேச முடியவில்லை.

ரமேஷ் அவளைச் சமாதானப் படுத்துவதுபோல் அவள் தலையை மார்போடு மேலும் அழுத்திக் கொண்டான். சரியாக தான் சொல்ல நினைத்த அதே வார்த்தையை ஹேமா சொன்னதுபோல்

தோன்றியது.

கருணாவை நினைத்து விசும்பி விசும்பி அழுது கொண்டிருந்த ஹேமாவை அணைத்து ஆறுதல் சொல்லி அவளை தேற்றுவதில் அவனுக்கு ஏதோ நிம்மதி கிடைப்பதுபோல் இருந்தது. எந்த தேவதையின் ஆசீர்வாத பலமோ இருள் சூழ்ந்து கொள்ளப்போன அவன் வாழ்க்கையில் மறுபடியும் வெளிச்சம் வந்தது போல் இருந்தது. ஹேமாவின் முன் நெற்றியில் விழுந்த கேசச் குழல்களை ஒதுக்கிவிட்டு, கண்கள்மீது மென்மையாக முத்தம் பதித்தான். ஹேமாவின் ஸ்பரிசம் அவனுக்கு சக்தியை தருவது போல் இருந்தது. புதிதாக மறுபடியும் பிறவி எடுத்ததுபோல் உணர்ந்தான். ரயில் வேகமாக போய்க் கொண்டிருந்தது.

* * *

கண் பார்வையிலிருந்து மறையும் வரை ரயிலையே பார்த்துக் கொண்டிருந்த சுதாகர் மெதுவாகத் திரும்பினான். அவனுக்கு அப்பொ ரொம்ப திருப்தியாக இருந்தது.

ரமேஷை ஸ்டேஷனில் இறக்கிவிட்டு வந்த டிரைவர் "ரயில் ஒன்றரை மணி நேரம் லேட் சார். ஐயா இறங்கிக் கொண்டு என்னை போகச் சொல்லிவிட்டார்" என்றான். ரமேஷ் போகும் வழியில் ரங்கநாயகி வீட்டில் இறங்கி ஹேமாவை பார்த்துவிட்டு போனதாக டிரைவர் சொன்னதும், அங்கே என்ன நடந்திருக்கும் என்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில் உடனே ஜீப்பை எடுத்துக்கொண்டு அங்கே போனான்.

சுதாகர் போனபோது ஹேமா அழுது கொண்டிருந்தாள். ரங்க நாயகி ரமேஷ் வந்துவிட்டு போன விஷயத்தை சொன்னாள்.

"பாரு சுதாகர்! ஹேமாவின் பிடிவாதம் என்னவோ எனக்கு புரிய வில்லை. அவன் வந்தபோது இரு என்றுகூட சொல்லவில்லை. கணவன் மனைவி என்றான பிறகு ஏதாவது பிரச்னைகள் வராமல் இருக்குமா? அதையே பிடித்துக்கொண்டு வாழ்க்கையை வீணாக்கிக் கொள்வது நியாயம்தானா? ஹேமா இப்பொ தனி ஆள்கூட இல்லை. நாளைக்கு பிறக்கப்போகும் குழந்தைக்கு தந்தையைப்பற்றி என்ன சொல்லப் போகிறாள்? எப்படி வளர்க்கப் போகிறாள்?"

ஹேமா தாயாகப் போகிறாள் என்ற செய்தியை கேட்டதும் சுதாகர் அதிர்ச்சியை அடைந்தான். ஹேமாவின் அருகில் சென்றான். "ஹேமா! ரமேஷ் வந்த போதாவது நீ மனம் விட்டு பேசியிருக்க வேண்டும். நீ செய்த இந்தக் காரியம் எனக்கும் பிடிக்கவில்லை. கருணா போனதில் அவன் அனுபவித்து வரும் வேதனையை நீ புரிந்து கொள்ளவில்லை. புரிந்துகொண்டால் இப்படி நடந்துகொண்டு இருக்கமாட்டாய்."

"நன்றாகச் சொல்லு. அப்படி சொன்னாலாவது அவளுக்கு புத்தி வருமோ என்னவோ" ரங்கநாயகி சொன்னாள்.

"யாரும் என்னை எதுவும் சொல்லத் தேவையில்லை. எனக்கு பிறக்கப்போகும் குழந்தையை நினைத்துதானே நீங்கள் இப்படி பேசுகிறீர்கள்! பெண்களுக்கு பிரசவம் என்பது மறுபிறவிபோல் தான். நான் எப்படியும் பிழைக்கப் போவதில்லை. அந்தக் குழந்தை பிழைத்துக் கிடந்தால்... சுதாகரின் ஆசிரமம் இருக்கவே இருக்கு."

"வாயை மூடு." ரங்கநாயகி கத்திவிட்டாள்.

சுதாகரின் உடல் நடுங்கியது. ரமேஷ் தன்னுடைய சிறுவயதை பற்றி சொன்னதெல்லாம் நினைவுக்கு வந்தது. ஹேமா சொன்னதை ரமேஷ் கேட்டிருந்தால் எப்படி தவித்திருப்பானோ என்று தோன்றி யது.

உடனே ஹேமாவின் கையை பற்றி எழுப்பினான். "எழுந்திரு... உடனே கிளம்பு" என்றான்.

"எங்கே?"

"ரமேஷிடம்! ரயில் லேட் என்று டிரைவர் சொன்னான். சீக்கிர மாக போனால் அவனை பிடித்து விடலாம்."

ஹேமா சுதாகரின் கையை விடுவித்துக் கொள்ள முயற்சி செய் தாள். "சுதாகர்! உங்களுக்கு மூளை கலங்கிவிட்டதா? நாங்க இரு வரும் பிரிந்து விட்டோம் என்பதை மறந்து விட்டீர்கள் போலிருக்கு அவனிடம் போவதற்கு எனக்கு என்ன தகுதி இருக்கு?"

"அவனுடைய குழந்தைக்கு தாய் என்ற தகுதியுடன் அவனிடம் போ. தாமதம் செய்யாதே! இந்த முறை ரமேஷை பிடிக்க முடிய

GIFT BY RRRLF CALCUTTA

வில்லை என்றால் வாழ்நாள் முழுவதும் அவனை உன்னால் பார்க்க முடியாது. கிளம்பு" என்று அவசரப்படுத்தினான்.

"போ. ஹேமா!" ரங்கநாயகியும் வற்புருத்தினாள்.

சுதாகர் மேற்கொண்டு தாமதம் செய்யவில்லை. ஹேமாவின் தோளை பற்றி வலுக்கட்டாயமாக இழுத்து வந்து ஜீப்பில் உட்கார வைத்தான். ஜீப் வேகமாக ரயில் நிலையத்தை நோக்கி பயணித்தது. ஸ்டேஷன் வாசலில் ஜீப்பை நிறுத்தும் போதே ரயில் கிளம்பப் போவதற்கு அறிகுறியாக விசில் சத்தம் கேட்டது. ரமேஷை பிடிக்க முடியும் என்று அவன் நினைக்கவில்லை. அதிர்ஷ்டவசமாக அவன் பார்க்க முடிந்தது. ஹேமா அவனுடன் சென்று விட்டாள்.

ஸ்டேஷனை விட்டு வெளியில் வந்த சுதாகர் ஜீப்பில் ஏறினான். இரவு நேரம் என்பதால் சுவற்றுக் கோழிகளின் சத்தத்தை தவிர எங்கும் நிசப்தமாக இருந்தது. தொலைவில் நெடிந்துயர்ந்து வளர்ந் திருந்த மரங்கள் வழியாக சில்லென்று காற்று வீசிக் கொண்டிருந்தது.

அவன் ஜீப்பை ஸ்டார்ட் செய்தான். அவன் காதுகளில் "அங்கிள்! அங்கிள்!" என்று கருணாவின் பிஞ்சு குரல் எதிரொலித்துக் கொண்டிருப்பது போல் தோன்றியது. அவன் இதழ்களில் திருப்தி நிறைந்த புன்முறுவல் மலர்ந்தது.

முற்றும்

தினை நூலகம்,
தூத்துக்குடி மாவட்டம்.